3/10

# தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## அதிகாரப் பதிவு

தொகுதி-19 எண்-1

மார்ச் -- 1992

வெளியீடு 22-10-1992

Issued 22-10-1992

816/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 19, 1992 - தொகுதி 19 எண். 1

Thursday the 19th March, 1992 - Volume 19 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat,
Madras-600 009

[Price Rs. 3-00

விலை ரூ. 3-00]

## உள்ளடக்கம்

19-03-1992


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii—v |
| Personnel of the Government of Tamil Nadu | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xii—xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகரவரிசைப்படி). | xv—xxvi |
| **வினாக்கள்—விடைகள்—** | 1—38 |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | |
| **தன்னிலை விளக்கம்—** | |
| 18-3-1992-ஆம் நாளன்று அவையில் தாம் பேசியது குறித்து வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கம். | 38—40 |
| **கவன ஈர்ப்பு—** | |
| (அ) வால்பாறை மலைப்பகுதியில் சிறுத்தைப் புலியின் தாக்குதலால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து. | 40—43 |
| (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய மின் மோட்டாருக்குக் கூடுதல் மின் இணைப்பு வழங்கப்பெறாதது குறித்து. | 43—47 |
| **அறிக்கை அளித்தல்—** | |
| சட்ட விதிகள் ஆய்வுக்குழு. | 47—48 |
| மானியக் கோரிக்கைகள். 1992—93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி). | |

165044
600 008

பக்கங்கள்

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.
(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை
(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.
} தொடர்ச்சி. 48—11[illegible]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : 48—109

(ஈ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் 114—226
(உ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை. 114—226
(ஊ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம். 11[illegible]
(எ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிருவாகம். 114—226
(ஏ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு. 114—226
(ஐ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. 114—226
(ஒ) கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத் துறை. 114—226
(ஓ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும். 114—226
115—121

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் 189—217
திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் 121—125
திரு. வி. கே. சின்னசாமி .. .. 125—130
திரு. ஆ. சுப்புரத்தினம் .. .. 130—134
திரு. ஜி. பழனிசாமி .. .. 134—140
திரு. வி. தண்டாயுதபாணி .. .. 140—144
*திரு. வி. கே. லட்சுமணன் .. .. 144—148
திரு. செ. கு. தமிழரசன் .. .. 148—154
திரு. எஸ். அண்ணாமலை .. .. 154—156
திரு. நா. சா. பழனிசாமி .. .. 156—160
திரு. சி. சுவாமிநாதன் .. .. 160—165
திரு. கு. தங்கமுத்து .. .. 165—169
திரு. எ. தெய்வநாயகம் .. .. 169—172
திரு. கே. ஆர். முருகானந்தம் .. .. 172—178
* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. 178—189

6. அறிவிப்பு—

பேரவை அலுவல்கள் குறித்து. .. .. 114—115

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. 226—227



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்:

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக்கழகம், சுரங்கம் மற்றும் கனிமவளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமி தானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

| | |
|---|---|
| 5. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர்மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம். |
| 6. கல்வி அமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல். |
| 7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல். |
| 8. போக்குவரத்துத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனவிகள் மற்றும் சின்கோனா. |
| 9. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : கைத்தறி மற்றும் நெசவாலைகள். |
| 10. பொதுப்பணித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு. |
| 11. உள்ளாட்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல். |



| | |
|---|---|
| 12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் ; உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள். |
| 13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. செ. ரகுபதி : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 14. வேளாண்மைத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, சர்க்கரை வரி மற்றும் சர்க்கரை வளர்ச்சி. |
| 15. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 16. சமூக நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம். |
| 17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம். |
| 8. மீனளத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மீனளம். |
| 9. ஊரகத் தொழில் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : சிறு தொழில்கள் ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

THIRU BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

Chief Minister .. .. **The Hon. Dr. J. JAYALALITHA:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics and Newsprint Control.

2. Minister for Finance .. **The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN:** Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law .. **The Hon. Thiru K. A. KRISHNASAMY:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of Companies.

Minister for Revenue .. **The Hon. Thiru S. D. SOMASUNDARAM:** Revenue, District Revenue Establishment, Deputy Colleters, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes.

5. Minister for Backward Classes. .. **The Hon. Thiru ERAAMA VEERAPPAN:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen.

Minister for Education .. **The Hon. Dr. C. ARANGANAYAGAM:** Education, Technnical Education, Science and Technology, Sports and Youth Welfare and Archaeology

Minister for Health .. **The Hon. Thiru S. MUTHUSAMY:** Health, Medical Education, Family Welfare and Environmental Pollution Control.

Minister for Transport .. **The Hon. Thiru K.A.SENGOTTAYAN:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forests and Cinchona.

9. Minister for Handlooms and Textiles. **The Hon. Thiru E. MADHU SUDHANAN :** Handlooms and Textiles.

10. Minister for Public Works. **The Hon. Thiru S. KANNAPPAN :** Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control.

11. Minister for Local Administration. .. **The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU :** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.

12. Minister for Food and Co-operation. **The Hon. Thiru G. VISWANATHAN :** Food, Co-operation, Civil Supplies Price Control and Statistics.

13. Minister for Labour .. **The Hon. Thiru S. RAGUPATHY** Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

14. Minister for Agriculture.. **The Hon. Thiru Ku. Pa. KRISHNAN:** Agriculture, Agricultural Engineering, Agro-Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.



15. Minister for Housing and Urban Development. **The Hon. Thiru T. M. SELVAGANAPATHI :** Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.

16. Minister for Social Welfare. **The Hon. Thirumathi R. INDIRA KUMARI :** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. **The Hon. Thiru M. ANANDAN :** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry Milk and Dairy Development.

18. Minister for Fisheries : **The Hon. Thiru D. JAYAKUMAR :** Fisheries.

19. Minister for Rural Industries. **The Hon. Thiru S. NAGOOR MEERAN:** Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

செயலாளர்

திரு. செ. சு. ஜானகிராமன்

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ.கு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி. எல். | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாள (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி. காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சந்திரசேகர், திரு. ஆர்., பி. ஏ. | துணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளா |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ.,பி.எல்., டி. பி மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. சு., பி.எஸ்ஸி. | குழு அலுவலர் |
| வெங்கடராமன், திரு. ப. சீ., பி.காம். | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கணேசன், திரு. சா. பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. சி., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| பானுமதி அனந்தராஜன், திருமதி, பி.எஸ்ஸி., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ., | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| முனீர் உன்னிசா, திருமதி, பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம். ஏ. | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு. பி. சி. ... | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர் |
| 2 | அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.) |
| 3 | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | மயிலாடுதுறை |
| 4 | அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை (கிழக்கு) |
| 5 | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 6 | அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம் |
| 7 | அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர் |
| 8 | அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி |
| 9 | அழகிரி, திரு. ச. | சிதம்பரம் |
| 10 | அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு |
| 11 | அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ) |
| 12 | அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.) |
| 13 | ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம் |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. எம். | நத்தம் |
| 15 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம் |
| 16 | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி—1 |
| 17 | ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.) |
| 18 | ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ) |

| | | |
|---|---|---|
| 19 | இந்திரகுமாரி, திருமதி இரா. | நாட்ராம்பள்ளி |
| 20 | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர் |
| 21 | இராசாராமன், திரு. சோ. | பாபநாசம் |
| 22 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 23 | இராதாகிருஷ்ணன், திரு. த.க. | திருமங்கலம் |
| 24 | இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25 | இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை |
| 26 | இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம் |
| 27 | இராமச்சந்திரன், திரு. ஒ.ஆர். | கம்பம் |
| 28 | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 29 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 30 | இராமச்சந்திரன், திரு. மா.சா.மா. | இளையான்குடி |
| 31 | இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். | செஞ்சி |
| 32 | இராமநாதன், திரு. ராம. | கும்பகோணம் |
| 33 | இராஜமன்னார், திரு.சூ.சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34 | இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி |
| 35 | இராஜேந்திரன், திரு.பி.வி. | வேதாரண்யம் |
| 36 | இரம வீரப்பன், திரு. | காங்கேயம் |



| | | |
|---|---|---|
| 37 | இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.) |
| 38 | இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| 39 | ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம் (செ.வ.) |
| 40 | ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41 | ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு |
| 42 | கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர் |
| 43 | கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை |
| 44 | கந்தசாமி, திரு. கே. | தலைவாசல் (செ.வ.) |
| 45 | கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.) |
| 46 | கலியபெருமாள், திரு. ப. | திருவையாறு |
| 47 | கலைச்செல்வி, திருமதி தே. எம். | காட்பாடி |
| 48 | கவிநிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி |
| 49 | கற்பகம் இளங்கோ, திருமதி | காரைக்குடி |
| 50 | கனகவல்லி, திருமதி என்.சி. | விளாத்திகுளம் |
| 51 | காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | உத்திரமேரூர் |
| 52 | காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர் |
| 53 | காளன், திரு. கோ. | வில்லிவாக்கம் |
| 64 | காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ.) |
| 55 | கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. | ஆயிரம்விளக்கு |
| 56 | கிருஷ்ணன், திரு. எஸ்.எம். | தாம்பரம் |

| | | |
|---|---|---|
| 57 | கிருஷ்ணன், திரு. கு.ப. | ஸ்ரீரங்கம் |
| 58 | கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 59 | குப்பன், திரு. க. | திருவொற்றியூர் |
| 60 | குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 61 | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 62 | குழந்தைவேலு, திரு. சி. | குளத்தூர் (செ.வ.) |
| 63 | கோடிமாரி, திரு. ஆர். | நாகப்பட்டினம் |
| 64 | கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 65 | கோபால், டாக்டர் க. | நன்னிலம் (செ.வ.) |
| 66 | கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம் |
| 67 | சக்குபாய், திருமதி ரா. | கும்மிடிப்பூண்டி |
| 68 | சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர் |
| 69 | சஞ்சய் ராமசாமி, திரு. | விருதுநகர் |
| 70 | சண்முகநாதன் திரு. எஸ். | ஆலங்குடி |
| 71 | சண்முகம், திரு. எஸ். வி. | மதுரை மேற்கு |
| 72 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 73 | சந்திரசேகர், திரு. வி.பி. | பொள்ளாச்சி |
| 74 | சம்பத், திரு. எ. | வாணியம்பாடி |
| 75 | சரஸ்வதி, திருமதி அ.தி. | சத்தியமங்கலம் |
| 76 | சரஸ்வதி, திருமதி ப. | கபிலர்மலை |
| 77 | சரோஜா, டாக்டர் வெ. | சங்கரி (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 78 | சாத்தையா, திரு. தி. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79 | சாவித்திரி அம்மாள் திருமதி. ஆர். | முகையூர் |
| 80 | சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி |
| 81 | சிங்காரம், திரு. கே. | மொரப்பூர் |
| 82 | சிங்கை கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர் |
| 83 | சியாமளா, திருமதி ரெ. | கோவில்பட்டி |
| 84 | சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி |
| 85 | சிவபதி, திரு. என்.ஆர். | தொட்டியம் |
| 86 | சின்னசாமி, திரு. கா. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 87 | சின்னசாமி, திரு. ம. | கரூர் |
| 88 | சின்னசாமி, திரு. வி.கே. | பவானிசாகர் |
| 89 | சின்னப்பன், திரு. கே.கே. | ஜெயங்கொண்டம் |
| 90 | சீனியம்மாள், டாக்டர் மு. | அவினாசி (செ.வ.) |
| 91 | சீனிவாசன், திரு. ஆ.கு. | பெரணமல்லூர் |
| 92 | சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி |
| 93 | சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி |
| 94 | சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம் |
| 95 | சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96 | சுந்தரம், திரு. எம்.கே. | தண்டராம்பட்டு |
| 97 | சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.) |
| 98 | சுந்தரவேல், திரு. ஏ.கே.சி. | திருப்பத்தூர் |
| 99 | சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர் |

| | | |
|---|---|---|
| 100 | சுப்பிரமணியம், திரு. வ.மு. | மானாமதுரை (செ.வ.) |
| 101 | சுப்பிரமணியன், திரு. வி.என். | பெருந்துறை |
| 102 | சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 103 | சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ.) |
| 104 | சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம் |
| 105 | சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை |
| 106 | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிசெட்டிப் பாளையம். |
| 107 | செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர் |
| 108 | செல்லசாமி, திரு. ஏ.டி. | ஒட்டன்சத்திரம் |
| 109 | செல்லதுரை, திரு. ஆ. | திருச்செந்தூர் |
| 110 | செல்வகணபதி, திரு. டி.எம். | திருச்செங்கோடு |
| 111 | செல்வராசன், திரு. ஆ. | துறைமுகம் |
| 112 | செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு |
| 113 | செழியன், திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114 | சேகர், டாக்டர் எம்.பி. | பெரம்பூர் (செ.வ.) |
| 115 | சேகர், திரு. எம். ஜி. | பாலக்கோடு |
| 116 | சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம் |
| 117 | சோமசுந்தரம், திரு. எஸ்.டி. | தஞ்சாவூர் |
| 118 | ஞானசேகரன், திரு. சி. | வேலூர் |
| 119 | டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 120 | தங்கமுத்து, திரு. கு. | திருவோணம் |



| | | |
|---|---|---|
| 121 | தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம் |
| 122 | தங்கவேல், திரு. எம். | முசிறி |
| 123 | தண்டாயுதபாணி திரு. வி. | குடியாத்தம் |
| 124 | தமிழரசன், திரு. செ.கு. | வந்தவாசி (செ.வ.) |
| 125 | தமிழரசு, திரு. வெ. | ஆத்தூர் |
| 126 | தம்புசாமி, திரு. வே. | திருவாரூர் (செ.வ.) |
| 127 | தர்மலிங்கம், திரு. கி. | அணைக்கட்டு |
| 128 | தர்மலிங்கம், திரு. பே. | பாளையங் கோட்டை. |
| 129 | தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி |
| 130 | தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.) |
| 131 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 132 | தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 133 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 134 | துரை, திரு. எஸ்.எம். | ஆத்தூர் |
| 135 | துரைமுருகன், திரு. கு.சு. | பல்லடம் |
| 136 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 137 | தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி |
| 138 | தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம் |
| 139 | தேவராஜ், திரு. அ. | செய்யாறு |
| 140 | தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர் |
| 141 | நடேசன், திரு. இரா. | திருவட்டாறு |

| | | |
|---|---|---|
| 142 | நடேசன், திரு. மு. | சேலம்-2 |
| 143 | நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குநேரி |
| 144 | நாகூர்மீரான், திரு. எஸ். | கடையநல்லூர் |
| 145 | நிர்மலா, செல்வி பி. | திண்டுக்கல் |
| 146 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி |
| 147 | பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.) |
| 148 | பட்டாபிராமன், திரு. கா.ப. | காஞ்சிபுரம் |
| 149 | பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150 | பரமசிவம், திரு. ஆர்.பி. | சின்னசேலம் |
| 151 | பரமசிவன், திரு. ஏ.எம். | சோழவந்தான் |
| 152 | பலராமன், திரு. உ. | பூங்கா நகர் |
| 153 | பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம் |
| 154 | பழனிசாமி, திரு. க. | எடப்பாடி |
| 155 | பழனிசாமி, திரு. நா.சா. | கிணத்துக்கடவு |
| 156 | பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர் |
| 157 | பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 158 | பழனியம்மாள் திருமதி க. | ராசிபுரம் |
| 159 | பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர் |
| 160 | பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம் |
| 161 | பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர் |
| 162 | பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி |



| | | |
|---|---|---|
| 163 | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை |
| 164 | பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி |
| 165 | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர் |
| 166 | பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 167 | பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை |
| 168 | பாலன், திரு. எம்.கே. | சைதாப்பேட்டை |
| 169 | பாலையா, திரு. ஆ. | குளச்சல் |
| 170 | பீட்ரிக் டி' சோசா, டாக்டர் | நியமனம் |
| 171 | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி |
| 172 | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி |
| 173 | புரட்சிமணி, திரு. ச. | மங்களூர் (செ.வ.) |
| 174 | புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம் |
| 175 | பூராசாமி, திரு. எம். | பூம்புகார் |
| 176 | பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 177 | பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம் |
| 178 | பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.) |
| 179 | பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 180 | பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 181 | பொன்னுசாமி, திரு. பெ. | தருமபுரி |
| 182 | பொன்னுவேலு, திரு. ஏ.தா. | வரகூர் (செ.வ.) |

| | | |
|---|---|---|
| 183 | போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 184 | மணிமேகலை, டாக்டர் சு. | அரியலூர் |
| 185 | மணிமேகலை, திருமதி வி.ஜி. | அருப்புக்கோட்டை |
| 186 | மணிவாசகம், திரு. கே.பி. | உடுமலைப்பேட்டை |
| 187 | மதுசூதனன், திரு. இ. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188 | மரியம்உல் ஆசியா, திருமதி கே. | அரவக்குறிச்சி |
| 189 | மல்லிகா, செல்வி கோ. | புவனகிரி |
| 190 | மனோகரன், திரு. கே.ஏ. | ஓசூர் |
| 191 | மாணிக்கம், திரு. சி. | ஈரோடு |
| 192 | மாலா, டாக்டர் ஜி.ஆர். | திருச்சிராப்பள்ளி-2 |
| 193 | முத்துசாமி, திரு. சு. | பவானி |
| 194 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 195 | முருகானந்தம், திரு. கே.ஆர். | சிவகெங்கை |
| 196 | முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம் |
| 197 | முனிரத்தினம், திரு. ஏ.எம். | சோளிங்கர் |
| 198 | முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி |
| 199 | முனுசாமி, திரு. கா.பூ. | காவேரிப்பட்டிணம் |
| 200 | முகமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி |
| 201 | மூர்த்தி, திரு. து. | சீர்காழி (செ.வ.) |
| 202 | மோஸ், டாக்டர் எம். | நாகர்கோவில் |
| 03 | ரகுபதி, திரு. செ. | திருமயம் |



| | | |
|---|---|---|
| 204 | ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம் |
| 205 | ரங்கராஜன், திரு. டி.எம். | மயிலாப்பூர் |
| 206 | ரத்தினவேல், திரு. த. | திருவெறும்பூர் |
| 207 | ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 208 | ரமேஷ், திரு. வி.பி.ஆர். | தூத்துக்குடி |
| 209 | ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி (செ.வ.) |
| 210 | ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211 | ராமசுப்பு, திரு. எஸ்.எஸ். | ஆலங்குளம் |
| 212 | ராஜு, திரு. எச்.எம். | உதகமண்டலம் |
| 213 | ராஜு, திரு. கே.ஆர். | கூடலூர் |
| 214 | ராஜு, திரு. கே.பி. | பேரூர் |
| 215 | ராஜேந்திரன், திரு என்.ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 216 | லட்சுமணன், திரு. வி.கே. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 217 | லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம் |
| 218 | லோகாம்பாள், திருமதி. ஜெ. | லால்குடி |
| 219 | வரதராஜன், திரு. செ.து. | செங்கல்பட்டு |
| 220 | விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு |
| 221 | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 222 | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி |
| 223 | வெங்கடேசன், திரு.பி.ஆர்.எஸ். | கடலூர் |

| | | |
|---|---|---|
| 224 | வேடியப்பன், திரு. தா. | போளூர் |
| 225 | வேணுகோபால், திரு. என்.ஜி. | ராணிப்பேட்டை |
| 226 | வேலையா, திரு. டி. | திருநெல்வேலி |
| 227 | ஜனார்தனன், திரு. தே. | விழுப்புரம் |
| 228 | ஜானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர் |
| 229 | ஜீனத் சர்புதீன், திருமதி | சேப்பாக்கம் |
| 230 | ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராயநகர் |
| 231 | ஜெயகுமார், திரு. டி. | ராயபுரம் |
| 232 | ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1 |
| 233 | ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | பர்கூர் |
| 234 | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி |
| 235 | ஸ்ரீதரன், டாக்டர் அ. | வால்பாறை (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| [illegible]ரமணியன், திரு. கே. | தலைமை வழக்கறிஞர். |

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,**

**பங்குனி 6, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு-2023,**

**1992, மார்ச் 19, வியாழக்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு"

வீரத் தன்மையும், குடிமக்களை நன்கு பாதுகாத்தலும், நல்லனவற்றைக் கற்றறிதலும், செய்யத் தக்கவை அறிதலும், முயற்சி உடைமையும் ஆகிய ஐந்து பண்புகளுடன் மாட்சிமைப்பட்டு விளங்குவதே நல்ல அமைச்சு ஆகும்.

**I. வினாக்கள்—விடைகள்.**

**குறிப்பிட்ட வினாக்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 259. திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. திரு. கி. ஞானசேகரன், மாண்புமிகு நிதியமைச்சர்.

259—

சுற்றுப்பயணங்களின்போது அரசு அதிகாரிகள் தங்குவதற்கான வசதிகள்.

*1779 திரு. மா. சுந்தரதாஸ்:
மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசு அதிகாரிகள் இம்மாநிலத்திலும், வெளி மாநிலத்திலும், வெளி நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்யும்போது நட்சத்திர ஓட்டல்களில் சிறப்பு அறைகளில் (Special Suite) தங்க அனுமதிக்கப்படுகிறார்களா?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு அலுவலர்கள் மாநிலத்திற்குள்ளே மற்றும் மாநிலத்திற்கு வெளியே அலுவல் சார்ந்த பயணம் மேற்கொண்டு எவ்வகை ஓட்டல்களில் தங்கினாலும் வரையறுக்கப்பட்ட தினப்படியே வழங்கப்படுகிறது. எனவே, நட்சத்திர ஓட்டல்களில் அனைத்து வசதிகளடங்கிய அறைத் தொகுதிகளில் (Special Suites in Star Hotels) தங்குவது பற்றி குறிப்பு ஏதுமில்லை. இந்தியாவிற்கு வெளியே இத்தகு பயணங்கள் மேற்கொள்ளப்படும்போது அவ்வப்போது இந்திய அரசு வெளியிடும் ஆணைகளைப் பின்பற்றி ஒவ்வொரு நாட்டிற்கும் தினப்படி வழங்கப்படுகிறது. இத்தகு பயணங்களின்போது இந்திய அரசு அனுமதித்துள்ள ஓட்டல்களில் மட்டுமே தங்க வேண்டும். அவ்வாறு ஓட்டல்களில் குறிப்பிடப்படாத நாடுகளில் குறைந்த செலவினம் ஆகக்கூடிய ஓட்டல்களில் மட்டுமே தங்க வேண்டும். இவ்வகை ஓட்டல்கள் நட்சத்திர ஓட்டல்களா இல்லையா என்பது பற்றிய விவரம் இந்திய அரசின் குறிப்பாணையில் இல்லை. எனினும் அரசு அலுவலர்கள் ஓட்டல்களின் அறைத்தொகுதிகளில் (Hotel Suite) தங்க அனுமதி இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த பட்ஜெட்டிலே 188-ஆவது பாராவிலே அரசு சிக்கன நடவடிக்கையின் காரணமாக ரூ. 55 கோடியை மிச்சப்படுத்தப் போவதாக நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதிலே அதிகாரிகள் எல்லாம் பொதுவாக ஸ்டார் ஹோட்டல்களில்தான் தங்குகிறார்கள். அரசு அதிகாரிகள் — கவர்ன்மெண்ட் சர்வெண்ட்ஸ் அல்லாமல், குவாசி கவர்ன்மெண்ட் சர்வெண்ட்ஸாக இருக்கின்ற கவர்ன்மெண்ட் அண்டர்டேக்கிங்ஸ். போக்குவரத்துக் கழக எம். டி-க்கள் போன்றவர்கள் ஐந்து ஸ்டார் ஹோட்டல்களில்தான் தங்குகின்றனர் என்றால், அதையெல்லாம் வரையறை செய்து இந்தப் பணச் செலவையும், ஸ்பெஷல் சூட்ஸ்களில் தங்குவதையும் தடை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் முதலிலே குறிப்பிட்டபடி அலுவலர்களுக்கு வரையறுக்கப்பட்ட தினப்படிதான் தரப்பட்டு வருகின்றது. அதற்குள்ளே அவர்கள் எந்த ஹோட்டல்களிலேயும் எந்த அறைகளிலேயும் எப்படி வேண்டுமானாலும் தங்கலாம், அல்லது கையிலிருந்து செலவழித்து அவர்கள் ஸ்டார்



ஹோட்டல்களில் தங்குவார்களானால். அதை நாம் தடுக்க இயலாது. ஆனால் வரையறுத்த வகையிலே உதாரணத்திற்கு கிரேட் 1 அதிகாரிகள் ரூ. 4,500-க்கு மேல் சம்பளம் பெறுபவர்கள். அவர்கள் ஹோட்டல்களில் தங்குவார்களேயானால், அவர்களுக்கு உணவுப்படியாக ரூ. 600-ம், போர்டிங் படியாக இருக்கைக்கு, அதாவது உறைவிடப் படியாக ரூ. 75-ம் தரப்படுகின்றது. ஆனால் அரசாங்கத்தின் சார்பாக இருக்கின்ற விருந்தினர் விடுதிகளிலோ அல்லது பொதுத் துறையினர் சார்பாக இருக்கின்ற விருந்தினர் விடுதிகளிலோ அவர்கள் தங்குவார்களானால், அவர்களுக்கு மொத்தமாக ஒரு நாளைக்கு ரூ. 150 என்று வழங்கப்படுகிறது. அந்த முறை—டில்லி, பம்பாய், கல்கத்தாவிற்கும் பொருந்தும். மற்றைய மாநிலங்களுடைய தலைநகர்களில் தங்குகின்றபோது அதைவிட குறைவாகக் குறைகிறது. அதே போன்று கிரேட் 1, கிரேட் 2, கிரேட் 3 அதிகாரிகளுக்கும் படிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் இம்மாதிரி மாநில சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றபோது முன்பே சுற்றறிக்கை மூலம் அரசுக்குச் சொந்தமான பயணியர் விடுதிகளில், ஹோட்டல்களில் அறைகளைப் பதிவு செய்கிறார்கள். அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டால், அமைச்சர்களுக்குப் பிறகு அரசு அதிகாரிகளுக்குத்தான் என்று பதில் சொல்கிறார்கள். இதை அரசு அறியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பில்லாதது. சட்டமன்ற உறுப்பினர்களை இதிலே இணைக்க முடியாது. இந்தக் கேள்வி நட்சத்திர ஹோட்டல்களில் தங்குவது, சிக்கன நடவடிக்கை பற்றியது. நீங்கள் சொல்வது அறையை ரிசர்வ் செய்வது பற்றி, அது இதில் வராது. திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அதிகாரிகள் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றபோது—அரசு அங்கீகாரம் பெறாத சில பெரிய முதலாளிகள் தனியார் பெரிய கெஸ்ட் ஹவுஸ் போன்று நடத்துகிறார்கள்—அப்படிப்பட்ட இடங்களில் அவர்கள் அதிகாரபூர்வமில்லாது தங்குகிறார்களே, அவர்கள் அதனால் மேற்கொள்ளுகிற பணிகள், அதாவது எந்தக் குறிக்கோளுக்காகச் செல்லுகிறார்களோ அந்தக் குறிக்கோள் கூட நிறைவேறாத சூழ்நிலை ஏற்படுகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் அரசு அதிகாரிகள் தங்குவதற்கு, தடை விதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓட்டலில் தான் தங்க வேண்டும் என்று யாரையும் நாம் வற்புறுத்த இயலாது. அவர்கள் சொந்தக்காரர்கள் வீடுகளிலோ அல்லது தெரிந்தவர்கள் மாளிகைகளிலோ தங்குகிறார்கள் என்றால், அதனால் அதிகாரத்தினை அவர்கள் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. அங்கு தங்கினார்கள் என்பதற்காக சலுகைகள் காட்டினார்கள் என்று வருமேயானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அவர்கள் தங்குகிற வசதிகள் அவரவர்களுடைய தன்மையைப் பொறுத்தது. ஓரளவுக்கு வரையறுக்கப்பட்ட தனிப்படி அவர்களுக்கு வழங்கப்படுவதன் காரணமாக, அதனைப் பெற்றுக்கொண்டு அவர்கள் முறைப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றுதான் அரசு எதிர்பார்க்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது அதிகாரிகள் எப்படி வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் தங்கலாம் என்ற ஒரு கருத்தைக் கூறினார்கள். அதிகாரிகள் அவர்கள் தவறான முறையிலே சென்று தவறான முறையிலே செயல்களைச் செய்தால் அவர்களால் அரசுக்கும் நாட்டுக்கும் கெட்டபெயர் உண்டாக்கப்படுகிறது. ஆகவே இப்படித்தான் தங்க வேண்டும், இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அரசு வரையறுத்துச் சொல்லுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எப்படி வேண்டுமானாலும் தங்கலாம், எங்கு வேண்டுமானாலும் தங்கலாம் என்று நான் சொல்லவே இல்லை. அவர்கள் விருப்பப்படி தினப்படியைப் பெற்றுக்கொண்டு, அவர்களுடைய உறவினர்கள் வீடுகளிலோ தங்கலாம் அல்லது தெரிந்தவர்களுடைய மாளிகைகளிலோ தங்கலாம். அப்படித் தங்குவதனால் எந்தக் கெடுதலும் இல்லை. ஆனாலும் கூட அப்படி தங்குவதைப் பயன்படுத்தி அவர்கள் சலுகை அளிக்கிறார்கள் என்றாலோ அல்லது முறை தவறி நடக்கிறார்கள் என்றாலோ அல்லது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்றாலோ அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் சுற்றுப் பிரயாணங்கள் செல்லும் போது தனியார்களுடைய அல்லது செல்வந்தவர்களுடைய வீடுகளிலே தங்குகிற வேளையிலே அன்டியூ இன்பிளுயன்சுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே அது நிச்சயமாக தவிர்க்கப்பட வேண்டும். அரசினர் விடுதிகள்—கெஸ்ட் ஹவுஸ்—போன்றவை இருக்கின்றன. டெல்லிக்குச் சென்றால் தமிழ்நாடு ஹவுஸ் இருக்கிறது. இவைகள் போக இடம் இல்லை என்று சொன்னால் வேறு ஓட்டல்களிலே தங்கலாம். ஆனால் பெரிய செல்வந்தர்களுடைய அல்லது பெரிய தொழில் அதிபர்களுடைய இல்லங்களிலே அல்லது அவர்களுடைய ஓட்டல்களிலே தங்குவது நிச்சயமாக தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை உணர்ந்து அரசு இதைத் தடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள், அதிகாரிகள் ஊழியர்கள் போன்றவர்களுக்கு சில வரன்முறைகள்—சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிமுறைகளுக்கு அடங்கித்தான் அவர்கள் நடக்க வேண்டும். அதை மீறி அவர்கள் நடக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போல அத்தகைய மாளிகைகளில் தங்குவதன் மூலமாக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி ஏற்படுகிற நிலையில் தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு எம். தங்கவேல்.

திரு எம். தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் தமிழக அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய தமிழ்நாடு ஓட்டல்களில் இலவசமாகத் தங்குவதற்கு அரசு அனுமதி வழங்குமா? * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் பற்றி இதில் வராது. அந்தப் பகுதி நீக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஓட்டல்களிலே அவர்களுக்கு என்று வழங்கப்படுகிற தினப்படியைப் பயன்படுத்திக்கொண்டு அங்கு விதிக்கப்படுகின்ற வாடகையை செலுத்திதான் அங்கு தங்க வேண்டும். அதே முறைதான் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1992 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 260—திரு. ஜெ. பாலகங்காதரன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

260

சிவகாசியிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குக் கட்டிடம்.

* 3324. திரு. ஜெ. பாலகங்காதரன்:
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவகாசியிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குக் (Judicial Magistrate Court) கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகாசியில் மதுவிலக்கு வழக்குகளை விசாரிக்கும் முகத்தான் 1982 ஆம் ஆண்டு குற்றவியல் நீதிமன்றம் தற்காலிகமாக நிறுவப்பட்டது. இந்த நீதிமன்றம் நிரந்தர மாக்கப்பட்ட பின், கட்டிடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேளை தவறான தகவல் வந்திருக்குமோ என்று எண்ணுகிறேன். ஏனென் றால் நான் அதே பாரிலேதான் வழக்கறிஞராகப் பணியாற்றி இருந்து இப்போது சட்டமன்ற உறுப்பினராக ஆகியிருக்கிறேன். இப்போதுள்ள அதே கோர்ட்டிற்கு நான் சென்று கொண்டிருக் கிறேன். அங்கே நிரந்தர ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று ஏற்படுத்தி 1989ஆம் ஆண்டிலேயிருந்து அது ஏற்பட்டு விட்டது. மேலும் அந்த கோர்ட்டானது கிட்டத்தட்ட 3 ஆண்டுகளாக உயர்நீதிமன்றத்தால் அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியேற்றப்படும் சூழ்நிலை ஏற்பட்டும் அந்த உத்தரவை யும் மீறி அங்கேயே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது குறித்து பரிசீலனை செய்து உடனடியாகக் கட்டிடம் கட்ட ஏற்பாடு பண்ணுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்; ஒன்று, உயர்நீதி மன்றத்தினுடைய அடிஷனல்



1992 மார்ச் 19]

ரிஜிஸ்ட்ரார் (அட்மினிஸ்ட்ரேஷன்) திரு. கே. ஏ. வீராசாமி அவர்கள் அளித்த தகவல். அதுபோல நம்முடைய உள்துறை செயலாளர் அவர்கள் அளித்த தகவல். ஆக இரண்டு தகவல் களின் அடிப்படையில் அங்கு தற்காலிகமாக நிறுவப்பட்ட நீதிமன்றம் என்று குறிப்பிட்டேன். அதுபோல் 1988ஆம் ஆண்டு அது அப்கிரேடு செய்யப்பட்டு புரோஹிபிஷன் அஃபன்ஸஸ் மட்டுமல்லாமல் சிவகாசி சரகத்திலே இருக்கின்ற எல்லா வழக்குகளையும் விசாரிக்கின்ற அளவிற்கு அப்கிரேடு செய்திருக்கிறார்கள். என்பது தான் எனக்கு கிடைத்த தகவல். எனவே தான் அது நிரந்தர கோர்ட் அல்ல. It is a special court. It is a not Permanent court.) என்று உயர் நீதிமன்ற ரிஜிஸ்ட்ராரும் சொல்கிறார். உள்துறை செய லாளரும் சொல்கிறார். அந்த தகவலைத் நான் மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியைப் பொறுத்தமட்டிலே கிட்டத்தட்ட சாத்தூருக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னது போல அந்த ஸ்பெஷல் கோர்ட் இல்லை என்றால் சாத்தூருக்குத் தான் செல்லவேண்டும். ஆனால் இங்கிருந்து செல்லும் வழக்குகள் தான் அதிக அளவு உள்ளது. அதுமட்டுமல்லாமல் சிவில் வழக்குகள் என்று எடுத்துக் கொண்டாலும் சாத்தூருக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. அங்கே சாத்தூரிலே நடைபெறுகின்ற வழக்கு களிலே கிட்டத்தட்ட 80 விழுக்காடு சிவகாசியைச் சேர்ந்த வழக்குகள் நடைபெறுகின்றன. அதே போல குற்றவியலை எடுத்துக் கொண்டாலும் சிவகாசியைச் சேர்ந்த.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலகங்காதரன். நீங்கள் அதை நிரந்தரக் கோர்ட் என்று சொன்னீர்கள். ஏற்கனவே இருந்த தற்காலிக கோர்ட்அப் கிரேடு செய்யப்பட்டது என்று அமைச்சர் சொல்கிறார். இப்போது உங்களுடைய வாதத்தின்படி பார்த்தால் அது ஸ்பெஷல் கோர்ட் என் கிறீர்கள். அப்படியானால் முதலில் நீங்கள் கேட்டது தவறான தகவலா? இந்த இரண்டு அடிப்படையிலேதான் இப்போது இந்தக் கேள்விக்கு விடையே வரும். அது நிரந்தர கோர்ட் என்றால் கட்டப்படும் என்கிறார். அதை முதலிலே தற்காலிக கோர்ட் என்று சொன்னார்கள். நீங்கள், இல்லை நிரந்தர என்று சொன்னீர்கள். இப்பொழுது மாற்கப்பட்டுவிட்டது திரும்பவும் உங்களுடைய கேள்வியில், அந்த ஸ்பெஷல் கோர்ட் இல்லையென்றால் என்று நீங்கள் ஆரம்பிக்கின்றபோது அது தற்காலிக கோர்ட் என்று தான் ஆகிறது. நீங்கள், அமைச்ச ருக்குத் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு இப்போது நீங்கள் சொன்ன தகவலையே திருத்திக்கொள்கிறீர்கள். ஆகவே அதைச் சொல்ல வேண்டும். நான் திருத்திக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு நீங்கள் கேள்வியை ஆரம்பிக்க வேண்டும்.

[1992 மார்ச் 19

திரு. ஜெ. பாலகங்காதரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன தகவலின் அடிப்படையில் நான் திருத்திக்கொள்கிறேன். இவ்வாறு இருக்கும்போது அங்கே நிரந்தர கோர்ட்டை ஏற்படுத்தி—அங்கே இப்போது இருக்கும் கோர்ட்டிலே ஏற்கனவே ஒரு வதந்தி நிலவுகின்றது. பேய்களும், ஆவிகளும் நிலவி வருகிறது என்று. அந்த வதந்தியினால் அங்கே இருக்கும் எந்த மேஜிஸ்ட்ரேடுகளும் ஒழுங்காக ரிடையர் ஆனது இல்லை. எல்லோருமே ரிடையர் ஆவதற்கு முதல் நாளே சஸ்பெண்டு செய்யப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி உடனடியாக அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு நிரந்தர கோர்ட்டை ஏற்படுத்தி அங்கே கட்டிடமும் கட்டித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஸ்பெஷல் கோர்ட்டாக இருப்பதன் காரணமாகத் தான் வாடகை கட்டிடத்திலே இருக்கிறது. அது பெர்மனென்ட் கோர்ட் ஆக விரைவிலே நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும். அப்போது உறுதியான சொந்தமான கட்டிடம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 261—திரு, ஆர், தங்கராஜ், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்

261—

தென்னூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு பிற்பட்டோர் நல விடுதி அமைத்தல்,

*2924—திரு, ஆர், தங்கராஜ்:
மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் தென்னூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்பட்டோர் நல விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு, இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை,

திரு, ஆர், தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலேயே ஆண்டிமடம் சட்டமன்றம் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாகும், அங்கு அரசு உதவி பெறுகின்ற தாம்போஸ் ஹையர் செகண்டரி ஸ்கூ...



1992 மார்ச் 19]

ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இல்லை என்று சொல்லாமல் அந்த அரசு உதவி பெறும் மேல் நிலைப் பள்ளிக்கு ஒரு பிற்பட்டோர் நல விடுதியை அமைத்துத் தர ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தென்னூருக்கு அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் ஆண்டிமடத்திலே பிற்படுத்தப்பட்டவர் நலத் துறையின் சார்பில் ஒரு விடுதி இயங்கிக் கொண்டிருக்கிறது, ஹரிஜன நலத்துறையின் சார்பிலே ஒரு விடுதி இயங்கிக் கொண்டிருக்கிறது, ஆகவே தற்போதைய சூழ்நிலையில் புதிய விடுதிகள் திறப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

முற்பகல் 9—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 262. திரு, அ. பாப்பா சுந்தரம். மாண்புமிகு கல்வி அமைச்சர்,

262—

மணப்பாறையில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,

*324 திரு, அ, பாப்பா சுந்தரம்:
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மணப்பாறை நகராட்சியில் அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி துவங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில். எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை என்பது ஒரு நகராட்சிப் பகுதியாகும் அது ஒரு தாலுக்காவினுடைய இருப்பிடம் ஆகும். ஆனால், மணப்பாறையைச் சுற்றி 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்த பெண்கள் மேல்நிலைப் பள்ளியும் அமையப் பெறவில்லை. அந்த மணப்பாறையைச் சுற்றியிருக்கின்ற 8 ஊராட்சி ஒன்றியங்கள் மருங்காபுரி, வையம்பட்டி, கடவூர், தோகைமலை, மணப்பாறை போன்ற ஒன்றியங்களைச்சேர்ந்தச் அத்தனை பெண்கள் வெளியில்

சென்று மேல்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டும் என்றால் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, அதை மனதில் கொண்டு தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ஒரு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை மணப்பாறையில் அமைக்க இந்த ஆண்டில் இல்லை என்றாலும் அடுத்த ஆண்டிலாவது அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையில் சிறுமலர் மகளிர் மேல்நிலைப் பள்ளி என்ற ஒரு பள்ளி பெண்களுக்காகவே தனியாகச் செயல்பட்டு வருகிறது. அது தவிர அரசினர் மேல் நிலைப்பள்ளியும், தியாகேசர் ஆலய மேல்நிலைப்பள்ளியும் ஆண் களும் பெண்களும் சேர்ந்து பயிலுகின்ற மேல்நிலைப் பள்ளிகளாக இயங்கி வருகின்றன. ஆகவே, பெண்களுக்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் சார்பில் மகளிருக்கென தனியாக ஒரு மேல் நிலைப் பள்ளி வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்து கிறார்கள். அப்படி ஒரு மேல்நிலைப் பள்ளி அங்கே வர வேண்டுமானால் அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் பங்குத் தொகை 1 லட்ச ரூபாய் செலுத்த வேண்டும். இதை ஆரம் பிக்கும் முன்னரோ, பின்னரோ கூடச் செலுத்தலாம். சம்பந்தப் பட்ட பள்ளிக்கு 8 கிலோ மீட்டர் சுற்றளவில் வேறு எங்கும் மேல்நிலைப்பள்ளி இருக்கக்கூடாது. இங்கே 3 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. 10-வது வகுப்பில் 60 மாணவர் களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். பள்ளிக்கு வகுப்பறை, ஆய்வகம், விளையாட்டு இடம் இருக்க வேண்டும். பொரு ளாதாரம் மற்றும் சமூக ரீதியில் பின்தங்கியப் பகுதியாக இருப் பின் 2, 3 நிபந்தனைகளைத் தளர்த்தலாம் என்று இருக்கிறது. இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அந்தப் பகுதியில் இருக்கிற பொது மக்கள் அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் போன்ற மக்கள் பிரதிநிதிகள் தக்க நடவடிக்கை எடுத்து அரசை அணுக வேண்டும். அப்போது ஆண்டுதோறும் எவ்வளவு மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தலாம் என்பதை நிதி நிலைமை யைப் பார்த்து அரசு வரையறை செய்கிறது. அந்த வரை யறைக்கு உட்பட்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மணப்பாறையில் கோ-எடுகேஷன் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கின்ற பள்ளி இருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். இருந்தாலும் இந்தக் காலத்தில் உங்க ளுக்கு நன்றாகத் தெரிம், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒயுரு கோ-எடுகேஷன் பள்ளியில் 10, 08



பிள்ளைகள் தான் ஒரு வகுப்பறையில் சேர்த்துக்கொள்ள வேண் டும். நான் சொன்னது போல் 8 ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற பெண்கள் படிக்க வேண்டியிருக்கின்ற காரணத்தால் அந்த கோ-எடுகேஷன் பள்ளியில் சேர முடியாமல் கஷ்டப்படு கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் தனியார் மேல்நிலைப் பள்ளிகள் இயங்குவது உண்மை தான், அந்த தனியார் பள்ளியில் தாலுக்காவில் உள்ள பெண்களும். 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பெண்களும் அதிகமாக இருப்பதால் அங்கே நன்கொடை பெறப்படுவதாகச் சொல்கி றார்கள். அந்த நன்கொடையைக் கொடுத்துப் படிக்கிற வசதி இருப்பவர்கள் தான் அங்கே படிக்க முடிகிறது. நன்கொடை கொடுக்க முடியாத பிள்ளைகள் வெளியே சென்று படிக்க முடி யாமல் வசதி ஏதுமின்றி மேல்நிலைப் பள்ளியில் படிக்காமல் பெண்கள் அப்படியே இருந்து விடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் அங்கே ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை பெற்று அங்கே இருக்கின்ற, பக்கத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள்—3 சட்டமன்ற தொகுதிகள் இடையில் வருகின்றன—அந்த சட்டமன்ற உறுப் பினர்கள் எல்லாம் ஏற்பாடு செய்து பங்குத் தொகை கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆக அரசு அடுத்த ஆண்டிலாவது நிதிநிலையை மனதில் கொண்டு கஷ்டம் இருந்தால் கூட அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய கஷ்டத்தை, சிரமத்தை மனதில் கொண்டு தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டும். செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர் களும் இப்படி என்னை வற்புறுத்த ஆரம்பித்தால் எல்லோருடைய கோரிக்கைகளையும் ஒரு சேர என்னால் நிறைவேற்ற முடியாது என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். நான் ஏற் கனவே சொன்ன பதிலில் என்னுடைய ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினருக்கு சொல்லியிருக்கிறேன். அந்த ஆலோசனைகளைச் சரியாக பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 263, டாக்டர் க. கோபால் இருக்கையில் இல்லை, திரு. எஸ். ஆசை மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

263—

நன்னிலம் தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் வசதி.

*3277—டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நன்னிலம் தலைமை மருத்துவமனைக்கு அதிக நோயாளிகள் வருவதால் போதிய மருத்துவர்களும், கட்டிட வசதியும் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) சுகாதார வசதிகளும் செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நிதி வசதியைப் பொருத்தும் தேவையைப் பொருத்தும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தலைமை மருத்துவமனை தாலுக்கா மருத்துவ மனையாக இருக்கின்ற காரணத்தால் இங்கே இந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான ஆம்புலன்ஸ் வசதி இங்கே இல்லை ; இரத்த சேமிப்பு நிலையம் இல்லை; இந்த ஆஸ்பத்திரிக்குத் தேவையான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இங்கே இல்லை. ரத்த சேமிப்பு நிலையம் இல்லாத காரணத்தினால் பல பிரசவ கேஸ்கள் ஆபத்தான நிலையில் பல்வேறு மருத்துவ மனைகளுக்குக் கொண்டுபோகப்பட்டு இறக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பெரிய மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் 20 கிலோ மீட்டர் தூரத்தில் திருவாரூர் ; 30 கிலோ மீட்டர் தூரத்தில் நாகப்பட்டினம்; 30 கிலோ மீட்டர் தூரத்தின் கும்பகோணம்; 30 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள மயிலாடுதுறை; ஆகிய மருத்துவமனைகள் அதிக தூரத்தில் இருப்பதால். இந்த மருத்துவமனைக்கு பல்வேறு வசதிகள் செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன் நிதிப் பிரச்சினைதான் காரணம் என்று. நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே 40 படுக்கைகள் அங்கே இருக்கின்றது. இருந்தாலும் உள் நோயாளிகள் கொஞ்சம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கேள்வியிலே கூட கட்டிட வசதி பற்றியும். மருந்துகள் ஒதுக்குவது



பற்றியும்தான் கேட்டு இருக்கிறார்கள், ஆம்புலன்ஸ் பற்றி அவர்கள் குறிப்பிடவில்லை இருந்தாலும் மொத்தமாக என்னென்ன வசதிகள் தேவை என்பதைப் பார்த்து, நிதி வசதிக்கேற்ப என்ன செய்ய முடியுமோ அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 264. திரு. என். ஆர், ராஜேந்திரன. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

264—

அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள்,

*3788—திரு, என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகளில் பணியாற்றும் நிர்வாக இயக்குநர்கள் மற்றும் பொது மேலாளர்கள் எத்தனை பேர்?

(இ) நிர்வாக இயக்குநர் மற்றும் பொது மேலாளர் பதவிகளில் இட ஒதுக்கீடு முறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமாக 15 (பதினைந்து) போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன,

(ஆ) அவைகளில் மொத்தம் 15 நிர்வாக இயக்குநர்களும், 15 பொது மேலாளர்களும் உள்ளனர்.

(இ) இந்தப் பதவிகளுக்கு இட ஒதுக்கீடு முறையில் நியமனம் செய்ய விதிகளில் இடம் இல்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இட ஒதுக்கீடு என்பது எல்லாத் துறைகளிலும் இருக்கும்போது, போக்குவரத்து நிறுவனங்களில் மட்டும் ஏன் இல்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 19

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் இட ஒதுக்கீட்டிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நிர்வாக இயக்குநர், பொது மேலாளர் போன்றவர்களைப் பற்றி கேள்வி கேட்டு இருக்கிறார். அதிலே இட ஒதுக்கீட்டிற்கு சம்பந்தம் இல்லை. இப்போது மொத்தம் 15 போக்குவரத்துக் கழகங்கள் தமிழகத்திலே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் நூறே நாளில் மீண்டும் ஒரு போக்குவரத்துக் கழகத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பதைப்போல, உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, நிர்வாக இயக்குநர்களாக, தாழ்த்தப்பட்டவர்கள் இன்றைக்கு அதிலே பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். திரு. ராஜ்குமார் என்பவரும், திரு. ஜெயராஜ் என்பவரும் நிர்வாக இயக்குநர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பொது மேலாளர்களாக திரு. பாலசுந்தரம் என்பவரும், திரு. வீரமலை என்பவரும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி, அதாவது பணி ஒதுக்கீடு முறையில் இட ஒதுக்கீடு செய்யாமல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கடைநிலை ஊழியர்களாக மட்டும் இட ஒதுக்கீடு செய்து பணி அமர்த்தப்படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தின் முதல்வராக இருக்கின்ற நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் தாழ்த்தப்பட்டுள்ளவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 18 சதவீதத்தைப் போக்குவரத்துக் கழகங்கள் தவறாமல் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்,



1992 மார்ச் 19]

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலில் சொன்ன பதிலில், இதிலே இட ஒதுக்கீட்டிற்கு சட்டத்திலே இடம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் எல்லா துறைகளிலும், எங்கெங்கெல்லாம் தகுதியும் திறமையும் வாய்ந்த ஆதி திராவிட இனத்திலிருந்து வருகின்ற மக்களுக்கு கட்டாயமாக 18 சதவீதம் இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. அதை மறுபடியும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, அதாவது உயர்ந்த பதவிகளிலேகூட அவர்களுக்கு அந்தச் சலுகையை அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக இயக்குநரும் பொது மேலாளரும் பரமோஷனில் வருகிறவர்கள் நேரடித் தேர்வு மூலம் நியமிக்கப்படுபவர்கள் அல்ல. ஆகவேதான் அதைக் குறிப்பிட்டேன். ஆகவே, அதிலே இட ஒதுக்கீட்டிற்கு சம்பந்தமில்லை என்று நான் குறிப்பிட்டேன். நீங்கள் குறிப்பிட்டதைப் போல அத்தனை துறைகளிலும் நடக்கின்ற தேர்வுகளில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதைப் போன்று, அத்தனை இடங்களிலும் போக்குவரத்துக் கழகங்கள் பூர்த்தி செய்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் பெண்களை ஓட்டுநராக நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூல வினாவிற்குச் சம்பந்தம் இல்லாத துணைவினா.

வினா எண் 265. டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

265—

தாயகத்திலுள்ள தமிழர்களுக்கு தேயிலைத் தோட்டங்கள் அமைத்தல்.

*4193 டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

[1992 மார்ச் 19

(அ) தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக அரசு தேயிலைத் தோட்டங்கள் (TANTEA) அமைத்திருப்பதைப் போல் தாயகத்திலுள்ள தமிழர்களுக்கென்று தேயிலைத் தோட்டங்களை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் இதற்கும் நிதி ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தாயகத்திலுள்ள தமிழர்களுக்கென்று தனி தேயிலைத் தோட்டங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 9-55

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 'இல்லை' என்று கூறி விட்டார்கள். ஆனால், 'ஆம்' என்ற பதிலைத்தான் கூறுவார் என்று என்னுடைய தொகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான தாய்மார்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், கொட்டுகின்ற மழையையும், கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் தேயிலைத் தோட்டங்களில் அயராது உழைப்பதில் பெண்கள்தான் பெரும் பங்கு கொண்டிருக்கிறார்கள். தாயகம் திரும்பிய நம் தமிழர்களுக்காக சுமார் 21 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ற கழகம் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது நல்ல இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. அன்னியச் செலாவணியும் கிடைக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கருப்புசாமி, அந்த முழு விவரமும் கேள்வி நேரத்திலே சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை. உங்கள் கேள்வியைக் கேட்டாலே அமைச்சர் புரிந்து கொள்வார். புரிந்துகொண்டு உங்களுக்குப் பதில் சொல்வார்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாயகமான நம் தமிழகத்திலேயே பிறந்து, வளர்ந்து நம் வாழ்வில் ஒளி வராதா என்று ஏங்கித் தவிக்கும் நீலகிரி மாவட்ட மக்களுக்கும் அதில் வேலைவாய்ப்பு கிடைக்க, ஏழைத் தாய்மார்களின் கண்ணீரைப் போக்கும் அளவிற்கு அவர்களுக்காகத் தனி தேயிலைத் தோட்டம் அமைக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



1992 மார்ச் 19]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாயகம் திரும்பிய தமிழருக்கு என்று தேயிலைத் தோட்டம் தனியாக அமைக்க முடியாது. தமிழகத்திலே இருக்கிற தமிழர்களுக்காகத் தேயிலைத் தோட்டம் நாம் இப்பொழுது அமைத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றுகின்ற வகையில் 1-4-1976 இல் தேயிலைத் தோட்டக்வற் கழகம் துவக்கப்பட்டது. சின்கோனாவிலேயிருந்து ஏறத்தாழ 3000 ஹெக்டேர் நிலப் பரப்புள்ள நிலத்தை நாம் இப்பொழுது தேயிலை தோட்டமாக மாற்றிக் கொண்டிருக்கிறோம், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நம்முடைய அரசு பொறுப்பேற்ற இந்த நேரத்தில் இக்கழகத்தின் சார்பாக 4 தேயிலை தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன, தனியாரிடத்திலே 210 தொழிற்சாலைகள் நீலகிரி மாவட்டத்திலே இன்றைக்கு இருக்கின்றன, இது வரையிலும் சுமார் 91 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவு செய்து 5,500 ஹெக்டேர் பரப்புள்ள 4 கட்டப் பணிகளாகத் தேயிலை பயிரிட்டு வளர்த்து வருகிறோம், 1990-91 வது ஆண்டுக்கு இக்கழகத்தின் மொத்த வரவு செலவு-இலாபம் 20 கோடி ஆகும்,

டாக்டர் எம். கருப்புசாமி: மாாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'டான்டீ' என்று செல்லப்படுகின்ற தமிழ்நாடு தேயிலத் தோட்டக் கழகத்தில் தாயகத்திலுள்ள தமிழர்கள் யாரும் கூலி வேலை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை, ஆகவே இந்த நிதி நிலை அறிக்கையில். அதாவது 92-93 ஆம் நிதி நிலை அறிக்கையில் 60 கோடி ரூபாய் செலவில் சுமார் 7500 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்படும் என்று கூறியிருக்கிறீர்கள், பெரும்பாலும் தாய்மார்களே தேயிலைத் தோட்டங்களில் பணி புரிவதால் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலுள்ள தாய்மார்களும் வேலை செய்யும் அளவிற்கு அரசு தேயிலைத் தோட்டங்கள் அமைக்கும் எண்ணம் பரிசீலனையில் உள்ளதா? அடுத்த வருஷமாவது பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் தாயகம் திரும்பிய தமிழர்களுக்கும். தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களுக்கும்—பெண்களுக்கும் இதிலே முன்னுரிமை வழங்கப்படும் என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்,

[1992 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கே, ஆர், ராஜூ.

திரு கே, ஆர், ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நீலகிரி மாவட்டம் சின்கோனாவிலிருந்து தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு மாற்றப்பட்ட காலி நிலங்களில் தேயிலை பயிரிட்டால் மாவட்ட மக்களுக்கு நிரந்தர வேலை கிட்டும் இத்திட்டத்தினைச் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, கே, ஏ, செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. உறுப்பினர்கள் குறிப்பிட்ட இடத்தை—சின்கோனா இருந்த இடத்திலே இருக்கின்ற அத்தனை நிலங்களையும் தேயிலைத் தோட்டங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பியாட்ரிக்ஸ் டிசௌசா.

Dr. THIRUMATHI BEATRIX D'SOUZA: Honourable Speaker Sir, I would like to know whether under Tamil Repatriates the Srilankan refugees have benefitted.

மாண்புமிகு திரு, கே, ஏ, செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இலங்கைத் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 266, திரு, சி, ஞானசேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்,

266—

நெசவுத் தொழிலாளர்களுக்குத் தொகுப்பு வீடுகள்.

*429ஏ திரு, சி, ஞானசேகரன் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூர் தொகுதியில் நெசவுத் தொழிலாளர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு, இ, மதுசூதனன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1992 மார்ச் 19]

(அ) மற்றும் (ஆ) வேலூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதி
யில் உள்ள இரண்டு கைத்தறி நெசவாளர் சங்கங்களின் உறுப்
பினர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு உகந்த நிலம் கிடைக்கப்
பெறாததால். இத்திட்டம் செயல்படுத்த இயலாத நிலை ஏற்
பட்டுள்ளது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆடையில்லாத மனிதன் அரை மனிதன் என்பார்
கள். இங்கு ஆடையைத் தந்து மானம் காத்துக் கொண்டிருக்
கின்ற நெசவாளர்கள் என்னுடைய தொகுதியிலே சத்துவாச் சேரி
என்ற பகுதியிலே நிறையபேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்
கள். அந்த மனிதர்களுக்கு— இப்பொழுது வீட்டு வசதி வாரியம்
மூலமாக பேஸ் 4 என்றும் பேஸ் 5 என்றும் நிலங்களை எடுக்க
அரசிடம் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் வாயிலாக,
தறிக் கூடங்கள் இணைந்த வீடுகள் 2 ஆயிரம் கட்டிக் கொடுப்ப
தாக, 113-வது பாராவிலே, நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்
பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்த இடத்திலே, நெசவாளர்
குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டித் தருமா என்பதை அமைச்
சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும்
நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், வீடு தேவைப்படும்
உறுப்பினர்கள், தங்கள் சொந்த நிதியின் மூலமாக வீடு கட்டு
வதற்கு. உரிய நிலத்தை ஒட்டு மொத்தமாக விலைக்குப் பெற்று
அதனை சங்கத்தின் பொறுப்பில் பதிவு செய்து கொடுப்பார்
களேயானால், 'ஹட்கோ' மூலமாகக் கடன் ரூ. 14 ஆயிரமும்,
மத்திய அரசின் மானியமாக ரூ. 5 ஆயிரமும், மாநில அரசின்
மானியமாக ரூ. 5 ஆயிரமும் பெற்று, அதைக் கொண்டு வீடுகள்
கட்டுகிற திட்டம் இருக்கிறது. தற்போது, சத்துவாச்சாரியில்
இரண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களினுடைய நிதிநிலை
சரிவர இல்லாத காரணத்தினால், இது இயலாது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வருகிற ஆண்டிலே, ஒரு லட்சத்து பத்தாயிரம்
வீடுகள் கட்டித் தரப்படும்; குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற
கொள்கையை இந்த அரசு நிறைவேற்றும் என்று 138—வது பாரா
விலே, நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த
வகையிலே, வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக கட்டித் தரப்படு
கிற வீடுகளில், நெசவாளர்களுக்கு முன்னுரிமையளித்து, அவர்
களுக்கும் வீடுகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கேள்வி, கைத்தறித் துறை அமைச்சருக்கு வராது. வீட்டு வசதித் துறை அமைச்சரிடத்திலே இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும். இப் படிக் கட்டுகிற வீடுகளில் நெசவாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று கேட்கிற கேள்வி நீங்கள் கேட்பது. ஆனால் அவருடைய துறையிலேயிருந்து கட்டப்படுகிற வீடு களுக்குத்தான் அவர் பதில் சொல்ல முடியும். அதனால், இதற் குத் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) இல்லை; இல்லை. நீங்கள் கேட்கிற கேள்வி, வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப் படுகிற வீடுகள் இந்த நெசவாளர்களுக்கு ஒதுக்கப்படுமா என்று கேட்கிறீர்கள். அதற்குத் கைத்தறித் துறை அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும்? இந்தக் கேள்வி, இதிலே துணைக் கேள்வி யாக வராது. (குறுக்கீடு) அதற்குத் தனிக் கேள்வி போடவும். தனிக் கேள்வி போட்டீர்களானால், அதற்கு வீட்டு வசதித்துறை அமைச்சர் பதில் சொல்வார்.

வினா எண் 2C7: திரு, செ. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

267—

பாலம் அமைத்தல்.

* 3755 திரு. செ. ஆறுமுகம்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வானூர் தொகுதியில், வானூர் வட்டத்தில் திருவக் கரைக்கும் புதுவை மாநிலம் திருக்கனூருக்கும் இடையில் உள்ள ஆற்றில் ஒரு நீண்ட பாலம் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கிரமக்காரர்களின் ஆணிவேரை அடியோடு களைந்து கொண்டிருக்கிற எங்கள் காவல் தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, தென்னாற்காடு மாவட் டம், வானூர் வட்டம், எனது வானூர் தனித் தொகுதியில், மிக மிகச் சக்திவாய்ந்த அருள்மிகு வக்கரகாளியம்மன் ஆலயத் தைக் கொண்ட, திருவக்கரை என்ற உலகப் புகழ் பெற்ற ஒரு கிராமம் உள்ளது. அதன் வழியாகத்தான், சுமார் 30 கிராமங்கள் கொண்ட கிராம மக்கள் புதுவை மாநிலத்திற்குச் செல்லவும், புதுவை மாநிலத்திலிருந்து பல லட்சக்கணக்கான மக்கள் திருவக்



1992 மார்ச் 19]

கரை ஆலயத்திற்கு வருவதுமாக உள்ளது. இதனிடையில், திருக் கனூருக்குப் பக்கத்தில் ஒரு நீண்ட சருக்கு பாலம் அமைந்துள்ளது. மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து, வழியைத் துண்டித்து விடுவதால், பொதுமக்கள் மிகப்பெரிய பாதிப்புக் குள்ளாகி விடுகிறார்கள். எனவே, நிரந்தரமாக ஒரு பாலம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே குறிப்பிடப்பட்டுள்ள திருவக்கரை கிராமம், சங்கராபரம் ஆற்றினுடைய வடகரையில் உள்ளது. கொடுக்கூர் கிராமமானது அந்தப் பகுதியின் தென் கரையில் உள்ளது. அந்த இரண்டையும் இணைப்பதற்கு ஏற் கெனவே தரை மட்டத்திலே ஒரு பாலம் இருக்கிறது. ஆனால், மழைக் காலங்களில், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல், போக்குவரத்தின்றி மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை இந்த அரசு நன்றாக அறியும். இருப்பினும், இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. இருக்கிற நிதியாதாரத்தைப் பொறுத்துதான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். தற்போது பரிசீலனையில் இல்லை என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். இருந்தாலும், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை நியாயமானது என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கருதுகிற காரணத்தினால், வருகிற நிதியாண்டிலாவது இதைப் பரிசீலித்து, இருக்கிற நிதியாதாரங்களைப் பொறுத்து, முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை என்று நான் என் தொகுதிவாழ் மக்களிடத் திலே கூறும்போது, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சதி செய்கிறார் என்ற அவலநிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய இந்த அதிமுக்கியம் வாய்ந்த பிரச்சினையைக் கருத்திற் கொண்டு, வரு கிற நிதியாண்டில் நிச்சயமாக நிறைவேற்றித் தருவாரா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான், இந்த நெடுஞ்சாலைத் துறைக்கே முக்கியத்துவம் வந் திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கேட்பாரற்றுக் கிடந்த நெடுஞ் சாலைத் துறைக்கு, இன்றைக்கு சென்ற ஆண்டைவிட ஒரு மடங்கு இந்த ஆண்டு நிதிகளை ஒதுக்கி, உடனடியாக சாலைப் பணி

களைச் செப்பனிட வேண்டுமென்று உத்தரவிட்டு, புதிய முறைகளைக் கையாண்டு, 'பிளான்ட்' என்று சொல்லப்படுகிற மெஷினரிகளை வைத்துத்தான் சாலைகளைப் போட வேண்டுமென்ற முனைப்போடு, தரத்தோடு சாலைகளெல்லாம் போடப்பட்டு வருகின்றன. பாலங்கள் கட்டுவதில் முன்னுரிமை கொடுத்து உடனடியாகத் தமிழகத்திலே இருக்கின்ற முக்கியமான இடங்களில் செய்ய வேண்டிய திட்டங்களை வகுத்திருக்கிறோம். இருந்தாலும், ஏற்கெனவே நான் சொல்லியபடி ஒரே நேரத்தில் அத்தனை தொகுதிகளிலும் இருக்கின்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசினுடைய நிதிப் பற்றாக்குறை இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார்கள். ஆகவே அந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் உடனடியாக அந்தத் திட்டத்தைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 268. திரு. எ. ஏகாம்பர ரெட்டி. மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

268—

துணை மின் நிலையம் இயங்க நடவடிக்கை.

*4302 திரு. எ. ஏகாம்பர ரெட்டி:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருத்தணி கோட்டம், காஞ்சீபுரம் மின்வாரிய மின்வழங்கு வட்டத்தினால் கே.ஜி. கண்டிகையில் நிறுவப்பட்டு முடிவுற்ற நிலையிலுள்ள துணை மின்நிலையம் இதுவரை இயங்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்துணை மின்நிலையம் எப்போது இயங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கண்டிகை துணை மின் நிலையம் 19-10-1991 முதல் இயங்குகிறது. துணை மின் நிலையம் அமைக்கின்ற பணி முடிவுற்றது. நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே தான் அந்தத் தகவல் தொடர்புத் துறையிடமிருந்து உரிமம் கிடைக்காத காரணத்தால் ஏற்பட்ட சிக்கலை நீக்கி இன்றைக்கு



மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற உடனே முனைப்பாக நடவடிக்கை எடுத்து, 19-10-1991-லிருந்து அந்தத் துணை மின் நிலையம் இயங்கி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அதே நேரத்தில் கே. ஜி. கண்டிகை என்ற கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள துணை மின் நிலையத்திற்கு 2 X 5 எம். வி.எம் 3 வி.சி.பி. கேபாசிடரும் சாங்ஷன் செய்யப்பட்டது. ஆனால் இன்றுவரை 1 X 5 எம். வி. ஏ. மற்றும் 2 வி.சி.பி. தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முழுமையாகச் செயல்பட வேண்டுமென்றால் மீதமுள்ள 1 X 5 எம். வி. ஏ—ம் 1 வி.சி.பி யும் உடனடியாக நிறுவுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 33/11 கே.வி. மின் நிலையம் நான் ஏற்கனவே சொன்னதைப் போல 19—10—1991 முதல் இயங்கி வருகின்றது. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் குறைபாடுகள் இருக்குமே யானால் அதை உடனடியாக இந்த அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்து அந்தத் துணை மின் நிலையம் முழுமையாக இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பள்ளிப்பட்டுப் பகுதிக்கு வரவேண்டிய மின்சாரம் சோளிங்கர் துணை மின் நிலையத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறது. கடந்த 1 மாசு காலமாக சுமார் 1,000 விவசாய மோட்டார்கள் 'பர்ன்' ஆகி, ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல், கரும்பு, கடலை போன்ற பயிர்கள் நாசமாகிவிட்டன. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சோளிங்கர் பகுதியில் இருக்கக்கூடிய துணை மின் நிலையத்தினுடைய கபாசிடியை 10 எம்.வி.ஏ. விலிருந்து 20 எம். வி. ஏ.க்கு உயர்த்தித்தர, கருணையோடு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட கேள்வி கே. ஜி. கண்டிகை துணை மின் நிலையம் பற்றியது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகளுடைய பிரச்சினை என்று சொல்கின்ற காரணத்தாலே அந்தப் பகுதியிலே மின்

அழுத்தம் குறைவாக இருக்குமேயானால் அதுபற்றி என்னிடத்திலே தனியாக எழுதித் தந்தால் உடனடியாக அந்தப் பகுதியினுடைய மின் அழுத்தம் சீர் செய்யப்பட்டு விவசாயிகளுடைய நலன் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 269 திரு. வெ. நடேசன் பால்ராஜ், உறுப்பினர் இருக்கையில் இல்லை

வினா எண். 270,

திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

270—

பத்மநாபபுரம் நகரத்திற்கு ஏற்படுத்தப்பட்ட குடிநீர்த் திட்டம்.

* 806 திரு. கு. லாரன்ஸ்

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பத்மநாபபுரம் நகரத்திற்கு ஏற்படுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) பணியை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) (1) தலைமை நீரேற்று நிலையத்திற்கான விரிவான மதிப்பீடு ரூ. 72.25 இலட்சங்களுக்குத் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

(2) நீர் உந்து பிரதானக் குழாய் பதிப்பதற்கான விரிவான மதிப்பீடு ரூ. 112.00 இலட்சங்களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன

(3) பகிர்மானக் குழாய்கள் பதிப்பதற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர். தென் மண்டலம் அவர்களின் பரிசீலனையில் உள்ளது

(4) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிப்பில் உள்ளன,

(ஆ) ஆம்.



திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதில் மிகவும் உற்
சாகத்தை அளிக்கிறது. இந்தத் திட்டம் 1990-ல் அரசு ஆணை
மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அன்று 23 இலட்சம்
ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. இந்தத் திட்டம் 1993-ல்
முடிக்கப்படும் என்று பல்வேறு அதிகாரிகள் மாவட்ட வளர்ச்சி
மன்றக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது
போன்று அந்த அதிகாரிகளும் மிகச் சிறப்பாகவே பணியாற்றி
வருகிறார்கள். இந்தத் திட்டம் வரும் என்ற நம்பிக்கையோடு
இந்தக் குடிநீர்த் திட்டம் வருகிற பல்வேறு கிராமங்களில்
கிணறுகள் வெட்டுவது அல்லது ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்
பது போன்ற பணிகள் இன்று நடைபெறாத சூழ் நிலை
இருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தில் ஏற்பட்டு இருக்கிற
சிக்கல் என்னவென்றால் அதிகாரிகளும், நம்முடைய மாண்புமிகு
அமைச்சர் அவர்களும் மிகச் சிரமம் எடுத்துப் பணியாற்றி
னாலும் இந்த ஒப்பந்தப் புள்ளிகளில் அரசினுடைய குறியீடு
களுக்கு அதிகமாகவே ஒப்பந்தக்காரர்கள் கேட்பதாகத் தெரி
கிறது. எனவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இந்தத் திட்டம்
இப்போது உடனடியாக நிறைவேற்றப்படுவதற்கு ஒரு தடங்கல்
இருப்பது போன்று தெரிகிறது. இந்தத் திட்டம் மிக அத்தியா
வசியமான திட்டம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த
ஒப்பந்தப் புள்ளிகளில் இருக்கிற....

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்
விரிவாகப் பதில் சொல்லியிருக்கிறார். நீங்களும் துணைக்
கேள்வியில் விரிவாகப் பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம் ?
கேள்வி கேளுங்கள்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக்
கவனம் செலுத்தி இந்த ஒப்பந்தப் புள்ளிகள் இப்போது ஏற்
புடைப்பு உடையதுதானா, உடனே நிறைவேற்ற முடியுமா
என்பதை எல்லாம் ஆராய்ந்து அது நிறைவேற்றப்படுகிற அள
வில் தன்னுடைய தனிக் கவனத்தைச் செலுத்துவார்களா
என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தலைமைப்
பொறியாளருக்கு அரசின் சார்பில் அறிவுரைகள் வழங்கப்பட்டு
இருக்கிறது. நிச்சயமாக வருகிற ஜூன் 1993-க்குள் இந்தத்
திட்டம் முடிக்கப்பட்டு பயனுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

1992 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 271 திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

271—கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தண்ணீர் வழங்கல்.

*3866 திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராதாபுரம் தொகுதி செட்டிகுளம் பஞ்சாயத்தில் ஸ்ரீரெங்கநாராயணபுரம் பகுதிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தண்ணீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரெங்கநாராயணபுரம் பகுதிக்கு தண்ணீர் வழங்கும்பொருட்டு இது இராதாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் அனைத்து ஆய்வுப் பணிகளும் மார்ச்சு 1992-ல் முடிக்க குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கிற ஸ்ரீரெங்கநாராயணபுரம் செட்டிகுளம் பஞ்சாயத்தைச் சேர்ந்தது. அங்கே ஒரு குடிநீர்த் திட்டம் இயங்கி வருகிறது. அதிலே இணைப்பது மிக எளிதானது. அது உடனடியாக நடக்கக்கூடிய ஒன்று. அமைச்சர் அவர்கள் கூறுகிற கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட அதிக நாட்கள் ஆகும். எனவே அங்கே குடிநீரே அதிகமாக இல்லாத காரணத்தாலும், உப்பு நீரே கிடைக்கின்ற காரணத்தாலும் ஒரு எக்ஸ்டென்ஷன் அதாவது ஒரு கிலோ மீட்டருக்கு பைப்பை நீட்டித்து இரண்டு மூன்று பைப்கள் போட்டுத் தருவார்களேயானால் அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் தரக்கூடியதாக இருக்கும். அதற்கு ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : அரசு இது பற்றிப் பரிசீலனை செய்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 272, திரு. பி. வி. இராஜேந்திரன். இருக்கையில் இல்லை.

வினா எண். 273. திருமதி ப. சரஸ்வதி. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.



1992 மார்ச் 19

சேலம் மாவட்டம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பயிற்றுவிப்பு வழிகாட்டல் நிலையம்.

4388— திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா : —

(அ) திருச்சி கோயம்புத்தூர் நகரங்களில் உள்ளது போல வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தாழ்த்தப்பட்ட பழங்குடி இனத்தவருக்கான பயிற்றுவிப்பு வழிகாட்டல் நிலையம் சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் தோற்றுவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கானப் பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையம் ஒன்றை சேலம் மாவட்டத்திலும் தொடங்கலாம் என்று வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுந்த பயிற்சி இல்லாமல், வசதி இல்லாமல் வேலைவாய்ப்புகள் எந்தெந்தத் துறைகளில் வருகின்றன என்பதைக் கூட அறிய முடியாத அளவுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிற தாழ்ந்தப்பட்ட, பழங்குடியின மக்கள் அதிகமாக வாழ்கின்ற சேலம் மாவட்டத்தில் அடுத்த ஆண்டிலாவது இவற்றைத் துவங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோல இது பற்றிய செயற்குறிப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வளர்ச்சி இயக்குநரால் அனுப்பப்பட்டு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பரிசீலனையில் உள்ளது. கூடிய வரையில் இது பற்றிப் பரிசீலித்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 27— திருமதி என். சி. கனகவல்லி. இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. சி. சுவாமிநாதன் கேட்கிறார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

274—

பணப் பயிர்களைக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தல்.

*4936 திருமதி என். சி. கனகவல்லி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட மாநிலங்களில் உள்ளதுபோல் வாழை, கரும்பு' கடலை போன்ற பணப் பயிர்கள் தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த வினாவுக்கு கீழ்க்கண்டவாறு பதில் அமையும்· நீலகிரி மாவட்டத்தில் தென்குமாரக்காடா விவசாய கூட்டுறவு பேட்டை 1954–ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. பணப் பயிர்களை கூட்டுறவு முறை மூலம் விவசாயம் செய்ய மக்கள் முன்வருவார்களேயானால் அரசு இது பற்றி பரிசீலிக்கும்.

முற்பகல் 10–15.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி என். சி. கனகவல்லி அவர்கள், ''வட மாநிலங்களில் உள்ளது போல், வாழை கரும்பு, கடலை போன்ற பணப்பயிர்களை தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?'' என்று கேட்டு இருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களில் அல்ல. தமிழகத்திலே நடைபெற்று வந்துகொண்டிருக்கிறது என்று தான் நான் சொன்னேன். தமிழகத்திலே உள்ள நீலகிரி மாவட்டத்தில் தென் குமாரகாடா என்ற பகுதியில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருக்கிறீர்களே, அதை வாசிக்க வேண்டும். ஆன்சர் ரிவைஸ் பண்ணுகிறீர்களா? 'அவற்றைத் தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய இயலாது எனக் கருதப்படுகிறது' என்று நீங்கள் கொடுத்து இருக்கின்றீர்கள். நீங்கள்—துறை—ஏற்கனவே கொடுத்திருக்கிற பதிலை அப்படியே சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : ரிவைஸ் பண்ணுறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை ரிவைஸ் பண்ணுகிறேன் என்று சொல்லிவிட்டு நீங்கள் ரிவைஸ் பண்ணலாம். அந்த உரிமை உங்களுக்கு உண்டு. ஏற்கனவே கொடுத்திருப்பதை ரிவைஸ் பண்ணி கீழ்க்கண்டவாறு என்னுடைய பதில் அமையட்டும் என்று சொல்லி விட்டுப் போகலாம்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவிற்கு உரிய விடை தயாரிக்கப்பட்ட போது உண்மையானதகவல் தமிழகத்தில் பண்ணுவதுபற்றி அரசு அதிகாரிகள் தரவில்லை. இப்போது தந்திருக்கிறார்கள். எனவேதான் அந்தப் பதிலைச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பதிலை மாற்ற வேண்டும். கீழ்க்கண்டவாறு என்னுடைய பதில் அமையும் என்று சொல்லிவிட்டுப் போகலாம்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இந்த வினாவுக்குக் கீழ்க்கண்டவாறு பதில் அமையும்' என்று சொன்னதாகக் கொள்ளவும்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலே, சிறு, குறு விவசாயிகள் மேம்பாடு அடைகின்ற வகையிலே அவர்களும் பணப் பயிர்களை பயிரிடுவதற்கு ஒரு வாய்ப்புத் தருகின்ற வகையிலே '' வட மாநிலங்களில் உள்ளது போல், வாழை, கரும்பு, கடலை பணப் பயிர்களை உற்பத்தி செய்வதற்கு கூட்டுறவு முறையில் சிறு, குறு விவசாயிகளை இணைத்து ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து பயிரிட வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் முன்வருவார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதும், தென்குமாரகாடா பகுதி என்பது பவானிசாகர் பக்கத்திலே இருக்கின்ற நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி. அங்கே பவானி ஆற்றிலும் மாயாற்றிலும் இருந்து வருகின்ற தண்ணீரை எடுத்து ஏற்கனவே ஆரம்பத்திலே அரசாங்கமே பிரித்து 1 ஏக்கர், 1½ ஏக்கர் நிலம் என்று கொடுத்து அவர்கள் நல்ல முறையிலே, சிறப்பான முறையிலே செய்து வருகிறார்கள். ஆக இதுபோல மற்ற இடங்களில் விவசாயிகள் ஆற்று ஓரப்பகுதியிலே முன்வருவார்கள் என்றால், அவர்கள் சொந்த நிலங்களை

வைத்து கூட்டுறவு முறையை அமைத்து விவசாயம் செய்ய முன்வருவார்களானால், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு முன்வருவார்களானால் அரசு அதற்கு வேண்டிய அத்தனை சலுகைகளிலும் முன் உரிமை வழங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 275. திரு. கி. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

275—

சத்துணவுத் திட்டத்தினைச் செம்மையாக நிறைவேற்ற தேவையான நடவடிக்கை.

* 4947—திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

Open General Licence விதிகளைத் தளர்த்தி மைய அரசுடன் தொடர்பு கொண்டு சத்துணவுத் திட்டத்தினை செம்மையாகவும், நிதி பற்றாக்குறையைப் போக்கும் வகையிலும் நிறைவேற்ற பிற அயல்நாடுகளிலிருந்து ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பொருட்களைப் பெற்று வழங்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மைய அரசானது தனது கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அரசாங்கம் பத்திரிக்கைகளுக்குத் தேவைப்படும் காகிதங்களை இம்போர்ட் செய்வதற்கு அவர்கள் de-cannalised வழி' செய்து இருக்கிறார்கள். அதே போன்று மாநிலத்திற்கு, பாம் ஆயில் என்று சொல்லக்கூடிய ஆயில் ஸ்டேட்களிலேயே வரவழைத்துக் கொள்ளலாம் என்றும் தளர்த்தியிருக்கிறார்கள். அதுபோன்று, நமக்குத் தேவையான ஊட்டச்சத்து பொருட்களை அரசாங்கம் மத்திய அரசை அந்த மாதிரி அணுகி அவர்களிடம் கேட்டு நாம் இம்போர்ட் செய்



வோமானால் இத்துறைக்கு அந்த ஊட்டச்சத்துத் துறையிலே ஏற்படும் நஷ்டத்தை ஈடு கட்டும் வகையிலும் இன்றைக்கு பல ஊட்டச் சத்துப் பொருட்களை வரவழைத்துக் கொள்ளலாம் என்றும், அந்த துறை நன்றாக செயல்பட்டு அரசாங்கத்துக்கு நல்ல நிதியை ஈட்டிக் கொடுக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டச் சத்தால் நஷ்டம் எதுவும் ஏற்படவில்லை. தற்போது வழங்கப்படும் உணவுப் பொருள்களில் ஊட்டச்சத்து போதுமானதாக இருக்கிறது. உணவுப் பொருள்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் மூலம் தான் வழங்கப்பட்டு வருகிறது. அயல் நாடுகளை விட தமிழ்நாட்டிலேயே அதிகமான ஊட்டச் சத்து நிறைந்த பொருள்கள் விளைகின்றன. அதுமட்டுமல்ல, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற பெண்களுடைய வேலை வாய்ப்பில் அதிக கவனம் செலுத்துகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசிலே அதிகமான பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த சமூக நலத் துறையால் பதிவு செய்யப்பட்டு அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இந்த ஊட்டச் சத்துகள் தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்படுவதால் இதில் தமிழகத்திலுள்ள பெண்களுக்கு அதிகம் வேலைவாய்ப்பும் கிடைப்பதால் இந்தக் கருத்தை அரசின் பரிசீலனையில் ஏற்றுக்கொள்ள இயலாது.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இங்கே என்ன விலையில் பொருள்களை சேகரித்தாலும், அந்நிய நாட்டுப் பொருள்களின் விலையுடன் ஒப்பிடும்போது இதில் ஆகும் செலவு இரட்டிப்பாகிறது. ஆகவே, இப்படி செய்வதன் மூலம் அரசுக்கு நிதி மிச்சமாகும் என்பது என் எண்ணம் ஆகும். எனவே, அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற பொருள்களைவிட அயல் நாடுகளிலிருந்து வருகிற உணவுப் பொருள்களின் விலை அதிகம் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உருப்பினருக்கு தங்கள் வாயிலாக தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

[1992 மார்ச் 19

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய குழந்தைகளுக்கு உண்டான சத்துணவுகளை எல்லாம் நாமே தயார் செய்கிறோம். அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, காந்திகிராமம் போன்ற அந்த நிறுவனங்களில் பாசிப் பயிறு, கம்பு, கேழ்வரகு, சோளம் இவைகளை வைத்து ' வின் ஃபுட் ' என்று சொல்கிற உருண்டைகளை தயார் செய்து கொடுக்கிறார்கள். இதே போன்று நம்முடைய பெண்களுக்கு இதிலே பயிற்சி அளிக்க வைத்து, ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு மையத்தை ஏற்படுத்தி பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாகவும் இருக்கும் அந்த 'வின் ஃபுட் ' தயாரிப்பதற்கான முயற்சியை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென இருக்கிற குழு பரிந்துரை செய்ததன்படி கோதுமை, ராகி, சோயா மாவு, வெல்லம், பருப்பு ஆகியவற்றிலிருந்து இந்த ஊட்டச் சத்து தயாரிக்க வேண்டுமென்று அறிக்கை கொடுத்ததன் வாயிலாக இந்த ஊட்டச் சத்து தயாரிக்கப்பட்டு வருகிறது. இதைவிட மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல இந்தப் பொருள்களை வைத்து ஊட்டச் சத்து தயாரித்தால் சிறப்பாக இருக்கும் என்று அறிவித்தால், அதைப் பரிந்துரை செய்து குழுவுக்கு அனுப்பி, அந்தக் குழுவினுடைய பரிந்துரை மூலமாக இதை இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். கே. பாலன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்கள் பாழடைந்திருக்கிறபோது, பணக்காரர்களிடமிருந்து உதவி பெறுவதன் மூலமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தொடர்பு இல்லாத துணை வினா, மூல வினா ஊட்டட உணவு அளிக்கும் திட்டத்தைப் பற்றியது. வேறு வகையிலே உங்கள் கேள்வி இருக்கிறது. சத்துணவுக் கூடங்கள் கட்டுகின்ற வினா இதில் வராது. திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல்நாடுகளிலே இருக்கின்ற தொண்டு நிறுவனங்கள், சமூக சேவை நிலையங்கள் மூலமாக இலவசமாக சத்துணவு தமிழகத்திற்கு கிடைக்க தமிழக அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



[1992 மார்ச் 19]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கொண்டு வந்த இந்த சத்துணவுத் திட்டத்தைத் தொடர்ந்து தமிழக அரசே செயல்படுத்த வேண்டுமென்ற உறுதியோடு இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு இந்தக் கோரிக்கையை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளாது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 276, செல்வி கோ. மல்லிகா. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

276—

## கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக கறவை மாடுகள் வாங்க மானியம்.

*1244 செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் சேத்தியாதோப்பில் பால் குளிரூட்டு நிலையத்திற்குத் தேவையான பால் கிடைக்க, ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக கறவை மாடுகள் வாங்குவதற்கு மான்யம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் தற்போது செயல்பட்டு வரும் 13 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் இந்நிதி ஆண்டில் தாட்கோ மற்றும் ஆதிதிராவிடர் நல திட்டங்களின் மூலம் எட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குக் கறவை மாடுகள் வழங்க தெரிவு செய்யப்பட்டுள்ளது.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட பெருங்குடி மக்களின் விடிவெள்ளி நமது இதயத் தெய்வத்தின் பொற்கால ஆட்சியில் 8 சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. எந்தெந்த இடங்கள் அவை என அறிவிக்க இயலுமா ? இந்த கடன் தொகை எப்போது வழங்கப் படும் என அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 19

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சிறுட்டூர், நெல்லிக்கொல்லை, துரிஞ்சிர்
கொல்லை, மஞ்சக்கொல்லை, பி. உடையூர், தெற்குதிட்டை
தடாம்பாளையம், எக்கம்பூர் ஆக 8 கூட்டுறவுச் சங்கங்களுக்,
கும் 184 கறவை மாடுகள் வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்
பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 277
திரு. எஸ். டேனியல்ராஜ், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

277—

மீனவர்களுக்கு ஓய்வூதியம்.

*4362 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா:

மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளதா ?

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே :

மீனவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க இன்சூரன்ஸ் மற்றும்
ஓய்வூதியம் சிறப்புத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில்
இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கடலில் தொழிலில் ஈடுபட்டு, வேலை
செய்ய முடியாத வயதான மீனவர்களுக்கு கேரள மாநிலத்தில்
தற்போது ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதைப்
பின்பற்றி, மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு
மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கடந்த காலங்களில் விபத்து காப்புறுதித்திட்டத்தின் கீழ்
மீனவர்கள் தொழிலாற்றும்போது அல்லது விபத்திலே இறந்தால்
அவர்களுக்கு ரூபாய் 15,000 வழங்கப்பட்டு வந்தது. அதைப்போல
மீனவர்கள் ஊனமடைந்தால் அவர்களுக்கு ரூ. 7,500
வழங்கப்பட்டு வந்தது. ஆனால் நமது தாயுள்ளம் பொருந்திய,
கருணை உள்ளம் கொண்ட, கொடைத்தன்மை கொண்ட
ப்பற்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்
கருணை உள்ளத்தோடு, விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ்,
மீனவர்கள் இறந்துவிட்டால் ரூ. 15,000 என்று இருந்ததை



1992 மார்ச் 19]

ரூ. 21,000 ஆக உயர்த்தியுள்ளார்கள். அதைப்போல
ஊனமுற்றால் ரூ. 7,500 என்று இருந்ததை
10,500 ஆக உயர்த்தி ஆணையிட்டிருக்
கிறார்கள். அதைப்போல மீனவர்கள் தொழில் செய்யாத
காலங்களில், அதாவது வறட்சிக் காலங்களில் மாதம் ரூ. 60
பெற்று வந்தார்கள். அதை தற்போது டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் மாதந்தோறும் ரூ. 270 ஆக உயர்த்தி
கருணை உள்ளத்தோடு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு க. குப்பன்.

திரு. க. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, மீனவ சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம், எங்கள்
இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி
அவர்களின் நல்லாட்சியில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுகிற
மீனவ சமுதாய மக்கள் இளமைக் காலங்களில் தொழில் செய்
வதுபோல, 50 வயதிற்குமேலே தொழிலிலே ஈடுபட முடியாத
சூழ்நிலை ஏற்படுவதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன். அப்படி மீனவக் கூட்டுறவுச் சங்கங்களில்
உறுப்பினர்களாக இருக்கின்ற உறுப்பினர்களுக்கு இந்த அரசு
ஓய்வூதியம் கொடுக்கின்ற வகையிலே செயல்படுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மீனவர்கள் ஓய்வூதியம் பெற விரும்பினால்
அவர்களாகவே ஜீவன்தாரா என்ற இந்திய ஆயுள்காப்பீட்டுக்
கழகத் திட்டத்தின்கீழ் சேர்ந்து, அதற்கான பிரிமியத்தைச்
செலுத்த ஏற்பாடு செய்துகொள்ளலாம். மாறாக மாண்புமிகு
உறுப்பினரவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், தற்போது நிதி
ஆதாரம் இடம் தராத நிலையில் இருப்பதால், இது பற்றி
புரட்சித் தலைவி அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 278, டாக்டர்
பெ. வீரபாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை
அமைச்சர்.

278—

செங்கம் தொகுதியில் சோப்பு தொழிற்சாலை.

*4166—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 மார்ச் 19

(அ) செங்கம் தொகுதியில் ஐவ்வாது மலையிலுள்ள சந்தனத் தோப்புகளை கச்சாப்பொருளாக வைத்து சோப்புத்தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கம் தொகுதியில் சோப்புத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியுள்ள செங்கத்தில், நறுமணம் வீசுகின்ற சந்தன மரத்தை மூலப்பொருளாகக் கொண்டு சந்தன சோப்பு தயாரித்தால், மைசூர் சேண்டல் சோப்புக்கு இணையாக வருவாய் பெற தமிழக அரசுக்கு வாய்ப்பு உள்ளதால், அரசு இந்தத் திட்டத்தில் தீவிர கவனம் செலுத்த முன்வருமா, மீண்டும் இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோப்புத் தொழிற்சாலை அமைப்பது என்னும் போது, அது சந்தனக் கட்டை கிடைப்பதைப் பொறுத்து அமைவதல்ல. குளியல் சோப்புக்கு சந்தன எண்ணெய் சிறிதளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இது போன்று சோப்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் வைப்பார்களானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 272, திரு பி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்,

272—

குரவபுலத்தில் கிராமக் கூட்டுறவு வங்கி.

*5147 திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேதாரண்யம் தொகுதி குரவபுலத்தில் கிராமக் கூட்டுறவு வங்கி துவங்க அரசு ஆவன செய்யுமா ?



1992 மார்ச் 19]

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

வேதாரண்யம் தொகுதியிலுள்ள குரவபுலம் கிராமம், அதனுடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஏற்கெனவே கத்திரிபுலத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி பகுதியில் அடங்கியிருக்கின்ற காரணத்தால் அங்கே புதிதாக வங்கி துவங்குவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேள்வி நேரத்தின் போது இதுபோன்று கேள்வியைக் கூட விவாதித்திருக்கிறோம். மற்ற கிராமங்களோடு இணைவதால் அதிக மக்கள் தொகை, அதாவது 10 ஆயிரம் 15 ஆயிரத் பேர் இருக்கின்ற அளவுக்கு ஒரு கூட்டுறவு வங்கி இருப்பதில் நியாயம் கிடையாது. 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற கோஷம் வலுவானதாகவும் செறிவூட்டப்பட்டதாகவும் இருக்கவேண்டுமென்றால் அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி குறைந்தது 5,000 பேர் அல்லது 8,000 பேருக்கு ஒரு வங்கி என்ற நிலைமையை ஏற்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுகூர்ந்து சிந்திப்பார்களா என்பதை உங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சென்ற வாரம் கேட்ட கேள்வியில் 20 ஆயிரம் பேருக்கு ஒரு வேளாண்மைக் கூட்டுறவுத் தொடக்க வங்கி துவங்கப்படுமா என்று கேட்டதற்கு 'முடியாது' என்று பதில் சொல்லியிருக்கிறேன். இப்போது கேட்கிற அந்த குரவபுலம் கிராமத்தில் 3484 பேர்தான் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சென்ற ஆண்டு அங்கே ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்கி, அதிலே ரூ. 95,000 தவணை தவறிய கடன் இருக்கிறது. ஏற்கெனவே 1990–91-ல் அந்த வங்கி 92,000 ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 19

269—

பாலம் கட்டுதல்.

*6070— திரு. வெ. நடேசன் பால்ராஜ் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வள்ளியூர் பேரூராட்சியைச் சேர்ந்த சண்முகப்புர மக்கள் வள்ளியூருக்கு மழைக்காலத்தில் வந்து செல்ல பாலம் இல்லாத காரணத்தால், கொடுமுடி ஆற்று நீரைக் கடந்துதான் வரவேண்டியிருப்பதால் ஆண்டொன்றுக்கு ஒன்றிரண்டு உயிர்ச் சேதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ் கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

விடை

அ) இல்லை.

(ஆ) திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தன்னிலை விளக்கம்.

18—3—1992 ஆம் நாளன்று அவையில் தாம் பேசியது குறித்து வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கம்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய அவை நடவடிக்கையில், தன்னிலை விளக்கம் ஒன்று அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதியளிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகிறபோது, பேச்சு நடையை எழுதுகிறபோது மாறி சில நேரங்களில் போட்டு விடுகிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கிறபோதே, இதய தெய்வம் புரட்சித் தலைவரை ஒழித்துவிட வேண்டுமென்று தான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு பரம





ரோதியாக இருந்தவர்தான் கருணாநிதி அவர்கள். அப்படிப் ட்ட கருணாநிதியுடன் கூட்டு சேர்ந்துகொண்டு அனைத்திந்திய ண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடைய தலைமை லையம் புரட்சித் தலைவர் அவர்கள் பாடுபட்டுசம்பாதித்த வர் காசில், அவர் பணத்தில் வாங்கி தலைமை கழகம் காடுக்கப்பட்டது. அதை அபகரிக்க வேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவருக்கு பரம விரோதியாக இருந்தவரை, புரட்சித் தலைவியை எப்படியும் அரசியலை விட்டு ஓட்டிவிட வேண்டுமென்று நீக்கிவிட வேண்டுமென்று, கொன்றுவிட வேண்டுமென்று, அந்த முயற்சிகளை எப்படி கருணாநிதி எடுத்துக் கொண்டார்களோ அதே முயற்சியைத்தான் அவர் களும் எடுத்துக் கொண்டார்கள். புரட்சித் தலைவர் மீது அன்பு உண்டு, அன்பு உண்டு என்று சொல்லிக்கொண்டு இருக்கிற வர்கள் அந்த புரட்சித் தலைவர் மீது அவரையும் சேர்த்து வஞ்சத்தில் தலைமைக் கழகத்துக்கு வந்து, நுழைந்து அந்தக் கட்டிடத்தை அபகரித்து அதை கருணாநிதி யிடம் ஒப்படைக்க வந்தார்கள். அங்கே எங்களையெல்லாம் அடித்தார்கள் போனார்கள் என்று நான் சொல்கிறபோது ஏதோ நான்தான் காப்பாற்றினேன் என்று சொல்கிறபோது, கிராமப்புறத்தில் வஞ்சப் புகழ்ச்சி என்று சொல்வார்கள், ஆகா, உங்கள் பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன் என்று நான் சொன்னதை செய்தித் தாள்களில் திருநாவுக்கரசு அவர்களை நான் பாராட்டியதாகப் போட்டிருக்கிறார்கள். அவருடைய பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன் என்று சொல்வதை, குண்டர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு வந்து, அதுவும் புரட்சித் தலைவருக்கு விரோதமாக இருக்கிற கருணாநிதியை கூட்டு சேர்த்துக்கொண்டு நீங்கள் செய்தீர்களே, அதற்காக உங்களுடைய பெருந் தன்மையைப் பாராட்டுகிறேன் என்று சொன்னால், உண்மையி லேயே அது வஞ்சப் புகழ்ச்சியாகச் சொன்னதுதான். அப்படி யில்லாமல் பாராட்டுவதாக பேப்பரில் போட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவருக்கு பரம விரோதியாக இருந்த கருணாநிதி யோடு கூட்டு சேர்ந்தவர்களை நான் எப்படிப் பாராட்டுவேன்? அண்ணாவைச் சேர்ந்தவர்கள் யாரும் பாராட்ட மாட்டோம், புரட்சித் தலைவரை இதய தெய்வமாகக் கொண்டிருக்கிற யாரும் பாராட்ட மாட்டோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரே, நான் வஞ்சப் புகழ்ச்சியாகத்தான் பாராட்டினேன் என்று குறிப்பிட்டிருக் கிறார். இது நேற்றே முடிந்துபோன விவகாரம். நான் சொல்லவில்லை என்று சொன்னால் நீங்கள் கேட்கலாம், (குறுக்கீடு) இதிலே No debate,

(குறுக்கீடு) அவர் அளித்த தன்னிலை விளக்கத்தில் 'டிபேட்' தேவையில்லை. அதாவது நேற்று இப்படிச் சொன்னதை இப் போது வஞ்சப் புகழ்ச்சியாகத்தான் சொன்னேன் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இதிலே விவாதம் வேண்டாம். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : அப்படி அந்த அறிக்கை விட வேண்டிய நெருக்கடி என்ன? (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிக்கையில் பாராட்டியதாக வந்திருக்கிறது. நான் வஞ்சப் புகழ்ச்சி யாகச் சொன்னேன் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதற்கு எந்த விதமான நெருக்கடியும் வரவில்லை, நாட்டிலுள்ள பொது மக்களுக்கு நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேற்கொண்டு விவாதம் வேண்டாம், குறுக்கீடு தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விளக்கம் வேண்டாம்.

## 3. கவன ஈர்ப்பு.

(அ) வால்பாறை மலைப் பகுதியில் சிறுத்தைப் புலியின் தாக்குதலால் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் ஏற் பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் அ. ஸ்ரீதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் அ, ஸ்ரீதரன்,

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப்பகுதியில் புலிகளின் அட்ட காசத்தால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப் பட்டு, முந்தாநாள் ஒரு பள்ளி மாணவன் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே இருப்பதை அப்படியே படிக்க வேண்டும்,



டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியில் புலிகளின் அட்ட காசத்தால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப் பட்டது. முந்தாநாள் ஒரு மாணவன் இறந்தது குறித்து பொது மக்கள் மத்தியிலும். தொழிலாளர்கள் மத்தியிலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து குறிப்பிலே என்ன கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதையே நீங்கள் படிக்க வேண்டும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை மலைப் பகுதியில் சிறுத்தைப புலியின் தாக்குதலால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டம் குறித்து" மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது குறித்து விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது,

அறிக்கை.

வால்பாறை மலைப் பகுதியில் 25-2-1992 அன்று சிறுத்தைப் புலி ஒன்று ஒரு சிறுவனைத் தாக்க முயற்சி செய்தது, ஆனால் சுற்றியிருந்த மக்கள் கூச்சல் எழுப்பவே, அந்த சிறுத்தைப் புலி சிறுவனைத் தாக்காமல் ஓடிவிட்டது. சிறு வனுக்கு எந்தவித காயமும் இல்லை, 27-2-1992 அன்று பிற்பகல் 6-20 மணியளவில் வாட்டர்பால்ஸ் (மேற்கு) தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் திரு. தங்கராஜ் என்பவரின் மகனான அரிகிருஷ்ணன் என்ற ஏழு வயதுள்ள சிறுவனை சிறுத்தைப்புலி தாக்கி கொன்று விட்டது, இச்சிறுவன் தேயிலைத் தோட்ட புதருக்குள் மலம் கழிக்க அமர்ந்திருந்தபோது சிறுத்தைப்புலி இழுத்துச் சென்று கொன்றதாகத் தெரிகிறது, அதே நாளில், அதாவது 27—2—1992 அன்று இரவு 8 20 மணிக்கு ஒரு சிறுத்தைப் புலி ஒன்பது வயதுள்ள சிறுவனை தாக்கியது, இந்த இடம் வனச்சரகம் அலுவலகம் உள்ள வாட்டர்பால்ஸ் பகுதி யிலிருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளது. சிறுவன் வயிற் றிலும் மார்பிலும் புலியால் கீரப்பட்ட காயங்களுடன் உயிர் தப்பினான்,

27-2-1992 அன்று அரிகிருஷ்ணன் என்ற சிறுவன் தாக்கப் பட்டு இறந்த செய்தி கிடைக்கப் பெற்றவுடன், வால்பாறை வனச்சரகர் தலத்திற்கு விரைந்து சென்று புலியின் கால் பதிவுகளை பதிவு செய்துள்ளார். சிறுத்தைப் புலியை கூண்டில் வைத்து பிடிக்க முதுமலையிலிருந்து கூண்டு ஒன்று கொண்டு

வரப்பட்டு அதில் சிறுத்தைப் புலிக்கு இரையாக ஆடு ஒன்றும் வைக்கப்பட்டது, இதேபோல் இன்னொரு இடத்திலும் ஒரு கூண்டு வைக்கப்பட்டுள்ளது, ஆனாலும் சிறுத்தைப் புலி இதுவரை சிக்கவில்லை, அதனைப் பிடிக்க வனத்துறை அதிகாரிகள் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர், எப்படியும் பிடித்துவிடலாம் என நம்பிக்கை உள்ளது. வனத்துறை அலுவலர்களின் நடவடிக்கையினால் மக்களிடையே பயம் நீங்கி நம்பிக்கை வளர்ந்துள்ளது,

<u>டாக்டர் அ. ஸ்ரீதரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பவம் நடந்த இடம் வால்பாறை வாட்டர் ஃபால்ஸ் எஸ்டேட்டினுடைய வெஸ்டிலிருந்து ஈஸ்ட் வரை பெல்ட்டாக அமைந்துள்ள சோலையிலே 27—2—1992 அன்று மாலை 6.20 மணிக்கு புலியால் தாக்கப்பட்டு ஒரு பள்ளி மாணவன் இறந்திருக்கிறான். அன்றைய தினமே அந்தப் புலி கீழே இறங்கி வந்து வாட்டர் ஃபால்ஸ் எஸ்டேட்டினுடைய ஈஸ்ட் என்ற இடத்திலே இரவு 8 மணிக்கு வேறு ஒரு பள்ளி மாணவனைத் தாக்கியிருக்கிறது. அடுத்தபடியாக இரண்டு நாட்கள் கழித்து ஐயர்பாடி எஸ்டேட்டில் அதே புலி ஒரு பள்ளி மாணவனைத் தாக்கியிருக்கிறது. இதனால் அங்கேயுள்ள பள்ளிகளுக்குச் செல்லும் பச்சிளம் குழந்தைகளும், கர்ப்பிணி பெண்களும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்ல முடியாமலும், தங்களுடைய சொந்த அன்றாட வாழ்க்கைக்குச் செல்ல முடியாமலும் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அந்தப் புலியை கூண்டோடு பிடிப்பதற்கோ அல்லது சுட்டுக் கொல்வதற்கோ ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் 27—2—1992-ஆம் தேதி பிற்பகல் 6.20 மணிக்கு, அவர் குறிப்பிட்ட இடத்தில் அரிகிருஷ்ணன் என்ற 7 வயது சிறுவன் புலி தாக்கி இறந்திருக்கிறான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய குடும்பத்திற்கு இன்றைக்கு முதல்வர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஐந்தாயிரம் வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல அந்த சிறுத்தைப் புலியை பிடிப்பதற்காக கூண்டுகள் கொண்டுவரப்பட்டு அதிலே ஆடுகள் கட்டி, பிடிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டு கூண்டுகள் அங்கேகொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மிக விரைவிலேயே அந்தப் புலியை பிடிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



<u>டாக்டர் அ. ஸ்ரீதரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புலி மிகவும் தந்திரமான புலி (சிரிப்பு). அது கூண்டிலே சென்று ஆட்டை பிடிப்பதில்லை. கம்பி வழியாக கையை நீட்டி ஆட்டை தினமும் தின்று கொண்டிருக்கிறது. ஆகவே இரண்டு, மூன்று கூண்டுகளை வைப்பதால் எந்தவிதமான பிரயோஜனமும் ஏற்படாது என்பதால் அந்த புலியை சுட்டுக் கொல்லுவதுதான் நிரந்தரமான வழி என்பதாப் அதை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந் புலி அந்தச் சோலையில் பதுங்கி இருப்பதற்கு காரணம் அங்கே சுற்றியுள்ள மரங்களை வெட்டுவதால் அந்த மரங்களை வெட்டியதால் குத்துக் கட்டைகளை சோதனையின் போது கண்டுபிடித்துவிடுவார்கள் என்ற காரணத்தால் தீயை வைத்துவிடுகிறார்கள். குறிப்பிட்டச் சோலையினுடைய அனைத்துப் பகுதிகளிலும் தீ எரிவதால் புலி அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்குச் செல்லாமல் அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறது. எனவே அந்த வனத்தை தீயிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இந்தப் புலியையும் சுட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் புலியாக இருந்தாலும் "எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கக் கூடிய ஆற்றல், மிக்க முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவியின் ஆட்சியில் புலிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

(ஆ) <u>புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய மின் மோட்டாருக்குக் கூடுதல் மின் இணைப்பு வழங்கப் பெறாது குறித்து :</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் சி. சுவாமிநாதன், சி. குழந்தைவேலு, எஸ். ஒருவர் அவசரப் பொது முக்கியத் சண்முகநாதன் ஆகியோரில் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. சுவாமிநாதன்.

<u>திரு. சி. சுவாமிநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கிற விவசாய மின் மோட்டார்களுக்கு.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதை அப்படியே வாசிக்க வேண்டும்.

திரு. சி. சுவாமிநாதன் : கூடுதல் மின் இணைப்பு வழங்காதது குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். என்று சொல்ல வேண்டும். விளக்கம் கேட்பதல்ல. அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கிற விவசாய மின் மோட்டார்களுக்கு கூடுதல் மின்னிணைப்பு வழங்காதது குறித்து'' மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய மின் இணைப்புகளில் கூடுதல் பளு இணைக்கத் தடை ஏதும் விதிக்கப்படவில்லை. எனினும் தற்போதுள்ள விநியோக அமைப்பில் கூடுதல் மின் பளுவினை இணைக்க மின் மாற்றிகள் மற்றும் மின்னூட்டிகளின் கொள்திறனை அதிகரிக்கவேண்டும். கூடுதல் பளு வழங்குவதற்காக ஆகும் செலவிற்கு இந்த ஆண்டில் (1991-92) நிதி ஒதுக்கீடு இல்லை. எனினும் களநிலைமைக்கேற்றவாறும் தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் (Technical Feasibility) ஆகியவற்றிற்கு உட்படும் கூடுதல் பளுவினை இணைக்க கள அதிகாரிகள் ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டு விவசாய மின் இணைப்புகளில் 229 விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் மின்பளு வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ம் ஆண்டில், இதுவரை, 105 விவசாய மின்இணைப்புகட்கு கூடுதல் மின்பளு வழங்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி தாலூக்காவில் (732), அறந்தாங்கி தாலூக்காவில் (45), குளத்தூர் தாலூக்காவில் (29) ஆக மொத்தம் 806 மனுக்கள் கூடுதல் மின் பளு கோரி நிலுவையிலுள்ளன. இம்மனுக்களுக்கு, நிதி நிலைக்கும் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகட்கும் (Technical Feasibilty) ஏற்ப படிப்படியாக ஒப்புதல் வழங்கப்படும்.





திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்க
அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அதிலே 1992-ல்
கூடுதல் பளு வழங்குவதற்காக ஆகும் செலவிற்காக இந்த
ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்றும் குறிப்பிட்டு இருக்
கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை
யில் ஆலங்குடி, அறந்தாங்கி, ஆவுடையார்கோயில் மற்றும்
கந்தர்வகோட்டை போன்ற பகுதிகளில்—எப்படித் தமிழகத்திற்கு
தஞ்சை மாவட்டம் நெற்களஞ்சியமாக விளங்கி தமிழகத்தைக்
காப்பாற்றி வருகிறதோ, அதேபோல புதுக்கோட்டை மாவட்
டத்தைப் பொறுத்தவரையில் இந்த 3, 4 தாலூகாவில்தான் விவ
சாயிகள் ஆங்காங்கே ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, அந்த
மாவட்டத்தில் இருக்கின்ற வறட்சியினை குறைந்த அளவிற்
காவது ஒருகால் பகுதியை போக்குவதற்காவது வழிவகையை
செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்போது அங்கே இருக்கிற
ஸ்தல அதிகாரிகள் இந்த ஆண்டு 'ஆன் தி லைன் சர்வீஸும்,
கொடுக்கப்போவது இல்லை: உங்களுக்கு அடிஷனல் லோடும்
கொடுக்கப்போவது இல்லை என்று விவசாயிகளிடம் சொன்ன
தின் எதிரொலியாகத்தான் கடந்த 6 நாட்களுக்கு முன்பு
ஆலங்குடியில் பெருவாரியான விவசாயிகள் கூட, அங்கே
சாலை மறியல் நடத்துவதாக அறிவித்து இருந்தார்கள்
. . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்
கள்.

திரு. சி. சுவாமிநாதன் : நானும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம்
சொல்லி அதைப் போக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்றுே கட்டுக் கொண்டேன். அவர்களும் அவர்களிடம்
ஒப்பந்தம் பேசி16ஆம் தேதிக்குள் அதற்குரிய சூழ்நிலையை உரு
வாக்கித் தருகிறோம் என்று சொல்லி ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து
இருக்கிறார்கள். ஆனாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
இந்த நிதி ஆண்டிற்கு நிதி ஒதுக்கவில்லை; அடிஷனல் லோடுக்கு
நிதி ஒதுக்கவில்லை; அதேபோல் 'ஆன் தி லைன் சர்வீஸுக்கும்'
இந்த ஆண்டிற்கு நிதி ஒதுக்கவில்லை என்று இங்கே குறிப்பிட்டு
இருக்கிறார்கள். எனவே இந்த நிலையைப் போக்க புதுக்
'கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு அடிஷனல் லோடும்,
'ஆன் தி லைன் சர்வீஸும்' கொடுப்பதற்கு ஆவன செய்வார்
களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல நிதி ஒதுக்கீடு
இல்லை என்று சொன்னாலும் கூட, அங்கே கள நிலைமைக்கு
ஏற்றவாறு தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் அதாவது டெக்
னிகல் பீசிபிலிட்டி அடிப்படையில் இன்றைக்கு அடிஷனல்

லோடு தருவதற்கான ஏற்பாடுகளை நம்முடைய மின்சார
வாரியம் செய்து இருக்கின்றது. சென்ற ஆண்டு மின்சார
வாரியத்தின் மூலம் ஏறத்தாழ 105 விவசாயிகள் மின் இணைப்
புகளுக்கு அடிஷனல் லோடு தரப்பட்டு இருக்கின்றது. இன்
றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி தாலுகா
வில் 732, அறந்தாங்கி தாலுகாவில் 45, குளத்தூர் தாலுகா
வில் 29 ஆக மொத்தம் 806 மனுக்கள் அடிஷனல் லோடு என்ற
கூடுதல் மின்பளுவிற்காக மின்சார வாரியத்தின் பரிசீலனையில்
இருக்கின்றது. ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வோர் பகுதியிலும் இன்
றைக்கு மின்சார வாரியத்தின் மூலம் அடிஷனல் லோடு கொடுக்
கும் நேரத்திலே இருக்கின்ற நிதி ஆதாரத்தை
வைத்து கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். மொத்தமாக
நிதி ஆதாரம் இன்று இருக்கிறது; இல்லை என்று
சொல்லவில்லை. நிதி ஒதுக்கப்படா விட்டாலும் கூட, நான்
ஏற்கெனவே சொன்னதைப்போல அந்த கள நிலைமைக்கு ஏற்ற
வாறு, அந்த தொழில் நுட்ப சாத்தியக் கூறுகளின் அடிப்படை
யில் இன்றைக்கு அடிஷனல் லோடு தந்து கொண்டு இருக்கி
றோம். ஆகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
புதுக்கோட்டை மாவட்டப் பகுதியிலே குறிப்பிட்டு இருக்கின்ற
இடங்களிலே இந்த ஆண்டு முடிந்த அளவு அடிஷனல் லோடு,
அதாவது அதிக மின்பளு தரப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. குழந்தை
வேலு.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கிணறுகளில்
சுமார் 100 அடிக்கு கீழ் தான் தண்ணீர் உள்ளது. இந்த
மாதிரி சூழ்நிலையில் 3 எச்.பி. மோட்டார் உள்ள பம்பு
செட்டுகளில் தண்ணீர் எடுக்க முடிவதில்லை. அதனால் அடி
ஷனல் லோடு மின்சாரம் கொடுத்தால், 5 எச்.பி. மோட்டார்
பம்புகள் வைப்பதற்கு வசதியாக இருக்கும். விவசாயிகள் 5
எச்.பி. மோட்டார் வைத்தால் அவை மின்சார இலாகாவினால்
பறிமுதல் செய்யப்படுகின்றன. இதனால் விவசாயிகள் மிகவும்
பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். இந்த நிலையினைப் போக்க
அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய விவ
அறிக்கையிலே சொல்லி இருக்கின்றேன். புதுக்கோட்டை
மாவட்டத்தில் விவசாய மின் இணைப்புகளில் கூடுதல் பளு
இணைக்க தடை ஏதும் விதிக்கப்படவில்லை என்று தெளி
வாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே அடிஷனல் லோடு
என்று கேட்கின்ற நேரத்திலே அங்கே இருக்கின்ற மின்சார





விநியோகத்தின் நிலைமையைப் பொறுத்து அங்கே நாங்கள் மின்
இணைப்புக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு
முறைப்படி 806 மனுக்கள் இருக்கிறது என்று சொல்லி யிருக்
கிறேன். அதிலே வருகிற முன்னுரிமையை வைத்து, அங்கே
யிருக்கிற தேவையைப் பொறுத்து, அதிக பளுவுள்ள மின்
னிணைப்பு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். சண்முக
நாதன்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று
தஞ்சை மாவட்டத்தைப் போல ஆலங்குடி, கந்தர்வக்கோட்
டை போன்ற பகுதிகளில் எல்லாம் அதிக அளவில் மின்சார
மோட்டார்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. நிலத்தடி நீர்
சீக்கிரமாக வறண்டு விடுகிற காரணத்தால், அங்கே கூடுதல்
மின்சாரம் கிடைக்காத காரணத்தால் பயிர்கள் கருகி விடுகிற
சூழ்நிலை இருக்கிறது. எனவே, பக்கத்தில் தஞ்சை மாவட்
டத்தில் இருப்பதைப் போன்று கூடுதல் மின்சாரம் வழங்குவதில்
அதனுடைய விதிகளைப் பின்பற்றி விரைவாகக் கூடுதல் மின்
சாரம் வழங்குவதற்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் நட
வடிக்கையெடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல
அடிஷனல் லோடு கொடுக்கிற நேரத்தில் முன்னுரிமை கொடுத்து
நாம் வழங்க முடியாது. புதுக்கோட்டை மாவட்டத்தைப்
பொறுத்தவரையில் அங்கே கொடுத்திருக்கிற பட்டியலின்
முன்னுரிமைப்படி அந்த விதிகளின்கீழ் நாம் வழங்கிக் கொண்
டிருக்கிறோம். ஆகவே, அந்தப் பகுதியில் கொடுக்கப்படுகிற
மின் இணைப்புகளை அதிகப்படுத்தலாம் என்ற கோரிக்கையை
வேண்டுமானால் இந்த அரசு பரிசீலிக்கலாம். உதாரணமாக
ஒரு இடத்திற்கு 200 மின்னிணைப்புகள் கொடுக்கிறோம் என்
றால் அங்கேயிருக்கிற நிலைமையைக் கருதி கொஞ்சம் அதிக
மாக விவசாயிகளுடைய நலம் கருதி மின்னிணைப்புகள்
வழங்கப்படலாம் என்ற உணர்வை இந்த அரசு பெற்றிருக்
கிறது. ஆகவே, தேவைக்கு ஏற்றவாறு அங்கே இருக்கிற
அந்த அதிகாரிகளை வைத்து உடனடியாகப் பேசி, எந்த
அளவுக்கு அதிக அளவில் அந்த விவசாயிகள் நலம் கருதி மின்
இணைப்புகள் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு வழங்க
ஒரு நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 19

## 4. அறிக்கை அளித்தல்.

### சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, (பேரவைத் துணைத் தலைவர்)—தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

பேராசிரியர் க. பொன்னுசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' தமிழ்நாடு சட்டப்பேரவையின் 1991-92 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை
(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை.
(இ) கோரிக்கை எண் 16 — தீயணைப்புப் பணிகள்
தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் —தொடர்ச்சி. காவல் துறை, தீயணைப்புப் பணிகள் மற்றும் மாநில ஆயத் தீர்வைத் துறை மானியக் கோரிக்கைகள்மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சாதுர்யமும் தொலைநோக்குப் பார்வையும் படைத்த தமிழக மக்கள் தமிழகத்தின் முந்தைய ஆட்சிக் காலத்தில் நடந்த அநியாயங்கள், அக்கிரமங்கள், அலங்கோலங்கள், அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் அதிருப்தி அடைந்த தங்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிற, மக்கள் பணி செய்கிற ஒரு நல்ல நிலையான, முறையான ஆட்சி தமிழகத்திற்குவர வேண்டுமென்று எண்ணினார்கள். அந்த எண்ணத்திற்கு செயல் வடிவம் தந்து அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எங்களைப் பெருவாரியாகத் தேர்ந்தெடுத்து மகத்தான தேர்தல் வெற்றியை வழங்கி இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். நல்லது நடக்கும், பாதுகாப்பு கிடைக்கும் என்று கருதிய மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளையும் ஏக்கங்களையும் நிறைவேற்றுகிற வகையில் நாங்கள் உழைத்துவருகிறோம். இனியும் மக்களுக்கு உழைத்திட தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).



ஆட்சிக்கு வந்த ஒன்பது மாதங்களுக்குள் இரண்டாவது வரவு-செலவுத் திட்ட அறிக்கையினை இப்போது சமர்ப்பித்துள்ளோம். விண்ணை முட்டும் அளவில் மக்களின் பல்வேறு எதிர்பார்ப்புகள் ஒருபுறம்; எதையுமே செய்ய முடியாத அளவுக்கு நிதிப் பற்றாக்குறை மறுபுறம். இவற்றோடு தேர்தல் களத்தில் படுதோல்வியைச் சந்தித்தவர்கள் எங்களின் மாபெரும் வெற்றியைக் கண்டு பொறாமைப்பட்டு, பொறுக்க முடியாதவர்கள் நாங்கள் செய்யும் எதையுமே குற்ற நோக்கோடும் குறுகிய மனப்பான்மையோடும் பார்த்துக் கொண்டு வசைபாடிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

மக்கள் நலனுக்காகவும் வசதிக்காகவும் செய்யப்படும் மாபெரும் நற்காரியங்களுக்குக் கூட மாசு கற்பிக்கிறார்கள். மனக்குழப்பம் அடைகிறார்கள். இவற்றையெல்லாம் நான் இங்கே சூசகமாகச் சொல்வதற்கு காரணம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த அரசு தனது கடமையைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத் தானே தவிர, யார் மீதும் சுடுசொல்லை வீசவேண்டும் என்பதற்காக அல்ல. மக்களுக்காக செயல்படத் தயாராக உள்ள எங்கள் அரசின் அணுகுமுறை பற்றிய விளக்கங்களை நான் பலமுறை இந்த மாமன்றத்தில் பேசி இருந்தாலும், அவைகளை மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளதைக் கருதி எனது பதில் உரையை வழங்க விழைகிறேன்.

முற்பகல் 10–50

இன்றைய தினம் நான் பொறுப்பேற்றிருக்கிற மூன்று துறைகளுக்கான மானியத்தில், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் வெட்டியும் ஒட்டியும் பேசியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலேயே காவல்துறை மானியத்தில் 103 வெட்டுத் தீர்மானங்களும், மதுவிலக்கு, மாநில ஆயத் தீர்வை மானியத்தில் 43 வெட்டுத் தீர்மானங்களும், தீயணைப்புத் துறை மானியத்தில் 55 வெட்டுத் தீர்மானங்களும், ஆக மொத்தம் 201 வெட்டுத் தீர்மானங்களும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாகிய உங்களில் பலரால் எழுப்பப்பட்டுள்ளன.

இந்தத் துறைகள் தொடர்பாக நீங்கள் எழுப்பிய கோரிக்கைகள், சுட்டிக்காட்டிய குறைபாடுகள், வழங்கிய பாராட்டுரைகள், அனைத்தையும் நான் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். உங்கள் நிலையை நீங்கள் சொல்லிவிட்டதால், இந்த அரசின் நிலையை எடுத்துச் சொல்கிற வகையில், ஒவ்வொரு மானியத்தின் மீதும் எனது பதில் உரையைத் தர முன்வருகிறேன்.

டி2 53-40—7

[டாக்டர் ஜெ. ஜெயலலித்ா] [1992 மார்ச் 19

நேற்றும், நேற்றைய முன்தினமும், விவாதிக்கப்பட்ட 3
மானியக் கோரிக்கைகளில், முதலாவதாக, மதுவிலக்கு ஆயத்
தீர்வை மானியத்திற்கும், அதன்பின், தீயணைப்புத் துறை
மானியத்திற்கும், இறுதியாக காவல்துறை மானியத்திற்கும்
எனது பதிலினை அளிக்க நான் ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்கின் அவசியத்தைப் பற்றியும், மதுவினால்
உண்டாகும் சமுதாயத் தீமைகள் பற்றியும், மதுவால் கிடைக்
கும் வருமானம் மற்றும் ஆயத்தீர்வை பற்றியும் மாண்புமிகு
சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பல்வேறு கோணங்களில்
கண்டறிந்து ஆற்றிய உரைகளையும், எடுத்துச் சொன்ன கருத்துக்
களையும் கேட்கிற வாய்ப்பினையும் பெற்றேன். அவைகள்
எல்லாம் பயன்படுகிற கருத்துக்களாகவும், பாராட்டுக்குரிய
யோசனைகளாகவும் அமைந்துள்ளன. நிறைகளை செவி
மடுக்கின்ற அதே நேரத்தில், இந்த அமைப்பில் உள்ள
குறைகளையும், இங்கே சில உறுப்பினர்கள் தகவலுக்காகவும்,
தேவையான நடவடிக்கைகளுக்காகவும், எடுத்துரைத்திருக்
கிறார்கள். இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களையொட்டி,
பல வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்து இருக்கிறார்கள்.
இவைகள் மீது எனது பதில் உரையைக் கூற விழையுமுன்
உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பிலேயே
போதுமான விளக்கங்களும், பொருத்தமான விவரங்களும்
ஏராளமாகவே கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

நமது மாநிலத்தில் 31 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன.
அவை, சர்க்கரையை உற்பத்தி செய்தவதோடு, உப பொருளாக
'பை-புராடக்டாக, கருப்பஞ்சாற்றுக் கசண்டையும்,
மொலாசசையும் உற்பத்தி செய்கின்றன. வடிசாலைகளில்,
டிஸ்டிலரிகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து
சாராவியை அதாவது ஆல்கஹால், ஸ்பிரிட்டைத் தயாரிக்
கின்றன. அவ்வாறு தயாரிக்கப்பட்ட சாராவியிலிருந்து தான்
சாராயம், மது தயாரிக்கப்படுகிறது. அவை மட்டுமின்றி.
தொழிற்சாலைகளுக்குத் தேவையான பல்வேறு இரசாயனப்
பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. நாங்கள் ஆட்சிப்
பொறுப்பேற்ற போது சர்க்கரை ஆலைகளில், கருப்பஞ்
சாற்றுக் கசண்டு வெகுவாகத் தேங்கிக் கிடந்தது. அவற்றை
இரும்புத் தொட்டிகளில் சேமித்து வைக்க இடம் இல்லாததால்,
திறந்தவெளிகளில் வெட்டப்பட்ட குழிகளில் சேமித்து வைக்க
வேண்டிய கட்டாய நிலையில், சர்க்கரை ஆலைகள் இருந்தன.
அதனால், ஆலைகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. இதற்கு
உடனடியாகத் தீர்வு காண வேண்டிய அவசியம் அரசுக்கு
ஏற்பட்டது. இப்பிரச்சினையைத் தீர்க்க, நீண்டகாலத் திட்டங்
களையும், குறுகியகாலத் திட்டங்களையும், தொலை நோக்குப்
பார்வையோடு வகுக்க, இந்த அரசு பல முயற்சிகளை மேற்
கொண்டது.



1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மத்திய அரசின் மூலமாக 1 லட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்
சாற்றுக் கசண்டு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது,
கருப்பஞ்சாற்றுக் கசண்டு, தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில்
இருந்து வந்த தடை தளர்த்தப்பட்டது, இந்திய அரசின மூல
மாக வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது,
இதுபோன்று குறுகியகால நடவடிக்கைகளை உடனடியாக
மேற்கொண்டதால். இந்தப் பிரச்சினை கணிசமான அளவிற்கு
தீர்க்கப்பட்டது, இதனைத் தொடர்ந்து சர்க்கரை ஆலைகளில்
அதிகமாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை
வீணாகவிடாமல் நாமே நிரந்தரமாக பயனபடுத்தும் தொலை
நோக்கு எண்ணத்தில் புது வடிசாலைகளை அமைப்பதற்கு
அனுமதி வழங்குவது என்று ஒரு கொள்கை முடிவினை இந்த
அரசு எடுத்தது. அதில் குறிப்பாக சர்க்கரை ஆலைகளுக்கு
முன்னுரிமை கொடுக்கலாம், அப்படிக் கொடுக்கப்படும் சர்க்
கரை ஆலைகளில் தனியாருக்கும் வாய்ப்பு அளிக்கலாம், அதே
நேரத்தில், கூட்டுறவு நிறுவனங்களுக்கும், அரசு நிறுவனங்
களுக்கும் முன்னுரிமை கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்
பட்டது. அந்தக் கொள்கை அடிப்படையில் அருணா சுகர்ஸ்,
ஆரூரான் சுகர் மில்ஸ், கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ்
லிமிடெட், ராஜஸ்ரீ சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்
ஆகிய நான்கு தனியார் சர்க்கரை ஆலை நிறுவனங்களுக்கு
1.80 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஆண்டு
தோறும் வழங்குவது என்ற ஒரு முடிவை இந்த அரசு எடுத்
துள்ளது. இது தவிர, ஏற்கெனவே இயங்கிவரும் வடிசாலை
களை விரிவாக்க விரும்பினால் அவர்களுக்கும் தகுதி அடிப்
படையில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு வழங்கலாம் என்ற முடி
வினையும் இந்த அரசு எடுத்திருக்கிறது,

முற்பகல் 10–55

மதுவின் கொடுமைகளிலிருந்து மனித இனத்தைக் காக்க
வேண்டுமென்ற இந்த அரசின் தலையாய குறிக்கோளை—புனித
எண்ணத்தைச் செயலாக்க மலிவு விலை மதுவை ஒழித்த
மகத்தான எங்களின் சாதனையை இந்த மாமன்றம்
நன்றாக அறியும்,

மாநில ஆயத்தீர்வை பற்றி தங்களது கருத்தைச் சொல்
கின்றபோது டாஸ்கோ நிறுவனத்திடமிருந்த பீர் தொழிற்
சாலையை ஏன் விற்றீர்கள் என்ற ஒரு பெரும் கேள்வியை சில
உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இந்த மாமன்றத்திற்கு
நன்றாகவே தெரியும், மலிவு விலை மதுவை ஒழிப்பது இந்த
அரசின் கொள்கை என்று. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி
யின்போது தான் மலிவு விலை மதுவைத் தயாரிக்கும் பிளண்டிங்
யூனிட்டுகளை நிறுவுவதற்காக தமிழ்நாடு சாராவிக் கழகம்
டாஸ்கோ என்ற ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. அரசுக்குச்

டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 19

சொந்தமான டாஸ்கோ நிறுவனம் தான் சாராவி கலவை
தொழிற்சாலைகளை நிறுவி நடத்தி வந்தது, இந்தக் கழகம்
எம், பி, டிஸ்டிலரி என்ற தனியார் பீர் தொழிற்சாலையை அரசுத்
தரப்பில் எடுத்துக்கொண்டு பீர் உற்பத்தி செய்யத் தொடங்
கியது, இந்த அரசு பதவியேற்றவுடன் மலிவு விலை மதுவை
ஒழித்து, அரசுத் துறையில் பீர் மது போன்றவற்றை [illegible]
செய்வதைக் கைவிட வேண்டுமென்று கொள்கை முடிவு [illegible],
மலிவு விலை மதுவை ஒழித்ததால் அதைத் தயாரிக்கும் தொழிற்
சாலைகளை, பிளண்டிங் யூனிட்டுகளை மூடவேண்டியநிலை
ஏற்பட்டது. டாஸ்கோ நிறுவனத்தின் பெரும் வேலையாகிய
சாராயத் தயாரிப்பு ஒழிக்கபபட்ட பின் டாஸ்கோ நிறுவனத்தின்
வேலை வெகுவாகக் குறைந்துவிட்டது. அந்த நேரத்தில் இந்த
பீர் தொழிற்சாலையை மட்டும் நடத்துகின்ற ஒரு சூழ்நிலை
அவர்களுக்கு ஏற்பட்டது, அதன் தொடர்ச்சியாக முந்தைய
அரசு வாங்கிய தொழிறசாலையை திரும்ப கொடுக்க வேண்டிய
நிலை ஏற்பட்டது, இநதச சூழ்நிலையில் யாரிடமிருந்து அந்தத்
தொழிற்சாலை எடுக்கப்பட்டதோ, அவருக்கே அவர் விரும்பி
னால் திருப்பிக் கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்கலாம் என்று
முடிவு செய்யப்பட்டது, இது நியாயமும்கூட. அதன்படி ஏற்
கெனவே யாரிடமிருந்து இந்தத் தொழிற்சாலையை அரசு
வாங்கியதோ அவருக்கே தறபோதைய விலை நிர்ணயிக்கப்
பட்டு, அதுவும் உயர் மட்ட அதிகாரிகளையும் வல்லுநர்களையும்
கொண்ட குழு நிர்ணயித்த விலைக்கே விற்கப்பட்டிருக்கிறது.

கொள்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டியபடி ரூ, 8.02 கோடிக்கு
1989-ல் வாங்கிய இந்தத் தொழிற்சாலை இப்போது ரூ. 10.44
கோடிக்கு விற்கப்பட்டுள்ளது என்பதை நினைவுபடுத்த விரும்பு
கிறேன். ஒரு வேளை எம். பி. டிஸ்டிலரி தனக்கு இந்த பீர்
தொழிற்சாலை வேண்டாம் என்று சொல்லியிருந்தால், டெண்டர்
முறையைப் பின்பற்றி, அது விற்பனை செய்யப்பட்டிருக்கும்.
எனவே இதனை விற்றதில் அரசுக்கு லாபமே தவிர, எவ்வித
இழப்பும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்
கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்
பதிலுரையை முடித்த பிறகு உறுப்பினர்கள் ஏதாவது விளக்கங்
கள் கேட்க விருமபினால் பிறகு கேட்கலாம்.

திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இப்போது மூடிக்
கிடக்கிற சாராவிக் கலவை ஆலைகளை ஆவினுக்குக் கொடுப்ப
தாக கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறதே, இதை
வைத்து ஆவின் நிறுவனத்தார் என்ன செய்யப் போகிறார்கள்?
அவர்கள் சாராயமா தயாரிக்கப்போகிறார்கள் என்று கேட்டார்.
அவருக்குச் சொல்லிக்கொள்வேன், ஆவின் மிகப் பெரிய கூட்டு



1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

றவு நிறுவனம், சென்னை மாநகரத்தில் ஆவின் மூலமாக
பால் பொட்டலங்கள் வழங்கப்படுவது உறுப்பினர்கள் அனை
வருக்கும் நனறாகத் தெரியும். அதுபோல் ஏனைய நகரங்
களில் பால் பொட்டலங்கள் வழங்குவதற்கு இந்தச் சாராவிக்
கலவை தொழிற்சாலைகளின் மூலமாக ஏற்பாடு செய்வதற்
காகத்தான் ஆவின் நிறுவனத்தார் சில பிளண்டிங் யூனிட்டுகளைக்
கேட்கிறார்கள். சாராய பாக்கெட்டு போடும் அதே மெஷின்களை
சிறிது மாற்றம் செய்து, பால் பாக்கெட் போட ஆவின் நிறு
வனத்தால் பயன்படுதத இயலும் என்பதற்காகத் தான
அவர்கள் கேட்கிறார்கள், ஆகவே அவர்களுக்குக் கொடுத்தது
போக எஞ்சிய இயந்திரங்களை ஏனையவர்களுக்கும்
மற்றவர்களுக்கும் விற்கலாம். எப்படி விற்பது, என்ன விலைக்கு
விற்பது என்பதற்கு அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்
கப்பட்டிருக்கிறது. இந்தச் சாராவிக் கலவை ஆலைகளின் மொத்த
மதிப்பீடு சுமார ரூபாய் 22 கோடியாகும். இந்தியாவில் உற்பத்தி
செய்யப்படும் அயல் நாட்டு மது, பீர் போன்றவற்றைப் பொறுத்த
வரையில் முந்தைய காலங்களில் நடந்து வந்ததைப் போல 5
தனியார நிறுவனங்களின் மூலமாக அவை தயாரிக்கப்பட்டுத்,
அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில்
டாஸ்மாக் மூலமாக மொத்தமாக வாங்கப்பட்டு 3 ஆயிரத்திற்கும்
மேற்பட்டசில்லரை விற்பனைக் கடைகளின் மூலமாக விற்பனை
செய்யப்படுகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

முற்பகல் 11–00

முந்தைய தி.மு.க. அரசின் காலத்தில் இந்தியாவில்
தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மது வகைகளுக்கும் பீர்களுக்கும்
விலை நிர்ணயித்து பரிந்துரைக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருந்
தது. அம்முறையினால் பல குறைபாடுகளும் அரசுக்கு இழப்புகளும்
ஏற்பட்டன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக்
காலத்தில், மொத்த வியாபாரதாரராகிய தமிழ்நாடு மாநில
வாணிபக் கழகம் மார்க்கெட் நிலவரத்தை அறிந்து உற்பத்தி
யாளர்களுடன் கலந்துரையாடி விலையை நிர்ணயிக்கும் முறை
இருந்தது. எங்கள் அரசும் அந்த முறையையே பின்பற்றலாம்
என்று முடிவு செய்துள்ளது. சில்லரை கடையாளர்களும் மொத்த
வியாபாரிகளும் ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு மேல் லாபம்
ஈட்டி விற்கக் கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.
சில்லரைக் கடைகளையெல்லாம் உரிய நேரத்தில் ஏலத்திற்கு
விடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கே
தெரிவித்துக் கொள்கிறேன்.

மலிவு விலைச் சாராயம் ஒழிக்கப்பட்டதில் மெத்த மகிழ்ச்சி
அடையும் அதே நேரத்தில், கள்ளச் சாராயம் தாராளமாகவும்,
ஏராளமாகவும் கிடைக்கிறது என்று ஒரு சில மாண்புமிகு உறுப்
பினர்கள் பழித்தும், இல்லை இல்லை அவை கட்டுப்படுத்தப்
பட்டுள்ளன, ஏன் பல பகுதிகளில் அறவே ஒழிக்கப்பட்டுள்ளன

என்று பலர் பாராட்டியும் குறிப்பிட்ட கருத்துக்கள் என்
கவனத்தை ஈர்த்துள்ளன. என்னைப் பொறுத்த வரையில் ஏழை
எளிய மக்களின் வாழ்க்கையை உறிஞ்சி அவர்களின் உயிரைக்
குடிக்கும் மலிவு விலை சாராயத்தை இந்த மாநிலத்தை விட்டே
விரட்ட வேண்டும்' முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதில்
(மேசையைத் தட்டும் ஒலி) தீவிரமாக இருக்கிறேன் என்பதை
ஆணித்தரமாக மீண்டும் கூற விரும்புகிறேன். எக்காரணத்தைக்
கொண்டும் இந்த நடவடிக்கையைத் தளர்த்த நான் தயாராக
இல்லை என்பதை இந்த மாமன்றத்திற்கு தெளிவாக எடுத்துரைக்க
கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக
எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும், வெளியிடப்பட்ட ஆணை
களும் முடிவு இல்லாத் தொடர் கதையாகத் தொடருமே தவிர
முடிந்து விட்ட சிறுகதையாக இருக்காது என்பதையும் இங்கே
உறுதியாக தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நோக்கத்தை அடை
வதற்காக உருவாக்கப்பட்ட சிறப்புப் பிரிவைச் சேர்ந்த காவல்
துறை அலுவலர்களும் வருவாய்த் துறை அலுவலர்களும் சமீப
காலங்களில் எடுத்துள்ள அதிரடி நடவடிக்கைகள், அதன் மூலம்
கைப்பற்றிய பொருட்கள், கையாண்ட கெடுபிடி யுக்திகள்,
மற்றும் அவர்கள் பணியாற்றிய பாங்கு, செயல்படுத்திய வேகம்
அனைத்தும் நமது பாராட்டுக்குரியவையாகும். அண்டை
மாநிலத்திலிருந்து கடத்தி வரப்படும் சாராயங்களைக் கைப்பற்று
வது, கள்ளச் சாராயம் காய்ச்சும் இடங்களைக் கண்டறிந்து
அவற்றை சோதனை இட்டு அழிப்பது, மேலும் இந்த வியாபாரத்
தில் ஈடுபட்ட வியாபாரிகளையும் பெரும் புள்ளிகளையும்
கடத்தல்காரர்களையும் உடன் கைது செய்வது போன்ற தீவிர
நடவடிக்கைகளால் இவர்களின் கொட்டம் பெருமளவு அடக்கப்
பட்டு இருக்கிறது. இருந்தாலும் பூவுக்குள்ளே நாகம் இருப்பது
போல சில புல்லுருவிகள், கொடியவர்கள் நமது கண்காணிப்பை
யும் கவனத்தையும் தாண்டி ஏதுமறியாத ஏழை மக்களின்
இன்னுயிரைப் போக்கிடும் ஈனச் செயல்களைத் திட்டமிட்டு சில
இடங்களில் செய்து விடுகிறார்கள். அவர்கள் சில காலம் தப்பி
வாழலாம். ஆனால் மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மறுநாளே
அவர்கள் கைது செய்யப்படுகிற நிலைமை உருவாகிவிடும்.

ஒருபுறம் கள்ளச் சாராயத்தை தடுப்பது, மறுபுறம் மதுவைக்
குடிப்பதால் மன வளத்திற்கும் உடல் நலத்திற்கும் கேடு என்ற
கருத்தை நாடெங்கிலும் குறிப்பாக ஏழை எளியவர்கள் மத்தியில்
வேகமாகப் பரப்ப வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த
தீவிரத்தைக் கடைப்பிடித்து வருகிறது என்பதை இந்த மாமன்றம்
நன்றாக அறியும். எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும்
மதுவை விலக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட வேறுபட்ட
கருத்துக்கள் எவரிடமும் இருப்பதற்கு நியாயம் இல்லை. எனவே
மதுவை விலக்குவதைக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதை ஒரு
மாபெரும் சமுதாய இயக்கமாக மாற்றுவதற்கு மக்கள் முன்
வரவேண்டும். மக்களிடம் அதற்குரிய பொதுக்கருத்து உரு



வாக்கப்பட வேண்டும்; அந்த நோக்கத்தில்தான் மாநில
மட்டத்தில் பிரச்சாரக் குழு ஒன்று ஏற்கனவே அமைக்கப்பட்
டுள்ளது. மேலும் மாவட்ட, வட்டார, கிராம அளவிலும் இது
போன்ற குழுக்களை அமைத்து, மதுவிலக்குக் கொள்கைகளின்
அவசியத்தை மக்களிடம் வலியுறுத்த ஏற்பாடுகள் செய்யப்
பட்டுள்ளன. அது மட்டுமின்றி நாடகம், சினிமா போன்ற மக்கள்
தொடர்பு சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்தி மக்கள் மத்தி
யில் ஒரு எழுச்சியை உருவாக்க நாம் அனைவரும் ஒரே அணியில்
திரண்டிட வேண்டும்.

மதுவிலக்குக் கொள்கை பற்றிய விவாதத்தில் மாண்புமிகு
உறுப்பினர் ஏ. தெய்வநாயகம் உட்பட 14 சட்டமன்ற உறுப்
பினர்கள் நம் மாநிலத்தில் அமல்படுத்தப்படும் மதுவிலக்கு
கொள்கை குறித்தும் தமிழ்நாட்டில் உள்ள இந்தியாவில் தயா
ரிக்கப்படும் வெளிநாட்டு மது பானங்கள் விற்பனையைத் தடை
செய்து பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டியும் வெட்டுத்
தீர்மானங்களை அளித்துள்ளார்கள்.

முற்பகல் 5.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் முதல் நடவடிக்கை
யாக 1991 ஜூலை 16-ந் தேதியிலிருந்து மலிவு விலை மது
விற்பனையை நிறுத்தி விட்டது என்பதை நீங்கள் அனைவரும்
நன்கு அறிவீர்கள். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார்
391 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றாலும்
ஏழை மக்களுடைய நலன் கருதி மலிவு விலை மது விற்பனை
நிறுத்தப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு
மது வகைகள் விற்பனை நிறுத்தப்படுமானால் அரசுக்கு மேலும்
பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும். மதுவிலக்கு அமல்
செய்யப்படுவதால் மாநிலத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பை
ஈடு செய்ய மத்திய அரசுக்கு நாம் விடுத்த கோரிக்கையை மத்திய
அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இந்தியாவில் தயாரிக்கப்
படும் அயல் நாட்டு மது வகைகள் விற்பனை தொடர்ந்து நடை
பெற அனுமதிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுதல், எடுத்துச் செல்லுதல்,
வைத்திருத்தல், விற்பனை செய்தல், அண்டைமாநிலங்களிலிருந்து
கடத்தி வருதல் போன்ற செயல்களை அறவே ஒழிக்க பல்வேறு நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்
கள். மாநிலத்தில் மதுவிலக்குப் பிரச்சாரப் பணிகள் முனைப்புடன்
செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் கூற விழை
கின்றேன்.

அடுத்து மது ஒழிப்புக் குழுவில் இடம்பெற்ற இளைஞர்கள்
மற்றும் காவல் துறையினருக்கு பரிசுகள் வழங்குவது பற்றியும்,

அதிகாரிகள் அடங்கிய மது ஒழிப்பு மக்கள் குழுக்கள் அமைப்பது குறித்தும்; சாராயத்தின் தீமைகளை விளக்கும் வகையில் சினிமா, நாடகம், பாடல்கள், விளம்பர சுவரொட்டிகள் தயாரிப்பது குறித்தும், மாவட்டம், கிராமம், மற்றும் நகர அளவில் குடிப் பழக்கத்திலிருந்து மீட்பு மையங்கள் தொடங்கும் நடவடிக்கைகள் குறித்தும் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய கோரியும், மாநில விளம்பரக் குழுவில் மாவட்டத்திற்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் அங்கம் வகிக்கக் கோரியும் மாண்புமிகு உறுப்பினர் திரு.கே. செல்வராஜ் அவர்கள் உட்பட 3 சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானம் அளித்துள்ளார்கள். 11—9—1991 ஆம் நாள் தமிழ்நாடு மாநில அளவிலான மது விலக்குப் பிரச்சாரக் குழு என்னுடைய தலைமையில் 22 உறுப்பினர்களைக் கொண்டு மதுவிலக்கு பிரச்சாரத்தை முடுக்கிவிடும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அக்குழுவின் முதல் கூட்டம் 22—10—1991 அன்று என்னுடைய தலைமையில் கூடி பல்வேறு முடிவுகளை எடுத்துள்ளது. அவற்றின்படி படித்து வேலை இல்லாத ஒரு இலட்சம் இளைஞர்களை பிரச்சாரப் பணியில் ஈடுபடுத்தும் படியும், குடிக்கும் காட்சிகளை திரைப்படங்களில் அனுமதிக்காது இருக்குமாறும், மருத்துவ முகாம்களில் பாதிக்கப்பட்டு உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்குமாறும், மதுவிலக்கு சட்டத்தில் உள்ள தண்டனைகள் போதுமானவைகளாக அமைந்துள்ளனவா என்பது குறித்தும் ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைப்பது குறித்தும், தொலைக்காட்சி, வானொலி, நாடகம் மூலம் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வது குறித்தும் கிராம, வட்டார, நகர மற்றும் மாவட்ட மதுவிலக்கு பிரச்சாரக் குழுக்கள் அமைக்குமாறும், கள்ளச்சாராயம் நடமாட்டம் இல்லாத சட்டமன்ற தொகுதியின் உறுப்பினர்களுக்குக் கேடயம் வழங்குவது குறித்தும், பள்ளி மற்றும் கல்லூரி பாடத் திட்டங்களில் மதுவின் தீமைகளை குறித்த விவரங்களைச் சேர்ப்பது குறித்தும் இக்குழு தன்னுடைய பரிந்துரைகளைச் செய்துள்ளது. அரசு இப் பரிந்துரைகளை தீவிரமாகப் பரிசீலித்து சில பரிந்துரைகளின் மீது ஆணைகள் பிறப்பித்துள்ளது. மதிய சத்துணவுக் கூடங்களை மதுவிலக்குப் பிரச்சாரப் பணி மற்றும் ஏனைய நற்பணிகளுக்காகவும் பயன்படுத்துவதற்கும், மதுப் பழக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் மருத்துவ முகாம்களில் சிகிச்சை அளிப்பதற்கும் அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. மதுவின் தீமைகளையும், மதுவிலக்கினால் உள்ள நன்மைகளையும் விளக்கும் ஒரு பிரச்சார படத்தை எடுக்கும் பொறுப்பு திரைப்படத் தயாரிப்பாளரும் பிரச்சார குழுவின் உறுப்பினராகவும் உள்ள திரு. ஜி. வெங்கடேஸ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடு வழங்கி அனுமதிக்கப்படவுள்ளது. ஒரு மேடை நாடகத்தை



யும் தயாரித்து வருகிறோம். எழுத்தாளர் வேதம் புதிது கண்ணன் அவர்கள் எழுதிய பிரச்சார நாடகமான வெளிச்சம் என்ற நாடகத்தை வெளியிடும் பொறுப்பு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர்-செயலாளராக உள்ள திரு. ஆர். எஸ் மனோகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கான செலவுத் தொகையான ரூபாய் 2 இலட்சம் அனுமதிக்கப்பட்டு உள்ளது. குடிப்பழக்கம் அதிகமாக உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அங்குள்ள தொழில் அமைப்புகள் மீட்பு மையங்களை தத்து எடுத்துக்கொண்டு நடத்துவது குறித்தும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கருத்துரு கேட்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 11-10)

இது தவிர, தற்போது இயங்கி வரும் கிராமக் குழுக்களை திருத்தி அமைப்பது குறித்தும், நகராட்சி, வட்டாரம் மற்றும் மாவட்டத்தில் மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக்களை அமைப்பது குறித்தும், செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அடுத்து, அரசுக்கு வருகிற வருவாயை அதிகரிக்கின்ற வகையில், மதுவிலக்குக் குழுக்களை அமல்படுத்த வேண்டும் என்பது குறித்து திரு. பி. வி. இராஜேந்திரன் உட்பட, 3 சட்ட மன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

இந்தியாவில் தயாரிக்கும் அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் முதலியன மீதான ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம், கூடுதல் விற்பனைக் கட்டணம், ஏற்றுமதி அனுமதிக் கட்டணம், இறக்குமதி அனுமதிக் கட்டணம் முதலியவைகள், 1984-ஆம் ஆண்டு இருந்ததைவிட மிக அதிகமாக விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. 1971-74-ஆம் ஆண்டில் மற்றும் 1981-85-ஆம் ஆண்டுகளில் ஏலம் விட்டதில், கிஸ்தி கட்டாமல் அரசுக்கு சுமார் 65 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட வேண்டி உள்ளது. இத்தொகையில் பெரும்பாலான தொகை ஊக்கத் தொகை (National Amount) ஆகும். இவற்றை வசூல் செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகளை எதிபத்து, பல நபர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தடை ஆணைகள் பெற்றுள்ளனர். இவ்வழக்குகளை தீவிரமாக நடத்துவதற்கு அரசு வழக்கறிஞர்களைக் கொண்டு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

மதுவிலக்கு செயலாக்கத்திற்கு காவல் துறையில் ஒரு சிறப்புப் பிரிவு, மாநில காவல்துறை அதிகாரி அதாவது ஐ.ஜி. அந்தஸ்துள்ள அதிகாரியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. பறக்கும் படை மற்றும் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு, கள்ளச் சாராய உற்பத்தி மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து கள்ள மதுபானங்கள் கொண்டுவருவது போன்ற நடவடிக்கைகள் வெகுவாகத் தடுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக அயல்நாட்டு மதுபானங்கள் அதிகமான அளவில் விற்பனை ஆகி மாநிலத்திற்கு நல்ல வருவாய் கிடைக்கிறது.

அடுத்து, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சுவாமிநாதன் உட்பட 7 சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானம் தந்துள்ளார்கள்.

காவல் துறையில் தனியாக ஒரு மதுவிலக்குப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் காவல் நிலைய அலுவலர்கள் ஆகியோர், தங்களுடைய வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் நடக்கும் மதுவிலக்குக் குற்றங்களுக்கு பொறுப்பாக்கப்படுதல் போன்ற பல்வேறு உறுதியான நடவடிக்கைகளை அரசு எடுத்ததன் காரணமாக, கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் அவற்றை விற்பனை செய்வது ஆகிய நடவடிக்கைகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கிராம நிர்வாக அலுவலர்கள் தரும் கள்ளச் சாராயம் காய்ச்சுதல், விற்றல் போன்ற புகார்களின்மீது, காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஒரத்தநாடு கிராம மதுவிலக்கு பாணியில், கிராமங்கள்தோறும் மதுவிலக்குக் குழுக்கள் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நகராட்சி, வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் மதுவிலக்கு குழுக்கள் அமைக்கப்பட உள்ளன, ஆயத்தீர்வை ஆணையரின் நேரடிப் பார்வையில், பறக்கும் படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. லஞ்ச ஒழிப்பு விழிப்புப் பணித் துறை, கலால் துறை அதிகாரிகளின் மீது வரும் புகார்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகிறது,

நடப்பு ஆண்டில் 3,12,165 மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, 28,48,527 லிட்டர் கள்ளச் சாராயம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது, சுமார் 1 கோடியே 31 இலட்சம் லிட்டர் ஊறல்கள் அழிக்கப்பட்டுள்ளன. மேலும் கள்ளச் சாராயம் கடத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட கார், வேன். ஜீப், ஆட்டோ ரிக்ஷா, லாரி, மோட்டார் சைக்கிள் போன்ற 1,473 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன,

அரசின் மதுவிலக்குக் கொள்கை முழு வெற்றி பெறவும் கள்ளச் சாராயக்காரர்களின் முதுகெலும்பு முறிக்கப்படவும் உதவுகிற வகையில், காவல்துறை மதுவிலக்கு அமல் பிரிவு முனைப்போடு செயல்பட, எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்,

குறிப்பாக வருவாய்த்துறை அலுவலர்களுடன் காவல் துறையினரை ஒருங்கிணைந்து செயல்பட வைத்தும், மதுவிலக்கு குற்றங்களுக்கான தண்டனையை அதிகரித்தும், ஐந்து இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைத்தும், மது. சாராயம் கடத்த



படுவதைத் தடுக்க, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைக் கூறி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைக்கான எனது பதிலுரையை நிறைவு செய்து மக்களுக்கு அரும்பணி ஆற்றி வரும் தீயணைப்புத் துறையைப் பற்றிய எனது பதிலுரையை முன் வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-15.

தீயணைப்புத் துறை மானியத்தின் மீது பேசப்பட்ட கருத்துக்களை நான் கவனத்தோடு கேட்டுக்கொண்டு இருந்ததால் அவற்றின் மீது சில விளக்கங்களைக் கூற ஆசைப்படுகிறேன், குறிப்பாக, நேற்றும், நேற்றைய முன் தினமும் இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒட்டியும் வெட்டியும் பேசிய மாண்புமிகு சபை உறுபினர்கள் இத்துறை பற்றிய செயல்பாடுகளை நன்றாகத் தெரிந்து வைத்திருப்பதால் அதிகமான குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகாத பெருமை பெற்றிருக்கிறது, தீயால் ஏற்பட்ட சேதத்தைத் தடுப்பதும் அதில் சிக்குண்டோரின் உயிரையும் உடைமைகளையும் காப்பதும் அரசின் தலையாய கடமை என்ற எண்ணத்தின் செயல்பாடாகத் தான் தீயணைப்புத் துறை நிறுவப்பட்டுள்ளது, தீ விபத்தோடு நில்லாது ஏனைய விபத்து காலங்களிலும் மீட்புப் பணிக்கு தீயணைப்புத் துறையினர் பயன்பட்டு வருகிறார்கள். இது போன்ற பயனுள்ள மற்ற பல சேவைகளிலும் இவர்களுக்குப் பங்குண்டு என்ற விவரம் இங்கே வைக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில் தெளிவாக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், நமது தீயணைப்புத் துறையைப் பொறுத்த வரையில் கடந்த 25 ஆண்டுக் காலமாக நற்பணியை ஆற்றி நல்ல பெயர் எடுத்துள்ளது, நடப்பு நிதி ஆண்டில் ஜனவரி 1992 முடிய தமிழகம் முழுமையும் உள்ள தீயணைப்பு நிலையங்களில் 11,983 தீயணைப்பு அழைப்புகள் வரப்பெற்றுஅவற்றிற்குத் தகுந்த மேல் நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது, மாநிலம் முழுவதும் தீ விபத்துக்களினால் ஏற்பட்ட பொருட்சேதத்தின் மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 10½ கோடி ரூபாய் என்றாலும், இந்தத் துறையினரால் காப்பாற்றப்பட்ட உடைமைகளின் மதிப்பு சுமார் 53½ கோடி ரூபாய் என்ற உண்மையும்இங்கு குறிப்பிடத்தக்கது.

2,763 மீட்பு அழைப்புகளையும் 3,500-க்கும் மேற்பட்ட நோயாளி ஊர்தி அழைப்புகளையும் இத்துறை சந்தித்து நன் முறையில் கையாண்டுள்ளது. பெரும் தீ விபத்துக்களில், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், கடந்த 12—7—1991 அன்று காமராஜர் மாவட்டம், மீனம்பட்டி கிராமத்தில் உள்ள டான் பையர் ஒர்க்ஸ் இண்டஸ்ட்ரீஸ் என்ற பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தை குறிப்பிட்டுச் சொல்லலாம், இந்த தீ விபத்தில் 39 பேர் உயிரிழந்தனர், உரிய நேரத்தில் சென்று தீயணைப்புப் படை அலுவலர்களும், பணியாளர்களும் தங்கள்

உயிரைத் துச்சமென மதித்து, போராடி 72 நபர்களை தீ விபத்து நடந்த இடத்திலிருந்து உயிருடன் மீட்ட சாதனை இந்தத் துறை யின் பணிகளுக்கு வைத்த மகுடம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி), இந்தத் தீ விபத்தில் சுமார் 3 இலட்சம் ரூபாய் மதிப் புள்ள பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டு இருந்தாலும் 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் காப்பாற்றப்பட்டு உள்ளன என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்த மகாமகம் திருவிழாவில் எடுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகளின் பயனாக 18—2—1992 அன்று எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் இறந்தவர்களையும் காயம் அடைந்த நூற்றுக்கும் மேற்பட்டவர் களையும் திறமையாக மீட்டு மிகக் குறுகிய கால கட்டத்திற்குள் அவர்களை அரசு மருத்துவமனையில் அனுமதித்து, தீயணைப்புத் துறையினர் காத்தனர் என்பதை அனைவரும் அறிவர்.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை அகில இந்திய அளவில் தனக் கென தனி ஒரு பெயரையும் புகழையும் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது, மேலும் தீயணைப்பு நிலையங்களின் தேவை பற்றி பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பல சந்தர்ப் பங்களில் வினவிய போதிலும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் தான் தீயணைப்பு நிலையங்கள் அதிகமாக நிறுவப்பட்டுள்ளன என்பதை பெருமையோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி), தற்போது 205 தீயணைப்பு நிலையங்கள் உள்ள இத்துறையில் சுமார் 5,763 பேர் பணிபுரிகின்றனர், இத்துறையில் 237 நீர் தாங்கி வண்டி களும். 75 நோயாளர் ஊர்திகளும், 193 இதர ஊர்திகளும் 59 சிறப்பு சாதனங்களும் பயனபடுத்தப்பட்டு வருகின்றன, ஊர்திகளைப் பழுதுபார்க்க தனி பணிமனையும் பட்டறையும் இருக்கின்றன, பணியில் செம்மை சேர்த்திட பணியாளர்களுக்கு பயிற்சி அளித்திட ஒரு பயிற்சிப் பள்ளியும் இயங்கி வருகிறது பழைய பழுதடைந்த ஊர்திகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன, குறிப்பிட்ட உழைப்பு காலத்தை முடித்து, பயன் படுத்த இயலா நிலையை அடைந்த ஊர்திகளை ஒதுக்கி விட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய ஊர்திகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன். இவைகளைத் தவிர நமது தீயணைப் புத் துறையின் இன்னொரு முக்கிய அம்சம். அடுக்கு மாடி கட்டிடங்களிலும், பாதையே இல்லாத குடிசைப் பகுதிகளிலும் தீ விபத்தைத் தடுப்பதற்கும் அதில் சிக்குண்டவர்களை மீட்பதற் கும் என மிக நவீன தீயணைப்பு இயந்திரங்களை ரூபாய் 3.32 கோடிக்கு ஜப்பான் நாட்டிலிருந்து வாங்கி, அதை இப்போது பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.



இந்தச் சுழல் மேசை ஏணி, அடுக்கு மாடிக் கட்டிடங்களில் விபத்து களில் சிக்கியவர்களை வேகமாக வெளியேற்றி மீட்க உதவும கருவியாகும். இந்தியாவிலேயே நாக்பூர் தேசீய தீயணைப்புக் கல்லூரியைத் தவிர தமிழகத்தில் தான இது போன்ற நவீன சுழல் மேசை ஏணி பயனபடுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 11-20

தமிழகத்தின் எல்லாயிடங்களிலும் 25 கிலோ மீட்டர் தொலைவுக்குள் ஒரு தீயணைப்பு நிலையம் இருந்தாக வேண்டும், உடனடித் தேவைக்கு அது தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பதில் இந்த அரசு தீவிரமாக இருக்கிறது. குறிப் பாக தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகள், குடிசைகள் மண்டிக் கிடக்கும் பகுதிகள் போனற இடங்களுக்குத் தனி முக்கியத்துவம் அளித்து தீயணைப்பு நிலையங்கள் நிறுவ முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. கோடை காலங்களில், குறிப்பாக அதிக அளவு தீ விபத்து ஏற்படா வண்ணம் தடுப்பதற்காக பற்கோல், ஃபயர் ரேக். கூரைக் கொக்கி, சீலிங் ஹுக் போன்ற எளிய தீயணைப்பு சாதனங்களைக் குடிசைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புற நகர்த் தீயணைப்பு நிலையங்களில் தயாராக வைத்திருந்து, அப் பகுதிகளில் இத்துறை அலுவலர்கள் இரவு, பகல் எந்நேரமும் பணியாற்றுவதுடன் தீ விபத்து பற்றித் தொடர்பு கொள்வதற்கு வாக்கி-டாக்கி கருவிகளும் வழங்கப்படுகின்றன. இதன் காரண மாக, குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகள் பெருமளவு கட்டுப்படுத்தப்படுவதோடு உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே 9 தீயணைப்பு நிலை யங்களைத் திறக்க ஆணை பிறப்பித்தது. இந்த ஆண்டில் மட்டும் கொளச்சல், தேன்கனிக்கோட்டை, சேத்தியாத்தோப்பு, வேதாரணியம், மண்டபம், வில்லிவாக்கம் ஆகிய இடங்களில் புதிதாகத் தீயணைப்பு நிலையங்கள் திறக்கவிருக்கிறோம் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற மனம் எனக்கு இருக்கிறது. ஆனால் அரசு கஜானாவில் போதிய பணம் தான் இல்லை.

தற்போது வரையறுத்த வருவாயும், நிதிப் பற்றாக்குறையும் இருந்த போதிலும் தீயணைப்புப் பணியில் ஈடுபடுவோரின் நலன் பேணப்பட வேண்டுமென்பதில் இந்த அரசு முனைப்பாக உள் ளது. இதனை மனதிற் கொண்டுதான் சென்ற வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறையில் பணி புரிவோருக்கு வழங்கும் உணவுப்

படியை இந்த அரசு உயர்த்தி வழங்கியது. பஞ்சால் ஆலை சீருடையை டெரிகாட்டன் சீருடையாக மாற்றியது. தீயணைப் புப் படையினருக்கான நல நிதி—பெனவலண்ட் ஃபண்ட் அறுப தாயிரம் ரூபாயிலிருந்து 1.50 இலட்சம் ரூபாயாக உயர்த்தி இந்த அரசு வழங்கியது.

தீயணைப்புப் பணியாளர்களின் நலன் கருதி இந்த ஆண்டு இந்தத் துறையில் பணிபுரிவோருக்கு சீருடைச் சலவைப்படி மாதந்தோறும் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்.

கோட்டத் தீயணைப்பு அலுவலர்களுக்கு தற்போது வழங்கப் படும் படி ரூபாய் 30 இனி உயர்த்தி ரூபாய் 40 என்று வழங்கப் படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

துணைக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் மற்றும் தீயணைப்பு நிலைய அலுவலர், நிலையப் போக்குவரத்து அலு வலர் உள்பட இவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் படி 20 ரூபாய் இனி உயர்த்தி 30 ரூபாயாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

லீடிங் ஃபயர்மேன் மற்றும் அவருக்குக் கீழ் உள்ளவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் படி 15 ரூபாய் இனி உயர்த்தி 25 ரூபாயாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

இதனால் அரசுக்கு ஏற்படும் மொத்தச் செலவு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூபாய் ஆறரை இலட்சம் ஆகும். இதனால் 5,427 பேர்கள் பயனடைவார்கள்.

இறுதியாக, வளரும் தேவைகளை விரைந்து சந்திக்க இருக்கும் அமைப்பையும், வாய்ப்பு வசதிகளையும் நவீனப்படுத்தி, புதுப் புது அணுகுமுறைகளைக் கையாண்டு. இந்தத் துறையை மேன் மேலும் பயனுள்ள ஒரு சிறந்த துறையாக ஆக்கி, இதில் பணி புரிவோர்களின் குறைகளைக் கனிவோடு பரிசீலித்து. அவர் களைப் பேணிக் காத்து, நாட்டு மக்களின் நலம் காக்க, அவர் களை முழுமையாகப் பயன்படுத்த இந்த அரசு தீவிரமான முயற்சி களை மேற்கொள்ளும் என்று உறுதி கூறுகிறேன்.

முற்பகல் 11-25

தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில், கொள்கை அளவிலான விளக்கங்கள் கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் உட்பட 7 சட்டமன்ற உறுப்பினர் கள் வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளனர். 1992-93 ஆம் ஆண்டிற்குரிய தீயணைப்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில், இந்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்திற்குமான



விரிவான பதில்களும். விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றினையே கொள்கை அளவி லான வெட்டுத் தீர்மானங்களுக்கு, என்னுடைய பதில்களாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைத்தல் குறித்து. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி உட்பட 15 சட்டப்பேரவை உறுப்பினர்கள், தத்தமது தொகுதிகளில் உள்ள பல்வேறு இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் கோரி, வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளனர். ஓர் ஊரில், தீயணைப்பு நிலையம் அமைக்க அந்த ஊரின் மக்கள் தொகை, அருகாமையிலுள்ள தீயணைப்பு நிலையங்கள். தீ விபத்து அபாயங்கள் போன்றவற்றைப் பரிசீலித்து, அங்கு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இருப்பின், அந்த ஊர். தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட வேண்டிய ஊர்களின் முன்னுரிமைப் பட்டியலிலே சேர்க்கப்படுகிறது. இந்த அடிப்படையை வைத்துப் பார்க்கும் போது, ஆலங்குளம், கோதையார் மலைப் பகுதி, சன்னாசிநல்லூர். செந்துறை, ஆண்டி மடம், வெள்ளக்கோட்டை, மணமேல்குடி, ஆவுடையார் கோயில் ஆகிய ஊர்களில் தீயணைப்பு நிலையம் அமைக்க இன்னமும் அவை முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறவில்லை ஆகவே அவ்வூர்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைப்பது குறித்து, 1992-93 ஆம் ஆண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

அடுத்து தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட வேண்டிய ஊர்களுக்கான முன்னுரிமைப் பட்டியலில் பல்வேறு நிலை களில் புதுக்கோட்டை மாவட்டத்தில். கரம்பக்குடி; கன்னியா குமரி மாவட்டத்தில் கொள்ளங்கோடு திருநெல்வேலி— கட்ட பொம்மன் மாவட்டத்தில் திசையன்விளை தென்னாற்காடு மாவட்டத்தில் பெண்ணாடம்; நீலகிரி மாவட்டத்தில் கோத்த கிரி ஆகிய ஊர்கள் இடம் பெற்றுள்ளன, இவ்வூர்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைப்பது குறித்து உரிய தருணத் தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மேலும். ஆவடி, சத்துவாச்சாரி. புரசைவாக்கம், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்புறம்பியம், கடலூர் துறை முகப் பகுதி ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் கோரி, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளனர், இவ்வூர்கள் அனைத்திற்கும் அருகிலே. சுமார் 5 முதல் 15 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்தில். ஏற் கெனவே நிலையான தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வரு கின்றன, ஆகவே. இவ்விடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்க தற்போது தேவை எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 19

அடுத்து, தீயணைப்பு நிலையத்திற்குத் சொந்தமான கட்டிடம் கட்டிக் கொடுப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க! மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசாராமன் உட்பட 7 சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள், அவற்றிற்கு ஒவ்வொன்றிற்கும் பதிலளிக்க விரும்புகிறேன், தீயணைப்பு நிலையம் ஒற்றையூர்தி நிலையமாக இருக்குமானால், அதற்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசமாக ரூ. 9 லட்சம் செலவாகும். பேராவூரணி தீயணைப்பு, நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட, நிலம் தேர்வு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே போன்று, நத்தம் நகரிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்கு நில மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திட்டக்குடி தீயணைப்பு நிலையத்திற்கும் அதேபோன்று நிலம் தேர்வுசெய்து, இத்துறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையங்களுக்கு நிலமாற்றம் செய்யப்பட்டபின், நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் இயங்கும் தீயணைப்பு நிலையத்திற்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது, திருத்துறைப்பூண்டியில் உள்ள தீயணைப்புத் துறைக்குச் சொந்தமான நிலம், ஒரு ஏக்கரா பரப்பளவில் உள்ளது, அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, இத்தீயணைப்பு நிலையங்களுக்கு உரிய தருணத்தில் புதிய கட்டிடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும். பாபநாசம் தீயணைப்பு நிலையம், ஆதிதிராவிட நலத் துறைக்குச் சொந்தமான 'ஆஸ்பெஸ்டாஸ்' கூரை போடப்பட்டக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது, இதற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட, புறம்போக்கு நிலம் எதுவும் கிடைக்கவில்லை. எனவே. ஆதிதிராவிட நலத் துறைக்குச் சொந்தமான நிலத்தையே. இத்துறைக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம், குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய 3 தீயணைப்பு நிலையங்கள், இத்துறைக்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. அக்கட்டிடங்கள் நிதிநிலைமைக்கேற்ப பழுதுபார்க்கப்படும்,

அடுத்து, தீயணைப்பு நிலையங்களுக்கு 5 சட்டமன்ற உறுப்பினர்கள் புதிய தீயணைப்பு வண்டிகள் வாங்கவேண்டும் எனவும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கிற பழைய தீயணைப்பு வண்டிகளை மாற்றி, அவற்றுக்குப் பதிலாக புதிய வண்டிகள் வாங்கவேண்டும் என்பது பற்றி விவாதிக்கவும் வெட்டுத்தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளார்கள், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை. நாகை காயிதேமில்லத் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு. புதிய 'ஆம்புலன்ஸ்' வாங்கவேண்டுமெனக்கோரப்பட்டுள்ளது. எல்லாத் தீயணைப்பு நிலையங்களுக்கும் படிப்படியாக நோயாளர் ஊர்தி வழங்க அரசு கருதியுள்ளது. இந்நிலையங்களுக்கும் தக்க தருணத்தில்.



1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

'ஆம்புலன்ஸ்' வண்டிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஊர்திகள் பத்தாண்டுகள் செயல்பட்ட பிறகு. அவற்றின் செயல்திறன் குறித்து ஆய்ந்து, மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரால் கழிப்பு செய்து ஆணை பிறப்பிக்கப் படுகிறது, அதற்குப் பின்னரே அவற்றிற்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் பட்டுக்கோட்டை தீயணைப்பு நிலையம். புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கும் தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றிற்கு நிதி நிலைமைக்கேற்ப பழைய வண்டிகளுக்குப் பதிலாக புதிய வண்டிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்,

முற்பகல் 11-30

நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் மற்றும் குன்னூர் தீயணைப்பு நிலையத்திற்கு 1991-92 ஆம் ஆண்டு ஒரு புதிய நீர் தாங்கி வண்டி வீதம் இரண்டு வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன, 1992-93 ஆம் ஆண்டு கூடலூர் தீயணைப்பு நிலையத்திற்கு கழிப்பு செய்யப்பட்டுள்ள ஊர்திக்குப் பதிலாக புதிய ஊர்தி வழங்கப்படும்,

அறந்தாங்கி தீயணைப்பு நிலையத்தில் ஒற்றை நீர்த்தாங்கி ஊர்தி ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு நிலையத்தில் மிகவும் குறைந்த அளவில் தீ விபத்து அழைப்பு பெறப்படுவதால் ஓர் ஊர்தியே போதுமானது என்று கருதப்படுகிறது,

அடுத்து, தீயணைப்பு நிலையங்களை நவீனமயமாக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் உட்பட ஐந்து சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள், தமிழ்நாடு தீயணைப்புத்துறையில் நவீன ஊர்திகள் கருவிகள் படிப்படியாக வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக 'ஸ்நார்க்கல்' 'சுழல் மேசை ஏணி அதாவது (Turn Table Ladder) நாற்காலி ஊர்தி. கிராஷ் டெண்டர்கள், போன்ற நவீன வகை தீயணைப்பு ஊர்திகளும், Emergency Rescue Tender என்ற எமர்ஜென்சி மீட்பு ஊர்திகளும் தற்சமயம் பயன்பாட்டில் உள்ளன. 'பவர் ஸா' மூச்சுக் கருவி அதாவது, (Breathing Apparatus), Amp Dril போன்ற நவீன தளவாடங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்திய அரசு பொது ஈட்டுறுதிக் கடன் மூலம் நவீன வசதி ஊர்திகளும், மற்றும் கருவிகளையும் வாங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் உள்ள தீ அணைப்பு நிலையங்களில் தீ விபத்து

நிலச் சரிவு மற்றும் மீட்புப் பணிகளுக்காக 'லைப்பாய்' 'லைப்ஜேக்கட்' 'பயர் ஹூக்' 'பயர் ரேக்' 'வாட்டர் மானிட்டர்' ஆகிய கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ரசாயனப் பொருள்களால் ஏற்படும் தீ விபத்துக்களில் பணியாற்றும்போது அணிவதற்காக மூச்சுக் கருவிகளும் (Breathing apparatus ) நெருப்புப் பற்றாத நவீன மேல் அங்கிகளும் அதாவது (Aluminium Fire protection Suits வழங்கப்பட்டு வருகின்றன.

மின்சாரம் தடைப்படும் நேரங்களில், அதாவது, புயல் வெள்ள அபாய காலங்களில் தடையின்றி மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு தூக்கிச் செல்லும் 'மின் ஆக்கிகள்' அதாவது portable Generators -ம் மரங்களை வெட்டி அகற்ற நவீன power sawகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தீயணைப்பு நிலைய ஊர்திகளைப் பழுதுபார்க்க சென்னையில் மாநில பட்டறை ஒன்றும், இது தவிர. சிறிய பழுதுகளைச் செப்பனிடுவதற்கு கோட்ட தலைமையிடங்களில் நடமாடும் பழுதுபார்க்கும் குழுக்களும் உள்ளன. இவையன்றி, ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கும் அந்த அந்த நிலையங்களில் ஊர்திகளில் ஏற்படும் பழுதுகளைச் செப்பனிட இயந்திர கம்மியர் ஓட்டி, அதாவது 'டிரைவர் மெக்கானிக் பதவி ஒன்றுக்கு ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, தாலுக்கா தலைமையிடங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டுள்ளபடி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

அடுத்து தீயணைப்பு நிலையத்திற்கு அருகில் ஊழியர்கள் உடனுக்குடன் காலதாமதமின்றி செயல்பட அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ. ஆண்டி அம்பலம் உட்பட ஐந்து சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். தீயணைப்புப் பணியாளர்கள் அனைவருமே இலவசமாக குடியிருப்புப் பெற தகுதி உள்ளவர்கள். எனவே, அரசின் நிதி நிலைமைக்கேற்ப அனைத்துப் பணியாளர்களுக்கும் படிப்படியாக குடியிருப்புகளைக் கட்டித் தர அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி ஆகி இடங்களில் அரசுக் குடியிருப்புகள் கட்டப்பட்டு உள்ளன சென்னையில் அசோக் நகர் மற்றும் வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டும் பணி முடிவு தருவாயில் உள்ளது. நந்தனம் பகுதியில் குடியிருப்பு கட்டும் பணி நடந்துகொண்டிருக்கிறது. இக்குடியிருப்பு கட்டி முடிந்தவுடன் தீயணைப்புப் பணியாளர் வசம் இ ஒப்படைக்கப்படும்.



பண்ருட்டி தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்காக 54 செண்ட் நிலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் தீயணைப்பு நிலையத்திற்கு கட்டிடம் கட்டப் பட்ட பின்பு மீதம் இருக்கும் இடத்தில் அரசின் நிதி நிலைக் கேற்ப குடியிருப்புகள் கட்டித்தரப்படும். மேலும் தீயணைப் புப் பணியாளர்களின் நலன் பற்றியும், அவர்களின் ஊதிய விகித உயர்வு பற்றியும் விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். எஸ். ராமசுப்பு அவர்கள் உட்பட 4 சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள்.

ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி பணி யாளர்களுக்கு, மத்திய அரசு ஊதியத்திற்கு இணை யான ஊதியம் வழங்கப்படுகின்றது. இக்குழுவால் ஏற்பட்ட சில ஊதிய முரண்பாடுகளைக் களைய அரசு தனியே பரிசீலித்து வருகிறது. மேலும் தீயணைப்புப் பணியாளர்கள் தங்களின் உயிரை ஒரு பொருட்டாக எண்ணா மல் ஆபத்திலும் உயிர்களைக் காப்பாற்றுகின்றனர். இத்த கைய பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களது வீரச் செயல்களுக்கு ஏற்றவகையில் ரொக்க ஊதியமும், வெகுமதியும், நற்சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

முற்பகல் 11-35

பணியாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் ஊர்திகளின் அடிப்படையிலும், பொதுவான நிலையப் பணிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படியும் பணியாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படுகிறது. மலைப்பாங்கான இடங்களில் உள்ள, அதாவது ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களில் பணி செய்யும் பணியா ளர்களுக்கு கம்பளிச் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

அடுத்து தீயணைப்புப் பணிகளில் தனியார் தொழில் துறை நிறுவனங்களையும் ஈடுபடுத்துவது பற்றியும் தீயணைப்புப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்துவது குறித்தும் விவாதிக்க வெட்டுத்தீர்மானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தீயணைப்புப்பணி களில் தீயணைப்புத்துறை ஊர்திகள் ஈடுபட்டிருக்கும் போது தனி யார் துறை மற்றும் பிற அரசு நிறுவனங்களைச் சார்ந்த தீயணைப்பு ஊர்திகள் உதவிக்கு அழைக்கப்பட்டு தீயணைப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றன. தனியார் தொழில் துறை நிறுவனங்களைத் தீயணைப்புப் பணிகளில் ஈடுபடுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும். தீயணைப்புப் பணிகள் மிகவும் கடின மான உடல் உழைப்புடன் கூடிய பணியாக இருப்பதால் இந்தப் பணியில் ஆடவர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். மாணவி களுக்குத் தீயணைப்புப் பணிகளில் பயிற்சி அளிப்பதற்கு கல்வி நிறுவனங்களிலிருந்து கோரிக்கை கொடுக்கப்பட்டால் அந்த நிறுவனங்களின் ஆசிரியைகளுக்கும், மாணவிகளுக்கும் பயிற்சி அளிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி)

இத்தகைய சில விளக்கங்களுடன் தீயணைப்புத்துறைக் கான பதிலுரையை நிறைவு செய்து காவல் துறை பற்றிய எனது பதிலுரையைத் தொடங்குகிறேன். நாட்டில் அமைதியான ஒரு சூழ்நிலையை ஆக்கித் தருவது ஆட்சியின் தலையாய பொறுப்பு. குறிப்பாக மக்களின் மன அமைதிக்கு சுற்றுச் சூழ்நிலை மிகமிக இன்றியமையாதது. இதற்குத்தான் கற் காலத்திலிருந்து தற்காலம் வரை ஆட்சியாளர்கள் முன்னுரிமை யும், முக்கியத்துவமும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 'பப்ளிக் ஆர்டர்' என்று சொல்லப்படுகிற பொது அமைதியை நேரடியாகச் செயல்படுத்தும் அரசு இயந்திரம் தான் காவல் துறை. குற்றம், கொடுமைகளைக் களைந்து, அமைதி காத்து மக்களின் உயிரையும், உடைமையையும் பேணிப் பாது காத்து செயல்படும் பொறுப்பு காவல் துறையினரைச் சார்ந்தது ஆகும். சுருக்கமாகச் சொன்னால் கடமை ஆற்றும் போது தன் உயிரைப் பணயம் வைத்து மற்றவர் உயிரையும் உடைமையையும் காக்க வேண்டிய கட்டாயமும் காவல் துறையினருக்கு உண்டு.

எனக்குக் கிடைத்த தகவலின்படி இந்த நாட்டில் ராணுவ வீரர்கள் சண்டையிட்டு ஆண்டுதோறும் மடியும் எண்ணிக்கையை விட கடமையில் இறக்கிற காவல் துறையினர் அதிகம் எனக் கணக்கிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தும் இவர்களின் பணியை, பணியாற்றும் விதத்தை இங்கே பேசிய உறுப்பினர்களில் சிலர் விமர்சித்து இருக்கிறார்கள். நல்ல விமர்சனங்கள் நன்மைகளையும் வழங்கும் ஆற்றல் பெற்றவை என்பது எனக்குத் தெரியும். உறுப்பினர்களில் சிலர் காவல் நிலையங்களில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றி இங்கே கடுமையாகச் சாடி யிருக்கிறார்கள். காவல் துறையினர் பரிகாரம் தேடி வருவோ ரிடம் பக்குவம் காட்டாது கடுமையைக் காட்டி இருக்கிறார்கள் என்பதையும், சில இடங்களில் காவல் துறையினரே குற்ற வாளிகளை உருவாக்கக் காரணமாக இருக்கிறார்கள் என்ற பெரும் குறைபாட்டையும் கோபத்தோடு இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

நாட்டில் குற்றங்கள் மலிந்துவிட்டன; நடவடிக்கை எடுக்கும் தரம் போதாது என்பது போன்ற பல்வேறு கோணங் களில் இருந்து காவல் துறையினரின் செயல் பாட்டினை நமது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பின்னணி யில் நீங்கள் கூறியவை அனைத்தும் உண்மையற்றவை என்று ஒதுக்கவும் முடியாது ; அத்தனையும் முழுக்க முழுக்க சரியா னது எனவும் எடுத்துக் கொள்ளவும் முடியாது. ஆனால் அதே நேரத்தில் உண்மையான குறைபாடுகள் உடனடியாகக் களை யப்பட வேண்டும். அவைகளுக்குக் காரணமானவர்கள் இனம் கண்டு கண்டிக்கப்படவும், தண்டிக்கப்படவும் வேண்டும். என்பதில் இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து கிடையாது.



காவல் துறை தக்கன செய்தால் தட்டிக் கொடுப்பதும், தகாதன செய்தால் தட்டிக் கேட்பதும் இவ்வரசின் அணுகு முறை என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். மேசையைத் தட்டும் ஒலி. காவல் துறையின் இயக்கத்தில் தயக்கம் ஏற்படாதவாறு என்னென்ன நடவடிக்கைகள் செய்யப் பட வேண்டுமோ அதைச் செய்ய இந்த அரசு தயங்காது என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 11–40

இன்றைய சூழ்நிலையில் அரசாக இருந்தாலும் சரி, அதைச் சார்ந்த எந்த அமைப்பாக இருந்தாலும் சரி, விரைந்து செயல் படுவதில் சட்டவழியில் தொடர்ந்து இயங்குவதில் எத்தனை யோ சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நீங்களும் அறிவீர் கள். நானும் அறிவேன். அளவுக்கு மீறிய மக்கள் பெருக்கம், அதனால் சமூகப் பொருளாதார சிக்கல்கள், கேடுகள் மனித நேயத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளன. அதே நேரம் மக்கள் தமது கடமையை மறந்து உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள துடிக்கும் ஆர்வம் அதிகமாக வளர்ந்துள்ளது. இன்னொரு பக்கம் சட்டம் மற்றும் அதிகாரத்தை போற்றாத தன்மை அரசியல் குறுக்கீடு ஆகியவை சமூகத்தின் பூதாகாரப் பிரச்ச னையாக இருக்கின்றன. இன்றைய சூழ்நிலையில் காவல் பணி ஆற்றுவது மிக மிகக் கடினமான வேலைதான் என்பது நம் அனைவருக்கும் தெரியும். காவல் துறையைப் பொறுத்தவரை யில் இவை எல்லாவற்றுக்கும் மேலாக அதில் போதுமான ஆட் கள் இல்லாததோடு துரிதமாகப்பணிபுரிய உதவும் ஆயுதங்கள், சாதனங்கள், வண்டிகள் போதாத நிலையும் உள்ளது. இத் தனை இடர்பாடுகளுக்கும் மத்தியில் நமது காவல் துறை சந்தித்த சவால்கள், நிகழ்த்திய சாதனைகள், குவித்த வெற்றி கள், கடமையின்போது காட்டிய வீரம் மற்றும் வினைத் திட்பம் இவற்றையெல்லாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். அவர் களின் செயல்பாடுகளை சிலசமயங்களில் நேரடியாகவும் நான் கண்ட அனுபவத்தையும் நினைவு கூறுகிறேன். விடுதலைப் புலிகள், அவர்களுக்கு உதவிய தீவிரவாதிகள் மற்றும் பயங்கர வாதிகள் ஆகியோரின் கொட்டத்தை அடக்கி, அமளிக் காடாகி இருந்த தமிழகத்தின் ஆயுதக் கலாச்சாரத்தை விரட்டியடித்து எங்கள் ஆட்சியின் மூலம் தமிழகத்தில் அமைதியை நிலவ வைத்த பெருமை, தமிழகக் காவல் துறையினரையே வெகுவாக சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற என் கருத்தை நீங்கள் அனைவரும் ஏற்று இருக்கிறீர்கள் என்றே எண்ணுகிறேன். இந்த அரசு பொறுப்பேற்கும் முன், முந்தைய அரசு காலத்தில் விடுதலைப் புலியினருக்கு அளித்த ஆதரவு அனுசரணை, பரிவு, பச்சாதாபம், அதனால் இந்த மாநிலத் திற்கும், இந்திய நாட்டிற்கும் விளைந்த கேடு, அவர்கள் அடித்த

கொள்ளை, செய்த கொலை, அச்சுறுத்தல், அடாவடித்தனம் நடத்திய கடத்தல் மற்றும் சுரண்டல் ஆகியனபற்றியும், அதன் பின் எங்கள் ஆட்சி வந்த உடன் எடுத்த அதிரடி நடவடிக்கையால், அடுக்கடுக்கான திட்டங்களால், செயல்பாடுகளால், அவர்கள் எப்படி அடக்கப்பட்டனர் என்பதையும் நான் சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டிய நிலையில் நீங்கள் இல்லை.

இன்றையதினம் விடுதலைப் புலியினர் நடமாட்டம் வெகுவாகக்குறைந்து விட்டது என்ற நிலையை, இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. இதற்குப் பெரும் பின்னணியாக நின்றவர்கள் காவல் துறையினர் என்றால், அது மிகையாகாது. அதே நேரத்தில் இந்தப்பிரச்சினை தீர்ந்துவிட்ட ஒன்றாகவும் கொள்ள முடியவில்லை. எனவே இவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு தொடர்கிறது.

காவல் துறையினரைக் கொண்டு கடற்கரைப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த கடத்தல்காரர்களுக்கும், விடுதலைப் புலியினருக்கும் இடையே உள்ள தீய தொடர்புகளையும் அதன் விளைவாக எழக்கூடிய சட்ட விரோத நடவடிக்கைகளையும் தகர்த்தெறிய உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டிற்குள்ளே விடுதலைப் புலிகளின்பால் பரிவு காட்டி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருவோர்களை செயலிழக்கச் செய்யப்படுகிறது. விடுதலைப் புலிகளின் பல் வேறு மறைவிடங்களைக் கண்டுபிடித்து அவர்களை வெளியேற்றும் முயற்சி தொடர்கிறது. விடுதலைப் புலிகளின் தகவல் தொடர்பு சாதனங்கள் இன்னும் இருப்பின் அவற்றைக் கண்டுபிடித்து அழிக்கும் வேலை நடந்து வருகிறது. விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களுடைய அனுதாபிகள் யாரேனும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களை ஒடுக்குவது போன்ற பணிகள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மேற்கூறிய நோக்கங்களுக்காக கடற்கரையையொட்டிய முக்கியப் பகுதிகளில் 34 சோதனைச் சாவடிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சோதனைச் சாவடிகளில் லைட் மெஷின் துப்பாக்கி, ஸ்டென் கன் துப்பாக்கி, ஏ.கே. 47 துப்பாக்கி ஆகியவற்றைக் கொண்டு காவல் துறையினர் பணியாற்றி வருகின்றனர். கடற்கரைப் பகுதி முழுவதையும் கண்காணிக்கின்ற வகையில் வாகன ரோந்தும், நடை ரோந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வான் வசதி தகவல் தொடர்பு சாதனங்களும், அதிரடிப் படையினரும் அதிவேகமாக ஓடும் வாகனங்களும், முக்கியப்



பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணியில் 10 கம்பெனி மத்திய ரிசர்வ் படையினரும், 10 கம்பெனி தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அகதிகள் முகாம்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. அகதிகள் முகாம்களில் இல்லாத இலங்கைத் தமிழர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். சுருங்கக் கூறின், விடுதலைப் புலிகளுக்காக வெடிகுண்டு, வெடி மருந்து, எரி பொருட்கள், மருந்து வகைகள், சீருடைத் துணிகள் மற்றும் இதர பொருட்கள் வழங்கும் நபர்கள் முழு அளவில் ஒடுக்கப்பட்டுள்ளனர். கள்ளத்தனமாக வெடி குண்டுகள் தயாரிக்கப்பட்ட இடமும் கண்டுபிடிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் கள்ளத்தனமாகப் பயன்படுத்திய திறன் வாய்ந்த தகவல் தொடர்பு சாதனங்களும் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. இயந்திரங்களையும், ஆயுதங்களையும் வாங்குவதற்காக உலகம் முழுவதிலும் உள்ள இலங்கைத் தமிழர்கள் அந்நியச் செலாவணியில் செலுத்தியுள்ள பணத்தில் அதற்கான செலவினங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தடுக்கப்பட்டு விட்டன.

முற்பகல் 11-45

விடுதலைப் புலிகள் கொள்கை பரப்புப் பிரிவின் சார்பாக தமிழகத்தில் கள்ளத்தனமாக இயங்கி வந்த அச்சகம் ஒன்று காவல் துறையினரால் கண்டுபிடித்து நிறுத்தப்பட்டுள்ளது. நமது காவல் துறையைக் கொண்டு நாகப்பட்டினம், இராமேஸ்வரம் எல்லையில் ஏற்கெனவே இயங்கிவரும் கடற்படைப் பிரிவு தவிர புதிதாக 5 கடற்படைப் பிரிவுகள் விடுதலைப் புலிகளின் கடல் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்திய கடற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, தமிழ்நாடு காவல் துறையினர் ஆகியோர் இணைந்து எல்லாவகையிலும் செயல்படுவதால் விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் அடங்கி விட்டார்கள், ஒடுங்கியிருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடிகிறது. நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விஷயத்தில் காவல் துறையினரின் பணி மகத்தானது.

தி.மு.க. அரசு காலத்தில் வினியோகிக்கப்பட்ட மலிவு சாராயத்தை இந்த அரசு ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே 16—7—1991லேயிருந்து ஒழித்துவிட்டது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். மலிவு சாராயத்தை ஒழித்த அதே நேரத்தில் கள்ளச்சாராயம் தனது கைவரிசையைக் காட்டிவிடும் என்பதை இந்த அரசு உணர்ந்த காரணத்தால் இதற்கென ஒரு சிறப்பு காவல் துறைப் பிரிவை உருவாக்கியதை நீங்கள் அறிவீர்கள். அதன்பின் இந்த சிறப்பு காவல் துறைப்பிரிவினர்

தமிழகம் முழுவதிலும் பம்பரமாக சுழன்று பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கள்ளச்சாராயம் காய்ச்சும் இடங்களை எல்லாம் கண்டுபிடித்து சோதனையிட்டு கள்ளச் சாராயத்தைக் கைப்பற்றி அழித்தனர். காவல் துறையினரும், கிராம அலுவலர்களும் இணைந்து எடுத்த நடவடிக்கைகளின் பயனால் இன்று கள்ளச்சாராயம் வெகுவாக கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

முதலமைச்சருக்கும் முக்கிய பிரமுகர்களுக்கும் சிறப்புப் பாதுகாப்பு அளிப்பதற்கென ஒரு தனி பாதுகாப்புக் குழு காவல் துறையினரைக் கொண்டு அண்மையில் தொடங்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இவர்களுக்கு அளிக்கப் பட்டுள்ள பயிற்சி, வழங்கப்பட்டுள்ள ஆயுதங்கள், கொடுக்கப் பட்டுள்ள அறிவுரைகளினால் இவர்கள் எல்லாம் மத்திய அரசின் கறுப்புப் பூனைப் படையினருக்குச் சமமாக அமையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளனர் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகக்காவல் துறையினரின் சில சிறப்புகளை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். சமீபத்தில் நடந்தேறிய அகில இந்தியப்பணி சார்ந்த போட்டியில் நமது காவல் துறையினர் பிற மாநில காவல் துறையினரை வென்று பல பதக்கங்களைப் பெற்று தமது அகில இந்திய அந்தஸ்தை நிலைநாட்டியுள்ளனர் என்ற செய்தியும் நமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற தத்துவத்தை உலகிற்கு வழங்கிய தமிழ் மண்ணில் ஜாதி, சமய, இனக் கலவரங்கள் எழுவது எந்தவகையிலும் நியாயம் இல்லை தான். ஆனால் பல்வேறு மாநிலங்களில் வீசுகின்ற இந்த விஷக்காற்று சிற்சில சமயங்களில் தமிழகத்தை நோக்கியும் தனது வீச்சை விரிவுபடுத்தி வருகிறது. இந்தவகையில் நிகழ்ந்த ஒருசில நிகழ்ச்சிகள், மிகச்சிறு சிறு காரணங்களாலும், விரும்பத் தகாதவர்களின் தலையீட்டினாலும், ஒருசில அரசியல்வாதிகளின் தூண்டுதலாலும் உருவானவை என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். அதே நேரத்தில் ஜாதி, மத அடிப்படையில் வெறுப்புணர்ச்சியைத்தூண்டும் வகுப்புவாத சக்திகளை இந்த அரசு இனம் கண்டு இரும்புக் கரம் கொண்டு அடக்கியுள்ளது.

1991 ஆம் ஆண்டில் 33 வகுப்புவாத மோதல்கள் நிகழ்ந்தன. அதில் 55 பேர் உயிர் இழந்தனர். 88 பேர் காயம் அடைந்தனர். சட்டம்—ஒழுங்கைக் காக்க காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 11 முறை துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்து 13 பேர் உயிர் இழந்தனர் என்பதை நான் மறுக்கவில்லை.



ஆனால் அந்த சம்பவங்களின்பொழுது 207 காவல் துறையினரும் அதிகாரிகளும் பலத்த காயமடைந்தனர் என்ற உண்மையும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று ஆகும். அவ்வாறு காயம் பட்டபோதும், காவல் துறையினர் கோபத்தைக்கட்டவிழ்த்து விடாது, நிதானத்தைக் கடைபிடித்தனர் என்பது பாராட்டுதலுக்குரியது, பலராலும் வரவேற்கக் கூடியது. எந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைக்கிற முயற்சியில், தேவையான விமர்சனங்கள் செய்யப்படுவதில் தவறு இல்லை. ஆனால், விமர்சனங்களுக்காக பிரச்சினைகளைத் தேடி அலையும் நிலை உருவாகக் கூடாது.

கும்பகோணத்தில் நடந்த மகாமக திருவிழாவின்போது நடந்த விபத்து பற்றி தஞ்சாவூர் மாவட்ட கூடுதல் ஆட்சியாளர் மற்றும் கூடுதல் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் ஒரு விசாரணை நடத்தி வருகிறார். எனவே, இதுபற்றி இந்த மாமன்றத்தில் இப்பொழுது குறிப்பிடுவதைத் தவிர்க்க விரும்பினேன். விசாரணை அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் இந்த மாமன்றத்திற்கு விவரங்களைத் தெரிவிக்கின்றேன். இருந்தாலும் கூட இதைப்பற்றி எதுவுமே சொல்லவில்லை என்றால் இதைப் பற்றிப் பேசுவதற்கே பின்வாங்குகிறேன், அஞ்சுகிறேன் என்கிற ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக இது குறித்து ஒரு சில கருத்துக்களை மட்டும் இந்த அவை முன்வைக்கலாமென்று நினைக்கிறேன்.

முற்பகல் 11-50

கும்பகோணம் மகாமகம் விழாவில் மாண்டுபோனபக்தர்களைப் பற்றி என்னையும், இந்த அரசையும் பலத்த விமர்சனத்திற்கு உள்ளாக்கி இருக்கிறார்கள். அந்த விழாவிற்கு வந்த பக்தர்கள் நெரிசலில் அகால மரணம் அடைந்தது துயரச்சம்பவம்தான். துக்க சம்பவம்தான்; சோகமானதுதான். இந்நிகழ்ச்சிக்குப் பெரிதும் மனம் வருந்தி, இன்னும் அந்த சோகச் சுமையிலிருந்து விடுபட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குக் கிடைத்த தகவலை வைத்து, இந்நிகழ்ச்சியின் பின்னணியை இந்த மாமன்றத்திற்கு விளக்கிச் சொல்லி, அதன்மூலம் மக்களுக்குப் புரிய வைப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் இந்த மகாமகத் திருவிழாவை இம்முறை கொண்டாடுவதற்கு சிறப்புக் கவனம் செலுத்தி, ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அளவுக்கு மீறிய ஆன்மீகக் கூட்டம் இப்பெருவிழாவிற்கு வரக்கூடுமென்று கணிக்கப்பட்டு, பாதுகாப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு, விழாவிற்கான சீரமைப்புப் பணிகள், கட்டுமான ஏற்பாடுகள், நிவாரண ஏற்பாடுகள் ஆகியவைகள் எல்லாம் முன்னுரிமையோடு செய்யப்பட்டு, குறிப்பாக மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும், கூட்டத்தைக் கட்டுப்படுத்தி முறைப் படுத்தவும் காவல் துறையினர் சிறப்புக் கவனம் செலுத்தினர்

இந்த விழா ஏற்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து
நானே உயர் அதிகாரிகள் கூட்டங்களைக் கூட்டி ஆய்வு செய்தேன்.
தேவையான ஆலோசனை கூறினேன். வேண்டிய நிதியை வழங்
கினேன். அந்த வகையில் சாலைகளை மேம்படுத்த — ஒரு வழிப்
பாதை, இருவழிப்பாதை ஆகியவற்றை அகலப்படுத்த சுமார்
1.32 கோடி ரூபாயும், நகராட்சிப்பணிக்கு சுமார் 1.75 கோடி
ரூபாயும், கோவில் திருப்பணிக்கு சுமார் 50 லட்சம் ரூபாயுமாக
பல்வேறு பணிகளுக்கு பல்வேறு கட்டங்களில் நிதி வழங்கப்பட்டது
12,070 காவல் துறையினர் பணியில் ஈடுபட்டுத்தபட்டனர்.
1980ஆம் ஆண்டு நடைபெற்ற மகாமகத்தின்போது பணியில்
அமர்த்தப்பட்ட காவல்துறையினை விட இது சுமார் 2 மடங்
காகும். கும்பகோணம் மாகாமகக் குளத்தில் ஒரு சமயத்தில்,
40,000 பக்தர்கள் நீராட இயலும். எனவே பக்தர்கள் தொகுதி
தொகுதியாகச் சென்று குளத்தினுள் நீராடி வெளியேறும்
வண்ணம் காவல்துறையினர் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தினர்
பக்தர்கள் வடக்கு பக்கத்திலிருந்தும் தெற்கு பக்கத்திலிருந்தும்
உள்ளே நுழையவும், மேற்குப் பக்கம் வழியாகவும் கிழக்குப்
பக்கம் வழியாகவும் வெளியே வரவும் ஏற்பாடுகள் செய்யப்
பட்டிருந்தன. இதுபோன்ற ஏற்பாடுகள்தான் கடந்த 1968,
1980ஆம் ஆண்டுகளில் நடந்த மகாமக விழாவின்போது செய்யப்
பட்டிருந்தன. இந்த முறை மகாமகத்திற்கு 50 இலட்சத்திற்கு
மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்திருக்கிறார்கள் என்று கணக்
கிட்டிருக்கின்றனர். மகாமகத் திருவிழாவினையொட்டிய 3 நாட்
களில் மட்டும் 4,205 பேருந்துகள் இயக்கப்பட்டன. 62 தனி
இரயில்கள் விடப்பட்டன. மகாமகக் குளத்திற்கு உள்ளேயும்
குளத்திற்கு வெளியேயும் கரைகளிலும் மற்றும் அவற்றை
ஒட்டியுள்ள பல வீடுகளிலும் நிரம்பி வழிந்த கூட்டத்தில் விஸ்வ
இந்து பரிஷக் வைத்து நடத்திய தர்மசாலைக்கு அருகே உள்ள
பகுதியில் அச்சாலையை ஒட்டியிருந்த சுற்றுச்சுவர் மீதிருந்த
இரும்புக் கம்பிகளும், தூண்களும் இடிந்து விழுந்து. அங்கு
குழுமியிருந்த மக்களிடம் பீதியை ஏறபடுத்தியது மக்கள் முண்டி
யடித்துக்கொண்டு தாறுமாறாக ஓட நேரிட்டது. அப்போது
நேரிட்ட. பதட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு பக்தர்கள் இறக்க
நேரிட்டது மக்கள் கூட்டம் குளத்தில் இறங்க நெருக்கி அடித்துக்
கொண்டதாலேயே இறந்து விட்டனர் என்று சொல்வது சரியல்ல.
காவல் துறையினர் தடியடி நடத்தியதாலேயே மக்கள் சிதறி
ஓட நேரிட்டது என்று கூறுவதும். அதனால் மரணம் நிகழ்ந்தது
என்று கூறுவதும் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது.

இந்த விபத்தில் பலியானவர்கள் அனைவரும் இடிந்து போன
சுற்றுச் சுவர் கம்பிக்கு அண்மையிலேயே கிடந்திருக்கிறார்கள்.
குளத்திற்கு உள்ளே நெரிசல் ஏற்பட்டு மரணங்கள் நிகழ்ந்திருந்
தால் காவலர்களில் ஒரு சிலரும் இறந்திருக்கக்கூடும். இந்த
விபத்தில் காவல் துறையினர் முறைக்கேடாகவோ முரட்டுத்
தன்மாகவோ நடந்துகொள்ளவில்லை. அப்படி நடந்து கொண்
டிருந்தால் பொது மக்கள் மத்தியில் அமளியும் கொந்தளிப்பும்



ஏற்பட்டிருக்கக்கூடும். காவல் துறையினர் கூட தாக்கப்பட்
டிருக்கக்கூடும். இந்த துர்மரணங்களுக்கு முக்கிய காரணமாக
இருந்தது உணவுப் பொட்டலங்களையும் ரட்சை மஞ்சளையும்
மக்களை நோக்கி விஸ்வ இந்து பரிஷத் இயக்கத்தினர் விசிய
தான் என்று கருதவேண்டியிருக்கிறது. அதோடு காவல் துறை
யினரின் கட்டுப்பாட்டையும், வழி நடத்தலையும் விஸ்வ இந்து
பரிஷத் இயக்கத்தினர் ஆங்காங்கே எதிர்த்து சிறு குழப்பங்களை
உண்டாக்கி இருக்கிறார்கள். போக்குவரத்து ஏற்பாடுகள்
சரியாகச் செய்யப்பட்டிருந்ததால் தான் விபத்து நடந்த இடத்
திற்கு மிக அருகில் அவசர சிகிச்சை வண்டிகளும் கொண்டுவர
முடிந்தது.

முற்பகல் 11—55.

காயமுற்றவர்களை மருத்துவமனைக்கு விரைந்து எடுத்துச்
செல்ல முடிந்தது. அதனால் பலரைக் காப்பாற்ற
முடிந்தது இந்நிலையில் எனக்குப் பாதுகாப்பாக
சென்ற பல வண்டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்
ததால் பக்தர்கள் வெளியிலே செல்ல இயலாமல் போய்விட்டது
என்ற குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது. அதுபோலவே
குளத்தில் பெரும்பகுதி என்னுடைய வருகைக்காக ஒதுக்கப்
பட்டது என்னும் செய்தியும் தவறானதாகும். மேற்குக்
கரையில் ஒரு சிறு பகுதி நீங்கலாக எஞ்சிய பகுதி முழுவதும்
பக்தர்கள் பயன்படுத்திக்கொண்டுதான் இருந்தார்கள்.
எனது பாதுகாப்புக்காக சென்ற வண்டிகள் கூட பக்தர்களின்
பாதைகளை பாதிக்காதவாறு சாலையின் ஓரத்தில்தான் வரி
சையாக நிறுத்திவைக்கப்பட்டிருந்ததும், அவ்வாறு நிறுத்தி
வைக்கப்பட்ட கார்களால் பக்தர்களின் போக்குவரத்து எவ்
விதத்திலும் தடைப்படவில்லை. இத்துயரச் சம்பவம் நடந்த
வடகிழக்குப் பகுதி, நான் வழிபட்டுச் சென்ற இடத்திலிருந்து
மிக தொலைவில் அமைந்துள்ளது. நடக்கக்கூடாத இந்த
சோக நிகழ்ச்சி நடந்து விட்டது துரதிருஷ்டவசமானதுதான்.
அதற்காக நான் வருந்துகிறேன். இந்த அரசும் வருந்துகிறது.
ஆனால் இந்நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு என்னுடைய
வருகையை அத்துடன் இணைத்து என்மீது மாசு கற்பிக்கும்
நோக்குடன் விஸ்வ இந்து பரிஷத் இயக்கத்தினரும் என்னை
விரும்பாதவர்களும் திரித்துக் கூறுகிற உண்மைக்குப் புறம்
பான தகவல்களும் பொய்களும் எனக்கு பெரும் வேதனையை
அளிக்கின்றன. கொஞ்சமும் சம்பந்தப்படாத என்னையும்
எனது பெயரையும் இழிவுபடுத்த எண்ணி, களங்கப்படுத்த
முனையும் விஸ்வ இந்து பரிஷத் இயக்கத்திற்கும்; ஏனைய
விமரிசகர்களுக்கும் அந்த ஆண்டவனே தக்க கூலி கொடுப்பான்
என்று மட்டும் கூற விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இலங்கைப் போராளிகள், விடுதலைப்புலிகள், தீவிரவாதி
கள் தமிழகத்தில் நடமாட்டத் தொடங்கியதை நாம் அறிவோம்.
முந்தைய அரசு காலத்தில் வெடி வைத்துத் தகர்க்கும் நிகழ்ச்சி

கள் அதிகமாகியுள்ளன. முப்பதுக்கு மேற்பட்ட வெடிகுண்டு
விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. அதனால் பலர் இறந்தும்,
காயப்பட்டும் ஆக வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படிப்
பட்ட பின்னணியை மனதில் வைத்துத்தான் எங்களின் அரசு
ஆட்சிக்கு வந்த பிறகு பயங்கரவாதிகளின் கொட்டத்தை
ஒருபுறம் அடக்கவும் அதற்குத் துணை இருக்கிற ஏனைய
சக்திகளை ஒடுக்கவும் 'தடா' சட்டத்தையும் தமிழகத்தில்
செயல்படுத்த ஆரம்பித்தோம். தவறு செய்து பாதிக்கப்பட்ட
சிலர், இந்த சட்டத்தை துஷ்பிரயோகம் பண்ணுகிறோம். அரசி
யல் நோக்கத்திற்காக அதை அனாவசியமாக பயன்படுத்து
கிறோம் என்று கூப்பாடு போட்டதெல்லாம் எங்கள் கவனத்
திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நான் தொடக்கத்தில்
சொன்னதைப்போல் விடுதலைப்புலிகளை ஒடுக்கியிருக்கி
றோம், ஆனால் அவர்களை ஒழித்து விட்டோம் என்று சொல்ல
வில்லை. அவர்களுடைய நடமாட்டம் முழுவதும் கட்டுப்
படுத்தப்படவில்லை. இலங்கைக்கும் அவர்களுக்குமுள்ள
தொடர்பு இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே
இந்த மாமன்றத்தில் மீண்டும் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். 'தடா' சட்டத்தை இந்த அரசு வேண்டாதவர்கள்
மீது நிச்சயமாகப் பாயவிடாது. எந்த நிலையிலும் தடா சட்டம்
அனாவசியமாகப் பயன்படுத்தப்பட மாட்டாது என்பதை
இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இச்சட்டத்தின்
கீழ் கைது செய்யப்படுபவர்களின் பட்டியலையும் அதன்
தேவைகளையும் மாநில மட்டத்தில் உள்துறைச்செயலாளர்
ஆய்வு செய்வதோடு மத்திய அரசும் இதைக் கவனிக்கிறது.
இந்நிலையில் இச்சட்டம் துஷ்பிரயோகப்படுத்தப்படுவதற்
கான வாய்ப்பு இல்லை என்பதை இந்த மாமன்றத்திற்கு
விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மானியக் கோரிக்கைகளின் மீது பேசிய சில மாண்புமிகு
சட்டப்பேரவை உறுப்பினர்கள், திருட்டு, களவு போன்ற
குற்றங்கள் (Property Crime) தமிழகத்தில் மிகுந்து
கொண்டிருப்பதாகவும், அவை இன்னும் அதிகமாகி வருவதாக
வும் கூறினார்கள். இங்கே கொடுக்கப்பட்ட கொள்கைக்
குறிப்பில் 1990 ஆம் ஆண்டில் 36,731 குற்றங்கள் பதிவாகி
யிருக்கின்ற நிலையில், 1991-ல் 37,283 குற்றங்கள் பதிவாகி
யிருக்கின்றன. ஆனால் 1990 ஆம் ஆண்டில் களவு போன
சொத்துக்களின் மதிப்பு 13.60 கோடி ரூபாய். 1991-ல் அவ்
வாறு களவு போன பொருட்களின் மதிப்பு 13.30 கோடி
ரூபாயாகும். முந்தைய ஆண்டுகளில் சுமார் ரூ. 5 கோடி
யிலிருந்து ரூ. 8 கோடி வரையிருந்த களவுபோன சொத்துக்
களின் மதிப்பு, 1989-90 ஆம் ஆண்டில்தான் அதிக அளவுக்கு
உயர்ந்துள்ளது. இந்த ஆண்டுகளில் ஆட்சியில் இருந்தவர்கள்
யார் என்பதை நான் குறிப்பிட வேண்டியதில்லை. அக்காலங்
களில் விடுதலைப்புலிகளும் பயங்கரவாதிகளும் தமது ஆட



வடித்தனத்தை அவிழ்த்துவிட்டு கடும் குற்றங்களைப் புரிந்
தார்கள் என ஏற்கெனவே நான் சொன்னேன். கொள்கைக்
குறிப்பில் 1990 ஆம் ஆண்டு களவுக்குற்றக் கண்டுபிடிப்பு 65.1
விழுக்காடு என்ற நிலையில் வைத்திருந்த தமிழகக் காவல்துறை
1991 ஆம் ஆண்டில் 64.1 விழுக்காடு என்ற நிலைக்குக்குறைந்து
விட்டது என்பதை நாம் அறியாமல் இல்லை.

நண்பகல் 12-00

அந்தந்த ஆண்டுகளில் நடக்கும் குற்றங்கள் அந்தந்த
ஆண்டுகளிலேயே கண்டுபிடிக்கப்படுவதில்லை. நீதிமன்றத்தில்
குற்றவாளிகள் தண்டனை அடைவதை வைத்துத்தான் இந்த
சதவீதம் நிர்ணயிக்கப்படுகிறது. 1991 ஆம் ஆண்டுக்கான
பல வழக்குகள் தற்போது நீதிமன்றங்களில் விசாரணையில் உள்
ளன. அவை முடியும்போது, குற்றவாளிகள் தண்டனை
பெறும்போது 1991 ஆம் ஆண்டுக்கான குற்றக் கண்டுபிடிப்பு
மேலும் அதிகமாக உயருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருந்
தாலும் கூட நாட்டில் நடக்கும் களவு, கொள்ளை போன்ற
குற்றங்கள் விரைவாக கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதற்கு
உதவும் வகையில் நவீன சாதனங்களை காவல் துறையினர்
பயன்படுத்த வேண்டும் என்ற உங்களின் கருத்து எங்களுக்கும்
ஏற்புடையது என்பதால் இதை காவல் துறையினர் கவனத்
திலே ஏற்கவேண்டுமென்று அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்
கிறேன். நமது காவல் துறையினருக்கு உதவுகிற வகையில்
நவீன ஆயுதங்கள், பயிற்சிகள், அடிப்படை வசதிகள் ஆகிய
வற்றை வலுப்படுத்த ஒரு மாபெரும் திட்டத்தை 80.45 கோடி
ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி
வைக்கப்பட்டது. மத்திய அரசும் ரூ. 10 கோடியை இதற்காக
இதுவரை வழங்கியுள்ளது. தற்போது ஆயுதங்கள், வெடி
மருந்துகள், 200-க்கு மேற்பட்ட ஜீப்புகள், காவல் துறையின
ருக்கான நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டு
வருகின்றன. மேலும் காவல் துறையை நவீனப் படுத்தும்
முயற்சியில் சுமார் இரண்டரை கோடி ரூபாய்க்கு மேல் வெவ்
வேறு இனங்களில் செலவிட இந்த ஆண்டு திட்டங்கள் உள்ளன.

கடந்த வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடரிலே காவல்
துறையினர், தீயணைப்புத் துறையினர், சிறைத் துறையினர்
ஆகியோரைத்தேர்வு செய்வதற்கென ஒரு வாரியத்தை நிய
மிக்க இந்த அரசு அறிவித்து ஆணை பிறப்பித்துள்ளது. காவல்
துறைத் தலைவர் பணித்தகுதியில் உள்ள உயர் அலுவலரைத்
தலைவராகக் கொண்டு அந்த வாரியம் இயங்கிக் கொண்டிருக்
கிறது. காவல் துறையில் தற்போது காலியாக உள்ள சுமார்
நாலாயிரம் இடங்களுக்கு பணியாளர்களை இந்த வாரியம்
விரைந்து தேர்ந்தெடுக்கும். இன்னும் ஓரிரு மாதங்களில்
தேர்வுப்பணி தொடங்கும் என்ற நல்ல செய்தியை உங்களுக்குச்
சொல்லுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி).

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 19

கடந்த வரவு—செலவுத் திட்ட கூட்டத் தொடரில் மீண்டும் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டு தற்போது இயங்கி வரும் காவல்துறை வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் இந்த ஆண்டிலே வீடுகட்டுவதற்காக எட்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ஆயிரம் வீடுகளைக் கட்டி வழங்கும் செயலில் இந்த அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. எத்தனையோ நிதி நெருக்கடிகளுக் கிடையேகூட சென்ற வரவு—செலவுத் திட்டக் கூட்டத் தொட ரின்போது காவல் துறையினருக்கென சில நல்ல திட்டங்களை அறிவித்தேன். அவர்களுக்கான உணப்படி உயர்த்தப்பட்டது. சீருடைப்பணியாளர் தேர்வாணை வாரியம் ஏற்படுத்தப்பட்டது. கடமையாற்றும்போது வீர மரணம் எய்திய காவல் துறையின ரின் குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டது. பயணப்படி, தினப்படி ஆகியவற்றில் சலுகைகள் வழங்கப்பட்டன. தமிழ் நாடு காவல் துறையினர் சேமநல நிதி உயர்த்தப்பட்டது. சீருடை மானியம் உயர்த்தப்பட்டது. அதே போல இந்த ஆண்டுக்காக 21 புதிய திட்டங்களை வழங்க அரசு முடிவு எடுத்திருக்கிறது. அது இந்தத் துறை விரைந்து செயல்படுவதற்கான அடிப்படை வசதிகளை வழங்குகின்ற பல்வேறு திட்டங்களாகும். ஏறத் தாழ 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உள்ள இந்தத்திட்டங் களை இந்த மாமன்றத்திலே அறிவிப்பதிலே மகிழ்ச்சியடை கிறேன்.

காவல் துறையினரின் குடியிருப்புகளில் கழிப்பிடங்கள் கட்டுதல். தற்போது 17 மாவட்டங்களில் உள்ள 135 காவல் நிலைய காவல் துறையினரின் குடியிருப்புகளில் உலர் கழிப்பிடங் கள் அதவாது 'டிரை லெட்ரின்ஸ்' பல ஆண்டுகளாக உள்ளன. சுகாதாரக்கேடுகளை விளைவிக்கும் இந்த கழிப்பிடங்களை நீக்கி அதற்குப் பதில் நீரிடு கழிப்பிடங்களாக — பிளஷ் அவுட் லெட்ரின்ஸ் — அவற்றை மாற்றி அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. அனைத்து சுகாதார வசதிகளும் கூடிய நீரிடு கழிப்பிடங்கள் ரூ. 70 லட்சம் செலவில் உடனடியாக நிறுவப்படும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

சென்னை நகரில் காவல் துறையினர் ஓய்வு விடுதி கட்டுதல். பணி நிமித்தம் சென்னைக்கு வரும் காவலர்கள், தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் போன்ற கீழ்நிலைப் பணி யாளர்கள் குறைந்த வாடகையில் தங்கிப்போகிற வகையில் நடப்பாண்டில் ஓய்வு விடுதி ஒன்று ரூ. 10 இலட்சம் செலவில் கட்ட இந்த அரசு தீர்மானித்துள்ளது.


1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

முறையில் உள்ளது. காவலர்களுக்கு இன்றியமையாப் பொருள்களை, உணவுப் பொருள்களை 50 விழுக்காடு ..னியத்தில் வழங்கும் திட்டம் சீரமைக்கப்பட்டு இன்றைய ..லைவாசி நிலையில் 50 சதவீத மானியம் என்று உயர்த்தி ..ங்க ஆணையிடப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு ..ரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ..லி). இந்த முடிவு 1—4—1992 முதல் செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 12–05

இதனால் அரசுக்கு 1.5 கோடி ரூபாய் வரை ஆண்டு ..ன்றுக்கு கூடுதலாக செலவாகும். இந்தத் திட்டத்தினால் .. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்களின் குடும்பங்கள் ..பன்பெறும். இதைப் பற்றி ஒரு சிறிய விளக்கத்தைக் கூற ..ரும்புகிறேன். இப்படி மானியம் கொடுக்கப்பட வேண்டு ..மன்று கோரிக்கை எழுப்பிய பல சட்டமன்ற உறுப்பினர்கள். .. விழுக்காடாக இருந்ததைக் கடந்த அரசு 25 விழுக்காடாகக் ..றைத்து விட்டது என்ற ஒரு தகவலை இங்கே சொன்னார்கள். ..து சரியான தகவல் அல்ல. 1980 ஆம் ஆண்டு இந்தத் ..ட்டம் தொடங்கப்பட்டபோது அன்றைய விலைவாசிக்கு ..ற்ப 50 விழுக்காடு மானியம் கொடுப்பது என்று தீர்மானிக் ..ப்பட்டது. அதன்படி வழங்கப்பட்டு வந்தது. ஆனால், ..980-க்குப் பிறகு 1992 வரை விலைவாசிகள் ஏறிவிட்டன. ..ப்ளிக் டிஸ்ட்டிரிபியூஷன் சிஸ்டம், பொது விநியோக முறை ..லும் விலைவாசிகள் ஏறிவிட்டன. இருப்பினும், 1980ஆம் ..ஆண்டு என்ன தொகை நிர்ணயிக்கப்பட்டதோ, அந்த அளவி ..லயே மானியம் கொடுக்கப்பட்டு வந்தது. அதனால் விழுக் ..ாடு எண்ணிக்கை குறைந்து விட்டது. அதனை இப்போது ..ர் செய்து, இன்றைய நிலைமைக்கு ஏற்ப இன்று பொது ..நியோக முறையில் உள்ள விலைவாசிக்கு ஏற்ப 50 சதவீதம் ..ானியம் கொடுப்பது என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. ..மேசையைத் தட்டும் ஒலி) ஆக, திரும்பச் சொல்ல வேண்டு ..ானால், இன்றையதினம் அத்தியாவசியப் பொருட்களும் ..ணவுப் பொருட்களும் என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ, ..துில் பாதி விலையில் காவலர்களுக்குக் கொடுக்கப்படும். ..மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறைக்குக் கூடுதல் அமைச்சுப் பணியாளர்கள் ..ழங்குதல் : காவல் துறையில் அமைச்சுப் பணியின் வேலைப் ..ளுவைக் கருத்தில் கொண்டு அரசால் நியமிக்கப்பட்ட 1981 ..ஆம் ஆண்டு ஆய்வுக் குழு பரிந்துரைத்த 2,150 கூடுதல் அமைச்சுப் ..ணியிடங்களில் இதுவரை பல்வேறு காலக்கட்டங்களில் வழங் ..கப்படாமல் உள்ள 80 கூடுதல் அமைச்சுப் பணி இடங்களையும் ..ட்டுமொத்தமாக இந்த அரசு இந்த ஆண்டே வழங்கும் என அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் மொத்தச் செலவு 30 இலட்சம் ..ரூபாய் ஆகும்.

காவல் துறையில் சார் ஆய்வாளர் நேரடி நியமன விகிதம் : காவல் துறையில் சார் ஆய்வாளர் பதவிக்கு நேரடித் தேர்வு மூலமும் பதவி உயர்வு மூலமும் நடைமுறையில் உள்ள சிறப்பு விதிகளின்படி 70 சதவீதம் நேரடி நியமனமாகவும், 30 சதவீதம் பதவி உயர்வு மூலமாகவும் நிரப்பப்படுகிறது. பல ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்ற காவலர்களுக்கு காவலர் நிலையிலிருந்து பதவி உயர்வு வழங்க வகைப்படுத்தும் வாய்ப்பை விரிவுபடுத்தும் நோக்கத்தில் இப்போதுள்ள 30 சதவீத பதவி உயர்வு 1—4—1992 முதல் 40 சதவீதமாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறையில் பணிபுரியும் ஆய்வாளர்களில் பலர் 15 ஆண்டுகளுக்கு மேலாக பதவி உயர்வு பெற வாய்ப்பு இல்லாமல் உள்ள தேக்க நிலைக்குத் தீர்வு காணும் நோக்கத்திலும், காவல் துறையில் உள்ள சில பிரிவுகளின் செயல்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும் மாவட்டங்களில் உள்ள தனிப் பிரிவு (Special Branch) ஆய்வாளர்கள் பதவிகளையும், மாவட்டங்களிலுள்ள புலனாய்வுப்பிரிவு (Intelligence Wing) ஆய்வாளர்கள் பதவிகளையும் துணைக் கண்காணிப்பாளர் நிலைக்குத் தரம் உயர்த்த இந்த அரசு முன்வந்து இருக்கிறது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் பயன்பெறும் ஆய்வாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 50 ஆகும். அரசுக்கு இதனால் ஆகும் செலவு ரூபாய் 40 ஆயிரம்.

தமிழகக் காவல் துறையின் கீழ் இயங்கும் 175 புறக்காவல் நிலையங்கள் சிலவற்றை, அப்பகுதியிலுள்ள மக்களின் தேவைக்கும், சேவைக்கும் போதுமான அளவில் பயன்படுகிற வகையில் முழு அளவிலான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்த அரசு முன் வந்துள்ளது. இந்த ῾ ῾ ஆண்டில் 11 புறக்காவல் நிலையங்களை முழுமையான தகுதியுடைய காவல் நிலையங்களாக மாற்றி ஆணையிட இந்த அரசு முன் வந்துள்ளது என்பதை உங்களுக்குச் சொல்வதில் பெருவகை கொள்கிறேன். அதன்படி தற்போது திருவலங்காடு, ஓரத்தி, ஆசனூர், மல்லிக்கரை, ஆயில்பட்டி, கோட்டப்பட்டி, பாகலூர், பொன்னை, தேரூர், கொப்பம்பட்டி, வாசுதேவநல்லூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் புறக்காவல்நிலையங்கள் முழுமையான காவல் நிலையங்களாக உயர்த்தப்படும்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், காவல் துறையை ஒரு வலுவுள்ள, திறமையான, பயனுள்ள துறையாக மாற்ற வேண்டும் என்பதோடு, அதில் பணியாற்றுகின்ற காவலர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் சரியான நேரத்தில், மனிதாபிமான எண்ணத்தில் வழங்க வேண்டும்



என்பது தான். இந்த அரசின் நோக்கம் சரியாக இருப்பதால், காவல் துறையின் செயல்பாடுகள் நிச்சயம் இனி சரித்திரம் படைக்கும் என்று நம்புகிறேன்.

பிற்பகல் 12—10

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், திரு. எச். எம். ராஜூம் மற்றும் திரு. பி. வி. இராஜேந்திரன் ஆகியோர் தமிழக காவல் துறை மீதான அரசின் கொள்கை பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர். காவல் துறை சார்ந்த முக்கியப் பணிகள், தேவையான புள்ளி விவரங்கள் மற்றும் கொள்கை விளக்கங்கள் மானியக் கோரிக்கை எண். 15-ன்கீழ் ' சாதனைகள் மற்றும் திட்டங்கள் ' என்ற குறிப்பில் தரப்பட்டுள்ளன. அவைகளை இவ்வரசின் காவல்துறை கொள்கை விளக்கமாக எடுத்துக் கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம், தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை நகரத்தில் சாமியார் மடத்தில் ஒரு காவல் நிலையம் தொடங்குவது குறித்தும், திருச்சிற்றம் பலத்திலுள்ள புறக்காவல் நிலையத்தை நிரந்தரக் காவல் நிலையமாக மாற்றவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். நடேசன், திரு. சி. சுவாமி நாதன், திரு. ஆர். தங்கராசு, திரு. டி. சுதர்சனம், திரு. சி. ஞானசேகரன், திரு. எம். சுந்தரதாஸ், திரு. புரட்சிமணி மற்றும் திரு. எஸ். இராசாராமன் ஆகியோர் தத்தம் தொகுதி களில் புறக்காவல் நிலையங்கள் வேண்டியும், புதிய நிரந்தரக் காவல் நிலையங்களை அமைக்க வேண்டியும், தற்போதுள்ள புறக் காவல் நிலையங்களை நிரந்தரக் காவல் நிலையங்களாக மாற்றக் கோரியும், தனியாக துணைக் காவல் கண்காணிப் பாளர் அலுவலகத்தினை அமைக்கும்படியும் வெட்டுத் தீர்மானங் களைக் கொண்டு வந்துள்ளனர். பட்டுக்கோட்டை வட்டம், திருச்சிற்றம்பலம் புறக்காவல் நிலையம், கடந்த 1—3—1991 அன்று உள்துறை அரசாணை எண். 373-ன்படி நிரந்தரக் காவல் நிலையமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை சென்ற சட்டப்பேரவைத் தொடர் கூட்டத்திலேயே தெரிவித்துள்ளேன்.

தற்போதுள்ள பட்டுக்கோட்டை காவல் நிலையத்தை நகரக் காவல் நிலையம் மற்றும் வட்டக் காவல் நிலையம் என்று இரண்டு காவல் நிலையங்களாகப் பிரிப்பதற்கு செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதால், பட்டுக்கோட்டை நகரம்— சாமியார் மடம் அருகில் தனியாக ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 19

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் காவல் நிலையத்திலிருந்து திற்பரப்பு நீர்வீழ்ச்சி 7 கி.மீ. தொலைவில் உள்ளதாலும், நாளொன்றுக்கு நூற்றுக்கும் குறைவான சுற்றுலாப் பயணிகளே வருகை தருவதாலும், தற்போது காவல் நிலையத்திலிருந்து நீர்வீழ்ச்சிக்குத் தேவையான காவலர்களை அனுப்பி ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதாலும் இந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் ஒரு புறக்காவல் நிலையம் தனியாக அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், ஆலங்குடியில் காவல் நிலையம் இருப்பதாலும் வெட்டன்விடுதி கிராமம் அங்கிருந்து 8 கி.மீ. தொலைவில் போக்குவரத்து வசதிகளுடன் அமைந்துள்ளதாலும், சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகள் நிறைந்த, அருகிலுள்ள செம்பட்டிவிடுதி கிராமத்தில் ஒரு புறக் காவல் நிலையம் இயங்கி வருவதாலும், வெட்டன்விடுதியில் புதிய காவல் நிலையம் அமைக்கும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியிலுள்ள வடகாடு மற்றும் கரம்பக்குடி காவல் நிலையங்களின் ஆளுகைக்குட்பட்ட சில கிராமங்களை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த அன்னவாசல் காவல் நிலையத்திலிருந்து குடுமியான்மலை 5 கி.மீ. தொலைவில் போக்குவரத்து வசதிகளுடன் அமைந்துள்ளதால் குடுமியான்மலையில் தனியாக காவல் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

திருச்சி மாவட்டத்தில் பொன்பரப்பியிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் செந்துறை காவல் நிலையம் போக்குவரத்து வசதிகளுடன் அமைந்துள்ளதால் பொன்பரப்பியில் தனி காவல் நிலையம் அமைக்கவும், ஆண்டிமடம் தொகுதியிலுள்ள வல்லம் காவல் நிலையத்தை கொடுக்கூர் அல்லது மாத்தூருக்கு மாற்றும் எண்ணமும் அரசுக்குத் தற்போது இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம், பூந்தமல்லி தொகுதியில் வெள்ளவேடு கிராமத்தில் புதிய காவல் நிலையம் அமைக்கவும், திருநின்றவூர் புறக்காவல் நிலையத்தை நிரந்தரக் காவல் நிலையமாக மாற்றவும், அதுபோல கன்னியாகுமரி மாவட்டம் விளவன்கோடு பகுதியில் ஆறுகாணியில் புதிய காவல் நிலையம் அமைக்கவும், தற்போது விளவன்கோடு பகுதி



1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

காவல் துறை துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை
அமைக்கவும் அரசுக்கு எண்ணம் இல்லை என்பதையும் உறுப்
பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டம் வெள்ளக்குட்டை
கிராமத்தில் காவல் நிலையம் அமைத்தல், தென்னாற்காடு
மாவட்டம் மங்களூர் கருவேப்பிலங்குறிச்சி கிராமத்தில் புறக்
காவல் நிலையம் அமைத்தல், தஞ்சை மாவட்டம், கும்பகோணம்
வட்டம், திருப்புறம்பியத்தில் புறக்காவல் நிலையம் அமைத்
தல், சுவாமிமலை பேரூராட்சியில் புறக்காவல் நிலையத்தை
நிரந்தரக் காவல் நிலையமாக மாற்றுதல் போன்ற கோரிக்கை
களை தற்போது நடைமுறைப்படுத்துகிற திட்டம் ஏதும்
அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12—15

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடேசன் உட்பட 8
உறுப்பினர்கள், தமிழகத்தில் உள்ள எல்லாக் காவல் நிலை
யங்களுக்கும் வாகன வசதி செய்து தரக் கோரி வெட்டுத்
தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். தமிழகத்தில் உள்ள 1075
காவல் நிலையங்களில், 916 காவல் நிலையங்களுக்கு ஒரு
மோட்டார் சைக்கிள் வீதம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.
மீதம் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும், மோட்டார்
சைக்கிள்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனை
யில் உள்ளது என்பதையும், இந்த நிதி ஆண்டில் 223 டெம்போ
டிராக்ஸ் ஜீப்புகளை வாங்கி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்
யப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த அவைக்கு
அறிவிப்பதில் பெருமை அடைகிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி).

இதை மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி கவனித்து
இருப்பார் என்று நம்புகிறேன். நேற்று பேசுகின்றபோது,
அவருடைய தானைத்தலைவர் ஆட்சிக் காலத்தில், காவல்
நிலையங்களுக்கு செக்யூரிட்டி அலாரம் கூட வழங்கப்பட
வில்லை என்று நான் குறிப்பிட்டபோது, இப்போது உங்கள்
ஆட்சியில், ஜீப்புகளும் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்
குறிப்பிட்டார். நான் அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்பு
வது, நாங்கள் ஆட்சி பொறுப்பை ஏற்றபோது, தமிழகத்
தில் உள்ள 1,075 காவல் நிலையங்களில், 33 காவல் நிலையங்
களுக்கு மட்டும்தான் , உங்கள் தானைத்தலைவர் ஜீப்பை ஏற்
பாடு செய்து வைத்திருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)
எனவே, (குறுக்கீடு). நான் இன்னும் முடிக்கவில்லை. நான்
(குறுக்கீடு) நான் இன்னும் முடிக்கவில்லை. — . தானைத்
தலைவர் செய்யத் தவறியதை இந்த அரசு பொறுப்பேற்ற
பிறகு செய்திருக்கிறோம். இப்போது. 1,075 காவல் நிலையங்
களில் ஏற்கனவே 33 காவல் நிலையங்களுக்கு மட்டுமே ஜீப்

இருந்தது என்று குறிப்பிட்டேன். 916 காவல் நிலையங்களுக்கு நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த 9 மாத காலத் தில், மோட்டார் சைக்கிளையாவது நாங்கள் வழங்கியிருக் கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). அது மட்டுமல்ல. படிப் படியாக எல்லாக் காவல் நிலையங்களுக்கும் ஜீப் வழங்கியே ஆகவேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாகத்தான் இவ்வாண்டு, 223 டெம்போ டிராக்ஸ் ஜீப்புகள் வாங்கி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ராமசுப்பு உட்பட 6 உறுப்பினர்கள், காவல் நிலையங்களில் காவலர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று வெட்டுத் தீர் மானங்கள் கொண்டு வந்துள்ளனர். பொதுவாக காவல் நிலை யங்களுக்கு என்று குறித்த வரைமுறைகளின்படி, பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அந்தப் பணியிடங்களுக்கு குறைவாக உள்ள காலி இடங்கள், புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள சீருடைப் டணியாளர்கள் தேர்வு ஆணை வாரியம், Unformed Services Recrutiment bord மூலம் தேர்வுசெய்து நிரப்பப்படும் என்பதை இந்த அவைக்கு இனிக்கும் செய்தியாக வழங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வட ஆற்காடு —அம்பேத்கார் மாவட்டம், வேலூரில், சத்து வாச்சாரியில், தனியே பெண்கள் காவல் நிலையம் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்றாலும், காவல் துறையில், பெண் காவல் பிரிவு, எல்லா முக்கியக் காவல் டணிகளிலும் திறம்பட ஈடுபடுத்தப்பட்டு, பொதுமக்களால், பாராட்டப்படும் வகையில் செயல்பட்டு வருகிறது என்பதை யும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆண்டி அம்பலம் உட்பட 9 உறுப்பினர்கள், நேரடியாக நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களின் பதவி உயர்வு குறித்தும், 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை காவலர்களுக்கு கட்டாய இடமாற்றம் கொடுப்பது குறித்தும், பதவி உயர்வு, பணி நிரந்தரம், வழக்கு தொடரு வதற்கான தனி ஆய்வாளர்கள், காவலர்களுக்கு படிப் பணம், ஆயுதப்படைக் காவலர்களுக்கு சட்டம் ஒழுங்குத் துறையில் பணியாற்ற வாய்ப்புத் தருதல், புலன் விசாரணைக் குழுவிற்கு தனி இயக்குநர் பதவி ஏற்படுத்துதல், பணியிடைப் பயிற்சி, அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்தல், பல்வேறு படிகள் போன்றவைகள் குறித்து வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர். காவல்துறையில் பணிபுரியும் காவலர்களுக்கும், அலுவலர்களுக்கும் தேவையான வசதிகளை இந்த அரசு எப்போதும் செய்து கொடுத்துள்ளது. 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்களுக்கு தேர்வுநிலை ஊதியமும், 20 ஆண்டுகளுக்கு



மேல் பணிபுரிந்தவர்களுக்கு சிறப்புநிலை ஊதியமும் வழங் கப்பட்டு வருகிறது. விரைவில் பதவி உயர்வு கிடைப்பதற்கும், நியாயமான அளவில் படிகளை உயர்த்துவதற்கும், தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்று காவலர்களின் நலன் கருதி பெறப்படும் செயற்குறிப்புகள் அனைத்தையும் கனிவான முறையில் இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். எஸ். ராமசுப்பு உட்பட, 14 உறுப்பினர்கள் தத்தம் தொகுதிகளிலும், மாவட்டங் களிலும் உள்ள காவல்நிலையங்களுக்கு வாகன வசதி, கட்டிட வசதி, தொலைபேசி வசதி, வயர்லெஸ் வசதி, நவீன ஆயுதங் கள், காவலர்களுக்கு குடியிருப்பு மற்றும் அதன் பராமரிப்பு குறித்து வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளனர்.

மேற்படி பொருட்களின் தொடர்பான விரிவான விளக்கங் களும், கருத்துக்களும் காவல்துறை கொள்கைக் குறிப்பில் கொடுக் கப்பட்டுள்ளன. எனினும் காவல்துறையினர் விரைந்து செயல் பட வாகனங்கள் வழங்கவும், திறம்பட செயல்பட நவீன ஆயுதங் கள் வழங்குவதற்கும் இந்த அரசு அவசியமான அளவு நடவடிக்கை எடுத்துள்ளது. தகுதியான பணியாளர்களை தேர்வு செய்ய தமிழ்நாடு யூனிபார்ம்டு சர்வீஸஸ் ரெக்ருட்மெண்ட் போர்டு,— தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணை வாரியம் 29—11—1991-ல் வெளியான உள்துறை அரசாணை எண் 1806-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. கடற்கரைப் பகுதிகளில் ரோந்துப் பணிபுரியும் காவலர்களுக்கு ஏ. கே. 47 ரக துப்பாக்கி கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தொலைபேசி மற்றும் வயர் லெஸ் வசதிகளை, படிப்படியாக எல்லா காவல் நிலையங்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கையும், புதிய காவல் நிலையக் கட்டிடங் கள் கட்டுவதற்கும், பழுதடைந்த கட்டிடங்களைச் சீர் செய் வதற்கும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்துக்கும் மேலாக, காவலர்களின் குடியிருப்பு வசதிகளைப் பெருக்க, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் (Tamil Nadu Police Housing Corperation) மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது என்கிற செய்திகளெல்லாம், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

பிற்பகல் 12-20

மாண்புமிகு உறுப்பினர் திரு. தே. குமாரதாஸ் உட்பட மூன்று உறுப்பினர்கள், காவலர் குடியிருப்பில் குடியிருக்கும் காவலர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் 20 யூனிட்டுக்கு

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 19

மேல் வரும் மின்சாரத்திற்கான கட்டணத்தை, மாதாமாதம்
அவர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்ய வேண்டும் என வெட்டுத்
தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். தற்போது நடைமுறை
யில் 2 மாதத்திற்கு ஒரு முறை, மின் கட்டணப் பட்டியல் பெறப்
பட்டவுடன், அதற்குரிய கட்டணத்தை மின் வாரியத்திற்கு
செலுத்திய பின்பு, 20 யூனிட்டுக்கு அதிகமான மிகை மின் கட்ட
ணத்தை பணியாளர்களிடமிருந்து, அவரது ஊதியத்தில் பிடித்
தம் செய்யப்படுவதால், மாதாமாதம் பிடிக்க வேண்டுமென்ற
அவசியம் எழாது என்பதை உறுப்பினர்களின் கனிவான கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சுந்தரதாஸ், காவல்
ஆணைக் குழுவின் (Police Commissioner) அறிக்கையை, பொது
மக்கள் குழு முன் வைக்க வேண்டுமென்ற வெட்டுத் தீர்மானம்
கொண்டு வந்துள்ளார். காவல் ஆணைக் குழுவின் அறிக்கை,
அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. அது பின்னர் சட்டப்
பேரவை உறுப்பினர்களின் பார்வைக்கும் வைக்கப்படும். ஆத
லால் பொதுமக்கள் குழுவின் முன்பு வைக்க வேண்டிய அவசிய
மில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்
பேசும்பொழுது, சேலத்திற்கு அருகே விடுதலைப் புலிகள் பயன்
படுத்துகிற மிகவும் சக்தி வாய்ந்த ஒரு வயர்லெஸ் செட் கண்டு
பிடிக்கப்பட்டதாகவும், ''என்னைக் கொலை செய்வதற்கு தற்
கொலை படையினர் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறார்கள் என்பன
போன்ற தவறான செய்திகளை சிலர் திட்டமிட்டு பரப்பி வரு
கின்றனர்'' என்றும் குறிப்பிட்டார். இது குறித்து உண்மை
நிலையினை இந்த அவைக்கு எடுத்துக் கூற நான் விரும்புகிறேன்.

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் அமைந்துள்ள காவல் துறையின்
''வயர்லெஸ் ரிபீட்டர்'' நிலையத்தில் (வயர்லெஸ்— ரிபீட்டர்
ஸ்டேஷன்)-ல், ஏதோ ஒரு சக்தி வாய்ந்த வயர்லெஸ் கருவி
இயக்கப்படுவதால், தொலைத் தொடர்பில் குறுக்கீடுகள் ஏற்படு
வது தெரிய வந்தது. அது எங்கே இருக்கிறது, எவ்வாறு இயக்
கப்படுகிறது என்று காவல் துறையினர் சேலம் மாவட்டப் பகுதி
யில் தேடி வருகின்றனர். அதை இன்னும் கண்டுபிடிக்க
வில்லை.

விடுதலைப் புலியினரின் தற்கொலைப் படையினர் தமிழகத்
திற்கு வந்துள்ளனர் என்ற செய்தியும் உண்மையானது. இந்தச்
செய்தி நமது இராணுவத்தினராலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.
இந்த தற்கொலைப் படையில் எத்தனை விடுதலைப் புலிகள்
வந்தனர் என்ற விவரம் தெரியவில்லை. ஆனால் அவர்கள்
என்னைக் கொலை செய்வதற்காகவும், ராஜீவ் காந்தி கொலை



1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

வழக்கை விசாரித்து வரும் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி.
...மைந்துள்ள ''மல்லிகை'' கட்டிடத்தைத் தகர்ப்பதற்காகவும்
...னுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்பதும், அவர்கள் தமிழகத்திற்
...ள் நுழைந்து விட்டனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

மேலும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு
...றைச் சாலையில் உள்ள கைதிகளை மீட்பதற்கு அல்லது
...காலை செய்வதற்கு, அவர்கள் திட்டம் தீட்டியுள்ளதாகவும்
...காவல் துறையினருக்கு தகவல் தெரிய வந்துள்ளது. எது எப்படி
...இருந்த போதிலும், இதற்கெல்லாம் கவலைப்படுகிற நபர் நான்
...இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும்
...ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்
...சர் அவர்கள் இத்தகைய அச்சுறுத்தலை எல்லாம் மீறித்தான்
...செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மை.
இருந்தாலும் அத்தகைய அச்சுறுத்தலை அவர்கள் துணிச்சலோடு
சந்திப்பேன் என்று சொல்வது, அவர்களுக்கு இருக்கிற மன
தைரியம், தன்னம்பிக்கையில் என்றாலும் இந்த நாடு அந்த
அளவிற்கு ஒரு நிலைமை உருவாவதைப் பார்த்துக் கொண்டு
இராது என்பதை இந்த அவையின் சார்பிலே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி.)

எனவே முதலமைச்சர் அவர்களுடைய உயிருக்கு உலை வைக்க
வேண்டும் என்கிற ஒரு தீய சக்தி இங்கே ஊடுருவி இருக்கிறது
என்று சொன்னதால், மத்திய அரசும் மாநிலக் காவல் துறையும்
தங்களுடைய முழு சக்தியையும் பயன்படுத்தி முதலமைச்சரைப்
பாதுகாக்கின்ற கடமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை
யும் அவையின் சார்பிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
காரணம் முதலமைச்சர் அவர்கள் தனி ஒருவரல்ல என்பதை இந்த
நாடு ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் பிரதிநிதியாக
இருக்கும் அவர் இத்தகைய ஊடுருவல் தீய சக்திகளை எதிர்த்து
வரும் துணிச்சலைப் பெற்றிருந்தாலும். முதலமைச்சர் அவர்
களைப் பாதுகாக்கின்ற முழு முயற்சியையும் முழுக் கடமையை
யும் மாநிலக் காவல் துறையும் மத்திய அரசும் ஏற்றுக் கொள்ள
வேண்டும் என்று இந்த அவையின் சார்பிலேயும் அனைத்து
உறுப்பினர்களின் சார்பிலேயும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி),

பிற்பகல் 12-25

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தெரிவித்த கருத்துக்
களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருப்பினும் தாங்கள்

இப்போது கோடிட்டுக் காட்டியது ஒரு உண்மையை நமக்கு மீண்டும் தெளிவுபடுத்துகிறது. எல்.டி.டி.ஈ. இயக்கத்தை மத்திய அரசாங்கம் தடை செய்ய வேண்டும்; இது போன்ற குற்றங்களுக்குத் துணிகிற ஒரு இயக்கத்தை இங்கே சுதந்திரமாக செயல்பட மத்திய அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது (மேசை யைத் தட்டும் ஒலி). என் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் அதைப் பற்றி நான் கவலைப்படுவது இல்லை என்பது உங்களுக்கும் தெரியும். எனது எதிரிகளுக்கும் தெரியும். தமிழக மக்களின் நல்லெண்ணமும், பாசமும் என்னுடன் என்றென்றும் இருப்ப தால், அவர்களுக்காகப் பணியாற்றுகின்ற பெருமையைத், நான் நான் என் வாழ்நாளின் பேறாகக் கருதுவேனே தவிர என் உயிரை அல்ல (மேசையைத் தட்டும் ஒலி). எனவே என் உயிரென மதிக்கும் தமிழக மக்களின் நல் வாழ்விற்காக நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

எங்கே எந்த இடத்தில் எந்த ஒரு அசம்பாவிதம் நடந்தாலும் பொது மக்களும், அரசியல்வாதிகளும், காவல் துறையைத்தான் வழக்கமாகக் குறை கூறுகின்றனர். எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமென்றால் கடந்த பிப்ரவரி 18 ஆம் நாள், கும்ப கோணம் மகாமகம் திருவிழாவில் 12,070 காவலர்கள் தொடர்ந்து பணியாற்றி சுமார் 50 இலட்சம் பக்தர்களின் வழிபாட்டிற்கு உதவுகிற வகையில் சிறப்பாகக் காவல் பணி புரிந்தனர். ஆனால் அவர்களது பாராட்டத்தக்க பணிமறைக்கப்பட்டு. பத்திரிக்கைகள் மூலம் சிலர் காவல் துறையினரை கடுமையாகச் சாடுகிற நிலைமை உருவாகிவிட்டது என்னையும் சிலர் விடவில்லை. சமயத் தலைவர்களும், அரசியல்வாதிகளும், நான் அங்கு சென்ற தால் தான் காவல் துறையின் கவனம் போதுமான அளவு மக்கள்பக்கம் செலுத்த முடியாமல் போய்விட்டது என்ற தவறான கருத்தை இன்று வரை பரப்ப முயற்சித்து வருகிறார்கள். மகா மகம் விபத்து பற்றி, நடந்த உண்மைகள் பற்றி. தேவையான அனைத்துக் கருத்துக்களும் மக்களுக்கு நிரம்பவே சொல்லப்பட்டு விட்டன. ஆனால் தனிப்பட்ட முறையிலும். அரசியல் ரீதியாகவும் என்னை விரும்பாத ஒரு சிலரே இதில் தவறான கருத்துக்களை காவல் துறையின் மீது தொடர்ந்து தெரிவித்து வருகிறார்கள். சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக காவல் துறை மீது பழி போடுகிறவர்களுக்கு எந்தப் பதிலும் நிறைவைத் தந்துவிட முடியாது.

காவல் துறையின் பணி மேலும் சிறக்க வேண்டுமென்றால் பொது மக்களும், அரசியல்வாதிகளும் அவர்களுக்கு ஊக்கமூட்ட வேண்டிய காலத்தில் ஊக்கமூட்டி உறுதுணையாக இருக்க வேண் டும். குறிப்பாக அவர்கள் புரியும் பெருமை மிகு சாதனைகளை யும் செயல்பாடுகளையும் மனமாரப் பாராட்ட வேண்டும். அவர் களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களது ஆற்றல் வெளிப்படும். மக்களுக்காக அவர்கள் ஆற்



றும் பணிகளில் ஆர்வம் ஏற்படும். காவல் துறையினருக்கு மனத் தெம்பு ஊட்டவேண்டும். அவர்கள் ''டிமாரலைஸ்' ஆகியிருக்கிறார்கள் என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் இன்னும் சிலரும் கருத்துத் தெரிவித்தார்கள். காவல் துறையினரை சதா சர்வகாலமும் குறை கூறிக் கொண்டே இருந்தால்- அவர்கள் எதைச் செய்தாலும் தவறு என்று கடுமையாக விமர் சித்துக் கொண்டே இருந்தால் அவர்களுக்கு மனச் சோர்வு ஏற் படாமல் வேறு என்ன நடக்கும்? கடமையாற்றுவதில் எப்படி ஆர்வம் இருக்கும்? காவல் துறையினரை மனச்சோர்வு அடையச் செய்வதில் பத்திரிகைகளுக்கும் பெரும் பங்கு உண்டு. அரசியல் வாதிகளும். சரி, பத்திரிகைகளும் சரி நாட்டு மக்களின் நன்மை யைக் கருதி பொறுப்புடன் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்பொழுது, பரங்கிமலை புறநகர் காவல் நிலையத்தில் மத்திய இரயில்வே காவலர் அடையாளம் தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கூறினார்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது யாருடைய ஆட்சியில் அந்தச் சம்பவம் நடந்தது என்று தெரிவித்துப் பேசியிருந்தால் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால் 3—5—1991 அன்று அதாவது நாங்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறுவதற்கு முன்பு, ஜனாதிபதி ஆட்சியில் நடந்த நிகழ்ச்சியைக் குறித்து குறை கூறி யிருக்கிறார். 3—5—1991 அன்று காலை ஒன்பதே முக்கால் மணிக்கு மத்திய இரயில்வே காவலர் திரு. ஹுமாயுன் கபீர் பரங்கிமலை புறநகர் காவல் நிலையத்தில் பயணச் சீட்டு இல் லாத ஆண் பயணி ஒருவரை விசாரணைக்கு, பயணச் சீட்டு சேகரிப்பவர் அறைக்குக் கொண்டுவரும்போது அந்த இளைஞர் 9 எம். எம். கைத்துப்பாக்கியால் மேற்படி காவலரை சுட்டுவிட்டு ஓடிவிட்டார். அந்தக் காவலர் அன்று மாலையே மரணம் அடைந்துவிட்டார். தற்போது இவ்வழக்கு க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திரு. பீட்டர் அல்போன்ஸ் இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கூறுகின்றபோது ஏதோ இந்த அரசு ஆட்சிக் காலத்தில் அது நிகழ்ந்துவிட்டதைப் போல இருந்தது. எனக்கே தெரியாமல் இப்படி ஒரு சம்பவம் எப்போது நடந்தது என்று நானும் வியப்பு அடைந்தேன். விசாரித்தபோது இது ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் நடந்தது என்று தெரிய வந்தது. இத்தகைய நிகழ்ச்சிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்றபோது யாருடைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது என்று தெரிவிப்பதுதான் முறையாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இன்று இருக்கையில் இல்லை. ஆனால் அவர் எழுப்பிய பல கருத்துக்களுக்கு நான் பதிலுடன் வந்திருக்கிறேன். எனவே, இந்த பதில்களைக் கூறுவது எனது கடமை என்பதால் நான் இங்கே தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பெரும் குற்றங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை குறைவாகவும், சில குற்றங்களில் கண்டு பிடிக்கப்பட்டவை அதிகமாகவும் இருப்பதாக குறிப்பிட்டார்கள். கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்ட விபரங்கள் பற்றி தெளிவுபடுத்த விரும்புகிறேன். கண்டு பிடிக்கப்பட்ட குற்றங்கள் என்று குறிப்பிட்டிருப்பது வழக்குகள் முடிக்கப்பட்டு குற்றவாளி என்று தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மட்டுமே. இதில் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள வழக்குகள் சேர்க்கப்படவில்லை. எனவே, காவல் துறையினர் குற்றவாளிகளைக் கண்டுபிடித்த வழக்குகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தபோதிலும் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட, தண்டனை வழங்கப்பட்ட விவரங்களை மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டவை என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு வழக்குகளை நீதிமன்றங்களில் விரைவாக முடிவு செய்ய இயலும். ஆனால் பெரும் குற்றங்களுக்கான வழக்குகளை முடிவு செய்ய நீண்ட காலம் ஆகும் என்பது நீங்கள் அறிந்த ஒன்று தான். மதுவிலக்கை ஏன தமிழகத்தில் முழுமையாக அமல் படுத்தக் கூடாது என்றும் இங்கே வினா எழுப்பப்பட்டது. ஏழை எளிய தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க மலிவு விலை மதுவை தமிழகத்தில் ஒழித்து, அதனால் ஏற்பட்ட ரூபாய் 322 கோடி வருவாய் இழப்பு முழுமையும் இந்த அரசு தானே ஏற்றிருப்பதை அனைவரும் அறிவீர்கள். இந்த சீரிய முடிவிற்கு ஏதேனும் உதவி மத்திய அரசிடமிருந்து கிடைத்ததா என்றால் ஒன்றும் இல்லை. திரும்பத் திரும்ப நாங்கள் மத்திய அரசை எங்களது இந்த வருவாய் இழப்பை சிறிதேனும் ஈடுகட்ட வேண்டும் என்று கேட்டு வந்தும் இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை. இந்நிலையில் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுபானங்களையும் ஒழித்துவிட்டு பூரண மதுவிலக்கை அமல் படுத்த வேண்டும் என்ற எண்ணம் எங்கள் அரசுக்கு முழுமையாக இருந்தபோதிலும் அதனை செயல்படுத்த நிதிநிலை இடம் தரவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். பூரண மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஈடு செய்ய முன் வந்தால், தமிழகத்தில் உடனடியாக பூரண மதுவிலக்கை அமல்படுத்த எங்கள் அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கோரிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகக் காவல் துறையின் திறமை இந்தியாவெங்கும் புகழ் பரப்பும் வண்ணம் ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். டெல்லியில் உள்ள திஹார் ஜெயிலில் பன்னாட்டு குற்றவாளிகளும், கடும் குற்றவாளிகளும் உள்ளது யாவருக்கும் தெரிந்தது. இந்த சிறைச்சாலையில் வெளிப்புறச் சுவரிலிருந்து காவல் காக்கும் தமிழக சிறப்புக் காவல் படையைச் சார்ந்த



காவலர்கள் ஆரோக்கியராஜ், இயேசுபின் என்ற இருவர்
அன்றாட ரோந்துப் பணியை செய்து வரும் போது இவ்வருடம்
ஜனவரி 28-ந் தேதி சிறைச்சாலைக்கு வெளியே ஒரு தோண்டப்
பட்ட பள்ளத்தைக் கண்டு புலனாய்வு செய்தபோது ஒரு டன்னல்
சுரங்கப் பாதை அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்தார்கள்.
இதன் வழியே சிறையில் அடைக்கப்பட்டிருந்த குற்றவாளிகள்
தப்பிக்க செய்த முயற்சியும் தெரிந்து முறியடிக்கப்பட்டது.
அண்மையில் நான் டெல்லி சென்றிருந்தபோது அவர்களின்
பணித் திறமையைக் கேட்டு மகிழ்ந்தேன், பாராட்டினேன்.
இப்படி எங்கு பணி புரிந்தாலும் தம் திறமையை வெளிப்படுத்தும்
தமிழகக் காவல் துறையினர் மேன்மேலும் சிறக்க வேண்டும்
என்பதே என் அவா. (மேசையைத் தட்டும் ஒலி).

சென்ற வரவு–செலவுக் கூட்டத்தொடரில், காவல் துறை
பினருக்கு பல சலுகைகளையும் நலத் திட்டங்களையும் ஒருங்
கிணைத்து, 14 அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவித்
திருந்தேன். அவை எல்லாம் ஆணையாக பிறப்பிக்கப்பட்டு,
அவை உரியவர்களுக்குச் சேரவில்லை என்ற குறைபாட்டை
திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே சொன்னார்கள்.
நான் அறிவித்த 14 இனங்களிலும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு
விட்டன என்ற செய்தியை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 12-35

அடுத்து ஒரு குறையைச் சுட்டிக் காட்டினார். காவலர் குடி
யிருப்புகளில் தனித்தனியாக மீட்டர் வைக்காது, மின் கட்டணம்
ரூ. 4 ஆயிரம் வரை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்
னார். தமிழகத்திலுள்ள 4,344 குடியிருப்புகளில், ஆய்வாளர்
கள், உதவி ஆணையாளர்கள் ஆகியோரின் குடியிருப்புகளுக்கு,
தனித்தனி மின் அளவைகள் உள்ளன. தலைமை காவலர் மற்றும்
காவலர்களுக்கான குடியிருப்புகள் 3,876-ல், 1,476 குடியிருப்பு
களுக்கு மட்டும் தனி மின் அளவைகள் பொருத்தப்பட்டுள்ளன.
அந்த மாற்றி 2,431 குடியிருப்புகளில் பயன்படுத்தப்படும்
மின்சாரம் புது மின் அளவைகள் மூலம் கணக்கிடப்பட்டு,
ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் 20 யூனிட் சலுகைக்கு
மேலும் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு, மொத்த உப
யோகிப்போர்களில் சமமாகப் பங்கிடப்பட்டு, கட்டணம் வசூ
லிக்கப்படுகிறது.

1984 முதல் 1991-ஆம் ஆண்டு வரை, சென்னை நகர
காவலர்களிடம் இருந்து, மின் கட்டணம் வசூலிக்காமல் விடப்
பட்டதால், 7 ஆண்டுகளுக்கு நிலுவையில் உள்ள தொகையை,
மாநில கணக்காயர் தணிக்கையில் சுட்டிக் காட்டியதன் பேரில்,
வசூலிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது, மாதம்
ஒன்றுக்கு சுமார் ரூபாய் 200 சுலபத்தவணையில் பிடித்தம் செய்யப்
பட்டு வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர்

அல்போன்ஸ் கூறியதைப்போல, ஒரு வருடத்திற்கு காவலரிடம் 4,000 ரூபாய் வசூலிக்கப்படுகிறது என்பது சரியல்ல. 7 வருட பழைய பாக்கியைத் தவணை முறையில் வசூலிக்க வேண்டிய நிலைதான் இப்போது ஏற்பட்டுள்ளது.

காவல் பணியாளர்களுக்கு, சனி, ஞாயிறு விடுமுறை கிடைப் பது இல்லை. எனவே, அவர்களுடைய தற்செயல் விடுப்பை, கேசுவல் லீவை உயர்த்தி, 20 நாட்கள் ஆக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். காவல்துறையில் போதுமான ஆட்கள் தற்சமயம் இல்லை. சுமார் 4,000 பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு நியமன வாரியம் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. காலியாக உள்ள இந்த காவல் பணி யிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டுவிட்டால், இந்தப் பிரச்சினை பெருமளவு தீரும் என்று கருதுகிறேன்.

தென்னாற்காடு மாவட்டம், குள்ளஞ்சாவடி காவல் நிலை யத்தில் 16—3—1992 அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள், நியாயம் கேட்கப்போன பொதுமக்கள் மீது காவல் துறையினர் அநியாய மாக துப்பாக்கிச் சூடு நடத்தியதாக குற்றம் சாட்டினார். உண்மையில் நடந்தது என்னவென்றால், 15—3—1992 அன்று குள்ளஞ்சாவடி காவல் துறையினர், சமட்டிக்குப்பம் என்ற கிராமத்தில் இருந்து 9 நபர்களை கள்ளச் சாராயம் காய்ச்சிய குற்றத்திற்காக கைது செய்து கொண்டு வந்தனர். அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. விருப்பலிங்கம் என்பவர், 100 அடி யாட்களுடன் பயங்கர ஆயுதங்களைக் கையில் ஏந்தி, குள்ளஞ் சாவடி காவல் நிலையத்திற்கு வந்து, கைது செய்யப்பட்ட அவரது மைத்துனரை விடுவிக்க வேண்டும் என்றும், இல்லையேல் காவல் நிலையத்தைத் தாக்கி விடுவதாகவும் மிரட்டினார். திரு. விருப்பலிங்கம் ஏற்கனவே ஒரு கொலை வழக்கில் குற்றவாளி என்று, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி பெயிலில் இருப்பவர். காவல் நிலையத்தில் இருந்த அதிகாரிகள் எவ்வளவு எடுத்துக் கூறியும், கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டு, துணை ஆய்வாளரையும், காவலர்களையும் கடுமையாகத்தாக்கி காயப்படுத்தினார்கள். கூட்டத்தை கலைந்து செல்லுமாறு எச்சரித்தும் பயனற்றுப் போகவே, வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தும் கூட்டம் கலையாத சூழ்நிலையில், தற்காப்பிற்காக இரண்டு ரவுண்டு சுடப்பட்டது. இதில் விருப்பலிங்கம் தொடையில் காயம் அடைந்து, கீழே விழுந்த போது தலையில் அடிபட்டது. அவரை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமடைந்தார். மற் றொருவரான செல்வராஜ், கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவர் ஆபத்தான நிலை யில் இல்லை. இறந்துபோன விருப்பலிங்கம், ஆயுள் தண்டனை பெற்றவர் மட்டுமல்ல, இரண்டு கொலை முயற்சி வழக்குகளும் அவர்மீது நிலுவையில் இருக்கின்றன.



இதே வழக்கைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் நேற்றைய முன்தினம் சுட்டிக் காட்டினார். ஆனால் அவர் "காவல் துறையினருக்குப் பாதுகாப்பு இல்லையே; இதுபோன்ற காவல் நிலையத்தை தாக்கும் போது மக்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது?" என்று தான் குறிப் பிட்டார். நியாயமாகப் பேசினார்.

போலீஸ் துப்பாக்கிச்சூடு என்றவுடனேயே, காவல்துறை யினர் தவறு செய்து விட்டார்கள் என்ற தவறான கருத்து பொதுவாக பரப்பப்பட்டு வருகின்றது. அந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணமோ, அப்போது இருந்த சூழ் நிலையோ வெளிப்படுத்தப்படாமல், ஒருதலைப்பட்சமாகவே குறைகள் கூறப்படுகின்றன.

இவ்வாறு நடைபெறும் துயரச் சம்பவம் ஒவ்வொன்றுக்கும் காவல் துறையினரைக் குறை கூறி பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும், சமூக விரோத சக்திகளும் ஒரு பொய்யான மாயையை உருவாக்கி வருகின்றனர். நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சுமார் 6 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழகத்தில் 68,987 காவல்துறையினர்தான் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டியுள்ளது. குற்றங்களைக் கட்டுப்படுத்தி கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. மற்றும் பல்வேறு சட்ட பூர்வமான நடவடிக்கைகளைத் தொடர வேண்டியுள்ளது. சராசரியாக தமிழகத்தில் ஒவ்வொரு ஆயிரம் மக்களுக்கும் ஒரு காவலர் என்ற நிலைதான் தற்போது உள்ளது. இந்தச் சக்தியை வைத்துக்கொண்டு தமிழகத்தில் இன்றையதினம் காவல்துறையினர் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தியுள்ளனர் என்றால் நிச்சயமாக அவர்கள் பாராட்டுக்குரியவர்கள் மட்டு மன்றி போற்றுதலுக்கும் உரியவர்கள். ஆவார்கள் (மேசை யைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12—40

மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள் காவல்துறையில் உள்ள காலி இடங்களை விரைவாக நிரப்பும்படிக் கேட்டுக்கொண்டுள்ளார். இது விரைவில் நிரப்பப்படும்.

அடுத்து, தம் தொகுதியில் கள்ளச் சாராயம் நிரம்பி உள்ளதாகவும், குறிப்பாக, சினிமாக் கொட்டகைகளில் பாக்கெட் சாராயம் விற்கப்படுவதாகவும் கூறினார். திரு. போளூர் வரதன் சுட்டிக்காட்டிய குறைபாடுகளைப் பரிசீலித்ததில் இவரது தொகுதியில் காவல் துறையினர் நிறைய சாராய வழக்குகள் பதிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஸ்ரீபெரும்புதூரில் உள்ள சுமதி சினிமா தியேட்டரையொட்டியுள்ள பகுதியில் சாராயம் விற்பனை இல்லையென சொல்லப்படுகிறது.

இருப்பினும் பாப்பம்மாள் என்பவர் சுமதி தியேட்டரிலிருந்து சுமார் 1—1/2—கிலோ மீட்டர் தூரத்தில் சாராயம் விற்பனை செய்தார்; இவரை இரு முறை கைது செய்து உள்ளார்கள்.

அடுத்துப் பேசிய டாக்டர் குமாரதாஸ் அவர்கள் குற்றங்களின் கண்டுபிடிப்பு சதவீதம் ஏன் குறைந்து உள்ளது என கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். தமது விவாத உரையின்போது காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் தாமே பயங்கர ஆயுதங்களுடன் சென்று கொள்ளை அடித்து இருக்கிறார் என்று சொன்ன பிறகும் நடவடிக்கை இல்லை என்று ஒரு புகாரை இங்கே கூறினார். சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக் காட்டிய துணைக் கண்காணிப்பாளர் திரு. பெருமாள் என்பவர் தனிப்பட்ட முறையில் சம்பந்தப்பட்டிருக்கிற வழக்கே தவிர அவருக்கும் அவரது அலுவலகப் பணிக்கும் சம்பந்தம் இல்லை என்பது பல உறுப்பினர்களாலேயே இங்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் துணைக் கண்காணிப் பாளர் இல்லவே இல்லை. இருப்பினும் புகார் கொடுக்கப்பட்ட காரணத்தால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை, தனிப்பட்ட முறையில் நிலம் விற்றது பற்றிய தாகும்.

மேலும் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசும்போது காவல் நிலையங்களில் அடைத்து வைக்கப்பட்ட விசாரணைக் கைதிகள் நிறையப் பேர்கள் இறக்கிறார்கள் என்றும் குறிப்பாக தமது தொகுதியில் ஜோசப் என்பவர் இறந்து விட்டதாகவும், அதன்மீது விசாரணை என்ன ஆனது என்றும் கேட்டார். 1989–90-இல் 12 பேர் இதுபோன்ற இறப்புக்கு ஆளாகி யுள்ளார்கள் என்றும் அவர்களில் அஇஅதிமுக அண்ணா தி.மு. கழகத்தைச் சேர்ந்த இரண்டு பேரும் மாண்டு போயிருக் கிறார்கள், 1990—91—இல் 9 பேர் என்றும், 1991—92—இல் 7 பேர் என்றும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இதிலிருந்து அடைத்து வைக்கப்பட்ட விசாரணைக் கைதிகளின் இறப்பு எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்பது வெளிப் படை. எந்த ஒரு நபரும் அடைத்துவைக்கப்பட்டு, விசாரணை யில் இருக்கும்போது இறந்தால் விதிமுறைகளின்படி கோட்ட ஆட்சியர் விசாரணை நடத்தி அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள் கிறேன். ஜோசப் அவர்கள் இறந்ததைப் பற்றி கோட்ட ஆட்சியர் விசாரணை நடத்தி இருக்கிறார். அந்த அறிக்கை யின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். திரு. குமாரதாஸ் அவர்கள் கோவை மாவட்டத்தில், மாவட்டக் கருவூல கழிப்பறை யில் இரண்டு அரசு ஊழியர்கள் கொலை செய்யப்பட்டது இன்னும் கண்டுபிடிக்கப்படாமலேயே உள்ளது என்று அங்கலாய்த்துக் கொண்டார். 23—9—1991 அன்று மகா லட்சுமி, கோமதி ஆகிய இருவரும் கோவை மாவட்டக் கருவூல





கழிப்பறையில் கொலையுண்டு கிடந்த சம்பவத்தின் வழக்கு பதிவு செய்து, இதற்கான தனி படை அமைக்கப்பட்டு வழக்கு தீவிர புலன் விசாரணையில் உள்ளது.

அடுத்துப் பேசிய திரு. செ.கு. தமிழரசன் அவர்கள், காவல் துறையில் உயர் பதவிகளை உருவாக்குவதில் கோஷ்டிப் பூசல் உருவாகுவதாகக் கூறினார். காவல்துறையில் தேவை யான பதவிகள், தேவையான நேரங்களில் மட்டும் உருவாக்கப் படும் என்பதை நான் சொல்லிக்கொள்கின்றேன். அடுத்து, காக்கிச் சட்டையை காவல்துறையினர் மட்டுமே அணிய வேண்டுமென்று கேட்டார். இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று நாம் யோசிக்க வேண்டியதுதான். தொடர்ந்து பேசிய அவர், சார்பு ஆய்வாளர்களை நியமிக்கும்போது, ஆயுதப் படையிலிருந்து சட்டம் ஒழுங்குப் பிரிவுக்கு மாறுதல் செய்யும் வசதி வேண்டும் என்று சொன்னார். இதனுடைய சாத்தியக் கூறுகள் பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். அவரது பேச்சில் அழுத்திச் சொன்னது, நடக்கும் துப்பாக்கிச் சூட்டில் எல்லாம், பாதிக்கப்படுபவர்கள் அதிகமாக தாழ்த்தப்பட்டவர்களே என்று சொன்னார். இந்த அரசைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பச்சாதாபமும் பரிவும் அதிக அளவில் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

காவல் துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் எப்போதும் உபயோகிக்கப்படுவதில்லை, மாறாக, தவிர்க்கமுடியாத சந்தர்ப் பங்களில் நிலைமை கட்டுக்கடங்காது போகும்போது. துப்பாக்கி பிரயோகம் தவிர்க்க முடியாததாக ஆகிப் போகிறது, அந்தச் சமயத்தில் பாதிக்கப்படுவர்கள் தாழ்த்தப்பட்டவர்களா, மற்ற வர்களா என்று பார்க்க முடிவது இல்லை, இருப்பினும் திரு. தமிழரசன் அவர்கள் சுட்டிக் காட்டிய கருத்து என் மனதிலேயே பதிந்து உள்ளது என்பதை மட்டும் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—45

கள்ளச் சாராயம் வெகுவாக ஒழிக்கப்பட்டுள்ளது என்று சொல்லும் அவர், பதனீர் இறக்கும் பேரில் கள் இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினார், இதைக் காவல் துறையினருக்கு அறிவுறுத்தி, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் போடப்படுகின்ற வழக்குகள், திறமையாக நடத்தப்படுவது இல்லை, அதற்குரிய

அழுத்தம் கொடுக்கப்படுவது இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். அது சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இனக் கொடுமைகளைத் தடுக்க வேண்டும் அதற்கு, மேல் மட்ட ஆலோசனைக் குழு அமைத்தால் நல்லது என்று சொன்னார். மாவட்ட ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எல்லா இனங்களையும் சேர்த்து, அமைதிக் குழு ஒன்று நன்றாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் இது தேவை இருக்காது என்று கருதுகிறேன்.

அடுத்து, சங்கரன்கோவிலை அடுத்துள்ள திருவேங்கடத்தில் நடந்த கொலை வழக்கு பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆதிதிராவிடர்கள் மற்றும் நாயக்கர்கள் கோவில் கட்டும் பணியில், முன் விரோதம் காரணமாக, 14—3—1992 அன்று இரவு திரைப்படம் பார்த்துவிட்டு வந்த 6 ஆதிதிராவிட நபர்களை; திருவேங்கடத்தில் சுமார் 20 நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வழிமறித்து, ஆயுதங்களால் தாக்கி, ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 3 நபர்களை கொலை செய்து விட்டதாக வழக்கு பதிவாகி, இதைத் தீவிரமாக விசாரணை செய்வதற்காக தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 3 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் வழக்கு விசாரிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்

அடுத்துப் பேசிய திரு. சிவசுப்பிரமணியன். இலங்கை விடுதலைப் புலிகளுக்குத் துணை போகும் யாராக இருந்தாலும்— திரு. பண்ருட்டி இராமச்சந்திரன், திரு. திருநாவுக்கரசு போன்றவர்கள்—அவர்களைத் 'தடா' கட்டத்தின் கீழ் தக்க நடவடிக்கை எடுத்துக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டிருக் கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

இது போன்ற கருத்தைப் பல உறுப்பினர்கள் வலியுறுத்தி இருக்கின்றார்கள், சட்டப்படி, நிலைமைக்கு ஏற்றபடி. இதில் என்ன செய்ய முடியும் என்பதைச் சிந்திக்கலாம், (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ, எஸ் பொன்னம்மாள் அவர்கள் பேசும்பொழுது விபச்சாரத் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கும் பொழுது, விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்களைத்தான் குற்ற வாளிகளாகக் கைது செய்து வழக்கு தொடர்ந்து தண்டனை வழங்கப்படுகிறது; ஆனால் அத்தகைய குற்றங்களில் ஈடுபடும் ஆண்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்றும், இந்நிலை மாற வேண்டுமென்றும் குறிப்பிட்டார், ஆண்களும் தண்டிக்கப்பட வேண்டுமென்று கோரினார்கள்,



பெண்கள் தவறாக நடப்பது குறித்து Suppression Immoral Traffic Act, 1956 சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப் படுகிறது, இந்தச் சட்டத்தில் பொதுவாக இரண்டு பிரிவுகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன,

S.I.T, Act ல் 8 (பி) என்று ஒரு பிரிவு, இதன்படி தவறான வழியில் செல்லுகின்ற பெண்கள் தவறான வழிக்கு ஆண்களை அழைத்ததாக Soliciting செய்ததாகப் போடப் படும் வழக்கு,

இன்னொரு பிரிவு. பிரிவு 3—எஸ்.ஐ.டி. ஆக்ட். இதன்படி தவறான வழியில் செல்லுகின்ற பெண்களை இல்லங்களில் வைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவர்கள் மீது போடப்படும் வழக்கு.

பிரிவு 8 (பி) எஸ்,ஐ,டி, ஆக்டின்படி பெண்களை மட்டும்தான் கைது செய்து நடவடிக்கை எடுக்க முடியும்,

பிரிவு 3—எஸ்,ஐ,டி, ஆக்டின்படி. இல்லங்களை வைத்து, நடத்துபவர்கள் ஆண்களாக—அதாவது விபச்சார விடுதிகள்—ஆண்களாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கலாம்,

பிரிவு 8 (பி) எஸ்,ஐ, டி, ஆக்டின்படி ஆண்கள் மீதும் நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு மாநில அளவில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும், அதற்கு மத்திய அரசின் ஒப்புதலையும் பெறுதல் வேண்டும்,

இதுவரை எந்த மாநிலத்திலும் இச்சட்டத்தின் பிரிவு 8 (பி) யின் கீழ் ஆண்களையும் தண்டிக்கச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை.

நம் மாநிலத்தில் இச்சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி ஒரு சட்டத் திருத்தத்தை நாம் கொண்டு வந்தோமே யானால், இந்தியாவிலேயே அப்படிச் செய்திருக்கிற முதல் மாநில மாக தமிழ்நாடு விளங்கும். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12|50.

மேலும் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் பெண் காவலர்களுக்கு தற்போதுள்ள சீருடையை மாற்றியமைக்க வேண்டு மென்று கேட்டார்கள். பெண் காவலர்களுக்கான சீருடையை, வேறு பொறுத்தமான டிசைனில், விரைவில் மாற்றியமைக்கப் படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 19

காவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் உணவுப்படியினை
ரூ. 8 லிருந்து ரூ. 15 ஆக உயர்த்த வேண்டுமென்று திருமதி
ஏ. எஸ். பொன்னம்மாள் கேட்டுக் கொண்டார்கள். இதுகுறித்து
ஆணை பிறப்பிக்கப்பட்டு, உணவுப்படி நாளொன்றுக்கு ரூ. 15
ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு உறுப்பினர்
திரு. கோ. பழனிசாமி அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையைப்
பற்றிக் குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டு கோவை மாவட்டம்
அவினாசி நகரில் கள்ளச் சாராயம் காய்ச்சும் ஒரு தொழிற்
சாலையை, காவல் துறையினர் 19—8—1991 அன்று திடீர்
சோதனை செய்தனர். அப்போது கள்ளச் சாராயம் காய்ச்சும்
தொழிற்சாலையைக் கண்டுபிடித்த காவல் துறை அதிகாரிகள்
அரசின் பழிவாங்கும் நடவடிக்கையாக மாற்றம் செய்யப்
பட்டார்கள் என்று திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள்.
அது பற்றி என்னுடைய விளக்கத்தை இங்கே கூற விரும்புகிறேன்.
அதாவது, 19—8—91 அன்று திடீர் சோதனை நடத்தப்பட்டது
இந்தச் சோதனையில் பல லட்சக் கணக்கான ரூபாய்
மதிப்புள்ள கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டது. இந்தத் திடீர்
சோதனைக்கு தலைமை வகித்துச் சென்ற கோவை புறநகர்
கண்காணிப்பு ஆய்வாளர் அவர்களும், அவருக்கு உதவியாகச்
சென்ற துணைக்கண்காணிப்பு ஆய்வாளர் அவர்களும், அவர்களது
தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட சில ஆவணங்களை அழித்து
விட்டதாக தெரிய வந்தது. குறிப்பாக, எந்தெந்த காவல்துறை
அதிகாரிகளுக்கு எவ்வளவு இலஞ்சம் கொடுக்கப்பட்டது என்று
எழுதி வைக்கப்பட்டிருந்த குறிப்பேட்டில், தங்கள் பெயர்களும்
இடம் பெற்றிருந்ததால், அவர்கள் அந்தக் குறிப்பேட்டையே
அழித்து விட்டார்கள் என்ற நம்பகமான தகவல்கள் கிடைத்
தன. அவர்களது இந்த முறைகேடான செயலை நடைமுறையில்
நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையில்தான்
இடைக்கால வேலை நீக்கம் செய்யப்பட வேண்டிய
அந்த இரு அலுவலர்களும், இந்த வழக்கின் விசாரணைக்கு மேலும்
குந்தகம் விளைவிக்க வாய்ப்பு கொடுக்கக் கூடாது என்ற அடிப்
படையில் அந்த இடத்தை விட்டு மாறுதல் செய்யப்பட்டனர்
என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். இதைப்பற்றி ஏற்கனவே
பத்திரிகைகளில், கடந்த ஆண்டே நான் பெரிய அளவிற்கு
விமர்சனத்திற்கு ஆளாக்கப்பட்டேன். கோவையில் இரண்டு காவல்
துறை அதிகாரிகள் இவ்வளவு அக்கறையோடு, கடமையுணர்ச்சி
யோடு சென்று கள்ளச் சாராயம் தயாரிக்கப்படுகிற ஒரு
தொழிற்சாலையைக் கண்டுபிடித்து அவர்கள் 'ரெய்டு' நடத்திய
பிறகு அவர்களைப் பாராட்டாமல் அவர்களுக்குப் பரிசு வழங்
காமல் அவர்கள் மாற்றம் செய்யப்பட்டார்கள்; இடமாற்றம்
செய்யப்பட்டார்கள் என்று என் மீது குறையாகக் கூறப்பட்டது.
இந்தத் தகவல்கள் எனக்கு அப்போதே தெரியும். ஆனால்,
இதையெல்லாம் வெளியிட்டால்,



1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

It will reflect badly on the police force,
என்பதற்காகத்தான் அப்போது நான் இதைச் சொல்லவில்லை.
ஆனால், நடந்த உண்மை இதுதான். இங்கே சில ஆவணங்கள்
சில டாக்குமென்ட்ஸ் கிடைத்தன. அந்தப் பேப்பர்களில், இவர்
களுக்கு மாதா மாதம் எவ்வளவு இலஞ்சம் கொடுக்கப்பட்டது
என்ற குறிப்புகள் எல்லாம் இருந்தன. அவற்றை இவர்கள்
தெரிந்தே, திட்டமிட்டே அழித்து விட்டார்கள். எனவே,
இவர்களை அப்போதே 'சஸ்பெண்ட்' செய்திருக்க வேண்டும்.
ஆனால் 'சஸ்பெண்ட்' செய்வதற்கான ஆதாரங்களையே —
'எவிடென்ஸ்' களையே இவர்கள் அழித்து விட்டார்கள். எனவே
தான், அதைச் செய்ய முடியாத நிலையில்தான், அவர்கள்
வேலை மாற்றம் செய்யப்பட்டனர். ஆனால் இவர்களுக்கு
நம்மை பிடிக்காத சில கட்சிகளின் — அரசியல் கட்சிகளின் —
ஆதரவு இருக்கிறது. எனவே, இவர்கள் அரசியல்வாதிகளைப்
போலவே செயல்படுகிறார்கள். இவர்கள் வெளியே சென்று
they plant stories in the press. தங்களுக்கு
வேண்டிய சில பத்திரிகை நிருபர்களைப் பிடித்து,
பத்திரிகையில் சில செய்திகளைப் போட வைக்கிறார்கள். வேறு
சில அரசியல்வாதிகளும், இதுபற்றியெல்லாம் பேச, சட்ட
மன்றத்தில் இத்தகைய கேள்வியை எழுப்புங்கள் என்று கேட்
கிறார்கள். இப்படியெல்லாம் அரசியல் ரீதியாக அவர்கள் செயல்
பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மீது தக்க தருணம்
வரும்போது, தக்க ஆதாரம் கிடைக்கின்றபோது, தகுந்த நட
வடிக்கை எடுக்கப்படும் என்பதைமட்டும் இந்த நேரத்திலே தெரி
வித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சில சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்
களாக இருந்தாலும், விமர்ச்சனங்களை எடுத்துரைத்தாலும்,
ஆக்கப்பூர்வமான வகையில் அவர்களது விமர்சனங்கள், அரசுக்குப்
பயன்பட வேண்டும்; நிர்வாகத்தில் குறைபாடுகள் இருப்பின்
அவற்றைச் சீர்செய்து, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி வேண்
டும் என்ற நல்லெண்ணத்துடன் கூறுபவையாகும். அந்தவகை-
யில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. சிங்காரம் ஆகியோரும், அவர்
களைப் போன்று இன்னும் சிலரும் பேசுகிறபோது, அரசின் நிர்
வாகத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை.
பாராட்ட வேண்டியவற்றைப் பாராட்டுகிறார்கள். ஆனால், அதே
சமயம் அவர்கள் அரசை விமர்சிக்கவும் பின்வாங்குவதில்லை.

ஆனால் எப்பொழுதுமே ஆக்கப்பூர்வமானயோசனை
களைத் தான் கூறுகிறார்கள். அவர்களுடையஅ டிப்படை
நோக்கமே தங்களது விமர்சனங்களினால் நிர்வாகத்திலுள்ள
தவறுகள் திருத்தப்பட வேண்டும் அதனால் மக்களுக்கு நன்மை
பயக்க வேண்டும் என்பது தான்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 19

(பிற்பகல் 12-55).

ஆனால் ஒருசில உறுப்பினர்கள் பேசுகிறபோது ஆளுங்கட்சிக்கு எரிச்சலை மூட்ட வேண்டும், ஆட்சியில் உள்ளவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டும்; அவர்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்த வேண்டும்; முடிந்தவரை சட்டப் பேரவைக்குள் அமளி, துமளியை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துடன் தான் சில குற்றச்சாட்டுக்களைக் கூறி, அரசுமீது பழி சுமத்துகிறார்களே தவிர, எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண வேண்டும் என்றோ, மக்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்றோ அவர்கள் எண்ணுவதில்லை. அபாண்டமான பழிகளை அரசு மீது சுமத்தி, தாக்குகிற தொனியிலேயே பேசி, சரமாரியாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே போனால், அப்படியாவது தங்கள் பெயர் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வராதா (மேசையைத் தட்டும் ஒலி) என்ற விளம்பர தாகத்தினால், மோகத்தினால், ஏக்கத்தினால் இப்படி எல்லாம் பேசுகிறார்களே தவிர, உண்மையில் அவர்களுடைய விமர்சனங்களினால் எந்த நன்மையும் விளைய வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஒரு நபரை, பிடிக்கவில்லை, அவர்களுக்கு அரசியல் வாழ்க்கையில் விரக்தியே மிஞ்சியுள்ளது என்பதால் அந்த நபர் எதைச் செய்தாலும் எதிர்க்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற முடிவுடன், கண்மூடித்தனமாக எதிர்க்கிறார்களே தவிர, அவர்களுடைய வாதங்களில் சத்தும் இல்லை; அவர்களுடைய கூற்றுக்களில் உண்மையும் இல்லை.

எல்லோரும் பாராட்டும் இந்த அரசின் சாதனைகளைக் கூட பாராட்ட மனமில்லாமல் எல்லாவற்றையும் குறை கூறுவதால் யாரும் இவர்களுடைய பேச்சுக்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). இம் மாநில மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு இவர்களைப் பற்றிய நினைப்பும் இல்லை; இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. இவர்களும் ஆங்காங்கே சில பொதுக் கூட்டங்களில் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். கூட்டம்தான் கூடுவதில்லை (மேசையைத் தட்டும் ஒலி). இவர்களுடைய பேச்சுக்கள் பத்திரிகைகளில் மட்டும் தவறாமல் வருகின்றன. நம் மாநிலத்தில் பத்திரிகை படிப்பவர்கள் மொத்த ஜனத் தொகையில் 10 விழுக்காடு கூட இல்லை. ஆனால் அந்த 10 விழுக்காடு மக்கள் கூட பத்திரிகைகளில் இவர்களுடைய பேச்சுக்களைப் படிக்கும் போது, ''இவர்கள் எப்போதுமே இப்படித்தான், குறை சொல்வதைத் தவிர இவர்களுக்கு வேறு வேலையே இல்லை'' (மேசையைத் தட்டும் ஒலி) என்று அலுத்துக்கொள்கிறார்கள்.



165044

1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இருப்பினும் இப்படிப்பட்ட சிலர் இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களாக இருப்பதால், அவர்களுக்கும் பதில் அளிக்க வேண்டியது எனது கடமையாகிறது. நேற்று மன்ற உறுப்பினர்கள் திரு. திருநாவுக்கரசு அவர்களும், திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களும் இங்கு தெரிவித்த சில கருத்துக்களுக்கு எனது பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்பொழுது காவல் துறையினருக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தில் குறிப்பிட்ட தொகைக்குப் பதிலாக விலையில் 50 விழுக்காட்டை மானியமாக வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். காவல்துறை அலுவலர்கள் மீது அக்கறை கொண்ட எங்கள் அரசு ஏற்கெனவே சில வாரங்களுக்கு முன்னரே இது குறித்து எடுத்த நல்ல முடிவினை நான் எனது பதிலுரையிலேயே தெரிவித்தேன். மீண்டும் அதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இனி காவலர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் இன்றைய விலையில் 50 விழுக்காடு மானியம் அளித்து பாதி விலையில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் உரையாற்றும்பொழுது பொதுவாக ''மனித நேயத்தை''ப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மனித நேயம் என்பது அடுத்தவரை தன்னைப் போல் கருதி நடத்தும் மாபெரும் பண்பு ஆகும். அவ்வாறு பார்க்கும்போது அரசு காவல் துறையினரை மனித நேயத்தோடும், காவல் துறையினர் பொது மக்களை மனித நேயத்தோடும் நடத்த வேண்டும். அதே நேரத்தில் பொது மக்களும் அரசியல்வாதிகளும் காவல் துறையினரின் பல்வேறு பணிகளில் உள்ள சிக்கல்களையும் இடர்ப்பாடுகளையும் கருத்தில் கொண்டு அவர்களையும் மனித நேயத்தோடு அணுகுவதுதான் சிறந்த பண்பாகும்.

மக்கள், குறிப்பாக ஏழை எளியோர், நீதிக்காக காவலரை அணுகும்போது காவலர்கள் அவர்களை மதித்து, உதவியாக இருந்து, அவர்களுக்கு நீதி கிடைக்க பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் எங்கள் அரசு காவலர்களை பல வகைகளில் ஊக்குவித்து வருகின்றது. அவர்களிடையே மனித நேய மனப்பான்மையையும் எங்கள் அரசு வளர்த்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கருத்துக்கள் எல்லாம் ஏற்கனவே அவை முன் வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

D
V211, 3/1992 N82.1

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 19

(பிற்பகல் 1-00).

நமது சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் மாண்பு மிகு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள், ஒரு எதிர்க் கட்சித் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கண மாகத் திகழ்பவர். பேசுகிறபோது, ஆழ்ந்த கருத்துச் செறி வோடு விஷயங்களை அவர் பேசுவதால், அனைவரும் கவனத் தோடு அவரது பேச்சுக்கு செவிமடுக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு பாலசுப்ரமணியன் அவர்கள் பாராட்ட வேண்டிய அம்சங்களைத் தாராளமாகப் பாராட்டுவார். அவரது வாழ்த்து அளவானது. அதே நேரத்தில் விமர்சிக்க வேண்டிய விஷயங்களை விவரத்தோடும், ஆதாரத்தோடும் சுட்டிக்காட்டு வார். அவரது விமர்சனம் தெளிவானது. எத்தனை மணி நேரம் உழைத்து, எத்தனை புத்தகங்களைப் படித்திருந்தால், இத்தனை கருத்துக்களை அவர் கூற முடியும் என்கிற வியப்பு நமக்கு ஏற்படும். அது அவரது உழைப்பின் விளைவு.

சிலருக்குக் குற்றம் மட்டுமே கூற வரும். பாராட்ட மனமே வராது. தனது சொந்தக் குரலை தானே திரும்பத் திரும்பக் கேட்பதற்காக, சத்தம் போட்டு பேசுகிற உறுப்பினர்களும் உண்டு. சிலர் கூச்சல் போடுவதற்காகவே சட்டமன்றத்திற்கு வந்து, சத்தற்ற வாதங்களை எழுப்பி, மன்ற நடவடிக்கைகளுக்குத் தொந்தரவு தருவதும், நமக்குத் தெரிந்த விஷயம் தான். ஆனால் திரு. பாலசுப்ரமணியன் அவர்கள் தனது சட்டமன்றப் பணி களின் மூலம் மக்களது எதிர்பார்ப்புகளின் நியாயத்தையும், தான் சார்ந்திருக்கிற இயக்கத்திற்கு மரியாதையையும் என்றென் றும் நிலைக்க வைக்கிறவர். அவரை மனம் திறந்து பாராட்டு கிற வாய்ப்பாக, இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பால சுப்ரமணியன் அவர்கள் காவல்துறை மானியத்தைப் பற்றிப் பேசும் போது, காவலர்கள் தேர்வு நடத்துவதில் பல முறைகேடுகள் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கு. சுதந்திரமாகவும். சிறப்பாகவும் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணைக் குழுவின் (Tamil Nadu Public Service Commission) பொறுப்பில் தேர்வை விட்டுவிட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்,

காவல் துறையில். காவலர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள், தீயணைப்புத் துறையில் பணிபுரியும் தீயணைப்போர் மற்றும் சிறைத் துறையில் பணிபுரியும் இரண்டாம் நிலை வார்டர்கள் ஆகியோரை நேரடி நியமனம் செய்ய. 29—11—1991 அன்று ''தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணை வாரியம்'' ஒன் றினை இந்த அரசு அமைத்துள்ளது, இதற்குத் தலைவராக காவல்துறை இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளார்.



1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இதுவரை காவல்துறையில் காவலர்கள். மற்றும் உதவி ஆய் வாளர்கள் ஆகியோர்களை காவல்துறையே நேரடியாக நியமித்து வந்தது, காவலர்கள் தேர்வை எந்தக் காலத்திலும் அரசு பணியாளர்கள் தேர்வாணையம் நடத்தியதே இல்லை, இத் தேர்வினை காவல்துறைதான் நீண்டகாலமாகத் தொடர்ந்து செய்து வருகிறது, துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், அதாவது Deputy Superintendent of police மட்டுமே தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணைக் குழு (Tamil Nadu Public Service Commissioner மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள், 1976 மற்றும் 1979 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும்தான் உதவி ஆய்வாளர்கள். அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டனர், 1987 ஆம் ஆண்டு முதல் காவல் உதவி ஆய்வாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அரசுப் பணி யாளர்கள் தேர்வாணைக் குழுவிலிருந்து மாற்றப்பட்டு காவல்துறைக்கே கொடுக்கப்பட்டது, தற்போது அமைக்கப்பட் டுள்ள தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வாணை வாரியம் காலதாமதமின்றி ஒவ்வொரு ஆண்டும் காவலர்கள். உதவி ஆய் வாளர்கள் ஆகியோரை விரைவில் தேர்ந்து எடுக்கும், இதனால் நீண்டகாலமாகப் பூர்த்தி செய்யப்படாமல் உள்ள பணியிடங் கள் விரைவில் நிரப்பப்படும், தகுதி வாய்ந்த. சிறந்தவர்களை விரைவாகத் தேர்ந்தெடுக்க இயலும், தற்போது காலியாக உள்ள சுமார் 4.000 காவலர்களின் பணியிடங்களையும் 400 உதவி ஆய்வாளர்களின் பணியிடங்களையும் இந்த புதிய வாரியம் விரைந்து பூர்த்தி செய்யும், எனவே காவலர்கள் தேர்வுப் பணியை தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டியது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

எதிர்க்கட்சித் தலைவர் திரு, எஸ், ஆர், பாலசுப்ரமணியன் அவர்கள் தனது உரையில் டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் எல்,டி,டி,ஈ, உடன் தொடர்பு கொண்டதால் வேலை நீக்கம் செய்யப்பட்ட திரு, சீனிவாசராஜு. மீண்டும் அடிக்கடி தமிழ் நாடு இல்லத்திற்கு வந்து செல்வதாகக் குறிப்பிட்டார்கள். ஜூலை 1991ல் நேபாளத்தைச் சேர்ந்த தியாகராஜன் என்ற இலங்கைப் போராளியுடன் தொடர்பு வைத்திருந்ததாக தமிழ் நாடு இல்லத்தில் திருவாளர்கள் பத்மநாபன் மற்றும் சோமன் என்பவர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள், தற் காலிகப் பணியிலிருந்த திரு, சீனிவாச ராஜு என்பவரும் அதே காரணத்தால் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார், அந்த சீனிவாச ராஜு தமிழ்நாடு இல்லத்திற்கு அதற்குப் பின்னரும் வந்து போவதாகச் சொல்லப்படுகிற தகவல்களின் உண்மை நிலை என்ன என்பதை அறிந்து தவறு செய்பவர்கள் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் தனது உரையில். சைதாப்பேட்டையில் ஒரு நபர் 50 ஆயிரம் ரூபாயை வழிப்பறி செய்து கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு போலீசில் வழக்கு பதிவாகி இருக்கிறது என்றும். ஆனால் இன்றைய தினம் அவர் வெளியிலே நடமாடிக் கொண் டிருக்கிறார் என்றும், இந்தக் கும்பல் செல்வாக்கு படைத்தது என்ற காரணத்தினால். அங்கே வழக்கு பதிவு செய்த காவல் துறை ஆய்வாலர் மாறுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியிருக் கிறார்....... 20—02—1992 ஆம் தேதி இரவு 7.30 மணிக்கு ரூ. 50 ஆயிரம் பணத்தை வைத்துக்கொண்டு சைதாப்பேட்டை பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்தபோது ஒரு அம்பா சிடர் காரிலும், ஆட்டோவிலும் சுமார் 7, 8 பேர்கள் கஸ்டம்ஸ் அதிகாரிகளைப் போல உடையணிந்து வந்து பணத்தைக் கொள்ளையடிக்க முயன்றதாகவும், தன்னைக் காரில் கடத்திச் செல்ல முயன்றதாகவும், ஆனால் பொதுமக்கள் கூடிவிட்டதனால் அவர்கள் ஓடி விட்டதாகவும் சைதாப்பேட்டை காவல்நிலையம் குற்றப் பிரிவில் ராயப்பேட்டையைச் சேர்ந்த இப்ராகிம் என் பவர் புகார் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியது போல அங்கு வழிப்பறி எதுவும் நடக்க வில்லை. வழிப்பறி முயற்சிதான் நடைபெற்றது. அதுவும் பொதுமக்களும், ஒரு போக்குவரத்து உதவி ஆய்வாளரும் அங்கு வரவே அந்த முயற்சியும் முறியடிக்கப்பட்டுவிட்டது. சைதாப் பேட்டை. காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளரிடம் கொடுக்கப் பட்ட புகாரின் பேரில் 9 நபர்கள் மீது 27–2–1992 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக எம். கே. ஜான், சிரு முகமது, பதுரு ஜமால், ஜாபர் அலி ஆகிய 4 நபர் கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த வழக்கில் சம்பந்தப் பட்ட அம்பாசிடர் கார் எம்.டி.எஸ். 4136 கைப்பற்றப்பட்டுள் ளது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற 5 நபர்கள் தலை மறைவாக உள்ளார்கள். சைதாப்பேட்டை காவல்நிலைய குற்றப் பிரிவில் வேலை பார்த்த ஆய்வாளரை மாற்றியதற்கும் இந்தச் சம்பவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. லஞ்ச ஒழிப்புத் துறையின் அறிக்கையின் பேரில் இந்த ஆய்வாளர் மீது துறை நடவடிக்கை எடுக்கப்படுவதால் இவரை சைதாப் பேட்டை காவல் நிலையக் குற்றப் பிரிவிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் காவல் நிலையத்திற்கு 7–3–1992 அன்று பணி மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 1.05).

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியது போல இந்தச் சம்பவத்திற்கும், அந்த ஆய்வாளர் பணி மாற்றத்திற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்.



கிறேன். (குறுக்கீடு) உங்கள் மாவட்டத்திற்குப் போட்டு விட்டோமே என்று சொல்கிறீர்களா? இதில் உள்ள இரு சிக்கலை, நிர்வாகச் சிக்கலை அனைவரும் புரிந்துகொள்ள வேண் டும். யாரையும் குறை கூற நான் விரும்பவில்லை. ஆனால் நிர்வாகத்தில் எத்தனை சிரமங்கள் இருக்கின்றன என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும்; பொதுமக்களும் புரிந்துகொள்ள வேண்டும்; பத்திரிகையாளர் களும் புரிந்துகொள்ளவேண்டும். காவல் துறை அதிகாரிகளை எடுத்துக் கொள்ளுங்கள். காவல் துறை அதிகாரிகளில் நல்லவர் களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள்.

தவறு செய்கிற காவல் துறை அதிகாரிகளை நாம் என்ன செய்ய முடியும்? அதிகபட்சம் அவர்களை வேறு ஊருக்கு மாற்றம் செய்ய முடியும். இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள், ஏற்கெனவே இந்த அதிகாரி மீது டிப்பார்ட்மெண்டல் என்கொயரி இருக் கிறது. இவரைக் கொண்டுபோய் எங்கள் மாவட்டத்தில் போட்டு விட்டீர்களே என்று கேட்கிறார். நிர்வாகத்தில் வேறு என்ன செய்ய முடியும்? எனவே they should be made accountable. அதைப் போலவே இங்கே பல மாமன்ற உறுப்பினர்கள் பேசுகிற போது 'நாங்கள் அப்போதே கேட்டோம். அந்தத் திட்டங்களை எல்லாம் நீங்களே அறிவித்தீர்கள் அல்லது செயல்படுத்துவேன் என்று சொன்னீர்கள். இன்று வரை அந்தத் திட்டங்கள் நிறை வேறவில்லையே என்று சொன்னார்கள். சில திட்டங்களை அரசு அறிவித்த பிறகும் அதன் பலன்கள் எல்லாம் மக்களைப் போய்ச் சேரவில்லையே என்று குறைபட்டுக் கொள்கிறார்கள். அதே குறை என் மனதிலும் இருக்கிறது. இங்கேயுள்ள மாண்புமிகு அமைச்சர்கள் மனதிலும் இருக்கிறது. இந்த நிர்வாகச் சிக்கலை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த மாமன்றத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், நம் அனைவரையும் தான் சேர்த்துச் சொல்கிறேன், நமக்கு இருக்கிற அக்கறை; கவலை அது. நாம் மக்களை நேரடியாகச் சந்தித்து மக்களுக்குச் சில வாக்குறுதிகளைக் கொடுத்து; மக்களின் வாக்குகளைப் பெற்று இந்த மாமன்றத்திற்கு மக்கள் பிரதிநிதிகளாக வரு கிறோம். எனவே நமக்கு அந்த ஆதங்கம் இருக்கிறது; அக்கறை இருக்கிறது; கவலை இருக்கிறது. இந்த மக்களைத் திரும்ப நாம் சந்திக்கவேண்டுமே, இந்த மக்களுக்கு இத்தனை வாக்குறுதி களை கொடுத்திருக்கிறோமே, இந்த மக்களுக்குச் சொன் னதை எல்லாம் நாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமே, மறுபடியும் அடுத்த தேர்தல் வரும்போது இந்த மக்களைச் சென்று நாம் சந்தித்து பதில் கூற வேண்டுமே, திரும்பவும் இவர் களின் ஆதரவை நாம் கேட்டுப் பெறவேண்டுமே என்பன போன்ற அக்கறை, கவலை, ஆதங்கம் நமக்கு இருக்கிறது. ஆனால் அரசாங்க அதிகாரிகளைப் பொறுத்தவரையில் 'பியூ ரோக்ராட்ஸ்' பொறுத்த வரையில் அவர்களுக்கு இந்தவிதமான

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 19

அக்கறை இருப்பதற்கு நியாயம் இல்லை. (மேசையைத்
தட்டும் ஒலி) ஏனென்றால் அரசாங்க அதிகாரி, யாருக்கும் பதில்
சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. 58 வயது வரை அவர்
களுக்குப் பணி உத்தரவாதம் இருக்கிறது. எனவே நாம் சொல்கிற
திட்டத்தை அரசாங்கம் வகுக்கிற திட்டத்தை, அரசு அதிகாரிகள்
செயல்படுத்தினாலும் சரி, செயல்படுத்தாவிட்டாலும் சரி,
அக்கறையோடு செய்தாலும் சரி, அக்கறையின்றி நிறை
வேற்றாமல் விட்டுவிட்டாலும் சரி 58வயது வரை அவர்களுக்குப்
பணி உத்தரவாதம் இருக்கிறது.

பிற்பகல் 1–10

இந்த நிலையில் ஒரு அரசாங்கம் செயல்படுவது என்பது
மிகவும் கடினம் ஆகிறது. இந்த சிஸ்டத்தையே மாற்ற வேண்
டும். முறையையே மாற்ற வேண்டும். (மேசையைத்
தட்டும் ஒலி) நான் யாரையும் குறிப்பிட்டு குறை கூறவில்லை.
இருக்கின்ற யதார்த்த நிலைமையை இங்கே விளக்குகிறேன்.
ஒரு துறையில், ஒரு டிப்பார்ட்மெண்டில், ஒரு இலாகாவில்
ஒரு தவறு நடந்து விடுகிறது. இதற்கு யார் பதில் சொல்ல
வேண்டும், அந்த துறையைச் சார்ந்த மந்திரி தான் இங்கே
பதில் சொல்ல வேண்டும். அந்த அதிகாரியை யாரும் கேட்கப்
போவதில்லை. கேட்கவும் முடியாது. அவர் யாருக்கும் பதில்
சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. இப்படி சில சமயங்
களில் அதிகாரிகள் செய்கின்ற தவறுகளுக்காக அமைச்சர்கள்
பொறுப்பு ஏற்க வேண்டிய நிலைமை பல சந்தர்ப்பங்களில்
ஏற்பட்டு விடுகிறது. எனவே மத்திய அரசாங்கமே இதைப்
பற்றி யோசித்து, இதற்கான ஒரு முறையை வகுக்க வேண்டும்.
I. A. S. officers must be made accountable. அவர்
களையும் கேள்வி கேட்க முடியும். அவர்களும் பதில் சொல்ல
வேண்டும் என்ற நிலைமை உருவாக வேண்டும். இப்போது
சில நல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள். கடமை உணர்வோடு
மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். இந்த மாநிலத்திற்கு
சேவை செய்ய வேண்டும் என்று உழைக்கின்ற, இரவு, பகல்
என்று பாராமல் உழைக்கிற நல்ல அதிகாரிகளும் இருக்கிறார்
கள். ஆனால் இன்னும் பல அதிகாரிகள் இருக்கிறார்கள்.
அவர்களுக்கு எவ்விதமான அக்கறையும் இல்லை. கடமை
யுணர்வும் இல்லை. என்ன அப்படி இவர்கள் சொன்ன
வேலையை செய்யாவிட்டால் என்ன? அதிகபட்சம் என்ன
செய்வார்கள்? என்னைத் தூக்கி வேறு டிப்பார்ட்மெண்ட்டில்
போடுவார்கள். டிரான்ஸ்பர் செய்வார்கள். அவ்வளவு தானே.
58 வயது வரைக்கும் எனக்குப் பணி நிச்சயம். கேரண்டி
என்று தைரியத்தில் அவர்கள் இருக்கிறார்கள். அந்த
மிதப்பில் அவர்கள் இருக்கிறார்கள். அந்த நிலைமை மாற்றப்
பட வேண்டும்.



1992 மார்ச் 19] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அதைப்போலவே காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்
கள். காவல்துறையில் பணிபுரிகின்றவர்கள் இருக்கிறார்கள்
ஒரு மாவட்டத்தில், ஒரு கிராமத்தில் அவர்கள் கள்ளச்சாரா
யத்தில், விற்பனையிலோ அல்லது அந்த பிசினசிலோ அவர்கள்
ஈடுபடுகிறார்கள் என்றால் அதிகபட்சம் நாம் என்ன செய்ய
முடியும்? அவரைத் தூக்கி வேறு ஊருக்கு மாற்றம் செய்ய
முடியும். இங்கே சட்டமன்ற உறுப்பினர்களே என்னிடத்தில்
பேசுகிறபோது என்ன கேட்கிறார்கள்? தனிப்பட்ட முறை
யிலே பலர் என்னை சந்தித்துப் பேசுகிறார்கள். இந்த காவல்
துறை அதிகாரி தவறு செய்கிறார். எனவே என் ஊரிலிருந்து
மாற்றி வேறு ஒரு மாவட்டத்திற்கு அனுப்புங்கள் என்று. வேறு
மாவட்டத்திற்கு அனுப்பினால் அங்கே மட்டும் அவர் தவறு
செய்ய மாட்டாரா? அதே தவறை செய்ய மாட்டாரா?
எனவே காவல்துறை அதிகாரிகளை இந்த மாநிலத்தைவிட்டே
அனுப்புவதற்கு ஒரு வழிமுறை வகுத்தால்தான் அவர்களும்
பயப்படுவார்கள். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி). இதை
யெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், எங்கே என்ன
தவறு நடந்தாலும், எந்தத் துறையில் நடந்தாலும், அரசாங்
கத்தை மக்கள் குறை கூறுகிறார்கள். மற்ற அரசியல்வாதிகளும்
குறை கூறுகிறார்கள். பத்திரிகையாளர்களும் குறை கூறு
கிறார்கள். எனவே unless I.A.S. officers are made accountable,
Unless I. P. S. officers are made accountable எந்த
அரசாங்கமாக இருந்தாலும் நல்லவிதத்தில் செயல்
படுவது மிகமிகக் கடினம். நாம் நல்ல திட்டங்களை வகுக்க
லாம். ஆனால் அந்தத் திட்டங்களின் பயன், பலன்கள் மக்களைப்
போய் அடையச் செய்வது என்பது மிக மிகக் கடினமான
காரியம் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகத்தான், புரிய
வைப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர, யார்
மனதையும் புண்படுத்த வேண்டும் என்றோ, யாரையும் குறை
கூறவேண்டும் என்றோ இதை நான் சொல்லவில்லை.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது
போல, சைதாப்பேட்டை சம்பவத்தில் அந்த ஆய்வாளரின்
பணி மாற்றத்திற்கும், நடந்த குற்றத்திற்கும் எந்தவிதமான
தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம், குனியமுத்தூரைச் சேர்ந்த ரங்கசாமி
யின் மகன் வேலுசாமி என்பவர் உக்கடம் பகுதியில் கொலை
செய்யப்பட்டது பற்றியும், காவல் துறை உடனடியாக நட
வடிக்கை எடுத்திருந்தால் இக்கொலையைத் தவிர்த்திருக்க
லாம் என்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
குறிப்பிட்டார்கள்.

இந்நிகழ்ச்சி பற்றி எனக்குக் கிடைத்துள்ள தகவல்களை
இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். கோவை மாவட்டம்
குனியமுத்தூரைச் சேர்ந்த ரங்கசாமியின் மகன் வேலுசாமி,
கோவை நகரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வேலை பார்த்து

வந்தார். அவருக்கும், நம்பி அழகன்பாளையம் கருப்பண்ணன் மகள் லலிதாவுக்கும் 31—5—1991 அன்று திருமணம் நடை பெற்றது. ஒரு மாத திருமண வாழ்க்கைக்குப் பிறகு, லலிதா வுக்கும் வேறு ஒரு நபருக்கும் தொடர்பு இருந்ததால் அவள் தன்னுடைய பெற்றோர் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

கடந்த 4—9—1991 அன்று வேலுச்சாமி, போத்தனூர் காவல் நிலையத்திற்குச் சென்று தன் மனைவியின் சகோதரர் தன்னைத் தாக்க முனைந்ததாக புகார் கொடுத்தார். கணவன், மனைவி இருவரும் காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் சமாதானமாக செல்வதாகக் கூறிய தன் பேரில் மேல் நடவடிக்கைகள் எதுவும் தொடரப் படவில்லை.

16—2—1992 அன்று வேலுச்சாமி தான் கோவை போய் வருவதாகக் கூறிவிட்டு சென்றவர் 18-2-1992 வரை வீடு திரும்பவில்லை. இது பற்றி போத்தனூர் காவல் நிலையத் தில் 18—2—1992 அன்று புகார் செய்யப்பட்டது. இதன்பேரில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் 17—2—1992 அன்று கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் கிராம தலையாரி கொடுத்த புகாரின்பேரில் தாமரைக்குளத்தில் ஒரு மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த அடையாளம் தெரியாத பிணம் ஒன்று கைப்பற்றப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அது தற்கொலை என்று முடிவு செய்யப்பட்டது. பிரேதத்தின் அடையாளம் தெரியாததால் அது காவல் துறையினரால் அடக் கம் செய்யப்பட்டது.

பிற்பகல் 1—15

27—2—1992 அன்று பத்திரிகைச் செய்தியைப் பார்த்த வேலுச்சாமியின் உறவினர்கள் கிணத்துக்கடவு காவல் நிலையம் சென்று அவருடைய புகைப்படம் மற்றும் துணிகளைப் பார்த்து இறந்துபோனவர் வேலுச்சாமி தான் என்று உறுதி செய்தனர். பின்னர், இந்தப் புகார் கோவை ஊரக மாவட்ட குற்றப் பிரிவுக்கு மாற்றப்பட்டு 6—3—1992 அன்று தாசில்தார் முன்னிலையில் பிரேதம் தோண்டி எடுக்கப்பட்டு, மருத்துவக் குழுவின் மூலம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, அது தற்கொலைதான் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் நிலையங்களில் புகார் கொடுக்கச் செல்லும்பொழுது, சம்பவம் நடந்த இடம் தங்கள் எல்லைக்குள் இல்லை என்று புகார்தாரர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள் என்றும் குறிப் பிட்டார்கள். இது தொடர்பாக எந்தக் காவல் நிலையத்திலும் யார் புகார் கொடுத்தாலும் அந்தப் புகார்கள் உடனே பதிவு



செய்யப்பட வேண்டுமென்றும், ஒருவேளை அது அந்தக் காவல் நிலையத்தின் எல்லைக்கு உட்படாததாக இருந்தால் அதனை உரிய காவல் நிலையத்திற்கு மாற்றவேண்டியது அந்தக் காவல் நிலையத்தின் பொறுப்பு என்றும் அறிவுரைகள் வழங்கியுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சிறப்புக் காவல் படை, மற்றும் ஆயுதப்படையில் உள்ள உதவி ஆய்வாளர் களை, சட்டம் ஒழுங்கு, குற்றப் பிரிவுகளுக்கு மாறுதல் செய்து அவர்களுக்கு அதில் பணிபுரியும் வாய்ப்பு அளிக்கவேண்டுமென்று குறிப்பிட்டார். இந்த மாறுதல்கள் குறித்து முழுமையான விவரங்களைப் பெற்று, அதனுடைய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அரசு முடிவெடுக்கும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை, தீயணைப்புத் துறை மற்றும் காவல் துறை மானியக் கோரிக்கைகளின்மீது, தேவையான விளக்கங் களோடு நான் ஆற்றிய பதில் உரை, இந்த மாமன்ற உறுப்பினர் கள் அனைவருக்கும் மன நிறைவை அளித்திருக்கும் என நம்புகிறேன். இம்மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத் தில் கலந்துகொண்டு, அரசுக்கு அறிவுரைகளையும், தேவை யான யோசனைகளையும் வழங்கியுள்ள மாண்புமிகு உறுப்பினர் களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இந்த அறிவுரைகளும், யோசனைகளும், கருத்துக்களும் அரசால் கவனத்துடன் கவனிக்கப்படவும், அவசியத்தின் அடிப் படையில் நடைமுறைப்படுத்தப்படவும் முயற்சிகள் மேற்கொள் ளப்படும். அடிக்கடி விமர்சனத்திற்கு உள்ளாகும் இம்மூன்று துறைகளின் செயல்பாட்டை செப்பனிடும் வகையில், மாண்பு மிகு உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ள கருத்துக்கள் அரசின் கவனத்தை வெகுவாகவே கவர்ந்திருப்பதால், அதுகுறித்த செயல்பாடுகள் துரிதப்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள 201 வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னுடைய உரையில் தேவையான பதில் வழங்கப்பட்டுள்ளது என நான் நம்புகிறேன். என்னால் பதில் சொல்லப்படாத கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்கள் அனைத்தும் குறிப்பேட்டில் இருப்பதால், அவைகள்மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மூன்று மானியக் கோரிக்கைகளையும் நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் 'ஜீப்' பற்றி சொல்லியிருந்தீர்கள். பழைய காலத்தில் எவ்வளவு ஜீப் இருந் ந்து. இப்போது எவ்வளவு வாங்கியிருக்கிறோம் என்று சொல்லி விட்டார்கள். அதற்கு மேல் என்ன விளக்கம் வேண்டியிருக் கிறது? நீங்கள் சொன்னதற்கு விளக்கம் வந்துவிட்டது....

இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 2

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்டதற்கு அப்போதே பதில் சொன்னார்கள்.

மானியக் கோரிக்கை எண் 2. மாநில ஆயத்தீர்வைத் துறை ...

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். உட் காருங்கள். நான் நிற்கிறேன். உட்கார வேண்டும்.

திரு. இளம்வழுதி :பேச வாய்ப்புத் தராததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நான் வெளி நடப்புச் செய்கிறேன்.

(திரு. இளம்வழுதி அவையிலிருந்து வெளிநடப்புச் செய் தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாம் முடிந்ததற்குப் பிறகு, இதுவும் இன்றைக்குப் பத்திரிகையில் வரும். பரிதி இளம் வழுதி கடைசியில் வெளியேறினார் என்று. உங்களுடைய தலைவர் உங்களை ரொம்பப் பாராட்டுவார்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 2— மாநில ஆயத்தீர்வைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 2— மாநில ஆயத் தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிவதற்கு முன் இன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



இந்த வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தமட்டில் நான் ஏன் இதற்கு மேல் விளக்க வேண்டாமென்று சொன்னேன் என்றால், சென்ற ஆண்டு 1991–92ல் இந்த மூன்று மானியக் கோரிக்கைகள் மீதும் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் 98.

பிற்பகல் 1-20

அந்த 98 வெட்டுத் தீர்மானங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் பதிலுரை வழங்கி, இந்திய மாநிலங்களின் சட்டமன்ற வரலாற்றிலே ஒரு சாதனை படைத்தார் என்பதை அன்றைக்கே பாராட்டினேன். (மேசை யைத் தட்டும் ஒலி) நாட்டிலுள்ள பத்திரிகைகளும் அதைப் பற்றிப் பாராட்டி இருந்தன. அந்த 98 வெட்டுத் தீர்மானங் களுக்கும் அவர்கள் விளக்கம் சொன்ன காரணத்தாலேதான், இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அதைப் புரிந்துகொண்டு, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று, சென்ற ஆண்டு 98 வெட்டுத் தீர் மானங்கள் கொடுத்தவர்கள், இந்த ஆண்டு 201 வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த 201 வெட்டுத் தீர்மானங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே பதில் சொல்லியிருக்கிற காரணத்தாலேதான் மேற்கொண்டு விளக்கங்கள் வேண்டாமென்று சொன்னேன். போன ஆண்டு 98 வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த ஒரு அவையில், அடுத்த ஆண்டே 201 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு, அந்த 201 வெட்டுத் தீர்மானங்களுக்கும் பதில் முதலமைச்சர் அவர் களுடைய பதிலுரையில் இடம் பெற்ற வரலாற்றை நம் முடைய சட்டமன்றத்திலேதான் இன்றைய தினம் முதன் முறையாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நிகழ்த்தியிருக் கிறார்கள் என்பதற்காக பேரவையின் சார்பில் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2 மாநில ஆயத் தீர்வைத் துறை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி. தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

[1992 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில ஆயத் தீர்வை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 5,08,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரியதொகை வழங்கப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை, வெட்டுத்தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. எச்.எம். ராஜு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



1992 மார்ச் 19] [பேரவைத் தலைவர்]

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,72,38,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 22,30,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்) :

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை) ,

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

## 6. அறிவிப்பு.

### பேரவை அலுவல்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் இக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் பேரவையின் ஒப்புதலுடன் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 30–3–1992 திங்கட்கிழமை .. | கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம். |
| | கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள். |
| 3–4–1992 வெள்ளிக்கிழமை .. | கோரிக்கை எண் 24—தொழில்கள். |
| | கோரிக்கை எண் 54—தொழில்கள் குறித்தமூலதனச் செலவுகள். |

பேரவையின் இன்றைய முற்பகல் அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் பிற்பகல் 4,00 மணிக்கு பேரவை மீண்டும் கூடியது.

### 5, மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி,

(ஈ) கோரிக்கை எண், 11—மாவட்ட நிருவாகம்,

(உ) கோரிக்கை எண் 1—நிலவரித்துறை,

(ஊ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்.

(எ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிருவாகம்.

(ஏ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

(ஐ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு,



(ஒ) கோரிக்கை எண் 44—எழுது பொருள் அச்சுத்துறை

(ஓ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண். மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 165,08,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 235—திரு. ஜி. பழனிசாமி,

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''நாகை-காயிதே மில்லத் மாவட்டம் துவக்கப்பட்ட பின்னால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நடைபெறாமல் இருப்பதின் காரணம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 165,08,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 208—திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் ஆகியவைகட்கும் உள்ள தொடர்பு குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

[திரு. வி. கே. லட்சுமணன்] [1992 மார்ச் 19

''மாவட்ட நிருவாகம் பற்றிய 11ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 165,08,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''நிலவரித் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 7,43,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்,'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண். 290—திரு. ஜி. பழனிசாமி,

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பகுதி கடலோர பகுதியான தொண்டியக்காடு, கடும் மழையினால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் நிலவரி, தண்ணீர் தீர்வை ஆகியவைகளை ரத்து செய்வதன் அவசியத்தைக் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நிலவரித் துறை பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,43,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 275—திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் திருச்சிற்றம்பலத்தையும் அதிராம்பட்டினத்தையும் தாலுக்காவாக ஆக்குவது பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''நிலவரித் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,43,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''



1992 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானிய கோரிக்கை எண் 4—பொதுவிற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் கோரிக்கையின்கீழ் ரூ. 39,42,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 338—திரு. ஜி. பழனிச்சாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''பொது விற்பனை வரி மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தில் நடைபெறுகின்ற முறைகேடுகளைக் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 39,42,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 342—திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''உணவுப் பண்டங்கள்மீது விதிக்கப்பட்டிருக்கும் விற்பனை வரி குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 39,42,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிருவாகம். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''முத்திரைத் தாள்கள்—நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 2,41,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம். வெட்டுத் தீர்மானம் 368—திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''முத்திரைத் தாள்கள் கட்டணம் குறைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''முத்திரைத் தாள்கள்—நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,41,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக்கோரிக்கை, எண் 6—பத்திரப் பதிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''பத்திரப் பதிவு பற்றிய 6ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 17,25,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம். வெட்டுத் தீர்மானம் எண் 399—திரு. ஜி.பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் இருக்கும் நிலங்களை வாங்கும் விலையைக் காட்டிலும் பதிவு செய்யப்படும் பத்திரங்களின் விலை அதிகமாக இருப்பதால் பெயர் மாற்றம் செய்யப்படாமல் இருப்பதன் அவசியத்தைக் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''பத்திரப் பதிவு பற்றிய 6ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,25,34,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 39,87,30,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் . வெட்டுத் தீர்மானம் எண் 431—திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ' நாகை–காயிதே மில்லத் மாவட்டம் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் தொண்டியக்காடு, புயல் பாதுகாப்பு இல்லம் கட்டவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட் வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு பற்றிய 41-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 39,87,30,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

பிற்பகல் 4.05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத் துறை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''எழுதுபொருள் அச்சுத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 29,35,49,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் . வெட்டுத் தீர்மானம் எண். 445—திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் அரசின் அச்சகம் ஏற்படுத்த வேண்டியதின் அவசியத்தைக் குறித்து ' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. ஜி. பழனிசாமி] [1992 மார்ச் 19

"எழுதுபொருள்-அச்சுத் துறை பற்றிய 44-ஆம் எண். மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29,35,49,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்த வெட்டுத் தீர்மானம் எண். 434— திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'அரசு அச்சுத் துறையின் மூலம் தரமான காகிதங்களைப் பயன்படுத்தவும், தரமான எழுதுபொருட்களை அரசு அலுவலகங்களுக்கு விநியோகிக்கவும் வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 44—ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,35,49,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 46— இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 48,55,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 451—திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 48,55,38,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்காக வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1992 மார்ச் 19]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இங்கே முன்மொழியப் பட்ட மானியக் கோரிக்கைகளைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழில்@ இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த அவையில் பேசியதாக அல்லது படித்ததாக எடுத்துக்கொண்டு இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்ன பிறகு கடைசியில் அந்தக் கருத்துக்களின் மீது என்னுடைய விளக்கத்தைக் கூறுகிறேன் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும், திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வருவாய்த் துறை, மாவட்ட நிர்வாகம் ஆகிய மானிய கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

வெள்ளைக்காரனுடைய ஆட்சியின்போது இந்த வருவாய்த் துறை அமைக்கப்பட்டது, அந்த ஆட்சி நமது இந்தியாவை விட்டுச் சென்றும், இன்றுவரை அவர்களுடைய ஆதிக்கம் சில துறைகளிலே இருக்கிறது, அதிலே சில திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். நல்ல திருத்தங்கள். 'ஹெட்மெனாக' இருந்தவர்களை மாற்றி கிராம நல அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். அதேபோல இப்போது பட்டா புத்தகங்களை வழங்கியிருக்கிறார்கள், இதெல்லாம் ஒரு எடுத்துக்காட்டான திட்டங்கள். நல்ல திட்டங்கள். இந்த வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில் இந்த இலாக்காவிடம் அதிகமாக அதிகாரங்கள் இருப்பதாக நாங்கள் எண்ணுகிறோம், இங்கே இதற்கு முன்பாக உள்ளாட்சித் துறை, சமூக நலத்துறை, பொதுப் பணித் துறை போன்றவைகள் ஒன்றாக இருக்கும்போது என்னென்ன அதிகாரங்கள் அவர்களிடம் இருந்ததோ அந்த அதிகாரங்கள் இப்போதும் அவர்களிடமே இருக்கின்றன. இப்போது உள்ளாட்சித் துறை தனியாக பிரிக்கப்பட்டுச் செயல்படுகிறது என்றாலும் உதாரணத்திற்கு ஒன்றைக் கூறுகிறேன். உள்ளாட்சியினுடைய இடத்திலே இருக்கக்கூடிய மரங்களை இன்றைக்கு ஏலத்திலே விடுவதற்கு இந்த உள்ளாட்சித் துறைக்கு அதிகாரம் கிடையாது, அந்த அதிகாரம் இன்றைக்கு வருவாய்த் துறையிடம் இருக்கிறது, இதுபோன்ற குறைபாடுகள் இருக்கின்றன. இவைகளை நீங்க

@ 228—314 ஆம் பக்கங்களில் I முதல் V இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்] [1992 மார்ச் 19

நிவர்த்தி செய்துதரவேண்டும், இந்தத் துறை இன்னும் சிறப்பாகச் செயல்பட, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஏஜென்சி முறையை நமது தமிழகத்திற்கும் ஒத்துவருமா என்று சிந்தித்து அதைச் செயல்படுத்தமுடியுமா என்று நீங்கள் ஆராயவேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்,

பிற்பகல் 4–10

வருவாய்த் துறை அதிகாரிகளைப் பொறுத்தமட்டில் கிராம மக்களுடன் அவர்கள் ஒன்றி இருக்கிறார்கள், அந்த அதிகாரிகள் கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் பரவலாக அந்தந்தப் பகுதியிலே அவர்கள் குடி இருக்க வேண்டும். சட்டத்திலே அவ்வாறு இருக்குமென்று நான் எண்ணுகிறேன். ஆனால் அவர் கள் அதுபோல அந்தந்தப் பகுதியிலே அதிகமாகத் தங்குவது இல்லை. அதற்கு நீங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தாசில்தார், ஆர். டி. ஓ. போன்ற அதிகாரி களுக்கு இன்றைக்கு நீதிபதி அந்தஸ்து இருக்கிறது. இனறைக்கு பல காரணங்களால் நீதித் துறை அளவிற்கு அவர் களால் செயல்படமுடியுமா என்று நீங்கள எண்ணிப் பாருங்கள், ஏன் அவர்கள் அவ்வாறு இருக்க வேண்டும்? அரசியலுக்கு அப்பாற்பட்ட சமூகச் சீர்திருத்தவாதிகளில் ஒருவரை ஏன் அந்த நீதிமன்றத்திலே உறுப்பினராகக் சேர்க்கக்கூடாது என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

பட்டா புத்தகங்கள் கொடுக்கிறார்கள், அது ஒரு நல்ல, திட்டம் அதை நீங்கள் இன்னும் விரிவுபடுத்தி பட்டா, புத்தகம் மாத்திரம் அல்லாமல். இன்னும் அதிலே சீர்திருத்தம் செய்ய வேண்டும், ஒரு விவசாயி ஒரு அதிகாரியைச் சந்தித்து சர்ட்டி பிகேட் வாங்குவது என்றால். அதிலே எவ்வளவு சிரமம் இருக் கிறது என்பது நிச்சயமாக எல்லோருக்கும் தெரியும், என்று நான் எண்ணுகிறேன், அதைப் போக்குவதற்கு—இன்றைக்கு அரசு துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள், ஊழியர்களுக்கு அவரவர்கள் சம்பந்தப்பட்ட ரிக்கார்டு புத்தகம் எப்படி இருக் கிறதோ அதுபோல, தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் வீட்டுக்கு ஒரு புத்தகத்தை நீங்கள் ஏன் முழு அளவிலே வழங்கக்கூடாது? இன்றைக்கு சாதிச் சான்றுகள் வாங்க வேண்டுமென்றால். தாசில்தாரை அணுகவேண்டிய நிலைமை இருக்கிறது. நீங்கள் அந்தப் பட்டா புத்தகத்தைக் கொடுக்கும்பொழுதே அந்த விவரங்கள் அனைத்தும் முழுமையாக அந்த பட்டா புத்தகத்திலே இருக்குமாறு பட்டா புத்தகத்தை வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லாரிகளிலே தண்ணீர் கொடுப்பதற்கு நீங்கள் அதிகமாகச்செலவு செய்கிறீர்கள். அதற்கு ஒரு நிரந்தரமான வழியை நீங்கள் தேடவேண்டும். இராமநாதபுரம் போன்ற



1992 மார்ச் 19] [திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்]

இடங்களிலே லாரிகளிலே இன்னும் தண்ணீர்கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள், லாரிகளிலே தண்ணீர் கொடுப்பது அந்தந்த ஆண்டுக்குத்தான் பயன்படுகிறது. இதற்கு ஒரு நிரந்தர வழியைத் தேடித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன், சென்னையிலே கடல்நீரை குடிநீராக மாற்றுவதாகக் கூறி இருக்கிறீர்கள், அதுபோல இராமநாதபுரத்திலே கடல் நீரை குடிநீராக மாற்றி அந்தப் பகுதி மக்களுக்கு நீங்கள் குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நில உச்சவரம்பை கொண்டுவந்து இருக்கிறீர் கள். உண்மையிலேயே அது பாராட்டுதலுக்குரியது. இன்று நிலம் அதிகமாக வைத்து இருப்பவர்களிடம் அதை அரசுபெற்று ஏழை எளிய மக்களுக்கு வழங்கி இருக்கிறீர்கள், இன்னும் உண் மையான ஏழை எளிய மக்கள் யார் என்பதை முழுமையாகத் தெரிந்து அந்த நிலங்களை வழங்க வேண்டும்.

அதுபோல, நமது அரசுக்கு இன்னொரு பெரிய வருமானம் இருக்கிறது. அதை நான் கூறுகிறேன். முடிந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். நிலத்திற்கு நீங்கள் எவ்வாறு உச்சவரம்பு விதித்தீர்களோ, அதுபோல ஒருவர் இவ்வளவு பணத்திற்குத் தான் சொந்தக்காரர் என்று ஏன் நீங்கள் வைக்கக் கூடாது? சிந்தித்துப்பாருங்கள். இப்போது அதிகப்படியான நிலம் உபரி யாக இருக்கிறது என்று எடுக்கிறோம். அதுபோல, பணம் உபரியாக இருக்கக்கூடியவர்களிடம் அதை எடுத்து, நீங்கள் ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்க வேண்டாம். இந்த நிர் வாகத்தைச் சீர்படுத்த இந்த அரசாங்கத்தை வலுப்படுத்த நீங்கள் ஏன் பயன்படுத்தக் கூடாது? அதை நன்றாக நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களது மாவட்ட நிர்வாகங்களைப் பொறுத்தமட்டில் இப்போது நாங்கள் சட்டமன்ற உறுப்பின ராக இருக்கிறோம். என்னுடைய தொகுதி இரண்டு மாவட்டங் களில் வருகிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக ஆனதி லிருந்து ஏறத்தாழ நான் இதற்கு முன்பாகவும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அப்போதும் இந்தப் பிரச்சினை யைக் கிளப்பினேன். நாங்கள் இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே கலந்துகொள்ள முழுமையான அதி காரம் எங்களுக்குத் தர வேண்டுமென்று கேட்டோம். ஆனால், இப்போது ஒரு மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்திலே சிறப்புப் பிரதிநிதியாக அழைத்து இருக்கிறார்கள். ஆனால், அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை நான் டி.டி.சி.யில் சப்ஜெக்ட் கொடுக்க முடியாத நிலையில் இருக் கிறேன், முன்னாள் முதலமைச்சர் சட்டத் திருத்தம் செய்வதற்கு

சொன்னார்கள். சென்ற ஆண்டு பேசும்போது நமது முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இந்தக் கூட்டத் தொடரிலாவது நீங்கள் அதனைச் செய்து வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்கிற அதிகாரத்தை வழங்க வேண்டும். அந்த சட்டத் திருத்தத்தை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–15

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு பகுதி இராமநாதபுரத்திலும் இன்னொரு பகுதி முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலும் வருகிறது. இதைப் பிரிக்கும்போது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதைப் பற்றி கூறியிருக்கிறேன். கண்ணங்குடி என்ற ஊராட்சி ஒன்றியம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. அதற்கு போவதென்றால் அங்கேயிருந்து குறைந்தது 25 கிலோ மீட்டர் வர வேண்டும். இங்கேயிருந்து ஒரு கிலோ மீட்டர்தான். பொதுவாக இதுபோன்ற நிலைமைகளை அரசு மாற்ற வேண்டும். ஒன்று இதனை இராமநாதபுரத்தில் சேர்க்க வேண்டும். அல்லது முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் சேர்க்க வேண்டும். இரண்டு மாவட்டங்களில் ஒரு தொகுதி வந்தால் நிச்சயமாக எங்களைப் போன்றவர்கள் சிறப்பாக அங்கே செயல்பட முடியாத நிலை இருக்கிறது. அதை நீங்கள் கவனத்தில் கொண்டு சரிசெய்ய வேண்டும். அங்கே சரிகணி என்ற ஊர் இருக்கிறது. அந்த சரிகணி பிர்க்கா, மங்கலகுடி பிர்க்காவைச் சேர்ந்த மக்கள், நாங்கள் வாக்கு கேட்கச் சென்றபோது எங்களுக்கு வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். எங்களை தேவர் மாவட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கோரினார்கள். அப்போது அரசிடம் எடுத்துக் கூறுவதாகக் கூறினோம். நீங்கள் நிச்சயமாக அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசைப் பொறுத்தவரையில் ஒரு சரியான நிலைமையில் அரசு சென்று கொண்டிருக்கிறது. எங்களுடைய மரியாதைக்குரிய பிரதம அமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். அதிலே அரசாங்கத்தில் இருக்கக்கூடிய துறைகளில் தேவையற்ற துறைகளை நிறுத்தி வைப்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள். அந்த எண்ணத்தை நீங்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய நமது அரசு நிச்சயமாக பின்பற்றி இங்கேயிருக்கக்கூடிய தேவையற்ற துறைகளை களையெடுத்து நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கே வறட்சி நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. கடுமையான குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது, எங்களுடைய இரு மாவட்டங்களையும் நீங்கள் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும். அதனை அந்தப் பகுதி மக்கள் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறார்கள். நீங்கள் அதனைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, அளித்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.



<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்,

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. எல்லோரும் பேசும்போது நான் இடையிடையே பேசப் போவதில்லை. ஆனால் சிலவற்றை இப்போதே சொல்லிவிட்டால் மற்ற உறுப்பினர்கள் சொல்லாமல் இருப்பார்கள் என்பதற்காகச் சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நான் கடைசியாக பதிலுரையில் அவற்றிற்கு பதில் சொல்ல இருக்கிறேன். பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோல இருக்கிற சங்கடங்கள் பற்றி சொல்கிறார்கள். ஊர்கள், ஊராட்சி ஒன்றியங்கள். வட்டங்கள், சரகங்கள் எப்படி எப்படி இருக்கின்றன என்று தெரிவித்து மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் பகுதியில் எந்தெந்த கிராமங்களை எப்படி எப்படிச் சேர்க்க வேண்டும். எந்தெந்த சரகத்தை எப்படி எப்படிச் சேர்க்க வேண்டும் என்பதற்கு நீங்கள் பொதுமக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டுச் சொல்லுங்கள். பொதுமக்கள் அபிப்பிராயம் அதற்கு ஒத்து வருமானால் அதைச் செய்து கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4–20

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. வி. கே. சின்னசாமி.

<u>திரு. வி. கே. சின்னசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகம், நிலவரித்துறை, வருவாய்த் துறை, முத்திரைத் தாள்கள்-நிர்வாகம், பத்திரப் பதிவு, பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் போன்ற அனைத்து மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

குறிப்பாக, நம்முடைய இதய தெய்வம், தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற குறுகிய
காலத்தில் மிகப் பெரிய மாவட்டமாக இருந்த தஞ்சாவூரை,
இரண்டாகப் பிரித்து, தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்ட
தஞ்சாவூர் மாவட்டம் என்றும், நாகைப்பட்டினத்தைத் தலை
நகராகக் கொண்ட நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்
என்றும், இரண்டாகப் பிரித்து, இரண்டு மாவட்டங்களாகப்
பிரித்து, அந்தப் பொதுமக்களுடைய நீண்டநாளைய கோரிக்
கையை நிறைவேற்றித்தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களையும்,
நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்களையும் இந்த
நேரத்திலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.
ஆக, இதுபோல், இன்னும் இருக்கின்ற பெரிய மாவட்டங்களை
எல்லாம் இரண்டாகப் பிரிக்கும் நிலைமையை உருவாக்குகிற
சூழ்நிலையை நாம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

அதேபோல். பெரிய வட்டங்களாக இருக்கின்ற வட்டங்
களையும் இரண்டாகப் பிரிப்பேன் என்று மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய
நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆக
இப்படி மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும்போது மக்கள்
அதிக நன்மையைப் பெறுகிறார்கள். குறிப்பாக கோவை
மாவட்டத்திலிருந்து, நாங்கள் பெரியார் மாவட்டம் என்று
தனியாகப் பிரித்த காரணத்தால், அந்த மாவட்டத்திலே
என்னென்ன வசதிகள், எப்படி எல்லாம் பொதுமக்கள் குறுகிய
காலத்திலே அவர்களுடைய பணிகளை முடிக்க முடிகிறது
என்பதை நாங்கள் எல்லாம் நேரடியாகக் கண்டு கொண்ட
வர்கள். ஆகவே இரண்டு மாவட்டங்களாக தஞ்சாவூரைப்
பிரித்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

குறிப்பாக, பட்டா கொடுப்பதில் நம்முடைய இதய தெய்வம்,
தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
காலையிலேயே சொன்ன கருத்திற்கு இணங்க, ஒரு அரசாங்
கத்தின் ஒரு கொள்கையை நிறைவேற்றவேண்டுமென்று
உத்தரவு போட்டாலும், அதிலே பணியாற்றுகிற அரசு
அதிகாரிகள் அதைச் செயல்படுத்துகின்ற அளவுக்கு மனப்
பக்குவம் பெற்றிருக்க வேண்டும். குறிப்பாக என்னுடைய
பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற வருவாய்த்துறை
அதிகாரிகளும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரும்
நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கின்ற கொள்கைகளை
செயலாக்குகின்ற அதிகாரிகளாக இருக்கிறார்கள் என்பதை நான்
பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்
கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள், காங்கேயம் வருகை தருகிற
நேரத்தில்—தமிழகத்திலே எந்தெந்த மாவட்டங்களுக்குச்
சென்றாலும், முதல்வர் அவர்கள் வருகின்ற நேரத்திலே—2





ஆயிரம் பட்டாக்களை உடனடியாக தயார் செய்து, இந்த
மேடையிலே கொடுக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்கித்
தந்தார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லிக்
கொள்கிறேன். அந்த மாவட்டத்திலே பணியாற்றுகிற
மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர்,
அவர்களுக்குத் துணையாக இருக்கின்ற கோட்ட, வட்ட
மற்றும் அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் நாம்
நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம். அதற்கு,
உறுதுணையாக இருந்த, நம்முடைய வருவாய்த் துறை
அமைச்சர் அவர்கள், உரிய நடவடிக்கை எடுத்ததற்கும் நான்
இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு எங்களுடைய பகுதியில் குறிப்பாக பவானி
சாகர் தொகுதியில், நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், பவானி
சாகர் ஊராட்சி ஒன்றியத்திலே புளியம்பட்டி, போன்ற பகுதி
களில் கடுமையான வறட்சி ஏற்பட்டு இருக்கிறது என்பதை
நான் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கக்
கடமைப்பட்டு இருக்கிறேன். நாங்கள் இதைப்பற்றி,
மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்ன
வுடனே, அந்தப் பகுதியிலே கடுமையான வறட்சி ஏற்பட்டு
இருக்கிறது. ஆகவே கூட்டுறவுக் கடனை எல்லாம் கொஞ்சம்
ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டவுடன், இன்றைக்கு ஜப்தி
செய்கின்ற நிலைமையைக் கூட உடனடியாக நிறுத்திய மாண்புமிகு
முதல்வர் அவர்களுக்கு நாம் இந்த நேரத்திலே விவசாயிகள்
சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம்.
இன்றைக்கு அங்கே ஏற்பட்டு இருக்கிற கடுமையான வறட்சியின்
காரணமாக, அந்தப் பகுதியிலே இருக்கிற கூலித் தொழிலாளர்
கள் ஏழை எளியவர்கள் எல்லாம் வேலைவாய்ப்பை இழந்திருக்
கிறார்கள். ஆகவே. அந்தப் பகுதியிலே இருக்கிற
குட்டைகள் போன்றவைகளை தூர் எடுத்து, அந்தப் பகுதியிலே
இருக்கிற கூலித் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கின்ற
நிலைமையை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் இந்த
நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி நண்பர் லாரித்
தண்ணீர் கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். இப்படி
கடுமையான வறட்சி ஏற்படுகின்றபோது, 2, 3 மாதங்களுக்கு
லாரித் தண்ணீரைக் கொடுத்துத்தான் தீரவேண்டும், காரணம்
கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கொஞ்சம்
காலதாமதமாகிறது. வருடக் கணக்கில் ஆகின்ற காரணத்
தால். உடனுக்குடன் பரிகாரம் தேடவேண்டுமானால், லாரித்
தண்ணீரைக் கொடுப்பதைத் தவிர, அரசாங்கத்திற்கு வேறு வழி
யில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்கிறேன்.

நம்பியூர் போன்ற பகுதிகளில் ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த லாரித் தண்ணீர் 6, 7 மாத காலமாக நிறுத்தப்பட்டது, காரணம், கொஞ்சம் மழை பெய்தது, ஆனால் இப்போது கடுமையான வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, புளியம் பட்டி, நம்பியூர் போன்ற பகுதிகளைச் சுற்றி இருக்கின்ற கிராமங்களுக்கு உடனடியாக லாரித் தண்ணீர் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில். கோபி, சத்திய மங்கலம், தாலுக்கா என்றால், கீழ்பவானி வாய்க்கால் இருக் கிறது. அல்லது அரக்கன்கோட்டை தடப்பள்ளி என்ற வாய்க் கால் இருக்கிறது. வருவாய்த்துறை அதிகாரிகள், அந்த மட்டும் பார்த்துவிட்டு, தெற்கே இருக்கிற பகுதிகளை விட்டு விடுகிறார்கள். எனவே, அந்தப் பகுதிகளையும் பார்த்து, புளியம்பட்டிக்குத் தெற்கே இருக்கிற பகுதிகளையும் பார்த்து, நிச்சயமாக வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன—அவைகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து. எங்களுக்கு. விவசாயிகளுக்கு சலுகைகளை வழங்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக நம்பியூரில் ஒழவக்கோயில். எம்மாம்பூண்டி பொலவபாளையம். வேமாண்டம்பாளையம். லாகம்பாளை யம், அஞ்சானூர், நம்பியூர் பேரூராட்சி, எலத்தூர் பேரூராட்சி நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் இருக்கின்ற பகுதிக்கு அருகில் இருக்கின்ற கோசணம். கெட்டிச் செவி போன்ற பகுதிகளையும், தாழ்குளை, வரப்பாளையம் போன்ற பகுதிகளையும் கட்டாயம் வறட்சிப் பகுதிகளாக அறிவித்தே ஆக வேண்டும், அதற்கு மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களும் துணை நிற்க வேண்டு மென்று இந்த நேரத்தில் பணிவன்புடன் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்,

பிற்பகல் 4-25

அதே போல புஞ்சைப்புளியம்பட்டி பகுதியில் காவளிப் பாளையம். காரப்பாடி, நொச்சிக்குட்டை, மாதம்பாளையம், நல்லூர், தேசிபாளையம், வின்னப்பள்ளி, புங்கம்பள்ளி, தொப்பம்பாளையம், போன்ற பகுதிகளில் இருக்கின்ற ஊராட் சிப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும், இதை நான் சொல்வதற்குக் காரணம் அங்கே உள்ள பகுதிகள் எல்லாம் வறட்சியோடு இருப்பதால், நிச்சயமாக அவற்றை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத் தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வறட்சிப் பணிகளில்



குளம் குட்டைகளை தூர் எடுத்தல் போன்றவற்றை நிறை வேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்,

இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பணி வன்போடு தெரிவித்துக் கொள்வது, நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காங் கேயம் பெரியார் மாவட்டத்திற்கு வருகை தந்து அங்கே ரூ. 225 கோடிக்கு மேலே பல திட்டங்களை நிறைவேற்றி விட்டு, தர்மபுரி மாவட்டத்திற்குச் சென்றார்கள், நம் முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களோடு நாங்களும் உடன் சென்றோம், அப் போது தர்மபுரி மாவட்டம் வரையில் வழி நெடுகிலும் இருந்த அந்தப் பகுதி தண்டல்காரர்கள் என்று சொல்லப்படுகின்ற அந்த கிராமப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் தடியை வைத்துக் கொண்டு, தமிழக முதல்வர் அவர்களுக்கு அங்கே பந்தோபஸ்திற்கு போலீசாரோடு நின்று கொண்டிருந்தார் கள், அவ்வாறு அவர்கள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு போலீசார் போல் நின்று காவல் புரிந்தார்கள், பணியாற்றினார்கள், ஆக அவர் களுக்கு போலீசாருக்கு காக்கி டிரெஸ் இருக்கிறதே அது போல் ஒரு யூனிபார்ம் டிரெஸ் இந்த தண்டல்காரர்களுக்கும் கொடுப்பதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், அவர்ளுக்கு சம்பளம், கூட கொஞ்சம் கூட்டித் தரவேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள், அதையும் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்து, அவர்கள் கையிலே ஒரு பேட்ஜ் போன்று கட்டிக் கொண்டிருந்தார்கள் அரசு அலுவலர்கள் போல் இவர்களும் யூனிபார்ம் சட்டை போட்டு. அதிலே அந்த பாட்ஜை மாட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணி வன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

பவானிசாகர் தொகுதியிலிருந்து பவானிசாகர் சப்—ரிஜிஸ்ட் ரார் ஆபீசிற்குச் செல்ல வேண்டுமென்றால் 20 கிலோ மீட்டர் நாங்கள் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே பவானிசாகரில் ஒரு சப்—ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

புஞ்சைப் புளியம்பட்டியிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.க, ஆட்சியில் 300 நபர்களுக்கு பட்டாக்கள் கொடுத்தார் கள், அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அப்போது அதை எதிர்த்தோம், அங்கே முறைகேடுகள் நடை பெறுகிறது என்று சொன்னோம், 1154 என்ற சர்வே நம் பரில் 300 பேர்களுக்கு வசதி படைத்தவர்களுக்கு, பினாமி

யாருக் கூட அங்கே கொடுத்திருக்கிறார்கள். அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூட அது குறித்து மனுக்கள் கொடுத்திருக்கிறோம், அதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து, அங்கேயுள்ள ஏழை விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழைகளுக்கும் வழங்க வேண்டும். காரணம், கொடுக்கப்பட்ட அந்த 300 நபர்களிலே யாரும் அந்த இடத்திலே குடியேறவில்லை. ஆகவே அந்த பட்டாக்களை ரத்து செய்து உண்மையான ஏழைகளுக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

... திமுக ஆட்சியில் உக்கரம் பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை முன்பு 67, 70 இடங்களில் கொடுத்தார்கள், அந்த இடங்களை இன்றைக்கு பல்வேறு நபர்களுக்கு எல்லாம் விற்றிருக்கிறார்கள். ஆக இன்றைக்கு விலை கொடுத்து கூட வாங்கி சில பேர் முழு விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள், யார் உழுது விவசாயம் செய்து வருகிறார்களோ, அவர்களுக்கு பட்டாக்களை வழங்கி சொந்தமாக்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு, இதிலே கலந்து கொண்டு பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. சுப்புரத்தினம்.

**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1992-93 ஆம் ஆண்டிற்கான வணிக வரித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே கலந்து கொண்டு பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன், என்னை இந்த அவையின் உறுப்பினராக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற் பாதம் வணங்குகின்றேன்.

மாநில அரசுக்குக் கிடைக்கின்ற மொத்த வருவாயில் 70 சதவீதம் வணிக வரியின் வாயிலாகக் கிடைப்பதாக அறிகிறேன், எனவே தான் வணிக வரித் துறையின் மாநில அரசின் காமதேனு என்று அழைக்கின்றார்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக வணிக வரியை அறிமுகப்படுத்திய பெருமை தமிழ் நாட்டையே சாரும், தமிழகம் மட்டுமல்லாது ஏறத்தாழ எல்லா மாநிலங்களிலுமே விற்பனை வரியே முக்கிய ஆதாரமாக உள்ளது, எனவே இத்துறையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் முகத்தான் பயன் அளிக்கும் பல முடிவுகளை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய கோரிக்கை





களில் குறிப்பிட்டுள்ளார்கள்; இந்தத் துறையின் செயல்பாட்டினை மேலும் செம்மைப்படுத்துவதற்காகவும் வணிகர்களின் நியாயமான இடர்பாடுகளை களைவதற்காகவும் ... வல்லுநர்களைக் கொண்ட ஒரு உயர் அதிகாரக் குழு ஏற்படுத்தப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும், இந்தக் குழு ... பிற மாநிலங்களுக்கும், தேவையானால் ... வெளிநாடுகளுக்கு சென்று அங்கெல்லாம் விற்பனை வரி நிர்வாகம் எப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய வேண்டியிருப்பதால் ... தேவைப்படு தரப்பட்டிருக்கும் 6 மாத கால அவகாசத்தை ... மாயின் கூட்டித்தருமாறு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4.30,

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பொதுமக்களுக்கும் பயன் அளிக்கும் பல வரிச் சலுகைகள் ... தரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மகளிருக்கு மகிழ்ச்சி அளிக்கும் பல வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன, தங்கத்தின் விலை சமீப காலத்தில் குறைந்திருந்தாலும் இன்னும் அது ஏழை எளிய மக்களின் வாங்கும் எல்லைக்குள் வரப்படவில்லை, இந்நிலையில் ... இமிடேஷன் ஜுவல்லரியிலேயே அவர்கள் வாங்க வேண்டியவர்களாக உள்ளார்கள் அதற்கு 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக வரி குறைக்கப்பட்டிருப்பதை அவர்கள் நிச்சயமாக வரவேற்பார்கள் என்று நான் நம்புகிறேன் மகளிர் விருப்பத்துடன் பயன்படுத்தும் பொருட்களான குங்குமம், கண் மை போன்றவைகளுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும்,

சேமியா ... மட்டுமல்லாது மெழுகுப் பொருட்களுக்கும் ... பெண்கள் ... அளிக்கப்பட்டிருக்கும் வரிச் சலுகைகளை ... இல்லத்தரசிகளுக்கு ... வரவேற்பார்கள் ... பொதுவாக இது ... செலவுத் திட்டமாகும், அவர்கள் மகிழ்ச்சி அளிக்கும் வரவு ... குடிப்பழக்கத்திற்கு ஆளாகி குடும்பத்திற்கு ... என்ற நல்ல எண்ணத்தில் மது ... விலை ... உயர்த்தப்பட்டிருக்கிறது, பொதுவாக ... புரட்சித் தலைவி அரசு மனதில் கொண்டு ... இந்த வரிச் சலுகைகளும் ... தெரிவிக்கின்றன.

... விவசாயத் துறையில் முக்கியப் ... டிராக்டர்கள் மீதான நுழைவு வரி 15 சதவீதத் ... குறைத்திருப்பது வரவேற்பதற்குரிய ... டிராக்டர்களுக்கு விற்பனை வரி ... இத்துடன் ... விலக்கு அளிப்பது ... நுழைவு வரியிலிருந்து முழு வரி ... வருவாய்த்துறை அமைச்சர் ... பற்றி ... வேண்டுமாய் நான் ... தற்போது வணிகவரித் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறை அலுவலகத்திற்கு வருகை தரும் வணிகர்களுக்கு, பார்வையாளர்களுக்கான இடமும், இருக்கை வசதிகளும் போதுமான அளவில் இல்லாததால் அவர்கள் பல சிரமத்திற்கு ஆளாகின்றனர். அதனைக் கருத்தில் கொண்டு நாற்காலி, மேசை வாங்குவதற்காக ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் வழங்க உத்தேசித்து இருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அரசின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும்.

மிகவும் வரவேற்கத்தக்கவகையில் அமைந்துள்ள வணிக வரித் துறை மானியக் கோரிக்கைகளில் என்னுடைய ஒருசில கருத்துக்களை முன்வைக்கிறேன். வணிகர்கள் செலுத்தும் விற்பனை வரி அவர்களுடைய விற்பனைத் தொகையிலிருந்து கணக்கிடப்படுகிறது. விற்பனைத்தொகை என்பது அவர்கள் பதிவு செய்யும் அடிப்படை ஆவணம்—அதாவது விற்பனைப்பட்டியல் ஆகும் சில வணிகர்கள் 2 விதமான விற்பனைப்பட்டியலை வைத்துக்கொண்டு அவற்றில் ஒன்றில் பதிவு செய்யும் விற்பனைகளை மட்டுமே அதிகாரிகளுக்கு காண்பித்து வரி ஏய்ப்பு செய்வதாகக்கூறி. பொதுவான கருத்து அபிப்பிராயம் நிலவுகிறது. இத்தகைய வரி மறைப்பினை தவிர்க்கவும் அதே நேரத்தில் அரசுக்கு எந்தவிதமான செலவும் இல்லாத வகையில் ஆயிரக் கணக்கான படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் ஒரு திட்டத்தினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுடைய மேலான பார்வைக்கும் பரிசீலனைக்கும் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

வணிகர்களுக்குத் தேவைப்படும் விற்பனைப் பட்டியல் அனைத்தையும் அரசே அச்சிட்டு வழங்கலாம். அவ்வாறு வழங்குவதன் மூலமாக விற்பனைப் பட்டியலில் பதியப்படும் விற்பனைத்தொகை முழுமையாக வணிக வரித்துறைக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்கள் வரிசெலுத்த வழிவகுக்கும். லட்சக்கணக்கான வணிகர்களுக்கு தேவைப்படும் கோடிக்கணக்கான விற்பனைப்பட்டியல் களை அச்சிட்டு உரிய பதிவேடுகளை வழங்கவும் விற்பனைப் பட்டியல்கள் பயன்படுத்தப்படுவதை சரிபார்க்கவும் ஆயிரக் கணக்கான இளைஞர்களை பணிக்கு அமர்த்த வேண்டிய தேவை ஏற்படும். அவ்வாறு அமர்த்தப்படும் பணியாளர்களின் ஊதியம் அச்சிட ஆகும் செலவு ஆகியவற்றைக் கணக்கிட்டு விற்பனைப் பட்டியல்களுக்கு கட்டணம் நிர்ணயிக்கலாம் அதனால் வணிகர்களுக்கும் தொல்லை இல்லை அரசுக்கும் கூடுதல் செலவு இன்றி ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கலாம். வரி ஏய்ப்பு குறைந்து அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கவும் வழி வகுக்கும். ஆகவே என்னுடைய இந்த யோசனையை, நடைமுறை சாத்தியத்தை அருள் கூர்ந்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் ஒரு செய்தி வந்துள்ளது Comproller and Auditor— of India மாநில அரசின் வருவாய் பற்றிய செய்தியில் General Revenue Receipts of the State Government என்ற தலைப்பில் பத்திரிகைகளுக்கு அளித்த ஒரு பேட்டியில் தமிழ்நாட்டில் 338.16 கோடி ரூபாய் விற்பனை வரிவசூலிக்கப் படாமல் நிலுவையாக இருப்பதாக குறிப்பிட்டார்கள். நிலுவையாக உள்ள இத்தொகையை தீவிர நடவடிக்கை எடுத்து வசூல் செய்தால் அரசின் வருவாய் பெருக இது வழி வகுக்கும். தற்போது வரிவிதிப்பு அலுவலக மேற்பார்வை முதலிய பணி களைச் செய்யும் அலுவலர்களே வரி வசூல் செய்யும் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதால் பழைய நிலுவைகளை தனிக் கவனம் செலுத்தி வசூல் செய்ய இயலாத நிலை உள்ளது. பழைய நிலுவைகளை வசூல் செய்வதற்கு மட்டும் தனியாக வரி வசூல் பிரிவு ஒன்றை அமைத்தால் அது அரசின் வருவாயை அதிகரிக்க வழிவகுக்கும்.

பிற்பகல் 4-35

வியாபாரத்தில் லாபமும் நஷ்டமும் இயற்கை, சில வணிகர்கள் நஷ்டத்திற்குட்பட்டு வரி பாக்கித் தொகையினை உடனடி யாகச் செலுத்த வழியில்லாது இருக்கிறார்கள் இத்தகைய வணிகர்களுக்கு அவர்களது பொருளாதார சூழ்நிலைக்கேற்ப எளிய தவணைகளில் வரி பாக்கியினைச் செலுத்த அனுமதி அளிக்கும் அதிகாரம் தற்போது துறையின் உயர் அதிகாரிகளுக்குக் கூட கிடையாது என அறிகிறேன். இந்த நிலுவையினை அகற்ற குறைந்தபட்சம் மாவட்ட அதிகாரிகளுக்காவது இந்த அதிகாரத் அதிகாரத்தை வழங்க சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளலாம் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நீண்டகாலமாக நிலுவையாக இருக்கும் வரிபாக்கித் தொகையினை பாக்கி தாரரே தாமாக முன் வந்து செலுத்தும் போது தற்போது விதிக்கப்படும் அபராத வட்டியினை ரத்து செய்யும் அதிகாரமும் மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்கலாம் என்றும் பரிந்துரை செய் கிறேன். தற்போது வணிக வரித்துறையில் உள்ள முக்கிய பிரிவுகளான செயலாக்கப்பிரிவு. வரி விதிப்புப்பிரிவு ஆகிய இந்த இரண்டு பிரிவுகளையும் சேர்த்து ஆணையிடும் அதிகாரம் துறைத் தலைவரான வணிக வரி ஆணையரிடமே உள்ளது. அதற்கு அடுத்த நிலையில் இப்பிரிவுகள் தனித்தனி அதிகாகளால் நிர்வாகம் செய்யப்படுகிறது. இதனால் இரு பிரிவுகளிலும் உரிய முறையில் இணைந்து செயல்பட வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. நடைமுறையில் இது பல சிக்கல்களுக்கு வழி வகுக்கிறது. சில நேரங்களில் ஒரே வணிகரின் வியாபார இடத்திலே மிகக் குறைந்தகால இடைவெளியில் இரு பிரிவின ருமே சோதனை செய்ய நேரிடுகிறது.

செயலாக்கப் பிரிவு அலுவலர்களுக்கு வரியை வசூலிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏதும் இல்லாததால் அவர்கள் தங்கள் செயல் திறமையை அதிகப்படுத்தி காண்பித்துக்கொள்வதற்காக

தாங்கள் கண்டுபிடிக்கும் வரி மதிப்புத் தொகையினை செயற்கையாக மிக அதிகமாக மதிப்பிட்டு வரி விதிப்பு அலுவலர்க்கு பபோசல்ஸ் அனுப்புவதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. தற்போது வசூலாகாத நிலுவையாக இருக்கும் தொகையில் பெரும் பங்கு இத்தகைய மிகைப்படுத்தப்பட்ட 'ப்ரப்போசல்ஸ்' ஸ் னாலே உண்டாயிற்று என அறிகிறேன். இந்தக் குறைகளை அகற்றுவதற்காக மாவட்ட அதிகாரியான ஒரு உதவி ஆணையரின் அதிகாரத்தின் கீழ் இம்மாவட்ட வரிவிதிப்பு அலுவலர்களும் செயலாக்க அலுவலர்களும் பணியாற்ற வேண்டும் என்று நிர்வாக முறையில் மாற்றம் கொண்டு வரவேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவை துணைத்தலைவர்: திரு. ஜி. பழனிச்சாமி.

திரு. ஜி.பழனிசாமி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய வருவாய்த் துறை எழுதுபொருள் அச்சுத்துறை, பத்திரப் பதிவு முத்திரைத் தாள், பொது விற்பனை வரி மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மிக்க அனுபவத்தோடு வருவாய்த் துறையினுடைய பொறுப்பை ஏற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அரசு கஜானாவிற்கு நிதி ஆதாரங்களை கொண்டு வரும் துறை என்று சொன்னால் அது வருவாய்த் துறை தான். அந்த வருவாய்த்துறையிலிருந்து கல்வித் துறைக்குத் தொடர்பான சான்றுகளைப் பெறுவதால், மக்களுடைய பிரச்சினையில் வருவாய்த் துறை மிகவும் ஒரு முக்கியமான துறையாக விளங்குகிறது. அந்தத் துறையிலே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்தத் துறையின் அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்டு வருவதால், செம்மையாகவும், திறமையான முறையிலும் கடந்த காலங்களிலே நிர்வாகம் செய்திருக்கின்ற அனுபவமும் அவர்களுக்கு உண்டு. ஏற்கனவே பட்டா பாஸ் புத்தகம் வழங்கு கின்ற திட்டத்தை அவர்கள் ரெவின்யூ அமைச்சராக இருந்த போது தமிழகத்திலே நிறைவேற்றினார்கள். தஞ்சை மாவட்டத்திலே முழுமையாக அந்த பட்டா பாஸ் புத்தகம் வழங்குகின்ற திட்டம் விரிவுபடுத்தப்பட்டு விவசாயிகளுக்கு எந்தெந்த நிலங்கள் எந்தெந்த எல்லைகளில் இருக்கின்றன என்று இடம் தெரியாமல் அந்த வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலிருந்து, பண்ணையார் ஆட்சிக் காலத்திலிருந்து வாங்கியவர்களுக்கெல்லாம், நிலங்கள் கூடக் குறைச்சல் இருந்தவற்றையெல்லாம் அளந்து அவர்கள் கைக்கு கிடைக்கின்ற வாய்ப்பை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள். இன்றையதினம் இந்த கொள்கைவிளக்கக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று கொண்டு வந்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதே நேரத்தில் சென்ற தடவை அப்படிப் பட்டா பாஸ் புத்தகம் வழங்குகின்ற



போது சில இடங்களிலே சில தவறுகள் நடந்தன. பெயர் மாற்றங்கள் நடந்தன. வட்டத்தினுடைய நம்பர்கள் மாற்றப் பட்டிருந்தன. நிலத்தினுடைய சர்வே நம்பர்கள் மாற்றப்பட்டு இருந்தன. இதர இடங்களிலே கோர்ட்டுக்கு போக வேண்டிய நிலைமைகள்கூட இருந்தது. காரணம் அதில் சம்பந்தப்பட்டிருக்கின்ற ரெவின்யூ அதிகாரிகள், அன்றைக்கிருந்த வட்ட கணக்குப் பிள்ளையாக இருந்தவர்கள் எல்லாம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபோது நடைபெற்ற சில தவறுகளைக் கணக்கிலே கொண்டு தனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று சில முறைகேடான செயல்களிலே ஈடுபட்டார்கள். அதுபோன்று இப்பொழுது ஈடுபடாத வகையிலே அமைச்சர் அவர்கள் அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிடுவார் என்று நம்புகிறேன்.

பிற்பகல் 4-40

அதேபோல் இன்னும் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக பெண்களுக்குப்பட்டா வழங்கப்படும் திட்டம் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே நான் அதை வரவேற்கிறேன். அனேகமாக இன்றைக்கு தமிழகத்திலே தொடர்ந்து பட்டாக்கள் பல்வேறு இடங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. பலபேர் மனுக்களைப் போட்டு பட்டா கிடைக்காமல்கூட இன்றையதினம் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அதிலும் மாநகராட்சிப் பகுதியில் ஒரு சென்ட் என்றும், நகராட்சிப் பகுதிகளில் 1—1/2 சென்ட் என்றும் எல்லாம் சொல்லி இன்றையதினம் இதில் கூறப்பட்டிருக்கிறது. மாநகராட்சி, நகராட்சிகளில் எல்லாம் ஒரு சென்டில், 1—1/2 சென்டில் ஒரு குடும்பத்திற்கு வீடு கட்டுவது என்பது நிச்சயமாக போதுமானது அல்ல. பல ஏழை எளிய அரிசனங்கள் பல இடங்களில் ஆண்டாண்டு காலமாக அரசு புறம்போக்கு நிலங்களில் நகராட்சி, பேரூராட்சி போன்ற பகுதிகளில் குடியிருக்கக் கூடியவர்களுக்கு குறைந்தது 3 சென்டாவது அமல்படுத்துவது என்பதுதான் அவர்கள் குடியிருப்பிற்கு சாதாரணமாக சரியாக இருக்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்பவும் அதை பரிசீலனை செய்வார்கள் என்று கருதுகிறேன்.

அதே போல்தான் நாம் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறோம்; 1990 ஆம் ஆண்டு 3 இலட்சத்து 25 ஆயிரம் பட்டா; 1991 ஆம் ஆண்டு 3,77,069 பட்டா; 1992 ஆம் ஆண்டிலே 4,01,823 பட்டா. ஆதி திராவிடர்களுக்கு 1,51,215 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் அதேபோல் மலைவாழ் மக்களுக்கும், பிற மக்களுக்கும் சேர்த்து பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பதாக இதில் கூறப்பட்டிருக்கிறது. நான் ஏன் இதைக் கூற விரும்புகிறேன் என்று சொன்னால் தொடர்ந்து ஒரு சொல்லப்பட்டு வருகிறது என்று சொன்னால் அனேகமாக இது தொடர்ந்து வருவாய்த்துறை அந்த கொள்கை குறிப்பில் அந்தப் பட்டியல் வந்து கொண்டே இருக்கிறது. ஆகவே இந்த

பட்டியலைத் தொடர்ந்து பட்டா கொடுக்கிறோம். மனுக்கள்
போடுகிறார்கள் என்று இப்படி செய்கிபோது இந்த பட்டர
வினுடைய பட்டியல் என்பது தொடர்ந்து நீடித்துக்கொண்டு
வருவதில் நான் ஒன்றைக் குறிப்பாக சொல்ல விரும்புவது
உண்மையாக இந்தப் பட்டா வழங்கப்பட்டாலும் கூட அநேகமாக
அங்கே இருக்கக்கூடிய ரெவின்யூ வட்டாரத்திற்குள் பட்டா
வழங்கக்கூடிய தாசில்தாரிடம் பல பேர் மனு போட்டு பட்டா
கிடைக்கவில்லை. ரான் ஒரு உதாரணத்தைச் சொலல விரும்பு
கிறேன். தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு முன்பாக
5 ஆயிரம் பேர்கள் அங்கே இருக்கக்கூடிய ஆர்.டி.ஓ., தாசில்தார்
ரெவின்யூ இன்ஸ்பெக்டர், வி.ஏ.—கிராம அதிகாரி இவ்வளவு
பேருக்கும் அந்த வட்டார வாரியாக மனுக்கள் தயார் செய்து
கிட்டத்தட்ட நான் 5 ஆயிரம் மனுக்களை ரெவின்யூ வட்டம்
வாரியாக தயார் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம்
கொடுத்தேன். அவர்கள் கூட ஆச்சரியப்பட்டார்கள், என்னுடைய
ரெவின்யூ அதிகாரிகள் கூட இப்படி செய்ய முடியாது. நீங்கள்
எப்படிச் செய்து கொடுத்தீர்கள் என்று கூடக் கேட்டு ஆச்சரியப்
படக்கூடிய அளவுக்கு அவர்களைப் ப்பார்த்து ஆந்தப்பணியைத்
துவக்க ஏற்பாடு செய்தேன். ஆந்த 5 அயிரம் பேருடைய மனுவும்
விசாரணைக்கு வந்தது. ஆனால் யாருக்கும் பட்டா கொடுக்க
வில்லை. ஏன் என்று சொன்னால் இப்படி நடவடிக்கை எடுக்கிற
போது நாங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து
பட்டா வழங்கவேண்டுமென்று முயற்சி எடுத்தும் கூட ஆதிகாரிகள்
ஆதற்கு ஒத்துழைக்கவில்லை. ஆகவேஅதை நீங்கள் துரிதப்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைபட்டிருக்கிறேன்.

அதேபோல் கோவில் நிலங்கள் பெரும்பதி தஞ்சை மாவட்
டத்தில் இருப்பது உங்களுக்குத் தெரியும். தஞ்சை மாவட்டத்
தில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் அநேகமாக தோவில்
இடங்களில் குடியிருக்கிறார்கள். ஆண்டாண்டுக் காலமாக
குடியிருக்கிறார்கள். அரசு அவர்களுக்கு பல்வேறு சலுகை
களை வழங்கிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு காலனி வீடு
கள், தொகுலபு வீடுகள் என்று கட்டிக் கொடுக்கப்படுகிறது.
இப்படி லோனில் வீடுகள் கட்ட வேண்டுமென்று சொன்னால்
கோவிலில் அனுமதி பெற்றுதான் அங்கே பட்டா கொத்தால்
தான் கட்ட முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே
கோவில் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கூட அந்த 3
சென்ட் என்ற அடிப்படையிலாவது நீங்கள் பட்டா கொடுத்
தால் இதுபோன்ற தொகுப்பு வீடுகளை தாழ்த்தப்பட்ட ஏழை
எளிய அரிசன மக்கள் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.
அதிலே ஒரு சட்டத் திருத்தத்தை தாங்கள் கொண்டுவர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு விளையும் நிலங்கள், அதேபோல்
குத்தகை விவசாயிகள் 1399 ஆம் ஆண்டு பதவிக்கு 1—7—1990
முதல் அனேகமாக அந்த விவசாயிகளுடைய விளைநிலங்களில்



ஏற்பட்டு இருக்கிற, இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்டு
இருக்கிற; வறட்சி, வெள்ளம், புயல் போன்ற நேரங்களில் வரி
ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு 30— 6— 1991 வரை
ஒத்திவைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலும்கூட அந்த
விவசாயிகள் ஒத்திவைக்க வேண்டுமென்று மனுக்கள் எல்லாம்
எழுதிக் கொடுத்து தன்னுடைய ஒத்திவைப்பைப் பெற்றுக்
கொண்டார்கள். அதில் மீண்டும் நம்முடைய அரசு இன்றைக்கு
என்ன கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால்
ரெவின்யூ கோர்ட்டை திறப்பதற்கும் அதன்மூலம் வசூல்
செய்வதற்கும் வாய்ப்புகளை உண்டுபண்ணுவதாக சொல்லி
யிருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு ரெவின்யூ கோர்ட் மூல
மாக அந்த விவசாயிகள்மீது நடவடிக்கை எடுத்தால்
தொடர்ந்து விவசாயிகள், குத்தகை விவசாயிகள் தன்னுடைய
விளைநிலங்களிலிருந்து சாதாரணமாக அந்த அந்த ஆண்டு
விளையும் நெல்லிலிருந்து தனக்குக் கிடைக்கக்கூடிய வரு
மானத்தை அந்த ஆண்டில் அவர்கள் பூர்த்தி செய்ய முடியாத
நிலைமை இருக்கிறது. ஆகவே, வறட்சி, வெள்ளம் போன்ற
காலங்களில் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த விவசாயிகள்
மீண்டும் கட்ட வேண்டும் என்று சொல்லாமல் தொடர்ந்து
அரசு ஒத்திவைத்துக்கொண்டே இருந்ததால் அந்த விவசாயி
கடனாளியாக இருப்பார்களே தவிர தன்னிறைவை அடைய
முடியாத அந்த நிலை தான் ஏற்படும் என்பதை நான் இந்த
சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இதிலே இன்னொரு குறிப்பைக்கூட
நான் பார்த்தேன். இராமநாதபுரம், பசும்பொன், திருநெல்
வேலி–கட்டபொம்மன் மற்றும் தஞ்சை மாவட்டங்களில்
வறட்சி, வெள்ளக் காலங்களில், அநேகமாக. . . (மணியடிக்
கப்பெற்றது).

பிற்பகல் 4–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : ரூ. 1,08,35,524—ஐ அரசு தள்ளுபடி
செய்தது. நிலவரியை ரத்து செய்தது என்று குறிப்பிடப்பட்
டிருக்கிறது. பாக்கி இருக்கிற கடன்களை, அதாவது நிலவரியை
அடுத்த விளைச்சல் ஆண்டில், அதாவது 1400 ஆம் ஆண்டு
வசூல் செய்து கொள்ளலாம் என்று சொல்லி அரசு அன்றைய
தினத்திலே உத்தரவு பிறப்பித்தது. 29–ஆம் பக்கம் பாரா
18–லே சொல்லியிருக்கிறார்கள்; 1991–92 ஆம் ஆண்டு வட
கிழக்குப் பருவ மழை தவறியதன் காரணமாக குடிதண்ணீர்
கூட வழங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று
சொல்லியிருக்கிறார்கள். மேலே இருக்கக்கூடிய மாவட்டங்
களைச் சொல்லி, குடிதண்ணீருக்காக 3.79 கோடி ரூபாய்

டி.2 53-40–18

அரசால் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால் ஒத்திவைக்கப்பட்டு இருக்கிற அந்தக் கடன் தொகையை, அந்த விவசாயிகளால் எப்படி திரும்பவும் கட்ட முடியும்? ஒத்திவைக்கப்பட்டதன் மூலமாக தொடர்ந்து அந்த விவசாயிகள் கடனிலே ஆட்படுவார்களே தவிர நிச்சயமாக அவர்களால் அதிலேயிருந்து மீளவே முடியாது.

அதே பக்கம் பாரா 18–லே வறட்சி என்று சொல்கிறபோது, இது தள்ளுபடி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு இதை மறு பரிசீலனை செய்து, அதையும் தள்ளுபடி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில், நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக 1964–ஆம் ஆண்டிலிருந்து அந்தச் சட்டங்களை நாம் அமல்படுத்திக் கொண்டு வந்து இருக்கிறோம். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர், 15 ஸ்டாண்டர்டு ஏக்கர், 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று தொடர்ந்து பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்திருந்தாலும்கூட, அந்தக் கொள்கைக் குறிப்புகளையெல்லாம் நாம் எடுத்துப் பார்க்கிறபோது அந்த 1 கோடியே 80 லட்சத்து 260 ஏக்கர் என்பது தொடர்ந்து, அதே கணக்கிலேயே வந்து கொண்டு இருக்கிறது. அந்த ஏக்கர் என்பது அதே கணக்கிலேயே தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. அதிலேயிருந்து கூடவும் இல்லை; குறையவும் இல்லை. அப்படியென்று சொன்னால் இந்த நில உச்சவரம்புச் சட்டம் எப்படி அமல் படுத்தப்பட்டிருக்கும்? எப்படி நிலத்தை எடுத்து இருக்க முடியும்? எப்படி நிலத்தைக் கையகப்படுத்தியிருப்போம்? எப்படி விவசாயத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு இருக்கும் என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். சென்ற தடவை கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட அதிகாரிகள் இதையேதான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்போது கொடுத்திருப்பதிலும் அதையேதான் கொடுத்திருக்கிறார்கள். தொடர்ந்து பார்த்தோம் என்றால், அந்தப் பட்டியல் வந்து கொண்டே இருக்கிறது. இப்படிக் கணக்கு காட்டுவதைவிட, மத்திய அரசிலே கூடச் சொல்லியிருக்கிறார்கள். நில உச்சவரம்புச் சட்டங்களை உடனடியாக அமுல்படுத்தவேண்டுமென்று. அவ்வாறு அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள், கொள்கை ரீதியிலே நாங்கள் இந்தத் திட்டத்தை அமல்படுத்தப் போகிறோம் என்று சொல்லி நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் இப்போது அறிவித்து இருக்கிறார்கள். இனிமேல் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. பாரதப் பிரதமர் சொன்னதற்குப் பிறகு, தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற நிலங்களை, உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுப்பதிலே அரசு தயக்கமே காட்ட வேண்டிய அவசியம் இல்லை. இதையே பல தடவை நான் இந்தச் சட்டமன்றத்தில்



1989, 1990, 1991 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து சொல்லியிருக்கிறேன், மத்திய அரசே அனுமதி கொடுத்து இருக்கிறது, தயக்கம் இல்லாமல் நீங்கள் நடவடிக்கை எடுங்கள், அதே போன்று கும்பகோணத்திலே, பாபநாசத்திலே சுந்தர பெருமாள் கோயிலிலே என்று தொடர்ந்து இதைச் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆகவே, அந்த நிலங்களை நீங்கள் தயக்கம் இல்லாமல் எடுப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது, அந்த நிலங்களை நீங்கள் எடுங்கள் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் நிலம் எடுப்பதற்குக் கூட மாநில அரசும் மத்திய அரசும் 50:50 என்றவிகிதத்தில் நிதி ஒதுக்குவதாக சொல்லியிருக்கிறார்கள். இதை முழுமையாகப் பயன்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு அதில் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வரக்கூடிய குத்தகை பாக்கிகளை நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டும். கோயில் நிலங்களில் பயிரிடும் குத்தகை விவசாயிகளை வெளியேற்றுவதற்கு நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்து இருக்கிறீர்கள். நகரிலே இருக்கக் கூடிய நிலங்கள் 99 வருடங்களுக்குக் குத்தகை எடுத்து, அதிலே பெரிய பெரிய கடைகளைக் கட்டி இருக்கக்கூடியவர்கள் பெரிய பெரிய மாளிகைகளைக் கட்டியிருக்கக் கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள், ஆனால், சாதாரணமாகக் கோயில் நிலங்களை நம்பி விவசாயம் செய்யக்கூடிய கிராமப் புறங்களில் இருக்கிற குத்தகை விவசாயிகள் மீது ரெவின்யூ கோர்ட்டிலே வழக்கு தொடர்ந்து, அவர்களை அந்த நிலங்களிலேயிருந்து வெளியேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்றுதான், தஞ்சை மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களிலும் இருக்கிறது. அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து 8 மாதகாலம் கடந்தோடி விட்டது, அந்த மாவட்டத்தில் வளர்ச்சி மன்றக் கூட்டமே இன்னும் நடைபெறவில்லை, தொடர்ந்து அதிகாரிகள் பங்குகொள்கின்ற கூட்டத்தையே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள், அங்கே என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன, என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை; தொகுதிகளினுடைய நிலைமைகளை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசுவதற்கு ஒரு வாய்ப்பு இல்லாத நிலைமை நாகை-காயிதேமில்லத் மாவட்டத்திலே இருக்கிறது, ஆகவே, உடனடியாக வளர்ச்சி மன்றக் கூட்டங்களை நடத்துவதற்கு அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள், இன்னும் 14 பேர் பேச வேண்டும், (குறுக்கீடு) ஐந்து நிமிடமா? இதோடு முடியுங்கள்.

பிற்பகல் 4-50

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிராம நிர்வாக அதிகாரிகள் - மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள்—அவர்கள் பல்வேறு ஊர்களிலேயிருந்து, கிராமங்களிலேயிருந்து வந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊரிலேயே தங்குவது இல்லை, இதனால், ஒரு அவசரத்திற்கு சர்ட்டிபிகேட் வாங்க வேண்டும். குழந்தைகளுக்கு சர்ட்டிபிகேட் வாங்க வேண்டும், ஒருவரை ஜாமீனிலே எடுக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களைத் தேடிக்கொண்டு பல்வேறு தாலுக்காக்களுக்குப் போக வேண்டியிருக்கிறது. ஒரு ரெவின்யூ மட்டத்திலேயே அவர்கள் இருப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில், நிரந்தரமாக அந்த அதிகாரிகளை நியமிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்,

அதுபோன்று, கிராமப் பணியாளர்கள்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோருக்கும் வாய்ப்பு தரவேண்டும், திரு. தண்டாயுதபாணி,

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. இன்றையதினம் நில வரித்துறை, மாவட்ட நிருவாகம். இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு போன்று இப்படி. வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இங்கே கோரியுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற ஒரு அரிய வாய்ப்பை நல்கியமைக்காக முதலிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக எல்லோரும் நில வரித் துறை பற்றியும் மாவட்ட நிருவாகத்தைப் பற்றியும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றியுமெல்லாம் பேசினார்கள், ஆனால் முதலிலே நான் இயற்கைச் சீற்றங்களும், அதை குறித்த துயர் தணிப்பு ஆகிய இவைகளைப் பற்றி பேச விழைகிறேன், ஏனென்று சொன்னால் வரியைப் பற்றியும், வணிக வரியைப் பற்றியும் மற்றவர்கள் பேசியிருந்தாலும், கோரிக்கை எண், 41. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பைப் பற்றி நான் இங்கே முதலிலே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

காரணம், என்னுடைய தொகுதியிலே, வருமுன் காக்க வேண்டுமென்று சொல்வார்கள், வருமுன் காக்க வேண்டுமென்று சொன்னால், வெள்ளம் வந்ததற்குப் பின்னால் அணை கட்டுவது



சரியாக இருக்காது. வெள்ளம் வருவதற்கு முன்னாலேயே அணையைக் கட்டிவிட வேண்டுமென்று சொல்வார்கள், சுமார் 5,000 குடும்பங்கள் அங்கே நாசமாகிவிட்டன, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அங்கே பாதிப்புக்கு உள்ளானார்கள், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெள்ள நிவாரணப் பணிகளிலே துரிதமாக ஈடுபட்டு, அங்கே உதவியும் செய்தார்கள், இந்தப் புத்தகத்திலே குறிப்பிட்டுள்ளதைப் போல, 1991-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே ஏற்பட்ட நஷ்டங்களுக்கு—வெள்ளச் சேதத்தால் ஏற்பட்டவைகளுக்கு 389 கோடி ரூபாயை மைய அரசிடம் கோரியுள்ளதாக நீங்கள் இங்கே கூறியுள்ளீர்கள், அதில் மைய அரசாங்கம் எவ்வளவு அளித்திருக்கின்றது? மாநில அரசாங்கம் எவ்வளவு தூரம் செலவு செய்திருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஏன் இயற்கைச் சீற்றங்களைப் பற்றி மட்டும் பேச ஆசைப்படுகிறேன் என்று சொன்னால் மாநிலத்திலே உள்ள அமைச்சர்களானாலும் சரி. மத்தியிலே உள்ளவர்களானாலும் ஹெலிகாப்டரிலேயும். பிளேனிலேயும் பறந்து சென்று எங்கெங்கே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு வந்து விடுகிறார்கள், அதனுடைய மதிப்பீடு சுமார் முன்னூற்றுச் சொச்சம் கோடி என்று சொல்கிறார்கள்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே அந்த இடத்தில் கவுண்டின்ய மகாநதி என்ற ஒரு நதி ஓடுகிறது, அந்த நதியிலே இதுவரையிலே அதிகமான தண்ணீர் வந்தது கிடையாது, கடந்த நாற்பதாண்டுகளுக்குப் பின்னாலே இப்பொழுது அதிகமாக வெள்ளம் வந்து, இயற்கைச் சீற்றம் ஏற்பட்டு, இலட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டார்கள்.

அந்த ஆற்றின் அருகே ஒரு அணையைக் கட்ட வேண்டும் என்று சொல்லி, பல ஆண்டுக் காலமாகச் சொல்லி வந்து இரண்டாண்டுகளுக்கு முன்பாக 24 கோடி ரூபாயிலே அந்த அணையைக் கட்டுவதற்குத் திட்டம் தீட்டினார்கள். போன வருடம்—ஏனென்று சொன்னால், வருமுன் காக்க வேண்டுமென்பதற்காக. போன வருடம் பொதுப்பணித் துறை அதிலே 47 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, 31 இலட்சம் ரூபாயைச் செலவு செய்து வருகின்ற ஆண்டுக்கு ஒரு கோடி ஒதுக்கி இருக்கிறார்கள், 24 கோடி திட்டத்திலே கட்ட வேண்டிய அணைக்கு, ஒரு கோடி ஒதுக்கினால், ஒருவேளை வெள்ளி விழா கொண்டாட வேண்டியதுதான் அந்த அணை கட்டி முடிப்பதற்காக, ஆகவே. நான் மிகப் பணிவன்போடு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன்; இன்னும் அதிகமாக அதற்கு நிதியை ஒதுக்கித் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்,

இந்த இயற்கையினுடைய சீற்றம் இன்னும் எப்படி இருக்கிறது என்று சொன்னால், ஒரு அமைச்சர் தன்னுடைய ஊருக்கே போக முடியவில்லை ; அவர் பிறந்த கிராமத்திற்கு அந்த அமைச்சரால் செல்ல முடியவில்லை, ஏனென்று சொன்னால் '' பச்சைமா மலைபோல் மேனி ; பவளவாய்க் கமலச் செங்கண் அச்சுதா அமரர் ஏறே : ஆயர்தம் கொழுந்தே என்னும் இச்சுவை யான் பெறினும் இந்திரலோகம் கூட வேண்டேன் '' என்று சொன்னான், அந்த மாதிரி பள்ளிகொண்டான் என்கிற ஊர், அதற்குப் பக்கத்திலே பத்துக்குப்பம் என்ற ஊர், நம்முடைய உணவு அமைச்சருடைய ஊர், இங்கு வெள்ளம் வந்தபோது ஒன்றரை மாதம் மாண்புமிகு அமைச்சர் திரு, விசுவநாதன். அவர்கள் தனது சொந்த ஊருக்கே போக முடியவில்லை, ஏனென்று சொன்னால் இந்திர லோகத்தைக்கூட பார்த்து விடலாம் ; பள்ளிகொண்டானையும். குடியாத்தத்தையும் இணைக்கிற பாலத்தை இன்னும் காணவே முடியவில்லை ஆகவே இயற்கைச் சீற்றம் வருவதற்கு முன்னாலேயே அந்தப் பாலத்தைக் கட்டி முடியுங்கள் என்று நான் அன்போடு இங்கே கேட்டுக் கொள்கிறேன், இது ஒன்று ; இயற்கைச் சீற்றத்தை மட்டும் நான் குறிப்பிட்டுப் பேசுவது, அதன் காரணமாகத்தான், ஆகவே இது ஒன்று மட்டுமல்ல . . . . . . (குறுக்கீடு)

பிற்பகல் 4-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. பாலம் ஏற்கெனவே இருந்தது, காணாமல் போய்விட்டதா ? அல்லது புதிதாகக் கட்டவேண்டுமா என்பதை உறுப்பினர் விளக்க வேண்டும்,

திரு, வி, தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தரைப்பாலம்தான் இருந்தது, இப்போது மேம்பாலம் கட்ட வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன், அதைவிட இன்னொரு பெரிய விவகாரம் என்னவென்றால், இயற்கைச் சீற்றத்தினால் கௌண்டின்ய மகாநதியிலே வெள்ளம் வந்தக் காரணத்தினால். குடியாத்தம் நகரே தண்ணீரில் மிதக்கிறது, அங்கேயெல்லாம் தேடித் தேடிப் பார்த்தோம் ; பக்கத்து ஊருக்கு போக வேண்டும்; காட்பாடிக்குப் போக வேண்டும் ; ஆம்பூருக்கு போக வேண்டும் ; எங்கேயடா இருக்கிறது பேருந்து நிலையம் என்று சொன்னால். அதற்கு போட்டிலே ஏறிக் கொண்டுதான் பேருந்து நிலையத்திற்குப் போக வேண்டியதாக இருக்கிறது, ஆகவே மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்வேன் ; உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவாகக் கேட்டுக் கொள்வேன் ; அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்டித் தாருங்கள் ; வெள்ளச் சீற்றம் வருவதற்கு முன்பாக அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்டித் தர வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.



அதற்கு அடுத்தபடியாக. இப்போது வருவாய்த்துறை மானியக் கோரிக்கையிலே ஜாதிச் சான்றுகள், வருமானச் சான்றுகள். இருப்பிடச் சான்றுகள் இவைகள் எல்லாம் அந்த தாசில்தார் ஆபிசிலேதான் ; வேறு எங்குமே கிடையாது, அதைவிட ஒரு முக்கியமான வேலை—இவ்வளவுக்கும் காரணம் என்னவென்று சொன்னால், பாசனக் கால்வாய்களை யார், யார் ஆக்கிரமித்து இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் வெளியேற்றினாலே அந்த மாதிரியான சங்கடங்கள் எல்லாம் ஏற்படாது. ஆக்கிரமிப்புகளை தயவுதாட்சண்யம் இல்லாமல் வெளியேற்றினால், நிச்சயமாக இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றங்களினால் பெரும் துன்பங்கள் நமக்கு ஏற்படாது என்பதை மட்டும் நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, ஒரே ஒரு சம்பவம். வரி போட்டு இருக்கிறார்கள். எதற்கு என்று சொன்னால், கடலைக்காய்க்கும் வரி ; அந்த எண்ணெய்க்கும் வரி. எவ்வளவோ வரியைக் குறைத்து, நம்முடைய இல்லத்தரசிகளுக்கு உதவி செய்திருந்தாலும், இந்தக் கடலைக்கும் வரியைப் போட்டு, கடலை எண்ணெய்க்கும் ஆக இரண்டு வரியாக இருப்பதிலேயிருந்து அதைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, வேறு மானியமாக இருந்தாலும் Justice deleyed is Justice denied என்று சொல்வார்கள், ஆகவே, நீதி எங்களுடைய தொகுதிக்குக் கிடைப்பதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அது என்னுடைய தொகுதியைப் பற்றி இல்லையென்று சொன்னாலும், பக்கத்திலே நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்களுடைய தொகுதியிலே, திருச்சிற்றம்பலத்தை தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று அவர் எழுதிக் கொடுத்திருக்கிறார். அதாவது, ஒரத்தநாடு தாலுகாவிலேயுள்ள நெய்வேலி ஊராட்சிப் பகுதி, பாதரங்கோட்டை ஊராட்சிப் பகுதி, அதம்பை ஊராட்சிப் பகுதி. முஞ்சியவிடுதி ஊராட்சிப் பகுதி, சாயாவூர் ஊராட்சிப் பகுதி, வெங்கரி ஊராட்சிப் பகுதி ஆகியவை உள்ளன. இந்த ஊராட்சிப் பகுதிகளிலிருந்து ஒரத்தநாடு செல்வதற்கு 30 கிலோ மீட்டர் 2 பேருந்துகளிலே மாறிச் செல்ல வேண்டும், ஆனால், திருச்சிற்றம்பலம் 10 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ளது. அந்தப் பகுதிகள் திருச்சிற்றம்பலத்தில் சேர்க்கப்பட்டால், குறைந்த செலவில் அனைத்து வசதிகளும் பெற முடியும். ஆவனம் பிர்க்கா பேராவூரணி தாலுகாவிலுள்ள பெரியநாயகபுரம், அம்மையாண்டி, சக்கமங்கலம், பழையநகரம், தானகம், கல்லூரிக்காணி, பைங்கால் முதலிய ஊராட்சிப் பகுதிகள், உள்ளன. குறிச்சி பிர்க்கா, திருச்சிற்றம்பலம் பிர்க்கா இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, திருச்சிற்றம்பலத்தை ஒரு தாலுகாவாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். தெளிவாக இப்படிப்பட்ட பல்வேறு

பிரச்சினைகளுக்கெல்லாம் முடிவு கண்டு— காலையிலே எப்படி
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பிரச்சினைகளுக்குத்
தீர்வு காண, இந்த அரசாங்கம் எவ்வளவு நல்லது செய்தாலும்
சில அதிகார வர்க்கம் எப்படி கெடுத்து விடுகிறார்கள் என்று
சொன்னார்களோ அந்த, அதிகார வர்க்கத்தினுடைய மொத்த
மையமாகவே வருவாய்த், துறை மயம் இருக்கிறது— அதைச்
சீர் செய்கிற பணி, அமைச்சரிடத்திலே இருக்கிறது என்று கட்டிக்
காட்டி அமைகிறேன்; நன்றி, வணக்கம்.

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:__ திரு. வி. கே. லட்சுமணன்.

பிற்பகல் 5-00

*__திரு. வி. கே. லட்சுமணன்__: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே. நிலவரித் துறை, மாவட்ட
நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும், முத்திரைத்தாள் நிர்வாகம்,
பத்திரப் பதிவுத் துறை. என்கின்ற மானியக் கோரிக்கைகளின்
மீது பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்திலே 'கலெக்டர்' என்ற சொல்லுக்கு
'ஆட்சியர்' என்று நாம் பெயர் வைத்து இருக்கிறோம். அடிமை
இந்தியாவிலே கலெக்டர் என்பவருக்கு வரி வசூல் செய்வது
மட்டும்தான் பொறுப்பாக இருந்த நாட்கள் உண்டு. ஆனால்
இன்றைக்கு விடுதலை பெற்ற இந்தியாவிலே மாவட்ட ஆட்சி
யருக்குப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளிலே பொறுப்பேற்க
வேண்டிய நிலைமை இருக்கிறது, மாவட்ட ஆட்சியர் வருவாய்த்
துறையை மட்டும் கவனிக்காமல். அந்த மாவட்டத்திலே இருக்
கிற மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளை, அது குடிநீர்ப்
பிரச்சினையாக இருந்தாலும் சரி, வீட்டுமனைப் பட்டா
என்றாலும் சரி அல்லது வேறு எந்தப் பிரச்சினையாக இருந்
தாலும் சரி, அவர் அவைகளைக் கவனிக்க வேண்டிய நிலைமை
இருக்கிறது, இதையெல்லாம் கவனிப்பதற்காக அவர்
அவ்வப்போது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களைக்
கூட்டுகிறார். அந்தக் கூட்டங்களிலே பல்வேறு வாரியங்களைச்
சேர்ந்தவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் இருக்
கிறது. குறிப்பாக குடிநீர் வழங்கல் வாரியம், வீட்டு வசதி
வாரியம் மின்சார வாரியம் என்று பல்வேறு வாரியங்களைச்
சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ள வேண்டிய ஒரு கட்டாயம்
இருக்கிறது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த
வாரிய அலுவலர்கள் மீது எந்தவிதமான அதிகாரமும்
செலுத்த முடியாத நிலை இருக்கிறது. சான்றாக. ஒரு
மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு மின்சார வாரியத்தை
சேர்ந்த அலுவலர் வராமல் போகலாம், மாவட்ட ஆட்சித்
தலைவர் அதைக் கேட்க முடியாது. கு ர் வடிகால் வாரியத்



திலிருந்து பொறுப்பான அதிகாரி வரமாட்டார். ஆனால்
மாவட்ட ஆட்சித் தலைவர் அதைக் கேட்க முடியாது, மாவட்ட
ஆட்சித் தலைவர் ஏதேனும் சொல்ல வேண்டும் என்று சொன்
னால் ஒரு ஆலோசனையாகச் சொல்ல முடியுமே தவிர எந்த
வித அதிகாரமும் செலுத்த முடியாத ஒரு நிலைதான் உள்ளது,
எனவே, வருவாய்த் துறைக்கு மட்டும் தான் அவர் பொறுப்பாக
இருக்கிறார் என்ற நிலைமை தான் இருக்கிறது, அதை மாற்று
வதற்கு நாம் வேண்டிய வழி செய்தால்தான் மாவட்ட ஆட்சித்
தலைவர் மற்ற துறைகளிலே இருக்கிற—மின்சார போர்டு, ஸ்லம்
கிளியரன்ஸ் போர்டு இந்த மாதிரி வாரியங்களிலே இருக்கிற
அதிகாரிகள் இடத்திலே வேலை வாங்க முடியும் என்பதை
நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்,

குறிப்பாக என்னுடைய கோவை மாவட்டத்திலே ஒரு
கார்ப்பரேஷன் இருக்கிறது, மாவட்ட வளர்ச்சி மன்றக்
கூட்டங்களிலே என்னைப் போன்ற, நகரத்திலே சட்டமன்ற
உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் கலந்து கொள்கிறபோது
நாங்கள் ஒரு கவுன்சிலைப் போலத்தான் பணியாற்றுகின்ற
நிலைமை இருக்கிறது. ஆகவே, அதிக நேரம் கவுன்சிலைப்
பற்றிப் பேசுகிறபோது, மாநகராட்சியைப் பற்றி பேசுகிற
போது, அங்கே இருக்கிற மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
அது இடையூறாக இருக்கிறது. எனவே, மாவட்ட வளர்ச்சி
மன்றக் கூட்டங்களை. மாநகராட்சிக்கு வெளியே இருக்கிற
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கூட்டமாகவும், மாநக
ராட்சிக்கு உள்ளே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
வேறு கூட்டமாகவும் அது கூட்டப்படும் என்று சொன்னால்
அவர்கள் உரியமுறையில் கருத்துக்களை எடுத்துச் சொல்ல
முடியும் என்று கருதுகிறேன்.

அடுத்து, 'மனு நீதி நாள்', 'மனு நீதி நாள்' என்று நடை
பெறுகிற போது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து
மக்கள் மனுக்கள் கொடுக்க வருகிறார்கள். அதைக் குறை
தீர்க்கும் நாள் என்று சொல்லுகிறார்கள், ஆனால் பெரும்
பாலும் அது குறை கேட்கிற நாளாக இருக்கிறதேயொழிய
குறை தீர்க்கும் நாளாக இருப்பதில்லை என்பதை நான் வருத்தத்
தோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வாரத்
தில் ஏற்கெனவே 5 நாட்கள்தான் வேலை செய்கிறார்கள்.
அப்படிச் செய்கிறபோது ஒவ்வொரு திங்கட்கிழமையும் மனுநீதி
நாள் என்று வைத்துக் கொண்டோம் என்று சொன்னால் பெரிய
அதிகாரிகள் எல்லாம் 4 நாட்கள் தான் வேலை செய்ய முடியும்.
அப்படிச் செய்தும் கூட இந்த மனு நீதி நாட்களில் பல குறைகள்
தீர்க்கப்படுவதில்லை, நான் சான்றாகச் சொல்வேன், நொய்
யல் ஆற்றில் ஒரு சிறுவன் அடித்துச் செல்லப்பட்டான், அவனைக்
காப்பாற்றச் சென்ற ஒரு அரிசன மாணவன் அங்கே இறந்து
விட்டான், அவனுடைய தந்தை கடந்த 7 ஆண்டுக் காலமாக
கருணை மனு போட்டு நிவாரணம் கேட்டு வருகிறார், அவருக்கு

[திரு. வி. கே. லட்சுமணன்] [1992 மார்ச் 19

இன்னும் கிடைத்தபாடில்லை. மனுநீதி நாளன்று அவர் வந்து பலமுறை முறையிட்டும் கூட இது நடைபெறவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 5-05

அதே போல் மாவட்ட ஆட்சித் தலைவர் அடிக்கடி வங்கி அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டுகிறார். அது எதற்கு என்றே தெரியவில்லை. வங்கி அதிகாரிகள் மீது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எந்த உரிமையும் இருக்க முடியாது. எந்த வங்கி அகலாரியும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொல்வதற்காக எந்த நபருக்கும் கடன் கொடுப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால் தைரியமாக ஒரு காகிதத்தை எடுத்து கொடுக்க முடியாது என்று எழுதிக் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் வங்கி அதிகாரிகளை வைத்துக்கொண்டு எதற்காக நாம் இந்தக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்? அதில் என்ன பயன் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

தாட்கோவிலிருந்து நாம் மானியம் அளிக்கிறோம், அளித்தாலும் கூட வங்கிகள் கடன் கொடுக்காத காரணத்தால் அந்த மானியத்தை நாம் முறையாகப் பயன்படுத்த முடியவில்லை, ஆனால் ஏன் நீங்கள் கடன் கொடுக்க முடியவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் வங்கி அதிகாரிகளைக் கேட்க முடியாத நிலைமை இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பட்டா பாஸ் புத்தகம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். ஆனால் அதிலே ஒன்று. அதைக் கம்ப்யூட்டரைஸ் பண்ண வேண்டும்; கணினிமயமாக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே அந்த முயற்சி பல மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே இங்கேயும் அதை நீங்கள் கடைப் பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பட்டா வழங்குகிறபோது அது நத்தம் புறம்போக்காக இருந்தால்தான் பட்டா கொடுக்க முடிகிறது. ஆனால் பல சமயங்களில் வாரிப் புறம் போக்கை நத்தமாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை கொடுத்தால் அந்தக் கோரிக்கையை. ஏற்றுக்கொள்வதற்கு ரொம்பக் கால தாமதம் ஆகிறது. பல இடங்களில் வாரிகள் என்று சொல்லப்படுவது வாரியாகவே இருப்பதில்லை. அதையும் கருத்தில் கொண்டு இந்த க்ளாஸிப்பிக்கேஷனை மாற்றுகின்றபோது விரைவாக மாற்றி, நத்தமாக மாற்றி உடனடியாகப் பட்டா கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



1992 மார்ச் 19] [திரு. வி. கே. லட்சுமணன்]

விற்பனை வரியில் ஹோட்டல்களின் மொத்த வருமானத் தில் 18.25 இலட்சம் என்று இருந்ததை 3 இலட்சமாகக் குறைத்து இருப்பதை ஹோட்டல் உரிமையாளர்கள் வர வேற்கின்றனர். அதே நேரத்தில் இந்த விற்பனை வரியி லிருந்து மொத்தமாக எவ்வளவு பணம் வருமோ அந்தப் பணத்தைக் கொடுப்பதில் யாருக்கும் வருத்தம் இல்லை. அவர்கள் விரும்புவது இதை ஒரு லைசன்ஸ் முறையாக வைத்து, ஹோட்டல்களை நான்கு பகுதியாகப் பிரித்து அந்த ஹோட்டல்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு. இவ்வளவு கட்டணம் என்று வைத்துவிட்டால் இந்த விற்பனை வரி அதிகாரியினுடைய பிடியிலிருந்து தப்ப முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் பணம் கொடுக்கத் தயாராக இருக் கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முத்திரைத் தாளைப் பொறுத்தமட்டில் போலி முத்திரைத் தாள்கள் ஏராளமாக நாட்டிலே நடமாடி வருகின்றன. இதைத் தவிர்க்க முத்திரைத் தாள்கள் வாங்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யாமல் பணமாகவே கருவூலங்களில் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தால் நாம் அந்தப் போலி முத்திரைத் தாள்களின் நடமாட்டத்தைத் தவிர்க்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

இதுநாள் வரை கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலமாக உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் கன்வேயன்ஸ் டீட்-களுக்கு ஸ்டாம்ப் டியூட்டி இல்லாமல் இருந்தது. ஆனால் இப்போது அந்த கன்வேயன்ஸ் டீட்களுக்கு ஸ்டாம்ப் ட்யூட்டி கட்டவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ளதுபோல் அதற்கு விதிவிலக்கு தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து துயர் துடைப்பு, இயற்கை சீற்றம், புயல் பொறுத்த வரையில் கோவை மாவட்டத்தின் மத்தியப் பகுதியில் சங்கனூர்பள்ளம் செல்கிறது. அந்த சங்கனூர் பள்ளத்தில் அடிக்கடி வெள்ளம் வராவிட்டாலும் கூட வெள்ளம் வருகிறபோது மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்துகிறது. அந்தச் சேதத்தைத் தவிர்க்க 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு 13.2 கோடி ரூபாய் செலவில் தூர் வாரவும், தடுப்புச் சுவர் கட்டவும் ஒரு திட்டம் தீட்டப்பட்டு பல ஆண்டுகளாக அது அனுமதிக்காகக் காத்திருக்கிறது. எனவே அதை விரைவிலே கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே, நிறைய அலுவலகங்கள் இருக்கின்றன. என்னுடைய கருத்து, பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தாத அலுவலகங்களை தாலுகா மையங்களுக்கு மாற்றிவிடலாம். மாவட்ட நெரிசலை குறைப்பதற்காக. சான்றாக கைத்தறி அதிகாரியினுடைய அலுவலகம். அல்லது இந்து அறநிலைய அதிகாரியினுடைய அலுவலகம் அலுவலகம் பொள்ளாச்சியிலே இருக்கலாம். அது பல்லடத்திலே இருக்கலாம். அதே போல, சென்னையிலே இருக்கின்ற பெரிய அலுவலகங்களை மாவட்டத்தின் மையங்களுக்கு மாற்றுவதன் மூலமாக இங்கே இருக்கிற நெரிசலை குறைக்க முடியும் என்று நான் நம்புகிறேன். இதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 51-0.

கோவை மாவட்டம் தொடர்ந்து பல ஆண்டுகளாக மழை இன்மை காரணமாக வறட்சி மாவட்டமாக இருக்கிறது. எனவே நீங்கள் அதை அதிகாரப்பூர்வமாக வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பகுதிகளிலே தற்போது லாரிகளிலே தண்ணீர் வழங்குவதற்கு இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது. அது நல்ல திட்டம். பல இடங்களில் அந்த லாரிகளிலே தண்ணீர் வழங்கவில்லை. மக்கள் தண்ணீர் இல்லாமல் மிகுந்த தொல்லைக்கு ஆளாகிறார்கள். ஆகவே கண்டிப்பாக அதைத்தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்,

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையின் பேரிலே இந்திய குடியரசுக் கட்சியின் சார்பிலே கருத்துக்களை வழங்க வாய்ப்புகள் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், நேரத்தின் அருமை கருதி ரத்தினச் சுருக்கமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்,

நம்முடைய வருவாய்த் துறை மற்றும் நம்முடைய முத்திரைதாள் துறை, பத்திரப் பதிவுத் துறை, விற்பனை வரித் துறை ஆகியவைகள் இந்த கொள்கைக் குறிப்புகளை தந்திருக்கின்றன,



புதிய மாவட்டங்கள் நிர்வாக வசதிகளுக்காக இன்றைக்கு பிரிக்கப்பட்டு வருகின்றன, ஏற்கெனவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், அவர்கள் முதல்வராக இருந்தபோது. ' தில்லையாடி வள்ளியம்மை ' பெயராலே நாம் ஒரு மாவட்டம் அமைக்க உத்தேசித்திருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை தந்தார்கள், தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் தென் ஆப்பிரிக்காவிலே உத்தமர் காந்தியடிகளின் இன்னுயிரை காப்பதற்காக குண்டுகளைத் தான் தாங்கி தன் உயிரையே தந்தார், அப்படிப்பட்ட தியாகியினுடைய பெயராலே ' தில்லையாடி வள்ளியம்மை ' அவர்களின் பெயரிலே மாவட்டம் அமைப்போம் என்று சொல்லி இருந்தார்கள், இப்போது நாகப்பட்டிணத்தை நம்முடைய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் பெயரிலேயே புரட்சித் தலைவி அவர்கள் மாவட்டமாகப் பிரித்திருக்கிறார்கள். இனி ஒரு வாய்ப்பு வருகிற போதாவது புதிய மாவட்டம் உருவாகிற போதாவது ' தில்லையாடி வள்ளியம்மை ' பெயரிலேயே ஒரு மாவட்டத்தை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன்.

எங்குமே இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டிலே வி.ஏ.ஓ.விலே 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் தந்து கிராம நிர்வாகிகளாக அவர்களை நியமித்து ஒரு மாபெரும் சமுதாயப் புரட்சியை புரட்சித் தலைவருடைய ஆட்சியும் அதற்குப் பின்னாலே இன்றைக்கு அவருடைய வழி வந்த புரட்சித் தலைவியினுடைய ஆட்சியும் மிகப் பெரிய சாதனையை நடத்திக்கொண்டிருக்கிறது, வேறு மாநிலங்களிலே வி,ஏ,ஓ,க்களாக வந்தவர்கள் பதவி உயர்வு பெற்று இன்றைக்கு பலர் மிகப் பெரிய அளவிலே துணைச் செயலாளராகக் கூட வருகின்ற அளவுக்கு பதவி உயர்வு பெற்று இருக்கிறார்கள், நம் மாநிலத்திலே வி,ஏ,ஓ,க்கள் இன்னமும் அதே பொறுப்பிலேதான் இருக்கிறார்கள், எனவே பதவி உயர்வு வருகிறபோது வருவாய்த் துறையிலே அவர்களுக்கும் இன்றைக்கு அதற்குப் பிறகு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகவோ தாசில்தார் ஆகவோ பதவி உயர்வு பெறுவதற்கு அவர்களுக்கும் வழி செய்ய வேண்டும் என்று நான் நினைவு படுத்த விரும்புகிறேன்,

அதுமட்டுமல்ல. புதிதாக வி.ஏ.ஓ.க்களை நியமனம் செய்யும்போது பழைய முறையிலே மட்டும் தேர்வு நடந்தபோது. இட ஒதுக்கிடு எல்லாம் வந்து விட்டது, இப்போதும் அப்படியே நியமித்துக் கொள்கிறார்கள், இப்படி தற்காலிகமாக நியமிக்கிறபோது அதிலே கொஞ்சம் இட ஒதுக்கீட்டு முறையை பின்பற்ற முடியாத தொய்வு நிலை வந்துவிடுகிறது, எனவே. அதையும் கொஞ்சம் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்,

[திரு. செ. கு. தமிழாசன்] 1992 மார்ச் 19]

கிராமப் பணியாளர்கள் 31,302 பேர் இருக்கிறார்கள், அவர்களுக்கு சம்பளம் இன்றைக்கு 592 ரூபாய் கொடுக்கப்படுகிறது கிராமத்திலே இருக்கிற கிராம நலப் பணியாளர்கள் 24 மணி நேரமும் உழைக்க இருப்பவர்கள், அதிலேயும், அந்த 31.302 பேரிலே 31 ஆயிரம் பேர் தாழ்த்தப்பட்டவர்கள், 24 மணி நேரமும் குற்றேவல் செய்கிறவர்கள். வரி வசூலிப்பதிலிருந்து தண்டல் செய்வது வரை எல்லாம் அவர்களே தான் செய்து கொண்டிருக்கிறார்கள், இந்த 592 ரூபாய் சம்பளம் போதாது, எனவே. அதை 750 ரூபாய் அளவுக்காவது உயர்த்த வேண்டுமென்று இங்கே நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-15.

வீட்டுமனைப் பட்டாக்கள் கடந்த ஆண்டு 4 லட்சத்து 18 ஆயிரத்து இருபத்தொன்று பேர்களுக்கு தரப்பட்டிருக்கிறது, அதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு 1,51,215 பேர்களுக்கு, தரப்பட்டிருக்கிறது, மற்றவர்களுக்கு 2,78,002 பேர்களுக்கு தரப்பட்டிருக்கிறது, பெரும் அளவிற்கு நாம் ஏழை எளிய மக்களாகிய ஆதி திராவிட மக்களுக்கு தரப்பட முடியாத ஒரு தொய்வு இருப்பதை நாம் இதிலே பார்க்கலாம், நிலப் பட்டாக்களும் 5,521 பேர்களுக்கு தந்திருக்கிறோம், அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 1,136 பேர்தான், மற்றவர்கள் 4,376, என்று இருக்கிறது, நான் ஏன் இப்படி குறிப்பாக சொல்கிறேன் என்றால். இதை செயல்படுத்துகிறபோது மிக ஏழையெளியவர்களாகிய, சமூகத்திலே நலிந்தவர்களாக விளங்குகிற அவர்களுக்கு கொஞ்சம் நாம் கை தூக்கி விட்டால். மனிதாபிமானத்தோடு அதிகப்படியான குறியீட்டை வழங்குவதற்காக தான் இதை நான் சொல்ல விரும்புகிறேன்,

டி,சி, புறம்போக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான் தர வேண்டும், அவர்களுக்கு பட்டாவாக தர வேண்டுமென்று ஒரு சட்டம் இருக்கிறது, ஆனால் இதுவரை அந்த டி.சி. புறம்போக்கு எவ்வளவு கைப்பற்றி தந்திருக்கிறார்கள் என்றால் அதிலே நாம் சரியான கணக்கைத்தர முடியாது, பல இடங்களிலே அது வேறு பினாமிகள் பெயர்களிலே இருந்து கொண்டிருக்கிறது, அதிலேயும் நம்முடைய வருவாய்த் துறை தீவிரமான அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் விவசாயிகளுக்கு ஒளிவிளக்காக விளங்கிக்கொண்டிருக்கிற அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலே உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் ஆக்குகிற அந்த உயர்வான திட்டத்தை எடுத்துச் சொல்லியிருந்தார்கள். இன்றைக்கு இந்தக் கொள்கைக் குறிப்பிலேயும்கூட அது வலியுத்தப்பட்டிருக்கிறது. அதை இந்தியாவுக்கே முன் [illegible] உதாரணமாக 20 ஆண்டுக் காலமோ அல்லது குறைந்தபட்ச ஒரு காலக் கட்டத்தை வைத்து,



1992 மார்ச் 19] [திரு செ. கு. தமிழரசன்]

அதுவரையிலும் உழுதுகொண்டிருந்த ஏழை எளிய மக்களுக்கு அந்த நிலத்தை அவர்களுக்கேச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்கிற அந்த உன்னதமான திட்டத்தை மிகத் துணிச்சலாக அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குப் பெருமளவில் இருக்கிறது. அது இல்லாவிட்டாலும் கூட குத்தகைதாரர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் 20 ஆண்டுக் காலம் ஒரு நிலத்தை குத்தகைதாரராக வைத்திருந்தால் அந்த குத்தகை நிலத்தை அவர்களே எடுத்துக் கொள்ளலாம் என்கிற வகையில் அந்த குறைந்த பட்ச திட்டத்தையாவது நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றுவார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நம்முடைய தமிழ்நாட்டிலே மனு நீதி நாள் வாரந்தோறும் செயல்படுகிறது. மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமல்ல மற்றும் சில இடங்களிலேயும் அதை பின்பற்றுவதாக சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மற்ற நிர்வாகிகளும் இதை இவ்வளவு காலம் செய்து வருகிறார்கள். இதற்கெல்லாம் இன்றைக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல வேறு எந்த மாநில முதல்வரும் மேற்கொள்ளாததை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியாவுக்கே முன் உதாரணமாக அவர்கள் வாரந்தோறும் சென்னையிலே ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்து, ஏழையெளிய மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிற வகையிலே மனுக்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பல தலைவர்கள் மக்களைத் தேடிப் போனாலும், மக்கள் அவர்களைப் பார்க்க வர மறுக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டவுடன் ஆயிரக்கணக்கான மக்கள் மணிக் கணக்கிலே நின்று மனு தருகிறார்கள். என்றால் இந்த ஆட்சியின் பேரிலும் நம்முடைய புரட்சித் தலைவியின் பேரிலும் மக்களுக்கு எத்தகைய நம்பிக்கை இருக்கிறது என்பதை இது மிக அழகாக தெளிவுபடுத்திக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

நான் இந்த நேரத்திலே இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நெல்லை, குமரி, கோவை போன்ற பகுதிகளிலிருந்து ஏழை எளிய மக்கள் சென்னை வரையிலும் வருவதற்கு முடியாமல் இருக்கிறார்கள். இங்கே வந்தால் முதலமைச்சர் அவர்களைப் பார்க்கலாம், தாய்மார்கள் எல்லாம் முதலமைச்சர் அவர்களைப் பார்க்க விருப்பப்படுவார்கள். ஆனால் அவர்களுக்கு இவ்வளவு தூரம் வருவதற்கு சிரமமாக இருக்கும். எனவே 3 மாதம் அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை, மதுரை கோவை போன்ற வேறு நகரங்களிலும் புரட்சித் தலைவி அவர்கள், தாயன்போடு மனுக்களைப் பெற்றால் அவர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு மனுக்களைத் தருவார்கள். அவர்களுக்கு இருக்கும் பாதுகாப்பு கஷ்டங்கள் எனக்குத் தெரிகிறது. இப்படி மனுக்கள் வாங்கும் நாள் இருக்கிறதே, அது ஆயிரம்

கூட்டங்களை நடத்துவதற்கு சமம். எனவே 3 மாதம், 6 மாதத்திற்கு ஒரு தடவை கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் இப்படி மனுக்களைப் பெறும் நாளை வைத்தால், ஏழை எளிய மக்களுக்கு வசதியாக இருக்கும். எனவே இந்தக் கோரிக்கையை பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–20

அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட நிர்வாகத்தினுடைய தலைவர்களாக இருக்கிறார்கள். எனக்கு அதிலே ஒரு பெரிய குறை உண்டு. ஆட்சித் தலைவர் என்றால் அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். அந்த மொழி பெயர்ப்பே சரியல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்று போடுவது சரியான மரபல்ல. மாவட்ட நிர்வாக அலுவலர் என்று வேறு ஏதாவது அவர்களுக்குப் பெயர் வைத்துக்கொள்ளலாம். இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் என்றுதான் எல்லாவற்றிலும் போடுகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் சுற்றுப் பயணம் , மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் என்றுதான் வருகிறது. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் என்று போடுவதை தயவு செய்து தவிர்க்க வேண்டும். தமிழகத்திலே ஆட்சித் தலைவர் என்றால், இன்றைக்கு பெரும்பாலான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புரட்சித் தலைவி அவர்களைத் தவிர வேறு யாரையும் சொல்ல உரிமை கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் என்று போடுவதை தயவு செய்து தவிர்க்க வேண்டும். மாவட்ட நிர்வாக அலுவலர் என்று அழைத்துக் கொள்ளலாம். அந்த மொழி பெயர்ப்பு சரியாக இல்லை என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு ஏழை எளிய மக்களின் குடிசைகளுக்கு மின் விளக்கு தருகிற மிக உயர்வான திட்டத்தை நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் வட்டாட்சியர்கள் நத்தம் புறம்போக்கு அல்லது புறம்போக்கிலே குடிசைகள் இருந்தால் என்.ஓ.சி. தர தடை போட்டிருக்கிறார்கள். எனவே என்.ஓ.சி. தருவதற்கு தாசில்தார்கள் கொஞ்சம் தீவிரப்படுத்தப்பட வேண்டும். இதனால் பல குடிசைகளுக்கு மின் விளக்கு தர முடியாமல் போகிறது. இதைத் தர வேண்டுமென்று நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆற்றுப் புறம்போக்கு, குளம் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, மேய்ச்சகால் புறம்போக்கு என்று பலவகையான புறம்போக்குகள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து அழைக்கப்படுகிறது. இதில் உழுபவர்களுக்குப் பட்டா கொடுக்கும்போது, நத்தம் புறம்போக்காக இருந்தால் தான் தருவோம், டி.சி. புறம்போக்காக இருந்தால் தரமாட்டோம் என்று சொல்கிறார்கள். இதை எளிதாக மாற்ற முடியவில்லை. எனவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கே உரிய அதிகாரம் தந்து, 20 ஆண்டுக்காலம், 15 ஆண்டுக்காலம் அவர்கள்



அங்கே [illegible] கொண்டிருந்தால், அது எந்தப் புறம்
போக்காக இருந்தாலும் அவர்களுக்குப் பட்டா தரும் நிலையை
மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மணல் குவாரி இருக்கிறது. அது சட்ட பூர்வமான
அனுமதி இல்லாமல், பல இடங்களில் நடத்தப்படுகிறது.
அதிலே வருவாய்த் துறை அதிகாரிகள் கொள்ளை கொள்ளை
யாகச் சம்பாதிக்கிறார்கள். இந்த சட்ட பூர்வமான டென்
டர் வைத்துவிட்டால் அரசுக்கு வருவாய் வரும்.
இப்போது இதை யாரும் [illegible] புரியவில்லை. அதி
காரிகள் அவர்கள் விருப்பத்திற்கு நடந்து கொண்டிருக்கிறார்கள்.
மணல் குவாரிக்கு நாம் டெண்டர் வைத்துவிட்டால் வரு
வாய்த் துறைக்கு வருமானம் கிடைக்கும். இதையும் பரிசீலிக்க
வேண்டுமென்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து நில உச்சவரம்புச் சட்டம் இருக்கிறது. அது
தொடர்ந்து பெயரளவில் இருந்து கொண்டிருக்கிறது. கடுமை
யாக்கப்படவில்லை. இப்போது 15 ஸ்டேண்டர்டு ஏக்கர்
என்று வைத்திருக்கிறோம், பெரிய குடும்பமாக இருந்தால்
30 ஏக்கர் என்று வைத்திருக்கிறோம். இன்றைக்கு தஞ்சை
மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை பூனையின்
பெயரில் வைத்திருக்கிறார்கள். இப்படி 'பெட் அனிமல்ஸ்'
பெயரில் வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் நான் சொல்ல
விரும்பவில்லை. அப்படிப்பட்ட நிலைமையை தொடர்ந்து
கொண்டிருந்தால் நாம் நில உச்சவரம்பு பற்றி பேசுவதில்
அர்த்தம் இல்லாமல் ஆகிவிடும். யாராக இருந்தாலும் நில
உச்சவரம்புச் சட்டத்தை கடுமையாக்க வேண்டுமென்று சுட்
டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய நாடு விவசாய நாடு.
இங்கே எல்லாத் துறைகளிலும் இருக்கிறவர்களுக்கு யூனியன்
இருக்கிறது. தனியார் துறையிலே இருக்கிறவர்களுக்கு யூனி
யன் இருக்கிறது. பேக்டரி தொழிலாளர்களுக்கு யூனியன்
இருக்கிறது. ஆனால் விவசாயக் கூலிகளுக்கு எந்த யூனி
யனும் கிடையாது. விவசாயிகளுக்கு சங்கம் இருக்கிறது. விவ
சாயக் கூலிகளுக்கு முறையான சங்கம் கிடையாது. அவர்
களுக்கு ஆர்கனைஸ்டு அசோசியேஷன் கிடையாது. மேலும்
தினக்கூலி, இடத்திற்குத் தக்கவாறு செயல்படுகிறது. தஞ்சை
மாவட்டத்தில் 11 தாலுக்காவில் மட்டும் தினக்கூலி சட்டத்தை
செயல்படுத்துகிறார்கள். வேறு எந்த இடத்திலும் செயல்பட
வில்லை. அதிகார பூர்வமாக அந்த 11 இடங்களில்தான் செயல்
படுகிறது. மாநிலம் முழுவதும் அப்படியில்லை. ஆகவே வய
லில் வேலை செய்யும் ஆண்களுக்கு இவ்வளவு, பெண்களுக்கு
இவ்வளவு, கதிர் அறுப்பவர்களுக்கு இவ்வளவு. களையெடுப்
பவர்களுக்கு இவ்வளவு கூலி, நாற்று நடுபவர்களுக்கு இவ்வளவு
கூலி என்று முறையாக கூலி நிர்ணயம் செய்தால் தமிழகத்தில்
இருக்கிற கோடிக்கணக்கான விவசாயக் கூலிகள் மகிழ்வார்கள்.
எனவே அந்த 11 தாலுக்காக்களில் இருப்பதை தமிழ்நாடு

முழுவதும் அமல்படுத்த முயற்சிக்க வேண்டும். அதேபோல் முன்
னுதாரணமாக கூட்டுறவு நூற்பாலை, கூட்டுறவு சர்க்கரை
ஆலைகள் இருக்கின்றன, கூட்டுறவு விவசாயச் சங்கம் என்ற
முறையில் விவசாயப் பண்ணை இருந்தாலும், யார் வேண்டு
மானாலும் விவசாயிகள் வந்து ஆயிரக் கணக்கான ஏக்கரை
அரசே வைத்து ஒரு கூட்டுறவு விவசாயப் பண்ணையை உரு
வாக்கினால், கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் போல கூட்டுறவு
விவசாயப் பண்ணையை உருவாக்கினால் அதில் ஏழைக்கூலி
விவசாயிகள் எல்லாம் பயனடைய முடியும். மாவட்டத்திற்கு
ஓர் இடத்திலாவது முன் மாதிரியாக வைத்தல் இது புரட்சி
கரமாக இருக்கும். அதை வருவாய்த் துறை சிந்தித்துப் பார்க்க
வேண்டும்.

பிற்பகல் 5–25

முத்திரைத்தாள் விற்பனையில், காஸ் விற்பனையில் மத்திய
அரசு 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கிறார்கள்.
உடல் ஊனமுற்றவர்களுக்கு, முன்னாள் இராணுவத்
தினருக்கு, இறந்துபோன ராணுவத்தாரின் குடும்பத்தாருக்கு
எல்லாம் தருகிறார்கள். அதுபோல் முத்திரைத்தாள் விற்பனை
யிலும் ஏகப்பட்ட முகவர்களை அரசு நியமிக்கிறது. அதிலே
உடல் ஊனமுற்றவர்களுக்கு, முன்னாள் ராணுவத்தினருக்கு,
தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று இப்படித்தந்தால் அந்த சமு
தாயத்தில் இருக்கும் பின்தங்கியவர்களுக்கு வாய்ப்பாக இருக்
கும். தயவு செய்து இவைகளையெல்லாம் பரிசீலிக்க வேண்டு
மென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.
நன்றி, வணக்கம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ்.
அண்ணாமலை.

திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே. வருவாய்த் துறை மானியக்
கோரிக்கையின்மீது எனக்கு பேச வாய்ப்பளித்திருக்கின்ற
மாண்புமிகு தமிழக முதல்வரும் டாக்டர் புரட்சித் தலைவியும்.
நான் வணங்குகின்ற அன்னை, ஆதிபராசக்தியின் மறு உருவாய்
விளங்குகின்ற எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்
களின் பாதத்திற்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்
கொண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு என்
வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல்லாவரம் கன்டோன்மென்ட்
பகுதி இருக்கிறது. அது மத்திய சர்க்காருக்கு உட்பட்ட இட
மாகும். ஆகவே மாநில அரசாங்கத்தால் செய்யப்படக்கூடிய
எந்த உதவியும் அந்தப் பகுதி மக்களுக்கு போய்ச்சேர முடி
யாத சூழ்நிலையில் அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் பாதி



கப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் வீடு
கட்டிக்கொண்டு பல ஆண்டு காலமாக அங்கே குடியிருந்து
வருகிறார்கள், அவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கும் அடிப்
படை வசதிகள், சாலை வசதிகள் ஆனாலும், தெரு விளக்கு
களானாலும், குடி தண்ணீரானாலும், மாநில அரசாங்கம் செய்
யக்கூடிய உதவிகள் அவர்களுக்குப் போய்ச் சேராத சூழ்நிலை
யில் இருக்கிறார்கள். அந்த இடம் மத்திய சர்க்காருக்கு சொந்த
மான இடமாகும். அந்த மத்திய சர்க்கார் இடத்தில்
இருக்கிற நம்முடைய தமிழக மக்களுடைய குறைகளைத்
தீர்க்க இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய
அரசோடு தொடர்பு கொண்டு பேசி, அந்தப் பகுதி மக்களுக்கு
பல நல்ல திட்டங்களை நம்முடைய அரசாங்கம் தீட்டுகிற
திட்டங்களை அவர்கள் அனுபவிக்கவும், நமது அத்தனைத்
திட்டங்களும் அவர்களுக்குப் போய்ச் சேருவதற்கு மத்திய
அரசிடம் பேசி, அங்கேயிருக்கிற மக்களுக்கு மனைப் பட்டாக்
களும், சாலை வசதிகளும், குடி தண்ணீரும் வழங்குவதற்கு
ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித்
தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியில் இருக்கிற பல்லா
வரம், ஆலந்தூர், நங்கநல்லூர், திரிசூலம், மூவரசம்பேட்டை,
நந்தம்பாக்கம், மீனம்பாக்கம் இப்படிப்பட்ட இடங்களில் குடி
நீர் பற்றாக்குறை இருக்கிற காரணத்தாலே, அங்கேயெல்லாம்
போர் வெல் போடுவதற்கு அங்கேயிருக்கிற ஊராட்சி ஒன்றி
யங்களில் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்
பட்டிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறையில் தண்ணீர் கிடைக்காத
சூழ்நிலையில் இருக்கிற மக்களுக்கு போர்வெல் போடுவதற்கு
மாவட்ட ஆட்சித் தலைவர் உடனுக்குடன் நடவடிக்கை
எடுத்து போர்வெல் போட்டு அந்தப் பகுதி மக்களுக்கு குடி
தண்ணீர் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் தாழ்மை
யோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5–30

நங்கநல்லூர் பகுதியில் பல ஆண்டு காலமாக மக்கள்
குடியிருந்து வருகிறார்கள், அவர்கள் ஐந்தாறு செண்ட் நிலத்தை
வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்குப் பட்டா வழங்
கும்போது இரண்டு செண்ட் நிலம் வைத்திருந்தால் அதற்கு
ஒரு ரேட் என்று போடுகிறார்கள், மூன்று செண்ட்
வைத்திருந்தால், இரண்டு செண்ட்டுக்கு மேல் இருக்கிற அந்த
ஒரு செண்டுக்கு தனியாக ஒரு ரேட் போடுகிறார்கள், அதனால்
அங்கே பட்டா வழங்க காலதாமதம் ஆகிறது. ஆகவே அங்கே
பட்டா வழங்குகிறபோது ஓரே விலையாகப் போட்டு பட்டா
வழங்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ள

கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று எங்கள் பகுதியில் இருக்கின்ற பல்லாவரம், திரிசூலம், கீழ்கட்டளை, பவழந்தாங்கல், பர்மா காலனி. நங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் இருக்கின்ற அத்தனை குடிசை வாழ் மக்களும் பட்டாக்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு மின் இணைப்புத் தருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது, அவர்கள் மின் இணைப்புக் கேட்டால் பட்டா வேண்டும் அல்லது என்.ஓ.சி. வேண்டுமென்று சொல்லுகிறார்கள், ஆகவே அவர்களுக்கு உடனடியாக அந்த பட்டா வழங்கி மின் இணைப்புக்கு வழிவகை செய்து கொடுக்குமாறு தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பல்லவபுரம், ஆலந்தூர் பகுதியில் பாலாற்றிலிருந்து குடிநீர் வந்து கொண்டிருக்கிறது. வருகின்ற பாலாற்றுத் தண்ணீர் அங்கே இருக்கின்ற பொது மக்களுக்குப் போதுமானதாக இல்லை, ஆகவே பாலாற்றில் இன்னும் கிணறுகளைப் போட வேண்டியிருக்கிறது. சில நேரங்களில் அங்கே மின்சாரத் தடை ஏற்படுவதால் தண்ணீர் அதிகமாக கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே மின்சாரத் தடை ஏற்பட்டால் அதிகமாக பவர் கொடுக்ககூடிய ஆயில் பம்ப் செட்டுகளை வைத்து தண்ணீர் எடுத்து அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

பெருங்களத்தூருக்கு அருகில் உள்ள சூனாம்பேடு கிராமத்தில் சுமார் 15 ஏக்கர் அரசாங்க நிலத்தை பண முதலைகளும், சாராய வியாபாரிகளும், வீடு இல்லாத பொது மக்களுக்கு பங்கு போட்டுக் கொடுப்பதாக ஒரு மாயையை உருவாக்கி அவர்களே அந்த நிலத்தை தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். வீடு இல்லாதவர்கள் என்று பொய்ப்பட்டியல் தயாரித்து உள்ளார்கள். அந்தப் பட்டியலில் உள்ளவர்கள் அனைவருக்கும் சொந்தமாக வீடுகள் உள்ளன. இதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், வருவாய்த் துறை அமைச்சருக்கும், மனுக்களைக் கொடுத்துள்ளதாகத் தெரிகிறது. எனக்குத் தகவல் வந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியிடம் வீடு இல்லாதவர்கள் ஆயிரக்கணக்கான மனுக்களைக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்த இடத்தை அப்படி மனு கொடுத்தவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

பிற்பகல் 5–35

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வருவாய்த் துறை மாவட்ட நிர்வாகம். முத்திரைத் தாள். பத்திரப் பதிவு போன்ற துறைகளின் மானியக்



கோரிக்கைகளின் மீது உழவர்-உழைப்பாளர் கட்சியின் சார்பில்
ஒருசில கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு முதற்
கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு
இந்த வருவாய்த் துறையிலே நில வரியானது கொஞ்சம் கடுமை
யாக உயர்த்தப்பட்டு இருப்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்
பட்டு இருக்கின்றேன். 1958 ஆம் ஆண்டிலே இருந்து உயர்த்தப்
படாமல் 45 பைசா அளவிலே இருந்த லோகல் செஸ் ஒரு ரூபா
யாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. 1972 ஆம் ஆண்டிலே
ரூ. 2.50 ஆக இருந்த சர்-சார்ஜ் 5 ரூபாயிலிருந்து 10 ரூபாய்
வரை உயர்த்தப்பட்டு இருக்கிறது, அதை நேரிடையாகப் பார்த்
தால் மிகக் குறைவாகத்தான் தெரியும். எங்களது பகுதியில்
பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்திலே புஞ்சைப் பயி
ருக்கு அடிப்படைத் தீர்வையாக ரூ. 15 விதிக்கின்றபோது
லோகல் செஸ், சர் சார்ஜ் இரண்டும் சேர்த்தால் ஒரு ஏக்கருக்கு
ரூ. 59.25. கட்டியவர்கள் இப்போது அதே புஞ்சைக்கு ரூ. 180
கட்ட வேண்டும், நஞ்சைப் பயிருக்கு அடிப்படைத் தீர்வையாக
ரூ. 25-ம் லோகல் செஸ், சர் சார்ஜ் இரண்டும் சேர்த்து
ரூ. 98.75 கட்டி வந்தவர்கள் இப்போது ரூ. 300 கட்ட வேண்
டும். தென்னை, கரும்பு, மஞ்சள், வாழை போன்ற நீண்ட
காலப் பயிர்களுக்கு அடிப்படைத் தீர்வை ரூ. 30 ஆக இருந்த
போது, லோகல் செஸ், சர் சார்ஜோடு ரூ. 118.50 ஒரு ஏக்கருக்கு
கட்டி வந்தவர்கள். இனி ரூ. 370 கட்ட வேண்டும். ஆக. 3
மடங்காக இந்தத் தீர்வையானது உயர்ந்து இருக்கிறது. இதிலே
பயிர் வாரியாக அங்கே தீர்வை விதிப்பதிலே கட்டாயமாக
வரம்பு வருகின்ற பகுதிகளில் நெல் பயிர் செய்ய வேண்டியவர்
களுக்கு தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது, தண்டத் தீர்வை
விதிக்கப்படுகின்ற போது அது 4 மடங்கு. 5 மடங்கு விதிக்கப்
படுகின்ற நேரத்திலே, முன்பு இருந்ததைவிட 3 மடங்கு அதிக
மாக தண்டத் தீர்வை வரும். அப்படி வருகின்றபோது அந்த
விவசாயிகள் தங்களுடைய நெல்லை விற்று அந்த தண்டத்
தீர்வையைக் கட்டுவதோடு நிலத்தையே விற்க வேண்டிய நிலை
கூட ஏற்படும். எனவே, தண்டத் தீர்வை முறையை தயவுசெய்து
எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்
றால் அதே ஆளியாறு பாசனத் திட்டத்திலே கேரள மாநிலத்
திலே அவர்கள் பயிர் வாரியாக தண்ணீர் தீர்வை விதிக்காமல்,
ஏக்கர் வாரியாகத் தான் விதிக்கிறார்கள். நமக்கு 135 நாட்கள்
பாசனக் காலம் என்றாலும் கூட, தண்ணீர் வருகின்ற நாட்கள்
வெறும் 63 நாட்கள் தான் தண்ணீர் வருகிறது, அந்தத்
தண்ணீரைத் தான் எல்லா விவசாயிகளும் பகிர்ந்து நெல் என்றா
லும், மற்ற புஞ்சைப் பயிர் என்றாலும் அதே தண்ணீரை
ஒவ்வொரு விவசாயியும் ஒரே அளவிலேதான் எடுத்து பயிர்
செய்கிறார்கள். எனவே, அந்த தண்டத் தீர்வையை எடுத்து
விட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்

[திரு. நா.சா. பழனிசாமி] [1992 மார்ச் 19

தமிழகத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விவசாயிகள் பயன்படுத்தும் பொருட்களை ஜப்தி செய்யக்கூடாது என்ற உத்தரவைப் பிறப்பித்தார்கள். அதை எல்லா விவசாயிகளும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள். விவசாயிகளின் சார்பிலே அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்த ஜப்தியானது இப்போது கூட்டுறவு நிலவள வங்கிக் கடன்களுக்காக தொடர்ந்து செய்யப்படுவதாக பல பகுதிகளிலிருந்து செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதே நிலவரி வசூல் சட்டத்தைத் தான் அந்தக் கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் வசூலுக்கும் பயன்படுத்தி, வீட்டிலே இருக்கின்ற அண்டா, குண்டா சாமான்களை ஜப்தி செய்து விவசாயிகளை அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். விவசாயப் பெருமக்கள். குறிப்பாக தமிழகத்திலே சில பகுதிகளிலே இன்று மழை பெய்து இருந்தாலும்கூட கோவை போன்ற பகுதிகள் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு, அவர்கள் தங்களது நிலத்தில் ஆழ்குழாய் கிணறுகளைப் போட்டு ஓய்ந்து போய் இருக்கிறார்கள். வசதி உள்ளவர்களிடம் வசூல் செய்யுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் வசதியற்றவர்களிடத்திலே வட்டியாவது தள்ளுபடி செய்து அசலுக்கு சில தவணைகளைக் கொடுத்து வசூலித்தால் விவசாயிகள் அதைக் கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஜப்தியை கூட்டுறவு நிலவள வங்கிக் கடன்களுக்கும் செய்யக் கூடாது என்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று விவசாயப் பெருமக்கள் சார்பாக வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்,

பட்டா பாஸ் புஸ்தகம் முறையைக் கொண்டு வந்திருப்பதை நாங்கள் வரவேற்கின்றோம், அதை பரீட்சார்த்தமாக அமல்படுத்துகின்ற திருத்தணி வட்டத்திலும் குளித்தலை வட்டத்திலும் அது சரியாக அமல்படுத்தப்படவில்லை என்று அந்தப் பகுதி விவசாயிகள் சொல்கிறார்கள்.

கிராம நிர்வாக அலுவலர்களை, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைக் கண்டுபிடிக்க காவல் துறையினரோடு இணைத்ததனால் 86,559 கள்ளச் சாராயப் புகார்கள் கொடுக்கப்பட்டு, கள்ளச்சாராயம் கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால், தற்போது கள்ளச் சாராயம் பற்றிச் சொல்லும்போது, கிராமப் பணியாளர்களுக்கு கள்ளச் சாராய வியாபாரிகளிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் மிரட்டல்கள் வருவதாகவும், தாக்குதல்கள் வருவதாகவும் சொல்லப்படுகின்றது. எனவே அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பதன் மூலமாகத்தான் அந்தக் கள்ளச்சாராயம் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் புகார் செய்ய முடியும்,

பிற்பகல் 5–40

இப்போது சம்பளத்தை 577 ரூபாயிலிருந்து 592 ரூபாயாக கிராமப் பணியாளர்களுக்கு உயர்த்தி இருக்கிறார்கள், இந்த உயர்வு போதுமானதாக இல்லை. அவர்கள்



1992 மார்ச் 19] [திரு. நா. சா பழனிசாமி]

தற்காலிகப் பணியாளர்களாக இருந்தாலும் கூட அவர்கள் நிரந்தரமாகத்தான் வேலை பார்க்கிறார்கள். எனவே, கிராமப் பணியாளர்களுடைய ஊதியத்தை குறைந்தபட்சம் மாண்புமிகு தமிழரசன் அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல் 750 ரூபாய் அளவிற்காவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய்த் துறை ஆய்வாளர்கள் அவரவர்கள் பணி செய்கிற இடத்தில்தான் குடியிருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்களைப் போய் எளிதாகப் பார்க்க முடியும். ஆனால் பல பகுதிகளில் கிராம நிர்வாக அலுவலர்களும். வருவாய்த்துறை ஆய்வாளர்களும் அவர்கள் பணியாற்றுகிற பகுதிகளில் இருப்பதில்லை. வருவாய்த்துறை ஆய்வாளர்களுக்குக் கட்டபட்டபல் வேறு இல்லங்கள் புதர் மண்டியிருக்கிற நிலையில் இருக்கின்றன. அங்கே குடியேறாத நிலை பல பகுதிகளில் பார்க்க முடிகிறது. எனவே, கட்டாயமாக அவர்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற அரசு வீடுகளில் குடியிருக்க வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1400-வது விளைச்சல் ஆண்டில் தமிழகத்தின் பல பகுதிகளில் மழை பெய்து இருக்கிறது. செழிப்பாக இருக்கிறது. அவர்கள் வரியைத் தள்ள வேண்டிய அவசியம் இல்லையென்ற நிலை சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் கோவை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் நிலைமை வேறு விதமாக இருக்கிறது, கோவை மாவட்டத்தில் நாங்கள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அணாவாரி சர்டிபிகேட் கொடுத்து, கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்கிற போது, கோவை வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே கோவை மாவட்டத்தில் விளைச்சலானது இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிட அதிகமாக இருக்கிறது என்று அறிக்கையை அவர்கள் தங்கள் அலுவலகத்தில் இருந்துகொண்டு வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் பல பகுதிகளில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத ஒரு வறட்சி நிலைமை நிலவி வருகிறது. (மணியடிக்கப் பெற்றது) முடித்து விடுகிறேன்.

கோவை மாவட்டத்தில் வீட்டுமனைப் பட்டா மிகக் குறைவான அளவில் 6,579 பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு இணைந்திருந்த பெரியார் மாவட்டத்தில் 39,016 பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தில் வீட்டுமனைப்பட்டா கொடுப்பதற்கு நிலம் இல்லையா? அல்லது பட்டா வாங்க ஆள் இல்லையா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நாங்கள் எல்லாம் செல்கிறபோது வீட்டுமனைப் பட்டா கேட்டுதான் நிறைய பேர்கள் எங்களிடம் வருகிறார்கள்.

எனவே, எங்கள் கோவை மாவட்டத்தில் இந்த அளவுக்குக் குறைந்த அளவுக்கு பட்டா ஏன் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அரசு கேட்டறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அதைப்போல பத்திரப் பதிவு செய்வதில், முத்திரைத் தாள் வாங்குவதில் விவசாய நிலங்களுக்கு அதுவும் புஞ்சை நிலங்களுக்கு எல்லாம் அதிகக் கட்டணம் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ஏனென்றால் தொழில் பகுதிகளில் ரோடு ஓரங்களில் உள்ள நிலங்களை தொழில் அதிபர்கள் அதிக விலை கொடுத்து, அதிக மதிப்பு போட்டு கிரயம் செய்து விடுகிறார்கள். ஆனால் உள்ளே இருக்கிற விவசாய நிலங்கள் அந்த அளவுக்கு அதிகமாக மதிப்பு போகாது. இருந்தாலும் கூட அவர்களும் அந்தத் தொகைக்கு கிரயம் செய்ய வேண்டுமென்று பதிவாளர்கள் கட்டாயப்படுத்துவதால் சிறு விவசாயிகள் எல்லாம் நிலத்தை விற்கவும் வாங்கவும் முடியாமல் மிகக் கஷ்டப்படுகிறார்கள்.

நில உச்சவரம்பு கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறோம். ஆனால் இந்த உச்சவரம்பு சட்டம் 1980-ஆம் ஆண்டில், 1990 ஆம் ஆண்டில் அதற்கு பிறகு இப்போதும் கொண்டு வருகிறபோது அந்த நிலத்தை பினாமியாக வைத்திருந்தவர்கள் கூட பலருக்கு விற்று இருக்கிறார்கள். இப்போது கொண்டு வந்திருக்கிற சட்டத்தின் மூலமாக பாதிக்கப்படுபவர்கள் — மூல நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இல்லாமல் அந்த நிலத்தை வாங்கி விவசாயம் செய்து, வளர்ச்சி அடையச் செய்திருக்கிற ஏழை விவசாயிகள்தான் பாதிக்கப்படுவார்கள். இந்த நிலம் தங்களிடமிருந்து எடுக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் கிராமப் பகுதிகளில் நிறைய விவசாயிகளிடம் இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை அமல்படுத்துகிறபோது இதை விற்றவர்களை பாதிக்காமல் வாங்கியவர்களை பாதிப்பதை அரசு கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். ஏனென்றால் இந்த 32 ஆண்டுக் கால இடைவெளியில் அந்த நிலமானது பலபேர்களுடைய கைக்கு மாறியிருக்கிற வாய்ப்பும், பல நிலைகளில் மாறியிருக்கிற வாய்ப்பும் இருக்கிறது. எனவே, அந்த பினாமி நில ஒழிப்புச் சட்டத்தை அமல்படுத்துகிறபோது அந்த நிலத்தை வாங்கி உழுது கொண்டிருக்கிற உண்மையான விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு சி.சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டு வருவாய்த்துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு அனுமதித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள், மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து, ஆளுகின்ற வசதியினை மக்கள் நல்லமுறையில் பெற வேண்டும் என்ற எண்ண உணர்வோடு இன்றைக்கு ஒரு நல்ல நிர்வாகத்தை முன்மாதிரியாக மற்ற மாநிலங்கள் பின்பற்றுகிற வகையில் மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

மாவட்ட நிர்வாகங்களைத் தனியாகப் பிரித்து, அந்த மாவட்டங்களில் இருக்கிற மக்கள் அனைத்து நலன்களையும் பெற வேண்டும் என்ற எண்ண உணர்வு மேலோங்கியிருந்தாலும் கூட, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் காலையில் பேசுகிறபோது, அந்த நிர்வாகிகளைப் பற்றி அவர்களுடைய அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்தில் வாழ்கின்ற 6 கோடி மக்களின் சார்பாக அவர்களுடைய அதிருப்தியைத் தெரிவித்த பிறகு, அதற்கு மேல் என்னுடைய அதிருப்தியைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறபோது, இங்கே மாவட்டங்களில் நம்முடைய திட்டங்களை அமுல்படுத்துகிறபோது, அதைக் குறித்த காலத்தில் நிறைவாகச் செய்கிறபணியை மேற்கொண்டிருக்கிற, மாவட்டத் தலைநகரங்களில் இருக்கிற அதிகாரிகள் அதை முறையாகப் பயன்படுத்தவில்லை என்பதை அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய கருத்துக்குருடர்கள் என்று சொல்லக்கூடிய கிராம வாசிகளுக்கு அரசு அறிவிக்கின்ற நல்ல பலன்களை எல்லாம் சொல்லுகின்ற நிலையில் இருக்கக்கூடிய வி.ஏ.ஓக்கள் என்று சொல்லக்கூடிய, இவர்கள், இன்றைக்கு கிராம மட்டத்தில், அடித்தளத்தில் வேரூன்றிகளாக இருந்து, நம்முடைய திட்டங்களை எல்லாம் அவர்கள் அமுல்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எனக்கு முன்பாக உரையாற்றிய பல மாண்புமிகு உறுப்பினர்கள், வி.ஏ.ஓக்கள் அந்தந்த கிராமங்களிலே இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று எடுத்துக் கூறி அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் இல்லாமல் இருப்பதற்கும் பல நியாயமான காரணங்கள், கிராமப்புறங்களிலே இருக்கின்றன என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். காரணம் பல கிராமங்களில், அந்தப் பகுதிகளிலே வாழ்ந்துக் கொண்டிருக்கிறவர்கள் அவர்களுக்கே வீடு இல்லாத ஒரு சூழ்நிலையில், வந்திருக்கிற வி.ஏ.ஓக்களுக்கு அவர்கள் வாடகைக்கு வீடு கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில், மற்ற கிராமங்களுக்கு சென்று, அல்லது வசதியாக உள்ள பல பகுதிகளுக்குச் சென்று அவர்கள் தங்க வேண்டிய நிர்ப்பந்தம், கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. அதனால்தான் பல கிராம நிர்வாக அதிகாரிகள், கிராமப்புறங்களிலே தங்குவதற்கு உரிய சூழ்நிலை இல்லை. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள், கிராம நிர்வாக அலுவலர்

களுக்கு வி.ஏ.ஓக்களுக்கு கண்டிப்பாக அவர்கள் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்து, அவர்களுக்கு பல பொறுப்புகளை நாம் நிர்ணயிக்க வேண்டும்.

இன்றைக்கு பட்டா பாஸ் புத்தகங்கள் போன்ற பல கோரிக்கைகளை, பல கடுமையான வேலைகளை அவர்கள் நிர்வகிக்கின்ற பொறுப்பும், அன்றாட கிராமப்புற பிரச்சினைகளில், அவர்கள் தலையிடவேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கிற காரணத்தால் எந்தச் சூழ்நிலையிலும். வி.ஏ.ஓக்கள், அந்தந்த கிராமங்களில் இருக்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு, அவர்களுக்கு குடியிருப்புத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் அறிவித்தால், அந்தத் திட்டங்கள் எல்லாம் மிகச் சிறப்பாக, முறையாகப் பயன்படுத்தப்படும் என்பதனை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், நகர்ப்புறங்களில் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறவர்கள், இன்றைக்கு உங்களுடைய ஆட்சியை, பல நல்ல திட்டங்களை நீங்கள் அறிவித்திருந்தாலும் கூட, நகர்ப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் மனைப் பட்டாக்கள் பெறுவதிலே பல சிரமங்களைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்,

பிற்பகல் 5-50

உதாரணமாக புதுக்கோட்டை நகரைப் பொறுத்தவரையில், புதுக்கோட்டையில் போஸ் நகர், கணேஷ் நகர், காமராசர்புரம் மற்றும் அச்சுவாடி, கோயில்பட்டி போன்ற புறநகர்ப் பகுதிகளில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறவர்கள் ஏறத்தாழ 20, 30 ஆண்டுக்காலம் அவர்கள் வீடு கட்டிக் கொண்டு அங்கே வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள், நகராட்சி வரியும், பி.மெமோ சார்ஜஸ் கூட அவர்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் மனைப் பட்டாக்களை வாங்கமுடியாத ஒரு நிலையில் அவர்கள் கடன் பெற்று அவர்கள் நிரந்தரமாக நல்ல வீடுகளை அமைத்துக் கொள்வதற்கும், மற்றவர்களைப் போல அவர்கள் அனுபவித்துக் கொள்வதற்கும் முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதற்குரிய மனுக்களை நான மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கூட ஏறத்தாழ 1,800 மனுக்களுக்கு மேல் அங்கே குடிசையிலே வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்களுடைய மனுக்களை பெற்றுக் கொடுத்திருக்கிறேன். அத்தனை பேருக்கும் மனைப் பட்டாக்களை வழங்குகிற ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும், அத்தோடு ஒரு நபருக்கு 1–1/2 செண்ட் தான் கொடுக்க முடியும் என்கிற ஒரு நிலையை மாற்றி குறைந்த பட்சம் 3 செண்டாவது ஒவ்வொரு மனைப் பட்டாவிற்கும் கொடுக்கிற சூழ்நிலையை உருவாக்கித் தருமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு நில அளவையாளர்கள் அதாவது சர்வேயர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் நம்முடைய ஓரத்த நாட்டிலே பயிற்சி பெற்று ஏறத்தாழ 5,000 பேர் பயிற்சி



பெற்றிருந்தாலும் கூட, 2,500 பேருக்கு நாம் 'கன்சாலிடேட்டட் பே' என்று சொல்லக் கூடிய அளவில் ரூ, 600 கொடுத்து, 2,500 நில அளவையாளர்கள் (சர்வேயர்கள்) மற்றும் வரைவாளர்கள் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 10, 15 ஆண்டுக் காலமாக இந்த ரூ. 600 சம்பளத்திலேயே இன்றைக்கும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். வி.ஏ. ஓக்களைப் போல நிரந்தரமாக ஒரு கிராமத்திலே இருக்கின்ற சூழ்நிலை இருந்தாலும், அவர்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை ஓரளவிற்கு சமாளிக்க முடியும். ஆனால் இவர்களை வேறு ஊர்களுக்கு 100 மைல், 200 மைல்களுக்கு அப்பாற்பட்டு, நாம் மாற்றி, அவர்களை வேலை வாங்குகின்றபோது அவர்களுடைய உற்றார் உறவினர்களையும், பெற்றோரையும், இன்னும் சொல்லப் போனால், தான் ஏற்றுக் கொண்டிருக்கிற மனைவியைக் கூட பார்க்க முடியாத ஒரு சூழ்நிலையில், அவல நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்த பட்சம் அவர்களுடைய வாழ்க்கையில் உண்ண உணவும், உடுக்க உடையும், மற்றும் அவர்கள் வாழ்வதற்குரிய ஒரு சாதாரண சூழ்நிலையை உருவாக்கித் தருகின்ற வகையில் அவர்களுக்கு அந்தச் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்து, அவர்கள வாழ்வில் ஒரு ஒளிமயமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிலர் 45, 50 ஆண்டு வயதாகியும் கூட, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், இன்னும் 5, 6 வருடங்கள் போனால், அவர்களுக்கு ரிட்டயர்மெண்ட் ஸ்டேஜ்கூட வந்துவிடப் போகிறது. அப்போது அவர்களை நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை மிக்க கவனத்தோடு நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்குரிய ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தருமாறு உங்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மற்றபடி விபத்து நிவாரணத்திட்டம் என்கின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவியார் அவர்கள் 39 வகையான ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஆண்டு வருமானம் நிர்ணயிக்காமல் ரூ. 10,000, ரூ. 7,000 ரூ, 5,000 என்று வழங்கப்படுவதை நான் வரவேற்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு 1–1–1958 முதல் 5–4–1960 வரையிலும் செயல்பட்டுள்ள பினாமி நில மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட நிலங்களை சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வருகின்ற ஒரு நல்ல சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அந்த பினாமி நில ஒழிப்புச் சட்டங்களை முறையாக நிறைவேற்றினால், தமிழகத்தில் இன்னும் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய விவசாயிகள் வளம் பெறுவார்கள். நல்ல வாழ்வு பெறுவார்கள் என்பதனை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

அதேபோல புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இன்றைக்கு மிக வறண்ட மாவட்டம் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்

[திரு. சி. சுவாமிநாதன்] [1992 மார்ச் 19

தண்டாயுதபாணி அவர்கள் பேசுகின்றபோதுகூட சொன்னார்கள். வெள்ளம் வருவதற்கு முன்பே எங்களுடைய தொகுதியைக் காப்பாற்ற முடியவில்லை என்று சொன்னார்கள். ஆனால் எங்கள் புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில் வெள்ளம் வரவில்லையே என்ற ஏக்கம் அந்த மாவட்ட மக்களுக்கு நிரம்ப இருக்கிறது. காரணம் என்றைக்கு புயல் வெள்ளம் ஏற்படுகின்றதோ அன்றைக்குத் தான் அந்த மாவட்டத்தில் நிரந்தரமாக விளைகின்ற நல்ல சூழ்நிலை உருவாகும் எனவே இப்போது அந்த மாவட்டம் ஒரு வரண்ட மாவட்டம் என்கிற சூழ்நிலையை இன்றைக்கு கண்க்கிலே பார்க்கிறப்போது அந்த மாவட்டம் ஒரு வரண்ட மாவட்டம் என்கிற பட்டியலிலே இல்லை.

பிற்பகல் 5-55

புயல் அடித்தது; வெள்ளம் வந்தது; கடற்கரையிலிருந்து 40 அல்லது 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு மழை பெய்தது. இப்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருக்கிற மரியாதைக்குரிய ரகுபதி அவர்களுடைய தொகுதியில் கடந்த 10 ஆண்டுக் காலமாக மழை இல்லாமல் தொடர்ந்து வறட்சியாக இருக்கிறது. குளத்தூரிர் திருமயம், புதுக்கோட்டைப் போன்ற தொகுதிகள் இன்னும் கடுமையான வறட்சிக்கு உட்பட்டு, இன்றைக்கு குடிநீர் தட்டுப்பாடு கடுமையாக ஏற்பட்டு அங்கே லாரிகள் மூலமாக குடிநீர்சப்ளை செய்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் கருத்திலே கொண்டு அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக இந்த ஆண்டு அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல இன்னொரு முக்கியமான பிரச்சனையை நான் இங்கே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். சீட்டு நிறுவனங்களைப் பொருத்த வரையில் ஏறத்தாழ 4,201 நிறுவனங்கள் இருப்பதாகவும் அவைகளை கண்கணிப்பதற்கு விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், 3.5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 926 பதிவுறாத சீட்டுக் கம்பெனிகளைக் கண்டு பிடித்திருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பல சீட்டுக் கம்பெனிகள் மிக மோசடியாக இந்த நாட்டு மக்களை சுரண்டுகின்ற வகையில், ஏமாற்றுகின்ற வகையில், கொள்ளையடிக்கின்ற வகையில் நடந்துக் கொண்டிருக்கின்றன என்பதைச்சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ''ஸ்ரீஜெயசக்தி சிட்டு ஃபண்ட்ஸ் பிரைவட் லிமிடெட்'' என்ற நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனம் 10,15 ஆண்டு காலமாக சீட்டுக் கம்பெனி நடத்தி வந்திருக்கிறது. அந்த நிறுவனத்தார் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 130 இடங்களில் சீட்டுக் கம்பெனிகள்



1992 மார்ச் 19] [திரு. சி. சுவாமிநாதன்]

நடத்தினார்கள். ஆனால் திடீரென்று ஒரு நாள் 1990-91 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். ஏறத்தாழ அந்த 130 கிளைகளையும் மூடிவிட்டு, அந்த நிறுவனத்தார் வசூல் செய்த சுமார்40 கோடி ரூபாயை கொள்ளையடித்து சென்று விட்டார்கள் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்களின் உதவியோடு அத்தனை மக்களையும் ஏமாற்றி விட்டு, இன்றைக்கு அவர்கள் ஐந்து நட்சித்திர ஓட்டல்களில் உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவகையில் அந்தச் சீட்டுக் கம்பெனியை நடத்தி வந்த பாலு என்பவர் அந்த நிறுவனத்தின் 40 கோடி ரூபாயையும் கொள்ளையடித்து, இந்த நாட்டு மக்களை ஏமாற்றி விட்டு, இன்றைக்கு அவர்கள் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல பல சீட்டுக் கம்பெனிகள் இன்றைக்கு பாதி விலைக்குத் தருகிறோம், கால்வாசி விலைக்குத் தருகிறோம் என்று சொல்லி, ஆங்காங்கே 50 இலட்சம் ரூபாய், ஒரு கோடி ரூபாய் என்று கொள்ளையடித்து இந்த நாட்டு மக்களை ஏமாற்றி விடுகிறார்கள். இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் நாம் கருத்திலே கொண்டு, சீட்டுக் கம்பெனிகளுக்கு வழங்குகிற லைசென்ஸ் முறையை கொஞ்சம் கடுமைப்படுத்தி, அவர்கள் இந்த நாட்டு மக்களை ஏமாற்றாத வகையில், இந்த நாட்டு மக்களுடைய பணத்தை கொள்ளையடிக்காத வகையில், உங்கள் ஆட்சிக்கு கெட்ட பெயர் வராத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும், தேவையான சட்டத் திருத்தங்களைச் செய்து, சீட்டுக் கம்பெனிகள் பதிவு செய்யப்படுகிறபோதே முறையாகச் செய்து. கொள்ளையடிக்கிற அந்த நபர்களை, ஏமாற்றுகிற அந்த நபர்களை நீங்கள் தடா சட்டத்தில் போட்டாலும் சரி அல்லது மிசா சட்டத்தில் போட்டாலும் சரி, மக்கள் பாதிக்காத வகையில் செய்துவிட்டால் அத்தனை மக்களும் சந்தோஷப்படுவார்கள். இப்படிப்பட்ட மோசடிக்காரர்களை நீங்கள் அடையாளம் கண்டு கொண்டு அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சொல்லி. எங்களுடைய மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 6–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வருவாய்த்துறை மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது, இதிலே சீர்திருத்தம் என்ற வகையில் நிர்வாகம் செய்கிற அமைப்பு முறையை பொறுத்தவரை தமிழகம் முழுவதும் மாவட்டங்களைப் பிரித்தால்தான், செம்மையாக நல்ல ஆட்சி செய்ய முடியும் என்ற நிலையை எடுத்து

[திரு. கு. தங்கமுத்து] [1992 மார்ச் 19

அந்தவகையில் தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தும் இனிமேலும் சில மாவட்டங்களை பிரிக்க முடிவு எடுத்து, இந்த நிர்வாக சீர்திருத்தத்தை தொடங்கிவைத்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர் களுக்கு முதலிலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். அதேபோல மாவட்டங்களைப் பொறுத்தவரையில் நிர்வாக சீர்திருத்தத்தை வேகமாக செய்து இந்தப் பலனை, அரசு என்ன நினைக்கிறதோ அதை அல்லது அரசு ஏற்படுத்துகிற திட்டங்களுக்கு ஏற்ப ஆணை பிறப்பிக்கப்படுகின்றபோது அதை வேகமாக எளிமையாக மக்களுக்கு கிடைக்கின்ற வகையிலே இந்த நிர்வாக சீர்திருத்தத்தை செய்திருப்பதை வரவேற்கிறேன். அதேபோல இந்தத் துறையைப் பொறுத்தவரையில் வரி விதிப்பு முறையில் குறைந்த பட்சவரி விதிப்பு முறையை ஏற் படுத்தியிருக்கிற காரணத்தால் அதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதேபோல இதிலே பணி செய்கிற பணியாளர்களுக்கு குறிப்பாக கடைநிலையிலே வேலை செய்கின்ற கிராமப் ஊதியத்தை உயர்த்தி இருப்பதை நான் பணியாளர்களுடைய கடைநிலையிலே வேலை செய்கிற வரவேற்கிறேன். கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்தவரை என்னுடைய கருத்தாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது அவர்கள் பணி முறைகள் வரன்முறை படுத்தப்பட வேண்டும். அவர்கள் நிர்வகிக்கின்ற கணக்குகளைப் பொறுத்தவரை 24 கணக்குகளை நிர்வகிக்கி றார்கள். அந்தக் கணக்குகளை கொஞ்சம் குறைத்தால் அவர் கள் இன்னும் முறையாகவும் வேகமாகவும் செயல்பட வாய்ப்பு இருக்கும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்டங்களைப் பிரித்து நிர்வாகத்தை எளிமையாக்கியது போல நிர்வாகத்திலே அரசு எடுக்கின்ற முடிவுகள் அல்லது ஆணை கள் வேகமாக மக்களுக்கு சென்று அடைகின்ற தன்மையை உரு வாக்கியதுபோல வட்டங்களையும் பிரிக்க வேண்டும். அப்படி வட்டங்களையும் பிரித்தால் நிர்வாகமானது செம்மையாக செயல் படுவதற்கும் அரசு ஆணைகளை வேகமாக செயல்படுத்துவதற்கும் வாய்ப்பை உருவாக்கும் என்று நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், நகராட்சியும் கிராமப்புற பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிற வட்டங்களைப் பொறுத்தவரை அது கட்டாயமாக தனியாகப் பிரிக்க வேண்டிய சூழ்நிலையிருப்பதால் அதை வெகு விரைவில் பிரித்தால் அந்த நிர்வாக தன்மையானது எளிமையாக்கப்படும் என்பதை தெரிவித்து, அதைப்போல எந்தந்தப் பகுதிகளில் தமிழகம் முழுவதும், நகராட்சியும் வட்ட மும் கிராமப்புற பகுதிகளும் ஒன்றாக சேர்ந்து இருக்கிறதோ அங்கே எப்படித் தனி வட்டாட்சி அலுவலகமாக பிரிக்கப்பட்டு இருக்கிறதோ அதைப்போன்று நகராட்சி வட்டமும் கிராமப் புற பகுதிகளையும் பிரிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சேட்டுக்கொள்கிறேன். இப்படி தாலுக்கா அலுவலகங்களைப் பொறுத்தவரை, வட்டாட்சி நிர்வாகங்களைப் பொறுத்தவரை



1992 மார்ச் 19]

அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள தாசில்தார்கள் நிர்வகிக்கின்ற பொறுப்பு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் களுக்கு கீழே ஜோனல் தாசில்தார் என்று ஒரு வட்டாட்சியர் பிரிக்கப்பட்டிருக்கிறார். கிராம நிர்வாக அலுவலர்களுக்கு என்று தனியாக ஒரு அலுவலகம் இருக்கிறது. அதைப்போல ஆய்வாளர்களுக்கு என்று ஒரு தனி அலுவலகம் இருக்கிறது. தனி வட்டாட்சியர்களுக்கு தனி அலுவலகம் இருக்கிறது. ஆனால் குறு வட்டாட்சியர்களுக்கு தனி அலுவலகம் கிடையாது. அவர் களுக்கும் தனி அலுவலகம் ஏற்படுத்தினால் இன்னமும் நிர்வாகம் வேகமாக செயல்படுவதற்கு வாய்ப்பு உருவாகும் என்பதை தெரி வித்துக்கொள்கிறேன்.

இந்த வருவாய்த் துறையைப் பொறுத்தவரை எவ்வளவோ சீர் திருத்தங்களை தொடக்க காலத்தில் இருந்ததை விட அதிகமாக கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதிலே கடைசி யாக ஜமாபந்தி முறையை பொறுத்தவரை அதை ஓரளவிற்கு எடுத்து விட்டால்தான் நல்லது. அந்த முறை இருக்கிற காரணத் தாலே பல வகையான வழிகளிலே நிர்வாகச்சீர்கேடுகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே இந்த ஜமாபந்தி முறையை எடுத்து விட்டு அதற்கு என்று தனியாக கணக்குகளை சரி பார்ப்ப தற்கு ஆடிட்டிங் முறையைக்கூட கொண்டு வரலாம். இப்படி ஜமாபந்தி முறையை அகற்றி கொடுத்ததற்கு பின்னால் அந்த கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வேலை செய்வது எளிமை யாக்கப்படுகின்ற வேளையில், அந்த ஆடிட்டிங் முறையை கொண்டு வருவதனால் அதை சரிபடுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதைப்போல அதனுடைய தொடர்ச்சியாக எல்லா நிலைகளிலும் சொல்லலாம்.

அடுத்து, இங்கே உச்ச வரம்பு பற்றி பேசினார்கள். உச்ச வரம்பு கொண்டு வந்ததற்குப் பின்னால் அந்த நிலங்களை எடுத்து எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இந்த உச்சவரம்பினைப் பொறுத்த வரை எப்படி அமலாக்கினாலும் பினாமி நிலமாக பலபேர் இன்ன மும் வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் அதை முழுமை யாக கையகப்படுத்த முடியவில்லை. அதிலே நடைமுறை சிக்கல்கள் இருக்கிற காரணத்தால் கையகப்படுத்த முடியவில்லை. ஆனால் இந்த அரசு, டாக்டர் புரட்சி தலைவியினுடைய அரசு ஏற்பட்டதற்கு பின்னால் பட்டா புத்தகம் வழங்குகிற முறையை தொடங்கியிருக்கிறார்கள். அந்த பட்டா புத்தகம் வழங்குகிற முறையை இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த பட்டா புத்தகம் வழங்குகிற முறையிலே வேகமாக உரியவர் களுக்கு கையிலே கொடுக்கின்ற விதத்திலே அந்த பட்டா புத்தகத்தை கொடுத்துவிடுவோமேயானால் நிலச் சீர்திருத்தத்தின் நோக்கம் நிறைவேறும். அதே போல பினாமி நிலத்தை ஒழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற முழக்கமும் நிறைவேறும். ஆகவே பினாமி நிலங்களை ஒழிக்க வேண்டு மென்று சொன்னால் அந்த பட்டா புத்தகம் ஒவ்வொரு விவசாயி

[திரு. கு. தங்கமுத்து] 1992 மார்ச் 19]

னுடைய கையிலும் நில உடைமையாளர்களுடைய கையிலும் கொடுக்கின்ற தன்மையை வேகமாக நிறைவேற்றி விடுவோமே யானால் இரண்டு வகைகளிலும் நாம் வெற்றி பெறுகிற வாய்ப்பு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

பிற்பகல் 6-05

அதைப்போல பத்திர பதிவுத்துறையைப் பொறுத்தவரையில் பல அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களிலே நடத்தப்படு கின்றன. அவைகள் எந்தக் காலத்தில் தொடங்கப்பட்டன. தொடங்கி எத்தனை வருடங்கள் ஆகியிருக்கின்றன என்று அவற் றைக் கணக்கிட்டு அந்த வகையிலேயாவது ஒரு ஆண்டுக்கு இவ் வளவு என்று கட்டிடங்களை உருவாக்கி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வணிக வரித்துறையைப் பொறுத்தவரை இரண்டு கருத்துக் களை நான் கூற விரும்புகிறேன். ஏ.சி.டி.ஓ. ,டி.சி.டி.ஓ. என்ற அமைப்புகளின் நிர்வாகிகள் எல்லாம் அவர்களுக்கிருக்கின்ற வொர்க்கிங் கெப்பாசட்டி—வேலை செய்கின்ற திறன் இருக்கிறதே அந்தத் திறனைவிட அதிகமாக அவர்களுக்கு வேலைகள், ஒப்படைக்கப்பட்டு இருப்பதன் காரணத்தினால் அவர்கள் அஸெஸ்மெண்ட் செய்கின்றது 400-லிருந்து 500 வரை என்று ஒரு ஏ.சி.டி.ஓ.-விற்கும், டி.சி.டி..ஓ.-விற்கும் பளு இருக்கின்றது. எனவே இதை குறைக்கின்ற வகையில் நியமிக்கின்ற பொறுப் பாளர்களை, நியமிக்கின்ற அதிகாரிகளை இன்னும் கூட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின் றேன்.

அதைப்போல வணிக வரித்துறை, வருவாய்த் துறை இப்படிப் பட்ட துறைகள் எல்லாம் அரசுக்கு சேரவேண்டிய வரிகளை வசூலிக்கின்றபோது சில சங்கடங்கள் இருக்கின்றன. நாம் செக் போஸ்டுகளை, சோதனைச் சாவடிகளை உருவாக்கியிருக்கி றோம். இந்த சோதனைச் சாவடியானது ஒரு துறைக்கு ஒரு சாவடியாக பல சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. அந்த சோதனைச் சாவடிகள் அனைத்தையும் ஒரே சாவடியாக உரு வாக்கினால் அதிலே இருக்கின்ற பல சிக்கல்களை, சங்கடங்களை போக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பல சோதனைச் சாவடி களில் பாதுகாப்பானது குறைவாக இருக்கிறது. அவர்கள் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு செல்லவேண்டும் என்று சொன்னால் வாகனக் குறைவும் இருக்கிறது. ஒரு சோதனைச் சாவடியிலே ஒரு லாரி வந்து நிற்க மறுத்துவிட்டு அதை உடைத்து விட்டுச் சென்றுவிட்டால் அந்தச் செய்தியை இன்னொரு சோத னைச் சாவடிக்குச் சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே, அந்தச் செய்தியைச் சொல்கின்ற சூழ் நிலையை உருவாக்குவதற்கு ஒயர்லெஸ் மூலமாகவோ அல்லது வாக்கி— டாக்கி என்று சொல்லுகிறார்களே அந்த நவீன கருவிகள்



1992 மார்ச் 19] [திரு. கு. தங்கமுத்து]

மூலமாகவோ செய்திகளைச் சொல்லுகின்ற நன்மையை ஏற் படுத்தினால் இப்படிப்பட்ட நன்மைகள் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, சோதனைச் சாவடியின் பலத்தை நாம் அதிகரிக்க வேண்டும். அந்த வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்த வருவாய்த் துறையைப் பொறுத்த வரையில் எல்லா நிலைகளிலும் சிறந்த தன்மைகளை வெளிப் படுத்தியிருப்பதை வரவேற்று வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; திரு.எ.தெய்வநாயகம்

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய வருவாய்த்துறை மானியக் கோரிக்கை மீது எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நமது நாட்டின் வருவாய்த் துறையானது தமிழகத்தை பொறுத்த மட்டிலே மிகவும் சீரும் சிறப்புமாக செயல்பாட்டினை செய்து காண்பித்துள்ளது என்பதில் யாரும் கருத்து வேறுபாடு கொள்ள முடியாது.

சென்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வருவாய்த் துறையினுடைய சீரிய முறையைப் பாராட்டி பெருமைப்படுத்தி அவர்கள் காட்டியதன் விளைவுதான். அநத பெருமையெல்லாம் சேர்ந்து இன்று உருவாக அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

இந்த வருவாய்த்துறை விற்பனை வரியைப் பொறுத்தமட்டிலும் விற்பனை வரியிலே இன்று அவர்கள் சாதனை புரிந்திருகிறார்கள் 2,089 கோடி ரூபாயை அவர்கள் தமிழகத்திலே திரட்டி தமிழக அரசுக்கு தந்திருக்கிறார்கள். பாராட்ட வேண்டிய ஒன்றுதான். இந்த விற்பனை வரியின் மூலமாக 2,089 கோடியை நமது தமிழக அரசுக்குப் பெற்றுத் தந்த அந்த அதிகாரிகளை எவ்வளவு பாராட்டினாலும், புகழ்ந்தாலும் அதற்கு எல்லையே இல்லை என்று நான் கருதுகின்றேன். உள்ளபடியே வரி விதிப்பு பட்ஜெட் என்றாலே வியாபாரிகளுக்கெல்லாம் ஒரு அலர்ஜீ வரும். பட்ஜெட்டிலே ஏதோ சொல்லப் போகிறார்கள். விலைவாசிகள் ஏறும் என்றெல்லாம் அவர்கள் பதுக்கி கொள்ளை லாபம் அடிப்ப தற்கு ஏதுவாக இருக்கும் என்றெல்லாம் எண்ணுகின்ற அவர் களுடைய எண்ணத்தில் மண் விழுந்தது. இதுதான் இந்த பட்ஜெட்டின் குறிக்கோளாக இருக்கிறது. காரணம் என்ன வென்றால், வரியைக் குறைத்து வருவாயை பெருக்குகின்ற ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள், மத்தியிலே துங்கமான பட்ஜெட்டாக இருந்தாலும் தமிழகத்திலே ஒரு புரட்சி பட்ஜெட்டாக அமைந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சி

யுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விற்பனை வரியை பொறுத்தமட்டிலும் அதிகாரிகள் எவ்வளவு சிரமத்தின்பேரில் அவர்கள் செயலாற்றி இவ்வளவு பெரிய தொகையை நமக்கு ஈட்டிக் கொடுத்தார்கள் என்பதை நான் சற்று எண்ணிப் பார்க்கின்றேன்.

பிற்பகல் 6-10.

ஒரு வியாபாரி வியாபாரம் செய்யும்போது அவர்கள் எவ்வளவு கணக்குகள் வைத்து, முறைப்படி வைத்திருந்தாலும் கூட அந்த கணக்குகளை கணக்கிட்டு அவர்களுடைய லாப நஷ்டங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு வரி விதிக்கின்ற வீதத்தை எவ்வளவு சாராம்சமாக எடுத்து நமக்கு ஈட்டிக் கொடுத்தாலும் கூட அந்த அதிகாரிகளுடைய எண்ணம் எப்படி இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு அதிகாரி கள்ளக் கணக்கைப் பிடித்தார் என்றால் அவருக்கு என்ன நாம் கைமாறு செய்தோம் என்று நம்முடைய அரசு கொஞ்சம் உன்னிப்பாக கவனிக்கவேண்டும். நான் அவர்களுக்காக ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 10 இலட்சம் ரூபாய் அளவில் அவர்கள் கள்ளக் கணக்கை கண்டுபிடித்தால் அவர்களுக்கு நல்ல பரிசாக, நற்சான்றிதழ் வழங்குவது பெருமையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது சீப் மினிஸ்டர் மெரிட் சர்டிபிகேட் என்ற ஒரு சர்டிபிகேட் வழங்குவதாக இருக்கிறது. ஆனால் இதுவரைக்கும் யாருக்கும் வழங்கியதாகத் தெரியவில்லை. அதை வழங்கி அவர்களைப் பெருமைப்படுத்தினால் தகும் என்று கூறிக்கொள்கிறேன்.

நான் மூதறிஞர் இராஜாஜி அவர்களை 1952-லேயே அறிந்தவன். ஏன் என்றால் வியாபாரி என்ற முறையிலே, ஒரு காலத்திலே நெல், அரிசி வியாபார நிமித்தமாக வரி விலக்கு செய்ய வேண்டுமென்று சொல்லும்போது சரியாக அந்த வரி விலக்கைச் செய்தார்கள். அதை செய்து காட்டி மக்களுடைய நல்ல எண்ணத்தை அவர்கள் பெற்று புகழைப் பெற்றார்கள். இன்று நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சென்ற பட்ஜெட்டிலும் சரி, இந்த பட்ஜெட்டிலும் சரி பலமுனை வரியை ஒருமுனை வரி என்று செய்தார்கள். இன்று 8 சதவீதம் என்பதை பலசரக்கு சாமான்கள், மற்ற சாமான்களுக்கு எல்லாம் 3 சதவீதம் என்ற சலுகையைச் செயது படிப்படியாக இறங்கி வருவதைப் பார்க்கும்போது உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சி தான் ஏன் என்றால் வியாபார சகோதரர்கள் எப்போதுமே வரி விதிப்பு வந்திருக்கிறது நீங்கள் அதைப் பேசுங்கள்; இதைப் பேசுங்கள் என்று எல்லாம் எங்களிடம் வருவார்கள். ஆனால், இந்த வருடம் வியாபாரிகள் எங்களிடம் வரவேயில்லை. நாங்களாகப் பேசுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு செயலை செயலாற்றி மக்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் நெஞ்சாரப்



பாராட்டுகிறேன். மேலும் நமது இந்த வரித்துறையை இன்னும் சீறும் சிறப்புமாக செயல்படுத்த வேண்டும். காரணம் என்ன என்றால் கணக்குகளை ஒழுங்காக வைத்துக் கொள்வதற்கு நீங்கள் வழி வகுத்து கொடுத்திருக்கிறீர்கள். அந்தக் கணக்குகளை ஒழுங்காக வைத்துக்கொள்கிறார்களா என்பதை பார்க்க அதிகாரிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டிய பொறுப்பு உடையவர்களாக நாம் இருக்கிறோம். அவர்களுக்கு வேண்டிய வாகன வசதி, கட்டிட வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகிறது என்று எல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு போதிய வசதிகள் இல்லை என்று எல்லாம் சொன்னார்கள். அப்படிப்பட்ட வசதிகளை எல்லாம் அவர்களுக்கு செய்து கொடுத்து அவர்களை இன்னும் கொஞ்சம் முடுக்கிவிட்டோம் என்றால் நிச்சயமாக நமக்கு வருவாய் பெருகும், நம்முடைய சிரமமும் குறையும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்த வரியைப் பொறுத்தவரையில் இந்த லாட்டரி சீட்டுக்கு வரி இருக்கிறதா; இல்லையா என்று தெரியவில்லை. இதில் காணோம். அது ரொம்ப மக்களுடைய சமூக விரோதச் செயலில் நிறைய ஊடுருவி விட்டது. இன்றைக்கு மற்ற பொருட்களைப் பார்த்தால் நாம் பலசரக்குகளுக்கு எல்லாம் எடுத்து இருக்கிறோம். புளி, மிளகாய்க்கு எல்லாம் எடுக்கவில்லையே என்று சொல்லி பெண்கள் கேட்பது சகஜமாகப் போய்விட்டது. முழுமைக்கும் நாம் வரியை எடுத்துவிட்டால் நம் வசதி வாய்ப்பை எப்படி பெருக்குவது என்று நான் அவர்களிடம் எடுத்து சொன்னவுடன் ஓ அப்படி ஒன்று இருக்கிறதா என்று சொல்லி அவர்களும் கேட்டுக் கொண்டார்கள். இந்த லாட்டரி சீட்டு அது பாட்டுக்கு எங்கெங்கோ, எப்படி எப்படியோ இருக்கிறது. அது எங்களுக்கு விளங்கவில்லை. மாண்புமிகு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் நேற்று சொன்னார்கள். மாமூலுக்கு வேண்டும் என்றால் வரி விதிக்கலாமே என்று சொன்னார்கள். (குறுக்கீடு) அந்தமாதிரி இந்த லாட்டரி சீட்டுக்கு ஏதாவது வரி விதித்தால்கூட நல்லது என்று நான் நினைக்கிறேன் ஏன் என்றால் நம்முடைய வருவாயைப் பெருக்கவேண்டும். (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள் அவை முன்னவர் அவர்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அவை முன்னவர் அவர்கள் நேற்று மாமூல் என்ற ஒன்று பழங்காலத்திலிருந்து இருக்கிறது என்று சொல்லி அப்படி ஒன்று வருமானால் வரி விதிக்கலாம் என்று விளையாட்டாகத் தான் சொன்னார்கள்.

<u>திரு. எ. தெய்வநாயகம் :</u> இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கித் தந்தோம் என்றால் நமக்கு வருவாய் பெருகும், நம்முடைய சேவவினங்களை பக்குவமாக மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பாக அமையும் என்பதை கூறிக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்தபடியாக வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் எங்களது தொகுதி மாநகராட்சிக்கு உட்பட்ட தொகுதி. கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள் பட்டா வழங் கப்படும் என்று. ஒவ்வொருவருக்கும் மாநகராட்சி எல்லை யில் ஒரு சென்ட் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார் கள். ஆனால் எங்களுடைய தொகுதி ஒரு இக்கட்டான தொகுதி திடீர் நகர்ப் பகுதி. சுப்பிரமணியபுரம் பகுதி, காமராஜபுரம் இப்படி பல பகுதிகளில் நத்தம் புறம்போக்குகளில் பல ஆண்டு காலமாக குடியிருந்து வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அது தெரியும். அப்படிப்பட்ட இடங்களில் ஒரு சென்ட் என்றால் அங்கே அடி தடி சண்டை வந்து விடும். இருக்கும் குடியிருப்புதாரர்களுக்கு அப்படியே பட்டா செய்து கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் ஒவ்வொருவரும் குடிசைவாசிகள் எல்லாம் சென்ட். சென்ட் என்றுதான் வைத்து இருப்பார்கள். ஒரு சென்ட் என்று கணக்கிட்டு தந்தோம் என்றால் இரண்டு, மூன்று வீட்டுக்காரர்கள் சண்டை போட வந்துவிடுவார்கள். அதைக் கொஞ்சம் கவனத்தில எடுத்துக் கொண்டு, அப்படிப்பட்ட மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட இடங்களுக்கு பட்டா செய்து கொடுப்பதற்கு ஆங்காங்கு குடியிருக்கின்ற குடியிருப்புதாரர்கள் பெயரிலேயே பட்டா செய்து கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6–15

அடுத்தபடியாக பத்திரப் பதிவுத் துறை. பத்திரப் பதிவு துறை என்பது கிட்டத்தட்ட 400 கோடி ரூபாயை நமக்கு ஈட்டித் தருகின்ற ஒரு துறையாகும். அந்தத் துறையைப் பொறுத்தமட்டிலும் நமக்கு அது ஒரு நல்ல துறையாக இருந்தாலும் பெரிய பெரிய பணம் படைத்த முதலைகளெல்லாம் இன்றைக்கு கேரளாவிற்குச் சென்று பத்திரம் பதிவு செய்வதன் மூலம் தமிழகத்திற்கு வருகின்ற வருமானத்தை தமிழகம் இழப் பதற்குவழிகோலுகிறார்கள் அதைத் தடுதது நிறுத்துவதட்கு மத்திய அரசை அணுகினாலும் சரி நாம் அவர்களை கேட்டு கொண்டாலும் சரி, அந்த சட்டத்தைச் சரி செய்து நமக்கு அந்த வருவாய் கிடைப்பதற்கான ஆதாரங்களை சட்டப் பூர்வமாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றிக் கூறி அமர்கிகறன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. ஆர். முருகானந்தம்.

திபி. கே. ஆர். முருகானந்தம் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நம்முடைய இதைய தெய்வம் புரட்சி தலைவி அவர்களின் பாதம் தொட்டு வணங்கி. மாண்புமிகு



மிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக் கிற இந்த மானியக் கோரிக்கையிலே இங்கு பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் எங்களுடைய பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் மாவட்டத்திற்கு இந்த மானியக் கோரிக்கை யிலே எங்கள் மாவட்ட வறட்சி நிவாரணப் பணிக்காக ஒரு கோடி ரூபாயை ஒதுக்கிய நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதோடு மட்டுமல்லாமல் எங்களுடைய பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலே வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதற்காகவும் எங்களுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அங்கே வரி ரத்து செய்கின்ற நேரத்திலே சில தவறுகள் நடந்து விடு கின்றன. சில கிராமங்களிலே, சில பகுதிகள் மழையின் காரண மாக, வடகிழக்குப் பருவ மழையின் காரணமாகவும், சில கிராமங்களில் மழை பெய்திருக்கிறது, சில கிராமங்களில் மழை பெய்யாமல் இருக்கிறது. மழை பெய்யாத கிராமங்களிலே, பல கண்மாய் பாசனங்கள் எங்களுடைய பகுதியிலே, எங்க ளுடைய தொகுதியிலே, எங்களுடைய மாவட்டத்திலே இருக் கின்றன. ஒருசில ஆயக்கட்டுதாரர்கள் உள்ள, ஒரு தண்ணி பாய்கால் விளைச்சல் உள்ள நிலமெல்லாம் அங்கே சாவியாகப் போய் விடுகிறது. அதற்குச் சில சமயங்களில் வரி போட்டு விடுகிறார்கள். ஆகவே, வரி கணக்கு போடுகிறபோது, வரி விதிக்கிறபோது கிராமத்து வாரியாக அங்கேயுள்ள கண்மாய் பாசனங்களைப் பார்த்து, ஒரு கிராமத்தை கணக்கெடுக்கிற போது, எந்தக் கண்மாய் பாசனத்திலே அது விளைந்திருக்கிறது என்பதை அங்கே கண்காணிக்கவேண்டுமென்று. . . . (மணி யடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் மாவட்டத்தில் வரிவஜா செய்யப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அதனுடைய நிலை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுகுறித்து பதில் உரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். இடையிலே நீங்கள் இப்படிக் கேட்கக் கூடாது. திரு. கே. ஆர். முருகானந்தம் அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

1992 மார்ச் 19

திரு. கே. ஆர். முருகானந்தம் : இந்த மானியக் கோரிக்கையிலே 1990 ஆம் ஆண்டு 9—7—1990 முதல் சம்பந்தப்பட்ட இயற்கை பாதக சூழ்நிலையின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் திருநெல்வேலி மாவட்டம் மற்றும் தஞ்சை மாவட்டங்களுக்கு, மொத்தம் ரூபாய் 1,08,35,524 மட்டும் நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன்.

நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியிலே பட்டா பாஸ் புத்தகத் திட்டம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமான முறையாகும். ஏனென்றால் இந்த பட்டா பாஸ் புத்தகத்தை இங்கே வழங்குகின்ற நேரத்திலே அதிலே அந்த உரிமைதாரர்களுடைய பெயர், அவர்களுடைய நிலம் எவ்வளவு; கூட்டு பட்டாதாரர்கள் யார் யார்; அவர்களுடைய பங்கு என்ன; அவர்கள் எவ்வளவு வரி செலுத்த வேண்டியது இருக்கிறது; எவ்வளவு வரி செலுத்தினார்கள்; வில்லங்கங்கள் என்ன இருக்கின்றன என்பன போன்ற பல ஆவணங்கள்; பல விவரங்கள் அதிலே குறிக்கப்பட்டு அந்த பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் இந்த பட்டா பாஸ் புத்தகங்களை வைத்து பட்டாக்களுக்காக நாங்கள் சிவில் கோர்ட்டிலே வழக்கு போடுகின்றபோது, It is Only a piece f paper It is nothing but one of the title deeds; என்று சொன்னார்கள் இதை ஒரு உரிமையை நிலைநாட்டுகின்ற ஆவணமாகத்தான் சொன்னார்கள். ஆனால் அதற்குரிய மற்ற மூலப் பத்திரங்கள்; பூர்வீகச் சொத்தாக இருந்தால், அதற்குரிய மூலப் பத்திரங்களைக் காண்பிக்க வேண்டும். கிரையம் வாங்கியிருந்தால் அதற்குரிய கிரையப் பத்திரங்களைக் காண்பிக்க வேண்டும். ஆனால் இந்த பட்டா பாஸ் புத்தகத்திலே மிகத் தெளிவாக, லீகல் டாகுமெண்டாக, உரிமையை நிலைநாட்டுகின்ற வகையிலே, எல்லா விவரங்களும் குறிக்கப்பட்ட ஒரு உரிமையை நிலைநாட்டுகின்ற லீகல் டாகுமெண்டாக இங்கே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதனாலே நீதிமன்றங்களிலே விவசாயிகளெல்லாம் தேவையில்லாத வழக்குகளுக்கெல்லாம் வரமுடியாத அளவிற்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியிலே ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

அடுத்து, இந்தத் திட்டத்தாலே பல நன்மைகளை அடைவதற்கு, சலுகைகளைப் பெறுவதற்கு, அவர்கள் காண்பிப்பதற்கெல்லாம் இது ஏதுவாக இருக்கும். இப்பொழுது கோர்ட்டுகளிலே ஜாமீன் எடுக்க வேண்டுமென்றால், முன்பெல்லாம் பட்டா பாஸ் புத்தகங்களைக் கொண்டு போனால் முடியாது. ரசீது வேண்டுமென்று, வரி கட்டி இருக்கிறீர்களா என்று ரசீ



தையும் கேட்பார்கள். ஆனால் இப்பொழுது இந்தப் பட்டா புத்தகங்களெல்லாம், ஜாமீன் எடுப்பதற்கெல்லாம் வேண்டியதில்லை. அதைக் கொண்டு போய்க் காண்பிக்கலாம்.

பிற்பகல் 6–20

அடுத்து, நிலப் பதிவேடுகளிலே, பதிவுத் துறையிலே நிறையப் பத்திரங்களைப் பதிக்கின்றபொழுது முன்பெல்லாம் வில்லங்க சர்டிபிகேட் எல்லாம் எடுக்க வேண்டும். ஆனால் இப்பொழுது இந்தப் பட்டா புத்தகத்தை நம்முடைய உரிமைகளை நிலைநாட்டும்பொழுது வில்லங்கம் இல்லை என்று இதைக் காண்பித்து விட்டாலே அவர்களினுடைய நிலத்தினுடைய உரிமை எவ்வளவு, அதனுடைய பங்கு எவ்வளவு என்று குறித்துக் கொண்ட உடனே பத்திரம் எழுதி விடுவார்கள். அந்தச் சலுகையெல்லாம் விவசாயிகளுக்குக் கிடைக்கப்பெற்றிருக்கிறது. இது போன்ற பல்வேறு சலுகைகளை அளிக்கின்ற வகையிலே இந்தப் பட்டா பாஸ் புத்தகம் இங்கே நிலை நாட்டப்பட்டிருக்கிறது.

அதேநேரத்திலே நம்முடைய சமுதாய நலத் திட்டங்களைப் பார்க்கின்றபொழுது, அனைத்துத் தரப்பினரும் பாதிக்காதவாறு இருக்க வேண்டும். குத்தகைச் சட்டத்தை எண்ணிப் பார்க்கின்றபொழுது உழுபவனுக்கே நிலம் சொந்தம், உழுகிறவர்கள் அந்த உரிமையை நிலை நாட்ட வேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவி அரசு சொல்கிறது. அதே நேரத்திலே ஒரு ஏழை விதவை இருக்கிறார், தன் மகன் இளைஞனாக இருக்கின்றபொழுது, 15 வயது, 10 வயது இளைஞனாக இருக்கின்றபொழுது கணவனை இழந்து விடுகிறார், அவர்கள் நேரடி விவசாயம் செய்ய முடியாது. அப்பொழுது ஒரு குத்தகைதாரரிடம் நிலச்சுவான்தாரராக இருக்கின்ற அந்த விதவை தன் மகன் இளைஞனாக இருக்கின்றபொழுது ஒரு குத்தகைதாரரிடம் விட வேண்டியிருக்கிறது 2 ஏக்கர், 3 ஏக்கரை. அந்த 2 ஏக்கர், 3 ஏக்கர் உழுதுகொண்டிருப்பவர் பின்னால் நிலைமை, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற முறையிலே உரிமை நிலை நாட்டப்படுகிறது. ஆனால் பின்னால் அவன் பெரியவனாக வந்து, அவன் நேரடி விவசாயம் செய்கின்றபொழுது அந்த நிலத்தைத் திருப்பிப் பெற முடியாத நிலை ஏற்படுகிறது. ஏனென்றால் குத்தகை உரிமைச் சட்டம் அவருக்கு வந்து விடுகிறது. ஆகவே, இதுபோன்ற சூழ்நிலைகளைப் பார்க்கின்றபொழுது இதுபோன்ற விதவைகள் — அரசு ஊழியர்களாக இருப்பவர்கள் நேரடி விவசாயம் செய்ய முடியாது. அவர்கள் ரிடையர் ஆன பிறகு அந்த நிலங்களையெல்லாம் திருப்பிக் கொடுப்பதற்கு அப்படியொரு வழிவகைகளை இந்தக் குத்தகைச் சட்டத்திலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முக்கியமாக, கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ஆக்ட் என்ற குத்தகைதாரர் சட்டத்திலே முக்கியமான அம்சம் என்னவென்றால், தாசில்தார்தான் இதை விசாரிப்பதாக

இருக்கிறது. தாசில்தார் விசாரிக்கின்றபொழுதுஒரு நிலை நாட்டு கின்ற அளவிற்கு யார் நிலச்சுவான்தாரர், உண்மையாகவே அவர் உழுகிறாரா என்பதையெல்லாம் நிரூபிப்பதற்கு அவ் வளவு தகுதிகள், அந்தப் படிப்பு, அந்தஸ்தெல்லாம் இருக்க வேண்டும். சாதாரணமாக ரென்ட் கண்ட்ரோல் ஆக்டிலே 10 ரூபாய், 20 ரூபாய் வாடகைப் பாக்கியிருந்தாலும்கூட, குடி யிருப்பவனுக்கும், வீட்டுச் சொந்தக்காரருக்கும் உள்ள நிலை மையை, ரென்ட் கண்ட்ரோல் ஆக்ட்படி எவிக்ஷன் பண்ணு வதற்கோ, மற்ற வாடகைப் பாக்கியை வசூலிப்பதற்குக் கூட டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கேடர் என்று சொல்லப்படுகின்ற சட்டம் படித்த அந்த மாவட்ட உரிமை இயல் நீதிமன்றத்திற்கு அந்த உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ஆக்டிலே இதுபோன்ற தனிக் கோர்ட்டுகளை சட்டம் படித்த டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பாக இருக்கக் கூடியவர் களை நீதிபதிகளாக, கோர்ட்டார்களாக வைத்தால் அந்தச் சட்டம்—குத்தகைச் சட்டத்திலே 'உண்மையான குத்தகை தாரர் யார், உண்மையான நிலச்சுவான்தார் யார் என அவ ருடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு வழியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று. கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்டிலே தாசில்தார் விசாரிக்கிறார். அதிலே முடிவைப் பொறுத்தவரை யில், நியாயம் கிடைக்காதவர்கள், மேலே அங்கே ஆர்.டி.ஓ விடம் செல்கிறார்கள். ஆர்.டி.ஓ. விடத்திலேயிருந்து டி.ஆர் ஓ.விடம் செல்கிறார்கள். இப்படிப் பல்வேறு முறைகளிலே அங்கே அப்பீல்கள் செய்துகொள்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே நிலச்சுவான்தார் என்ன செய்கிறார் என்றால் ஒரு சிவில் சூட்டைப் போடுகிறார். சூட் ஃபார் இன்ஜங்ஷன்— எங்களுக்கு நில உடைமையிலே பாத்தியம் இருக்கிறது. அப்படி இவருக்கு எந்த உரிமையும் இல்லை. நான்தான் உரிமை தாரர் இந்த நிலத்திற்குள்ளே நுழையக் கூடாது என்று. இப்படி சிவில் கோர்ட்டிலே பெண்டிங்காகப் போகின்றபொழுது இந்த வழக்கு தள்ளுபடி ஆகிப்போகிறது. விவசாயிகள் இருமுனைத் தாக்குதலிலே— சிவில் கோர்ட்டிலும் அங்கே ஃபேஸ் பண்ண வேண்டியிருக்கிறது; இங்கே டெனன்ட்ஸ் ஆக்டிலேயும் ஃபேஸ் பண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே, சிவில் கோர்ட்டுக்கே இந்தச் சட்டத்தை ஒப்படைத்து விட்டால் கல்ட்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்டிலே உரிமையை நிலைநாட்டுவதை ஒப் படைத்து விட்டால், தனிக் கோர்ட்டாக அமைத்து விட்டால் விவசாயிகளுக்கு ஏதுவாக இருக்கும். நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே இதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட நிர்வாகம் என்பது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாப் பொது நிர்வாகத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ நிர்வாகத்தை மட்டும் கவனிப்ப



தில்லை. ஆனால் அந்த நேரத்திலே தாசில்தார்களையெல்லாம் மாவட்ட அளவிலேதான் மாற்ற முடியும் என்ற ஒரு நிலை இருக்கிறது. மாவட்டத்தை விட்டு மாவட்டம் மாற்ற முடியாது. அப்பொழுது அவர்களை மாவட்டத்தை விட்டு மாவட்டம் மாற்றாதபொழுது அங்கே பொது மக்களுக்கோ, விவசாயிகளுக்கோ எந்தவிதமான கோரிக்கைகள் வரும்பொழுது அலட்சியமாகச் செய்கிறார்கள். மாவட்டத்தை விட்டு மாவட்டத்திற்கு மாற்றக் கூடிய உரிய நடவடிக்கையை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் செய்ய வேண்டும். அதற்குக் காரணம் என்னவென்றால், என்னுடைய கருத் தாகச் சொல்கிறேன். ஜாயின்ட் கமிஷனர் ஃபார் ரெவின்யூ அட்மினிஸ்ட்டிரேஷன் என்று ஐந்து மண்டலங்களாகப் பிரித்து, 4, 5 மாவட்டங்களுக்கு ஒரு மண்டலத்தை ரெவின்யூ அட்மினிஸ் டிரேஷன் — வருவாய் நிர்வாக ஆணையாளர்களை ஏற்படுத்தி அந்த மண்டலத்தில் இந்த மாவட்டங்களை வைத்து, தவறு செய்கின்ற அல்லது நன்றாக வேலை செய் யாத தாசில்தார்களை மற்ற மாவட்டங்களுக்கு மாற்றலாம். ஏனென்றால் ரெவின்யூவை மட்டும் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் கவனிக்க முடியவில்லை. ஏனென்றால் அவர் பொது நிர்வாகமாக வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க வேண்டி யிருக்கிறது ; மற்ற எல்லா நடவடிக்கைகளையும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டி இருக்கிறது. ஆகவே இதுபோன்ற மண்டலங்களாகப்பிரித்து, அங்கே ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களைப் போட்டால், ரெவின்யூ சம்பந்தப்பட்டவைகளை அவர்கள் கவனிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை என்னுடைய கருத்தாகச் சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6.25.

அடுத்து வி.ஏ.ஓ-க்கள். கிராம அதிகாரிகள் எல்லாம் சில கிராமங்களில் தவறு செய்கிறார்கள். சிலபேர் முறை கேடாக அந்த ஊர்களில் குழப்பங்களையெல்லாம் செய்து கொண்டு, கட்சிகளிலே, அரசியலிலே எல்லாம் தலையிடுகி றார்கள். அப்படிப்பட்டவர்களை மாற்றத்தான் முடிகிறது. அவர்கள் இளநிலை உதவியாளர்களாக இருக்கிறார்கள். அவர்களைக் கூட இளநிலை உதவி யாளர்களாக தாலுகா ஆபிஸ்களில் போடலாம். புரமோஷன் கொடுக்கத் தேவையில்லை. இளநிலை உதவியாளக்களாக தாலுகா அலுவலகங்களிலே போட்டு, அங்கிருக்கிற இளநிலை உதவியாளர்களை, வி.ஏ.ஓ-க்களாக, கிராமங்களிலே நாம் மாற்றி விடலாம். அப்படி 'வில்லிங்'-ஆக இருக்கிற எவ்வளவோ வி.ஏ.ஓ.-க்கள்—எம்.ஏ. படித்த பட்டதாரிகளாக இருக்கிற வி.ஏ.ஓ.-க்களாக இருக்கிறவர்களை இப்படி முறை கேடாக நடக்கிறபோது, மாற்றிப் போட்டால், நம்முடைய ரெவின்யூ நிர்வாகம் சீராக இருக்குமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

[திரு. கே. ஆர். முருகானந்தம்] [1992 மார்ச் 1

அடுத்து, நம்முடைய மாவட்ட நிர்வாகம் நெருங்கி வர வேண்டும். மக்களுக்கு ; பல நன்மைகளைப் பெற வேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் மாவட்டத்தைப் பிரித்து வருகிறார்கள். என்னுடைய சிவகங்கை தாலுகா, பெரிய தாலுகாவாக இருக்கிறது. அந்தப் பெரிய தாலுகா, சேத்தூர் போன்ற பல்வேறு கிராமங்களை இணைக்கின்ற மூலை முடுக்குகளிலுள்ளவர்கள் எல்லாம் அங்கே போக வேண்டி இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாவட்ட நிர்வாகத்தை மக்கள் எல்லாம் நெருங்கி வந்து நிர்வாகச் சிக்கல் இல்லாமல், பல நன்மைகளை அடைய வேண்டுமென்று, புரட்சித் தலைவி அவர்கள் நிதி நெருக்கடியிலும் இப்போது பல மாவட்டங்களைப் பிரித்திருக்கிறார்கள் — ஆகவே, என்னுடைய சிவகங்கை தாலூகாவை இரண்டாகப் பிரித்து, சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலூகாவாகவும், மருதிருவர் வாழ்ந்து மாண்ட ஊரான காளையார் கோவிலை தலைமையிடமாகக் கொண்ட ஒரு தாலூகாவாகவும் ஆக்கித் தரவேண்டுமென்று கேட்டு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்ற காரணத்தினாலேதான், நானும் ' டைம் ' கேட்டு வாங்கியிருக்கிறேன். அதற்காக நன்றி. நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஏழைகள்மீது இரக்கப்பட்டு, முதியோர் உதவித் தொகையை, ரூ. 50-லிருந்து இந்த விலைவாசியில் அது போதாது என்று சொன்னவுடன், கவர்னரின் பதிலுரையின்போது, அதற்காக என்ன பணம் செலவானாலும் பரவாயில்லை ; இதை 75 ரூபாயாக உயர்த்துகிறேன் என்று சொல்லி, உயர்த்தினார்கள். அவர்களுக்கு இந்த ஏழைகளின் சார்பாக, அந்த அநாதைகளின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஆண் மக்கள் இருக்கிறார்கள் ; ஆனால், ஆண் குழந்தை இருந்தால்கூட, வயதான தாய் தகப்பனுக்கு ஒன்றுமே செய்வதில்லை ; பெண் பிள்ளைகள் இன்னொரு வீட்டிற்கு கல்யாணம் செய்துகொண்டு போகிறார்கள். இருந்தாலும், அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ ஏதாவது ஒன்று செய்கிறார்கள். ஆனால், ' உனக்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்களே ' என்று கேட்டால், ' தாயே நான் என்னப்பா செய்ய ? என்று சொல்லி ' அவன் கஞ்சி ஊத்த மாட்டேன் என்கிறான் ; அடிக்கிறான், உதைக்கிறான் ' என்கிறார்கள்.



]1992 மார்ச் 19] ]திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள்]

அந்த மாதிரி, அந்த ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக நான் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும், முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு, திண்டுக்கல் மாவட்டம்—நான் இன்று எதிர் பார்த்தேன் ; பட்ஜெட்டில், இதை வறட்சிப் பகுதியாக அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இல்லை ன் சென்ற முறையும் பேசினேன். எனக்கெல்லாம் கொஞ்சம் நிலம் இருந்தாலும் கூட, 8 ஆண்டு காலமாக மழை இல்லாத காரணத்தினால்—நீங்கள் வறுமைக் கோடு வறுமைக் கோடு என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே ஒரு கோடு இருக்கிறது என்றால், அங்கே நாங்கள் போய் விட்டோம் என்று நான் சென்ற முறையே பேசினேன். திண்டுக்கல் மாவட்டம், மதுரை, இராமநாதபுரம் ஆகியவை மழையே இல்லாதக் காரணத்தினால், கிணற்றிலே தண்ணீர் இல்லை ; போர் போட்டால் கூட இல்லை. இங்கே 300 அடி போர் போட்டோம் ; அந்த 300 அடியிலே கூட தண்ணீர் வருகிறதா என்று பார்த்தால், இப்படி வருகிறது ; நிற்கிறது. நாங்கள் தென்னம்பிள்ளைகளைப் போட்டிருக்கிறோம். அந்த ஏரியாவில் எனக்கிருந்த 400 தென்னை மரங்கள் போய்விட்டன, காய்ந்து விட்டன. அதே மாதிரி மற்றவர்களுக்கும் பட்டிவீரன்பட்டிக்குப் போகிற வழியெல்லாம் தென்னை மரங்கள் அப்படியே காய்ந்து, காய்ந்து நிற்கிறது. இவ்வளவு கொடூரமான முறையிலே நாங்கள் இருக்கிறோம். கிணற்றிலே தண்ணீர் இல்லை, தயவு செய்து. முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள் ; உங்களுடைய கருணை உள்ளத்தோடு, நீங்கள் யாராவது ஒரு ரெவின்யூ அதிகாரியை—ஒரு கமிஷனரை அனுப்பி, அந்த ஜில்லாக்களை நேரடியாகப் பார்வையிடச் செய்து, அதற்குப் பிறகாகிலும், எங்கள் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து' அந்த மக்களுக்கெல்லாம் நிவாரணம் அளிப்பதற்கான ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்பதற்காக நான் இந்த மன்றத்திலே பேச வேண்டுமென்று நினைத்தேன். எனவே, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான். மிக்க பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு மாவட்ட ஆட்சி, அதிலே நாம் கலெக்டர்களைப் போடுகிறோம். எங்களுக்கு ஒரு கலெக்டர் அம்மாள்—நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் காலத்திலேதான் திண்டுக்கல்லுக்கு ஒரு கலெக்டரை அனுப்பினார்கள். அவர்கள் எங்கேயோ, மேகாலயாவாம்; அவர்களுக்கு ஏ,பி என்ற பாகுபாடு கிடையாது—அவர்களை அனுப்பி, அவர்கள் நல்ல முறையிலே வேலை செய்தார்கள், அவர்களை ஒரு இரண்டாண்டிற்

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] ]1992 மார்ச் 19

காவது—ஒரு ஜில்லாவிலே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிப்போமேயானால், அவரை இரண்டாண்டிற்காகிலும் அங்கிருந்து மாற்றக் கூடாது. ஏனென்றால், அந்த நிர்வாகமே அ கள் கையிலேதான் இருக்கிறது. புரட்சித் தலைவி நம்முடைய முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களிடத்திலே நான் சொன்னேன்; அங்கிருந்து எனக்கு காகிதமும் வந்திருந்தது. அங்கு தண்ணீர் இல்லை; நாங்கள் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று சொன்னோம். உடனே அம்மாவிடம் காட்டினேன், அதற்கு அவர்கள் என்ன? நீங்கள் போராட்டத்திற்குப் போகப் போகிறீர்களா? என்று கேட்டு உடனே கலெக்டரிடம் போனில் பேசி, கொடை ரோட்டிலே குடிநீர்ப் பிரச்சினையை 24 மணி நேரத்திற்குள்ளாக தீர்த்து வைக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அந்த ஆணையைத் தலைமேற்கொண்டு அந்தக் கலெக்டர் இரவு பகலாக மூன்று நாட்கள் அங்கேயே இருந்து தீர்த்து வைத்தார். பிறகுதான் வீட்டிற்கே வந்தார்கள், அதற்குள் அவருடைய துணைவியர் என்னமோ. ஏதோ என்று நினைத்து வேலை நடக்கும் இடத்திற்கே கொடை ரோட்டிற்கே சாப்பாட்டைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். அப்படி வேலை பார்த்த அந்த கலெக்டர் இன்னும் கொஞ்ச நாளைக்கு அங்கு இருந்தால் நன்றாக இருந்திருக்கும். எந்தக் கலெக்டர் வந்தாலும் How to approach the officials என்பது எனக்குத் தெரியும். அது எங்கள் தலைவர் காமராஜர் சொல்லிக் கொடுத்த பாடம். அவர்களை எப்படி அணுக வேண்டும். எப்படி அவர்களிடம் வேலை வாங்க வேண்டும் என்பது தெரியும். இருந்தாலும், அந்தக் கலெக்டர் மாவட்ட நிலைமைகளை அறிந்து நன்கு வேலை செய்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் அவரை உடனே மாற்றுவது அவ்வளவு நன்றாகத் தெரியவில்லை. இனிமேல் வரக்கூடிய காலங்களிலாவது. ஒருவரை நியமித்தால் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு அவரை மாற்றக் கூடாது என்று நான் அன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது. நீங்கள் குறிப்பிடுகின்ற கலெக்டர்—ஒரு ஃபாரஸ்ட் அபன்ஸ்ல் அவர் மீது சார்ஜஸ் கொண்டு வரப்பட்டிருக்கிறது, அது என்கொயரியில் இருக்கிறது. அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இத்தகைய நடவடிக்கை எடுக்கும் போது அவர் ஒரு மாவட்டக்கலெக்டராக இருக்க முடியாது என்பதால்தான் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறர் என்பதைத்தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்,
(மேசையைத் தட்டும் ஒலி)



[1992 மார்ச் 19]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : எனக்கு விஷயம் தெரி யாது. முதல்வர் அவர்கள் எண்ணத்தை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். அதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

பிறகு மாவட்டங்களையெல்லாம் பிரிக்கின்றோம். மாவட் டங்களைப் பிரிக்கும்போது - சுவாமி சகஜாநந்தா என்பவரைப் பல பேருக்குத் தெரிந்திருக்கலாம். என்னைக்கூட 8-வது வய திலேயே அரிசன சேவா சங்கம் சிதம்பரத்திலே இருக்கும் நந்த னார் மடத்திலே கொண்டுபோய் விட்டார்கள். சுவாமி சகஜா நந்தா என்பவர் மிகப் பெரிய கல்விக் கழகத்தை ஆரம்பித்து, பல ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியர்கள் அவர்களிடத் திலே படித்து, இங்கே கூட ஒருவர் அமைச்சராக இருக்கிறார். சட்டமன்றத்திற்குப் பதினாறு பேர்கள் வந்திருக்கிறார்கள். இங்கே ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. தங்கராஜ் என்பவரும் இருக் கிறார். இப்படி ஐ.ஏ.எஸ். , ஐ.பி.எஸ். அதிகாரிகளை உண்டாக்கிக் கொடுத்தவர். தெய்வபக்தியான தந்தை, அவர்கள் மறைந்து விட்டார்கள். இங்கே சட்டமன்றத்திலே பல ஆண்டு கள் பணியாற்றியிருக்கிறார்கள். தென்னார்க்காடு மாவட் டத்தை இரண்டாகப் பிரித்து இருக்கிறீர்கள். ஒன்றுக்கு வள்ளலார் பெயரைச் சூட்டியிருக்கிறீர்கள். இன்னொன்று தென்னார்க்காடு. அதை தயவுசெய்து மிகப் பெரிய அந்த அரிசன சமுதாயத்திலே பிறந்து மக்களுக்காகவே வாழ்ந்து மறைந்த சுவாமி சகஜாநந்தா அவர்களுடைய பெயரை வைத்தால்—அரிசன மக்கள் சார்பிலே மாத்திரமல்ல, அந்தப் பகுதியிலிருந்து படித்து வெளியேறிய அத்தனை மாணவ, மாணவியர்கள் சார்பிலும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்கு என்னுடைய வேண்டுகோளாக இதை வைக்கிறேன். நீங்கள் எப்படி செய்கிறீர்களோ அப்படி செய்யுங்கள். என் மனதிலே பட்டதைச் சொன்னேன். நடக்கும் என்று ஒரு ஆசை. என்ன செய்வது?

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், கலெக்டர் அலுவலகத்தில் டி.டி.சி. மீட்டிங் போடுகின்றோம். அங்கே முக்கியமான சப்ஜெக்டுகளைப் பேசுகின்றோம். விவாதம் செய்கின்றோம். அத்தனை அதிகாரிகளும் வருகின்றார்கள். பிறகு அங்கே செய்யக்கூடிய வேலைகளைச் செய்து முடித்து விட்டு, பாக்கியை இங்கே, மேலிடத்திற்கு அனுப்பி வைக்கின் றோம். அப்படி வரும்போது அவைகளையெல்லாம் எடுத்துச் செய்வதற்கு , மாவட்ட கலெக்டர்கள் இரண்டு ஆண்டுகள் ஒரு மாவட்டத்தில் இருந்தால் நல்லது.

பிறகு ஆர்.டி.ஓ.-க்கள். 70 போஸ்டுகள் காலியாக இருக் கின்றன என்று கேள்விப்படுகிறேன். அந்தக் காலியான இடங் களை நிரப்பிக் கொடுத்தால், மாவட்ட நிர்வாக வேலைகள் நன்கு நடக்க சாத்தியமாக அமையும். அந்தப் பதவியில் பெர்சன்டேஜ்படி அரிசனங்களை அமர்த்தினால் சாலச் சிறந்த தாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பிறகு பட்டா, பல ஆண்டுகளாக நானும் இதைச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்களிடமும்-நம்முடைய மறைந்த மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இதே அமைச்சர்தான் ரெவின்யூவில் இருந்தார். அப்பவும் கூடச் சொன்னேன். இந்த பட்டா கொடுப்பதற்கு, அரிசனங்களாக இருந்தாலும் சரி பிற்பட்ட ஏழையாக இருந்தாலும் சரி, குடிசைகளில் அவர்கள் வசித்து வருகிறார்கள்; அந்தக் குடிசை வீட்டுக்கு லோன் வாங்கி காரை போட்டு ஓட்டு வீடு கட்ட வேண்டுமென்றால் கூட அதற்குப் பட்டா தேவைப்படுகிறது. ஆகையினால் இதற்கென்று மூன்று ஆண்டுகளுக்கு ஒரு திட்டம் போடுங்கள். அதற்கென்று தனியாக அதிகாரிகளை ஜில்லாக்களிலே நியமித்து, இனிமேல் பட்டா என்று யாரும் கேட்காத அளவுக்கு, எங்கே குடிசைகள் இருக்கின்றதோ, யார் யாரிடம் இடம் இல்லை என்பதைப் பார்த்து, 3 ஆண்டுகளுக்குள்ளாக, அதுவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலத்தில், இந்த பட்டா கொடுக்கும் வேலையை செய்து முடித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடும், பணிவோடும் கேட்டுக் கொள்கிறேன்.

அதன் பிறகு எங்கள் தலைவர் காமராஜர் முதல்வராக இருக்கும்போது 386 யூனியன்கள் இருந்தன. அந்த 386 யூனியன்களை ஏற்படுத்தும் போது அவர்கள் யூனியன் கட்டணம் கட்டும்போது அவர்கள் குடியிருப்பதற்கு வீடுகள் கட்டினார்கள். ஆனால் இன்றைக்கு நாம் தாசில்தாருக்கு வீடு கட்டிக் கொடுக்கவில்லை. எங்கோ ஒன்றிரண்டு கட்டி இருக்கிறோம் ஆனால் தாசில்தார் அலுவலகத்திலே பணியாற்றக்கூடியவர்களுக்கெல்லாம் வீடு இல்லை. இப்போது ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு ஒரு இடத்திலே அந்த பிர்க்காவிலே வீடு கட்டி இருக்கிறோம். எனக்கு முன்பு பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். அந்த வி.ஏ.ஓ.-க்களுக்கு அந்த இடத்திலே வீடு கட்டிக் கொடுக்கலாம். நாம் பணம் போட்டுக் கட்ட வேண்டியதில்லை. கடன் வாங்குங்கள். கடன் வாங்கி வீட்டைக் கட்டுங்கள். ஏனென்றால் அந்த அளவுக்கு இப்போது நிதி நெருக்கடி இருக்கிறது. எனவே கடன் வாங்கி வீட்டைக் கட்டுங்கள். அப்படி வீட்டைக் கட்டிவிட்டு அவர்களிடத்திலிருந்து வாடகை வசூல் செய்து அந்த வாடகையை அந்தக் கடனுக்குக் கட்டக் கூடிய அளவுக்கு நாம் செய்வோமேயானால் எல்லோருக்கும் வீடுகள் கிடைக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதையும் நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 6-35

அடுத்து இந்த பட்டா பாஸ் புத்தகம். ஏனென்றால் ஒருவர் நிலத்தை இன்னொருவருக்கு போட்டுவிடுகிறார்கள். அப்படி ஒருவர் நிலத்தை இன்னொருவருக்குப் போடுவதால் அதிலே



பல சிக்கல்களை உண்டாக்கி கோர்ட் வரை போய் ஒரு மிகப் ւபெரிய வேலையாகவே அது இருந்தது. அதை மாற்றி பட்டா பாஸ் புத்தகம் கொடுப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன்.

பிறகு இந்தத்தரிசு நிலங்கள். இங்கே பலரும் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதற்கு நான் சற்று மாறுபட்ட கருத்தைச் சொல்ல இருக்கிறேன். காரணம் தரிசு நிலங்கள் இருக்கின்றன. மேய்ச்சல் நிலங்கள் இருக்கின்றன. சிலபேர் சொந்தக் கம்மாய்களை ஊருக்கே புறம்போக்காக்கி விடுகிறார்கள். அதை நானே செய்தேன். எங்கள் வீட்டிலே எங்கள் அப்பனுக்குச் சொந்தமான நிலம் 12 ஏக்கர். அதை, ஏழை, எளிய மக்கள் மாடுகள் அவிழ்த்து விட்டால் எங்கே போகும், காலையில் ஆண்கள் ஒதுங்க வேண்டுமென்றால் எங்கே போவார்கள் என்று கருதி என்னுடைய தகப்பனாரே 1958ஆம் ஆண்டு அதைப் புறம்போக்காக ஆக்குவதற்குச் சம்மதித்து புறம்போக்காக ஆக்கிவிட்டோம். பிறகு 74ஆம் ஆண்டு சில மகான்கள் வந்த பிறகு புறம்போக்காக்கிய அந்தக் கண்மாய்களை எல்லாம் தனியார்களுக்கு, கட்சிக்காரர்களுக்கு பட்டா போட்டுக் கொடுத்துவிட்டார்கள். அப்படிப் பட்டா போட்டுக் கொடுத்த காரணத்தால் இப்போது எப்படி இருக்கிறது என்று சொன்னால் மாடு, கன்றுகள் போக முடியவில்லை. புறம்போக்காக்கி ஊருக்காகப் பயன்படுத்த வைத்திருந்த அந்தக் கம்மாயை தனியாருக்கு ஒப்படைத்து விட்ட காரணத்தால் அதன்பிறகு எந்த வேலையும் செய்ய முடியவில்லை. ஆகவே என்னுடைய பணிவான வேண்டுகோளாக தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். 1947ஆம் ஆண்டுக்கு முன்பு இந்தக் கம்மாய்கள் எல்லாம் எப்படி இருந்ததோ, அந்தக் கம்மாய்களில் அளவு எப்படி இருந்ததோ, அந்த அளவுப்படியே மீண்டும் அந்தக் கம்மாய்களை யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் சரி யாருக்கு பட்டா போட்டுக் கொடுத்திருந்தாலும் சரி, அவர்களை வெளியேற்றிவிட்டு இந்தக் கம்மாய்களை அளவு செய்துவிட்டு வரத்துக் கால்வாய்களையும் அதேமாதிரி செய்து தண்ணீரைத் தேக்கி வைத்தால் தான் மழைக் காலங்களில் அந்தக் கம்மாய்களில் தண்ணீர் தேங்கினால் தான் கிணறுகளுக்கு பெர்குலேஷன் கிடைக்கும். அப்போதுதான் கிணறுகளுக்கு ஊற்றுத் தண்ணீர் கிடைக்கும். அந்தக் கிணறுகளில் ஊற்றுத் தண்ணீர் இருந்தால் மழை இல்லாத காலங்களில் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் அலைகிறோமே அந்த நிலையை மாற்ற முடியும். அப்படி அந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்றால் அது இந்த மாண்புமிகு முதல்வர் காலத்திலே--அதை எல்லாம் மாற்றுவதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவ்வாறு செய்தால் மிகச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய மக்களின் சார்பில் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். எனவே இந்த நிலையை நீங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் மிகவும் அன்புடனும், பணிவுடனும் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1992 மார்ச் 19

அடுத்து ஓடைப்புறம்போக்கு, அதுமாதிரி உச்சவரம்பில் நாம் நிறைய நிலம் எடுத்தோம். 1961 ஆம் ஆண்டு உச்ச வரம்புச் சட்டம் வந்தது. அப்போது நான் சட்டமன்ற உறுப்பினர். உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்து நிறைய நிலம் எடுத்தோம். அப்படி நிறைய நிலம் எடுத்து பலபேருக்குக் கொடுத்தார்கள். ஒரு குடும்பத்திற்கு 30 ஏக்கர், அதற்கு மேற்பட்டு ஒருவர் இருந்தால் அதற்காக 5 ஏக்கர், என்று நிர்ணயம் பண்ணினார்கள். அதற்குப் பிறகு 15 ஏக்கர் ஆக ஆனது. ஆனால் இந்த ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கொடுத்தார்களே அந்த நிலங்களில் அந்த ஏழைகள் பூரணமாக விவசாயம் செய்வதற்கு நாம் என்ன செய்து கொடுத்தோம். அந்த நிலத்தைக் கொடுத்தோம். நான் ஏழை எனக்கு 5 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் நான் எப்படி கிணறு வெட்டுவேன். எப்படி மாடு வாங்குவேன். எப்படி விவசாயம் செய்ய முடியும், அதற்கான தொகையை யார் கொடுப்பது என்ற கேள்வி வந்து இன்னொருவரிடத்திலே போய் அதைக் கொடுத்து 10 வட்டிக்கு வாங்கினால் அந்த நிலமும் பறிபோய்விடும், நாம் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலையும் வரும். ஆகவே நாம் எங்கெங்கெல்லாம் சர்ப்ளஸ் நிலம் எடுத்தோமோ அந்த நிலங்களைப் பொறுத்த வரையில் எல்லாம் பரிசீலிக்க ஒரு கமிட்டி போட்டு அந்த நிலங்கள் பற்றி பரிசீலனை செய்து ஆவன செய்யவேண்டும். நான் அரிசன மக்களுக்கு மட்டும் என்று சொல்லவில்லை அரிசனங்களுக்கும் கொடுங்கள். ஏழைகளுக்கும், நிலம் இல்லாத ஏழைகளுக்கும் இந்த நிலத்தைப் பிரித்துக் கொடுத்து அவர்கள் அதிலே விவசாயம் செய்தற்கான உதவியும் செய்தோமேயானால் நாம் நிலத்தை எடுத்து கொடுத்ததில் ஒரு மிகப்பெரிய சாதனை அடைந்தவர்களாக ஆவோம் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இந்த குத்தகை விவசாயம் பற்றி இங்கே ஒரு சகோதரர் சொன்னார். ஒரு மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். குத்தகைக்காரர்களுக்காக நல்ல வேளையாக ஒரு சட்டம் போட்டு இருக்கிறீர்கள். அதாவது யாராவது குத்தகை நிலத்தைக் குத்தகைக்குக் கொடுத்தால்—உழுபவனுக்கு நிலம் கொடுப்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் உழுபவனுக்கு நிலம் கொடுத்தால் நான் ஒரு விதவை, நான் கொஞ்சம் நிலம் வைத்திருக்கிறேன். எனக்கு வேறு யாரும் இல்லை. அந்த அனாதைப் பணமும் கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் சோழவந்தானில் இப்படி 10, 15 கேஸ் இருக்கிறது. நான் சோழவந்தானிலே 10 வருஷம் எம்.எல்.ஏ. ஆக இருந்தேன். அதிலேயும் இந்த ஐயர் வீட்டு அம்மா பின் ஊரார்கள் முதலியவர் இருக்கிறார்



1992 மார்ச் 19] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்

களே, அவர்கள் ரொம்பப் பாவம், கொடுமை அது. அவர்கள் நிலத்தைக் குத்தகைக்கு விட்டார்கள். 2 ஏக்கர் ஒரு ஏக்கர் என்று விட்டார்கள். அங்கே குத்தகைக்கு உழுதவர்கள் கொஞ்சம் பலசாலிகள். அந்தக் கிழவிக்கு யார் கொடுப்பது? குத்தகை கொடுக்க முடியாது. என்ன வந்தாலும் பார்க்கலாம் என்று சொல்லி விட்டார்கள். அப்புறம் நான் போய் கெஞ்சி 'என்ன ராஜா, என்ன கண்ணு', என்று எல்லாம் கெஞ்சி கேட்டு அவர்கள் காலிலே விழாத குறையாக கெஞ்சி 'அந்த அம்மாள் சாகிற வரைக்கும் கொடுப்பா' என்று பேசி, அப்புறம் ஏதோ கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுப்பார். அதுவும் சில பேர்கள் கொடுப்பார்கள். சில பேர்கள் கொடுப்பதில்லை. அதற்குள்ளே எனக்கு தொகுதி மாறி வந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே இந்தக் குத்தகை விதியிலே, அவர்களுக்கு குத்தகை கொடுக்காமல் இருந்தாலும் விவசாயம் செய்யாமல் இருந்தாலும், அவர்களை குத்தகைதாரர்களை வெளியேற்றப்படலாம் என்று இருக்கிறது. குத்தகை கொடுக்காமல் இருந்தால், வெளியேற்றுவதற்கான ஒரு நல்ல சூழ்நிலை இருந்துகொண்டு இருக்கிறது. குத்தகைதாரர்களும் கொஞ்சம் மனம் இறங்க வேண்டும். மனம் இறங்குவது என்றால்கூட, அவர்கள் 25 சதவிகிதம்தானே கொடுக்கிறார்கள். 100 மூட்டை விளைந்தால், அவர்கள் கொடுப்பது 25 மூட்டைதான் அந்த ஏழைக்குக் கொடுக்கிறார்கள். யாருக்கு? நிலம் வைத்திருப்பவர்களுக்கு. அவர்கள் ஏழைகள். குத்தகைக்கு விட்டு இருப்பவர்கள். குத்தகைக்கு நிலத்தை எடுப்பவர்கள் உழைக்கிறார்கள். அவர்களுக்கும் நல்ல வருமானம் வருகிறது. ஆக அந்த நிலத்தை குத்தகைக்கு விட்டவர் பற்றி சொல்கிறேன். யாரைப் பற்றி சொல்கிறேன் என்று சொன்னால், ஒரு சாதாரணப் பெண். அதாவது யாருமே இல்லாத பெண்கள். அவர்களுக்காகத்தான் இதை நான் சொல்கிறேன். அவர்களுக்கு வழி செய்திருப்பது மிகவும் ஒரு நல்ல காரியமாக இருக்கிறது.

இன்றைக்கு அந்த கூலியைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 6–40.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : sir, I am not yielding

[1992 மார்ச் 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் யீல்ட் பண்ணவில்லை. நீங்கள் உட்காருங்கள். திருமதி பொன்னம்மாள் அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் யாரையும் குறை சொல்லவில்லை. இருந்தாலும் கூட நாங்கள் எல்லாம் கஷ்டப்படுகிறோம். நான் குத்தகைக்கு விடவில்லை. ஏனென்று கேட்டால் எங்களுக்கு நிலம் பட்டிக்காட்டிலே இருக்கிறது. தண்ணீர் இல்லாத காட்டிலே இருக்கிறோமே. எங்களுக்கு நிலம் இருந்து என்ன செய்ய ? ஒன்றுமில்லை. உழுபவர்களுக்கு கூலி நிர்ணயம் சட்டம் பற்றி அவர்கள் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் மெம்பர் சொன்னார். ஒரு பக்கமும் விரிவுபடுத்துங்கள் என்று சொன்னார். இந்த 16 ரூபாயை எல்லா ரூபாய்க்கு யார் வருவார்கள் ? எங்கள் ஊரிலே 25 ரூபாய்க்குக் கூட இன்றைக்கு ஆள் கிடைக்கவில்லை. அவர்களைப் போய் கெஞ்ச வேண்டியிருக்கிறது. என்ன அப்பா, வா அப்பா என்று சொல்லி வரவழைக்கவேண்டியிருக்கிறது. 6 மணி நேரம். 7 மணி நேரம் தான் வேலை. 7 மணி நேரம் கூட இல்லை 6 மணிக்கே முடித்துவிட்டு வந்துவிடுவேன். வந்தால் 25 ரூபாய் உடனே கொடுத்து விடுகிறோம். பெண் பிள்ளைகளுக்கு ரூ. 15 இப்படி நாம் கொடுக்கும்போது, இந்த 16 ரூபாய்க்கும் 14 ரூபாய்க்கும் விரிவுபடுத்த வேண்டுமாம். அந்தந்த ஏரியாவிலே இருக்கின்ற நிலைமைக்கு ஏற்ற பிரகாரம், எங்கெங்கே கூலி எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படி கொடுப்பதற்கான நிலைமை இருந்தால்தான் முடியும். இன்றைக்கு எங்களிடம் பணம் இல்லாவிட்டாலுங்கூட யார் கூலி வேலை செய்கிறார்களோ அவர்களைக் கூப்பிட்டுவிட்டு, அம்மா, அக்கா ஒரு 200 ரூபாய் கொடு. ஒரு 300 ரூபாய் கொடு என்று வாங்குகிற நிலைமைதான் இருக்கிறது. அந்தந்தப் பகுதிக்கு எப்படி நிலங்கள் இருக்கிறதோ அதற்குத் தகுந்தாற்போல் கூலி கொடுக்க வேண்டும். அந்த கூலிக்கு அதிகமாக நாம் கொடுக்கமுடியாது. தஞ்சாவூரிலே, அமைச்சர் அவர்கள் தஞ்சை ஜில்லாக்காரர், அங்கே மாத்திரம் 16 ரூபாய்க்கு அப்படி செய்கிறார்கள். எங்கள் பக்கத்திலே எல்லாம் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விடுவார்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பக்கத்திலே ரூ.35.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் ரூ.25. அந்த மாதிரி செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு நாம் வரிபோட வேண்டும். கட்டாயம்



1992 மார்ச் 19] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

வரி போட வேண்டும். வரி இல்லாவிட்டால், நான் மேடையிலே சொல்லிக்கொண்டே இருக்கிறேன். பிட்டுக்கு மண் சுமந்த கதையை விடாமல் நான் சொல்லிக்கொண்டே இருப்பேன். வரிக்கு நாம் இங்கே எதிர்க்கக்கூடாது வரி போடவேண்டும். வரி போட வேண்டும். வரி இல்லாவிட்டால் எந்தக் காரியமும் நடக்காது என்று நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். என்னைப் பொறுத்த வரையிலே, மேடையிலே, பஸ்ஸிலே ரெயிலிலே எல்லா இடத்திலேயும் பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த வரி போட்டாலுங்கூட இப்போது கொஞ்சம் விட்டுக் கொடுங்கள். விவசாயமே இல்லாமல் போய்விட்டது. ஒரு ரூபாய்க்கு 45 பைசாவை 1 ரூபாயாகப் போட்டிருக்கிறது. $2\frac{1}{2}$ ரூபாய் என்று இருந்தது. 5 ரூபாய், 10 ரூபாய் என்று ஆக்கி இருக்கிறோம். அப்படி கேட்டாலும்கூட மழைக்காலங்களிலே வாங்குகிற மாதிரி இருக்க வேண்டும். இப்போது வேண்டாம். அதை கேட்கவே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. விதை போடுங்கள். இப்போது கொஞ்சம் நிறுத்தி வையுங்கள். வருமானம் வருகிறபோது, கொடுக்கலாம். இப்போது நாம் எல்லாம் வரி செலுத்துகிறோம் என்று சொன்னால், ரூ. 200, ரூ. 300 செலுத்தினால் அது டபுள் தி ரூபாய் ஆகிறது. இரண்டு மடங்கு ஆகிறது. அப்படி ஒரு சூழ்நிலை வருகிறது. ஆகவே தயவு செய்து மழை பெய்து, பிறகு இதையும் வசூலித்துக் கொள்ளலாம் என்பதையும் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் பக்கத்திலே விவசாயம் ரொம்ப மோசமாக இருக்கிறது. 12 ஏக்கருக்கு $3\frac{1}{2}$ மடங்கு வரி அதிகம். 25 ஏக்கருக்கு 2 மடங்கு வரி அதிகம். 40 ஏக்கருக்கு $1\frac{1}{2}$ மடங்கு அதிகம். நான் அவர்களுக்கு போட வேண்டாம் என்று சொல்லவில்லை. மழை பெய்யட்டும், உங்களுடைய அதிகாரிகளை அனுப்பிவிடுங்கள். மழை பெய்த உடனே இந்த அரசு வசூல் செய்து கொள்ளலாம் என்பதனை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இயற்கைச் சீற்றங்கள். இந்த இயற்கைச் சீற்றங்கள் திடீரென்று ஏற்படக்கூடிய நிலைமை இருக்கின்றது. சில பகுதிகளிலே மழை பெய்கிறது. மழை பெய்து வெள்ளம் வருகிறது. அந்த மழை பெய்து வெள்ளம் வரும்போது பல குடிசைகள் அடித்துக்கொண்டு செல்லப்பட்டு விடுகின்றன. அப்போது நாம் கொடுப்பது என்ன? வெள்ளம் வந்து அடித்துக்கொண்டு போய்விடுகிறது. அதாவது சூறாவளிக் காற்று வந்து அந்த குடிசையையே தூக்கி எறிந்துவிட்டு போகிறது. சில சமயங்களில் தீ கூட பிடித்துவிடுகிறது. இந்த ஏழைகள் அவர்கள் குடிசையிலே விறகை எரிக்கும்போது கூரையில் தீப்பிடித்துவிடுகிறது. அது

வும் போய் விடுகிறது. அவர்களுக்கு உதவி செய்வது ரூ. 400 இன்றைக்கு அந்த 400 ரூபாய் போதுமா என்பதை மாண்பு மிகு அமைசசர் அவர்கள் பார்க்கவேண்டும். அந்த ரூ. 400 லே ஏதாவது சாமான் செட்டு வாங்கிக்கொடுத்து விடுங்கள். கூரைக்கு கடன் கொடுங்கள். இன்சூர் பண்ணிவிடுங்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : அது ஏற்கனவே இருக்கிறது ரூ. 3,000 வரும்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : அது எனக்குத் தெரியாது. அப்படி ரூபாய் 3,000 வரும் என்றால் அதை என்றைக்கு வாங்குவது? அதை யார் வாங்க முடியும்? ஆகையினால் அவர்களுக்கு நீங்கள் கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் எப்படியாவது கடன் கொடுத்து உதவினால் அவர்கள் அந்தக் கடனை வைத்து வீடுகளை கட்டிக்கொண்டு மாதா மாதம் வாடகைக் கொடுப்பதுபோல அதை அவர்களிடமிருந்து வசூல் செய்வதற்கான நிலைமையை உருவாக்குவோமேயானால் அது இன்னும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 6-45

அடுத்து, பத்திரப் பதிவைப் பொறுத்தவரையில் பல இடங்களில் சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்கள் வைத்திருக்கிறோம். ஆனால் பல இடங்களில் இடமே இல்லை. உங்களைச் சொல்லி குறை இல்லை. ஏன் என்றால் இப்பொழுது பணம் இல்லை. என்ன செய்யப் போகிறீர்களோ என்று நினைத்துக் கொண்டிருந்த எங்களைப் போன்றவர்களுக்கு எல்லாம் எப்படியோ ஒரு தெய்வ பலத்தினாலே நீங்கள் இந்த அளவுக்கு சமாளித்துக்கொண்டிருப்பது மிகப் பெரிய பாராட்டத்தக்க ஒன்றாகும். ஆகவே, இந்த பத்திரப் பதிவு அலுவலகங்களைப் பொறுத்தவரையில், கட்டிடம் கட்டுவதைகூட கடனாக கட்டிவிட்டு, இப்பொழுது தனிப்பட்டவர்களுக்கு ஒரு வாடகைக் கொடுக்கிறோம் அல்லவா, அந்த வாடகையை திருப்பித்திருப்பி கட்டுவதுபோல கட்டினால் சரியாகப்போகும். ஆகவே, அந்த வேலையையும் செய்தால் சற்று நன்றாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு குடிதண்ணீர் பிரச்சினை இருக்கிறதே அது மிக மோசமான சூழ்நிலை. அம்மா அவர்கள் 'போன்' போட்டு சொன்னார்கள். இன்றைக்கு அந்த தண்ணீரும் நின்றுபோய்விட்டது. ஏன் என்றால் இப்பொழுது வைகையிலே தண்ணீர் இருக்கிறது. அதிலே மண் வாரக்கூடிய ஒரு



நிலைமையை உண்டாக்கியிருக்கிறார்கள். வைகையிலிருந்து தண்ணீர் திண்டுக்கல்லுக்கு வருகிறது. 9 கோடி ரூபாய் திட்டத்திலே. அங்கிருந்து பல ஊர்களுக்கு அந்தத் தண்ணீர் வருகிறது. அதுபோல நிலக்கோட்டைக்கு அந்தத் தண்ணீர் வருகிறது. அதிலே பல கிராமங்களையும் இணைத்து தண்ணீர் கொடுக்கிறோம். அங்கிருந்து சில்க்கார்பட்டிக்கு தண்ணீர் வருகிறது. 33 கிராமங்களை இணைத்து தண்ணீர் கொடுக்கிறோம். இந்த இடத்திலே இருந்து மணல் வாருவதற்காக தாசில்தார் அவர்கள் ஏலம் விடுவதாக இருக்கிறது. தயவு செய்து இதை ஏலம் விட்டால், இந்த மணலை எல்லாம் அள்ளிக் கொண்டு போய்விட்டார்கள் என்றால் ஒரு சொட்டு தண்ணீர் கூட அங்கே நிற்காது. அந்தத் தண்ணீர் மட மட என்று ஓடிவிடும். மட மட என்று தண்ணீர் ஒடும்போது கீழே பெர்குலேசனுக்கு தண்ணீர் கிட்டாது. அதிலே தண்ணீர் இல்லாமல் போய்விடும். அங்கே குடிதண்ணீருக்காக போட்டிருக்கிற கிணறுகள் எல்லாம் வற்றி, வறண்டு போகிற நிலைமை ஏற்படும். ஆகையினாலே கண்மாயிலே, அதுவும் குடிதண்ணீர் பெறக்கூடிய நிலைமை இருக்கக்கூடிய இடங்களிலே இருந்து எல்லாம் இந்த மணல் வாரக்கூடிய நிலைமையை உண்டாக்காமல் தடுத்து நிறுத்த வேண்டும். அது மிகப் பெரிய குறை. இந்த 23ஆம் தேதி பேரணையிலே ஏலம் விடுவதாக சொல்கிறார்கள். அதை மாற்றியாக வேண்டும். இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நில நிர்வாகத்தை மனதார நான் பாராட்டி, எங்களுக்கு இந்தத் துறையிலேயும் 18 சதவிகிதத்தை கொடுக்க வேண்டும். இப்போது கேட்காமல் எப்போது நாங்கள் கேட்கப் போகிறோம்? அதுபோல 30 சதவிகித ஒதுக்கீட்டை பெண்களுக்கும், 18 சதவிகித ஒதுக்கீட்டை எஸ்.சி., எஸ்.டி.க்கும் கொடுக்க வேண்டும். வரக்கூடிய போஸ்ட்டுகளில் எல்லாம் 30 சதவிகிதம் வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும். அதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதுபோல 18 சதவிகிதத்தை, அது முழுமையாக இல்லாத இடங்களில் எல்லாம் எஸ்.சி., எஸ்.டி. ஜனங்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிற நிலைமையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் மீண்டும் கூறி, இந்த அமைச்சரவைக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியறிதலைக் கூறி, உரையை முடிக்கின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பல்வேறு மானியக் கோரிக்கையில் . மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய

[திரு எஸ். டி.சோமசுந்தரம்] [1992 மார்ச் 19

கருத்துக்களை எல்லாம் கூறியிருக்கிறார்கள். இங்கே வெட்டுப் பிரேரணைகளை பலரும் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 320 வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். மாண் புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்திற்கும் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதுபோல என்னால் சொல்ல முடியாது. அவைகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்கிறபோது கூடியவரையிலும் சொல்லிவிடுகிறேன். முதலில் எழுது பொருள் அச்சுத் துறையின் பணி குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதை வைத்து சிலவற்றை உங்களிடத்திலே சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும், இது மிக, பல ஆண்டுகளாக, 1831 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்போது 160 ஆண்டுகள் ஆகி விட்டன. அப்போது 8 பேரை வைத்து ஆரம்பித்த இந்தத் துறையில் இன்றைக்கு 6.222 பேர் வேலை செய்கிறார்கள். அப்படி வேலை செய்கிற இந்தத் துறை குறித்து பலபேர் இன்றைக்குப் பேசுகிறபோதும் வெட்டுத் தீர்மானத்தின் மூலமாகவும், அரசு அச்சகங்கள் எல்லா இடங்களிலும் வேண்டு மென்று கேட்டார்கள். பல பேர் புதுக்கோட்டைக்கு வேண்டு மென்றும், வேறுபல பேர் பல்வேறு இடங்களுக்கு வேண்டுமென்று எல்லாம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அரசு அச்சகத்தைப் பொறுத்தவரையில் சென்னையிலே மூன்றும், மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, சேலம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் இருக்கின்றன. சென்னையிலே மட்டும் மூன்று ஷிப்டுகள் வைத்திருக்கிறோம். மற்ற இடங்களில் இரண்டு ஷிப்டுகள் வைத்திருக்கிறோம். இன்றைக்கு வட்டாட்சியர் வட்டத்திற்கு வட்டம் தேவை; கோட்டாட்சியர் கோட்டத்திற்கு கோட்டம் தேவைப்படுகிறது. அதைப்போல அச்சகத்தை ஊருக்கு ஊர் வைக்க முடியாதென்று முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6—50

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் அரசு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் அச்சடித்துக் கொடுக்கிறது. தலைமைச் செயலகத்தில் உள்ள எல்லாத் துறைகளுக்கும், தமிழ்நாட்டிலே இருக்கிற எல்லாத் துறைகளுக்கும் தேவையானவற்றை அச் சடித்துக் கொடுக்கிறது. மிக இரகசியமாக அச்சடிக்க வேண்டி யவைகளையும், கேள்வித் தாள்களையும். வாக்குச் சீட்டுகளையும் அச்சடித்துக் கொடுக்கிற துறையாக இது இருக்கிறது. அதைப் போல மாநிலத்திலே இருக்கிற எல்லாத் துறைகளுக்கும் எழுது பொருள்கள் காகிதம், அட்டை, தட்டச்சு இயந்திரம் இவைகளை எல்லாம் கொடுக்கிற துறையாக இருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறைக்கு வேண்டிய காகிதங்களை வாங்கும்போது, 50 சதவிகிதம் தமிழ்நாடு அச்சுத்தாள் மற்றும் காகித ஆலை யிலிருந்து வாங்கிக் கொண்டிருந்தோம். 50 சதவிகிதத்தை



1992 மார்ச் 19] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

வெளியிலே வாங்கிக்கொண்டிருந்தோம். மாண்புமிகு தமிழகத் தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அதை மாற்ற வேண்டுமென்று சொல்லி, வரும் ஆண்டிலிருந்து புகலூர் காகித ஆலை மூலமாக 75 சதவிகிதம் வாங்குவதாகவும், அதாவது அரசு நிறுவனத்திலேயிருந்து 75 சதவிகிதமும், வெளிச் சந்தை யிலே 25 சதவிகிதமும் வாங்குவதாக இருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஒரு கேள்வி கேட்கிறபோது, அரசு அச்சகத்தில் பரிசுச் சீட்டுகள் அச்சடிக்கக்கூடாதா என்று கேட்டிருக்கிறார்கள். இங்கே அச்சகத்திலே உள்ள இயந்திரங்களைப் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது. அப்படி புதுப்பித்த பிறகு அதைச் செய்ய லாமென்று கருதியிருக்கிறோம். இப்போது பாடப் புத்தகங் களை அச்சிடுவதற்கு நினைத்துக் கொண்டிருக்கிறோம். நம் முடைய புரட்சித் தலைவி அவர்கள் அரசு அச்சகத்தை நவீனப் படுத்துவதற்கு 129.75 இலட்சம் ரூபாய் கொடுத்திருக் கிறார்கள். அதை வைத்துக்கொண்டு இதை நல்ல முறை யிலே செய்த பிறகு, இவைகளை எல்லாம் செய்வோம் என்று முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் துறையைப் பொறுத்த வரையில் நீண்ட பல காலமாக அதிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு எந்த வித முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிற நிலையில், 3, 4 சலுகைகளை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்திருக் கிறார்கள், இன்றைக்குக் காலையிலேதான் நான் கையெழுத்துப் போட்டு அனுப்பினேன். உடனடியாக இதை செய்ய வேண்டுமென்று, அவர்கள் கையெழுத்துப் போட்டு, இங்கே கொடுத்திருக்கிறார்கள். மிக விரைவிலே செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலே செய்கிறார்கள். நீண்டகாலமாக ஒரு கோரிக்கை இருக்கிறது. நிரந்தரம் ஆக்கப்பட்ட பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு முன்பெல்லாம் இல்லை. தற்போது நம் முடைய அரசு அவர்களுக்கெல்லாம் 90 நாட்கள் மகப் பேறு விடுப்பு கொடுத்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, ஈட்டிய விடுப்பைப் பொறுத்தவரையிலே அச்சகத் திலே வேலை செய்கிறவர்களுக்கு 180 நாட்கள் உச்சவரம்பாக இருந்தது. அதை 240 நாட்களாக உயர்த்தி இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அச்சகங்களில் ஏழை எளியவர்கள் மஸ்தூர்களாக, அதாவது சாதாரண எடுபிடி வேலைகள் செய்வதற்கு வந்து சேருகிறார்கள். அதற்குப் பின் னர் படித்து தகுதி பெறுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கவேண்டுமென்றால் 35 வயதிற்கு உள்ளே

இருந்தால்தான் கொடுக்கலாம் என்று இருந்தது. அதை இப்
போது மாற்றி எந்த வயதாக இருந்தாலும், தகுதிக்கேற்றவாறு
தக்க பதவி உயர்வு அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று தமிழக
முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்
என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்
டும் ஒலி).

பிற்பகல் 6–55

அதேபோல், பல உறுப்பினர்கள் பேசுகிறபோதும், வெட்டுப்
பிரேரணையிலும் ஒன்றைச் சொன்னார்கள். அதாவது சாத
ரணமாக அங்கே வேலை செய்கிறவர்களுக்கு நோய்கள் வருவ
தோடு, சில பேர் விஷப் பொருள்களை கையாளுவதால் பாதிக்கப்
படுகிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. அவர்களுக்கு எல்
லாம் சீருடை கொடுக்கவேண்டுமென்று வெட்டுப் பிரேரணை
யில் சொல்லியிருக்கிறார்கள். அதையும் புரட்சித்தலைவி அவர்
களிடத்தில் சொல்லி அனுமதி கேட்டிருக்கிறேன். அப்படியா
னால் இன்றைக்கு இருக்கிற நிலையில், 5,203 பேருக்கு சீருடை
கொடுக்க வேண்டும். அதிலே 4,260 பேருக்கு உத்தரவு போட
பட்டு. அதுவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல், இரவு நேரங்களில் வேலை செய்கின்ற தொழி
லாளர்களுக்கு பன், டீ போன்றவைகள் கொடுப்பதற்கும், நச்சுப்
பொருள்களைக் கையாண்டு அந்தப் பகுதிகளில் வேலை செய்
பவர்களுக்கு வைட்டமின் மருந்துகள் கொடுக்கவும் அரசு
உத்தரவு போட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொன்று. இப்போதுதான் கையெழுத்துப் போட்டு
எனக்கு வந்திருக்கிறது. அதுபற்றி துறையிலிருந்து குறிப்பு
எழுதி இன்னும் வரவில்லை. அது என்னவென்றால், இந்த
துறையில் வேலை செய்பவர்களுக்கு மெடிக்கல் லீவு 12
மாதங்கள்தான் எடுக்கலாம் என்று இதுவரை இருந்தது.
இப்போதுதான், ஒருசில மணித்துளிகளுக்கு முன்பு, மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்கள் கையெழுத்து போட்டு அனுப்பி
யிருக்கிறார்கள். அந்த 12 மாதம் என்பதை 18 மாதம் வரை
எடுத்துக்கொள்ளலாம் என்று கையெழுத்துப் போட்டு இருக்
கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஆக, இந்தத் துறை
யைப் பற்றி இவ்வளவுதான், வெட்டுப் பிரேரணைகள் சம்பந்த
மாக இவ்வளவுதான் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரி
வித்துக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, பத்திரப் பதிவுத்துறை. பதிவுத்துறையைப்
பற்றித்தான் அதிகம் பேர் பலவற்றை சொல்லியிருக்கிறார்கள்.
இந்த பதிவுத்துறையும் 127 ஆண்டுகள் வரலாறு கொண்ட
ஒரு துறை யாகும். பதிவுத்துறைதான் எல்லாமே. நாம்
பிறந்தாலும், இறந்தாலும். சொத்து இருந்தாலும், அசையும்
சொத்து, அசையா சொத்தாக இருந்தாலும் சரி, எல்லாவற்றிற்
கும் உரிய ஆவணங்களையும் பாதுகாப்பது இந்த பதிவுத்
துறைதான். இப்படிப்பட்ட பதிவுத் துறையின் மூலமாக
அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்று சொன்னார்கள்,
இந்தப் பதிவுத் துறையின் மூலமாக சென்ற ஆண்டு நம்முடைய
அரசுக்கு வந்த வருமானம் ரூ. 360 கோடியாகும். இந்த ஆண்டு
ரூ. 370 கோடியாக வருவதற்கு எல்லா திட்டங்களும் தீட்டப்
பட்டு, அப்படி ரூ. 370 கோடி வரும் என்பதையும் நான்
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். முத்திரைத் தீர்வை
பத்திரப் பதிவுக் கட்டணம், சீட்டு, தண்டங்கள் மற்றும்
வருமானங்கள் மூலமாக வருமானம் வருகிறது என்பதை நான்
உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது
ஸ்டாம்ப் வெண்டர்கள் ஏஜென்சிக்கு ஆதி திராவிடர்
களுக்கு கொடுக்க வேண்டும். உடல் ஊனமுற்றவர்களுக்குக்
கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் உங்களுக்கு
உறுதியளிக்கிறேன். எவ்வளவு ஆதிதிராவிட மக்கள் வந்தாலும்
அவ்வளவு பேருக்கும் முதலில் கொடுத்துவிடுகிறோம்.
(மேசையைத் தட்டும் ஒலி). அதேபோல எவ்வளவு உடல்
ஊனமுற்றவர்கள் வந்தாலும் அவர்களுக்கும் கொடுக்கிறோம்
என்பதை நான் புரட்சித் தலைவி அவர்கள் சார்பில் தெரி
வித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி), அதுமட்டு
மல்ல, முன்பெல்லாம் ஸ்டாம்ப் கிடைக்கவில்லை என்று
சொல்வார்கள். ஸ்டாம்ப் வெண்டர் இல்லையென்று சொல்
வார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியின்
பேரில் 5,000 பேர் வரைக்கும் ஸ்டாம்ப் வெண்டராக ஆக்கலாம்
என்று நினைத்திருக்கிறோம்.

பிற்பகல் 7.00

அப்படி ஐந்தாயிரம் பேர் வருகிறபோது எந்தவிதமான
சங்கடங்களும் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
இங்கே பேசியவர்கள் சில இடங்களிலே கிடைக்கவில்லை
என்று சொன்னார்கள். நிதிசாராத முத்திரைத்தாள் தமிழ்
நாட்டில் ரூ. 5,100 கோடி மதிப்புள்ள ஸ்டாம்புகள் இருக்
கின்றன. நீதிமன்றக் கட்டணத் தாள்கள் ரூ. 73 கோடிக்கு
இருக்கின்றன. ஒட்டு வில்லை ரூ. 61 கோடிக்கு இருக்கின்றன.
இங்கே பேசுகின்றபோது அது இல்லாமல் சார்பு பதிவாளர்கள்

இங்கே வாங்கிக் கொள்ளலாமா என்று கேட்டார்கள். இதை நான் சொல்லிவிடுகிறேன், வருவாய்த் துறை வருகிறபோது பெயர்களையெல்லாம் படித்துச் சொல்லுகிறேன். இப்போது தேவையில்லை என்று கருதுகிறேன். ஆனால் இது இன்றைக்கு விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. யாராக இருந்தாலும் ஸ்டாம்ப் பேப்பரை வைத்து நீங்கள் எழுதலாம். ஸ்டாம்ப் பேப்பர் இல்லாவிட்டாலும்கூட சாதாரண பேப்பர்களிலும் பத்திரத்தை எழுதி அதிலே ஸ்டாம்ப் வில்லையை ஒட்டலாம். ஸ்டாம்ப் வில்லையை ஒட்டாவிட்டாலும் அதற்குரிய பணத்தைக் கட்டினால், ரசீது கொடுத்து அதிலே எவ்வளவு பணம் கட்டப்படுகிறது என்று அதிலே போடப்படும்.

அது மட்டுமல்லாமல் இங்கே பேசுகின்றபோது இதிலே கள்ளத்தனமாக வந்துவிடுகிறது என்று சொன்னார்கள், ஆனால் கள்ள நோட்டே வருகிறது. * * *நோட்டு எல்லாம் நாசிக்கிலே அடிக்கிறார்கள். நாமும் நாசிக்கிலே தான் அடிக்கிறோம். அப்படியல்ல, அதாவது சில நேரங்களிலே நாசிக்கிலேதான் கவர்ன்மெண்டிலே நோட்டுக்களையெல்லாம் அடிக்கிறோம். அங்கேதான் நாமும் இதை அடிக்கிறோம். உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, அப்படி இதிலே கள்ளப்பத்திரங்கள் வருவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். அப்படி எங்கேயாவது குறிப்பிட்ட இடங்களிலே வந்திருக்கிறது என்று சொன்னால் அதை விசாரிப்பதற்கோ, அதைப்பற்றி நடவடிக்கை எடுப்பதற்கோ இந்த அரசு தயங்காது என்பதையும். அப்படிப்பட்ட சங்கடங்கள் எங்கேயும் இல்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதில் நாசிக் என்று வந்த இடத்தில் ** என்பது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:</u> அதேபோல இன்றைக்குச் சங்கங்கள் என்று சொன்னார்கள். சங்கங்கள் பதிவு செய்வதிலேயும் சில சங்கடங்கள் இருக்கின்றன. இன்றைக்கு 45,000 சங்கங்கள் இருக்கின்றன. அந்த சங்கங்களிலே தவறுகள் இருக்கின்றன என்று இன்றைக்குச் சொன்னார்கள். சங்கங்கள் தவறு செய்து விட்டால் அதைக் கலைப்பதற்கு மட்டும்தான் நமக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படி கலைக்கப்

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் இணங்க அகற்றப்பெற்றது.



பட்டாலும், அரசு கலைத்துவிட்டு வேறு நபர்களைக் கொண்டு வந்து போடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக, கலைத்துவிட்டு, அரசு அதிகாரிகளைப் போடுவது என்று புதிய சட்டத் திருத்தங்களை இங்கே கொண்டு வருவதற்காக நாங்கள் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல லாட்டரிச் சீட்டுகள். சீட்டுகள் அச்சடிப்பதிலே
4,201 சீட்டுக் கம்பெனிகள் இருக்கின்றன. அதிலேயும் சில
தவறுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதையும்
கவனிப்பதற்காக அதிகாரிகள் இருக்கிறார்கள். அதை கவனிப்
பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். பக்கத்
திலே இருக்கின்ற கேரளத்திலே போய் ஸ்டாம்ப் ரிஜிஸ்டிரேஷன்
செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியெல்லாம்
முதலிலே கன்னியாகுமரியிலே உள்ளவர்கள் மட்டும்தான் செய்
தார்கள். இன்றைக்கு மற்ற பகுதிகளுக்கும் வந்திருக்கிறது.
இதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரிடம் பேசிக் கொண்
டிருந்தபோது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்
டார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு கையெழுத்து போட்டு
அனுப்பி வைத்திருக்கிறார்கள். முத்திரைத்தாள் சட்டம் 27
சென்ட்ரல் கவர்ன்மென்டினுடைய ஆக்ட். அப்படி சென்ட்ரல்
கவர்ன்மென்ட் ஆக்ட்டாக இருந்தாலும் அதைச் செய்ய வேண்டு
மென்று முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். சட்டப்படி
என்னவென்றால், இந்தியா பூராவும் ஒன்றாக வைத்து, சென்ட்ரல்
கவர்ன்மென்ட் ஆக்ட் என்கிறபோது, ஒருவருக்கு எங்கே இருந்
தாலும் சரி, இந்தியாவிலே காஷ்மீரை விட்டு மற்ற மாநிலங்
களில் எங்கே நிலம் இருந்தாலும் சரி, எங்கேயாவது ஒரு சப்-
ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசில் பதிவு செய்யலாம் என்பது இன்றைக்
குள்ள சட்டம். அதற்காக என்ன செய்கிறார்கள் என்றால்
இங்கே அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் கேரளத்திலே
சென்று ஏதாவது கொஞ்சம் நிலத்தை வாங்கி வைத்து விட்டு
அந்த கொஞ்சம் நிலத்தை வைத்துக் கொண்டு அங்கே பதிவு
செய்கிறார்கள். அப்படி பதிவு செய்தாலும் ‘டிஃபரன்ஸ்’ இருக்
கிற பணத்தை நமக்குத் தர வேண்டும். இந்த ‘டிஃபரன்சை’
அவர்கள் சொல்ல வேண்டும். அப்படி சொல்லாவிட்டாலும்
அதற்கு உடனே சொல்ல வேண்டும் என்பதற்காக ஒரு சட்டத்தை
இங்கே கொண்டு வர இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் இன்னொரு சட்டத்
தையும் கொண்டுவர அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் அனுமதி கொடுத்து இருக்கிறார்கள். இன்னொரு
சட்டத்தையும் கொண்டுவர வேண்டுமென்றால்,—இப்போது
எங்கு வேண்டுமானாலும் இந்தியாவில் இருந்தால் அதைப் பதிவு
செய்யலாம் என்று இல்லாமல், எந்த சார்பு பதிவாளருடைய

சரகத்தில் இருக்கிறதோ அங்கேதான் பதிவு செய்ய வேண்டுமென்கின்ற ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற இருக்கிறோம். அப்படி நிறைவேற்றினால் அதில் இருக்கிற பல சங்கடங்கள் போய்விடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்காக இந்த அரசு எல்லாவிதமான வேலைகளையும் செய்யும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 7–05

அதேபோல மற்றொன்று. இங்கே வில்லங்க சர்டிபிகேட் வாங்கும்போது உள்ள சங்கடங்கள் குறித்து சொல்லி இருக்கிறார்கள். ஆவண நகல் வாங்குகிறபோது, திருமணச் சான்றிதழ், பிறப்பு-இறப்பு சான்றிதழ் —இவைகள் எல்லாம் வாங்குவதற்கு இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கணிப்பொறி, கம்பியூட்டர் சிஸ்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள். விரைவிலே அந்த கம்பியூட்டர் சிஸ்டம் வந்துவிட்டால் இந்த சங்கடங்கள் இருக்காது. அதையும் செய்வோம் என்பதைா நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, இங்கே பலபேர் பேசுகிறபோது இந்தக் கட்டிடங்கள் எல்லாம் எப்போதோ ஆரம்பித்தது, பழையதாக இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நான் உள்ளதைச் சொல்ல வேண்டுமென்றால் வருவாய்த் துறையில், பதிவுத் துறையில் கட்டிடங்கள் பழையதாக இருக்கின்றன. கட்டிடங் களுக்காக பணம் நாம் கேட்கவில்லை. ஏனென்றால் பண சங்கடம் அதிகமாக இருப்பதால் இந்தத் துறையைப் பொறுத்த வரைக்கும் எவ்வளவு பணம் எங்களுக்கு வேண்டும், கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்று கேட்கவில்லை. இப்போது இருப்பதை மட்டும் வைத்துக்கொள்வோம். மற்ற வளர்ச்சித் திட்டங் களுக்கு அந்தப் பணத்தை ஒதுக்குவோம் என்ற எண்ணத்தில் கேட்காமல் இருப்பது இந்தத் துறையினுடைய அமைச்சருடைய தவறு. இருப்பினும் முதலமைச்சர் அவர்கள் நான் கேட்டு அவர்கள் கொடுக்காமல் விடவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். மற்றப்படி இதைப்பற்றி வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உங்களிடத்தில் வணிகவரித் துறையைப் பற்றி சில விவரங்களைச் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இங்கே போனமுறை சில அறிவிப்புகளைக் கொடுத்தார்கள். அந்த அறிவிப்புகள் எல்லாம் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப் பட்டு இருக்கின்றன. அவர்கள் கொடுத்த அறிவிப்பால் இன்றைக்கு வணிகவரித் துறையில் இருக்கிற தற்போதுள்ள வணிக வரி விகித அமைப்பைச் சரி செய்ய வேண்டும். வரி சாதாரண



பிற்பகல் 7-10

மாக இருக்க வேண்டும். வரிப் பளு இருக்கக் கூடாது. அதைச் சீர் செய்ய வேண்டும் என்று நீங்கள் சொல்லி இருப்பதைக் கேட்டு அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஹைபவர் கமிட்டி., உயர் அதிகாரக் குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்று சொன்னதை இன்றைக்கு அந்தக் கமிட்டி விஜயராகவன் தலைமையிலே அமைத்து இருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல வணிகர் நலவாரியம். வணிகர்கள்எல்லாம்வியாபாரம் செய்கிறார்கள். இங்கே சொன்னார்கள் வியாபாரிகள் தான் உங் களுக்கு எல்லாம் பணத்தை தேடி கொடுக்கிறார்கள் என்று. எனவே வணிகர் நல வாரியம் டிரேடர்ஸ் வெல்பர் போர்ட் ஒன்றை அமைப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவு போட்டு இந்த உத்தரவு இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதில் இருக்கிற சங்கடங்கள் என்னவென்றால் அதற்கு அரசு 2 கோடி ரூபாய் பணம் கொடுத்து விட்டது. இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான வணிகர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்த வாரியத்தில் வணிகர்கள் யாருமே உற்சாகமாக சேரவில்லை. ஆனால் இன்றைக்கு அந்த கமிட்டி முதலமைச்சருடைய தலைமையில் இருக்கிறது. இந்த வணிகருக்கெல்லாம் நன்மை செய்ய வேண்டும் என்பதற் காக இந்த கமிட்டி முதலமைச்சருடைய தலைமையிலேதான் இன்றைக்கு அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் வணிகர்கள் 3144 பேர்தான் அதிலே இன்றைக்கு இருக்கிறார்கள். அதிலே அவ்வளவு பேர்தான் பதிவு செய்துக்கொண்டு இருக்கிறார்கள். அதில் அதிகம் பேர் பதிவுசெய்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஆலோசனைக் குழு இருக்கிறது. வணிகர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி வணிக வரி ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னது, அமைக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல வணிகர்களுக்கு பல கஷ்டங்கள் வருகிறது. அந்தக் கஷ்டங்களைப் போக்க வேண்டுமென்பதற்காக அதிகாரிகள் மட்டத்தில் ஒரு குறை தீர்க்கும் கமிட்டி அமைக்கப்பட்டு, அதுவும் இன்றைக்கு நடக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி முதலமைச்சர் அவர்கள் இங்கே என்னென்ன உங்களுக்கு அறிவித்தார்களோ அவைகள் எல்லாம் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை உங்களுக்குத் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு வணிகவரி என்றால் வரி போடுகிறார்கள் என்று சொன்னாலும் வரியே போடாமல், வரிச்சலுகை கூட கடைசி

நேரத்தில் கொடுத்திருக்கிறார்கள். அப்படி வரிச்சலுகை கொடுத்தது ஒவ்வொன்றையும் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு கிராமங்களில் நடைபெறுகிற கிராம கைத்தொழில்கள் — கிராமங்களில் பெண்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு வேலை அளிக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டு அவர்களால் உற்பத்தி செய்யப்படும் கிராம கைத்தொழில் பொருள்களுக்கு வரிவிலக்கு —முழுமையாக வரியை ரத்து செய்திருக்கிறார்கள் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல சமூகநல நிறுவனங்கள் வரிச்சலுகை. சமூகநல நிறுவனங்கள் என்று சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் விற்பனை செய்யும் பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்க அரசு உத்தேசித்துள்ளது. இவைகளை இன்றைக்கு பூரணமாக வரிவிலக்கு அளித்து மாண்புமிகு புரட்சித் தலைவி முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல கம்ப்யூட்டர்கள். கம்ப்யூட்டர் என்றால் அது அவர்களுடைய திறமையை வைத்துக்கொண்டு, அவர்களுடைய மூளை திறமையை வைத்து அதிலே வேலை செய்கிறார்கள். அந்த கம்ப்யூட்டர் உற்பத்திக்கு போடப்பட்ட வரிகளும் பூரணமாக ரத்து செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இங்கே மரவள்ளிக் கிழங்கு மாவுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மரவள்ளிக் கிழங்கு சிப்ஸ் வகைக்கும் விற்பனை வரி குறைக்கப்பட்டிருக்கிறது. மரவள்ளிக்கிழங்கு மாவு மூலம் எதுவந்தாலும் அவைகளுக்கு விற்பனை வரி 5 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது, என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு சொல்கிறபோது எல்லா பவுன் நகைக்கும் 2 சதவீதம்தான் வரி போடுகிறார்கள். ஆனால் இமிடேஷனுக்கு 5 சதவீதம் என்று இருந்தது. இதை நாங்கள் யாரும் சொல்லவில்லை. இதையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் படித்துக் கொண்டு வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன், படித்துவிட்டு என்னை கேட்டார்கள். அதற்கு மட்டும் 2 சதவீதம். இதற்கு ஏன் 5 சதவீதம் என்று கேட்டார்கள். நான் சிரித்துக்கொண்டே இருந்தேன், இதற்கும் 2 சதவீதம் என்று ஆக்கிவிடுங்கள் என்றார்கள். ஆகவே, இமிடேஷன் நகைகளுக்கும் 2 சதவீதம் வரி போடப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இங்கே பேசுகிறபோது பலவற்றை சொல்லிவிட்டாலும் உணவு விடுதிபற்றி சொல்கிறேன். உணவு விடுதிக்கு முதலில் ரூ. 18 இலட்சத்திற்கு மேல் இருந்தால்தான் அவர்களுக்கு வரி போடலாம் என்று இருந்தது. ரூ. 18 இலட்சம் என்பது இன்றைக்கு ரூ. 3 இலட்சமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதை முதலில் எடுத்துக் கொண்டதற்கு காரணம் நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது நிதிநிலை அறிக்கையை எப்போது இங்கே படித்தார்களோ அந்தத் தேதியிலிருந்துதான் வரி எப்போதும் போடப்படுகிறது. ஆனால் இதிலே சில நடைமுறைச் சிக்கல் இருக்கிறதென்று முதலமைச்சரிடத்திலே சொல்லி அவர்களுடைய அனுமதி பேரில் அவைகளுக்கு போடுகிற வரி 1—4—1992 -லிருந்து, ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து அவைகளுக்கு வரி போடப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிகவரி துறையில் சட்டமுன்வடிவு இங்கே கொண்டுவரப்பட இருக்கிறது. அதை இங்கே நான் சொல்கிறபோது இப்போது நிறைய எதையெடுத்தாலும் கோர்ட் என்று போகிறார்கள். லாட்டரி சீட்டைப் பற்றி சொன்னார்கள். லாட்டரி சீட்டுக்கு இன்றைக்கு வரி போடப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். லாட்டரி சீட்டு பற்றி உச்ச நீதிமன்றத்திற்குப்போய் இருக்கிறார்கள். அதைப்போல இன்றைக்கு ரூ. 180 கோடி, ரூ. 200 கோடி அளவுக்கு அரசுக்கு வர வேண்டிய வரி வராமல் தடைச்சட்டங்கள் வாங்கி இருக்கிறார்கள். அப்படி தடைச் சட்டங்கள் வாங்கியிருப்பதால் நம்முடைய வழக்குகள் எல்லாம் மிக தாமதமாகக்கப்படுகிறது, அப்படி தாமதம் ஆகாமல் இருப்பதற்காக இதற்கு மட்டும் தனி தீர்ப்புமன்றம் ஒன்று போட வேண்டுமென்று அரசு சட்டமுன்வடிவை இங்கே கொண்டுவந்திருக்கிறோம். மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்று விரைவில் அந்த சட்டமுன்வடிவு இங்கே வரும் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, பணத்தை வசூல் செய்கிறார்கள். ஆனால் அரசினுடைய பணத்தை யாரும் அவராகக்கொடுப்பதில்லை. அது வியாபாரியாக இருந்தாலும் அவர் வரியை கொடுப்பதில்லை. பணத்தை வசூல் செய்கிறார்கள். வசூல் செய்துவிட்டு, அரசினுடைய பணத்தை யாரும் வைத்துக் கொள்வதற்கு எந்த உரிமையும் இல்லை. அப்படி அரசினுடைய பணத்தை வைத்துக் கொண்டிருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு அரசினுடைய பணத்தை வசூல் செய்துவிட்டு, அதற்குப் பிறகு, அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு எல்லாம், மற்றவைகளுக்கு எல்லாம் சென்று, அதற்காக அவர்கள் எல்லாம் தடையை வாங்கிக்கொள்கிறார்கள். அப்படி தடை வாங்கக் கூடாது. அந்தப் பணத்தை டெபாசிட் செய்துவிட வேண்டும். கோர்ட்டிலே வேண்டுமானால் தீர்ப்பு வரட்டும். தீர்ப்பு வருகிற வரையிலும், அதற்கான அந்தப் பணத்தை எல்லாம் அவர்கள்

டெபாசிட் செய்ய வேண்டும் என்பதற்காக, இங்கே அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம் என்பதை நான் உங்களுக்கு சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[பிற்பகல் 7-15]

அதேபோல் சில இடங்களில் கீழே இருக்கிற அதிகாரிகள்— இங்கே அப்பலட் டிரிபியூனல் என்று சொல்வார்கள். அதை விசாரிப்பார்கள். அப்படி விசாரிக்கிறபோது, கீழே இருக்கிற அதிகாரிகள் — அதற்கு தீர்ப்பு கூறிவிட்டால், அதற்கு மேலே மேலே போகாமல் இருக்கிற வணிகத் துறை ஆணையாளரே எந்த வழக்கை வேண்டுமானாலும், எந்தத் தீர்ப்பை வேண்டுமானாலும், எடுத்துக் கொண்டு, அவரே அதை விசாரிப்பதற்கான அதிகாரம் கொடுக்கிற ஒரு சட்டத்தை இங்கே கொண்டுவர இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிலர் வியாபாரிகளாக இருப்பார்கள். ஆனால், நான் வியாபாரி இல்லை என்று சொல்வார்கள், நான் தரகர்தான் என்பார்கள். ஏஜென்டுதான் என்பார்கள். அப்படித் தரகர்தான் என்றும், ஏஜெண்டுதான் என்றும் சொன்னாலும், அவர்கள் மீது இன்றைக்கு வரி போட முடிவதில்லை. அப்படித் தப்பித்துக் கொள்ளாமல், தரகர் என்ற பெயரைச் சொன்னாலும், அதிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு முடியாமல் இருக்க அதற்கும் ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறோம் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பில் டிரேடிங். எல்லோருக்கும் ரொம்ப தெரியும். பில் டிரேடிங் என்றால், என்ன செய்வார்கள் என்றால் எந்த வியாபாரிகளிடத்திலே போனாலும், இரண்டு புத்தகங்கள் இருக்கும். அதிலே ஒரு புத்தகத்தை அதிகாரிகளிடத்திலே காண்பிப்பார்கள். ஒரு புத்தகத்தை பிள்ளையாரிடத்திலே காண்பிப்பார்கள். (சிரிப்பு) பிள்ளையாரிடம் காண்பிப்பார்கள். இப்படி பல ஏமாற்றங்கள் இருக்கின்றன. இதை எல்லாம் கண்டுபிடிப்பதற்கு மட்டுமல்ல, எல்லாம் இன்றைக்கு ஏஜென்சிகள் என்று எல்லாம் இருப்பதை அப்படி ஏஜென்டாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லாம் கொடுக்க முடியாது என்று சொல்கிற நிலை இருப்பதால், அதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





அதேபோல், நான் முதலிலே இந்த வணிகவரித்துறை அமைச்சராக இருக்கிறபோது, மல்டி பாயின்ட்டை கிங்கிள் பாயிண்டாக கொண்டு வருகிறபோது, நான் ரொம்ப சங்கடப்பட்டு, அதைக் கொண்டு வர முடியாது என்று அப்போதெல்லாம் சண்டை போட்டுக் கொண்டு இருந்தேன். ஆனால், இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்களுக்கு வியாபாரிகள்மேல் அதிகமான நம்பிக்கை இருக்கிறது. இதை நான் சொல்வதால், எந்த வியாபாரியும் தவறாக கருதக்கூடாது. முதலமைச்சருக்கு இருக்கிறது பெரிய உள்ளம், வெள்ளை உள்ளம். அந்த அளவிற்கு எனக்கு பெரிய உள்ளமும் இல்லை, வெள்ளை உள்ளமும் இல்லை என்பதை நான் வெளிப்படையாகவேச் சொல்லி விடுகிறேன். வியாபாரிகள் எத்தனையோ முறை சொன்னார்கள் மல்டி பாயின்ட் பூராவையும் எடுத்துவிடவேண்டும், எல்லாம் சிங்கிள் பாயின்டாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். இந்த மல்டி பாயின்டை எடுத்துவிட்டு, சிங்கிள் பாயின்டாக மாற்றினால், அது பெரிய வியாபாரிகளுக்குத்தான் நன்மையாக இருக்கும், சிறிய வியாபாரிகளுக்கு நன்மை இருக்காது என்று நான் சொன்னேன். அது சிங்கிள் பாயின்டாக ஆகிவிட்டால் அந்தச் சாமான்கள் எங்கே வாங்கப்பட்டன, அதற்கு முன்பே வரி செலுத்தப்பட்டதா, இல்லையா என்பதை அவர்கள் தான் நிரூபிக்கவேண்டும். நாங்கள், எங்களுடைய அதிகாரிகள் நிரூபிக்க முடியாது. ஆனால் இன்றைக்கு சிங்கிள் பாயின்டாக ஆக்கி, வியாபாரிகள் மீது மிக நம்பிக்கை வைத்து நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்காக வியாபாரிகளாகிய நீங்கள் எல்லாம் அவர்களுக்கு கடமைபட்டு இருக்கவேண்டும், நன்றி செலுத்தவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் கடமையும், நன்றியும் வாய் அளவிலே, உள்ள உளவிலே மட்டும் இல்லாமல், உங்களுடைய செய்கை அளவிலேயும் இருக்கவேண்டும் என்று நம்முடைய வியாபாரிகளுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், தவறு செய்தால் மீண்டும் கொண்டு வருவோம் என்று. ஆகையினாலே முதலமைச்சர் அவர்கள் சொல்கிற எச்சரிக்கையை அவர்கள் எடுத்துக் கொண்டு, ஒழுங்காக வரி கட்டவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு பொருளைக் கொண்டு வருகிறபோது, இதற்கு முன்னாலே அந்தப் பொருளுக்கு வரி போடப்பட்டு இருக்கிறது, வரி செலுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நிரூபிக்கின்ற பொறுப்பை, அதை எடுத்துக்கொள்கிற பொறுப்பை அதிகாரிகளால் எடுத்துக்கொள்ள முடியாது. அதை நிரூபிக்கின்ற பொறுப்பை வியாபாரிகள்தான் செய்யவேண்டும் என்கின்ற சட்டமுன்வடிவை இங்கே கொண்டுவந்திருக்கிறோம். அப்படி சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் அந்தந்த பொருட்களை அவர்கள் ஏமாற்றாமல் இருப்பதற்காக, அப்படி ஒரு சட்டத்தை இங்கே கொண்டுவந்திருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு.எஸ்.டி. சோமசுந்தரம் [1992 மார்ச் 19

பிற்பகல் 7–20

அதேபோன்று இன்றைக்கு பெரிய பெரிய வியாபாரிகள்
என்ன செய்கிறார்கள் என்றால், மாநிலத்திற்கு மாநிலம்
ஒரு கடையை வைத்துக்கொள்வார்கள். அங்கே ஒரு
ஏஜெண்டை வைத்துக்கொள்வார்கள். பொருட்களை அங்கே
கொண்டுபோய் விடுவார்கள். அங்கே விற்பதாக சொல்லி
விடுவார்கள். பொருட்களை இங்கேதான் விற்பார்கள்.
ஆனால். பொருட்களை அங்கே விற்றதாக கணக்கு இருக்கும்.
இம்மாதிரியாகத்தான் இருக்கும். அதையெல்லாம் திருத்தி
மத்தியப் பேரரசு மூலமாக ஒரு சட்டத்தைக் கொண்டுவரு
வோம் என்று 1982–ஆம் ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டு
வருவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு
பதில், அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றவில்லை.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்
சரிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கடிதம் எழுதி
யிருக்கிறார்கள். அதை விரைவில் கொண்டுவரவேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐ. எம். எப். எஸ். இந்தியாவிலே தயாரிக்கப்படுகிற அன்னிய
நாட்டினுடைய மது பானத்திற்கு இதுவரையிலும் இருக்கிற
வரியை, அதில் இரண்டாம் கட்டத்திலே சில்லரை வியாபாரத்
திலே பார்த்து, அதிகம் வரி போடுகின்ற ஒரு சட்டமுன்
வடிவை இந்த அரசு கொண்டுவருவதற்கு அப்படிப்பட்ட சட்டங்
களை எல்லாம் பற்றி எண்ணியிருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல வியாபாரிகள் இன்றைக்கு இருக்கின்ற சட்டத்
தில் சர்டிபிகேட் 'ஆர். சி.' வாங்குகிறார்களே, அப்படி
வாங்குகின்றபோது ஒரே இடத்தில் 4 பேர், 5 பேர் வியாபாரம்
செய்வதாகச் சொல்லலாம். ஒரே ஒரு கடை அல்லது ஒரு
டோர் நம்பர் அந்த அட்ரஸைக் கொடுத்து, எத்தனை பேர்
வேண்டுமானாலும் வியாபாரம் செய்யலாம். அதைத் தடுக்க
முடியாது, இங்கேயிருந்து எங்களுடைய அதிகாரிகள் போனால்
அந்த வியாபாரியே இருப்பான், முதலாளியே இருப்பான்,
நான் இல்லை, நான் விருந்தாளியாகத்தான் இங்கே உட்
கார்ந்து இருக்கிறேன், வீதியிலே போனவன் உட்கார்ந்து
இருக்கிறேன், என்று சொல்வான், இல்லாவிட்டால் இன்னும்
ஒரு சாதாரண பையனாக, சின்ன ஆளாக இருந்தால் 'நான்
வேலைக்காரன் என்பான், இப்படிப்பட்ட பல தவறுகள்
செய்வதால், யார் லைசன்ஸ் வாங்கினாலும் அதற்கான
ஒரு புகைப்படத்தை ஒட்டவேண்டும், அப்படி புகைப்படத்தை
ஒட்டித்தான் அதற்கான லைசன்ஸ், ஆர். சி. வாங்கவேண்டும்
என்ற ஒரு சட்டத்தை இங்கே சொல்லியிருக்கிறோம், வருங்
காலத்தில் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்,



1992 மார்ச் 19] திரு. [எஸ். டி. சோமசுந்தரம்]

அதுமட்டுமல்ல. இப்போது ஓட்டல்களைப் பற்றிச் சொல்கிற
போது ரூ, 18 இலட்சம் என்று வைத்திருக்கிறோம், இன்றைக்கு
அதை ரூ. 3 இலட்சமாகக் குறைத்திருக்கிறோம். அருகாமை
யில் இருக்கின்ற மாநிலத்தில் ரூ. 2 இலட்சம் தான் இருக்கிறது
அப்படி ஒரே ஓட்டலில் ஏர் கண்டிஷன் ஹால் ஒன்று. நான்—
விஜிடேரியன் ஒரு இடத்தில் விஜிடேரியன் ஒரு இடத்தில் என்று
இவ்வாறு 3. 4 இடங்களாக பிரித்து வைத்துவிட்டு, அவர்
களுடைய வருமானத்தைக் குறைத்துக் காண்பித்து விடுகிறார்
கள், இல்லை அப்படியே அதிகம் வந்துவிட்டால் என்ன ஆகிறது
என்றால். 6 மாதம் வந்தவுடன் புதிய ஆர். சி. வாங்கிவிடு
கிறார்கள், புதிய ஆர். சி. வாங்குகிற போது அதைப் பற்றி
இல்லை என்று சொல்லமுடியாது, அதற்காகத் தான் இந்த
நாங்கள் இப்போது கொண்டு வந்திருக்கிறோம் என்பதை உங்
களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

இங்கே பேசும்போது சிலவற்றைச் சொன்னார்கள். இன்
றைக்குப் புதியதாக என்ன செய்திருக்கிறோம் என்றால், பள்ளி
களில் உபயோகப்படுத்துகின்ற எந்த பொருளுக்கும் வரியில்லை.
அது கரும்பலகையானாலும் சரி, பேனாவானாலும் சரி,
பென்சிலானாலும் சரி, புஸ்தகமானாலும் சரி. அதேபோன்று
இன்-டோர், அவுட்டோர் கேம்ஸ் விளையாட்டுப் பொருட்
களுக்கும் இன்றைக்கு வரி இல்லை என்பதை நான் மகிழ்ச்சி
யுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே பேசுகின்றபோது சிலர் சொன்னார்கள். அவர்கள்
எல்லாம் சில சாதனங்கள் கொடுக்கவேண்டும், அவர்கள்
எல்லாம் லாரியில் வருகின்றபோது ஓடிவிட்டால் என்ன
செய்வது என்று சொன்னார்கள். அதற்காக இன்றைக்கு
கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் போன் வசதி செய்ய
வேண்டும் என்று சொன்னார்கள். இன்றைக்கு தமிழக
முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகு பல இடங்
களிலும் வயர்லஸ் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.
எனவே எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வராமல்
பார்த்துக் கொள்வதற்காக எல்லா விதமான ஏற்பாடுகளும்
செய்யப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு செக் போஸ்ட் நிறைய
இருக்கிறது என்று சொன்னார்கள். சில இடங்களில்
அதை நிறுத்திவிடுகிறார்கள் என்றெல்லாம் சொன்
னார்கள். அப்படி செக்போஸ்ட் இருப்பதை ஒன்
றாக சேர்ப்பதற்காக அரசுத் துறைகளில் உள்ள செக்
போஸ்ட்களில் என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பேசும்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1992 மார்ச் 19

போது, அந்த சோதனைச் சாவடிகளையெல்லாம் ஒருங்கிணைக்க
வேண்டும் என்ற எண்ணத்தை தமிழக முதல்வர் புரட்சித்
தலைவி அவர்கள் சொன்னார்கள். அதை சொல்லுகிற
பொழுது 'எவ்வளவு வேண்டுமானாலும் பணம் தருகிறேன்' என்று
சொன்னார்கள். நான்தான் அதிகம் பணம் வேண்டாம் என்று
சொன்னேன். அப்பொழுதுகூட, அவர்கள் 'எல்லா இடங்
களிலும் செய்து விடுங்கள், ஒருதரம் செய்து விட்டால்
அதற்குப் பிறகு பணம் வேண்டியது இல்லையே, அதனால்
இப்பொழுதே செய்யுங்கள்' என்று சொன்னார்கள். அதே
போல இன்றைக்கு அவர்கள் சொல்லுகிறபொழுது வே-பிரிட்ஜ்
வாங்குகிறபோது எவ்வளவு வேண்டுமானாலும் வாங்குங்கள்
என்று சொன்னார்கள். அதை எல்லாவற்றிற்கும் செய்யா
விட்டாலும் ஏறக்குறைய முழுவதுமாக செய்ய இருக்கிறோம்.

பிற்பகல் 7-25

அதற்குப் பிறகு இன்றைக்கு சொல்லுகிறபோது, உணவுப்
பொருள் வழங்கு துறை, போக்குவரத்துத் துறை, வணிகத்
துறை ஆகிய இப்படிப்பட்ட அரசுத் துறைகளையெல்லாம்
ஒன்றாக சேர்த்து இன்டக்கிரேட்டட் செக் போஸ்ட்களை
ஒருங்கிணைந்த சோதனை சாவடிகளை ஏற்படுத்த இருக்
கிறோம். அப்படி ஏற்படும் பொழுது அதற்கு வே-பிரிட்ஜ்
எல்லாம் வழங்குவதற்காக ஏற்பாடு செய்திருக்கிறோம் என
பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல இன்
றைக்கு அதைப் பொறுத்தவரைக்கும் பல புதிய புதியக் கட்டி
டங்கள் எல்லாமும் கொடுத்திருக்கிறார்கள். கம்ப்யூட்டர்
என்று சொல்லும்பொழுது, கம்ப்யூட்டரிலே
Software is to be exempted, பாக்கி எல்லாவற்றிற்கும் இல்லை.
அதேபோல சோஷியல் வெல்பேர் துறையிலே ஹேண்டிகேப்ட்
செய்யும் பொருட்களுக்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார்
கள். அதைத் தவறாக நான் சொல்லி விட்டேன் என்று சொல்லு
கிறார்கள். அதைப் படிக்கச் சொல்லுகிறார்கள். படிக்கிறேன்.

(1) Only Computer Software is to be exempted from Sales Tax and not Computer.

(2) Only organisations approved by the Khadi & Village Industrie Commission and the Organisation approved by the Khadi and Village Industries Board, Tamil Nadu will be exempted from tax.

(3) All the Social welfare training Organisations for the Physically handicapped.......

இன்று இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் 2,400
கோடி ரூபாய் வசூல் செய்ய வேண்டுமென்று இன்றைக்கு இந்த
அரசு உத்திரவு போட்டிருக்கிறது. இந்த உத்திரவு போட்ட



1992 மார்ச் 19] திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பிறகு இதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. இன்றைக்கு
காலையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிற
பொழுது மலிவு விலை மதுவை ரத்து செய்ததினால் 391
கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே
இந்தத் துறைக்கு வருவாய் நஷ்டம் 40 கோடி ரூபாய். அதே
போல சென்ற தடவை விதிவிலக்கு கொடுத்ததினாலே 80
கோடி ரூபாய் நஷ்டம். ஆக இதையும் சேர்த்தால் 120 கோடி.
அதிலே 2400 கோடி என்றால் அதில் இதையும் கழித்தால்
இரண்டாயிரத்து இருநூற்று சொச்ச கோடி தான் வரும்.
அதிலே சற்று முயற்சி செய்து இருக்கிற அதிகாரிகளுடைய
திறமையினாலும், நம்முடைய கமிஷனருடைய திறமையினாலும்
அவர்களுக்கு உதவி செய்கிற மற்ற அதிகாரிகளுடைய திறமை
யினாலும் அந்த நஷ்டத்தை சரி செய்து 2400 கோடி வசூல்
செய்வதற்கு மேலே அதை விட மேலே 150 கோடி அதிகமாக
வசூல் செய்ய இருக்கிறார்கள். என்பதை நான் மகிழ்ச்சியோடு
தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு 2400 பிளஸ் 150
கோடி என்றால் 2550 கோடி இந்த துறை, இந்த அரசு
வசூல் செய்யும் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்
கொள்கிறேன்.

பிற்பகல் 7–30

நாம் எல்லாம் இவ்வளவு அதிகமான வரிகளைப் போடுகின்ற
அதே நேரத்தில் மத்திய பேரரசில் கார்ப்பரேஷன் டாக்ஸ் என்று
ஒன்று இருக்கிறது. அந்த கார்ப்பரேஷன் டாக்ஸை கொடுக்க
வேண்டுமென்று மாநிலங்கள் எல்லாம் மத்திய அரசைக் கேட்டுக்
கொண்டு இருக்கின்றன. அது எவ்வளவு வருகிறது என்று நான்
ஒரு சில வருடங்களை மட்டும் படித்துக் காண்பிக்கிறேன். மத்திய
பேரரசு கார்ப்பரேஷன் டாக்ஸ் 1991–92ல் 7,300 கோடி ரூபாய்
வந்திருக்கிறது. ஆனால் நமக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை.
அதே போல 1992–93ல் 7,800 கோடி ரூபாயை அவர்கள் எதிர்
பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் நமக்குத் தரவில்லை
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்கம் டாக்ஸ்
இருக்கிறது. அதிலே மிகக் குறைவாக கொடுக்கிறார்கள். இன்கம்
டாக்ஸ் இந்த ஆண்டு எதிர்பார்ப்பது 7,300ல் நமக்கு 430 கோடி
தருவதாக இருக்கிறார்கள். அதே போல ஆயத் தீர்வை.
ஆயத் தீர்வையிலே 29,999 கோடியிலே நமக்கு பணம் கொடுப்பது
840 கோடி. அடுத்து கஸ்டம்ஸ். மாநிலங்களிலே ஹார்பர்கள்
இருக்கின்ற இடங்கள் பம்பாய், கல்கத்தா, தூத்துக்குடி, சென்னை
போன்றவை. அதிலே சென்ற ஆண்டு மத்தியப் பேரரசுக்கு வந்தது
22,895 கோடி. நமக்கு கொடுத்தது ஒன்றும் இல்லை. அதே
போல இந்த ஆண்டு வருவது 27,230 கோடி. நமக்கு கொடுக்க
வில்லை. இவைகளை எல்லாம் கொடுக்க வேண்டும் என்று
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்
கள். ஆனால் கொடுக்கவில்லை.

அதுமட்டுமல்ல. இரயில்வே டிபார்ட்மெண்ட் ஆரம்பிக்கின்ற
போது டிக்கெட்டுகளை வாங்குகின்றபோது. அந்த டிக்-
கெட்டுகளுக்கு இவ்வளவு சதவிதம் கொடுக்கவேண்டும் என்று
இருந்தது. ஆனால், இன்றைக்கு டிக்கட்டுகளுக்கு இவ்வளவு
சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று இருக்கின்றபோது—1952
53 லே ஒரு முடிவு எடுத்தார்கள், இவ்வளவு பணத்தை கொடுத்து
விடவேண்டும் என்று. வருடாவருடம் டிக்கெட் விலை எவ்வளவோ
மேலே போய்க்கொண்டிருக்கிறது. ஆனால், அந்த விகிதாச்சாரத்
தின்படிகூட நமக்கு பணம் கொடுக்கவில்லை. இன்றைக்கு
தமிழ் நாட்டிற்கு கொடுப்பது 10 கோடி ரூபாய். அந்த விகிதாச்
சாரம் மிக குறைவாக இருக்கிறது. அதே போல சரக்குகள்.
சரக்குகள் வருவதற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று இருக்
கிறது சட்டத்திலே. ஆனால் அதையும் கொடுப்பதில்லை.
இவையெல்லாம் கொடுத்தால் நாம் இவ்வளவு சங்கடப்பட
வேண்டியிருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த வருவாய்துறையைப் பற்றி நான் சில
வற்றை உங்களுக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். வரு
வாய்த் துறையைப் பற்றி எல்லோரும் பல்வேறு கருத்துக்களை
இங்கே பேசியிருக்கிறார்கள். அதிலே ஒன்றை நான் சொல்ல
விரும்புகிறேன். பட்டா கொடுப்பது, ஆக்கிரமிப்பு செய்வது,
புறம்போக்கு என்று பலவிதமாகச் சொல்கின்றபோது இன்றைக்கு
இந்த அரசு அதிலே எப்படி முடிவு எடுத்திருக்கிறது என்றால்
யார் யார் எங்கெங்கே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அந்த
ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றவர்கள் தகுதி உடையவர்கள்,
அதிலே பட்டா பெறுவதற்குத் தகுதி உடையவர்கள். ஆனால்,
அந்த நிலம் அரசுக்குத் தேவையில்லை. யாருக்கும் தேவையில்லை
என்றால் அதைக் கொடுத்து விடலாம். ஆனால், ஆக்கிர
மிப்பு செய்திருக்கின்றவர்கள் தகுதி இல்லாதவர்கள் அந்த நிலம்
அரசுக்குத் தேவையில்லை, எனில் அவர்களை அப்புறப்படுத்தி
விடுவது ஆனால் ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் தகுதி உடைய
வர்கள் ,அந்த நிலம் அரசுக்குத் தேவைப்படுவது எனில் அவர்களை
அப்புறப் படுத்துவது இந்த முடிவைத் தான் தமிழக முதல்வர்
புரட்சித்தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவின் படி
விரைவிலே அவர்களுக்கெல்லாம் பட்டா கொடுப்பதற்கு
வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை நான் உங்களுக்குத்
தெரிவித் துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே போல மற்றொன்றைச் சொல்கின்றபோது அரசு அதிகா
ரிகள் எல்லாம் தலைமையிடத்திலே இருக்கவில்லை என்ற பல
புகார்கள் சொன்னார்கள். ஆனால் அரசினுடைய உத்திரவு எல்லா
அதிகாரிகளும், அவர்கள் எங்கெங்கே இருந்தாலும் எல்லோரும்
தலைமையிடத்தில் தான் இருக்க வேண்டும் என்று இருக்கிறது.



சிலர் இல்லாமல் இருந்தால் அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்
என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே முதலிலே
பேசிய அருமைச் சகோதரர் இராமசாமி அவர்கள் பேசுகின்ற
போது, மரத்தை யாரோ வெட்டிவிடுகிறார்கள் என்று சொன்
னார்கள். நான் இன்றைக்கு அதற்காகத்தான் ஒரு கணக்கை
வாங்கினேன். தமிழ்நாடு பூராவும் எவ்வளவு மரங்கள் இருக்
கின்றன என்ற ஒரு கணக்கை வாங்கினேன். தமிழ்நாடு
பூராவும் இன்றைக்கு 6,37,270 உயிபட்டாக்கள் வழங்கப்பட்டு
உள்ளன. ஆனால் இந்த மரங்களைப் பற்றி அவர்கள் கொடுத்
திருக்கிற கணக்கில் கூட குறைவு இருக்கலாம். அவைகளை
யெல்லாம் வெட்டாமல் பார்த்துக் கொள்வதற்கு இந்த அரசு
எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை
நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7.35

அதே போல் அவர்கள் பேசுகிறபோது மனுநீதித் திட்டத்தைப்
பற்றி இங்கே பேசினார்கள். அப்படி மனு நீதி திட்டத்தைப்
பற்றி பேசுகிறபோது, மனுநீதி திட்டத்தையும் அதேபோல்
மக்கள் குறை தீர்க்கும் நாளையும் ஒன்றாக சேர்த்துப் பேசினார்
கள். மனுநீதித் திட்டம் என்பது மாதத்திற்கு ஒரு நாள் நடக்கும்.
மக்கள் குறை தீர்க்கும் நாள் என்பது வாரா வாரம் திங்கட்கிழமை
மக்கள் குறை தீர்க்கும் நாள் ஆகும். வாரா வாரம் திங்கட்கிழமை
அன்று எல்லா அதிகாரிகளும் அங்கே இருப்பார்கள். அப்போது
அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் அவர்கள் பார்த்து
செய்வார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்
கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்,
அதிகாரிகளே வந்து வாரத்திற்கு ஒரு நாள் தான் பார்க்கிறார்கள்;
ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வாரத்திற்கு 2
நாள் பார்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள். (மேசையைத்
தட்டும் ஒலி).

இங்கே பட்டா கொடுப்பதைப் பற்றி சிலர் சொன்னார்கள்.
அந்த பட்டா கொடுப்பதில் இன்றைக்கு நத்தம் பட்டா என்றால்,
நத்தத்தில் இருக்கிற இதுவரைக்கும் எல்லா கிராமங்களிலும்
உள்ள ஆண்டாண்டு தோறும் பல ஆண்டுகளாக யார் யார்
குடியிருக்கிறார்களோ அவர்களுக்கு அது யாராக இருந்தாலும் அது
பணக்காரர் களாக இருந்தாலும் சரி, ஏழைகளாக இருந்தாலும்
சரி நத்தம் பட்டா பெற தகுதி உடையவர்களுக்கு நத்தம் பட்டா
கொடுத்து விடுகிறோம்.

இதுவரைக்கும் இந்த அரசு வந்த பிறகு நத்தம் பட்டா 50
லட்சம் பேருக்கு கொடுப்பதாக இந்த 3 ஆண்டுகளில் 50 லட்சம்
பேருக்கு நத்தம் பட்டா கொடுப்பதாக இருக்கிறது. இந்த 50
லட்சம் பேரில் இந்த ஆட்சி வந்த பிறகு 75 ஆயிரத்து 700

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1992 மார்ச் 19

பேருக்கு நத்தம் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல் வீட்டுமனைப்பட்டா. வீட்டுமனைப்பட்டா இந்த 25 ஆண்டு காலத்தில் 28 இலட்சம் பேருக்கு கொடுத்து இருக்கிறோம். 25 ஆண்டுகாலமாக கொடுத்து இருக்கிறோம். அதையும் இன்றைக்கு தீவிரப்படுத்தி அதிகமாகக் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல். இன்றைக்கு கட்டிடங்கள் இல்லை என்று சொன்னார்கள், எல்லா இடங்களுக்கும் கட்டிடங்கள் இல்லை என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு எல்லா இடங்களைப்பற்றியும் உங்களுக்குச் சொல்ல வேண்டும். அவைகள் எல்லாம் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வருவாய் ஆய்வாளர்கள். 1,100 பதவி என்றால் அந்த 1,100-ல் 10 இடங்களுக்குதான் கட்டிடங்கள் இல்லை. அந்த 10 இடங்களுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கு இன்றைக்கு இந்த அரசு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அந்த 10 அலுவலர்களுக்கும் கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்கியிருக்கிறார்கள். பாக்கியிருக்கின்ற அத்தனை பேருக்கும் கட்டிடங்கள் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தாசில்தார், டெபுட்டி தாசில்தார், டெபுட்டி கலெக்டர்கள் எல்லோருக்கும் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் இன்றைக்குப் புதிதாக கட்டப்பட இருக்கிற மாவட்டங்களில் சிதம்பரனார் மாவட்டத்திற்கு கலெக்டர் ஆபிஸ், திருவண்ணாமலை-சம்புவராயர்; நாகப்பட்டினம் காயிதேமில்லத், திண்டுக்கல்— அண்ணா மாவட்டங்களுடைய கட்டிடங்கள் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சென்னை மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், இனிமேல் வருகிறபோது அதற்கு, இவைகளுக்குத் தான் கட்டிடங்கள் இல்லை. இவைகளுக்கு எல்லாம் விரைவில் கட்டிடங்கள் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் எல்லா தாலுக்கா ஆபீஸ்களுக்கும் நிதி அளிப்பதற்கு மேஜை நாற்காலி வாங்குவதற்கு ரூ. 5 லட்சம் இன்றைக்கு கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1992 மார்ச் 19] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

கிராமத்தில் இருக்கிற அடித்தளத்தில் இருப்பவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அடித்தளத்தில் இருப்பவர்களைப் பற்றி எல்லாம் உங்களுக்குத் தெரியும். அவர்களையெல்லாம் தலையாரி என்று சொல்லமாட்டார்கள். வெட்டியான் என்று சொல்லுவார்கள். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் அவர்களை தலையாரி என்று சொல்லக்கூடாது; வெட்டியான் என்று சொல்லக்கூடாது, காவலர் என்று சொல்லவேண்டுமென்று இன்றைக்கு சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7—40

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது அவர்களுக்கெல்லாம் கம்பு கொடுத்து, எல்லோருக்கும் ஆடை கொடுத்து, அதாவது அவர்களுக்கு யூனிபார்ம் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அவற்றையெல்லாம் செய்வதற்கு ஆசைதான். எல்லோருக்கும் யூனிபார்ம் கொடுப்பதற்கு ஆசைதான். ஆனால் பணம்தான் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்திற்குச் சென்றபோது அங்கே போலீஸ்காரர்கள் எவ்வளவு பேர் இருந்தார்களோ அந்த அளவுக்கு அந்த இடத்திலே அவர்களும் கையிலே கம்பு வைத்துக் கொண்டு இருந்தார்கள். காலப்போக்கிலே அவர்களுக்கெல்லாம் என்னென்ன செய்ய முடியுமோ அதை அரசு செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொண்டு, எண்ணிக்கையில் பார்த்தால் இன்றைய தினம் அவர்கள் 31 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் 150 ரூபாய்தான் சம்பளம் இருந்தது. ஆனால் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒரே நாளில் 150 ரூபாயாக இருந்ததை 250 ரூபாயாக உயர்த்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இவ்வளவு பண நெருக்கடியிலும், கஷ்டங்களிலும், கிராமப் பணியாளர்கள் 31 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்று சொன்னாலும், அவர்களுக்கு மதிப்பூதியத்தை 577 ரூபாயிலிருந்து 592 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு (மேசையைத் தட்டும் ஒலி) போட்டிருக்கிறார்கள். அவர்கள் தற்காலிக ஊழியர்கள்தான். நிரந்தரமானவர்கள் அல்ல. பகுதி நேர அதாவது பார்ட் டைம் வேலை செய்யக் கூடியவர்கள். பகுதி நேர வேலை செய்யக்கூடியவர்களாக இருந்தாலும், மற்ற அரசு அலுவலர்களைப்போல, பதவிக் காலத்தில் இறந்தால், அரசு அலுவலர்களுக்கு என்னென்ன சலுகைகள் இருக்கிறதோ அவற்றை அளிப்பதோடு அவர்கள் இறந்தால் 60 ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு போட்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகத்தில் குடிதண்ணீர் வசதிக்காக வாட்டர் கூலர் வைப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருக் கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத் தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், விபத்துக்கள் குறித்து இங்கே ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. அந்தக் கேள்வி கேட்கப்படுகிறபோது, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதி இல்லாமல், எதுவும் சொல்லாமல் நான் நழுவிக் கொண்டேன். விபத்துகள் ஏற்பட்டால், 37 ஐட்டம்களுக்குத்தான் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க முடியும். அதற்கு மேலே என்ன செய்வது என்று இங்கே கேட்டார்கள். காட்டிற்கு உள்ளே சென்று தேன் எடுக்கிறபோது அங்கே விபத்து ஏற்பட்டால் என்ன செய்வது என்று கேட்டார்கள். இதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொன்னவுடன் காட்டிற்குச் சென்றாலும் சரி, வேறு எந்த விபத்தில் சிக்கினாலும் சரி, அவர்களுக்கும் ரூபாய் 10 ஆயிரம் கொடுங்கள் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்றுதான் குடும்பத் துயர் துடைப்புத் திட்டம் என்பது. குடும்பத்தில் தலைவன் இறந்தால், அவர்களுடைய வருமானம் 5 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருந்தால், 3 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை கொடுக்கவேண்டுமென்று இருந்தது. அதிலும் இன்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு போட்டு இருக்கிறார்கள். 6,400 ரூபாய்க்குக் கீழே இருந்தாலும், அந்தக் குடும்பத்திற்கும் 3 ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்ற உத்தரவைப் போட்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குடிதண்ணீர் வசதிக்காக இன்றையதினம் சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களில் வாட்டர் கூலர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் வாட்டர் கூலர் வைப்பதற்கு அனுமதி தரவேண்டுமென்று இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டோம்; அதற்கு உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 'சரி' என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிக் கேட்கிறபோது, அவர் களுக்கு மட்டுமல்ல, அதற்கும் கீழே இருக்கிற அலுவலகங் களுக்கு என்ன செய்ய வேண்டுமென்ற அந்தக் கேள்வியையும் மாண்புமிகு முதல்வர் அவர்களே கேட்டார்கள். பண வசதி இல்லாததால், சொல்வதற்கு பயமாக இருந்தது. ஆகவே, அவர்களுக்கும் கொடுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னதோடு, இன்றையதினம் மாவட்ட ஆட்சித்



தலைவர் அலுவலகங்களில் மட்டுமல்ல, வருவாய்க் கோட்ட அதாவது ஆர்.டி.ஓ. அலுவலகங்களுக்கும், அதற்கடுத்து தாலுகா அலுவலகங்களுக்கும் வாட்டர் கூலர் கொடுப்பதற்கு இந்த அரசு உத்தரவு போட்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் வரி வசூல் செய்வது பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். வரி வசூல் செய்வதில் உடனே ஜப்தி செய்யக்கூடாது என்று சொன்னார்கள். வரி வசூலில் ஜப்தி செய்யக்கூடாது என்று எனக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அலுவலகத்தி லிருந்து செய்தி வந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அலுவலகத்திலிருந்து செய்தி வந்தவுடனேயே நான் அதைச் செய்து விடுவேன். இருந்தாலும் அதுவும் போதாது என்று, என்னைப் பார்த்தவுடனேயே, மறுபடியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு முறை எனக்கு உத்தர விட்டார்கள். முதலில் மாண்புமிகு முதல்வர் அலுவலகத்தி லிருந்து வந்து என்னிடத்திலே சொன்னார்கள். சரி, என்று சொன்னேன். அதற்குப்பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களே, என்னிடத்திலே நேரடியாகச் சொன்னார்கள். உடனடியாக, இன்றைக்கு எல்லா இடங்களிலும் ஜப்தி செய்யக்கூடாது என்ப தற்கான உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்பதை (மேசை யைத் தட்டும் ஒலி) நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7–45

இங்கே பேசுகின்றபொழுது பட்டா பாஸ் புத்தகத்தைப் பற்றிப் பலர் பேசினார்கள், நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள், நில உடைமை மேம் பாட்டுத் திட்டத்தைப் பற்றி ஒன்றைச் சொல்கிறேன். இதற் கெல்லாம் நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். இன் றைக்கு நில உடைமை மேம்பாட்டுத் திட்டம் என்கின்றபொழுது. ஏதோ 50 வருடம் அல்லது 30 வருஷங்களுக்குப் பிறகு நிலத்தை; ஒரு தடவை அளக்க வேண்டும்; சர்வே செய்ய வேண்டும், நான்கெல்லை போட வேண்டும்; கல் போட வேண்டும்; வரை படம் போட வேண்டும் என்று இருந்தாலும். நீண்ட பல கால மாக அது செய்யப்படவில்லை, அதற்குப் பிறகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிற பொழுது அதைச் செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். நில உடைமை மேம் பாட்டுத் திட்டத்தினால் அந்த நிலம் அளப்பதில் ஏறக்குறைய 100 கோடி ரூபாய் வரைக்கும் செலவு செய்யப்பட்டது. கூட்டுப் பட்டாவாக இருப்பது தனிப் பட்டாவாக இருக்க வேண்டும், ஏனென்றால் கூட்டுப் பட்டாவாக இருந்தால். அந்தப் பட்டா வுக்கு இரண்டு பேர் இருந்தால். இரண்டு இடத்திலேயும், மூன்று

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1992 மார்ச் 19

இடத்திலேயும் பணம் வாங்கி விடுவார்கள். அதை யாருக்கு
வேண்டுமானாலும் பைசல் செய்வார்கள், அந்த நிலத்தை
விற்பதிலே சங்கடம்; வாங்குவதிலே சங்கடம், அந்த நிலத்தை
வைத்துக் கடன் வாங்குவதிலே சங்கடம். இப்படிப்பட்ட பல
சங்கடங்களைப் போக்கடிப்பதற்காக, கூட்டுப் பட்டாவை கூடிய
வரையில் தனிப் பட்டாவாகப் போட வேண்டுமென்று அரசு
முடிவெடுத்து நடைமுறைப்படுத்தியது.

அப்படி நடைமுறைப்படுத்துகிற பொழுது, கூட்டுப்
பட்டாவை எங்கெல்லாம் தனிப் பட்டாவாக போட முடி
யாதோ அதை விட்டு விடுங்கள்; மேலே உள்ள அதிகாரிகள்
அதைப் பார்த்துக் கொள்வார்கள்; ஆனால் எந்தெந்த இடங்
களிலே யாருக்குப் பட்டா போட முடியாதோ அதைச் சும்மா
விட்டு விடுங்கள் என்று சொல்லித்தான் உத்தரவு போடப்பட்டது,
அதில் எப்படியோ பல இடங்களில் சில தவறுகள் நடந்திருக்
கின்றன. முதலமைச்சரவர்களிடத்தில் சொல்லி இருக்கிறார்
கள்; என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள், பல இடங்களிலே
அந்த நிலங்களைப் போடுகிறபொழுது பொது மக்களும் அதிலே
கவனம் செலுத்தவில்லை; அதைப் போய்ச் செய்கிற பொழுது
ஊருக்குச் சொல்ல வேண்டும்; தண்டோரா போட வேண்டும்;
சொல்ல வேண்டும்; ஊர்ப் பெரியவர்களை அழைக்க வேண்டும்;
இந்த ஊரிலே இந்த நிலத்தை அளக்க வந்திருக்கிறோம்; இதைப்
பட்டா போட வந்து இருக்கிறோம்; நீங்கள் உதவி செய்ய
வேண்டுமென்று கேட்டு, சொல்லி, செய்தாலும் சில இடங்களில்
சில தவறுகள் ஏற்பட்டு இருக்கின்றன, யாருக்கு நிலம் சொந்
தமோ வேறு யாருக்கோ போடப்பட்டிருக்கிறது என்று செய்தி
வந்திருக்கிறது, சில இடங்களிலே கூட்டுப் பட்டாவைத் தனிப்
பட்டாவாகப் போடுவதில் தவறு நடந்திருக்கிறது என்று
சொல்லியிருக்கிறார்கள்.

இதை நான் இந்த அவையின் மூலமாகத் தமிழ்நாட்டு
மக்கள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்வேன், யார் யாருக்
குத் தவறு நடந்திருக்கிறதோ, நீங்கள் அங்கே மனு கொடுத்து,
நீங்கள் எல்லாம் இந்தத் தவறைத் திருத்திக் கொள்ள வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன், விரைவிலே, மாவட்ட
ஆட்சித் தலைவருக்கும், அங்கேயிருக்கின்ற எல்லா அதிகாரி
களுக்கும் இங்கே தலைமையிடத்திலேயிருந்து, நம்முடைய அர
சிலேயிருந்து எல்லோருக்கும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது.
அதிலே இருக்கிற குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று உத்தரவு
போடப்பட்டிருக்கிறது. அப்படிப் போடப்பட்டிருப்பதால்
அதைச் சரி செய்ய வேண்டும், அதைச் சரி செய்த பிறகுதான்—
இங்கே பட்டா பாஸ் புத்தகத்தைப் பற்றிச் சொன்னார்கள்—
பட்டா பாஸ் புத்தகம் கொடுக்கப்படும்.

அதிலே—இங்கே சொன்னார்கள்—சர்ட்டிபிகேட் வேண்டும்.
நம்முடைய இராமசாமி அவர்கள் சொல்கின்ற பொழுதுதான்



1992 மார்ச் 19] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

சிலவற்றைப் பற்றி அதிலே சொன்னார்கள், பட்டா பாஸ்
புத்தகம் வேண்டும்; ஜாதிச் சான்றிதழ் வேண்டும் என்றெல்லாம்
சொன்னார்கள்,

அந்தப் பட்டா பாஸ் புத்தகத்திலே ஜாதியைப் போடுவதா,
போடக் கூடாதா என்று பெரிய பிரச்சினை வந்தது.
ஜாதி இல்லாத சமுதாயம் அமைக்க வேண்டும்; ஜாதி மதமற்ற
சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நீங்கள்
ஜாதியைப் போட வேண்டும் என்று சொல்வதா என்று வாதிட்
டார்கள். ஆனால் கீழே இருக்கிற ஜாதி மேலே வந்து அவர்கள்
நன்மை அடைய வேண்டும் என்பதற்காக ஜாதி போட வேண்டு
மென்று இப்பொழுது இருக்கிறது.

அந்தப் பட்டா பாஸ் புத்தகத்திலே ஒருவருக்கு எவ்வளவு
நிலம், அது நஞ்சையா, புஞ்சையா, அது எவ்வளவு விஸ்தீரணம்,
அதிலே கடன் இருக்கிறதா என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்க
வேண்டும், விற்றால் ரெஜிஸ்தர் ஆபீசுக்குப் போனால் இரண்
டையும் கேட்பார்கள், விற்பவர்களும் கொடுக்க வேண்டும்;
வாங்குபவர்களும் கொடுக்க வேண்டும்; வாங்குபவர்களுக்கு
அதிலே சேர்த்து எழுதுவார்கள்; விற்கின்றவர்களுக்கு அதைக்
கழித்து எழுதுவார்கள்.

இப்படிப்பட்ட ஒரு பட்டா பாஸ் புத்தகத்தைக் கொடுக்க
வேண்டும் என்பதற்காகத்தான், நம்முடைய ஆளுநர்
அவர்களுடைய உரையில் அதிலே முதலமைச்சரவர்கள் அதைச்
சேர்த்திருக்கிறார்கள். பட்டா பாஸ் புத்தகம் விரைவிலே
கொடுக்க வேண்டுமென்று அவர்கள் அதைச் சேர்த்திருக்
கிறார்கள். ஆகையினாலே அந்தப் பட்டா பாஸ் புத்தகத்தைக்
கொடுப்பதற்காக, இந்த நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்
தில் சில தவறுகளையும் சரி செய்து அவைகளெல்லாம் சரி
செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படி
இதையெல்லாம் செய்துவிட்டால் அது கொடுக்கப்படும் என்
பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 7-50

இங்கே நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சொல்கிற போது,
எப்போதும் அதே நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிதான் சொல்
கிறீர்கள், 1,19,912 என்று சொல்கிறீர்கள், இவ்வளவுதானா
நிலம் என்றால், முதலிலே வந்த சட்டத்தில் அவ்வளவுதான்
எடுக்க முடிந்தது, இப்போது புதிதாக சட்டம்தான் இயற்ற
வேண்டும். அதற்குத்தான் நம்முடைய மாண்புமிகு தமிழக
முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் நாங்கள்
ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, எங்களுடைய கட்சியினுடைய
'மானிபெஸ்டோ'விலேகூட, நாங்கள் வந்தால் நிலச் சீர்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1992 மார்ச் 19

திருத்தந்தை—அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு
வருவோம்; பினாமி நிலத்தை எடுப்போம் என்று சொன்னோம்,
அதன்படி, அந்தச் சட்டத் திருத்தத்தை தற்போது மத்தியப்
பேரரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அங்கேயிருந்து வரவில்லை,
மாதா மாதம் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறோம்,
முதலமைச்சர் அவர்களுடைய சார்பில் நான் வருவாய்த் துறை.
மாநாட்டிற்குச் சென்றபோது. அதுபற்றியெல்லாம் சொல்லிச்
கொண்டு வந்தபோது, இதை மட்டும் 'அண்டர்-லைன்' செய்து
நீங்கள் கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்; உடனே
அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன், அப்படி வருகிற
போது, நிலச் சீர்திருத்தம் விரைவிலே அமல்படுத்தப்படும்:
அதைச் சீக்கிரம் நிறைவேற்றுவோம் என்பதை நான் உங்களுக்குக்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, கடைசியாக நான் உங்களுக்குச் சொல்ல வேண்டு
மென்றால், இது தமிழ்நாட்டினுடைய பொற்காலம் என்று
எல்லோரும் சொல்கிறார்கள். உண்மையிலேயே, இது தமிழ்
நாட்டினுடைய பொற்காலம்தான். (மேசையைத் தட்டும் ஒலி).
இதைவிட, வருவாய்த் துறையினுடைய பொற்காலம் இது.
எப்படி வருவாய்த் துறையினுடைய பொற்காலம் என்றால்,
இங்கே நம்முடைய கல்வியமைச்சர் கூட சொன்னார்—நான்
பேசிக் கொண்டிருந்தபோது—நம்முடைய புரட்சித் தலைவி
அவர்கள் வாரத்திற்கு ஒரு நாள் பார்க்கிறார்கள் என்றார்—
நான் வாரத்திற்கு 2 நாட்கள் பார்க்கிறார்கள் என்று சொன்
னேன். அப்படி பார்க்கிற போது, அவர்கள் எவ்வளவு பேர்கள்
வருகிறார்கள்; எவ்வளவு மனுக்கள் வருகின்றன என்பன போன்ற
சங்கடங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரிகிறது. அப்படி என்
றால், மாவட்டங்களுக்கு எல்லாம் எவ்வளவு பேர் வருவார்கள்?
எவ்வளவு ஏழை எளியவர்கள் வருவார்கள்? அவர்களுடைய
குறைகளைக் கேட்பார்கள்; மனுக்களைப் பெறுவார்கள்? அவை
சரியாகக் கவனிக்கப்படுகிறதா என்பதை நம்முடைய முதல
மைச்சர் எண்ணிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அப்படி
எண்ணிக்கொண்டே, அதற்கு என்ன செய்வது என்று ஆராய்ந்
தார்கள். எப்போதும் ஒவ்வொரு துறைக்கும் பண ஒதுக்கம்
என்றால், 'பார்ட்-டூ'—பைனான்ஸ் ஸ்டேண்டிங் கமிட்டியில்தான்
பணத்தை ஒதுக்குவார்கள். அதற்கு முன் நாம் யாரும் பணம்
கேட்கிற பழக்கம் இல்லை. நானும் பணம் கேட்பதில்லை.
ஆனால், இரண்டு தினங்களுக்கு முன் பார்க்கிற போது—வரு
வாய்த் துறைக்கு பதவி உயர்வு வேண்டுமென்றால், ஒரு புதிய
'போஸ்ட்' ஏற்படுத்த வேண்டுமென்றால் 1, 2, 3 என்றுதான்
இருக்கும்—ஆனால், இன்று வருவாய்த் துறைக்கு 22 டெபுடி
கலெக்டர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதைப்போல 22
டெபுடி கலெக்டர்களை ஒரே தரம் வருவாய்த் துறைக்கு இது
வரைக்கும் எங்கேயும் கொடுத்ததில்லை. எனவே தான், இதை
வருவாய்த் துறைக்கு ஒரு பொற்காலம் என்றேன். அதேபோ



1992 மார்ச் 19] [திரு.எஸ்.டி. சோமசுந்தரம்]

அந்த 22 டெபுடி கலெக்டர்களுக்கும் வேறு வேலையே இல்லை.
மக்களுடைய குறைகளைக் கேட்பது; மனுக்களை வாங்குவது;
அந்த மனுக்களுக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது
இவற்றைக் கவனிக்க மட்டும் 22 மாவட்டங்களுக்கும் 22 டெபுடி
கலெக்டர்களை இன்றைக்குப் போட்டிருக்கிறார்கள் என்றால்—
ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்ற வகையில்—அதற்குப் பிறகு,
கீழே இருக்கிற சாதாரண ஜூனியர் அஸிஸ்டென்ட்டிலிருந்து
மேலே வரைக்கும் 22 என்றால், எல்லா இடங்களிலும் பதவி
உயர்வு வருவதற்கு இது ஒரு வாய்ப்பு என்பதை நான் உங்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், குத்தகைச் சட்டத்தைப் பற்றி இங்கே பேசி
னார்கள். குத்தகைச் சட்டம்—அதாவது, குத்தகைதாரர்கள்
சட்டத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். குத்தகைதாரர்களின்
வழக்குகளைத் தீவிரமாக முடிப்பதற்காக இந்த அரசு, அதற்கும்
7 டெபுடி கலெக்டர்களை—நம்முடைய புரட்சித் தலைவி அவர்
கள் இன்றைக்கு அனுமதித்திருக்கிறார்கள் என்ற செய்தியை
நான் உங்களுக்குச் சொல்கிறேன். இங்கே அதைப்பற்றி பேசுகிற
போது, அவர்கள் எல்லாம் யாரோ, எப்படியோ குத்தகை எடுத்
திருக்கிறார்கள்—திரு. முருகானந்தம் என்று நினைக்கிறேன்.—
அதற்கு நீதிமன்றத்திற்குப் போக வேண்டும்; 'சப்-கோர்ட்'
டிலே போக வேண்டும்; தாசில்தார்களை நியமிக்க வேண்டும்
என்றெல்லாம் சொன்னார். அதற்காகத்தான் முதலமைச்சர்
அவர்களுடைய அனுமதி பெற்று, உத்தரவு பெறப்பட்டது.
ஆக, குத்தகைதாரர்கள் யார் என்பதை நிரூபணம் செய்வதற்காக
அதே பகுதியைச் சார்ந்த 5 பேர் கொண்ட ஒரு கமிட்டியை
அமைக்க இருக்கிறோம். அதே பகுதியைச் சேர்ந்த ஒரு குத்தகை
தாரர், அதே பகுதியைச் சேர்ந்த ஆதி திராவிடர் விவசாயி
அல்லது ஆதி திராவிட தொழிலாளி, அதே பகுதியைச் சேர்ந்த
சமுதாயத் தொண்டர்— சமுதாயத் தொண்டர் என்றால் சட்ட
மன்ற உறுப்பினர்களும் சமுதாயத் தொண்டர்கள் என்ற முறை
யில் வந்து விடுகிறீர்கள்—அப்படி பார்க்கின்றபோது குத்தகை
தாரருக்கு குத்தகையிலே பல சங்கடங்கள் எல்லாம் இல்லாமல்
அவைகள் நடத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்
கிறேன்.

பிற்பகல் 7.55

இப்படி குத்தகைதாரரைப் பற்றி உங்களுக்கு நல்ல முடிவு
கள் எடுக்கும் சமயத்திலே அதிலே சங்கடங்கள் எதுவும் இருக்
காது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இப்படி நான் சொல்லுகிற போது உங்களுடைய வெட்டுத்
தீர்மானங்களைப் பூராவும் நான் படித்து விட்டுத்தான் வந்திருக்
கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதிலே கிட்டத்
தட்ட எல்லா வெட்டுத் தீர்மானங்களுக்கும் பதில் வந்திருக்

கிறது. ஆனால் சிலவற்றிற்கு வரவில்லை என்று சொன்னால்
எங்கள் ஊருக்கு வட்டம் வரவில்லை, வசதிகள் வர
வில்லை என்று சொல்லலாம். அதில் இன்னொன்றையும்
நான் சொல்வதற்கு மறந்து விட்டேன். மணப்பாறை வட்டம்
அதிகத் தொலைவில் இருக்கிறது. மணப்பாறை வட்டம் கரூர்
கோட்டத்துடன் இணைந்திருக்கிறது. அதை திருச்சி வட்டத்
துடன் இணைக்க வேண்டும் என்று சொன்னார்கள்.
கூட இப்போதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அதற்குக்
கையெழுத்துப் போட்டு மணப்பாறை வட்டத்தை திருச்சி வட்
டத்துடன் சேருங்கள் என்று சொன்னார்கள், (மேசையைத் தட்
டும் ஒலி). இதையெல்லாம் நான் வேகமாகச் செய்ய வேண்டு
மென்று நினைப்பதைவிட அவர்கள் வேகமாகச் செயல்படு
கிறார்கள். இன்று அதற்கு கையெழுத்துப் போட்டு கையிலேயும்
கொண்டு வந்து விட்டார்கள். அதை நான் சொல்கிறேனா
இல்லையா என்று பார்த்துக் கொண்டும் இருக்கிறார்கள்.
(சிரிப்பு) மணப்பாறை வட்டத்தை கரூர் வருவாய்க் கோட்டத்
திலிருந்து பிரித்து திருச்சி வட்டத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல, இங்கு பலர் என்னுடைய வட்டத்தை இரண்
டாகப் பிரிக்க வேண்டும். மூன்றாகப் பிரிக்க வேண்டும்
என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான்
ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். எந்த எந்த கிராமங்கள் எந்த
எந்த பிர்காவில் இருக்கிறது. எந்த எந்த பிர்கா எந்த எந்த
வட்டங்களில் இருக்கிறது. அப்படி நீங்கள் பார்க்கிறபோது,
எப்படி இன்று மணப்பாறை வட்டத்தை திருச்சி வட்டத்துடன்
சேர்க்கப்பட்டதோ அதே போல, மக்களுடைய நலன் கருதி,
எந்த எந்த கிராமங்களை எந்த எந்த பிர்காவுடன் சேர்க்கலாம்
அல்லது எந்த பிர்கா எந்த வட்டத்திலே இருக்கிறதோ அந்த
பிர்காவில் முழுமையோ அல்லது பாதியோ அந்த பிர்காவை
இன்னொரு வட்டத்தில் சேர்க்கலாம். மக்களுடைய நலன்
கருதி, அங்கே உள்ள போக்குவரத்து கருதி, மக்களுக்கு எந்த
ஊரில் இருந்தால் எந்த வட்டத்தில் இருந்தால் நல்லதோ எந்த
பிர்காவில் இருந்தால் நல்லதோ, அதைச் சேர்ப்பதற்கு நீங்கள்
பொது மக்களுடைய மனுக்களை வாங்கி, அவர்களுடைய
எண்ணங்களைத் தெரிந்து கொண்டு சொன்னால் அவைகளைச்
செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே தான் முதன் முதலில்,
நான் கூடச் சொல்லவில்லை. அவர்களாகவே சேர்த்தார்கள்.
கடலூரை இரண்டாகப் பிரித்து, கடலூரைத் தலைமையிட
மாகக் கொண்டு தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரத்தை
தலைமையிடமாகக் கொண்டு வள்ளலார் மாவட்டம் அமைக்
கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள்.



அதேபோல் மற்ற மாவட்டங்களைப் பிரிப்பது பற்றி இந்த
அரசு ஒவ்வொன்றாகப் பரிசீலித்துச் செய்யும் என்று சொல்லி
உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் என்னுடைய
பதிலில் விளக்கங்கள் கிடைக்கப் பெற்றிருக்கும் என்று தெரி
வித்து, கடைசியாக ஒன்றைச் சொல்கிற போது, 6,37,000
அரசு மரங்கள் இருக்கின்றன. ஆனால் மரம் வளர்க்க வேண்டு
மென்பதில் ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது 50 மரங்கள்
வேண்டும். 50 மரங்களுக்குத் தேவையான மரக் கன்றுகள்
வைக்க வேண்டும். ஆனால் கன்றுகளை மட்டும் வைத்து
விட்டால் மட்டும் போதாது. அதைப் பராமரிக்க வேண்டும்.
இதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இடத்தில் அனு
மதி வாங்கினேன், அவர்களும் சரியென்று சொல்லிவிட்டார்
கள், ஆகவேதான் சொல்கிறேன், 50 மரக் கன்றுகளை
வைக்க வேண்டும், அப்படி வைத்தால் எல்லாக் கிராமங்களையும்
சேர்த்து பார்த்தால் 6 இலட்சம் மரங்கள் வந்துவிடுகின்றன,
தமிழ்நாட்டில் 1 வருடத்திற்கு 6 இலட்சம் மரங்கள்
வருவாய்த் துறையில் மட்டுமே வைக்க வேண்டும். அந்த 6
இலட்ச மரங்கள் என்று வருகின்றபோது, ஒரு வருடம் அல்லது
இரண்டு வருடம் கழித்த பிறகு அதிலே எந்த எந்த ரெவின்யு
இன்ஸ்பெக்டர் ஏரியாவிலே, எவ்வளவு மரங்கள் அதிகமாக
இருக்கிறதோ அப்படி அதிகமாக மரங்கள் வைத்த அந்த கிரா
மத்தில் உள்ள வி.ஏ.ஓ-க்களுக்கும் அங்கே, உள்ள கிராம
அலுவலர்களுக்கும் பரிசுகள் வழங்கவும், அப்படி பரிசுகள்
வழங்கும் அளவிற்கு அவர்கள் மரங்களை வைக்க வேண்டும்
என்பதைத்தான் நான் இந்தப் பேரவையின் மூலமாக அவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி பரிசு வழங்கும்
அளவுக்கு அவர்கள் மரத்தை வைக்க வேண்டுமென்று நான்
இங்கே சட்டசபை மூலமாக அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக்
கொள்கிறேன்.

பிற்பகல் 8—00

அதேபோல் இன்னொன்று. எல்லா இடங்களிலும் உள்ள
சங்கடங்கள் என்னவென்றால் இடுகாடு. சில இடங்களில்
நிரந்தரமான இடுகாடு இருக்கிறது. சில இடங்களில் தற்
காலிக இடுகாடு இருக்கிறது. வருவாய்த் துறை அதிகாரிகள்
எல்லா இடங்களிலும் நிரந்தரமான இடுகாடு ஏற்படுத்து
வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இடுகாடு
மட்டுமல்ல; இடுகாட்டுக்குச் செல்கிற நிரந்தரமான பாதை.
இங்கே தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா இடுகாடுகளுக்கும்
நிரந்தரமான போக்குவரத்துப் பாதை வசதிகளையும் ஏற்
படுத்தித் தருவதற்கு இந்த அரசு வேண்டிய நடவடிக்கைகளை
எடுக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்
படி எல்லா வகையிலும் செய்யப்படும். எனவே இங்கே இருக்
கின்ற உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களுக்
கெல்லாம் நான் பதில் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு)
பதில் சொல்லவில்லை, சொல்லவில்லை என்று சொல்கிறார்கள்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1992 மார்ச் 19

அதிலே உங்கள் ஊரை இரண்டாகப் பிரித்து இரண்டு வட்டம் வருவதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிவித்து இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று என்னுடைய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவா.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினைக்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக்களில் கலந்துகொள்வதைப் பொறுத்தவரையில் நண்பர் திரு. கே. ஆர். இராமசாமி அவர்கள் ஒரு பிரச்சினையைச் சொன்னார்கள். இரண்டு மாவட்டங்களில் வருகின்ற தொகுதிகள் தமிழ்நாட்டில் பல இருக்கின்றன. இன்றையதினம் ஒரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மட்டும்தான் உறுப்பினராகக் கலந்து கொள்ள முடியும். அடுத்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராகத்தான் கலந்துகொள்ள முடியும். சிறப்பு அழைப்பாளர்களுக்கு அதற்கான சப்ஜக்ட் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் கலந்துகொள்வதற்கு அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்து ஆகவேண்டும். அதிலே சிரமம் கிடையாது. இப்போது இடைக்கால ஏற்பாடாகத்தான் சிறப்பு அழைப்பாளர் என்று கடந்த இரண்டாண்டுகளாக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அது அறிவிக்கப்பட்டபோதே நிச்சயமாக உடனடியாக சட்டம் கொண்டு வரப்படும் என்று அன்றையதினம் சொல்லப்பட்டது. அன்றையதினமும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இதே போல் கொஞ்சம் நெளிந்து கொண்டுதான் இருந்தார்கள் என்றாலும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனவே விரைவில் அதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வந்து இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்து தருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு மாவட்டத்தினுடைய வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் அவர்கள் கலந்து கொள்வதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை இப்போது. ஆனால் இப்போது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் ஓட்டு எடுக்கின்ற நிலைமை வந்தால் அவர்கள் அதிலே கலந்து கொள்ள முடியாது. அது இல்லாமல் இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வதில் எந்தவிதமான தடையும் இல்லை.



1992 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின்பேரில் மீண்டும் ஜப்தி நிறுத்தத்தை அறிவித்திருக்கிறார்கள். சாமி வரம் கொடுத்தாலும் கூட பூசாரி வரம் கொடுக்காது என்று சொல்வார்கள். இப்போது அதிகாரிகள் மீண்டும் ஜப்தி செய்வதாகத் தகவல் வந்து கொண்டு இருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நிலவரிக்காகவும், கடனுக்காகவும் செய்யப்படுகிற ஜப்தியை நிறுத்தி விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, அவர்களின் ஜப்தி நிறுத்த உத்தரவுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் உறுப்பினர்கள் கலந்துகொள்வது பற்றிச் சொல்கிறேன். இரண்டு வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ள அவர்களுக்கு அழைப்பு போகும். அதிலே கலந்து கொள்ளலாமே தவிர தீர்மானங்கள் போன்றவை ஏதாவது வந்தால் ஒரு வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தான் கொடுக்க முடியும் இன்றைக்கு. அதற்கு மேல் என்ன செய்வது என்பதைப் பொறுத்தவரையில் அதிலே இருக்கிற சட்ட நுணுக்கங்களைப் பார்த்து முதலமைச்சர் அவர்கள் வேண்டுமானால் பின்னர் முடிவெடுத்து உங்களுக்குச் சொல்வார்கள்.

அடுத்து நிலவரி, தண்ணீர் தீர்வை இவைகளைப் பொறுத்தவரையில் மட்டும்தான் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வங்கிக் கடன்கள் பற்றி என்ன நிலைமை என்பதை இப்போது சொல்ல முடியாது. வேண்டுமென்றால் அதற்கு, பின்னர் புரட்சித் தலைவி அவர்கள் பார்த்து முடிவெடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து காயிதே மில்லத் மாவட்டம் என்று ஏற்படுத்திய பிறகு இதுவரையில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டமே நடைபெறாமல் இருக்கிறது. அதிலும் பொதுவாக பல்வேறு அதிகாரிகளைக் கொண்ட கூட்டமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பொதுவாக சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுவது என்பது அந்த வளர்ச்சி விவரமாகத்தான் இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அந்த குத்தகை விவசாயிகளிடமிருந்து ஒரு விடுதலை கிடைப்பதற்கு அந்த குத்தகை தள்ளுபடிகளையும் செய்யவேண்டும். அது தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இன்னும் தொடர்நது வந்து கொண்டே இருக்கிறது. அதற்கும் ஒரு தீர்வு காணவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

பிற்பகல் 8.05

மாண்புமிகு திரு, எஸ், டி சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய வளர்ச்சி மன்ற கூட்டம் எந்த காரணத்தினாலேயோ இன்னும் கூட்டவில்லை என்று சொன்னார்களே, அது இப்போதுதான் அரசினுடைட கவனத்திற்கு வந்திருக்கிறது, விரைவில் அதை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வதற்கு மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குத்தகை விவசாயிகள் என்கின்றபோது, இதிலே உங்களுக்குத் தெரியும். இதே அவையிலேகூட நான் பல முறைகள், எத்தனையோ முறைகள், குத்தகை விவசாயிகளுக்காக அவர்களுடைய கொடுக்கவேண்டிய வாரத்தை தள்ளுபடி செய்து உத்தரவு போடப்பட்டிருக்கிறது, இப்படி குத்தகை விவசாயிகளுக்கு உண்மையாக ஒரு சங்கடத்தில் இருந்தால் அதுபற்றி அரசு யோசிக்கும். குத்தகை விவசாயிகள் அதிகமாக இருப்பது தஞ்சை மாவட்டத்தில்தான். தஞ்சை மாவட்டத்திலே இந்த வருடம் தண்ணீர் பஞ்சம் என்று சொல்லமுடியாது. புயல் வந்தது என்றும் சொல்ல முடியாது. ஆனால் இருக்கிற சங்கடங்கள் ஏதாவது இருந்தால். இந்த சங்கடங்களைப் பற்றி இந்த அரசு யோசிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்,

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, இந்தமாதிரி தஞ்சை மாவட்டத்தில், கீழத் தஞ்சை மாவட்டத்தில் மட்டும்தான் விவசாயத் தொழிலாளர்களுக்கு இப்படி கூலி இருக்கிறது. கூலி நிர்ணயம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் விவசாயிகளுக்கு குறைந்தபட்ச கூலி என்ன என்பது ஒரு சட்டம். அது இருக்கிறது. ஆனால் கீழத் தஞ்சைக்கு ஒரு சட்டம் மற்ற தமிழகத்தில் உள்ள மற்ற எல்லா பகுதிகளுக்கும் ஒரு சட்டமாக இருக்கிறது, ஆனால் எல்லோருக்கும் இவ்வளவுதான் கொடுக்கவேண்டும். குறைத்துக் கொடுக்கக் கூடாது என்ற சட்டம் தமிழ்நாடு பூராவும் இருக்கிறது. விரைவில்





கீழத் தஞ்சைக்கும் மாநிலத்திலுள்ள எல்லா பகுதிகளுக்கும் ஓரேவிதமான கூலி நிர்ணயச் சட்டம் வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன். மணப்பாறை பகுதி திருச்சியோடு இணையும் என்ற ஆணையை இட்டிருக்கிறார்கள். 40 ஆண்டுக் காலமாக அந்த மக்களின் நீண்டநாளைய கோரிக்கையாக இருந்த அந்தக் கோரிக்கையை, தங்களுடைய பொற்கரங்களால் கையெழுத்திட்டு இன்று நிறைவேற்றித் தந்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மணப்பாறை தாலுக்கா சார்ந்த 3 லட்சம் மக்களும் இனிவரும் தலைமுறையினரும் என்றென்றைக்கும் நன்றி கடன்பட்டு இருப்பார்கள் என்பதை அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) இப்போதே மணி 8.07. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாக அந்த விளக்கத்தைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்போது விவாதம் முடிவுற்றது, வாக்கெடுப்பு.

(ஈ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு, ஜி, பழனிசாமி,

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது,

திரு. வி. கே. லட்சுமணன் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன் : இல்லை,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண். மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 165,08,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(உ) கோரிக்கை எண் 1— நிலவரித் துறை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 1—நில வரித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர் மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''நிலவரித் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 7,43,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு வருவாய்த் துறைஅமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்படுகிறது.



ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஊ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரி களும் தீர்வைகளும் நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி.பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச். எம். ராஜு தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. எச். எம். ராஜு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எச் எம். ராஜு அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும்—தீர்வைகளும் நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீப் ரூ. 39,42,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்

என்னும் மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

பேரவைத் துணைத் தலைவர்]
ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பிற்பகல் 8.10

(எ) கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிருவாகம். வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''முத்திரைத் தாள்கள்—நிருவாகம் பற்றிய 5-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,41,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'

என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்),

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.



(ஏ) கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு, வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன். திரு ஜி.பழனிசாமி

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''பத்திரப் பதிவு பற்றிய 6-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 17,25,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்
என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(ஐ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது

''இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 01-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.39,87,30,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(ஐ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத்துறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்—அச்சுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு இருக்கையில் இல்லை. அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

''எழுதுபொருள் அச்சுத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 29,35,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

என்னும் மாண்புமிகுவருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(ஓ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 46—ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 48,55,38,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 20–3–1992, வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–13 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

26. சென்னை, தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான பன்னிரெண்டு மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் கல்வி தொடர்புடைய நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும் வரை மேற்சொன்ன பல்கலைக் கழகத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை 30-9-1991 முதல் சாதாரண வரிவீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 30-9-1991-ஆம் நாளிட்ட 1474-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13!1974) 25(2) பிரி வின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

27. கோட்டுக்குப்பம், ஸ்ரீஅரவிந்த பன்னாட்டு கல்வி ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொந்தமான மூன்று மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் கல்வி தொடர்புடைய நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும் வரை மேற் சொன்ன நிலையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியை 23-10-1991 முதல் சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 23-10-1991-ஆம் நாளிட்ட 1582]ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

24. கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிருவாகம் (தமிழ், ஆங்கிலம்).

25. கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1992—93. (தமிழ், ஆங்கிலம்).

26. நில வரித் துறை, மாவட்ட நிருவாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், 1992-93. (தமிழ், ஆங்கிலம்); (கோரிக்கை எண்கள் 1, 11, 41 மற்றும் 46).



27. கோரிக்கை எண். 5— முத்திரைத் தாள்கள்— நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ்-ஆங்கிலம்).

28. கோரிக்கை எண். 6— பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992—93 (தமிழ், ஆங்கிலம்).

29. வருவாய்த் துறை பற்றிய சாதனை அறிக்கை, 1992—93 (தமிழ், ஆங்கிலம்).

30. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது அறிக்கை, 1991-92.

31. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது அறிக்கை 1991-92.

1992 மார்ச் 19]

## வருவாய்த் துறை.

## மானியக் கோரிக்கை, 1992-93.

### 1. முன்னுரை.

1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பிறகு, வருவாய் நிர்வாகம் மற்றும் நில நிர்வாகம் மாவட்ட அளவில் வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று ஆணையாளர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. வருவாய் நிர்வாகத் துறை மாவட்ட வருவாய் நிர்வாகம் மற்றும் பொது நிர்வாகம் முதலியவற்றுக்குப் பொறுப்பானதாகும்.

2. மாவட்ட அளவில், வருவாய் மற்றும் நில நிர்வாகப்பணிகள் கோட்ட வருவாய் அதிகாரிகள், துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் உதவியுடன் மாவட்டாட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சுதந்திரத்துக்குப்பின் உள்ள காலகட்டத்தில் முக்கிய அம்சம் யாதெனில் மாவட்ட நிர்வாகம் வழக்கமான வருவாய் வசூல், நில ஒப்படை அவசரகால நிவாரணப் பணி மற்றும் பராமரிப்பு மட்டுமின்றி பல்வேறு ஆக்கப் பணிகளையும் உள்ளடக்கியுள்ளது. இம் மாநிலத்தில் தற்போது 21 மாவட்டங்களும், 60 வருவாய்க் கோட்டங்களும், 172 வட்டங்களும், 1 கூடுதல் வட்டமும், 1,101 குறுவட்டங்களும், (17,275) வருவாய்க் கிராமங்களும் உள்ளன.

### 2. மாவட்டங்களைச் சீரமைத்தல்:

மாவட்ட நிர்வாகத்தை மேலும் செவ்வனே செயல்படுத்துவதற்கும், பொதுமக்கள் குறைகளைக் கவனிப்பதற்கும், நலத் திட்டங்களை காலதாமதமின்றி செயல்படுத்துவதற்கும் பெரிய மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் ஆகியவற்றை அரசு படிப்படியாகச் சீரமைத்து வருகிறது.

2. தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரைத் தலைமையிட மாகக் கொண்ட தஞ்சாவூர் மாவட்டம் என்றும் நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப் பட்டு 18-10-1991 முதல் செயல்படுகிறது. தென்னாற்காடு மாவட்டம், கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட தென்னாற்காடு மாவட்டம் என்றும், விழுப்புரத்தைத் தலைமை யிடமாகக் கொண்ட விழுப்புரம் வள்ளலார் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்படவுள்ளது.

## 3. மாவட்ட வருவாய் நிர்வாகம்:

அரசின் பல்வேறுபட்ட நலத் திட்டங்களை வருவாய்த் துறை செயல்படுத்துவதால் பொது மக்கள் அடிக்கடி இத்துறையை அணுகுகிறார்கள். எனவே அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் செயல்மேடை முறை, பொதுமக்களுக்கு வழிகாட்ட தகவல் அறிவிப்புப் பலகைகளைப் பொறுத்துதல், பல் வேறான அரசு நலத் திட்டங்கள் பற்றிய துண்டுப் பிரசுரங்களை பொது மக்களுக்கு விநியோகித்தல், நிலையான சாதிச் சான்றிதழ் களை வழங்குதல், அலுவலக நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் போன்றவற்றை அறிமுகப் படுத்தி மாவட்ட வருவாய் நிர்வாகத்தை முடுக்கிவிட்டுள்ளது. பொது மக்களின் மனுக்களையும், குறைகளையும் துரித மாக முடிப்பதற்கும், வெவ்வேறு நிலைகளில் உள்ள வருவாய் அலுவலர்களை நேரில் சந்திப்பதற்கு பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கும், அரசு மக்கள் தொடர்புத் திட்டம் (மனு நீதித் திட்டம்) குறை தீர்க்கும் நாள் ஆகிய இருபெரும் திட்டங் களை அறிமுகப்படுத்தியுள்ளது.

## (3) (அ) மக்கள் தொடர்புத் திட்டம்/மனுநீதித் திட்டம் :

மக்கள் தொடர்புத் திட்டம் அல்லது மனுநீதித்திட்டத்தின்கீழ் மாவட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், பல்வேறு துறைத் தலைவர்களுடன் தனது ஆட்சியெல்லைக்குட்பட்ட ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒவ்வொரு மாதம் என சுழற்சி முறையில் சென்று அந்தந்த கிராம மக்களின் குறைகளை அந்த இடத்திலேயே தீர்வு செய்கின்றனர். அதுபோன்றே கோட்டாட்சியர்கள் தங்களது ஆட்சியெல்லையின் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்குச் சென்று குறைகளைத் தீர்ப்பர்.

தற்போதுள்ள அறிவுரைகளின்படி ஒரு சார்நிலை அலுவலர், ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கு மனுநீதி நாள் நடப்பதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னதாகச்சென்று பொதுமக்களுக்குமாவட்டஆட்சித்தலைவர்/மாவட்டவருவாய்அலுவலர்வருகைதரும்நாள்குறித்து அறிவிப்பு செய்துவிட்டு, பொதுமக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று, அவற்றைத் தொடர்புடைய குறிப்பிட்ட துறை அலுவலர் களுக்கு குறைகளை நீக்க ஏதுவாக அனுப்பிவிடுகிறார். மக்கள் தொடர்பு திட்ட நாள் அன்று இந்த அலுவலர் ஏனைய துறை



அலுவலர்களுடன் கிராமத்திற்குச் சென்று முடிவான பதில்களை மனுதாரர்களுக்குத் தெரிவிக்கிறார். மேலும், மனுநீதித் திட்ட நாளில் பெறப்படும் மனுக்களின்மீதும் நடவடிக்கை எடுத்து முடிந்தால் மனுதாரருக்கு முடிவான பதில்கள் அவ்விடத்திலேயே தரப்படுகின்றன.

## 3 (ஆ) குறை தீர்க்கும் நாள் :

குறை தீர்க்கும் நாள் திட்டத்தின்படி, எல்லா மாவட்டங் களிலும் ஒவ்வொரு திங்கட் கிழமையன்றும், 1984-ஆம் ஆண்டு முதல் குறைதீர்க்கும்நாள்அனுசரிக்கப்படுகிறது. மாவட்டாட்சித் தலைவர்கள்/கோட்டாட்சித் தலைவர்கள், வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே அன்று இருந்து பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களது முறையீடு களைத் தீர்ப்பதற்கு முறையான துரித நடவடிக்கை எடுக்கின்றனர் செம்மையான தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு குறை தீர்க்கும் நாளை நடத்துவதற்கான முறைகள் சமீபத்தில் முறைப் படுத்தப்பட்டுள்ளன. இந்த மாறுபட்ட திட்டத்தின்கீழ் அனைத்து மனுக்கள்மீதும் நடவடிக்கை எடுத்து முடிவுக்குகொண்டு வரும் நோக்கத்துடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மனுக்கள் அனுப்பப்படுகின்றன. விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது விண்ணபங்களைப்பெற்றுக் கொண்டதற்கான 'வெள்ளை அட்டை' வழங்கப்படுகின்றது. அந்த வெள்ளை அட்டையில் விண்ணப் பத்திற்கு பதில் என்று கிடைக்கும் என்பது குறிப்பிட்டிருக்கும். அடிக்கடி தொடர்ச்சியாக வரக்கூடிய மனுக்களில், அந்த மனு தாரர்களுக்கு 'இளஞ்சிவப்பு' அட்டை வழங்கப்படுகிறது. அந்த அட்டையில் அந்த மனு மீதான முடிவைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு மீண்டும் எந்தெந்த தேதியில் அலுவலகத்திற்கு வர வேண்டும் என்ற விவரம் குறிப்பிடப்பட்டிருக்கும். மனுக்களை அறிக்கைக்காக அனுப்பும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மற்றும் இதர அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட சார்நிலை அலு வலர்களிடமிருந்தும். மற்றும் இதர துறை அதிகாரிகளிடமிருந்தும் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் அறிக்கைகளைப் பெற தனி நடவடிக்கை எடுத்து இளஞ்சிவப்பு அட்டையை தாக்கல் செய்யும் மனுதாரரிடம் முறையான பதிலொன்றைக் கொடுப்பார்கள்.

ஓய்வூதியம், பணிக்கொடை, குடும்ப நல நிதி, பொது வைப்பு நிதி, குடும்ப ஓய்வூதியம் போன்ற உரிமைக் கோரிக்கை யினங்களைத் தீர்வு செய்வதற்கு அரசு தக்க அறிவுரைகளை வழங் கியுள்ளது. ''ஓய்வூதியம் பெறுவோர் குறை தீர்க்கும நாள்'' ஒன்று, நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அனைத்து மாவட்டங் களிலும் அனுசரிக்கப்படுகிறது. அந்நாளில் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களும், ஓய்வூதியம் பெறுவோரும் ஒன்றாக அமர்ந்து விரைவாக நேர்வுகளை முடிவு செய்கின்றனர்.

குறைகளைத் தீர்ப்பதற்காக அரசு ஒரு விரிவான ஒழுங்கு முறையை ஏற்படுத்தியுள்ளது. அரசு அலுவலகங்களில் பின் பற்றப்பட வேண்டிய பல்வேறுபட்ட குறித்த நிலைகளையும் ஒழுங்கு முறைகளையும் பொதுமக்களுக்கு வழிகாட்டும்

முகமாகத் தகுந்த பலகைகள் மற்றும் செயல் மேடை முறை இருக்க வேண்டுமென அரசு ஆணை வலியுறுத்துகிறது. முறையான ஒப்புகை உயர் அதிகாரிகளின் நேரடி விசாரணை பொது மக்கள் குறைகளைத் தீர்க்கும் நிலையான ஆயப்படுத்தும் மற்றும் செம்மையான நடவடிக்கைகளாகும். குறிப்பாக கணிப் பொறி இயல் இயந்திரத்தின் உதவியும் செயல்பாடும் புதிய பின்பற்றத்தக்க வழி முறைகளின் முத்திரைகளாகும்.

4. வருவாய்த்துறை கட்டிடங்கள் :

வருவாய்த் துறையின் அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங் களிலிருந்தும் மற்றும் போதிய இடவசதி இல்லாத கட்டிடங் களிலிருந்தும் மாற்றுவதற்காக புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டு மென்ற திட்டத்திற்கு அரசு படிப்படியாக அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதே போன்று, வருவாய்த் துறையில் வேலை பார்க்கும் அதிகாரிகளுக்கு குடியிருப்பு வசதி அளிக்கும் திட்டம் படிப்படியாக அரசு நிறைவேற்றிக்கொண்டு வருகிறது.

மாவட்டஆட்சியர்அலுவலகங்கள்.- சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடி நகரத்தில் சிதம்பரனார் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான வரைபட திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் இந்த கட்டுமானப் பணி நீதி மன்றத்தின் தடையாணை காரணமாக நிறுத்தி வைக்கப்பட் டுள்ளது.

தற்பொழுது, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சேப்பாக்கத்திலுள்ள எழிலக கட்டிட வளாகத்தின் நான்காவது மற்றும் ஐந்தாவது தளத்தில் இயங்க வசதி செய்யப்பட்டுள்ளது. சென்னையில் இராஜாஜி சாலையில் உள்ள பழைய உயர்நீதி மன்ற கட்டிட வளாகத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ரூ. 632 இலட்சம் செலவில் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1992–93ஆம் நடப்பு நிதியாண்டில் தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியருக்கு குடியிருப்பு மற்றும் தங்கல் குடியிருப்பு இடம் கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டது. இந்த நிதியாண்டில் 2 வருவாய் கோட்டாட்சியர்களுக்கும், 2 வட்டாட் சியர்களுக்கும் மற்றும் 10 பிர்கா வருவாய் ஆய்வாளர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 10 வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புக்கள் கட்டும் பணி நிறைவேற்றப்பட்டவுடன், தமிழகத்திலுள்ள அனைத்து வரு வாய்த் துறை ஆய்வாளர்களுக்கும் குடியிருப்புக்கள் கட்டி முடிப் பதற்கான இலட்சியம் இந்த அரசினால் நிறைவேற்றப்படும்.

ஏற்கெனவே வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் 10 வட்டாட்சியர் அலுவலங்களில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட் டத்திலுள்ள உத்திரமேரூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலத்திற் கான கட்டிடம் கடந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு ஒப்படை



செய்யப்பட்டுள்ளது. 1991–92ஆம் நிதியாண்டில் கே. பரமத்தி வேலூர் மற்றும் இராதாபுரத்திலுள்ள வட்டாட்சியர் அலு வலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கும், மேலும் காங் கேயம், பென்னகரம், கந்தர்வக்கோட்டை மற்றும் ஏற் காட்டிலுள்ள வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கூடுதல் கட்டி டம் கட்டவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று 1992–93 நிதியாண்டில் மேலும் 2 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிதாகக்கட்டிடங்கள்கட்டவும் தற்போது அரசு கட்டிடத்தில் இயங்கி வரும் வட்டாட்சியர் அலு வலகங்களில், 5 இடங்களில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசினால் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் மீதமுள்ள 6 மாவட்டாட்சியர் அலு வலகங்களில் [அதாவது திண்டுக்கல்–அண்ணா, காமராஜர், பசும் பொன் முத்துராமலிங்கத்தேவர், சிதம்பரனார், திருவண்ணாமலை— சம்புவராயர் மற்றும் நாகப்பட்டினம்–காயிதேமில்லத்] குளிர் நீர் மின்வசதி கலன்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து மாவட்ட ஆட்சியர்அலுவலகங்களிலும், வரக்கூடியபொதுமக்கள்நன்மைக்கும் மற்றும் அங்கு வேலை பார்க்கும் அரசு அலுவலர்களின் நலன் கருதியும் குளிர் நீர் வசதி கலன்கள் அமைக்கும் பணி நிறைவு பெறுகிறது. இதே வசதியை ரூ. 12 இலட்சம் செலவில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கும், வட்டாட்சியர் அலுவல கங்களுக்கும், விஸ்தரிக்கும் பணி நிறைவேற்ற தீர்மானிக்கப் பட்டுள்ளது.

5. கிராம நிர்வாகம் :

14–11–1980-ல் அவசரச் சட்டத்தைப் (10/80) பிறப்பித்து கிராம நிர்வாகத்தை அரசு சீரமைத்தது, பஞ்சாயத்து நிர்வாகத்தைப் பலப்படுத்தும் பொருட்டு, 1,500 பேருக்குமேல் மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கு பஞ்சாயத்து உதவி யாளர் பதவிகளை 1–1–1991 முதல் அரசு தோற்றுவித் துள்ளது. 14–11–1980 அன்று பணியிலிருந்த பழைய கிராம அதிகாரிகளும், 1–1–1991 அன்று 60 வயது நிரம்பப் பெறாத வர்களும் புதிய அமைப்பில் கிராம நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப்படாதவர்களும் பஞ்சாயத்து உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிராம நிர்வாக அலுவலர்கள் 86,559 கள்ளச்சாராய நேர்வுகளைவட்டாட்சியர்களிடமும், காவல்துறைஉதவி ஆய்வாளர் களிடமும் புகார் செய்துள்ளனர். 1991 நவம்பர் திங்கள் வரை கிராமங்களில் கள்ளச் சாராய ஒழிப்பு நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவையாக உள்ளன. குறித்த இலக்கை எட்ட கிராம நிர்வாக அலுவர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

கிராமப் பணியாளர்கள் :

தமிழகத்தில் 31,302 கிராமப்பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களின் மதிப்பூதியத்தை ரூ. 577 லிருந்து ரூ. 592 ஆக உயர்த்தி வழங்கப்பட உள்ளது. மேலும் குடும்ப

நலப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டு வந்த ரூ. 40,000 ரூ. 60,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது (அரசாணை நிலை எண். 531, நிதி, நாள் : 19—7—1991).

## 6. நிலவரி :

ஒரு நிலத்தின் இனம், மண்வளம், தரம் ஆகியவைகளைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை வரியே நிலவரி என்பதாகும். நிலவரியின் மேல் விதிக்கப்படும் உள்ளூர் செஸ், மேல்வரி, கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி போன்றன நிலவரி மதிப்பீட்டில் ஒரு பகுதியாக அமைகின்றன. புஞ்சை நிலங்கள் அனைத்திற்குமான அடிப்படை வரி தள்ளுபடி செய்யப்பட்டது. இதே போன்று, 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவாக நன்செய் நிலம் வைத்திருப்போருக்கு, ஒருங்கிணைந்த நன்செய் தீர்வைகளிலிருந்து நிலவரி மட்டும் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது.

1989—90 மற்றும் 1990—91 ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சி, விவசாயிகளின் வகைமுறை வாய்ப்பினை குறைத்து விட்டது. இதன் காரணமாக அவர்களிடம் நிலவரி சுமுகமான முறையில் மட்டும்தான் வசூலிக்கப்பட்டுள்ளது. நிலவரி வசூலில் ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

தள்ளுபடி : வருவாய் அலுவலர் அவர்கள் பாதக சூழ்நிலைக் கேற்ப தனி நபர் உழவருக்கு, நிலவரியை ரத்து செய்கிறார்.

அசாதாரண சூழ்நிலைகளில், வழக்கத்திற்கு மாறுபட்ட இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் வறட்சி அல்லது பஞ்ச காலங்களில் பொதுவாக பயிருக்கு இழப்பு ஏற்படும் போது அரசு வரிவிதிப்பை தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறது அல்லது தள்ளுபடி செய்கிறது. அவ்வாறான நேர்வுகளில் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி பாக்கி மட்டும் தள்ளுபடி செய்யப்படுகிறது. அரசு கடன்களை வசூலிப்பது அடுத்த விளைச்சல் ஆண்டுக்கு தள்ளி வைக்கப்படுகிறது.

1399 ஆம் விளைச்சல் ஆண்டில் (1—7—90 முதல் 30—6—91 வரை) ஏற்பட்ட இயற்கை, பாதக சூழ்நிலையின் காரணமாக இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருநெல்வேலி கட்டபொம்மன், மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 1,08,35,524 க்கு (ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து ஐநூற்று இருபத்தி நான்கு மட்டும்) நிலவரி ரத்து செய்யப் பட்டது. மேலும், மேற்படி நான்கு மாவட்டங்களுக்குண்டான 1399 ஆம் விளைச்சல் ஆண்டில் வசூலிக்கப்பட வேண்டிய பாக்கி நிலவரி, உள்ளூர் வரி, இதர வரி மற்றும் அரசுக் கடன் பாக்கி ஆகியவற்றினை அடுத்த விளைச்சல் ஆண்டில் (1400) வசூல்செய்ய உத்திரவிடப்பட்டது.



1400 ஆம் விளைச்சல் ஆண்டில் (1—7—91 முதல் இன்று வரை) தமிழகத்தில் இயற்கைச் சூழ்நிலை சரியான படியுள்ளதால் நிலவரி ரத்து அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

## 7. பட்டா பாஸ் புத்தக திட்டம் :

1983 ஆம் வருட தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டம் 1986 ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு நில உரிமைதாரருக்கும் பட்டா பாஸ் புத்தகம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நிலங்களில் பயிர் செய்யும் நபர்களின் பெயர்கள், கூட்டுப் பட்டாதாரர்களின் பெயர்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ள பங்கு, பட்டாதாரர் செலுத்த வேண்டிய நிலவரி, செலுத்திய வரி விவரங்கள், நிலங்களின் மீதுள்ள வில்லங்கம்ஆகிய விவரங்களும் பட்டா பாஸ் புத்தகத்தில் காண்பிக்கப்படும். நிதி நிறுவனங்கள், நிலங்களின் மீது கடன் வழங்கும் போது, சம்பந்தப்பட்ட நிலத்தின் பட்டா பாஸ் புத்தகம் தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்த பட்டா பாஸ் புத்தகம் முதல் உடமைக்கு சட்டபூர்வமான ஆதார ஆவணமாகும். முதல் படியாக, இந்தச் சட்டத்தின் சில பிரிவுகள் 1—10—87 முதல் பரீட்சார்த்த முறையில், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருத்தணி வட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இத்திட்டம் முடிக்கப் பெறவில்லை. இச்சட்டத்தில் சில பிரிவுகள் மட்டும் உடனடியாக மாநிலம் முழுவதும் செயல்படுத்தலாம் என்று கருதப்பட் டுள்ளது. இத்திட்டம் செயல் படும் விதத்தை அரசு, நில நிருவாகத்துறையைக் கலந்து ஆய்வு செய்து வருகிறது.

## 8. நிலக்கொள்கை :

(அ) உரிமை மாற்றம் : அனைத்து பொது நிலங்களும் அரசுக்குச் சொந்தமானவை. அவற்றினை வருவாய்த்துறை நிர்வகித்து வருகிறது. மேற்படி நிலங்களை வருவாய் நிலை ஆணை 24ன் கீழ் பள்ளி, மருத்துவமனை, சாலை, உள்ளாட்சி நிறுவனத்திற்கு அலுவலகக் கட்டிடங்கள்கட்டுதல் போன்ற பொது நோக்கங்களுக்கு வழங்குவதற்கான நிலங்கள் இருக்குமானால், சூழ்நிலைக்கேற்ற வாறு முழு நிலக்கிரயம் அல்லது சலுகை அடிப்படையிலான நிலக்கிரயம் வசூல் செய்து கொண்டு அல்லது நிலக்கிரயமின்றி அரசு நில உரிமை மாற்றம் செய்கிறது. மேலும் இரயில்வே, பாதுகாப்புத் துறை போன்ற முக்கியமான மைய அரசுத் துறைகளுக்கு நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டு நிலம் வழங்கப்படுகிறது. சென்னை கடற்கரை-லஸ் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்கு நிலங்களை மாநில அரசு இலவசமாக வழங்கியுள்ளது.

2. அரசின் வசம் போதிய நிலங்கள் இல்லாததால் அரசு நிலங்களை மாநில அரசு மற்றும் மைய அரசுத்துறைகள், பொது மக்கள், தனியார் அமைப்புகள் மற்றும் பிறர் கோருவது பெருகி வரும் நிலையில், நீர்நிலை மற்றும் மேய்க்கால் புறம்போக்கு போன்ற நிலங்களை பாதுகாத்து உயிரின வாழ்க்கை சூழ்நிலை சமநிலைப்படுத்தும பொருட்டு அரசு நிலங்களை வழங்குவதில் சில வழிமுறைகளை வகுத்து தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழிமுறைகள்படி அரசு நிலங்கள், அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் மட்டுமே செய்யப்படல் வேண்டும். மைய அரசுத் துறைகள், மைய அரசு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் உள்ளிட்ட பிற இனங்களில் அரசு நிலம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். தொழில் வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக செய்யும் தொழிலின் தன்மையைப் பொறுத்து அரசு நிலங்கள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

**9. வீட்டுமனை வழங்குதல் :**

சமுதாயத்தில் பொருளாதார அடிப்படையில் நலிவுற்றவர்களின் நிலைதனை மேம்படுத்தவும், அவர்களது வசதிக்குறைவுகளை களையும் பொருட்டும், நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும், தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு அரசு வீட்டுமனைகளை வழங்குகிறது.

இத்திட்டத்தின்படி ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு கீழ் உள்ளவர்கள், இலவச வீட்டுமனை ஒப்படை பெறத் தகுதியுடையவர் ஆவர். நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், போரில் வீர மரணமடைந்த அல்லது இயலாமையில் உள்ள இராணுவ வீரர்கள் குடும்பத்தினர், முன்னாள் படை வீரர்கள், கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்டோர், இலங்கை மற்றும் பர்மா ஆகிய நாடுகளிலிருந்து அகதிகளாக தாயகம் திரும்பியோர் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள், ஆகியோருக்கு வீட்டுமனை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதன்படி மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு சென்ட் வீதமும், நகராட்சிப் பகுதிகளில் ஒன்றரை சென்ட் வீதமும், கிராமப் புறங்களில் மூன்று சென்ட் வீதமும் ஒப்படை வழங்கப்படுகிறது. சமுதாயத்தில் பெண்களின் நலன் கருதி குடும்பத்தில் மனைவி/பெண்டிர் பெயரில்தான் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தை நிறைவேற்றுதல் நீங்கலாக அரசு நிலங்களில் குடிசைகள் மற்றும் குடியிருப்புகள் மூலமாக உள்ள ஆட்சேபகரமற்ற ஆக்கிரமணங்களும் வரன்முறைப்படுத்தப்படுகின்றன. வீட்டுமனை ஒப்படைதாரர்கள் வீடு கட்டுவதற்கு கடன் வசதி பெறுவதற்காக அவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனையை தேசிய வங்கிகளில் அடமானம் செய்யலாம்.



இத்திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் குறியீடு நிர்ணயிக் கப்பட்டுள்ளது. அதற்கேற்ப 1990–91 ஆம் ஆண்டில் 3.25 இலட்சம் வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப் பட்டு, மார்ச்சு 1991 வரை 3,77,069 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1991—92 ஆம் ஆண்டில் உயரளவாக 3.75 இலட்சம் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 1992 பிப்ரவரி வரை 4,01,823 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஆதிதிராவிடருக்கு 1,51,215 மலைவாழ் பிரிவினருக்கு 2,546 மற்றும் பிறருக்கு 2,40,000) இது தவிர கடந்த 25 ஆண்டுகளாக 28,78,002 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளது.

**10. நில ஒப்படை :**

அரசு செயல்படுத்தி வரும் மற்றொரு சிறப்பான திட்டம் பயிரிடத்தக்க தரிசு நிலங்களை தகுதி வாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்வதாகும். ஒரு நபரின் ஆண்டு வருமானம் ரூ. 6,400-க்கு குறைவாக இருப்பின் அவர் ஏழை எனக்கருதி அவ்வாறு கணக்கிடும்போது குடும்பத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருந்தாலும் அதே வருமானத்தை கணக்கில் கொள்ள வேண்டும். பயிரிடத்தக்க தரிசு நிலங்களில் ஆட்சேபனையற்ற ஆக்கிரமணங்கள் இருப்பின் அதனை சிறப்பு இனமாகக்கருதி ஆக்கிரமணதாரரின் பொருளாதார நிலையை கணக்கில் கொண்டு சந்தை விலை நிர்ணயிக்கப் பட்டு ஒப்படை செய்யப்படுகிறது.

அரசு நிர்ணயித்துள்ள முன்னுரிமைப் பட்டியல் வரிசைப்படி தகுதியுள்ள நபர்களுக்கு நில ஒப்படை வழங்கப்படுகின்றது. இப்பட்டியலில் போரில் வீர மரணமடைந்த இராணுவத்தினரின் குடும்பத்தினரும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப் பைச்சார்ந்த நிலமற்றோரும் முதலிடம் பெறுகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங் களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் பரப்பும் அவர் ஏற்கனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து உயரளவு பரப்பு 3 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் நிலம் மட்டுமே ஒப்படை செய்யலாம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்கள் மிகவும் குறைவாகவும் உயர்ந்த மதிப்பும் வாய்ந்தவை என்பதால் இந்த உயரளவு ஒரு ஏக்கர் புன்செய் அல்லது அரை ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிலம் ஒப்படை பெற்ற 3 ஆண்டுகளுக்குள் பயிர் செய்யப் பட வேண்டும் எனவும் 10 ஆண்டு காலத்திற்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி உரிமை மாற்றம் செய்யவோ கூடாது எனவும் நிபந்தனைகளுடன் நிலங்கள் ஒப்படை செய்யப்படுகின்றன. இருப்பினும் பயிரிடுவதற்கு கடன் வாங்கும் பொருட்டு நிலங்களை வங்கிகளில் அடமானம் வைக்கலாம். ஆனால், நிலத்தை ஒப்படை பெற்றவரோ, அன்றி அவரது குடும்ப உறுப்பினர்களோ

அன்றி கூலி பெறும் தொழிலாளர்களைக் கொண்டேதான் நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக்கூடாது. ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டால் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்காமல் நிலத்தை மீண்டும் அரசு எடுத்துக் கொள்ளலாம்.

பொது தேவைகளுக்கு உரிய சமுதாய நிலங்கள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், கால்வாய், ஓடை மற்றும் நீர்ப்பரப்பு நிலங்கள் போன்ற அனைத்து நீர்வழிப்புறம் போக்குகளையும் மாட்டுத் தொழுவம், மந்தைவெளி மற்றும் மேய்க்கால் புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதிலிருந்து அரசு தடை விதித்துள்ளது. இயற்கைச் சூழல் சமன்பாட்டினை பாதுகாப்பதற்கும் நில அரிப்பினைத் தடுக்கவும் மாநிலத்தி லுள்ள அனைத்து மலைப்பிரதேசங்களிலும் வேளாண்மைக்கான நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. மேலும் ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளை அகற்றுவதன் மூலமாகவும் தகுதியான ஆக்கிரமிப்புக்களை வரன் முறைப்படுத்துவதன் மூல மாகவும் இம்மாநிலத்திலுள்ள மலைப் பிரதேசங்களில் இயற் கைச் சூழலின் சமன்பாட்டினை பாதுகாப்பதற்கான பல்வேறு அணுகுமுறைகள் இன்ன பிறவற்றைக் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை தர சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் தலைமையில் ஓர் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. நில ஒப்படைப்புக்கான ஆண்டு குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. 1991–92 ஆண்டின் குறியீடு 5000 ஏக்கர். பிப்ரவரி 92 வரை 5319.71 ஏக்கர் நிலம் 5521நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் 1136 பேர் ஆதிதிராவிடர் 9 பழங்குடியினர் 4376 பேர் பிற இனத்தினர். இதுவரை சுமார் 25 ஆண்டுகாலத்தில் 18,46,770.2 ஏக்கர் நிலம் 10,44 695 ஏழை எளியவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 11. நிலம் கையகப்படுத்துதல் :

1894ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின்படி (மையச் சட்டம் 1/1894) பொது நோக்கங்களுக்காகவும், தொழிற்சாலைகள் அமைக்கவும், தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தி வருகிறது. அரசின் பல துறைகளும், இரயில்வே துறை உள்ளிட்ட பல பொது நிறுவனங்களும் அவ்வாறு கையகப்படுத்திய நிலங்களை உரியவாறு பயன்படுத்தாமல் பல ஆண்டுகளாக வெற்று நிலமாக வைத்திருக்கின்றன என்பதை அரசு அறிந்துள்ளது. அவ்வாறு பயன்படுத்தப் படாத காலி நிலங்களின் விவரங்களைச் சேகரித்து, பின்னர் அந்நிலங்களைத் திரும்பப் பெற்று வேறு பொது நோக்கங் களுக்காகவும் அல்லது ஏழை எளியவருக்காகவும் ஒதுக்கீடுசெய்வது பற்றி அரசு ஆய்வு செய்து வருகிறது.

மேலும் தற்போது நாட்டின் நிலவும் சமுதாயப் பொருளா தார நிலைகளில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைக் களையும் பொருட்டு, அரசு மேற்கொள்ளும் திட்டங்களின் பலன்கள்



விரைவில் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்குச் சென்று அடைவதில் இடையில் வரும் தடைகளைக் கண்டிப்பாக அகற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நிலம் கை யகப்படுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்து நில உடைமையாளர் கள் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்வதைத் தடை செய்யும் வகையில் இந்திய அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணையில் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தைச் சேர்க்க மைய அரசினைக் கேட்டுக்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது.

## 12. நிலச் சீர்திருத்தம்:

விவசாய நிலங்கள் சிலரது வசம் குவிந்து அதன் மூலம் விவசாய நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதற்காக 1961ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது. இச்சட்டம் 6—4—1960-ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. தற்பொழுது 5 அல்லது அதற்கும் குறைவான பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்ச வரம்பு 15 தர ஏக்கர் என்றும், குடும்பத்தின் மொத்த உச்சவரம்பு தற்போது 30 தர ஏக்கர் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு 3 ஏக்கர் புன்செய் அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் நிலம் என்ற அளவில் 1965ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின் கீழ் தகுதியுடையோருக்கு ஒப்படை செய்யப்படுகின்றது. 29–2–1992 ஆம் நாள் வரையில் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு :–

| | ஏக்கரில். |
|---|---|
| (1) மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிகரப் பரப்பு (ஒப்படை நடவடிக்கைகளுக்கு முன்பும் பின்பும் நீக்கரவு செய்யப்பட்ட பரப்பு நீங்கலாக) | 1,80,760 |
| (2) ஒப்படை நடவடிக்கைக்கு முன்பும் பின்புமாக தடையாணையின் கீழ் உள்ள பரப்பு | 25,989 |
| (3) மிகை நிலமாக அறிவிக்கப்பட்டபின் ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பின் விவரம்.— | |
| (அ) 1965ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோக) விதி களின் விதி 13-இன் கீழ் பொது நலனுக் காக ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு | 9,976 |
| (ஆ) 1965ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின் கீழ் ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு மற்றும் பயனடைந்தோர் விவரம்.— | |

| பயனடைந்தோர் (இனவாரியாக) | நபர்கள் | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆதிதிராவிடர் .. .. .. | 54,733 | 57,983 |
| பழங்குடியினர் .. .. .. | 97 | 148 |
| ஏனையோர் .. .. .. | 65,082 | 86,651 |
| மொத்தம் | 1,19,912 | 1,44,782 |

மிகை நிலமாக அரசு ஏற்றுக் கொண்ட அனைத்து நிலங்களும் தகுதிபடைத்தோருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட மிகை நில ஒப்படை பெற்றவருக்கு நிதி உதவி செய்யும் திட்டம்.

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட மிகை நிலங்களை ஒப்படை பெறுவோருக்கு மத்திய நிதி உதவி அளிக்கும் திட்டத்தை 1975-ஆம் ஆண்டு முதல் மைய அரசு செயல்படுத்தத் தொடங்கியது. மிகை நில ஒப்படை பெறுவோர்களில் பெரும்பான்மையோர் ஆதி திராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர்களாக இருப்பதால், உடனடியாக விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வாங்குவதற்கான நிலைமையில் இல்லாதவர்களாக இருக்கக் கூடும் எனக் கருதப்பட்டது. மேலும், பொதுவாக ஒப்படை செய்யப்படும் மிகை நிலங்கள் வெற்று நிலங்களாகவோ மற்றும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையிலோ இருக்கும். இந்தத் திட்டம் இக்காரணங்களால் குறுகிய மற்றும் நீண்ட கால நிதி உதவிக்காக கொண்டு வரப்பட்டது.

மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்படி நிதி உதவியாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினை மைய அரசும் மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்திற்குள்ளேயே தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்குவதற்கு தனியாக வகை செய்யப்பட்டுள்ளது. 80 விழுக்காடு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உரமாகவும் மீதம் 20 விழுக்காடு ரொக்கமாகவும் அளிக்கப்படுகின்றது.



நிதி தேவைகள் குறித்து விளக்கங்கள்.— 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை எய்திய திட்ட இலக்கு.—1991–92 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 34.00 லட்சத்தில் 29–2–1992 வரை ரூ. 31.92 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மீதித் தொகை 31–3–1992-க்குள் செலவிடப்படும்.

1985–86 ஆம் ஆண்டிலிருந்து 1990–91 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு மிகை நிலங்களால் பயனடைந்தோரின் விபரம்.

| பயனடைந்தோர் இனம். | பயனடைந்தோரின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 1985–86 | 1986–87 | 1987–88 |
| (1) | (2) | (3) | (4) |
| ஆதி திராவிடர் .. | 1,428 | 982 | 1,152 |
| பழங்குடியினர் .. | 2 | 7 | .. |
| ஏனையோர் .. | 1,190 | 1,009 | 1,635 |
| மொத்தம் .. | 2,620 | 1,998 | 2,787 |

| பயனடைந்தோர் இனம். | பயனடைந்தோர் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | 1988–89 | 1989–90 | 1990–91 |
| (1) | (5) | (6) | (7) |
| ஆதி திராவிடர் .. | 1,904 | 5,926 | 1,917 |
| பழங்குடியினர் .. | 9 | 4 | .. |
| ஏனையோர் .. | 1,334 | 2,487 | 1,908 |
| மொத்தம் .. | 3,247 | 8,417 | 3,825 |

1991–92 ஆம் ஆண்டிற்கான இலக்கு.

1991–92 ஆம் நிதியாண்டில், 2500 ஏக்கர் மிகை நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 4,125 ஏக்கர் நிலம் கீழ்க்கண்டவாறு 29–2–1992 முடிய ஒப்படை செய்யப்பட்டுள்ளது:—

| | எண்ணிக்கை. | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| (1) ஆதி திராவிடர் .. | 1,480 | 1,256 |
| (2) பழங்குடியினர் .. | . | .. |
| (3) மற்றவர் .. | 2,371 | 2,869 |
| மொத்தம் .. | 3,851 | 4,125 |

எட்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 2,500 ஏக்கர் வீதம் 12,500 ஏக்கர் மிகை நிலங்களை ஒப்படை செய்வதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குடிவாரச் சட்டங்கள்.

*1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகை தாரர்கள் பாதுகாப்புச் சட்டம். (தமிழ்நாடு சட்டம் 25/1955)*

இந்தச் சட்டத்தின்படி எந்த ஒரு பயிரிடும் குத்த கைதாரரும் குத்தகைப் பணத்தை சரிவரச் செலுத்தாத நிலையிலும், நிலத்திற்கோ அல்லது மற்றும் அதிலுள்ள பயி களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செ தாலும், நிலத்தை சாகுபடி செய்யாமல் இருக்கும் நிலை யிலும், விவசாயத்தைத் தவிர்த்த மற்ற காரியங் களுக்கு நிலத்தைப் பயன்படுத்தும் நிலையிலும், நில உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை எந்த ஒரு பட்சத் திலும் மறுக்கும் வகையில் செயல்புரியும் நிலையிலும் தவிர, நிலத்திலிருந்து வெளியேற்றப்பட இயலாது. எந்த நில உடைமையாளரும் (ஆயுதப் படையினரைத் தவிர) மேலே குறிப்பிட்ட காரணங்களின்றி, மற்ற காரணங்களுக்காக, குத்தகைதாரரிடமிருந்து தங்களுடைய நிலத்தை மீளப் பெறமுடியாது. நில உரிமையாளர்களுக்கும் பொது நம்பகங் களுக்கும் மற்றும் குத்தகைதாரர்களுக்கும், ஏற்படக்கூடிய வழக்குகளைத தீர்தது வைக்க, ஐந்து வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடைமுறையில் உள்ளன. மேலும் ஆறு வருவாய் நீதிமன்றங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு அவை மன்னார்குடி, திருவாரூர், கும்பகோணம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் லால் குடி ஆகிய இடங்களில் செயல்படவுள்ளன.



*1990 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரணச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம், 38/1990).*

இம்மாநிலத்தில் கடும வறட்சியாலும், புயலாலும், வெள் ளத்தாலும் பாதிக்கப்பட்ட பயிரிடு குத்தகைதாரர்களைப் பாதுகாக்க 1989 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (நில வெளியேற்றத்திலிருந்து பாதுகாத தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 41/89) இயற்றப்பட்டு, குத்தகைப் பாக்கிகளைச் செலுத்த 31-3-1990 வரை அவ காசமளித்தும், நில வெளியேற்றத்தைத் தடை செய்யவும் நிலத்தினின்று வெளியேற்றப்பட்டவர்கள் மீண்டும் நிலத்தைப் பெறவும் உரிமை அளிக்கப்பட்டது. அச்சட்டம் 31-3-1990 உடன் காலங்கடந்த பிறகு, அரசு 10-10-1990 நாளிட்ட அரசிதழில் வெளியிட்ட 1990-ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரணச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/90)- இன் படி 1-7-1989 முதல் 30-6-1990 முடிய நடப்புப் பசலிக்கால குத்தகை முழு வதையும் 30-6-1989 நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்கும், அதற்கு முந்தைய காலத்திற்குமாக, மொத்த நிலுவை குத்தகைப் பாக்கியில், நான்கில் ஒரு பங்கையும் (வட்டி யின்றி) 31-3-1991 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தினால், அல்லது 31-3-1991 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடப்பு ஆண்டுக் குத்தகை முழுவதையும் மற்றும் 30-6-1989 நாளன்றோ, அல்லது முன்னரோ நிலுவையி லுள்ள மொத்தக் குத்தகையில் மூன்றில் ஒரு பங்கை (வட்டி யின்றி) ஐந்து சம ஆண்டுத் தவணைகளில் முதல் தவணை யினையும் செலுத்தினால், பழைய குத்தகைப் பாக்கிகளை செலுத்துவதனின்றும் பயிரிடு குத்தகைதாரர்கள் விடுவிக்கப் படுகின்றார்கள் என்றும், 1-4-1990-க்குப் பிறகு குத்தகைப் பாக்கிக்காக நில வெளியேற்றம் செய்யப்பட்டவர்கள் 10-10-1990-லிருந்து மூன்று திங்களுக்குள் மீண்டும் மனு கொடுத்து நிலத்தை மீட்டுக் கொள்ளவும் வழிவகை செய் யப்பட்டது. மேலே கூறிய குத்தகைப் பாக்கிகளைச் செலுத்த 10-10-1990-லிருந்து இரண்டு மாதங்களுக்குள் எழுத்து மூலமாக விருப்பம் தெரிவிக்க வேண்டும் என்றும், கூறப் பட்டுள்ளது. இக்கால வரையறை 10-12-1990 முதல் மேலும் இரண்டு திங்களுக்கு தமிழ்நாடு பயிரிடு குத்தகை தாரர்கள் குத்தகை நிலுவை (நிவாரண) திருத்த அவசரச் சட்டம் 10/90 மூலம் நீட்டிக்கப்பட்டது. இவ் அவசரச் சட்டம் 9-12-1990 நாளிட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டது. இதனால் பயிரிடு குத்தகைதாரர்கள் 9-2-1991 வரை தங் களது விருப்பத்தினை எழுத்து மூலமாகத் தெரிவிக்கலாம். மேற்குறிப்பிட்ட சலுகை மீண்டும் நீட்டிக்கப்படவில்லை. அவ்வாறு விருப்பம் தெரிவித்தது முடிவானதாகும். குத்தகை பாக்கியின் காரணமாக குத்தகை சாகுபடிதாரரை நிலத்தை விட்டு வெளியேற்ற வெளியிடப்பட்ட நடவடிக்கை

[1992 மார்ச் 19

31—3—1991 வரை நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதியில், உத்தரவோ அல்லது நடவடிக்கையோ குத்தகைதாரரிடமிருந்து குத்தகைத் தொகையை வசூலிக்கவோ அல்லது நிலத்தை விட்டு வெளியேற்றவோ வழக்கு நிலுவையிலிருக்குமானால், அந்த சமயத்தில் அதை தள்ளுபடி செய்ய குத்தகைதாரர், நடைமுறையாண்டு மற்றும் நிலுவைத் தொகையை வைப்புத் தொகையாக செலுத்த படிவம் 11-இல் விண்ணப்பிக்கவேண்டும். 1-4-1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ இச்சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பும் எந்த ஒரு விவசாய குத்தகைதாரர் குத்தகை செலுத்தாததற்காக வெளியேற்றப்பட்டால், அவர் வெளியிடப்பட்ட நாளிலிருந்து (அதாவது 10—10—1990) மூன்று மாதங்களுக்குள் படிவம் IV-இல் விண்ணப்பம் செய்தால் அந்நிலங்களை திரும்பப்பெறவும் எல்லா உரிமைகளுடன் வைத்துக்கொள்ளவும் தகுதியுடையவராவார். குத்தகைதாரர்கள் பாக்கித் தொகைகளைச் செலுத்துவதற்கு நல்ல சூழ்நிலை உள்ளது. நிலச்சொந்தக்காரர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் தகராறுகளை தீர்ப்பதற்கு மேலும் ஆறு புதிய வருவாய் நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கால நீட்டிப்பு வழங்குவது நடைமுறையில் இல்லை.

1956-ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1956).

இச்சட்டத்தின்படி, குத்தகைதாரர்களால் நிலச் சொந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய குத்தகை தொகையானது தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களாக இருந்தாலும் ஆண்டொன்றில் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு ஆகும். அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின் மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர் செலுத்துவார். ஆனால், விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடும் குத்தகைதாரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1961-ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது நிறுவனங்கள் (வேளாண்மை நிலங்களில் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 57/61.

தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களில் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

எந்த ஒரு பொதுப் பொறுப்புக் கழகமும் தன்னுடைய சொந்தச் சாகுபடிக்கு 20 தர ஏக்கர் வரை நிலத்தினை வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேலுள்ள நிலத்தினை உண்மையாக பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகைக்கு விட வேண்டும்.



1992 மார்ச் 19]

1969-ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம்.

இச்சட்டம் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காகவும், அதுபற்றி விசாரித்து அக்கூலி விகிதங்களை மாறுதல் செய்வதற்காகவும் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் நெல் பயிரிடும் நிலங்களுக்கு மட்டும் பொருந்தும். நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட 11 வட்டங்களுக்கு மட்டுமேஇச்சட்டம் பொருந்தும்.

1. மன்னார்குடி
2. திருத்துறைப்பூண்டி
3. மயிலாடுதுறை
4. சீர்காழி
5. நன்னிலம்
6. நாகப்பட்டினம்
7. திருவாரூர்
8. வேதாரண்யம்
9. நீடாமங்கலம்
10. தரங்கம்பாடி மற்றும்
11. கொடவாசல்.

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் உழவுத் தொழிலாளர்களுக்கு அரசு ஆணை பல்வகை எண். 468, வருவாய் நாள் 3—4—1989ன்படி) வழங்கத்தக்க ஊதியங்கள் விவரம் பின்வருமாறு :

(1) உரிய வயது வந்தோர் :—

| | |
|---|---|
| (அ) உழுதல், விதைத்தல், செப்பனிடுதல், நிலங்களையும், வாய்க்கால்களையும் பராமரித்தல், விதைப்பதற்கும் நடவு நடுவதற்கும் நிலத்தைத் தயார் செய்தல், இடுபொருட்களையும் விளைச்சல் பொருட்களையும் தலைச்சுமையாக எடுத்துச் செல்லுதல். | நாளொன்றுக்கு 7 லிட்டர் நெல்லுடன் ரூ. 6.90 அல்லது ரூ. 16. |
| (ஆ) நாற்று பிடுங்குதல் மற்றும் நடுதல் | நாளொன்றுக்கு லிட்டர் நெல்லுடன் ரூ. 6.90 அல்லது ரூ. 16. |
| (3) களையெடுத்தல் | நாளொன்றுக்கு 7 லிட்டர் நெல்லுடன் ரூ. 4.90 அல்லது ரூ. 14. |

2. உரிய வயதடையாதவர்கள் :

| | |
|---|---|
| அனைத்து வகை வேளாண்மைத் தொழில்களுக்கும் | நாளொன்றுக்கு 4 லிட்டர் நெல் லுடன் ரூ. 2.80 அல்லது ரூ. 8. |

உழுதல் தவிர ஏனைய வேளாண்மைப் பணிகளுக்குரிய வேலை நேரம் நாளொன்றுக்கு 7 மணி நேரமாகும். உழவுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு 5 மணி நேரமாகும். இச்சட்டத்தை விலக்கி, 1948-ஆம் ஆண்டைய குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தை தமிழ்நாடு முழுவதும் சீரான முறையில் செயல் படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம்.

தமிழ்நாட்டில் நிலச் சொந்தக் காரர்களிடம் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களது பெயரினை பதிவு செய்வதற்காக இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, வட்டாட்சியர், பதிவு அலுவலராவார். அவர் பயிரிடும் குத்தகை தாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக குத்தகை உரிமை பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். பதிவு அலுவலர் தன்னிச்சை நடவடிக்கை எடுத்து, குத்தகைதாரர்களைப் பதிவு செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. வட்டாட்சியருக்கு உதவி புரிவதற்காக அலுவல் சார்பற்ற குழுக்கள் அமைக்க சட்டப்பிரிவு '' 5-ஏ '' இல் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த குழுவில் நிலமற்ற ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த ஒருவரும், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவரும் மற்றும் சமூக நல ஊழியர்கள் மூவரும் உறுப்பினர்களாக இருப்பர். இத்தகைய குழுக்கள் தற்சமயம் 57 வட்டங்களில் இயங்குகின்றன இக்குழுவின் பதவிக்காலம் முடிந்து விட்டது. ஆனால் புது உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படும் வரை ஏற்கனவே உள்ள உறுப்பினர்கள் தொடர்ந்து குழுவில் இருந்து வருகின்றனர். மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்து ஆலோசனை செய்து குழுக்களுக்கு புது உறுப்பினர்களை விரைவில் நியமனம் செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 29—2—1992 வரை 4,97,312 நபர்கள் பயிரிடும் குத்தகைதாரர்களாக, 6,92,951 ஏக்கருக்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவற்றின் விவரம் வருமாறு :

| இனம் | குத்தகைதாரர்களாகப் பதியப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|
| 1. ஆதிதிராவிடர் | 1,74,918 |
| 2. பழங்குடியினர் | 772 |
| 3. ஏனையோர் | 3,21,622 |
| மொத்தம் .. | 4,97,312 |





1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை, உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71).

இச்சட்டம் குடியிருப்புகளில் அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை அளிக்கின்றது. அதன்படி 19—6—1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்தவர் உரிமையாளராக இருப்பர். இக்குடியிருப்பு வில்லங்கம் எதுவுமின்றி அவரிடமே நிலை பெற்று இருக்கும்.

தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம், 1976 (தமிழ்நாடு சட்டம் 38/76) இன்படி குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் 1—7—1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு உடைமை உரிமை வழங்க இச்சட்டம் வகை செய்கின்றது.

தமிழ்நாடு குடியிருப்பு சட்டங்கள் சார்ந்த திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/90) மூலம் குடியிருப்பு அனு போகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களுக்கு 1—4—1990 வரை காலக்கெடுவை நீட்டி, 1—4—1990 அன்று குடியிருப்பு அனுபோகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களும் குடியிருப்பு பட்டா பெற்று பயன்பெற வகைசெய்யப் பட்டுள்ளது.

29—2—1992 ஆம் நாள் வரையில் வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் விபரம் பின்வருமாறு :

| இனம். | நபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 40/71 | 38/76 | 39/90 |
| ஆதிதிராவிடர் | 99,010 | 43 | 571 |
| பழங்குடியினர் | 2,209 | 15 | .. |
| ஏனையோர் | 79,026 | 349 | 386 |
| | 1,80,245 | 407 | 957 |

[1992 மார்ச் 19

இச்சட்டத்தின் கீழ் நிலுவையிலுள்ள இனங்கள் :

| | | |
|---|---|---|
| 958 | 405 | 5,994 |

சட்டம் இயற்றுதல் :

1958 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் வரையிலான காலத்தில், மிகை (உபரி) நிலங்களை, விற்பனை, கொடை, ஒப்படைவு, ஏற்பாடு, பாகப்பிரிவினை ஆகியவற்றில் எந்த வகையிலேனும் அல்லது பிற எந்த வகையிலேனும் செய்யப் பட்ட நில உரிமை மாற்றங்கள் அனைத்தையும் சட்டப்படி செல்லாதவையாக ஆக்கும் வகையிலும், நிலமற்ற ஏழைகளுக்கு அந்த நிலங்களை வழங்கவும், 1991 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப் பட்டு 3—10—1991 அன்று நிறைவேற்றப்பட்டது.

இந்தப் புதிய சட்ட முன்வடிவு 24—10—1991 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

உழுபவனுக்கே நிலத்தை உரிமையாக்கும் சட்ட முன்வடிவு அரசின் பரிசீலனையில் உள்ளது.

13 நகர்ப்புற நில உச்சவரம்பு :

ஒரு சில நபர்களிடம் நிலம் குவிந்திருப்பதைத் தடுக்கவும், நகர்ப்புறக் கூட்டுப்பகுதியில் உள்ள நிலங்களை சமமாகப் பங்கிட்டு வழங்கவும், 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப் புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், கொண்டுவரப்பட்டது அது சென்னை, மதுரை, கோயம் புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு நகர்ப்புறக் கூட்டுப்பகுதிகளில் 3-8-1976 முதல் செயல்படுத்தப்படுகிறது.



1992 மார்ச் 19]

கீழே குறிப்பிட்டுள்ள நகரக் கூட்டுப்பகுதியில், ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட ஒருவரோ, ஒரு குடும்பமோ, ஒரு தொழில் நிறுவனமோ நிலம் வைத்துக் கொள்ள அனுமதிக் கப்பட்ட உச்சவரம்பின் விவரம் வருமாறு :—

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத் துதல்) சட்டம், 1978. (தமிழ்நாடு சட்டம் 24/1978)

| நகரக் கூட்டுப்பகுதி. | வகைப் பாடு. | தனிப் பட்ட ஒருவர். | ஒரு குடும் பம். | தொழில் நிறுவனம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ச. மீட்டர். | ச. மீட்டர். | ச. மீட்டர். |
| சென்னை .. | I | 500 | 2,000 | 2,000 |
| மதுரை .. <br> கோயம்புத்தூர் .. <br> திருச்சிராப்பள்ளி <br> சேலம் .. | II | 1,500 | 3,000 | 3,000 |
| திருநெல்வேலி .. | III | 2,000 | 4,000 | 4,000 |

சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகை நிலங் கள், முன்னுரிமை அடிப்படையில், அரசால் கீழ்க் கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது :

(1) மாநில அரசுத் துறைகள்.

(2) மாநில அரசின் கீழ் உள்ள நகராட்சி மன்றங்கள், மாநகராட்சிகள் மற்றும் பொது நிறுவனங்கள்.

(3) மத்திய அரசுத் துறைகள்.

(4) மத்திய அரசின் கீழ் உள்ள கூட்டு நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள்.

(5) வீட்டுவசதி நிறுவனங்கள்.

(6) தொழிற்சாலைகள்.

(7) தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்.

(8) பிற நிறுவனங்கள், நிலையங்கள்.

(9) தனியார்கள்.

இதுவரை மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்திய வெற்று நிலங்களில், 202 ஹெக்டேர், 17 ஏர், நிலங்களை, அரசுத் துறைகள், அரசுக் கழகங்கள், வீட்டு வசதி வாரியம், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு, 1992 பிப்ரவரி 29 வரை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. நிலத்தின் மதிப்பு, நில ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களிடமிருந்து அரசால் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் வசூலிக்கப்படுகிறது.

தொழிற்சாலைகள் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் விலக்குக்கோரி சமர்ப்பித்த மனுக்களில் எவ்வளவு விரைவில் ஆணை பிறப்பிக்க இயலுமோ, அவ்வளவு விரைவில் அரசு ஆணை பிறப்பித்து உதவவேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளது. தொழில் விரிவாக்கத்திற்கு வசதி செய்து தருவதற்காக விலக்கு மனுக்கள் அனைத்திலும் தகுதி அடிப்படையில் பரிசீலித்து அரசு ஆணை பிறப்பிக்கிறது.

நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயல்படுத்தப்படும் இடங்களிலெல்லாம், நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தையும் செயல்படுத்தலாம் என்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 14. 1966-ம் ஆண்டைய தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம்.

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், சென்னை நகரில் 1—7—1963 முதலும், மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகரங்களில் 1971-ஆம் ஆண்டு முதலும், சென்னை புறநகர் பகுதிகளில் 1975-ஆம் ஆண்டு முதலும் அமுல் செய்யப்பட்டது. இப்பகுதிகளில் 1—7—71 ஆம் நாளைய சந்தை மதிப்பீட்டில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்படுகிறது. பின்னர் இச்சட்டம், திருநெல்வேலி நகருக்கும், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோவை நகரங்களில் நீட்டிக்கப்பட்ட பகுதிகளுக்கும் 1981-ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் 1—7—1981-ஆம் நாளைய சந்தை மதிப்பீட்டில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. 1966-ஆம் ஆண்டைய நகர்ப்புற நிலவரிச் சட்ட திருத்தச் சட்டம் 1992ன்படி இச்சட்டத்தினை கீழ்க்கண்ட சிறப்பு நிலை



மற்றும் தேர்வுநிலை நகராட்சிகளான ஈரோடு, பொள்ளாச்சி, தஞ்சாவூர், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், உதகமண்டலம், திண்டுக்கல், கரூர், நாகர்கோவில், கும்பகோணம், கடலூர் புதுக்கோட்டை, காஞ்சிபுரம், விழுப்புரம், மயிலாடுதுறை, உடுமலைப்பேட்டை, பழனி, காரைக்குடி, ராஜபாளையம், நாமக்கல், மற்றும் கொடைக்கானல் மேட்டூர், நகரியங்கள் ஆகியவைகளுக்கு 1—7—1991 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. தற்போது நீட்டிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் ஏற்கனவே நகர்ப்புற நிலவரி விதிக்கப்பட்டுள்ள நகரங்களுக்கும், 1—7—1981-ஆம் நாளைய சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் நகர நிலவரி நிர்ணயம் செய்யப்படுகிறது.

இச்சட்டத்தின் பிரிவு 29-இன் கீழ் பொது வழிபாட்டிற்கு உபயோகப்படும் நிலங்கள், மத்திய மாநில அரசுகளால் நிதி உதவி பெறும் ஆஸ்பத்திரிகள் இறந்தவர்களை எரியூட்டும் மற்றும் புதைக்குமிடம், பொதுமக்கள் உபயோகிக்கும் பாதை மற்றும் பொதுமக்கள் உபயோகப்படுத்தும் நிலங்கள், மாநில அரசால் அங்கீகாரம் பெற்ற பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் பல்கலைக் கழகங்கள், பூங்கா, நூலகம், மற்றும் அருங்காட்சியகம், அனாதை இல்லங்கள், காதுகேளாதோர், மற்றும் ஊமைகள் ஊனமுற்றோர் பள்ளி, முதியோர் மற்றும் வாழ்விழந்த மகளிர் இல்லம் உள்ள நிலங்களுக்கு தன்னியல்பு வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

தர்மஸ்தாபனம் மற்றும் பொது அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் இடர்பாடு இருப்பின் அரசு பிரிவு 27(1)-ல் கீழ் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கிறது. 1975-ல் நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்கீழ் அரசு ஆணை எண். 2625, வருவாய்த்துறை, நாள், 27—12—1976ல் அரசு பல சலுகைகளை அளித்தது. அதன்படி 1—7—1971-ம தேதி சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படும் விவரம் கீழ்வருமாறு :—

| | சென்னை புற நகர்ப்புறப் பகுதி தவிர ஏனைய நகர்ப்புறங்களில் உள்ள நிலங்கள். | | சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள நிலங்கள். | |
|---|---|---|---|---|
| 1. | முதல் இரண்டு மனைகள். | வரியில்லை. | முதல் 3 மனைகள் | வரியில்லை. |
| 2. | இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள். | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள். | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |

[1992 மார்ச் 19

| | | | |
|---|---|---|---|
| 3. ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள், | 1% | ஏழுமனைக்கு மேல் பத்து மனைக்குள். | 1 „ |
| 4. பத்து மனைக்கு மே இருபது மனைக்குள். | 1.5% | பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள். | 1.5% |
| 5. இருபது மனைக்கு மேல். | 2% | இருபது மனைக்கு மேல். | 2% |

மேலும் சிறுதொழில் சான்றிதழ் பெற்றுள்ள தொழிற் கூடங்களுக்கு 25 சதவீதம் வரிச்சலுகையும், ஏனைய தொழிற்கூடங்களுக்கு 10 சதவீத வரிச்சலுகையும் சங்கீத நாடக சபாக்களுக்கு 50 சதவீத வரிச்சலுகையும், திரையரங்குகளுக்கு 10 சதவீத வரிச்சலுகையும் 1971-ம் ஆண்டைய தமிழ்நாடு குடிசை குடியிருப்பு ஒழிப்பு சட்டத்தின் பிரிவு 3(பி) கீழ் குடிசைக் குடியிருப்பாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரியிலிருந்து விலக்கும் வழங்கப்பட்டுள்ளது.

31—12—1991 வரை மேற்கூறிய அரசாணைப்படி வரி விதிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :—

| சட்டம். | இனங்களின் எண்ணிக்கை. | ஒரு பசலி ஆண்டுக்கான வரித் தொகை. (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1971 | 38,789 | 129.90 |
| 1972 | 17,178 | 77.72 |
| 1975 | 50,217 | 306.64 |

## 15. வேளாண்மை வருமான வரி

வேளாண்மை வருமானத்தின் மீதான வரி இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், அஸ்ஸாம் மற்றும் திரிபுரா ஆகிய ஏழு மாநிலங்களில் விதிக்கப்படுகிறது.



1992 மார்ச் 19]

தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டம் 1955-ன் படி மலைத் தோட்டப் பயிர்களின் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு மட்டுமே வரி விதிக்கப்பட்டது. பின்னர் 1958-ல் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டத்தின்படி மலைத் தோட்டப் பயிரல்லாத பயிர்களின் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கும் வரி விதிக்கப்பட்டது.

திருத்திய சட்டம் 40/91-ன்படி சிறு விவசாயிகளின் நலன் கருதி மலைத் தோட்டம் அல்லாத பயிர்களுக்கு வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுவது 1—4—1992 முதல் நீக்கப்படுகிறது. மலைத் தோட்டப் பயிர்களுக்கு வரி விலக்கு வரம்பு ரூ. 10,000 லிருந்து ரூ. 22,000 ஆக உயர்த்தப்பட்டது. ஒட்டு மொத்த வரி செலுத்தும் முறை ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து சாதாரண ஏக்கருக்கு மாற்றப்பட்டு, எட்டு சாதாரண ஏக்கர் வரை வரி விலக்கு அளிக்கப்பட்டு, ஒட்டு மொத்த வரி செலுத்தும் முறையின் உச்ச வரம்பு 40 ஏக்கரிலிருந்து 50 ஏக்கராக உயர்த்தப்படுகிறது. இது சுமார் 45,000 சிறு விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்களில் உள்ளதைப்போல் வரி கணிக்கப் பெறுபவரால் வரிக் கணிப்பை தன் மதிப்பீடு செய்து கொள்வதற்கும் வரி கணிக்கப் பெறுபவரால் முன்னதாக வரி செலுத்துவதற்கும் வகை செய்யவும் கூட கருதப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய மாற்றங்களுக்கு திருத்தம் கொண்டுவருவதற்கான மசோதா சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி (திருத்தச்) சட்டம் 1991 (சட்டம் 40/91) எண். 511, நாள் 28—10—1991 அரசிதழில் வெளியிடப்பட்டது. இத்திருத்த மசோதா 1—4—1992 முதல் அமுலுக்கு வருகிறது. வர்த்தக நிறுவனங்கள் பதிவு செய்வது சம்பந்தமாக திருத்தங்கள் வெளியிடுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

வேளாண்மை வருமான வரியின் மீதான கேட்பு, வசூல் மற்றும் நிலுவை அறிக்கை பின் வருமாறு :—

| ஆண்டு | கேட்பு | வசூல் | நிலுவை | விகிதாச்சாரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் கோடியில்) | | சதவீதம் |
| 1986–87 | 14.10 | 10.07 | 4.08 | 71.4 |
| 1987–88 | 10.58 | 6.71 | 3.86 | 64.08 |
| 1988–89 | 10.83 | 6.82 | 4.01 | 62.9 |
| 1989–90 | 13.44 | 9.06 | 4.38 | 67.4 |
| 1990–91 | 23.37 | 18.45 | 4.92 | 78.9 |
| 1991–92 15–2–1992 வரை) | 27.69 | 24.41 | 3.18 | 88.15 |

1991–92-ல் கேட்பு மற்றும் வசூல் முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூ. 4 கோடி உயர்ந்துள்ளதைக் காணலாம். 15—2—1992—தேதி வரையில் வசூல் சதவிகிதம் 88.15 ஆக உள்ளது. நிலுவை முழுவதும் 1992-ம் வருடம் மார்ச் 31 தேதிக்குள் வசூலிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 16. மரத்திற்கான பட்டா வழங்கும் திட்டம்.

இம்மாநிலத்தில் மரத்திற்கான பட்டா வழங்கும் திட்டம் பல்லாண்டுகளாக செயலிலுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு புறம்போக்கில் உள்ள மரங்களின் இலைகள் மற்றும் கனிகளை பயன்படுத்துவதற்குரிய உரிமம் மட்டும் அண்டை நிலச் சொந்தக்காரர்களுக்கோ அல்லது மரத்தை பராமரிக்கக் கூடியவர்களுக்கோ வழங்கப்படுகிறது எனினும் மரம் மற்றும் நிலத்தின் மீதுள்ள உரிமை அரசிடம் தொடர்ந்து இருக்கும்.

தட்ப வெப்ப நிலையை பராமரிக்கவும் மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை மக்கள் அறியச் செய்யவும் தற்போதுள்ள நிலையைவிட மேலும் தமிழ்நாட்டை பசுமையுறச் செய்யவும் எங்கெல்லாம் மரம் வளர்க்க முடியுமோ அங்கெல்லாம் மரம் வளர்க்கவும் மரம் வளர்ப்பவர்களுக்கு 2சி பட்டா உரிமம் வழங்கவும் ஒவ்வொரு கிராம நிருவாக அலுவலர்/வருவாய் ஆய்வாளரும் இவ்வளவு மரம் வளர்க்க வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இப்பணியைக் கண்காணிக்கவும், கன்றுகளின் நிலையை அறியவும் அவற்றைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது 2சி பட்டாவின் கீழ் வழங்கப்படும் தனி நபர் மரப்பட்டாவிற்கு மரங்களின் எண்ணிக் கைக்கு உச்சவரம்பு இல்லை. இனிமேல் 2சி பட்டாவின் கீழ் வழங்கப்படும் மரப்பட்டா 50 என மரங்களின் எண்ணிக் கைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கலாமா என்பது அரசின் பரிசீலனை யில் உள்ளது.

சமூக மரம் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மரம் வளர்ப்பவர் களை சம்பந்தப்பட்ட வட்டார அளவிலான குழு தேர்ந் தெடுக்கிறது. அவர்கள் ஒப்படை செய்யப்பட்ட இடங்களில் மரங்களை நடவும், வளர்க்கவும் பாதுகாக்கவும் அறிவுறுத்தப் படுகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மரங்கள் வளர்ந்திருப்பது சரிபார்க்கப்பட்டு இவ்வுரிமைதாரர்கட்கு மரப் பட்டா வழங்கப்படுகிறது.

## 17. இயற்கையின் சீற்றங்கள் :

1991 நவம்பர் திங்களின் மத்தியில் வங்கக் கடலில் உரு வான காற்றழுத்த மண்டலம் மேற்கு வடமேற்குத் திசை யில் நகர்ந்து நாகப்பட்டினத்திற்கும் கடலூருக்கும் இடையில் காரைக்காலுக்கு அருகில் தமிழ்நாட்டுக் கடற்கரையைக்





கடந்தது. அதன் காரணமாக கடற்கரையோர மாவட்டங் களிலும் மத்திய மற்றும் வட தமிழ்நாட்டின் சில மாவட்டங் களிலும் பலத்த மழை பெய்தது. தற்கு 14–11–1991-க்கும் 20–11–1991-க்கும் இடையில் பெய்துள்ள 2814 மி.மீ. மழையளவே சான்றாகும். சாதாரணமாகப் பெய்யக் கூடிய மழையளவு 864 மி. மீட்டராக இருக்க, அதிகமாக 1950 மி.மீ. பெய்துள்ளது. இந்த அதிகப்படியான மழை நாகப்பட்டினம் —காயிதே மில்லத், செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர்., சென்னை நகரம், தர்மபுரி, மதுரை, திண்டுக்கல் அண்ணா, தென்னாற்காடு, வடஆற்காடு—அம்பேத்கார், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, நீலகிரி, பெரியார், சேலம் மற்றும் திருவண்ணாமலை—சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் பெய் துள்ளது. வெள்ளத்தின் கடுமை, உயிரிழப்பு, பெருமளவில் பயிர்களின் நாசம், வெள்ளத்தில் மூழ்கிய கிராமங்கள் மற்றும் பள்ளமான பகுதிகளில் வாழ்ந்த இலட்சக் கணக்கான மக்களை மேடான பகுதிகளுக்கு குடியேற்றம் செய்து உண வளித்தல், ஆகியவற்றிற்குக் காரணமாக அமைந்தது. அநேக நீர்நிலைகளில் ஏற்பட்ட உடைப்பு மற்றும் ஏறத்தாழ 2.36 இலட்சம் ஏக்கர் வேளாண் பயிர்கள் நீரில் மூழ்கியதன் விளைவாக ஓரளவு பீதியும்கூட ஏற்பட்டது. ஒரு லட்சம் குடிசைகள் முழுவதும் பாதிக்கப்பட்டதுடன் ஏறத்தாழ 2.5 இலட்சம் குடிசைகள் ஓரளவு பாதிப்புக்குள்ளாயின. மாநில சாலை, தேசிய சாலை மற்றும் ஊராட்சி சாலைகளும் மோசமான பாதிப்புக்குள்ளாயின. அநேக இடங்களில் மழை நின்ற ஒருவாரத்திற்குப் பின்னும் நீரில் மூழ்கிய பகுதி களிலிருந்து தண்ணீர் முழுவதுமாக வடியவில்லை. வெள்ளச் சேதத்தின் கடுமைக்கு, மைய அரசின் அமைச்சர்கள் நவம் பர் 24 ஆம் தேதி விமானத்திலிருந்து கடற்கரை மாவட்டங் களைப் பார்வையிட்டபோது ஏராளமான பகுதிகள் நீரால் சூழப்பட்டிருப்பதைக் கண்டதே சான்றாகும். இந்த வெள்ளம் மற்றும் மழையால் வேளாண்துறையில் ஏற்பட்ட பாதிப்பு மிக அதிகமானதாக இருப்பதால் அதிக அளவில் நிவாரண பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. நாகப்பட்டினம்—காயிதே— மில்லத், தென்னாற்காடு, செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டங்கள் மற்றும் சென்னை நகரமும் மிக அதிகமான பாதிப்புக்குள்ளாயின. இவ்வாறாகப் பெருமளவில் பாதிப் புக்குள்ளானவைகளை மீண்டும் வெள்ளத்திற்கு முந்தைய நிலைக்குக் கொண்டுவர மிகத் துரித நிவாரண நடவடிக்கை எடுத்தாக வேண்டியுள்ளது. தகவலின்படி 3290 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 3,56,115 குடும்பங்கள் வீடிழந் துள்ளன. 185 பேர் உயிரிழந்துள்ளனர். கடற்கரைப் பகுதி யில் வாழ்ந்த 275 இலட்சம் மக்களில் 1.75 இலட்சம் மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு உணவளிக்கப்பட்டனர்.

வெள்ளம் ஏற்பட்டபோது உரிய நேரத்தில், முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 400 ஓரளவு பாதிக்கப் பட்ட குடிசைகளுக்கு ரூ. 200 அளித்து உடனடி நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சம்பத்தில் அரசாணை

எண். 1432, வருவாய் நாள் 19-11-1991-ல் சென்னை நகரம் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 600-ம் ஓரளவு பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 300-ம் மானியம் அளிப்பதுடன் பிற பகுதிகளில் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 500-ம் ஓரளவு பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 250-ம் மானியம் அளிக்க ஆணையிடப் பட்டுள்ளது. இத்துடன் 5 கிலோ அரிசியும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் (மின்சாரம் 72 மணி நேரத்திற்கு இல்லாதிருக்கும் நிலையில்) ஒரு வேட்டி அல்லது லுங்கி மற்றும் ஒரு சேலையும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் அளிக்கப்படுகிறது.

நவம்பர் 1991ல் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தின் போது பல்வேறு துறைகளில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ரூ. 389 கோடி நிதியுதவி மைய அரசிடம் கோரி வெள்ளம் புயல் குறித்த விளக்கக் குறிப்பு ஒன்று தயார் செய்யப்பட்டது.

ஒவ்வொரு மாநிலத்திலும் வெள்ளம், வறட்சி, தீ விபத்து முதலிய இயற்கையின் இடர்பாடுகளால் எழக்கூடிய செலவினங்களை மேற்கொள்ள இயற்கையின் இடர்ப்பாடுகள் நிவாரண நிதியம் ஒன்றினை மைய அரசு 1–4–1990 முதல் ஏற்படுத்தியது. ஆண்டு தோறும் தமிழ்நாட்டிற்கு ரூ. 39 கோடி ஒதுக்கப்படுகின்றது. மைய அரசு 75% வழங்குகின்றது. [ரூ. 29,25,00,000]. மாநில அரசின் பங்கு 25% ஆகும். [ரூ. 9,75,00,000]. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஆகஸ்டு 1991ல் ஏற்பட்ட வெள்ளத்திற்கு நிவாரணமளிக்க ரூ. 55,99,600 அளிக்கப்பட்டுள்ளது. 1991–92 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடான ரூ. 39 கோடி முழுவதும் செலவழிக்கப்பட்ட நிலையில் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் அதனைத் தொடர்ந்த வறட்சியின் உடனடித் தேவைகளின் அவசரம் கருதி அடுத்த ஆண்டின் ஒதுக்கீட்டில் 25 விழுக்காட்டினைப் பயன்படுத்திக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த தற்கிணங்க சாலைகளைச் செப்பனிட ரூ. 4 கோடியும், பாசன நிலைகளைச் செப்பனிட்டுச் சரிசெய்ய ரூ. 2 கோடியும் அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

நிலையான வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உலக வங்கியிடம் கடன் பெறுவதற்காக ரூ. 2000 கோடிக்கான திட்ட அறிக்கை ஒன்றை தயார் செய்து மைய அரசுக்கு அனுப்பி வைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.



18. வறட்சி நிவாரணப் பணிகள் :

1991–92 ஆம் ஆண்டு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் காமராஜர் மாவட்டங்களில் தென்மேற்குப் பருவ மழையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழையில் கோயம்புத்தூர், காமராஜர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மாவட்டங்களில் தேவையான பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க தலைமைச் செயலரின் தலைமையில் அமைக்கப்பட்ட இயற்கை சீற்றத் தணிப்பு நிதிக்கான மாநில அளவிலான குழு 2–5–1991 அன்று குடிநீர் வழங்கல் நிலையை மறு ஆய்வு செய்து மாநிலத்தில் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் நிதி உதவியாக ரூ. 3.79 கோடி தொகையை வழங்கியது.

30–7–1991 அன்று இக்குழு மீண்டும் குடிநீர் வழங்கல் நிலையை மறு ஆய்வு செய்து ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், லாரிகளின் மூலம் தண்ணீர் விநியோகம் செய்தல், புதிய கிணறுகளை அமைத்தல் ஆகிய நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக கூடுதலாக ரூ. 2.50 கோடி தொகையை வழங்கியது.

வறட்சி நிவாரணப் பணிகளுக்கான கூடுதல் தொகையை வழங்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் இருந்ததால் 8–9–1991 அன்று மேற்கண்ட குழு மாநிலத்தில் குடிநீர் வழங்கல் நிலையை மறு ஆய்வு செய்து சில மாவட்டங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசு ரூ. 2.05 கோடி வழங்கியது.

மேலும் 20–9–1991 அன்று தர்மபுரி மாவட்டத்தின் சில பகுதிகளின் நிலவிய குடிநீர்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு தர்மபுரி மாவட்டத்தில் பற்றாக்குறைப் பகுதிகளில் 100 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்காக அரசு ரூ. 35 இலட்சம் தொகையினை வழங்கியது. இவ்வாறு நடப்பு நிதியாண்டான 1991–92 இல் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 30–10–1991 வரை கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்காக அரசு ரூ. 8.69 கோடி தொகை வழங்கியுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | | |
|---|---|---|---|
| 1. ஆழ்துளைக் கிணறுகள் | .. | 620.75 | (1773) |
| 2. மற்ற திட்டங்கள்— | | | |
| (i) லாரிகளில் குடிநீர் எடுத்துச் செல்ல .. | .. | 121.35 | |
| (ii) ஏனைய திட்டங்கள் | .. | 126.90 | |
| மொத்தம் | .. | 869.00 | |

1992, பிப்ரவரித் திங்கள் (19–2–1992) அன்று இயற்கை சீற்றத் தணிப்பு நிதிக்கான மாநிலக் குழு கூடி தமிழ் நாட்டில் குடிநீர் வழங்கல் நிலையை மறு ஆய்வு செய்தது. கீழ்க்கண்ட குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக ரூ. 2 கோடி அளவிலான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. ஆழ்துளைக் கிணறுகள் .. | 175.00 |
| 2. லாரிகளில் குடிநீர் எடுத்துச் செல்ல | 5.00 |
| 3. ஏனைய திட்டங்கள் .. | 20.00 |
| | 200.00<br>அல்லது<br>2 கோடி |

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மாவட்ட வாரியாக இதனைப் பகிர்ந்தளிப்பார்.

இதுதவிர மேலும் 7.72 கோடி ரூபாய்க்கு கீழ்க்கண்ட வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது :

1. ஆழ்துளைக் கிணறுகள் (1,000)
2. ஆழ்துளைக் கிணறுகளை சுத்தம் செய்ய
3. புதிய திறந்தவெளிக் கிணறுகள் அமைக்க
4. திறந்தவெளிக் கிணறுகளை ஆழப்படுத்த
5. லாரிகள் மூலம் குடிநீர் வழங்க
6. குழாய்களை நீட்டிக்க
7. தனி ஃபில்டர் லைன் அமைக்க
8. உறை கிணறுகள் அமைக்க
9. வேலை வாய்ப்புப் பணிகளுக்கு

## 19. தீ விபத்து.

கிராமங்களில் உள்ள பெரும்பான்மையான வீடுகள் கூரை வீடுகளாக உள்ளன. சென்னை நகரிலும் இந்த மாதிரியான குடிசைகள் அதிகமாய் உள்ளன. ஆகையால், வருடம் முழுவதிலும் தீ விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், இத் தீ விபத்து எல்லா பருவங்களிலும் விட கோடைப்பருவத்தில் தான் அதிகமாக ஏற்படுகிறது. தீ விபத்து ஏற்பட்டதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி வழங்குவதற்காக முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு நிவாரணமாக



தலா ரூ. 400-ம் பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 200-ம் நிவாரணமாக வழங்கப்பட்டு வந்தன. சமீபத்தில், அரசாணை நிலை எண். 1432, வருவாய்த்துறை, நாள் 19—11—1991இல் மேற்படி நிவாரணத் தொகையை சென்னை மாநகரில் முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 600 ஆகவும், பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 300 ஆகவும், உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது. மற்ற மாவட்டங்களில் முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 500 ஆகவும், பகுதி சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 250 ஆகவும் உயர்த்தியுள்ளது. இது தவிர, தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்(72 மணி மற்றும் அல்லது அதற்கு மேலும் மின் சப்ளை இருந்திராவிடில்), ஒரு வேட்டி அல்லது ஒரு லுங்கி மற்றும் ஒரு சேலை வழங்கப்பட்டு வருகின்றன.

2. தீ விபத்தால் மரணமடைந்தவர் குடும்பத் தலைவராகவும், குடும்பத்தில் பொருளீட்டுபவராக இருந்திருப்பினும், இருந்திராவிடினும் அவருடைய குடும்பத்திற்கு ரூ. 2,000 வழங்கப்படுகிறது. மரணம் அடைந்தவர் குழந்தையாக இருந்தாலும் இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. அரசு எல்லா மாவட்ட ஆட்சியருக்கும் கருவூல விதி எண். 27இன் கீழ் தீ விபத்தினால் மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு இந்நிதியுதவி வழங்க அதிகாரம் வழங்கியுள்ளது.

3. தீ விபத்தில் குடிசைகளையும் உடமைகளையும் இழக்கின்ற நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஊரக கைவினைஞர்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தினர் ஆகியோர்களின் ஆண்டு வருமானம் அனைத்து வகைகளிலும் ரூ. 4,800-க்கு மிகாமல் உள்ளவர்களுக்கு குடிசை காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு திட்டத்தை மத்திய அரசு (நிதி அமைச்சகம்) உருவாக்கியுள்ளது. இத் திட்டம் 1988-ம் ஆண்டு மே திங்கள் முதல் நாளிலிருந்து இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இத் திட்டம் மேலும் இரண்டு வருடங்களுக்கு அதாவது 1—5—1991 லிருந்து 30—4—1993 முடிய நீட்டிப்பு செய்ய சமீபத்தில் அரசாணை (நிலை) எண். 1428 வருவாய்த்துறை, நாள் 19—11—1991இல் ஆணை வெளியிடப்பட்டது.

4. மேற்படி திட்டத்தின் கீழ் ஆகும் காப்பீட்டுக் கட்டணம் முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும். தீ விபத்தில், பாதிக்கப்பட்ட குடிசை ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 1,000-ம் மற்றும் அதிலுள்ள உடைமைகள் சேதமடைந்தால் தலா ரூ. 500-ம் இத் திட்டத்தின் கீழ் காப்பீட்டுக் கழகம் வழங்கி வருகிறது. தீ விபத்தில் குடிசைகளையும் மற்றும் உடைமைகளையும் இழந்து பாதிக்கப்படும்பொழுது மாநில அரசால் வழங்கப்பட்டு வரும் மொத்த நிவாரணத் தொகை மேற் குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகையும் ரூ. 1,500-க்குள் அடங்கவேண்டும்.

[1992 மார்ச் 19

தமிழ்நாடு நலிவுற்றோர் குடும்ப நல நிவாரணத் திட்டம்.

குடும்பத்தை காப்பாற்றும் பொருளீட்டும் குடும்பத் தலைவர் இறந்தால் அன்னாரின் வருமானத்தை இழந்து தவிக்கும் ஏழைக் குடும்பத்திற்கு தமிழ்நாடு நலிவுற்றோர் குடும்ப நல நிவாரணத் திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நிவாரணமாக வழங்கப்பட்ட தொகை ரூ. 2,000-ஐ ரூ. 3,000 ஆக 1—4—1990 முதல் உயர்த்தப்பட் டுள்ளது. இத்திட்டம் வருவாய்த்துறையில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

1989-90ஆம் நிதியாண்டில் 14,811 குடும்பங்களுக்கு நிவாரண மாக ரூ. 2,80,22,000 வழங்கப்பட்டுள்ளன. 1990-91 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டது. 14—11—1990 -ஆம் நாளும் 92061/எஸ்1/90-4, வருவாய், எண்ணும் கொண்ட அரசின் கடிதத்தில் ரூ. 3 கோடியிலிருந்து ரூ. 5 கோடியாகவும் அதன் பிறகு இறுதி மதிப்பீட்டு கணக்கில் 6.50 கோடியாக உயர்த் தப்பட்டது. அத்தொகையை 22,904 குடும்பங்களுக்கு (மார்ச்சு 1991 முடிய) வழங்கப்பட்டுள்ளது. 1991-92ஆம் நிதியாண்டிற்கு ரூ. 7 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ரூ. 4,22,57,000 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

விபத்து நிவாரணத் திட்டம் :

தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தினால் இறக்க நேரிடும் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிடும் ஏழைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங் குவதற்கான ஒருங்கிணைந்த விபத்து நிவாரணத் திட்டம் அர சால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. தொழிலில் ஈடுபட்டிருக்கையில் இறக்க நேரிடும் ஏழைத்தொழி லாளர்கள் குடும்பத்திற்கு ரூ. 10,000, ரூ. 7,000 மற்றும் ரூ. 5,000 என முறையே இறப்பிற்கும் மற்றும் அங்கங்களை இழப் பவர்களுக்கும் ஏற்ப வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த விபத்து நிவாரணத் திட்டம் செயல்படுத்தத் தொடங்கியபோது 22 வகையான ஏழைத் தொழில் பிரிவினர்கள் அத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். தற்போது 39 வகையான ஏழைத் தொழில் பிரிவினர்கள் அத்திட்டத்தின் கீழ் பயன் பெறுகிறார் கள்.

1989-90 ஆம் நிதியாண்டில் இத் திட்டத்தின் மூலம் 443 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. நிவாரணத் தொகையாக ரூ. 39.04 இலட்சங்கள் வழங்கப்பட்டது. 1990-91ஆம் நிதி யாண்டில் 848 குடும்பங்கள் பயனடைந்துள்ளது. நிவாரணத் தொகையாக ரூ. 89.58 இலட்சங்கள் வழங்கப்பட்டது. 1991-92 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 624 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ. 63.51 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது.



1992 மார்ச் 19]

20. நில அளவை நிலப்பதிவுருக்கள் மற்றும் பராமரிப்பு :

விற்பனை மாற்றம், உரிமை வழி மாற்றம், அன்பளிப்பு பரிமாற்றம், நீதிமன்ற உத்திரவு, பாகப்பிரிவினை முதலிய நிகழ்வுகள் மூலம் அன்றாடம் நில உடைமைதாரர்கள் மற்றும் நில உடைமை எல்லைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் நிரந்தர நிலப்பதிவுருக்களில் பிரதிபலிக்கும் வகையில் மேற்கொண்டு பதிவுருக்கள் நாளது வரையிலான விவரங்களை பிரதிபலிக் கும் வகையில் பராமரிப்பதும், ஆய்வு செய்வதும், நில அளவை மற்றும் நிலப்பதிவுருக்கள் துறையின் பொறுப்பாகும். பொது மக்களுக்கு அவர்களின் நில உடைமைகள் குறித்த தேவைகளில் தொண்டுநோக்குடன் இத்துறை பணியாற்றி வருகிறது. வேளாண்மைப் பகுதிகள் மற்றும் நகர் பகுதிகளில் எங்கெங்கு அவசியமோ, அங்கு முதல் நில அளவை, மறு நில அளவை அல்லது துணை நில அளவை, இத்துறையினால் மேற் கொள்ளப்படுகிறது. தனது பணிகளை தமிழ்நாடு நில அளவை யையும் எல்லைகளையும் குறித்த சட்டம் 1923 (சட்டம் 8/23)ன்படி மேற்கொண்டு வருகிறது.

முறைப்படியான பராமரிப்புப் பணியுடன் கூட இத்துறை யினால் கீழ்க்கண்ட திட்டப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன :—

(1) நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாத பிறவற்றிற்கு பயன் படுத்தப்பட்டு வரும் வேளாண்மை நிலங்களை அளவை செய்தல்.

(2) (சென்னை பழைய நகரம் நீங்கலாக) அனைத்து நகராட்சி கள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை மேற்கொள்ளல்.

(3) மலைக்கிராமங்களின் அளவை.

நத்தம் அளவை.—அரசு ஆணை நி. எண். 1177, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 30—10—1987-ன் படி. இத்திட்டப்பணி, சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக 19 மாவட்டங்களில் 159 வட்டங் களில் செயல்படுத்தப்பட வேண்டும். இந்த 159 வட்டங்களில் 90 வட்டங்களுக்கு புல அளவைப்பணி முடிக்கப்பட்டுள்ளது. 61 வட்டங்களில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. 4 மாவட் டங்களை உள்ளடக்கி 8 வட்டங்களில் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டுள்ள வட்டங்களில் பணி முடிய முடிய, இந்த 8 வட்டங்களிலும் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

அளவைப் பணிக்கு ஒரு மாதத்திற்கு 60 ச.கி.மீ. பரப்பும், நிலவரித்திட்டத்திற்கு ஆவணங்கள் ஒப்படைக்க ஒரு மாதத் திற்கு 36 ச.கி.மீ. பரப்பும் குறியீடு அனுசரிக்கப்படுகிறது.

[1992 மார்ச் 19

1990—91 மற்றும் 1991—92 ஆண்டில் நிர்ணயிக்கப் பட்ட குறியீடு மற்றும் ஈட்டிய செய்மானம் விவரம் பின் வருமாறு :

| காலம். | அளவைப்பணி | | நிலவரித் திட்டத் திற்கு ஆவணங் கள் ஒப்படைத்தல் | |
|---|---|---|---|---|
| | குறியீடு | ஈட்டிய செய்மானம் | குறியீடு | ஈட்டிய செய்மானம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (பரப்பு ச. கி. மீ.) | | | |
| 1—4—90 முதல் 31—3—91 முடிய | 720 | 956.53 | 432 | 965.52 |
| 1—4—91 முதல் 30—11—91 முடிய | 480 | 495.91 | 288 | 587.39 |

30—11—91 முடிய 3,227.87 ச.கி.மீ. அளவைப்பணியும், ஆவணங்கள் 2,883.40 ச.கி.மீ. பரப்பும் நிலவரித் திட்டத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நகர அளவை.—ஒவ்வொரு பகுதியிலும் மேற்கொள்ள வேண்டிய நகர அளவையின் தன்மையை யொட்டி, முதல் நகர அளவை, துணை நகர அளவை, நகர அளவை ஆவணங்கள் மேம்பாடு போன்றவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் நாட்டில் 3 மாநகராட்சிகளும், நகரியங்களை உள்ளடக்கி 106 நகராட்சிகளும் உள்ளன. இவற்றில் 30 நகராட்சிகளில் முதல் நகர அளவை மேற்கொள்ள வேண்டியுள்ளது. 76 நகராட்சிகளில் துணை நகர அளவையும், 3 மாநகராட்சி களில் முதல் நகர அளவை மற்றும் துணை நகர அளவையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

18 மாவட்டங்களை உள்ளடக்கி 41 நகரங்களிலும், 2 மாநகராட்சிகளிலும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 14 நகராட்சிகளிலும், 1 மாநகராட்சிப் பகுதியிலும் அளவுப்பணி முடிக்கப்பட்டும், 27 நகரங்களில் பணி முன்னேற்றத்திலும் உள்ளது. தற்சமயம் நத்தம் மற்றும் வேளாண்மைக் கல்லாத பிற பயன்பாடுகளுக்கு பயன்படுத்தும் வேளாண்மை நிலங்களில் நடைபெறும் அளவைப்பணி முடிந்தவுடன், படிப் படியாக இதர நகரங்களில் பணி மேற்கொள்ளப்படும்.

1990—91-ம் ஆண்டிற்கு அளவைப் பணிக்கு 15 ச.கி.மீ. நிலவரித் திட்டத்திற்கு ஆவணங்கள் ஒப்படைப்பதற்கு 9 ச.கி.மீ. பரப்பும் மாதக் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டது. 1—4—91 முதல் அளவைப்பணிக்கு 12 ச.கி.மீ. பரப்பும் நிலவரித் திட்டத்திற்கு ஆவணங்கள் ஒப்படைப்பதற்கு 7.50 ச.கி.மீ. பரப்பும் என மாதக் குறியீடாக மாற்றியமைக்கப்பட்டது.



1992 மார்ச் 19]

1990—91 மற்றும் 1991—92-ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப் பட்ட குறியீடு, ஈட்டிய செய்மானம் பின்வருமாறு :—

| காலம் | அளவைப்பணி. | | நிலவரித் திட்டத் திற்கு ஆவணங்கள் ஒப்படைத்தல். | |
|---|---|---|---|---|
| | குறியீடு. | ஈட்டிய செய்மானம். | குறியீடு. | ஈட்டிய செய்மானம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (பரப்பு ச. கி. மீ.) | | | |
| 1—4—90 முதல் 31—3—91 முடிய | 135 | 84.85 | 90 | 127.39 |
| 1—4—91 முதல் 30—11—91 முடிய | 96 | 86.58 | 60 | 46.28 |

30—11—91 முடிய அளவைப்பணியில் 384.44 ச.கி.மீ. பரப்பும், ஆவணங்கள் ஒப்படைப்பு 281.83 ச.கி.மீ. பரப்பும் முடிக்கப்பட்டுள்ளது.

நகர அளவைப் பணி பல சிக்கலான நடைமுறைகள் கொண்டதாகும். கோணமானி மற்றும் தொலை தூர மின்னணுவியல் அளவுக் கருவி (இ.டி.எம்.) போன்ற மிக நுட்பமான கருவிகளைப் பயன்படுத்தி பணி செய்ய வேண்டி யுள்ளது. குடியிருப்பு காலனிகள் அதிகமாக அபிவிருத்தி அடைந்து இடங்கள் மிகவும் கூட்டமாக உள்ளன. அதிகமான போக்குவரத்து காரணமாக களப்பணியில் குறியீடு அடையப் படுவதை பாதித்துள்ளது. இதில் ஏற்பட்டுள்ள இழப்பை நத்தம் நில அளவையில் குறியீட்டிற்கு அதிகமாக செய்மானம் ஈட்டப்பட்டதன் மூலம் ஓரளவு சரிக்கட்டப்பட்டுள்ளது.

மலைக்கிராம அளவை.—வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், திருச்சி, சேலம், கோவை மாவட்டங்களில் கீழ்க்குறிப்பிட்ட ஆறு மலைகளை உள்ளடக்கி 69 கிராமங்களில் இத்திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(1) ஜவ்வாது மலை

(2) ஏலகிரி மலை

(3) பச்ச மலை

(4) கொல்லி மலை

(5) அரநூத்துமலை (மற்றும்)

(6) ஆனமலை

வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை - சம்புவராயர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் பச்சமலை மற்றும் கொல்லிமலையிலும், கோவை மாவட்டத்தில் ஆனை மலை குன்றுகளிலும் அளவைப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. அளவைப் பணிக்கு 9 ச.கி.மீ. மற்றும் ஆவணங்கள் ஒப்படைப்பதற்கு 5.40 ச.கி.மீ. பரப்பும் மாதாந்திர குறியீடாக அனுசரிக்கப்படுகிறது.

1990–91 மற்றும் 1991–92ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு மற்றும் ஈட்டிய செய்மானம் குறித்த விவரங்கள் பின்வருமாறு :—

| காலம். | அளவைப்பணி. | | நிலவரித்திட்டத்திற்கு ஆவணங்கள் ஒப்படைப்பு | |
|---|---|---|---|---|
| | குறியீடு. | செய்மானம். | குறியீடு. | செய்மானம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (பரப்பு சதுர கிலோ மீட்டரில்.) | | | |
| 1—4—1990 முதல் 31—3—1991 முடிய. | 108 | 114.07 | 64.80 | 71.68 |
| 1—4—1991 முதல் 30—11—1991 முடிய. | 72 | 53.27 | 43.20 | 37.32 |

30—11—1991 முடிய அளவைப்பணியில் 622.81 ச.கி.மீ. பரப்பும், ஆவணங்கள் 480.68 ச.கி.மீ. பரப்பும் நிலவரித் திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மலைப்பிரதேசங்களில் அவ்வப்போது பெய்த மழையினாலும், பெருமழையினாலும், குறியீட்டில் சிறிது குறைவு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்பு 31—3—1992-க்குள் சரிக்கட்டப்படும்.

வருவாய் பதிவுகள் பதிவேடுகள் பராமரித்தல்.—கிராம மட்டத்திலிருந்து மாநிலம் வரை எல்லைகள் அடையாளம் காண்பதற்கு உன்னிப்பான பராமரிப்புப் பணி மிக அவசியமான ஒன்றாகும். எனவே, நில அளவை ஆவணங்களில் அன்றாட மாற்றங்களை செய்து பதிவேடுகளை நாளது வரை செவ்வனே பராமரிக்க குறுவட்டம் மற்றும் வட்டங்களில் பராமரிப்புப் [பணியாளர்கள் அமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.



அச்சக வசதிகள்.—சென்னை, நில அளவைப் பதிவுருக்கள் துறையுடன் இணைந்துள்ள நில அளவை மத்திய அலுவலகத்தில் வரைபடங்கள் அச்சிடுவதற்கான வசதிகள் உள்ளன. இத்துறையில் வரைபடங்கள் கருப்பு—வெள்ளையிலும், மற்றும் ஆறு வண்ணங்களிலும் அச்சிடப்படுகின்றன. மேலும், லித்தோ பணியையும் இத்துறையால் ஏற்க இயலும். நிழற்பட அச்சு மூலம் வரைபடம் தயாரித்து அச்சிட இத்துறை நவீன தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்துகிறது. வரைபடங்கள் நகல் எடுப்பதற்கு நிழற்பட நகல் எடுக்கும் இயந்திரம் உபயோகிப்பது போன்றவற்றின் மூலம் இத்துறை ஏற்கெனவே இயந்திரமயமாக்குதலை அறிமுகப்படுத்தியுள்ளது.

நில அளவைப் பயிற்சி நிலையம்.—வருவாய் மற்றும் இதர துறைப்பணியாளர்களுக்கு முழு அளவில், நில அளவைப்பயிற்சி அளிக்கும்பொருட்டு நில அளவைப்பயிற்சி நிலையம், தஞ்சை மாவட்டம், ஒரத்தநாட்டில் இயங்கி வருகிறது. இப்பயிற்சிநிலையம் துணை இயக்குநரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. 4000-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் இந்நிலையத்தில் பயிற்சி பெற்றுள்ளனர். 2.37 ஹெக்டேர் பரப்பு, ஒரத்தநாடு வட்டம், முத்தம்பாள்புரம் கிராமத்தில், இப்பயிற்சி நிலைய கட்டிடத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நிலைய கட்டிடம், மற்றும் தங்கும் வசதிக்கான கட்டிடச் செலவுக்காக தமிழ்நாடு அரசு ரூ. 61 லட்சம் (ரூபாய் அறுபத்தோரு லட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு நிர்வாக அங்கீகாரம் அளித்துள்ளது. தங்கும் வசதிக்கான கட்டிடப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

இந்திய அரசு நிதி உதவி.—வருவாய் நிர்வாகத்தைப் பலப்படுத்தவும், மற்றும் நில உடமைப் பதிவுருக்களை மேம்படுத்துவதற்கும் ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அமுல்படுத்த மைய அரசு நிதி உதவி திட்டத்தின் கீழ், ரூ. 200 லட்சத்தில் ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 170.25 லட்சம் நில அளவைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் மைய அரசாலும், 50 சதவீதம் மாநில அரசாலும் ஏற்கப்பட வேண்டும். மைய அரசால் அதன் பங்குத் தொகையான ரூ. 100 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்கான ரூ. 100 லட்சம் அரசால் அனுமதிக்கப் பட்டுள்ளது.

நில அளவைத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டில் ரூ. 109.64 லட்சம் செலவில் 21 வகையான உபகரணங்கள் வாங்க உத்திரவிடப்பட்டுள்ளது. 1991-92-ம் ஆண்டு பட்ஜெட் திருத்திய மதிப்பீட்டில் நில அளவைப் பயிற்சி நிலைய கட்டிடச் செலவுக்கென பொதுப்பணித்துறை திட்டத் தலைப்பில் ரூ. 30 லட்சம் (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்துள்ளது. கட்டிடப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மேற்கூறிய ஒதுக்கீட்டில் எஞ்சியுள்ள ரூ. 30.61 லட்சத் தொகையை, ஒரத்தநாடு பயிற்சி நிலையத் தேவைக்கான நூல் நிலையப் புத்தகங்கள் வாங்கவும், நில அளவைத்துறைப் பணியாளர்களுக்கு நில அளவைப் பயிற்சி வழங்கும் செலவுக்காகவும், நில அளவைப் பயிற்சிக்குத் தேவையான உள்ளமைப்புகளுக்காகவும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் நிலப்பதிவுருக்களை கணிப்பொறி மூலம் தயாரித்தல் சேலம் மாவட்ட முன்னோடித் திட்டம்.

அரசு, நிலப் பதிவுருக்களை கணிப்பொறி மூலம் தயாரிக்கும் திட்டத்தை அரசு ஆணை எண். 525, வருவாய், நாள் 28-3-1990-ல் ஒப்புதல் அளித்து, ரூ. 25 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தினை சேலம் மாவட்டத்தில் முன்னோடியாக செயல்படுத்தவும் ஆணையிடப்பட்டது. இத்திட்டம் 30-3-1990-இல் சேலம் மாவட்ட ஆட்சியரால் துவங்கப்பட்டது.

முன்னோடித் திட்டத்தில் 'அ' பதிவேடு போன்ற முக்கிய நில பதிவுருக்களை கணிப்பொறி மூலம் தயாரிக்கவும் அரசு தீர்மானித்தது. இதனால் அன்றாடம் நிகழும் நில மாற்றங்களை அன்றைய நிலவரப்படி மேம்படுத்த முடியும்.

தற்போது ஒதுக்கீடு செய்துள்ள தொகையினை பயன்படுத்தி திட்டத்தினை வட்டங்களின் எண்ணிக்கையினை குறைத்து செயல்படுத்தவும், கணிப்பொறி வாங்கவும், கணிப்பொறி நிறுவுவதற்கு அறைகளில் குளிர்சாதனம் பொறுத்தவும் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கவும் அரசு தீர்மானித்துள்ளது. சேலம் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வட்டங்களில் அமுல் படுத்தப்படும். மேலும் சேலம் மாவட்டத்தில் இந்த முன்னோடி திட்டத்தினை மைய அரசு தேசிய தகவல் மைய அறிவுரைகளின் படியும் செயல்படுத்தப்படவுள்ளது.

---



கோரிக்கை எண்: 4— தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்.

1. முகவுரை :

வணிகவரித்துறையானது, தலைமை செயலகத்திலுள்ள வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்ற மூன்று துறைகளுள் ஒன்றாகும். மாநில அரசுக்குக் கிடைக்கின்ற வருவாயில் பெரும்பகுதி, அதாவது மொத்த வருவாயில் 70 சதவீதம் வணிகவரிகள் வாயிலாக கிடைக்கிறது. வணிகவரி ஆணையர் வணிகவரித்துறையின் தலைவராவார். அவருக்கு உதவியாக தலைமையிட அலுவலகத்தில் வணிகவரி இணை ஆணையர்கள், துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் ஆகியோர் உள்ளனர். கள பணிகளில் இவருக்கு உதவ துணை ஆணையாளர்கள் (ஆட்சிப்பகுதி), துணை ஆணையாளர்கள் (செயலாக்கம்) ஆகியோர் உள்ளனர். வணிகவரித்துறை பின்வரும் வரிவிதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது.—

(1) தமிழ்நாடு, 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) தமிழ்நாடு, 1970ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு, 1971ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம்.

(4) 1956ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(5) தமிழ்நாடு, 1939ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டம்.

(6) தமிழ்நாடு, 1961ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச்சட்டம்.

(7) தமிழ்நாடு, 1935ஆம் ஆண்டு குதிரைப்பந்தய வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு, 1981ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச்சட்டம்.

(9) தமிழ்நாடு, 1983ஆம் ஆண்டு விளம்பர வரிச்சட்டம்.

(10) தமிழ்நாடு, 1990ஆம் ஆண்டு உள்ளாட்சிப்பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டம்.

1991–92ஆம் ஆண்டில் 2,408 கோடி ரூபாய் விற்பனை வரி வசூலாகுமென எதிர்பார்க்கப்பட்டது. 1992 ஜனவரி முடிய 2,086.19 கோடி ரூபாய் வசூலானது. 1990–91ஆம் ஆண்டில் 2,167.16 கோடி ரூபாயும், 1989–90ஆம் ஆண்டில் 1,759.02 கோடி ரூபாயும் வசூலாயிது.

வரி நிருவாகத்தின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, ஏற்கனவே இருந்து வந்த மதிப்பிடப்பட்ட வரிவிதிப்பு முறைக்குப் பதிலாக கடந்த ஆண்டில் புதிய சுய வரிவிதிப்பு முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

இப்புதிய சுய வரிவிதிப்புத் திட்டத்தின் கீழ், குற்றங்கள் ஏதும் புரியாத வரிவிதிப்புக்குள்ளாகும் எந்த ஒரு நபரும் சுய வரி விதிப்பு விவர அறிக்கையைத் தாக்கல் செய்யலாம். இத்தகைய வரி விதிப்புற்குரியவர் குறிப்பிட்ட சில விற்பனைக்குரிய படிவங்களை பயன்படுத்தாமல் இருத்தல் வேண்டும். அத்தகைய வணிகரின் விவர அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படும். இந்த விவரக் கணக்குகள் சரியானவையா, முழுமையானவையா, என்பதை பார்க்கும் பொருட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக சரிபார்க்கப்படும்.

இச் சுய மதிப்பீட்டுத் திட்டம் ஏராளமான வணிகர்களை நடைமுறை கடுமைகளுக்கு உட்படுத்தாமல், பயன்பெறச் செய்யும்.

சென்னை, தெற்குப் பகுதியில் இரண்டு வணிகவரி சரகங்கள் மேம்பாடான நிர்வாகத்தின் பொருட்டு பிரிப்பதற்காக கண்டறியப்பட்டு உதவி ஆணையரின் ஆளுகையின்கீழ் புதிய சரகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

2. வணிகவரித்துறையின் வருவாயும், செலவும் வருமாறு :—

| ஆண்டு. (1) | வருவாய். (2) | செலவு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | |
| 1986–87 | 1,172.44 | 15.58 |
| 1987–88 | 1,313.49 | 17.35 |
| 1988–89 | 1,502.73 | 20.77 |
| 1989–90 | 1,759.02 | 23.28 |
| 1990–91 | 2,167.16 | 28.30 |
| 1991–92 (1991 டிசம்பர் வரை) | 1,856.12 | 24.96 |



3. வணிகவரித்துறை, நான்கு அங்கமாகச் செயல்படுகிறது. அவையாவன :—(i) வரி மதிப்பீட்டுப் பிரிவு, (ii) மேல் முறையீட்டுப் பிரிவு, (iii) செயலாக்கப்பிரிவு, (iv) தணிக்கைப்பிரிவு.

(i) வரி மதிப்பீட்டுப் பிரிவு :

இம்மாநிலத்தில் தற்போது 312 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றுள் 102 வட்டங்கள் துணை வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும், 204 வட்டங்கள் வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும் ஏனைய 6 வட்டங்கள் வணிகவரி உதவி ஆணையர்கள் தலைமையிலும் இயங்குகின்றன.

கடந்த ஆண்டில் சென்னையிலுள்ள நான்கு மத்திய வரிவிதிப்பு வட்டங்கள், கோயம்புத்தூரிலுள்ள இரண்டு மத்திய வரிவிதிப்பு வட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு துணை வணிகவரி அலுவலர் நியமிக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டன. வருகின்ற நிதியாண்டில் மேலும் இரண்டு வணிகவரி மாவட்டங்களை, அதாவது விருதுநகர், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு வணிகவரி மாவட்டங்களை நான்கு வணிகவரி மாவட்டங்களாகப் பிரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டு புதிய வணிகவரி மாவட்டங்களை ஏற்படுத்துவதோடு 10 வணிகவரி அதிகாரிகள் பதவிகளை ஏற்படுத்தி அதிக வேலைச் சுமையுள்ள 10 வரிவிதிப்பு வட்டங்களை வலுப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தேவையான துணைப் பணியாளர்களுடன் மேலும் ஒரு துணை ஆணையாளர் பதவி ஏற்படுத்தி, ஆணையாளர் அலுவலகத்திலுள்ள தன்னிச்சையான வரி சீராய்வு பிரிவு வலுப்படுத்தப்படும்.

(ii) மேல்முறையீட்டுப் பிரிவு :

மேல்முறையீட்டுப் பிரிவைப் பொறுத்தவரையில், விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரின் ஒட்டுமொத்த கண்காணிப்பின்கீழ் 18 மேல்முறையீட்டு உதவி ஆணையாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். வழக்குகளைத் தீர்வு செய்வது தொடர்பான பணிமுன்னேற்றம் குறித்து, ஒவ்வொரு மாதமும் அரசு ஆய்வு செய்து வருகிறது. மேல்முறையீட்டுப் பிரிவை வலுப்படுத்தும் நோக்கத்துடன் தேவையான சார்புபணியாளர்களுடன் மேல்முறையீட்டு உதவி ஆணையாளர் பதவிகள் இரண்டினை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வரிவழக்கு தனி தீர்ப்பு மன்றம் அமைத்தல்

பல்வேறு வரிவிதிப்பு சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்ட பல கோடி ரூபாய் வரி சம்பந்தப்பட்ட வழக்குகள் பல சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ளன. இவ்வழக்குகளை விரைவாக முடிவு செய்து அதன் மூலம் அரசுக்கு சேரவேண்டிய பெருமளவிலான வரிபாக்கி தொகையை வசூலிக்கும் பொருட்டு, 1985ஆம் ஆண்டு நிருவாக நடுவர் மன்றச் சட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு வரி வழக்கு தனி தீர்ப்பு மன்ற சட்டம் என்ற ஒரு

சட்டம் இயற்றி அதன்மூலம் வரி வழக்கு தனி தீர்ப்பு மன்றம் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதுவரை உயர்நீதி மன்றமும் விசாரித்துவந்த வணிகவரி வழக்குகளை இனிமேல் இந்த உத்தேச தனி தீர்ப்பு மன்றம் விசாரிக்கும். தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம், தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச்சட்டம், தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் வரும் வணிகவரி வழக்குகளை மட்டும் இந்த தனி தீர்ப்பு மன்றம் ஆரம்பக் கட்டத்தில் விசாரிக்கும். தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு 1992-ஆம் ஆண்டு வரி வழக்கு தனி தீர்ப்பு மன்ற சட்ட முன்வடிவு" என்ற பெயரில் சட்டமுன்வடிவு ஒன்றைத் தயாரித்து மத்திய அரசின் இசைவைப் பெற அனுப்பியுள்ளது. மத்திய அரசின் இசைவு வரப்பெற்றவுடன் நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டமுன்வடிவினை அறிமுகப் படுத்தக் கருதப்பட்டுள்ளது.

(iii) செயலாக்கப் பிரிவு :

நான்கு செயலாக்கப் பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையர் தலைமையின் கீழ் (1) சென்னை, (2) கோயம்புத்தூர் (3) திருச்சி ; (4) மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போது 48 வணிகவரி சோதனைச் சாவடிகள் இயங்கிவருகின்றன ; அவற்றில் கீழே கொடுக்கப்பட்டுள்ள முதல் 13 சோதனைச் சாவடிகள் நிரந்தரமான அரசு கட்டிடங்களிலும், கடைசியில் குறிப்பிட்டுள்ள சோதனைச்சாவடி ஓரளவு நிரந்த அரசுக் கட்டிடத்திலும் இயங்கி வருகின்றன :

(1) இரும்புலியூர் (தாம்பரம்).
(2) பூவிருந்தவல்லி
(3) புழல்
(4) இராணிப்பேட்டை
(5) ஓசூர்
(6) கே. ஜி. சாவடி
(7), மீனாட்சிபுரம்
(8) காட்பாடி
(9) சின்னசேலம்
(10) புளியறை
(11), சந்தூரப்பட்டி,
(12) கடம்பர் கோயில்
(13) களியக்காவிளை
(14) தோப்பூர்.



சோதனைச் சாவடிகள் தனியார் கட்டிடங்களில் அல் மற்ற 34 சோதனைச் சாவடிகள் தனியார் கட்டிடங்களில் அல் லது புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்ட கொட்டகைகளில் செயல்படுகின்றன.

மொத்தமுள்ள 48 சோதனைச் சாவடிகளில் 20 பெரிய சோதனைச் சாவடிகளாகும். அவற்றுள் பூவிருந்தவல்லி, ஓசூர், கே.ஜி. சாவடி, இராணிப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள நான்கு சாவடிகளும் இருவழிச் சோதனைச் சாவடிகளாகும்.

செயலாக்கப் பிரிவுகளிலுள்ள தகவல் தொடர்பு வசதிகளை வலுப்படுத்துவதும் துறையை நவீனப்படுத்துவதும் அரசின் கொள்கையின் ஒரு பகுதியாக கடந்த ஆண்டு மூன்று பெரிய சோதனைச் சாவடிகள் நான்கு சிறிய சோதனைச் சாவடிகளிலும் சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள 14 நடமாடும் பிரிவு களிலும் கம்பியில்லா தந்தி அமைப்பை நிறுவி கிரீம்ஸ்சாலை கட்டிடத்திலுள்ள மத்திய பிரிவுடன் அவற்றைக் கம்பியில்லாத் தந்தி அமைப்பு மூலம் ரூ. 6.50 இலட்சம் செலவில் இணைப்ப தற்கு அரசு சென்ற ஆண்டு அனுமதி வழங்கியுள்ளது. சென்னை யிலுள்ள நடமாடும் பிரிவில் இரண்டு துணை வணிகவரி அலு வலர்களையும் ஐந்து உதவி வணிகவரி அலுவலர்களையும் கூடுத லாக நியமிப்பதற்கு அனுமதி வழங்கி அப்பிரிவினை வலுப்படுத்த கருதப்பட்டுள்ளது.

iv. தணிக்கைப் பிரிவு :

வரிமதிப்பீடு செய்வதிலும் வரிவசூல் செய்வதிலும் ஏற்படும் தவறுகளையும் விடுப்புகளையும் கண்டறிந்து அவற்றைக் கூடிய விரைவில் சரிசெய்ய துறைத தணிக்கைப் பிரிவு ஒன்று அவசியம் என்பதை இத்துறை கருதியது. இத்துறையில் 30 ஆண்டுகளாக துறை தணிக்கைப் பிரிவு செயல் பட்டு வருகின்றது. வணிகவரி அலுவலர் ஒருவரை தலைவராகக் கொண்ட துறைத் தணிக்கை குழு ஆட்சி எல்லைப் பகுதி ( Territorial ) உதவி ஆணைய ரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. துறைத் தணிக் கைக் குழுவின் திட்டங்கள் சம்பந்தப்பட்ட துணை ஆணையர் களால் வகுக்கப்படுகின்றன. தற்போது இம்மாநிலத்தின் 38 துறை தணிக்கைக் குழுக்கள் உள்ளன. மாநில கணக்குத்துறை தலைவரிடம் இருந்து வரும் தணிக்கை அறிக்கைகள் பொது கணக்குகள் குழு தொடர்பான பணி ஆகியவற்றை தலைமை அலுவலகத்தில் முதன்மை ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இணை ஆணையரின் (தணிக்கை) மேற்பார்வையில் உள்ள தணிக்கை பிரிவு கவனிக்கி றது. மேலும் முந்தையகாலாண்டில்செய்யப்பட்ட வரி மதிப்பீடு களையும், வரி வசூலையும் அடுத்து வரும் காலாண்டில் இப் பிரிவினர் தணிக்கை செய்கின்றனர். இந்நாள் நிலவரப்படி துறை தணிக்கைப் பிரிவு தன்னுடைய பணியை முடித்துள்ளது. மாநில கணக்குத் துறைத் தலைவரின் தணிக்கைக்கு முன்னரே துறையின் தணிக்கைப் பிரிவினால் தணிக்கை மேற்கொள்ளப்

மற்றும் அமைத் தணிக்கைப் பிரிவினர் தணிக்கை அறிக்கையை அளிக்கின்றனர். அந்த அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கைகள் ஆட்சி எல்லைப்பகுதி உதவி ஆணையரால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத் தணிக்கைப் பிரிவின் திறமையை மேம்படுத்த அவர்களின் பணியை குறித்து குறித்தக் காலத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் நீதி மன்றங்களின் சமீபகால தீர்ப்புகள், செய்தி வெளியீடுகள் வடிவில், ஆணையர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்படுகின்றன.

4. கட்டிடங்கள் :

வணிகவரி அலுவலகங்களுக்கும் சோதனைச் சாவடிகளுக்கும் அரசு கட்டிடங்கள் கட்டுதல் :

வணிகவரித்துறை அலுவலகங்கள் அனைத்தும் அரசுக்கட்டிடங்களில் இயங்க வேண்டுமென்பதே அரசின் கொள்கையாகும். இதனையடுத்து வணிகவரித் துறைக்காக கட்டிடங்கள் கட்டும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிருவாகப் பிரிவு மற்றும் செயலாக்கப் பிரிவு வணிகவரி துணை ஆணையர் அலுவலகங்கள்அனைத்திற்கும், புதுக்கோட்டை, நாமக்கல். திருவண்ணாமலை, கரூர் மற்றும் விழுப்புரம் ஆகியவை நீங்கலாக, ஏனைய ஆட்சி எல்லைப் பகுதி உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் தற்போது அரசுக் கட்டிடங்கள் கட்டுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளன. விழுப்புரத்திலுள்ள செயலாக்கப் பிரிவு உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகம் நீங்கலாக, இதர அனைத்து செயலாக்கப்பிரிவு உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகங்களும் அரசு கட்டிடத்தில் அமைந்துள்ளன. புதுக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த உதவி ஆணையர்களின் பொறுப்பிலுள்ள வணிகவரி அலுவலர்களுக்கு இடவசதியளிக்கும் வண்ணம் இக்கட்டிடங்கள் வடிவமைக்கப்படும். இக்கட்டிடங்கள் கட்ட இடங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலங்களில் நுழைந்து பணியை மேற்கொள்ள வணிகவரித் துறைக்கு அனுமதி வழங்குமாறு மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மதிப்பீட்டுச் செலவு சுமார் 80 லட்சம் ரூபாய் ஆகும்.

312 வரி விதிப்பு வட்டங்களில், 137 வட்டங்கள் அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன.

பின்வரும் இடங்களில் கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது :—

(i) இராசிபுரத்தில்வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள் தற்போதுள்ள வணிகவரி அலுவலகக் கட்டிடத்தில் இரண்டாவது மாடி கட்டுவதற்காக அரசு 10.50 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.



(ii) சங்ககிரியில் தற்போதுள்ள கட்டிடத்தில் 12.10 இலட்சம் ரூபாய் செலவில் மாடி ஒன்று கட்டுவதற்கு அரசு அனுமதித்துள்ளது. இக்கட்டுமானப் பணி நடைபெற்றுவருகிறது.

(iii) கரூரில் 36.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வணிகவரி அலுவலகம் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

நாற்காலி மேசை ஆகியன வழங்குதல் :

வருகை புரியும் வணிகப் பொதுமக்கள் வசதிக்காக அனைத்து வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களுக்கும் நாற்காலிகள் வழங்க அரசு ரூ. 6,78,075 ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. வருகின்ற நிதியாண்டில் வேலூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களுக்கும் மாநிலங்களுக்கிடையிலான புலனாய்வுப் பிரிவிற்கும் ரூ. 1.72 இலட்சம் செலவில் இரும்பு அலமாரிகள் வழங்க கருதப்பட்டுள்ளது.

5. வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் :

வணிகவரித்துறை அலுவலர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தி அவர்களின் செயல்திறனை உயர்த்துவதற்காக வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டது. 1982 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தில் வணிகவரித்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு கல்வி கற்பிக்கும் வசதியுள்ளது. இந்நிலையத்திற்கு வணிக வரித்துணை ஆணையாளர் தலைவராகவுள்ளார். அவருக்கு உதவியாக வணிகவரி உதவி ஆணையர் இருவரும், வணிகவரி அலுவலர் ஒருவரும் உதவிபுரிகின்றனர். இப்பயிற்சி நிலையம், உதவி வணிகவரி அலுவலர் முதல் வணிகவரி அலுவலர் வரையுள்ள அலுவலர்களுக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.

இந்நிலையம் பயிற்சி பெறுபவர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிப்பதோடு, வணிகவரித்துறையின் செயல்பாடுகள் சம்பந்தமான குறிப்பிட்ட தலைப்புகள் குறித்து அந்தந்த வல்லுநர்கள் வாயிலாக சிறப்பு விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது. பயிற்சியின் இறுதியில் அவர்களுக்கு செயல்திற மதிப்பீட்டுத் தேர்வு நடத்தப்படுகிறது.

பயனுள்ள தகவல் விவரங்களைச் சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்பியுள்ளார்களா என்பதை உறுதி செய்ய, கணிப்பொறி பற்றி தெரிந்துகொள்வது அவசியமாகும். எனவே, சென்னை, அண்ணா மேலாண்மை நிலையத்தில், வணிகவரித் துறை இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் ஆகியோருக்கு ரூ. 37,440 செலவில் கணிப்பொறிப்பயிற்சி வழங்குவதற்குரிய செயற்குறிப்புகளுக்கு அரசு கடந்த ஆண்டு ஒப்பளித்துள்ளது

உதவி ஆணையர்களுக்கும் இதற்குக் குறைவான பதவிக்
தரத்திலுள்ள அலுவலர்களுக்கும் வணிகவரித்துறை கணிப்பொறி
அடிப்படையிலான பயிற்சியை, சென்னை வணிகவரிப் பணியாளர்
பயிற்சி நிலையத்தில் வழங்குவதற்காக ரூ. 1.43 இலட்சம்
தொடரினச் செலவும், ரூ. 3.31 இலட்சம் தொடரா இனச்
செலவும் கொண்ட செயற்குறிப்புகளுக்கு அரசு கடந்த ஆண்டு
ஒப்புதல் அளித்துள்ளது.

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்தில் உதவி இயக்குநர்
(புள்ளியியல்) பதவித் தரத்தில் விரிவுரையாளர் ஒருவரை நியமிக்க
அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் முதற்கட்ட பணியாக,
வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்தில் அனைத்து வணிக
வரி அலுவலர்களுக்கும் உதவி ஆணையர்களுக்கும் (மேல்முறை
யீட்டுப் பிரிவிலுள்ளவர்கள் நீங்கலாக) சுமார் 250 வணிகவரி
அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. கணிப்பொறி மையம் :

சேகரித்துவைத்த தகவல்களை மீண்டும்பெற்று நடை
முறைப்படுத்தி பாதுகாத்து வைக்கும் பொருட்டு பின்வரும் தகவல்
களைக் கணிப்பொறிமயமாக்கும் திட்டம் ஒன்றை வணிகவரித்
துறை மேற்கொண்டுள்ளது :—

(அ) மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து வணி
கர்களின் விவரங்கள் அடங்கிய புத்தகம்.

(ஆ) மொத்தம் 3 இலட்சம் ரூபாயும் அதற்கு மேற்பட்டும்
மொத்த வியாபாரத் தொகை கொண்ட வணிகர்களின் மாதாந்
திர பொருள் வாரியான மொத்த வியாபாரத் தொகையும் வரு
வாயும்.

(இ) சோதனைச் சாவடிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்
களைத் தொகுத்தல்.

(ஈ) வெவ்வேறு பொருட்களுக்கான பொருள் வாரியான
மொத்த வியாபாரத் தொகையும், வருவாயும்.

(உ) சுயவரிமதிப்பீட்டுக்காகத் தகுதியுள்ள வரிவிதிக்கப்
டடுவோரிடமிருந்து கணக்குகளை விரிவாகச் சோதனையிடுவதற்
காக, மேலோட்டமாகச் சரிபார்க்கும் முறையில் தெரிந்தெடுக்கப்
பட்ட இனங்கள்.

(ஊ) ஒவ்வொரு வணிகவரி கோட்டத்திலிருந்தும் மிக
அதிக அளவு வரிவிதிப்பிற்குள்ளான வரிவிதிக்கப்பட்டவர்கள் 100
பேர்களிடமிருந்து கிடைத்த வருவாய் பற்றிய விவரங்கள்.

(எ) திரையரங்கு வாரியான விவரப்புத்தகம்.

(ஏ) வணிகவரித்துறை அலுவலர்களின் பணி குறித்த
விவரங்கள்.



7. விற்பனை வரி மதிப்பீடுகள் முதலியவற்றை கணிப்பொறியில்
தொகுப்பது பற்றி ஆய்வு செய்வதற்கான குழு.

விற்பனை வரி மதிப்பீடுகளை கணிப்பொறியில் தொகுக்கும்
ஏற்பாட்டைச் செயலுக்குக் கொண்டு வருவது குறித்து ஆய்வு
செய்யவும் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்
சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் காணப்படும் பதிவு
களைச் சீரமைக்கவும், எளிமையாக்கவும், திரு. எஸ். ஜெயராமன்
இ.ஆ.ப. (பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்) அவர்களின் தலை
மையில் முதல் வகுப்பு குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியது. இக்குழு
3—7—1991 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. சட்ட
மன்றப் பேரவையில் கடந்த ஆண்டு அறிவித்தவாறு
நீண்டகால நடவடிக்கையாக, திறம்பட்ட, சரிசமமான வரி
விதிப்பு ஏற்பாட்டுக்கு வகை செய்வதைக் கருத்திற்கொண்டு,
தற்போதுள்ள வரிகளின் அமைப்பு, வீதங்கள், வரிப்பளு ஆகிய
வற்றை ஆய்வு செய்ய விரிவான அடிப்படையில் அமைந்த
வல்லுநர்களைக் கொண்டு உயரதிகாரக் குழு ஒன்று திரு. பி.
விஜயராகவன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் ஏற்படுத்தப்
பட்டுள்ளது. வரி மதிப்பீடுகளை கணிப்பொறியில் தொகுப்பது
குறித்து ஆய்வு செய்யும் குழு, இந்த உயரதிகாரக் குழுவுடன்
இணைக்கப்பட்டுள்ளது.

8. வணிகர்நல வாரியம் :

வணிகர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக வணிகர்நல வாரியம்
ஒன்றை அரசு அமைத்தது. இந்த வாரியத்தின் தலைவர்
முதலமைச்சராவார். தலைவர், துணைத் தலைவர் ஆகியோ
ரைத் தவிர, அலுவலர்கள். அலுவலர்கள் அல்லாதோர் ஆகி
யோரையும் இந்த வாரியம் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.
வணிகர் நல வாரியம் இதுவரை 3147 வணிகர்களை இதன்
உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டுள்ளது. அரசு, இவ்வாரி
யத்திற்கு 2 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இதில் 1.95 கோடி
ரூபாய் வட்டிபெறும். பொதுவைப்பீட்டில் வைக்கப்பட்டுள்ளது.
இந்த வட்டித் தொகையை இவ்வாரியத்தின் செலவுகளுக்கும்
வணிகர்களின் நலத்திட்டங்களுக்கும் பயன்படுத்துவதற்காக அரசு
வழங்கும். வறிய நிலையிலுள்ள வணிகர்களுக்கு உதவும் வகையில்
நலத்திட்டங்களை நிறைவேற்ற அதன் நடவடிக்கைகளுக்கு ஊக்க
மளிக்கப்பட வேண்டியதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு
முதலமைச்சரைத் தலைவராகவும், மாண்புமிகு வருவாய்த்துறை
அமைச்சரைத் துணைத் தலைவராகவும், அலுவலர்கள், அலு
வலர்கள் அல்லாதோர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு
இந்த வாரியம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

9. குறை தீர்க்கும் பிரிவு :

வணிகர்கள் தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்கான ஓர்
அமைப்பாகத்திகழ, குறைதீர்க்கும் பிரிவு 1984ஆம் ஆண்டில்
ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு, இணை ஆணையாளரைத்

(நிருவாகம்) தலைவராகவும், இணை ஆணையாளரையும் (மக்கள் தொடர்பு) உதவி ஆணையாளரையும் (மறு ஆய்வு மனு) உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வரப்பெற்ற, நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்ட மனுக்கள் பற்றிய விவரம் வருமாறு:—

| ஆண்டு. | வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை. | நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை. | எஞ்சியுள்ளவை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1988 | 105 | 105 | இல்லை. |
| 1989 | 119 | 119 | இல்லை. |
| 1990 | 94 | 94 | இல்லை. |
| 1991 | 25 | 20 | 5 |
| 1992 | 2 | இல்லை | 2 |

## 10. விற்பனைவரி ஆலோசனைக் குழு :

விற்பனைவரி நிருவாகம் குறித்துப் பொதுமக்களின் கருத்தை அறிய உதவும் வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன், பல்வேறு நிலைகளில் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே தலைவர்களாவர், இக்குழுக்கள், அலுவலர்களையும், வாணிகக் கழகம், வர்த்தகச் சங்கங்கள், கூட்டுறவுகள், வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. வணிக வரிச் சட்டங்களினால் வர்த்தகத்துறையில் எழும் பல்வேறு பிரச்சினைகள், விற்பனை வரிச் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை நிருவகிப்பது தொடர்பான விஷயங்கள் ஆகியவற்றை இக்குழு பரிசீலிக்கிறது. நிருவாகத்தை மேம்படுத்தவும் வணிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இக்குழுக்களின் தீர்மானங்களும், அவை தெரிவிக்கின்ற ஆலோசனைகளும், கருத்தில் கொள்ளப்படுகின்றன.

மாநில அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழுவை அரசு, 1992 ஜனவரி திங்களில் மாற்றியமைத்தது. இதனால் விற்பனைவரிச் சட்டங்களின் விதித்துறைகளைச் செயல்படுத்துவது தொடர்பாக பல்வேறுவகை வணிகப் பிரதிநிதிகள் தங்களுடைய முறையீடுகளைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பு கிடைக்கும். இக்குழுவின் பதவிக்காலம் அது ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.



## 11. மேல்வரி வசூலிலிருந்து உள்ளாட்சிமன்றங்களுக்கு மானியமளித்தல் :

உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள், சிறப்புநிலை நகராட்சிகள், பிற நகராட்சிகள், பேரூராட்சிகள் நகரியங்கள் ஆகியவற்றில் ஒவ்வொராண்டும் வசூலிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல்வரியில் 20 சதவீதத்தொகை மக்கள் தொகையின் அடிப்படையில் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமாக வழங்கப்படுகின்றது. அதைப் போன்ற சென்னை மாநகர எல்லைக்குள் வசூலிக்கப்படும் விற்பனைவரி மீதான மேல்வரியில் 50 சதவீதத்தொகை, சென்னை மாநகராட்சிக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

## 12. வணிக வரித் துறையின் பல்வேறு சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகை குறித்த விவரம் வருமாறு

### (அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் :

1987–88 முதல் 1991–92 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் கிடைத்த வரவு பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மொத்த வரவு. (ரூபாய் கோடியில்) |
|---|---|
| (1) | (2) |
| 1987–88 .. .. | 1,062.08 |
| 1988–89 .. .. | 1,218.86 |
| 1989–90 .. .. | 1,426.04 |
| 1990–91 .. .. | 1,779.03 |
| 1991–92 (31-1-1992 வரை) | 1,724.60 |

### (ஆ) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம் :

1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 1987–88 முதல் 1991–92 வரையிலான கால அளவில் கிடைத்த வரவு பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மொத்த வரவு. (ரூபாய் கோடியில்) |
|---|---|
| (1) | (2) |
| 1987–88 .. .. | 184.90 |
| 1988–89 .. .. | 213.00 |
| 1989–90 .. .. | 240.04 |
| 1990–91 .. .. | 276.07 |
| 1991–92 (31-1-1992 வரை) | 268.43 |

(இ) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டம் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம் :

1987–88 முதல் 1991–92 வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டங்களின்கீழ் கிடைத்த வரவு பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. (1) | | | மொத்த வரவு. (ரூபாய் கோடியில்) (2). |
|---|---|---|---|
| 1987–88 | ... | ... | 60.21 |
| 1988–89 | ... | ... | 63.21 |
| 1989–90 | ... | ... | 68.64 |
| 1990–91 | .. | ... | 69.62 |
| 1991–92 (31-1-1992 வரை) | | | 56.33 |

(ஈ) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரை பந்தய வரிச் சட்டம்.

1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாள் முதல் சென்னையிலும் (கிண்டி), உதகமண்டலத்திலும் குதிரைப் பந்தயங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை தமிழ்நாடு அரசின் குதிரைப் பந்தயத் துறை எடுத்துக் கொண்டுள்ளது.

1987–88 முதல் 1991–92 வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வரவு பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. (1) | | | மொத்த வரவு. (ரூபாய் கோடியில்) (2) |
|---|---|---|---|
| 1987–88 | ... | ... | 3.52 |
| 1988–89 | ... | ... | 4.72 |
| 1989–90 | ... | .. | 5.70 |
| 1990–91 | .. | .. | 5.66 |
| 1991–92 (31-1-1992 வரை). | | | 4.12 |



(உ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி விதிப்புச் சட்டம்.

1987–88 முதல் 1991–92 வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வரவு பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. (1) | | | | மொத்த வருவாய். (2) (ரூபாய் கோடியில்). |
|---|---|---|---|---|
| 1987–88 | .. | .. | .. | 2.70 |
| 1988–89 | .. | .. | .. | 2.87 |
| 1989–90 | .. | .. | .. | 17.98 |
| 1990–91 | .. | .. | .. | 17.04 |
| 1991–92 (31–1–1992 வரை). | | | | 13.79 |

(ஊ) தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம் :

இச் சட்டம், 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. 1987–88 முதல் 1991–92 வரையிலான கால அளவில் இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வரவு பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. (1) | | | | மொத்த வரவு. (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1987–88 | .. | .. | .. | 8.00 |
| 1988–89 | .. | .. | .. | 7.44 |
| 1989–90 | .. | .. | .. | 6.89 |
| 1990–91 | .. | .. | .. | 7.00 |
| 1991–92 (31–1–1992 வரை) | | | .. | 3.00 |

(எ) தமிழ்நாடு 1990ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டம்.

இச்சட்டம் 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வருவாய் விவரம் வருமாறு :—

| ஆண்டு (1) | மொத்த வரவு. (2) (ரூபாய் கோடியில்). |
|---|---|
| 1989–90 .. | 0.55 |
| 1990–91 .. | 19.67 |
| 1991–92 (31–1–1992 வரை) .. | 18.89 |

13. 1992–93ஆம் ஆண்டிற்கான வரிச் சலுகைகளும் கூடுதல் நிதி ஆதாரங்கள் திரட்டுதலும்.—

(1) 1992–93ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பொழுது பின்வரும் அறிவிப்புகள் 7—3—1992 முதல் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டன :—

(அ) பின்வரும் பொருட்களின் மீது அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| (i) மளிகைப் பொருட்கள் (அட்டவணை I மற்றும் II-ல் உள்ளவை நீங்கலாக). | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (ii) 1958 ஆண்டு வர்த்தக வணிக குறிகள் சட்டத்தின் கீழ் பெயர் பதிவு செய்யப்படாத நெய், மற்றும் இதர பாற் பொருட்கள். | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (iii) வெந்தயம், கிராம்பு .. .. | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (iv) குச்சிக்கிழங்கு சிப்ஸ் .. .. | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (v) சேமியா .. .. .. | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (vi) போலி நகைகள் (Imitation jewellery) | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |



| | |
|---|---|
| (vii) லமினேட் செய்யப்பட்ட சாக்குப் பைகள். | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (viii) வாடகைச் சீருந்து .. .. | 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (ix) பின்புறத்தில் சுமையேற்றும் இயந்திரம், சாக்கைக் கவிழ்த்துக் கொட்டும் வண்டி, மண் அகற்றும் ஊர்தி. | 9 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (x) பதனிடப்பட்ட தோல் உரிவைகள். | 4 சதவீதத்திலிருந்து 1 சதவீதம். |
| (xi) டிராக்டர்களின் மீதான நுழைவு வரி | 12 சதவீதத்திலிருந்து 7 சதவீதம். |
| (xii) வாடகைச் சீருந்துகளின் மீதான நுழைவு வரி. | 20 சதவிதத்திலிருந்து 10 சதவீதம். |

(ஆ) பின்வரும் பொருட்களுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து முழு விலக்களிக்கப்பட்டுள்ளது :—

(i) எல்லா வகையான குங்குமம்.

(ii) கண் மை.

(இ) இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள் மீதான வரி வீதம் 25 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.

(ஈ) தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 3(3)ன் செயல் வரம்பிலிருந்து, கருப்பஞ் சாற்றுக் கசண்டு விலக்கிக் கொள்ளப்படுகிறது.

(உ) கோதுமைக்கு முழு விலக்கு அளிக்கும் கோதுமைப் பொருட்களின் மீது 4 சதவீத வரி விதித்தலுக்குமான அரசின் நோக்கங்கள் தெளிவுபடுத்தப்படுகிறது.

(ஊ) ஓட்டல்கள், உணவு விடுதிகள் ஆகியவற்றில் விற்கப்படும் உணவு, குளிர்பானங்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கும் வரையறையான ஆண்டு மொத்த வியாபாரத் தொகை ரூ. 18.25 இலட்சத்திலிருந்து ரூ. 3 இலட்சமாகக் குறைக்கப்படுகிறது.

(எ) மக்களிடமிருந்து வணிக வரி வசூலிக்கப்பட்டுவிட்ட நிலையில், சில இனங்களில் வரி விதிப்பு குறித்து நீதி மன்றங்களில் வழக்குகள் தொடரப்படுகின்றன. இத்தகைய இனங்

1992 மார்ச் 19]

களில் வசூலிக்கப்பட்ட வரியை அரசிடம் செலுத்துவது தான் [illegible]யாகும். இதனை அரசிடம் ஒப்படைக்க வகை செய்யும் புதிய சட்டப் பிரிவு ஒன்று தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படும்.

(ஏ) வணிக வரி ஆணையாளர் அதிகாரத்திற்குட்பட்ட எந்த அதிகாரியாலும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்யும் அதிகாரத்தை வணிக வரி ஆணையாளருக்கு அளிக்கும் வகையில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மாற்றி அமைக்கப்பட உள்ளது. கீழ்நிலையில் உள்ள அதிகாரிகள் அதிகாரத்தை தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுக்க இது அவசியமாகிறது.

14, விற்பனை வரி, அரசு கருவூலத்திற்கு முக்கிய, பிரதான வருவாய் ஆதாரமாக இருப்பதால் வணிகவரித் துறை அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் தங்கள் தலையாய பொறுப்பினை உணர்ந்து பொது நலனில் அக்கறை கொண்டு, நேர்மையுடனும், திறமையுடனும், முனைப்புடனும் தங்கள் கடமைகளை ஆற்றுவதில் தங்களை மறு-அர்ப்பணம் செய்து கொள்வார்கள்.



## வணிகவரி மற்றும் அறநிலையத் துறை

1992 மார்ச் 24] கோரிக்கை எண். 5.

## முத்திரைத் தாள் நிர்வாகம்

### 1. பொது :

சொத்து விற்பனை, மாற்றம், அடைமானம், நன்கொடை, உடைமை, உரிமை நிலவர ஏற்பாடு முதலியவை குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத் தாள் தீர்வை விதிப்பதற்கு 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) வகை செய்கிறது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு பதிவுத்துறைத் தலைவர் 1-12-1980-லிருந்து வருவாய்க் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாக (முத்திரைத் தாள் வருவாய்) செயல்பட்டு வருகிறார். அவர் இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் மூலம் அரசுக்கு கிடைக்க வேண்டிய வருவாயை வசூலிக்கும் பொறுப்பிலும் இருந்து வருகிறார்.

### 2. முத்திரைத் தாள்களின் தேவையைக் கணித்தலும், முத்திரைத் தாள்களை வழங்குதலும் :

தமிழ்நாடு முழுவதற்கும் அஞ்சல் சாரா முத்திரைத் தாள்களான நீதித் துறையைச் சார்ந்த முத்திரைத் தாள்கள், நீதித் துறையைச் சாரா முத்திரைத் தாள்களின் தேவையை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து, அதனை, நாசிக்கிலுள்ள இந்திய பாதுகாப்பு அச்சக முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையிலுள்ள கருவூல கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத் தாள் கண்காணிப்பாளராக செயல்படுகிறார். முத்திரைத தாள்களின் ஆண்டு மற்றும் காலாண்டிற்கான தேவைப் பட்டியலை மாவட்டக் கருவூல அதிகாரிகளும், முத்திரைத் தாள் உதவி கண்காணிப்பாளரும் தயாரிக்கின்றனர். அவற்றை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைக்கிறார். வெவ்வேறு கருவூலங்களில் முத்திரைத் தாள்களின் இருப்பு நிலவரப்படியும், பொது மக்களுக்குத் தேவைப்படும் அனைத்து விதமான மதிப்புகளைக் கொண்ட முத்திரைத்தாள்களை வழங்கும் நோக்குடனும் பொது மக்களின் தேவை திடீரென அதிகரிக்கும்போது, அத்தேவையை நிறைவு செய்யும் வகையிலும், சென்னை, முத்திரைத் தாள்கள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைந்த முத்திரைத் தாள்கள் தேவைப் பட்டியலை தயாரிக்கிறார். குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத் தாள்கள் அவசரமாகத் தேவைப்படும் போதும் பற்றாக்குறை ஏற்படும் போதும், அம்முத்திரைத் தாள்களை இருப்பு வைத்துள்ள மாவட்டக் கருவூலத்திலிருந்து இருப்பு இல்லாத மாவட்ட கருவூலத்திற்குத் தேவையான முத்திரைத தாள்களை மாற்ற ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

[1992 மார்ச் 19

**3. உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் :**

உரிமம் பெற்ற முத்திரைத் தாள் விற்பனையாளர் மூலமும், கருவூலங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும், பொது மக்களுக்கு முத்திரைத் தாள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் 2,365 உரிமம் பெற்ற முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட உறுதி மொழிக்கிணங்க தற்போது முத்திரைத் தாள் விற்பனையாளர் எண்ணிக்கையை 5,000 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இது படிப் படியாக அமுல்படுத்தப்படும். முத்திரைத்தாள் விதிகளில் குறிப் பிட்டவாறு உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர் களுக்கு தரகுத் தொகை வழங்கப்படுகிறது. இவர்களின் பணி களை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத்துறை உயர் அதிகாரி களும் மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர். எதிர் பாராத சூழ்நிலையில் செயற்கையாக ஏற்படுத்தப்படும் முத் திரைத் தாள் தட்டுப்பாட்டைத் தவிர்க்க பொதுவான தன்மை யிலான பத்திரங்களைப் பொறுத்தமட்டில் முத்திரைத் தாள் களுக்கு பதிலாக, ரொக்கம் பெற்று சான்று சேர்க்க சார்பதி வாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முத்திரைத் தாள்கள் தாராளமாகக் கிடைப்பதற்கு உறுதி செய்யும் வகையில் மாநிலம் முழுவதுமுள்ள அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் முத்திரைத் தாள் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. பொது மக்கள் அவர்களுடைய பத்திரங் களில் முத்திரை வில்லைகளை ஒட்ட உதவும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் சிறப்பு ஒட்டு வில்லைகள் எப்போதும் கிடைக்கிறது.

**4. வருவாய் (முத்திரைத்தாள் வருவாய்) :**

| வருடம். | | பத்திரப்பதிவு அதிகாரிகள் மூலம். | முத்திரைத் தாள்கள் கண்காணிப்பாளர் மூலம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்.) | | |
| 1989–90 | .. | 233.20 | 17.15 | 250.35 |
| 1990–91 | .. | 267.53 | 20.48 | 288.01 |
| 1991–92 (12/91 வரை) | .. | 224.74 | 18.83 | 243.57 |



1992 மார்ச் 19]

**5. வழிகாட்டி மதிப்பு மறு நிர்ணயம் :**

அசையும் சொத்துக்கள் அல்லது அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின்பேரில் அதாவது சொத்துரிமை மாற்றம், சொத்து பரிமாற்றம், தானம், விடுதலை ஆவணம், உடைமை உரிமை நிலவரை ஏற்பாடு, நிலையான குத்தகை, உடைமை உரிமையிலுள்ள அடமானம் ஆகியவை போன்ற ஆவணங்களுக்குமுத்திரைத்தாள் தீர்வை விதிப்பதன் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது. சொத்து விற்பனை, மாற்றம், பரிவர்த்தனை, தானம், உடைமை உரிமை நிலவர ஏற்பாடு குறித்த நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பு அடிப்படையில் முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. பத்திரத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிட்டுள்ளதா என்பதை உறுதி செய்யும் நோக்கு டன், பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு அவரவர் அதிகார எல்லைக் குள் அமைந்துள்ள சொத்தின் தோராய மதிப்பைக் குறிப்பிடும் வழிகாட்டிப் பதிவேடு கொடுக்கப்பட்டுள்ளது.

காலமுறைக்கேற்ப ஒவ்வோராண்டும் வளர்ச்சி சதவிகிதம், விற்பனைப்புள்ளி விவரம், நிலத்தின் உபயோகம், பூகோள அமைப்பு, தெருக்களின் அகலம் மற்றும் விசாரணையின் மூலம் அறியப்படும் மதிப்பு ஆகிய விவரங்களைக் கொண்டு வழிகாட்டிப் பதிவேடுகள் மதிப்பு திருத்தியமைக்கப்படுவதற்கு ஒரு கூடுதல் பதிவுத்துறைத் தலைவரின் கீழ் ஒரு ''வழிகாட்டிக் குழு'' இயங்கி வருகிறது. அத்துடன் பொது மக்களிடம் இருந்து பெறப்படும் வழிகாட்டி மதிப்புகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுத்து முரண்பாடுகள் உடனுக்குடன் சரி செய்யும் பணியையும் இக்குழு மேற்கொண்டு வருகிறது. இக்குழு, வழி காட்டிப் பதிவேடுகளிலுள்ள மதிப்பு விவரங்களில் உள்ள முரண் பாடுகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து முறையீடுகளைப் பெற்று அவற்றின் மீது தல ஆய்வும், விசாரணையும் மேற்கொண்டு முரண்பாடுகளை சரி செய்கிறது. தற்போது பொது மக்களிடம் மனையிடங்களை வாங்கும் பழக்கம் அதிகரித்துள்ளதால், நகரங் களுக்கு அருகாமையிலுள்ள நிலங்களும், நஞ்சை நிலங்களும், விவசாய புறம்போக்கு நிலங்களும், தரிசு நிலங்களும், வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வழிகாட்டிக் குழு, துறையிலுள்ள அலுவலர்களின் உதவியைக் கொண்டு மனைப் பிரிவுகளையும், மனையிடங்களையும் ஆய்வு செய்தும், விசா ரணையின் மூலமும், பதிவுப் புள்ளி விவரங்கள் அடிப்படையிலும் சரியான மதிப்பை நிர்ணயம் செய்கிறது.

கடைசியாக திருத்தி அமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் 1-4-1991 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திருத்தத்தி னால் ஆண்டுதோறும் ரூ. 20 கோடி கூடுதல் வருவாய் அரசுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1992–93 ஆம் ஆண்டு திருத்திய மதிப்புகள் 18,416 கிராமங்கள் மற்றும் பிற இடங்களுக்கு 1-4-1992 முதல் நடைமுறைக்கு கொண்டு

வரும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேவைப்படும் போதெல்லாம், வழிகாட்டி மதிப்பை சரிபார்ப்பதன் மூலம், சொத்துக்களை குறைத்து மதிப்பிடும் பழக்கத்தை நீக்கும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**துறையின் வருவாய் வசூல் :**

இத்துறையில் தீவிரமான மேற்பார்வையினாலும், விழிப்புணர்வினாலும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள், முத்திரைத்தாள் தீர்வை ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய், 1968-69இல் ரூ. 40 கோடியாக இருந்தது. 1990-91 ஆம் நிதியாண்டில் கிடைத்த வருவாய் ரூ. 299.39 கோடியாக அதிகரித்துள்ளது. 1991-92இல் 31-12-1991 முடிய ரூ. 252.03 கோடி கிடைத்திருக்கிறது.

**6. இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் கீழ் 47-ஏ பிரிவின் கீழ் வரும் இனங்கள் :**

பத்திரங்களைப் பதிய வருபவர்கள் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சரியான மதிப்பைக் குறிப்பிட வேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு பத்திரத்தில் உண்மையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள, பத்திரப் பதிவு அதிகாரிகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டி பதிவேடுகளை வைத்து சரிபார்க்கின்றனர். பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும், வழிகாட்டி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏதுமிருந்து பத்திரம் பதிய வருபவர் அத்தொகையைச் செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47-ஏ இன் கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை நிர்மாணிப்பதற்கு பத்திரப் பதிவு அதிகாரி அந்த பத்திரத்தை மாவட்ட ஆட்சியருக்கு அதாவது இப்பணிக்காக நியமிக்கப்பட்ட தனித்துணை ஆட்சியருக்கு (முத்திரை) அனுப்பி வைப்பார். செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கிறார். அவ்வாறு சட்டப் பிரிவு 47-ஏ இன் கீழ் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்வதால் பாதிக்கப்பட்டவர்கள் துணை நீதிமன்றங்களில் முறையீடு செய்யலாம். முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏ யின்கீழ் மதிப்பு நிர்ணயம் செய்ய அனுப்பப்பட வேண்டிய ஆவணங்களின் எண்ணிக்கை பெருமளவில் உள்ளதால் 1991-92 ஆம் ஆண்டிற்கு முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏ யின் கீழ் ஆட்சியர்களாக தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை) மற்றும் உதவிகரப் பணியாளர்களை அரசு வழங்கியுள்ளது. மேற்கண்ட சிறப்புப் பணியாளர்கள் 1990-91 ஆம் ஆண்டில் 52,565 வழக்குகளை முடித்து ரூ. 5.40 கோடி வருவாயை ஈட்டியுள்ளனர்.



7. கட்டிடங்களைப் பார்வையிடுதல் :

கட்டிடங்களை விற்பனை செய்தல், நன்கொடையாக கொடுத்தல், பரிவர்த்தனை செய்தல் ஆகியவற்றைப் பொருத்தமட்டில் அக்கட்டிடத்தின் முழு விவரங்களையும் ஒரு பிற்சேர்க்கைப் படிவம் 1(அ)-வில் குறிப்பிட்டு பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், பத்திரம் பதிய வரும் பொதுமக்கள் பொதுவாக உண்மையான அளவுகள் மற்றும் விவரங்களை ஆவணத்தில் கொடுப்பதில்லை. எனவே, இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 27-இன் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய உண்மை விவரங்களை ஆவணத்தில் மறைத்து உண்மையான மதிப்பை மறைத்து குறைவாக மதிப்புக் காட்டப்பட்டுள்ள இனங்களைக் கண்டுபிடிக்க அரசு ஒரு கூடுதல் பதிவுத்துறைத் தலைவர் தலைமையின் கீழ் புலனாய்வுக் குழு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. நான்கு மாவட்டப் பதிவாளர்களையும், இருபத்தாறு தணிக்கை மாவட்டப் பதிவாளர்களையும், இரு உதவி செயற் பொறியாளர்களையும் உதவிசெர அலுவலர்களையும் கொண்டு இக்குழு இப்பணியினை மேற்கொள்கிறது. பதிவான கட்டிட ஆவணங்களில் புறநகர்களில் ரூ. 10,000-க்கும், நகரங்களில் ரூ. 25,000-க்கும் மேலான மதிப்புள்ள சொத்துக்களை ஆய்வுசெய்து உண்மை நிலைகள் மறைக்கப்பட்டிருப்பின் உரிய நடவடிக்கை எடுத்து, அரசுக்கு சேர வேண்டிய வருவாயை ஈட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1991-92 நிதியாண்டில் 31-12-1991 முடிய 46,113 ஆவணங்களில் கண்ட கட்டிடங்களை கள ஆய்வு செய்து ரூ. 6.12 கோடி வருவாய் ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இவ்வாண்டில் ரூ. 2.91 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. கண்டுபிடிக்கப்பட்ட தொகையில் கணிசமான தொகை உச்ச நீதிமன்ற வழக்கு ஒன்றில் முடிவானத் தீர்ப்பாணையை எதிர்நோக்கி வசூலிக்கப்படாமல் உள்ளது.

**8. இந்திய பதிவுச் சட்டம் மற்றும் முத்திரைச் சட்டங்களுக்கு முக்கியத் திருத்தங்கள் கொண்டு வருதல் :**

**(அ) பதிவுச்சட்டப் பிரிவு 28 :**

இந்தியப் பதிவுச் சட்டப் பிரிவு 28-ஐ சாதகமாக எடுத்துக் கொண்டு அண்டை மாநிலங்களில் இம்மாநில சொத்து சம்மந்தப்பட்ட கிரைய ஆவணங்களை பெருமளவில் பதிவு செய்கின்றனர். அண்டை மாநிலங்களில், உள்ள முத்திரைத் தீர்வை விகிதம், இம்மாநிலத்தைவிட குறைவாக இருப்பதால் இவ்வாறு ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதனால் அரசுக்கு பெருமளவில் முத்திரைத் தீர்வை இழப்பு ஏற்படுகிறது. எனவே, கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் உறுதி அளித்ததன் பேரில் தமிழ் நாட்டுச் சொத்துக்களை தமிழ்நாட்டிலேயே பதிவு செய்யும் வகையில் இந்திய பதிவுச் சட்டம் பிரிவு 28-க்கு திருத்த

மசோதா நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் தமிழ்நாட்டுச் சொத்துக்கள் அண்டை மாநிலங்களில் பதிவு செய்யும் போக்கை அறவே களைய ஏதுவாகும்.

(ஆ) முத்திரைச் சட்டம் பிரிவு 19(பி) :

இந்திய பதிவுச் சட்டம் பிரிவு 28-ஐ பயன்படுத்தி, தமிழகத்தினுள் அமைந்துள்ள பெருமதிப்புள்ள ஒரு சொத்து கேரளாவில் உள்ள ஒரு சிறிய மதிப்புள்ள சொத்துடன் சேர்த்து கேரள சார்பதிவகங்களில் பதிவு செய்யும் பல நிகழ்வுகள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. அத்தகைய பத்திரங்களில் அம்மாநிலத்தில் தமிழகத்தில் நிலவும் சந்தை மதிப்பினையும், முத்திரைத் தீர்வையையும் செலுத்தாமல், பத்திரத்தில் குறிக்கப்பட்ட கைமாறு தொகையின் மீது தீர்வை வசூலிக்கப்படுகிறது. மேலும் மிகுதித் தீர்வை வசூலிக்கப்படாமலும், இம்மாநிலத்தில் நிலவும், வழிகாட்டி மதிப்பினையும் அறிந்து கொள்ளாமலும் பதிவுகள் நடக்கின்றன. 1980 முதல் 1985 வரை 29,014 பத்திரங்கள் கன்னியாகுமரி மாவட்ட சொத்துக்கள் கேரள மாநில சார்பதிவகங்களில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்படி 5 ஆண்டுகளில் பதிவான பத்திரங்களில் முத்திரைத் தீர்வை மற்றும் மிகுவரியாக இம்மாநிலத்திற்கு ரூ. 2.11 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்குப் பின்பும், தமிழகத்தின் பல மாவட்டங்களிலிருந்தும், கேரளாவில் பதியும் வழக்கம் அதிகரித்திருக்கிறது. பதிவுச் சட்டம் பிரிவு 65-இன் கீழ் இவ்வாறு பதிவாகும் பத்திரங்களுக்கு மாவட்ட நகல்களை தமிழகத்திலுள்ள மாவட்டப் பதிவாளர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். தற்போதுள்ள பிரிவு 19-ஏயின் கீழ், மேற்கண்டவாறு பெறப்படும் மாவட்ட நகல்களின் மீது நடவடிக்கை எடுத்து, இரு மாநிலத்திற்கும் வேறுபடும் முத்திரைத்தீர்வையை வசூலிக்க இயலாத நிலை உள்ளது. ஆகவே, தற்போதுள்ள முத்திரைச் சட்டப் பிரிவு 19-ஏயின் கீழ் அசல் ஆவணங்கள் பெறப்படும்போது மட்டுமே நடவடிக்கை எடுக்க இயலும். கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் உறுதி அளித்தபடி நகல்களின் மீதே முத்திரைச் சட்டப் பிரிவு 47-ஏயின் கீழ் நடவடிக்கை எடுக்கும் எண்ணம் முத்திரைச் சட்டம் 1899 மத்திய சட்டம் II 1899 இல் பிரிவு 19-பி என்ற புதிய பிரிவை சேர்க்கும் வகையில் மசோதாவை நடப்புத் தொடரிலேயே கொண்டுவர ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் வேறுபடும் சந்தை மதிப்பிற்கு முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏயின் கீழ் மேற்கண்ட ஆவண நகல்களைக் கொண்டே நடவடிக்கை எடுத்து குறைவு கட்டணம் வசூலிக்கவும், வேறுபடும் முத்திரைத் தீர்வையை வசூலிக்கவும் வழிவகை ஏற்படும். தமிழக சொத்துக்கள் கேரள மாநிலத்தில் பதிவு செய்வதைத் தடுக்க இத்திருத்தம் ஒரு தீர்வு நடவடிக்கையாகும்.



(இ) முத்திரைச் சட்டம் பிரிவு 27 :

1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 27-இல் முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதை நிர்ணயிக்கு கைமாறு தொகை, சந்தை மதிப்பு மற்றும் சொத்து பற்றிய உண்மை விவரங்கள், சூழ்நிலைகளை ஒரு பத்திரத்தில் முழுமையாக தரப்பட வேண்டுமென வகை செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி தரப்பட வேண்டிய உண்மை விவரங்களை மறைக்கும் குற்றத்திற்கு முத்திரைச் சட்டம் பிரிவு 64-இன் கீழ் குற்ற வழக்கு தொடரப்பட வேண்டும். முத்திரைச் சட்டம் பிரிவு 27-இன் படி தரப்பட வேண்டிய விவரங்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சரிபார்க்க அதிகாரமும் மேற்படி பிரிவின்படி தரப்பட வேண்டிய உண்மை விவரங்கள் எவை எவை என்பதற்கும் தற்போது முத்திரைச் சட்டத்தில் வகை இல்லை.

ஆவணத்தில் உள்ள குறைபாடுகளை நிரூபிக்கவும் ஊர்ஜிதப் செய்யவும் நீதி சார்ந்த விசாரணைக்கு வழிவகை செய்திட தற்போது முத்திரைச் சட்டத்தில் வகை செய்யப்பட வேண்டியுள்ளது. இவ்வாறு முத்திரைச் சட்டம் பிரிவு 27-ஐ மீறிய குற்றத்தினை இணக்கம் செய்து கொள்ளவும் வகை செய்யப்பட வேண்டியுள்ளது. இதன்படி விசாரணைக்கும், சொத்தினை ஆய்வு செய்து விசாரிப்பதற்கும், அத்தகையக் குற்றத்தினை இணக்கம் செய்து கொள்ளும்போது இணக்கக் கட்டணம் நிர்ணயிக்கவும், முதன்மை வருவாய்க் கட்டுப்பாடு அதிகாரி (முத்திரைத் தாள்) மேல்முறையீடுகளைக் கவனிக்கவும், முத்திரைச் சட்டம் பிரிவு 27-இல் வழிவகைகளை ஏற்படுத்த திருத்தம் கொண்டுவரப் பட உள்ளது.

(ஈ) முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏ :

முத்திரைச் சட்டப் பிரிவு 47-ஏஇன் படி ஆட்சியரால் ஆவண சொத்தின் சந்தை மதிப்பு நிர்ணயித்த பின்பு, இதனால் பாதிப்பு ஏதும் ஏற்பட்டால் சம்மந்தப்பட்ட கட்சிக்காரர் முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏயின் உப பிரிவு 5-இன் கீழ் சார்பு நீதிமன்றங்கள் மற்றும் நகர உரிமையியல் நீதி மன்றங்களில் மேல்முறையீடு செய்யலாம். இவ்வாறு மேல்முறையீடு செய்யும்போது விரைவில் நிவாரணம் கிடைத்திடவும் நிர்வாகச் செலவை குறைக்கவும் அதிகார அமைப்பில் மேல்முறையீடு செய்ய வகை செய்தல் நல்லது. எனவே, ஆட்சியரின் ஆணையை எதிர்த்து முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி (முத்திரை)யிடம் மேல்முறையீடு செய்யும் வகையில் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏல் திருத்தம் செய்யப்படவுள்ளது. ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும் சொத்தின் மதிப்பு அரசுக்கு முத்திரைத் தீர்வை இழப்பு ஏற்படும் வகையில் இருக்குமானால் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி சுயமாக ஆட்சியரின் ஆணையை உரிய விசாரணை மூலம் திருத்தி ஆணையிடவும் இதில் வகை செய்யப்பட்டுள்ளது.

## 9. முத்திரைத் தாள் தீர்வை மீதான மேல்வரி : [1992 மார்ச் 19

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை,
உரிமையுடன்கூடிய அடைமானம், அதன் மாற்றர் நிலையான
குத்தகை தொடர்பாக ஆவணங்களைப் பொறுத்தவரையில்
முத்திரைத் தாள் தீர்வையுடன் 5 சதவீதப் மேல்வரி கூடு
தலாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும்
நகராட்சிகளைப் பொறுத்தமட்டில் மேல்வரியாக வசூலிக்கப்
படும் தொகையில் 10 சதவீத தொகையை வசூல் கட்டணமாக
இத்துறை எடுத்துக் கொண்டு எஞ்சியுள்ள 90 சதவீத
தொகையை மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் வழங்
கப்படுகிறது. அதேபோல் நகர பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி
மன்றங்களுக்கு சம்மந்தப்பட்ட மேல்வரி வசூலில் 3 சதவிகிதம்
இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக் கொள்கிறது. மீத
முள்ள 97 சதவிகிதம் மேல்வரியை சம்பந்தப்பட்ட நகர
பஞ்சாயத்துக்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப்
படுகிறது.

## 10. 1990-91ஆம் ஆண்டிலும் 1991—92-இல் 31-12-1991 முடிய ஆண்டிலும் முத்திரைத்தாளின் வரவு செலவு விவரங்கள்:

| கணக்குத் தலைப்பு. | 1990-91 | 1991-92 |
|---|---|---|
| | (1-4-1990—31-3-1991). | (1-4-1991—31-12-1991— |
| (1) | (2) ரூ. | (3) ரூ. |
| 1. நீதித்துறை சாரா முத்திரைத்தாள்கள். | 202,16,57,311.95 | 97,67,26,364 |
| 2. நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள். | 16,69,27,325.15 | 12,33,96,616 |
| 3. உண்டியல் முத்திரைத் தாள்கள். | 7,66,127.00 | 7,80,79,702 |
| 4. ஒட்டு முத்திரைத் தாள்கள். | 374,63,579.50 | 18,38,54,331 |
| 5. பலவகை வரவு .. | 55,42,03,449.40 | 106,80,58,204 |
| பெரு மொத்த வரவுகள் .. | 278,00,17,793.00 | 243,01,15,220 |



1992 மார்ச் 19]

**கழிப்பு— திருப்பிச் செலுத்தியவை :**

| (1) | (2) ரூ. | (3) ரூ. |
|---|---|---|
| 1. உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்படும் தொகை உட்பட நீதித்துறை சாராதவை .. | 78,36,95,032.45 | 54,26,36,544 |
| 2. நீதித்துறை சார்ந்தவை | 75,89,962.80 | 58,10,426 |
| | 79,12,84,995.25 | 54,84,46,970 |

| (1) | (2) ரூ. | (3) ரூ. |
|---|---|---|
| **கட்டணங்கள் :** | | |
| 1. முத்திரைத்தாள் விற்பனையில் தள்ளுபடி | 1,08,82,372.00 | 68,46,49 |
| 2. பணியாளர் செலவு .. | 67,15,980.00 | 80,07.23 |
| 3. நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் அச்சகத்திற்கு செலுத்தத்தக்க கட்டணம் | 84,41,692.00 | 51,40,84 |
| மொத்தச் செலவுகள் .. | 2,60,40,044.00 | 1,99,94,61 |
| மொத்த வரவுகள் .. | 278,00,17,793.00 | 243,01,15,22 |
| மொத்த செலவுகளும் திருப்பி கொடுக்கப்பட்ட தொகையும் .. | 81,73,25,039.25 | 56,84,41,58 |
| நிகர வரவுகள் .. | 196,26,92,753.75 | 186,16,73,63 |

## 11. நிதி நிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்புகள் :

சில குறிப்பிட்ட வகையான பத்திரங்கள் மீதான முத் திரைத்தாள் வரி விகிதத்தை மாற்றி அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. தற்போது சில வகையான குத்தகை, உடைமை இல்லாத அடமானம், பாகப் பிரிவினை, விடுதலைப் பத்திரம் குடும்ப அங்கத்தினருக்குள் ஏற்பாடு ஆவணம் முதலானவற்றின் மீது விதிக்கப்படும் 3 சதவீத முத்திரைத்தாள் வரி 4 சதவீதமாக மாற்றியமைக்கப்படும். இம்மாற்றம் 1-7-1992 முதல் அமலுக்கு வரும். இதர சில பத்திரங்களுக்கு நிலைப் பட்ட விகிதத்தில் முத்திரைத்தாள் வரி விதிக்கப்படுகின்றது. இதனை தகுந்த முறையில் மாற்றியமைக்கப்பட இருக்கிறது. கடன் ஏற்பளிப்பு, கடன் உறுதி ஆவணம், மாற்று முறி, பங்கு மாற்றம், ரசீதுகள், கப்பல் சரக்குப் பட்டி முதலான நடவடிக்கைகளின்மீது வரி 'விதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. மாநிலங்களுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில் இந்த வரி விதிதங்களை மாற்றி அமைக்கு மாறு மத்திய அரசை இவ்வரசு கேட்டுக் கொள்ள இருக்கிறது.





## வணிகவரி மற்றும் அறநிலையத் துறை.

## 1992-93 மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

1864-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பலதரப்பட்ட சேவைகளை ஆற்றும் பத்திரப்பதிவுத் துறை தனது 127 ஆண்டு கால வரலாற்றை இவ்வாண்டில் நிறைவு செய்ய உள்ளது. இத்துறை 1908-ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தையும் (மத்திய சட்டம் 16,1908) மற்றும் ஓமே பத்தி 3-ல் குறிப்பிட்ட சட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது. அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பதிவு செய்தலும் அவை சம்பந்தப்பட்ட பதிவு ஆவணங்களைப் பாதுகாத்துப் பேணலும் இத்துறையின் முக்கிய மான பணிகளாகும்.

### 2. நிர்வாக அமைப்பு :

(அ) தலைமை அலுவலகம :—பத்திரப் பதிவுத் துறைத் தலைவராக இந்திய ஆட்சிப் பணித் தரத்தில் உள்ள அலுவலர் ஒருவர் உள்ளார். பிறப்பு, இறப்பு திருமண தலைமைப் பதிவாளராகவும், 1982-ஆம் ஆண்டு மத்திய சிட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 40/1982) சிட்டு நிதிகள் பதிவாளராகவும், 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டத்தின்கீழ் சங்கங்களின் பதிவாளராகவும் இவர் இருக்கிறார்.

இவருக்கு உதவியாகப் பின்வரும் அதிகாரிகள் தலைமையிடத்தில் பணியாற்றி வருகின்றனர்.

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி).

2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு).

3. துணைப் பதிவுத் துறைத் தலைவர் பதவித் தரத்தில் சட்ட அலுவலர்.

4. துணைப் பதிவுத் துறைத் தலைவர் பதவித் தரத்தில் கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர்.

5. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (உதவிப் பதிவுத் துறைத் தலைவர் பதவித் தரத்தில்).

6. மாவட்டப் பதிவாளர் பதவித் தரத்தில் பத்திரப் பதிவுத் துறைத் தலைவருக்கு நேர்முக உதவியாளர் (சீட்டு நிதிகள்).

7. கணக்கு அலுவலர்.

8. காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையின்கீழ் இயங்கும் விழிப்புப் பணிக்குழு.

## (ஆ) மண்டல அலுவலகங்கள் :

வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சென்னை ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் பத்திரப் பதிவு துறை துணைத் தலைவர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் சென்னை, வேலூர் நீங்கலாக இரு உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் உள்ளனர். சென்னை மற்றும் வேலூர் மண்டலங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு உதவிப் பதிவுத் துறைத் தலைவர் உள்ளனர். மண்டலம் முழுவதையும் நிர்வகித்தல், அனைத்து அலுவலகங்களையும் ஆய்வு செய்தல், விசாரணைகள் நடத்துதல் ஆகியவை துணைப் பதிவுத் துறைத் தலைவரின் முக்கியமான கடமைகளாகும். அவருடைய மண்டலத்திற்குள் உள்ள உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள், மாவட்டப் பதிவாளர்கள், சார்பதிவாளர்கள் ஆகியோரின் அலுவலகங்களின் பணியை மேற்பார்வையிடும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. மண்டல வருவாய் குறியீட்டினை எட்டுதல் அவரின் தலையாய பொறுப்பாகும்; 1982-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் துணைப் பதிவுத் துறைத் தலைவர் இணைப் பதிவாளராகவும் உள்ளார்.

## (இ) சரக அலுவலகங்கள் :—

சென்னை, வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவர் வீதம் 8 உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், புகார்கள் தொடர்பாக



விசாரணைகள் செய்தல் ஆகியவை உதவிப் பதிவுத் துறைத்
தலைவர்களின் முக்கியமான கடமையாகும். அவர்கள்,
சங்கங்களையும் சீட்டு நிதி நிறுவனங்களையும் ஆய்வு செய்
கின்றனர். பொதுவாக, அவர்கள் அந்தந்த மண்டலங்களில்
பத்திரப் பதிவுத் துறைத் துணைத் தலைவரின் அன்றாட
நிருவாக அலுவல்களில் அவருக்கு உதவி புரிகின்றனர்.

## (ஈ) மாவட்ட அலுவலகங்கள் :

இம்மாநிலம் 46 பத்திரப் பதிவு மாவட்டங்களாகப்
பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்டப்
பதிவாளர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர்
சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதிகளின் துணைப்
பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனம்
ஆகியவற்றின் பதிவாளராகவும் இருக்கிறார். சார்பதிவாளர்
அலுவலகங்களை ஆய்வு செய்தல், பத்திரப் பதிவு சட்டத்
தின் கீழ் செய்யப்படும் மேல் முறையீடுகளை விசாரித்தல்,
பத்திரங்களின் தன்மை தொடர்பாக சார்பதிவாளர்கள்
எழுப்பும் ஐயங்களுக்கு விளக்கமளித்தல், புகார்கள் ஏதேனும்
வரப்பெற்றால் அவற்றை விசாரித்தல், சொத்துக்களின்
மதிப்பைக் குறைவாகக் குறிப்பிட்டுள்ள பத்திரங்கள்
அடங்கிய சொத்துக்களை கள ஆய்வு செய்து சரியான
மதிப்பை நிர்ணயித்தல் ஆகியவை அவருடைய முக்கியமான
பணிகளாகும். நிருவாகத்தில் திறமையை மேம்படுத்தும்
பொருட்டும் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி
ராப்பள்ளி ஆகிய பெருநகர்களில் உள்ள மாவட்டப் பதி
வாளர் (நிருவாகம்) பணியிடங்கள் உதவிப் பதிவுத் துறைத்
தலைவர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளன. சார்பதிவாளர்
களின் அலுவலகங்களைத் தணிக்கை செய்யவும் ஒரு ஏற்பாடு
இத்துறையில் உள்ளது. இதன்படி 26 தணிக்கை மாவட்டப்
பதிவாளர்கள் ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்தின்
கணக்குகளையும் ஒவ்வொரு காலாண்டிலும் தணிக்கை செய்
கின்றனர். கட்டிடம் போன்ற சொத்துக்களைத் தல ஆய்வு
செய்யும் பணி இவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும்
பத்திரங்களின் முத்திரைத் தீர்வை ஈர்க்கக்கூடிய விவரங்களை
மறைத்து எழுதப்படுகின்றனவா என சரிபார்க்கும் பணிகளிலும்
இந்த தணிக்கை சார்பதிவாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

## (உ) சார்பதிவகங்கள் :

மாநிலம் முழுவதும் 574 சார்பதிவாளர் அலுவலகங்கள்
உள்ளன. இவை ஒவ்வொன்றையும் சார்பதிவாளர் ஒருவர்
நிருவகித்து வருகிறார். அவர் புலவனையான் ஆவணங்க

களையும் பதிவு செய்கிறார். வில்லங்கச் சான்றிதங்கள் வழங்குகிறார். ஆவணங்களில் நகல்களுக்குச் சான்றளிக்கிறார். திருமணங்களையும், சீட்டுக்களையும் பதிவு செய்கிறார். பதிவுத் துறையின் பணி பொது மக்களுக்கு எளிதில் கிட்டும் வகையில் இத்துறையை திருத்தியமைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் வகையிலும் ஒவ்வோராண்டும் சார் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை போன்ற பெரு நகர்களைப் பொறுத்தவரையில் பதிவுக்கு வரும் ஆவணங்கள் சிக்கலானதாகவும் அதிகமான மதிப்புள்ளதாக இருப்பதாலும், அந்த பெரு நகர்களிலுள்ள சார்பதிவாளர்கள் மாவட்டப் பதிவாளர்கள் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

(ஐ) புலனாய்வுக் குழு :

வீடு மற்றும் கட்டிடங்கள் போன்ற அசையாச் சொத்துக்கள் கை மாறும் ஆவணங்களில், நீளம், அகலம், கட்டிடத் தன்மை, பரப்பு, வயது போன்ற உண்மை நிலைகளை மறைத்து மதிப்புக் குறைவு செய்து அதனால் அரசுக்கு வரக்கூடிய முத்திரை வருவாய் மற்றும் பதிவுக் கட்டணங்களை ஏமாற்றும் வகையில் ஆவணதாரர்கள் பெரும்பாலோர் செய்து வந்தனர். இந்திய முத்திரை சட்டப்பிரிவு 27 இன்படி கைமாறும் சொத்தில் உண்மை நிலைகள் முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பது சட்டமாகும். இருப்பினும் இதனை ஏமாற்றும் வகையில் மேற்கண்ட செயல்முறைகள் நடந்து வந்தன. அதனைத் தடுக்கும் வகையில் புலனாய்வுக் குழு ( Intelligence cell ) என்ற ஒரு அமைப்பினை அரசு ஆணை எண். 390/வணிகவரி மற்றும் அறநிலையத்துறை நாள்; 27—5—89 ஆல் ஏற்படுத்தி உள்ளது. அதன்படி மேற்படி புலனாய்வுப் பிரிவு ஒரு கூடுதல் பதிவுத்துறைத் தலைவரின் தலைமையில் 4 மாவட்டப் பதிவாளர்களையும், இரு உதவிச் செயற்பொறியாளர்களையும் கொண்டு இயங்குகிறது. இவர்களுடன் நிர்வாக மாவட்டப் பதிவாளர்களையும், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களையும், துணைப் பதிவுத் துறைத் தலைவர்களையும் ஈடுபடுத்தி கட்டிடக் களப்பணி செய்யப்பட்டு வருகிறது. 31—1—92 முடிய ரூ. 6.12 கோடி மதிப்புக் குறைவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 31—12—91 முடிய ரூ. 2.91 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. கண்டுபிடிக்கப்பட்ட தொகையில் கணிசமான தொகை உச்ச நீதிமன்ற வழக்கு ஒன்றில் முடிவான தீர்ப்பாணையை எதிர்நோக்கி வசூலிக்க முடியாத நிலையில் உள்ளது. இவை தவிர, இந்த புலனாய்வுக் குழு மண்டலக் கணக்காயரின் தணிக்கைப் பத்திகளையும் துறைத் தணிக்கைப் பத்திகளையும் முடிப்பது பற்றியும் நடவடிக்கை எடுக்கிறது.



(எ) வழிகாட்டி மதிப்பு மறு நிர்ணயம் :

அசையும் சொத்துக்கள் அல்லது அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின் பேரில் அதாவது சொத்துரிமை மாற்றம், சொத்து பரிமாற்றம், தானம், விடுதலை, ஆவணம், உடைமை நிலவர ஏற்பாடு, நிலையான குத்தகை, உடைமை உரிமையிலுள்ள அடைமானம் ஆகியவை போன்ற ஆவணங்களுக்கு முத்திரைத் தாள் தீர்வை விதிப்பதன் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது. சொத்து விற்பனை, மாற்றம், பரிவர்த்தனை, தானம், உடைமை, உரிமை நிலவர ஏற்பாடு குறித்த நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பு அடிப்படையில் முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. பத்திரத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யும் நோக்குடன், பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு அவரவர் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள சொத்தின் தோராய மதிப்பைக் குறிப்பிடும் வழிகாட்டிப் பதிவேடு கொடுக்கப்பட்டுள்ளது.

காலமுறைக்கேற்ப ஒவ்வோராண்டும் வளர்ச்சி சதவிகிதம், விற்பனைப் புள்ளி விவரம், நிலத்தின் உபயோகம், பூகோள அமைப்பு, தெருக்களின் அகலம் மற்றும் விசாரணையின் மூலம் அறியப்படும் மதிப்பு ஆகிய விவரங்களைக் கொண்டு வழிகாட்டிப் பதிவேடுகள் மதிப்பு திருத்தியமைக்கப் படுவதற்கு ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் கீழ் ஒரு " வழிகாட்டிக்குழு " இயங்கி வருகிறது. அத்துடன் பொது மக்களிடம் இருந்து பெறப்படும் வழிகாட்டி மதிப்புகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுத்து முரண்பாடுகள் உடனுக்குடன் சரிசெய்யும் பணியையும் இக்குழு மேற்கொண்டு வருகிறது. இக்குழு, வழிகாட்டிப் பதிவேடுகளிலுள்ள மதிப்பு விவரங்களில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து முறையீடுகளைப் பெற்று அவற்றின் மீது தல ஆய்வும், விசாரணையும் மேற்கொண்டு முரண்பாடுகளை சரி செய்கிறது. தற்போது பொது மக்களிடம் மனையிடங்களை வாங்கும் பழக்கம் அதிகரித்துள்ளதால், நகரங்களுக்கு அருகாமையிலுள்ள நிலங்களும், நஞ்சை நிலங்களும், விவசாய புறம்போக்கு நிலங்களும், தரிசு நிலங்களும், வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வழிகாட்டிக்குழு, துறையிலுள்ள களப்பணி அலுவலர்களுடன் சேர்ந்து மனைப் பிரிவுகளையும், மனையிடங்களையும் ஆய்வு செய்தும், விசாரணையின் மூலமும், பதிவுப் புள்ளி விவரங்கள் அடிப்படையிலும் சரியான மதிப்பை நிர்ணயம் செய்கிறது.

கடைசியாக திருத்தி அமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் 1–4–91 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத் திருத்தத்தினால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 20 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1992–93 ஆம் ஆண்டு திருத்திய மதிப்புகள் 18,416 கிராமங்கள் மற்றும் பிற இடங்களுக்கு 1–4–92 முதல் நடைமுறைக்கு கொண்டு

வரும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேவைப்படும் போதெல்லாம், வழிகாட்டி மதிப்பை சரிபார்ப்பதன் மூலம், சொத்துக்களை குறைத்து மதிப்பிடும் பழக்கத்தை நீக்கும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. இத்துறை நிர்வகிக்கும் பல்வேறு சட்டங்கள் :

1. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம்.

2. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம்.

3. 1982 ஆம் ஆண்டு சிட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982).

4. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்.

5. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம்.

6. 1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு திருமணங்கள் சட்டம்.

7. (அ) 1936 ஆம் ஆண்டு பார்சி இனத்தவர் திருமணங்கள் மற்றும் விவாகரத்துச் சட்டம்.

(ஆ) 1969 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம்.

(இ) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணங்கள் சட்டம்.

(ஈ) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணங்கள் சட்டம்.

(உ) 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்பு சட்டம்.

(ஊ) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டு நிதிகள் சட்டம்.

8. 1972 ஆம் ஆண்டு வணிகஞ்சாரா நிறுவனங்கள் சட்டம்.

4. வருவாய் :

ஆவணங்கள் மீது விதிக்கப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை, பத்திரப் பதிவுக் கட்டணங்கள், சிட்டுகள், சங்கங்கள், கூட்டு வணிக நிலையங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காக விதிக்கப்பட்ட கட்டணங்கள் ஆகியவை இத்துறைக்கு வருவாய் தரும் முக்கிய இனங்களாகும். கிரயம், பிணாமி, விடுதலை முதலிய ஆவணங்களில், ஆவணத்தில் கூறப்படும்



கைம்மாறும் தொகையின் மீது முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டு வந்தது. இந்த அடிப்படையை மாற்றி சொத்தின் அங்காடி மதிப்பின் மீது இதுபோன்ற ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை வசூலிக்க வேண்டும் என்று 1968 இல் முத்திரைச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப் பெற்றது. இது இந்த சட்டத்தில் ஏற்பட்ட ஒரு முக்கிய மாற்றமாகும். சொத்துக்களின் சந்தை மதிப்பைக் குறிக்கும் வழிகாட்டிப் பதிவேடுகள் சார்பதிவாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. அவை சந்தை மதிப்பிற்கேற்ப ஆண்டு தோறும் திருத்தி அமைக்கப்படுகின்றன. கடைசியாக, 1—4—91 முதல் நடைமுறைப்படுத்தும் வண்ணம் இந்தத் திருத்தப்பணி செய்யப்பட்டுள்ளது. 31—1—[illegible] முதல் இத்துறையின் மொத்த வருவாய் ரூ. 252.03 கோடியாகும்.

5. ஆவண எழுத்தர்களும், நகல் எழுத்தர்களும் :

நகல் எழுத்தர்கள் உரிம விதிகள் 1971 இல் இயற்றப்பட்டன. ஆவண எழுத்தர்களுக்கு உரிமங்கள் வழங்குவது தொடர்பான விதிகள் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் தேதியிலிருந்து செயலுக்கு கொண்டு வரப்பட்டன. 31—1—1992 நாள் நிலவரப்படி, நகல் எழுத்தர், நகல் தட்டச்சர், ஆவண எழுத்தர் உரிமங்களின் எண்ணிக்கை வருமாறு :—

| (1) | ஆவண எழுத்தர்கள். (2) | நகல் எழுத்தர்கள். (3) | நகல் தட்டச்சர்கள். (4) |
|---|---|---|---|
| 1. மாநில உரிமம் வைத்திருப்பவர்கள் | 5,193 | 4,869 | 1,890 |
| 2. மாவட்ட உரிமங்கள் | 6,912 | 5,750 | 725 |
| 3. துணை மாவட்ட உரிமங்கள் | 6,757 | 6,500 | 130 |
| மொத்தம் .. | 18,862 | 17,119 | 2,745 |

## 6. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975).

1908 ஆம் ஆண்டு இந்திய பதிவுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப் பட்ட பதிவுத் துறைத் தலைவர், அனைத்து மாவட்டப் பதிவாளர் கள் ஆகியோர் இச்சட்டத்தின்படி தத்தம் அதிகார வரம்பிற்குட் பட்ட பகுதிக்கு பதிவாளர்களாவர். பதிவுத்துறைத் தலைவர் பதிவாளர்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் படைத்தவர். பத்திரப் பதிவுத் துறைத் தலைவரின் அனுமதி பெற்ற பிறகே இச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர இயலும்.

இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் கூறப்பட்ட கல்வி, இலக்கியம், அறிவியல், போன்ற நோக்கங்களுக்காக எழுவர் சேர்ந்து ஒரு சங்கத்தை அமைக்கலாம். ஆண்டு வரவு செலவு ரூ. 10,000-க்கு மேல் அல்லது 20 உறுப்பினர்களுக்கு மேல் உள்ள சங்கங்கள், அவை அமைக்கப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் கட்டாய மாகப் பதிவு செய்யப்பட வேண்டும். மதம், உடற்பயிற்சி அல்லது விளையாட்டுக்கள் முதலியவற்றை மேம்படுத்துவதற் காக அமைக்கப்பட்ட சங்கங்களும் அல்லது 10,000 ரூபாய்க்கு குறைவான வருமானம் உள்ள ஏனைய சங்கங்களும் அல்லது 20 உறுப்பினர்களுக்குக் குறைவாக உள்ள சங்கங்களும் விரும்பினால் பதிவு செய்து கொள்ளலாம்.

ஆண்டு வரவு செலவு 10,000 ரூபாய்க்கு மேல் உள்ள ஒவ் வொரு சங்கமும் அதன் கணக்குகளை, ஆண்டுதோறும் பட்டயக் கணக்கர்களைக் கொண்டு தணிக்கை செய்ய வேண்டும். சங் கத்தின் ஆண்டு வருமானம் 10,000 ரூபாய்க்கு குறைவாகவும் 2,500 ரூபாய்க்கு அதிகமாகவுமிருந்தால், அச்சங்கத்தின் கணக் குகளை அச்சங்கத்தின் பட்டதாரி உறுப்பினர் ஒருவரைக் கொண்டு தணிக்கை செய்ய வேண்டும். அதன் ஆண்டு வரு மானம் 2,500 ரூபாய்க்கு குறைவாக இருந்தால் 10 ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்ற சங்க உறுப்பினர் ஒருவரைக் கொண்டு அச் சங்கத்தின் கணக்குகளை தணிக்கை செய்யவேண்டும். தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளுக்கு நிதியாண்டு முடிவுற்ற நாளி லிருந்து 6 மாதங்களுக்குள் அச்சங்கத்தின் பொதுக்குழு ஒப்பு தலளிக்க வேண்டும். அத்துடன் (1) வரவு செலவு கணக்குகளின் அதிகாரப் பூர்வமான நகல், ஐந்தொகை கணக்கு, அறிக்கைகள், (2) நிதியாண்டு முடிவுறுகையில் அச்சங்கத்திலுள்ள உறுப்பினர் களின் பட்டியல், (3) நிதியாண்டில் சங்கம் சரிவர செயல்பட்டு வருவதற்கான உறுதிமொழி ஆகியவற்றைப் பொதுக்குழுவின் ஒப்புதல் பெற்ற இரண்டு திங்களுக்குள் ஆண்டுதோறும் மாவட்டப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

31–1–1992 இன்படி செயல்முறையில் உள்ள சங்கங்களின் எண்ணிக்கை 45,030 ஆகும். 1991 ஆம் ஆண்டில் பதிவான சங்கங்களின் எண்ணிக்கை 5,543 ஆகும். தமிழ்நாடு சங்கப்



பதிவுச் சட்டத்தை சிறப்பாக நிர்வகிக்கும் பொருட்டும், தவறு செய்யும் சங்கங்களை திருத்தி அமைக்கும் பொருட்டும் பொது மக்களுக்கு இன்னும் சிறப்பாக தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டும் தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம் பிரிவுகள் 15(3), 34, 36, 49(ஏ) ஆகியவற்றைத் திருத்தம் செய்ய சட்டப் பேரவையில் உறுதி அளிக்கப்பட்டது. தவறு செய்யும் சங்கங் களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் வகையில் தனி அலுவலர் களை நியமனம் செய்ய சங்கங்களின் பதிவாளருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத் திருத்தம் குறித்து சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சங்கங்கள் சரிய முறையில் செயல்படுவதை உன்னிப்பாகவும், செம்மை யாகவும் கண்காணிக்கும் பொருட்டு நிர்வாக அமைப்பைப் பலப் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 7. சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982):

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்திற்குப் பதிலாக இச்சட்டம் 13–4–1984 ஆம் நாளிலிருந்து தமிழ் நாட்டில் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பதிவுத் துறைத் தலைவரே சீட்டுப் பதிவாளராகவும் செயல்பட்டு வரு கிறார். கூடுதல் சீட்டுப் பதிவாளர் ஒருவரும், நேர்முக உதவியாளர் (சீட்டு) ஒருவரும் தலைமையிடத்தில் சீட்டுப் பதி வாளருக்கு உதவி புரிகின்றனர். அரசாணை எண். 135, வணிக வரி மற்றும் அறநிலையத்துறை, நாள். 6–3–1990ன்படி பதிவுத் துறைத் தலைவர் சட்டத்தின்படி பணிபுரியும் துணைப் பதிவுத்துறைத் தலைவர் [illegible] 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் இணைப் பதிவாளர்களாகவும் அனைத்து மாவட்டப் பதிவாளர் சீட்டுப் பதிவாளர்களாகவும் தத்தம் அதிகார வரம்பில் துணைச் சீட்டுப் பதிவாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மாவட்ட வரம்பிற்குள் சீட்டு நிதி பணியைக் கவனிக்க 46 சார்பதிவாளர்கள் [illegible] சீட்டு நிதி ஆய்வாளர்களாக பணியாற்றி வருகின்றனர். சந்தா தாரர்களின் நலத்தினை பாதுகாக்க பல விதிகளை உள்ளடக்கிய மத்திய சீட்டு நிதிகள் சட்டம். [illegible] இச்சீட்டு நிதிகள் வைக்கப்பட்டுள்ள பிணை வைப்பீடு சட்டத்தின்படி வகுத்து 31–1–1992 நிலவரப்படி ரூ. 76.60 கோடி களின் மதிப்பு [illegible] யாகும்.

தமிழ்நாட்டில் தற்போது பதிவு செய்யப்பட்ட சீட்டு நிதி நிறுவனங்கள் 4,201 உள்ளன. அவை நடத்துகின்ற சீட்டு களின் எண்ணிக்கை 22,860 ஆகும்.

## 8. சீட்டு விழிப்புக்குழு:

சீட்டு நிறுவனங்கள் மீது வரும் புகார்களை கவனிக்கவும் பதிவுறா சீட்டு நடத்துபவர்களையும் ஏனைய குற்றங்களையும் கண்டுபிடிக்க கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் [illegible]

சீட்டு விழிப்புக்குழு என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு 31—1—1992 முடிய ரூ. 3.5 கோடி பெறுமான 936 பதிவுறா சீட்டுகளை கண்டுபிடித்து உரிய நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

## 9. தமிழ்நாடு சீட்டு நிதிக் கழகம் :

அரசின் கொள்கை முடிவுப்படி 2—5—1989 தேதியிட்ட அரசு நிலையாணை எண். 305 (வணிகவரி மற்றும் அறநிலையத் துறை) இன் படி கலைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணியாளர்கள் படிப்படியாக வெளியேற்றப்படுகிறார்கள். மிகக் குறைந்த அளவு பணியாளர்களைக் கொண்டு தற்போது இயங்கி வருகிறது. தற்போதைய சீட்டுப் பிரிவுகள் (Running chit groups) முடியும் வரை அதாவது பிப்ரவரி 1993 வரை மேற்படி சீட்டு நிதிக் கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கும். வெளியேற்றப்பட்ட பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள நியமனப் பிரிவின்படி (Placement cell) அரசு பொது நிறுவனங்களிலோ அல்லது வாரியங்களிலோ வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என 6—9—1989 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 684 (வணிகவரி மற்றும் அறநிலையத்துறை) இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 10. இந்திய கூட்டு வணிகச் சட்டம் 1932 :

இந்திய கூட்டு வணிக சட்டத்தில் மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்கள் ஆவர். இச்சட்டத்தின் கீழ், படிவம் 1இல் அறிக்கை தாக்கல் செய்து வணிக நிறுவனம் பதிவு செய்யப்படலாம். நிறுவனத்தில் நிலவும் எந்தவித மாற்றமும் பதிவாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். பதிவாளர் வணிக நிறுவனப் பதிவேட்டில் இத்தகு மாற்றங்களைக் குறித்துக் கொள்வார். இந்தச் சட்டத்தின் கீழ் பதியப்படும் நிறுவனங்கள் பதிவு செய்த பிறகு தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து எவ்வித விவரங்களையும் அரசுக்கு தெரிவிப்பதில்லை. இந்நிலையைத் தவிர்க்கும் பொருட்டும், எத்தனை கூட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன என அறியவும் அவைகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் சரிதானா என கண்காணிக்க உதவி புரியும் வகையிலும் அரசாணை (நிலை) எண். 747, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 7—12—1990 இன் படி ஆண்டு தோறும் உறுதி மொழி அறிக்கை தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழான கட்டண விகிதங்களை மாற்றி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. 1992 ஆம் ஆண்டு சனவரி இறுதியில் பதிவு செய்யப்பட்ட கூட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை 2,41,867.



## 11. சார்பதிவகங்களில் முத்திரைத்தாள் விற்பனை :

முத்திரை வில்லைகள் விற்கும் முத்திரைத்தாள் விற்பனையாளராக சார்பதிவாளர் செயல்பட்டு வருகிறார். ஒட்டு முத்திரை வில்லைகளின் ஒப்பமிடும் அதிகாரியாகவும் பொருத்தமான முத்திரை வில்லைகளுக்குப் பதிலாக ரொக்கத்தை பெறவும் சார்பதிவாளர்களுக்கு அதிகாரம் உள்ளது. இதனால் பொது மக்களுக்கு முத்திரைத் தீர்வை செலுத்துவதில் சிரமம் இல்லாமல் இருப்பதற்கு இது மிகவும் உதவியாக இருக்கும்.

இணைப்பு—V

1992 மார்ச் 19]

**கோரிக்கை எண். 44.**

## எழுதுபொருள் அச்சுத்துறை 1992-93.

### எழுதுபொருள் அச்சுத்துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

எழுது பொருள் அச்சுத்துறை, முதலில் 1831 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசிதழ்களை மட்டுமே அச்சிடுவதற் காக 10 தொழிலாளர்களைக் கொண்டு தொடங்கப் பட்டது. இது பல்வேறு இடர்பாடுகளுக்கு இடையேயும் 160 ஆண்டு கால பணியினை நிறைவு செய்து, இது படிப்படியாக வளர்ச்சி அடைந்து, தற் போது சென்னை மாநகரிலும் பிற மாவட்டங்களிலும் மொத்தம் 8 அச்சகங்களுடன் இயங்கி வருகிறது.

பணியாளர் நிருவாகம், தொழில் உறவுகள், பொது நிருவாகம், பொருட்களின் மைய நிருவாக அமைப்பு, இயந்திரங்கள் வாங்குதல், அச்சுப்பிரிவுகளுக்குத் தேவை யான பொருட்களைக் கொள்முதல் செய்தல், மாநிலத் திலுள்ள அரசுத்துறைகள் அனைத்திற்கும் தேவைப் படும் எழுது பொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படி பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் முதலியவற்றைக் கொள்முதல் செய்து வழங்குதல் போன்ற பணிகள், தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், தமிழ் நாடு மாநில கணக்குத் துறைத் தலைவர், அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப்பணி கள், வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ், மந்தண சிறப்பு அறிக்கைகள். விதிக்கோவை

கள், நடைமுறை நூல்கள், வாக்குச்சீட்டுகள், வினாத் தாட்கள், போன்ற மிகவும் மறைபொருள் தன்மை வாய்ந்த இனங்கள், நிலைப்படுத்தப்பட்ட, நிலைப்படுத் தப்படாத படிவங்கள் அச்சிடுதல் ஆகிய பணிகள் எழுது பொருள்—அச்சுத்துறையின் கீழ் வருகின்றன.

எழுது பொருள் அச்சுத்துறை இயக்ககம், அனைத்து அச்சுப் பிரிவுகள், எழுது பொருள் பிரிவு, அரசு வெளி யீடு விற்பனை நிலையம் ஆகியவற்றின் பணியைக் கண் காணிக்கும் தலைமை அமைப்பாகும். இதன் அனு மதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 236 ஆகும். இத்துறையின் இயக்குநர், எழுது பொருள்—அச்சுத்துறை தொடர்பான பணிகளில் தமிழ்நாடு மாநில அரசிற்கு ஆலோசகராகவும் செயல்படுகிறார்.

எழுது பொருள் அச்சுத்துறையின் கிளை அச்சகங் களின் பணிகள் :

**I. அச்சுப்பிரிவு :**

**(1) அரசு மைய அச்சகம், சென்னை-79 :**

இது பணிமேலாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் மொத்தம் 3,489 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப் பணிகளில் செயல்பட்டு வரு கிறது. இவ்வச்சகத்தில் அச்சிடும் இயந்திரங்கள், புத்தகம் கட்டும் இயந்திரங்கள், அச்சுக் கோர்க்கும் இயந்திரங்கள், போட்டோ கம்போசிங் இயந்திரம், பிளாக் தயாரிக்கும் பிரிவு, ரப்பர் முத்திரைப் பிரிவு ஆகிய அனைத்து வசதிகளும் உள்ளன.



1991ஆம் ஆண்டில் மைய அச்சகத்தில் முடிக்கப் பட்ட முக்கியப் பணிகள் பின்வருமாறு :—

| துறையின் பெயர். (1) | மொத்த இனங்கள். (2) | மொத்த படிவங்கள். (3) | மொத்த புத்தகங்கள். (4) |
|---|---|---|---|
| 1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை (படிவம், புத்தகம்) | 183 | 3,00,400 | 96,488 |
| 2. மதுவிலக்கு ஆயத்தீர்வை (படிவம், புத்தகம்) | 37 | 16,700 | 600 |
| 3. கருவூலங்கள் மற்றும் கணக்குகள் (படிவம்) | 10 | 1,12,000 | .. |
| 4. வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சி (படிவம் புத்தகம்) | 20 | 3,775 | 2,500 |
| 5. தமிழ்நாடு மாநில கணக்குத் துறைத் தலைவர் அலுவலகம் (படிவம், புத்தகம்) | 37 | 23,38,600 | 85,000 |
| 6. வாக்குச் சீட்டுகள் | 308 | 4,27,81,820 | 26,150 |

[1992 மார்ச் 19

**(2) அரசு கிளை அச்சகம், சூளை, சென்னை-7 :**

இந்த அச்சகம் அனுமதிக்கப்பட்ட 677 பணியாளர்களுடன் மூன்று முறை மாற்றுப் பணிகளில் செயல்படுகிறது. இந்த அச்சகம், முக்கியமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், காவல்துறை, மருத்துவத்துறை, வணிக வரித்துறை ஆகியவற்றின் அச்சுப் பணியை மேற்கொள்கிறது.

**(3) சென்னை, உயர்நீதி மன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகம் :**

இக்கிளை அச்சகம், அனுமதிக்கப்பட்ட 238 பணியாளர்களுடன் மூன்று முறை மாற்றுப் பணிகளில் செயல்படுகிறது. உயர்நீதி மன்றத்திற்குரிய தினசரி வழக்குப் பட்டியல்களை அச்சிடுவதும், இந்திய சட்ட அறிக்கைகள் அச்சிடுவதும், இவ்வச்சகத்தின் முக்கியப் பணியாகும். இது தவிர, சிறைத் துறை, நீதித்துறைக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், நத்தம் நிலவரித் திட்ட படிவங்கள், நில அளவை-செட்டில்மெண்டு துறைக்கான படிவங்கள் ஆகியவை அச்சிடப்படுகின்றன.

**(4) அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை :**

இந்த அச்சகம், அனுமதிக்கப்பட்ட 254 பணியாளர்களைக் கொண்டு இரண்டுமுறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது. நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பத்திரப் பதிவுத்துறை, ஆதி திராவிட நலத்துறை, கருவூலக் கணக்குகள் துறை ஆகியவை தொடர்பான படிவங்கள் பதிவேடுகள் முதலியனவும் பத்து மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.



1992 மார்ச் 19]

**(5) அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி :**

இக்கிளை அச்சகம் 1965 ஆம் ஆண்டு தொடங்கப்
பட்டு, தற்போது (நவம்பர் 1990 முதல்) திருச்சியி
லுள்ள துவாக்குடியில் அதற்கான சொந்தக் கட்டடத்
தில் அனுமதிக்கப்பட்ட 177 பணியாளர்களுடன்
இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாநிலம் முழுவதும்
உள்ள அனைத்து அரசுத்துறைகள் அன்றாடம் பயன்
படுத்துவதற்குத் தேவைப்படும் பொதுவான படிவங்கள்,
பதிவேடுகள் அனைத்தையும் இப்பிரிவு அச்சிட்டு
வழங்குகிறது. மேலும், மதுரை, திருச்சிராப்பள்ளி,
திண்டுக்கல்-அண்ணா மாவட்டங்கள் தொடர்பான
மாவட்ட அரசிதழ்களையும் அச்சிடுகிறது.

**(6) அரசு கிளை அச்சகம், சேலம் :**

இந்த அச்சகம், அனுமதிக்கப்பட்ட 204 பணி
யாளர்களைக் கொண்டு, அதன் சொந்தக் கட்டிடத்
தில் இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி
வருகிறது. நில அளவை-நிலவரி ஏற்பாட்டுத் துறை
யின் 'A' பதிவேடுகள், தமிழ்நாடு கருவூல விதிக்
கோவை படிவங்கள், பதிவேடுகள், நிலைப்படுத்தப்
பட்ட பிற படிவங்கள் ஆகியவை இந்த அச்சகத்தில்
வழக்கமாக அச்சிடப்படுகின்றன. 1991 ஆம் ஆண்டு
பொதுத் தேர்தலுக்கான 51,55,500 வாக்குச் சீட்டுகள்
இங்கு அச்சிடப்பட்டன.

**(7) அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் :**

இந்த அச்சகம், 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்
பட்டு, அதன் சொந்தக் கட்டிடத்தில், அனுமதிக்கப்
பட்ட 211 பணியாளர்களைக் கொண்டு தொடர்ந்து
இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது.

இந்த அச்சகத்தில், நீதித்துறை, வேளாண்மைத் துறை, கால்நடை வளர்ப்புத்துறை, வனத்துறை, பொதுப்பணித்துறை, தொழில்-வணிகத்துறை ஆகியவற்றுக்குத் தேவைப்படுகின்ற நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் அச்சிடப்படுகின்றன. இவற்றுடன், தென் ஆற்காடு மாவட்ட அரசிதழும் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.

(8) அரசு கிளை அச்சகம், மதுரை.

இந்தக் கிளை அச்சகம், 1976 ஆம் ஆண்டிலிருந்து அதன் சொந்தக் கட்டிடத்தில், அனுமதிக்கப்பட்ட 356 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது

இந்த அச்சகத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன :

(1) வருவாய்த்துறை படிவங்கள் (R. F. Group)

(2) பத்திரப்பதிவுத்துறை-பத்திரப்பதிவு (II ZC)

(3) கருவூலங்கள்-கணக்குகள் இயக்ககம் சம்பந்தப்பட்ட படிவங்கள்.

(4) நிலவரி ஏற்பாடு 'A' பதிவேடுகள்.

1991 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான 7 நாடாளுமன்றத் தொகுதிகள் மற்றும் 42 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் ஆகியவற்றுக்கான வாக்குச் சீட்டுகள் இந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டன.



II எழுது பொருள் பிரிவு :

இயக்ககத்தின் எழுது பொருள் பிரிவு, எழுது பொருட்கள், தட்டச்சுப்பொறிகள், படிபெருக்கிகள், கணக்கீட்டுப்பொறிகள் முதலானவற்றைக் கொள்முதல் செய்து, அரசு அலுவலகங்களுக்கு வழங்கும் மைய முகவரமைப்பாக இயங்குகிறது. எழுது பொருட்கள் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. முன்கூட்டியே உரிய தொகை செலுத்துவதன் பேரில், மத்திய அரசின் உதவி பெறும் அல்லது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு எழுது பொருட்கள் வழங்கப்படுகின்றன. இது, 324 பணியாளர்களுடன் இயங்குகிறது. காகிதம், அட்டை, தட்டச்சுப்பொறிகள்,. படிபெருக்கிகள், கணக்கீட்டுப்பொறிகள், கதர் மற்றும் கைத்தறித்துணிகள், அச்சகம் மற்றும் சிறைச்சாலை தயாரிப்புப் பொருட்கள் ஆகியவை நீங்கலாக ஏனைய அனைத்து எழுது பொருட்களும் ஆண்டுதோறும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுவதன் மூலம் வெளி அங்காடியில் வாங்கப்படுகின்றன.

புதுடில்லியில் உள்ள வழங்கல் ஒருவகை செய்தல் தலைமை இயக்குநர், விலைவீத ஒப்பந்த அடிப்படையில் செய்யும் ஒதுக்கீட்டின் பேரில் காகிதம், அட்டை ஆகியவை பல்வேறு காகித ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. தட்டச்சுப் பொறிகள் படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவையும் விலைவீத ஒப்பந்த அடிப்படையில் வழங்கல்-ஒருவகை செய்தல் தலைமை இயக்குநரிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன.

### III அரசு வெளியீடுகள் பிரிவு :

சென்னை, அண்ணா சாலையிலுள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும், சென்னை, உயர்நீதி மன்ற வளாகத்திலுள்ள கிளை விற்பனை நிலையமும் சட்டங்கள், விதிகள், விதிக்கோவை, நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப்பதிவேடுகள் ஆகியவற்றை வழக்கமாக விற்பனை செய்கின்றன. மத்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவரமைப்பாகவும், இது இயங்குகிறது. அரசு வெளியீடுகள், அனுமதி பெற்ற முகவர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. 1—4—1991 முதல் 30—11—1991 வரையிலான காலஅளவில் ரூபாய் 15,093 மதிப்புள்ள அரசு வெளியீடுகள் அரசு அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன; ரூபாய் 7,84,328 மதிப்புள்ள மத்திய, மாநில அரசுகளின் வெளியீடுகள் விற்பனை செய்யப்பட்டன. இப்பிரிவு 57, பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

**பணியாளர்களுக்கான வசதிகள் :**

(1) குடியிருப்புகள்.—சென்னை தண்டையார் பேட்டையில், கூரையில் பொருத்தப்பட்ட மின்விசிறிகள், கம்பி வலைகள் பொருத்தப்பட்ட தெரு விளக்குகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் ஆகிய வசதிகளுடன் கூடிய 104 'A' வகை வீடுகளும், 96 'B' வகை வீடுகளும், 100 'C' வகை வீடுகளும் கொண்ட 300 குடியிருப்புகள் பணியாளர்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன.



(2) தொழிலாளர் நலநிதி.—விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக மனமகிழ் மன்றத்திற்கும், தொழிலாளர்களின் நலப்பணிகளுக்கும், சுதந்திர தின விழா, ஆயுத பூசை முதலிய விழாக்களைக் கொண்டாடுவதற்கும் தொழிலாளர் நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படுகிறது. தொழிலாளர் நல நிதிக்குப் பங்குத் தொகை செலுத்தும் தொழிலாளர்களுடைய குழந்தைகளின் பள்ளிப் பாடப் புத்தகங்களுக்காகும் செலவினை ஒவ்வோராண்டும், சென்னை-6இல் உள்ள தொழிலாளர் நல வாரியம் ஈடு செய்கிறது. மேலும், தொழிலாளர் எவரேனும் இறந்தால் அவருடைய குடும்பத்திற்கு உடனடி நிவாரணமாக 100 ரூபாய் நல நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இவற்றுடன் கூட இறந்த தொழிலாளரின் சட்டப்படிக்கான குடும்ப வாரிசுதாரருக்குத் தொழிலாளர் நல வாரியத்திலிருந்து 200 ரூபாய் வழங்கப்படுகிறது.

(3). சீருடைகள் :—தொழில் நுட்பப் பதவித் தரத்தைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஒவ்வோராண்டும், இரு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளருக்கும் திங்களொன்றுக்கு ரூபாய் 15 சலவைப்படி வழங்கப்படுகிறது.

(4) (i) நிரந்தரப் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு :—அரசு அச்சகங்களிலுள்ள நிரந்தரப் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கப்பட்டுள்ளது.

(ii) ஈட்டிய விடுப்பு கணக்கில் கொள்வதில் உச்ச வரம்பை உயர்த்துதல்.—அரசு அச்சகங்களில், நிரந்தரப் பணியாளர்கள் ஈட்டிய விடுப்புக் கணக்கில் சேர்த்துத்

கொள்ள தற்போதைய உச்சவரம்பான 180 நாட்களுக்குப் பதிலாக அதனை 240 நாட்களாக உயர்த்த அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(iii) பொது முறை மாற்றுப் பணியின் கீழ் பணி நேரத்தினை மாற்றி அமைத்தல்.—தற்போதுள்ள, பொது முறை மாற்றுப் பணிக்குப் பணி நேரம் காலை 9 மணி முதல் மாலை 5.30 வரை (மதிய உணவு இடை வேளை 1 மணி நேரம்) என்றிருப்பது தொழிலாளர்களின் வசதிக்கேற்ப காலை 9.45 லிருந்து மாலை 5.45 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் பிற்பகல் 1.30 லிருந்து 2 மணிவரை அரை மணி நேரம் மதிய உணவு இடைவேளையாக எடுத்துக் கொள்ளலாம்.

(iv) மஸ்தூர்களைத் தொழில் நுட்ப பதவிகளில் பணியமர்த்துவதற்கான வயது உச்சவரம்பை நீக்குதல்.—மூன்றாம் படிவம் அல்லது எட்டாம் வகுப்பு, படித்த மஸ்தூர்கள் தொழில் நுட்பப் பதவிகளுக்கு முதுநிலையின்படி வயது உச்சவரம்பு இன்றி நியமனம் பெறத் தகுதியுடையவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

5. மருத்துவ வசதி.

அரசு மைய அச்சகத்திலுள்ள மருந்தகத்தில், தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நாள்தோறும் இலவச மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது. மருந்தகத்திலுள்ள மருத்துவ அதிகாரி, வாரம் ஒரு முறை, சென்னை மாநகரிலுள்ள எழுது பொருள்-அச்சுத்துறை இயக்ககத்திற்கும், பிற கிளை அலுவலகங்களுக்கும் சென்று மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார்.



6. தொழில் பழகுதல்.

1961 ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தைச் செயல்படுத்த, வெவ்வேறு வகையைச் சேர்ந்த 55 தொழில் பழகுநர்கள், சென்னை மாநகரிலும், வெளியூர்களிலுள்ள அச்சகங்களிலும் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர்.

7. தொழிலாளர் கல்வித் திட்டம்.

சென்னை வட்டாரத் தொழிலாளர் கல்வி இயக்கத்தில், தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக தொழிலாளர்களை முகமையில் அனுப்புவதன் மூலம், தொழிலாளர் கல்வித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. தொழிலாளர் ஆசிரியருக்கும், தொழிலாளர் பயிற்சியாளருக்கும் மொத்தமாக ஒரு தொகை வழங்கப்படுகிறது.

தொழிலாளர்கள், கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம், கூட்டுறவுப் பண்டகசாலை, சிற்றுண்டிச்சாலை, குழந்தைகள் காப்பகம் போன்ற வசதிகளைத் தொடர்ந்து பெற்று வருகின்றனர்.

அச்சகத்தில் செயல்திறனைப் பெருக்குதல்:

(a) தளவாடங்களும், எந்திரங்களும்.—சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு, 1991-92ஆம் ஆண்டில், 5.98 இலட்சம் ரூபாய் செலவில் "ஷீட்ஃபெட் சிங்கிள் கலர் ஆப் செட்" எந்திரம் ஒன்று வாங்கப்பட்டது.

(b) நவீனமாக்குதல்.—சென்னை, அரசு மைய அச்சகத்தையும், மதுரையிலுள்ள கிளை அச்சகத்தையும், நவீனமாக்குவதற்காக, 1991-92 ஆம் ஆண்டில் பின்வரும் எந்திரங்களை வாங்க அரசு அனுமதித்துள்ளது.

[1992 மார்ச் 19

1. டெஸ்க்டாப் பப்ளிஷர் —1 அரசு மைய அச்சகத்திற்கு.

2. ஷீட்ஃபெட் ஆப்செட் எந்திரம் 1
3. ஒயர் ஸ்டிட்சிங் மெஷின் 1
4. ஆஃப்செட் டூப்ளிகேட்டர் A 3 சைஸ் 1

} மதுரை அரசுகிளை அச்சகத்திற்கு.

165044
சென்னை-600 008.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore
11 S. M. Jeganathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
25 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.